


லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ அனிச்சமலர்...! முதல் பாகம் ★ முத்துலட்சுமி ராகவன்




முத்துலட்சுமி ராகவன்
அனிச்சமலர்...!
முதல் பாகம்
லட்சுமி பாலாஜி பதிப்பகம்
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ அனிச்சமலர்...! முதல் பாகம் ★ முத்துலட்சுமி ராகவன்

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# அனிச்சமலர்...!

## 1

வெண்பளிங்கு நிற அரண்மனை... அதன் முன்புறம் பால் போல நுரை கொப்புளிக்கக் கொட்டிக் கொண்டிருக்கும் அருவி.. அருவியின் பக்கத்தில் மலர்ச்செடிகள் அடர்ந்த பாறை.. அதன்மீது தேவதை போன்ற பேரழகுடன் ஆடிக் கொண்டிருந்தாள் ஒரு

பெண்.. அவளது அடர்ந்த கூந்தல் விரிந்து நீண்டு முழங்கால்களைத் தாண்டித் தொங்கிக் கொண்டிருந்தது.. காதோரம் தொடுத்து வைத்ததைப் போன்ற காட்டுப் பூக்கள்..

'விரித்து விடப்பட்டிருக்கும் கூந்தலில் காட்டுப் பூக்களைச் செருகினால் விழுந்த விடாதா..? அது எப்படி நூல் கொண்டு கோர்த்ததைப் போல வரிசையாக அணி வகுத்து பின் பண்ணியதைப் போல 'சிக்'கெனச் சொருகி நிற்கிறது..?' செண்பகப் பாண்டியனைப் போல சந்தேகம் வந்தது வாசுதேவனுக்கு..

செண்பகப் பாண்டியனாவது நனவில் முகர்ந்த மனைவியின் கூந்தலின் நறுமணத்தில் மயங்கிப் போய் 'பெண்களின் கூந்தலுக்கு இயற்கையிலேயே நறுமணம் உண்டா..?' என்ற சந்தேகம் கொண்டான்..

இந்த இடக்குப் பிடித்த கட்டை பிரம்மச்சாரி.. (?) வாசுதேவன் கனவில் கண்ட தேவதையின் கூந்தலில் சொருகப் பட்டிருந்த காட்டுப் பூக்கள் எப்படி கனகச்சிதமாக வரிசை கட்டி அவளது கூந்தலில் செருகியுள்ளன என்று சந்தேகம் கொண்டான்..

'அட முட்டாள் வாசுதேவா..! உனக்கெல்லாம் கனவில் தேவதைப் பெண் காட்சி தருகிறாள்ன்னா ஜொள்ளூ விட்டு அவளை ரசிச்சுக்கிட்டேத் தூக்கம் போட்டிரனும்.. அத விட்டுட்டுத் தூக்கத்திலும் ஆராய்ச்சி பண்ணக் கிளம்பினேன்னு வைய்யி.. இவனுக்கெல்லாம் நாம கனவில வந்து நிக்கனுமான்னு தேவதைப் பொண்ணு ஓடியே போயிருவா.. அப்புறம் நீ காஞ்சமாடா கம்மங்கொல்ல எங்கே இருக்கும்ன்னு தேடி அலைய வேண்டியதுதான்..'

வாசுதேவனைப் போல நிம்மதியாக தூங்க முடியாத எரிச்சலுடன் இருந்த அவனுடைய மனச்சாட்சித் திட்டித் தீர்த்தது..

'ஓகே.. ஓகே.. கூல், கூல்.. நான் டவுட்டத் தூக்கித் தூரப்போட்டுட்டு ஃபிலிம மட்டும் ரசிக்கறேன்.. சரியா..' தூங்கிக் கொண்டே மனச்சாட்சியுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டான் வாசுதேவன்..

'நீ கனவில ஃபிகரப் பாக்கறதுக்கு நான் உன்னக் கன்வின்ஸ் பண்ண வேண்டியிருக்கு..' எகிறியது மனச்சாட்சி..

ஒருவழியாய் மனச்சாட்சியை அமைதிப்படுத்தி விட்டுக் கனவில் கண்ட தேவதையை 'சைட்' அடிக்க ஆரம்பித்தான்..

'கனவில் சைட் மட்டும் தான் அடிக்க முடியும்.. ரூட் விட முடியாதே..' என்ற தத்துவம் வேறு அவன் மனதில் வந்து தொலைத்தது..

அடுத்த ஆராய்ச்சியில் இறங்கினால் மனச்சாட்சி அவனைக் கம்பெடுத்து அடிக்க வந்துவிடும் என்பதினால் தத்துவத்தைத் தட்டிக் கொடுத்து அனுப்பி வைத்து விட்டு, இவன் கனவில் வந்த தேவதையைப் பார்வையால் மேயப் போனான்..

'பக்கத்தில போய் கட்டிப்புடிக்க ஆசைதான்.. எங்கே.. நேத்து வந்த கனவில நான் பக்கத்தில போகப் போக அவ தூரமா ஓடிப் போய் கலைந்து மறைந்துட்டாளே..'

சேலை கட்டாமல், பாவாடை சட்டையைப் போன்ற அமைப்புடன் கூடிய உடையை அணிந்திருந்தாள்.. தோள்களில் தவழ்ந்து காற்றில் பறந்த தாவணி..!

'தாவணியை இடுப்பில் செருகித் தோளைச் சுற்றிப் போட்டுக்கனும்.. இவ என்னடான்னா காத்தில பறக்க விடறா..'

அடிக்கடி வரும் கனவையும், அந்த தேவதைப் பெண்ணையும் பற்றி அவனது நண்பனிடம் விவரித்த போது, அவன்..

"டேய்.. இது பாகுபலி பர்ஸ்ட் பார்ட்டில வர்ற சீன் மாதிரி இருக்குடா.. தமனா பச்சைக் தீ நீயடான்னு பாட்டுப் பாடும்.. அத உல்டா பண்ணிச் சொல்றியோ.." என்று மேலும் கீழும் பார்த்து சோதித்து வைத்தான்..

"அதையல்லாம் நீதான் பண்ணுவ.. நான் டோட்டலா வேற கேட்டகிரி.." வாசுதேவன் சட்டைக் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான்..

"அப்படிங்கிற..? அது எப்படிடா இப்படியாப்பட்ட கனவெல்லாம் உனக்கு மட்டுமே வருது.. எனக்கு வர்ற கனவையெல்லாம் சொன்னேன்னு வை.. நீ ரத்தம் கக்கி ஹாஸ்பிடலில் அட்மிட் ஆகிருவ.."

"சொல்லாதே.. உன்னைப் போலதானே உன் கனவும் இருக்கும்.."

"ஆமாண்டா.. நீ பெரிய மன்மத ராஜா.."

"இல்லேங்கிறியா..?"

"ஆமாங்கிறேன்.. அடங்கறியா..?"

அவனை அடக்கி விட்டு சோகமானான் கருணாகரன்.. அப்படி நண்பனை சோகக்கடலில் தள்ளி விட்டப் புண்ணியத்தைக் கட்டிக் கொண்ட வாசுதேவனுக்கு கொண்டாட்டமாக இருந்தது.. யாருக்கு வரும் இது போன்ற கனவு..?

பின்புறம் நீலவானம்.. அதில் வெந்நிற மேகம்.. காலளவு கருங்கூந்தலுடன் தேவதைப் பெண்.. என்ன ஒன்று.. இவன் கிட்டே போனால் எட்டிப் போய்ப் பறந்து விடுகிறாள்.. அதனால் முகத்தை உன்னப்பாக பார்க்க முடியவில்லை.. மற்றபடி எல்லாம் ஓகேதான்..

'இது போல ஒரு சினிமா வந்துச்சுல்ல..'

அந்தத் திரைப்படத்தில் வரும் பெண் முகத்தை.. மெல்லிய துணியினால் மூடி ஊஞ்சலில் ஆடுவாள்.. அவளுடைய இடுப்பில் ஒரு மச்சம் இருக்கும்..

'நல்லவேளைடா வாசுதேவா.. இந்த தேவதைப் பொண்ணு அப்படியாப்பட்ட இடியாப்ப சிக்கலில எல்லாம் உன்னை மாட்டி விடலை.. சமத்தா முகத்தைக் காட்டியும் காட்டாம ஏதோ ஃபேசன் ஷோவில கேட்வாக் பண்றதைப் போல, பாறைமேல கேட்வாக் கொடுத்துட்டுப் போயிடறா.. இடுப்பில மச்சமும் இல்ல.. ஒச்சமும் இல்ல.. தப்பிச்சே..'

இல்லையென்றால் அவன் நிலைமை என்னவாக ஆகியிருக்கும்..? கனவில் வந்த தேவதைப் பெண்ணின் முகசாயலில் இருக்கும் பெண்களிடம் எல்லாம் இடுப்பில் மச்சம் இருக்கிறதா என்று நினைக்கத் தோன்றும்.. கேட்கத் தோன்றும்.. இப்படியாகப் பட்டக் கேள்வியை செவி மடுத்தால் மான் போல மருண்ட கண்களுடன் இருக்கும் பெண்கள் கூட வேட்டைப்புலியைப் போல வேட்டையாடக் கிளம்பி விட மாட்டார்களா..?

கனவு கலைந்து அவன் கண்விழித்த போது பொழுது விடிந்தும் விடியாத கருக்கல்லாக இருந்தது.. புரண்டு படுத்தான்..

'அதிகாலைக் கனவு பலிக்கும்பாங்களே..' சிரித்துக் கொண்டான்..

வாழ்வு எப்போதும் இனிமை நிறைந்ததாகவே இருக்க வேண்டும் என்று மனித மனம் விரும்புகிறது.. கருணாகரன் சொல்வதைப் போன்ற கேட்டாலே ரத்தம் கக்கி விடும்

அபாயகர கனவுகள் வந்தால் அவை பலிக்க வேண்டுமென மனித மனம் ஆசைப்படுமா..?

கசப்புகளை எவர்தான் விரும்புவார்..? காய்களில்கூட கேரட்டையும், பீட்ரூட்டையும் விரும்பும் நாக்கு பாசற்காயை விரும்புவதில்லையே..

நன்மையே நடக்கட்டும் என்று நாராயணனை வேண்டிக் கொண்டு நித்திரையில் ஆழ்ந்தான்.. அதிகாலைத் தூக்கம் ஓர்வித சுகம்.. அதை அனுபவித்து உறங்கிக் கொண்டிருந்தவனின் முகத்தில் நீர்த்துளிகள் சிதறின.. 'ஆஹா' என்று அவன் ஆனந்தப் பட்டுப் போனான்.. தேவதைப் பெண்ணுடன் அருவியில் குளிக்க இறங்கி விட்டானா..?

"பச்சை தீ நீயடா.." என்று புலம்பியபடி கண் விழித்தவனிடம்..

"பெட் காபியக் குடிடா.." என்று பாடியபடி காபிக் கப்பை நீட்டினாள் வசுமதி.. அவனுடைய அக்கா..

வசுமதியின் வயிறு மேடிட்டு அவள் நிறைமாத கர்ப்பிணி என்பதை அறிவித்தது.. அவசரமாக எழுந்து உட்கார்ந்து காபிக் கப்பை வாங்கிக் கொண்ட வாசுதேவன்..

"நீ எதுக்காக அக்கா ஸ்ட்ரெயின் பண்ணிக்கிற..? அம்மா எங்கே..?" என்று கேட்டான்..

"'கோதாவரி' அப்படின்னு விசு ஸ்டைல்ல கம்மாண்ட் பண்ணிக்கிட்டு இருக்கிற அப்பாகூட பேசிக்கிட்டு இருக்காங்க.." என்றபடி தம்பியின் படுக்கையை சீர் செய்தாள் வசுமதி..

"விட்டிருக்கா.. ரூபா பாத்துக்கும்.." தடுத்தான் வாசுதேவன்..

"ரூபாதான.. அவ பிரச்னை பெரும் பிரச்னை.. எல்லா வீடுகள்லயும் வேலைக்கு வர்றவங்க வீட்டு வேலையைச் செய்வாங்கன்னா.. இவ தினமும் வீட்டுக்கதையைச் சொல்லி அழுதுகிட்டே வந்து அம்மாவை வேலை

வாங்கிக்கிட்டு இருக்கிறா.." அலுத்துக் கொண்டாள் வசுமதி..

"என்னவாம்..?"

"அவ புருசன் குடிச்சுட்டு வந்து அடிக்கிறானாம்.."

"புருசன்னாலே பிரச்னைதான் போல.."

"உனக்கு ஜோக்கா இருக்கு.. எனக்குத் தலைவேதனையா இருக்கு.."

"ஏன்க்கா..?"

"என்னத்தடா சொல்றது..? இவளை உட்காரவைத்துக் காபி போட்டுக் கொடுத்து தலைவலித் தைலம் தேய்த்து விட்டுட்டு அம்மா வாஷிங் மெஷினில துணிகளைப் போட்டுக்கிட்டு இருக்காங்க.. எனக்கென்னவோ இவ டிரிக் பண்றாளோன்னு தோணுது.."

"நானும் அப்படித்தான் நினைக்கிறேன்.. போனவாரம் கூட ரூபாவையும் இது புருசனையும் சேர்த்து பாத்தேனே.. சினிமாத் தியேட்டருக்குள்ள போயிக்கிட்டு இருந்தாங்க.. இது நல்லா பூவும் பொட்டும் புதுச்சேலையுமா சிரிச்சுச் சிரிச்சுப் பேசிக்கிட்டே போச்சே.. அந்தாளு என்னவோ உலகமே அவன் பொண்டாட்டியத்தான் ரூட்டு விட அலைகிறதைப் போலக் கழுத்தைச் சுத்திக் கைபோட்டு இறுக்கிப் பிடிச்சுக் கூப்பிட்டுக்கிட்டுப் போனானே.."

"நான் நினைச்சது சரியாப் போச்சு.."

"இதுக்கு ஒரு வழி பண்ணலாம்க்கா.. மாமா போன் பண்ணினாரா..?"

"அதெல்லாம் காலையில கண் விழிச்சதுமே பண்ணிட்டார்.."

"அதுக்குள்ள எழுந்திரிச்சுட்டாரா..?"

"அவர் இப்ப ஆபிசுக்கேப் போயிருப்பார்.. உன்னைப் போலன்னு நினைச்சியா..? தூங்குமூஞ்சி.."

செல்லமாகத் தம்பியைத் திட்டினாள் வசுமதி.. பிறந்த வீட்டில் சீராடிக் கொண்டிருக்கும் நிம்மதியும், பூரிப்பும் அவள் முகத்தில் தவழ்ந்தன..

"ம்மா.." ஓடி வந்து கட்டிக் கொண்ட மூன்று வயது நிஷாவின் தலை அவளது வயிற்றில் முட்டியதில்..

"ஏய்ய்.. ஏய்ய்.. நிஷாக்குட்டி.. பார்த்து.. அம்மா வயித்தில உன் தம்பி இருக்கானில்ல.." என்று விலக்கித் தூக்கித் தோளில் சாய்த்துக் கொண்டான் வாசுதேவன்..

நிஷா குளித்து உடை மாற்றி ஜம்மென்று வாசனையுடன் இருந்தது..

"ம்ஹா.." என்று வாசுதேவன் வாசம் பிடித்ததில்..

"விடுங்க மாமா.. உங்க அழுக்கு ஒட்டிக்கும்.." என்று முகத்தைச் சுளித்து நழுவி இறங்கியது..

"இதுக்கு இருக்கிற வாயைப் பாரேன்.." வாசுதேவன் வியப்புடன் சொன்னான்..

"அப்பபடியாச்சும் திருந்துடா.. குளிக்க ஓடு.." தம்பியை விரட்டினாள் வசுமதி..

"இருக்கா.. நம்ம வீட்டுக் குடும்பத் தலைவருக்கும், குடும்பத்தலைவிக்கும் குட்மார்னிங் சொல்லிட்டு வந்து குளிக்கறேன்.."

"இது ஒரு சாக்கு.. அத்தச் சோம்பேறிடா நீ.."

"அத்தையை எதுக்கு வம்புக்கு இழுக்கற..? அப்பா காதில விழுந்துட்டா ஆபத்து.. உடனே, கோதாவரி.. இந்த வீட்டுக்கு மத்தியில கோட்டைக் கிழின்னு 'விசு' வரூபம் எடுத்திருவாரு.."

வாசுதேவன் உதடுகளில் விரலை வைத்து எச்சரிக்க, அந்தக்காட்சியை மனதுக்குள் கற்பனை பண்ணிப் பார்த்த வசுமதி கலகலத்துச் சிரித்தாள்..

"டேய்.. சும்மா இருடா.. அப்பா காதில விழுந்துரப் போகுது.. படவா.. அப்பாவைக் கேலி செய்கிறதுன்னா உனக்கு

வெல்லக்கட்டியைச் சாப்பிட்டதைப் போல இருக்கமே.."

தம்பியின் முடி கோதி செல்லமாக அதட்டல் போட்டாள் வசுமதி.. தம்பியின் மீதான பாசமும், பிரியமும் அவளது விழிகளில் தெரிந்தது.. உடன் பிறந்தோரின் பாசம் அற்புதமானது.. பகை, நட்பு என்ற இரண்டும் கலந்த கலவை அது.. சிரிப்பும், அழுகையும் சேர்ந்து பரிமளிக்கும் சொந்தம் அது..

வசுமதியும் வாசுதேவனும் சிறுவயதில் அடித்துப் பிடித்துக் குடுமிப்பிடி சண்டை போட்டு உருளுவார்கள்.. விலக்கி விட கோதாவரி வர மாட்டாள்.. ஏன் என்று கேட்டால்..

"நீங்க வேற.. இதுக பஞ்சாயத்துக்குப் போனா.. நாமதான் கேணைப் பட்டம் வாங்கனும்.. அஞ்சே நிமிசத்தில ஒன்னு கூடிக்கிட்டு நம்மளக் கலாய்க்க வந்துருவாங்க.. யாராவது ஒருத்தருக்கு நியாயம் சொல்லிட்டு வில்லியா மாறி நிக்கனும்.. தேவையா..?" என்று பதிலுக்குக் கேட்பாள்..

திண்பண்டங்களைப் பகிர்ந்து கொள்ளும் போதே அன்றாட நிகழ்வுகளையும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளும் அந்த அக்கா, தம்பியின் பாசம் நிறைந்த நட்பில் ஒர்நாள் பிரிவு வந்தது.. அப்போது வாசுதேவன் இன்ஜினியரிங் படிப்பின் இறுதியாண்டில் இருந்தான்.. காலேஜ் விட்டு வீடு வந்தவனிடம் கோதாவரி..

"உன் அக்காவைப் பெண் பார்க்க வருகிறாங்கடா.." என்றாள்..

"எதுக்கு..?" வாசுதேவன் அபத்தமாகக் கேட்டு வைத்தான்..

"நீயெல்லாம் பர்ஸ்ட் கிளாஸில பாஸ் பண்றவன்னு சொல்லிக்காத.. கல்யாண வயசில இருக்கிற பெண்ணை எதுக்குடா பார்க்க வருவாங்க..? முட்டாள்தனமாக் கேள்வி கேக்கிறான் பாரு.. மாப்பிள்ளை வீட்டில இருந்து வருகிற நேரமாச்சு.. நீ சட்டுப்புட்டுன்னு பிரஷ் ஆகி டிரஸ் சேன்ஜ் பண்ணிக்கிட்டு வா.." கோதாவரி விரட்டினாள்..

இன்னதென்று சொல்ல முடியாத கோபம் மனதை ஆக்ரமிக்க வாசுதேவன் சுள்ளென்று எரிந்து விழுந்தான்..

"அக்காவைப் பெண் பார்க்க வந்தா நான் ஏன் பிரஷ் ஷாகி டிரஸ் சேன்ஜ் பண்ணிக்கனும்..?"

"டேய்.. நீ அவளோட தம்பிடா.. ஒற்றைத் தம்பி.."

"அதுக்கு..?"

"இன்னைக்கு உனக்கு என்னடா ஆச்சு..? எக்குத் தப்பாவே கேள்வி கேட்கிற..? தம்பியாய் லட்சணமாய் சபையில வந்து உட்கார வேண்டாமா..?"

"சபையா..? நம்ம வீட்டில ஏது சபை..?"

விளக்கெண்ணையைக் குடித்ததைப் போல முகத்தை வைத்துக் கொண்டு வாசுதேவன் சுற்றிலும் பார்வையை ஓட்டினான்.. கோதாவரி தலையில் அடித்துக் கொண்டாள்..

"ஏண்டா படுத்தற..? நம்ம வீட்டு ஹாலைத்தான் சபைன்னு சொன்னேன்.."

"ஹால் எப்பம்மா சபையாச்சு..?"

"இனிமே ஆகும்..."

"அது எப்படி..?"

"அது அப்படித்தான்.. மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்து ஹால் சோபாக்களில் உட்காருவாங்க இல்ல.. அப்ப ஹால் சபையா மாறும்.. விளக்கம் போதுமா..?"

"என்னவோ செய்ங்க.. எனக்கு ஒன்னும் சரியாப் படலை.."

"இன்னும் மாப்பிள்ளையையும், மாப்பிள்ளை வீட்டுக்காரங்களையும் நீ கண்ணிலேயே பார்க்கலை.. அதுக்குள்ள சரி, தப்பைக் கண்டு பிடிச்சுட்டியா..? அழிச்சாட்டியம் பண்ணாதேடா.. போ.."

"போ, போன்னா, எப்படிப் போகிறது..? வாசல்ல நுழையும் போதே ஜம்முன்னு நெய்வாசமும், பஜ்ஜி வாசமும் மூக்கைத் துளைச்சுச்சே.. டிபன், காபியைக் கொடுங்க.. மொக்கிட்டு அப்புறமா பிரஷ்ஷாகப் போறேன்.."

"அதுக்குள்ள மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்துட்டாங்கன்னா..?"

"வந்தா வரட்டுமே.. என்னையா பார்க்க வர்றாங்க..? அக்காவைத்தான பார்க்க வராங்க..?"

வழக்கடித்தவனுக்கு தமக்கை காபி, பலகாரம் சாப்பிட்டாளா என்ற கரிசனம் வந்துவிட..

"அக்காவுக்கு டிபன், காபி கொடுத்தீங்களா இல்லையா..?" என்று அதட்டினான்..

"யாருடா இவன்.."

"என்னைப் பெற்ற தாயே..! உங்களுக்கே நான் யாரென்று தெரியவில்லையா..? உங்களின் மணி வயிற்றில் பத்து மாத காலம் வாசம் செய்து உதித்த உத்தம புத்திரனம்மா நான்.."

வாசுதேவன் செந்தமிழிலில் நாடக பாணி வசனம் பேசினான்.. கோதாவரி அவனது முதுகில் ஒரு மொத்தை வைத்தாள்..

"உனக்கு முன்னாடியே என் வயிற்றில் வாசம் செய்தவளுக்குத் திருமணம் செய்து பார்க்கும் நேரம் வந்து விட்டதடா எனது அருமை மகனே..! சென்று உன் திருமுகத்தைக் கழுவி ஆடை ஆபரணங்களை மாற்றி வா.. இது இந்தத் தாயின் கட்டளை.. என் கட்டளையே சாசனம்.."

பேச்சென்று வந்து விட்டால் மகனுக்குச் சளைக்காமல் ஈடு கொடுப்பவள் கோதாவரி.. அன்றும் அதைத்தான் செய்தாள்..

2

அன்று வாசுதேவன் பண்ணிய அழிச்சாட்டியங் களையெல்லாம் இன்று நினைத்தாலும் வசுமதிக்குச்

சிரித்துச் சிரித்துப் புரையேறி விடும்.. அந்த அளவுக்கு அவன் ஆட்டம் காட்டினான்..

"தங்களின் சொத்து பத்துக்களைச் சாசனம் செய்து கொடுங்கள் தாயே.. தங்களின் தனயன் அடிபணிந்து ஏற்றுக் கொள்கிறேன்.. கட்டளைக் கெல்லாம் காது கொடுப்பவனல்ல இந்த வாசுதேவன்.."

"நீ கொடுக்கலைன்னா என்னடா.. நான் பிடிச்சுக்கறேன்.."

கோதாவரி மகனின் காதைப் பிடித்துத் திருக முற்பட்டாள்.. மிக எளிதாக தாயின் கரத்தைப் பிடித்துத் தன் கைக்குள் வைத்துக் கொண்டு பழிப்புக் காட்டினான் மகன்.

"இப்ப என்ன சொய்யுவீங்க..? இப்ப என்ன செய்யுவீங்க..?"

"விடுடா கையை.. ஏழு கழுதை வயசாகுது.. இன்னும் எப்ப விளையாடறது.. எப்ப சீரியஸா இருக்கிறதுன்னு தெரியலை.."

"அக்கா காபி, டிபன் சாப்பிடறது சீரியஸான விசயமா..?"

"பின்னே இல்லையா..? அறிவு கெட்ட மகனே.. அவங்க பெண் பார்க்க வருகிறப்ப உங்க அக்கா டிபன், காபியை மொக்கிக்கிட்டு இருந்தா, பொண்ணு தின்னிப் பண்டாரம் போலன்னு நினைச்சுர மாட்டாங்களா..?"

என்னங்கடா இது என்று ஆகிவிட்டது வாசுதேவனுக்கு.. பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டார் வரும் போது, பெண் காபி, டிபனை சாப்பிட்டுக் கொண்டிருந்தால் தின்னிப் பண்டாரம் என்று சொல்லி விடுவார்களா என்ன..?

"மாப்பிள்ளை வீட்டுக்காரங்களும், மாப்பிள்ளையும் இந்த காபி டிபனை கண்கொண்டு பார்க்கவே மாட்டாங்களா..?"

"அவங்க கண் கொண்டு பார்த்து, வாய் கொண்டு சாப்பிடறதுக்காகத்தான் இப்படி வக்கணையா சமைத்து வைத்திருக்கேன்.."

"அவங்களை யாரும் தின்னிப் பண்டாரம்ன்னு சொல்லிற மாட்டாங்களா..?"

"முடியலை வாசு.."

தொண்டைத் தண்ணீர் வற்றிப் போனவளாக.. கோதாவரி போர்நிறுத்தம் செய்தாள்.. மகளைப் பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டார் வரப் போகிறார்கள் என்ற பதட்டம் வேறு அவளை படுத்தி வைத்தது..

"காலையில இருந்து டென்சனா இருக்கேண்டா.."

"எதுக்கு..?"

"தலைநாளைல பெண்ணைப் பெத்து வைச்சிருக்கேனில்ல.. அதுக்கு.."

"என்னைப் பெத்திருக்க வேண்டியதுதானே.. எதுக்கு முந்திக்கிட்டு அக்காவைப் பெற்றீங்க..?"

அதனால்தானே அவளுக்கு இத்தனை சீக்கிரத்தில் திருமணமாகப் போகிறது என்ற பிரிவாற்றாமை மனதில் பொங்க, பொங்கினான் வாசுதேவன்..

"நான்தான் முடியலைன்னு சொல்லிட்டேனில்ல.. விட்டுருடா.."

"எனக்கும் அக்காவும் காபி, டிபனைக் கொடுங்க.. விட்டுடறேன்.."

"உனக்கு வேணும்ன்னா தர்றேன்.. உன் அக்காவுக்குக் கிடைக்காது.."

"நல்ல கதையாய் இருக்கே.. அதுக்கும் சேர்த்துத்தான் காபி, டிபன்.."

"டேய்.. அவளே வேண்டாம்ன்னு சொல்லிருவாடா.."

"பார்க்கலாமா..?"

"பார்க்கலாம்.. வா.."

இருவரும் சென்று வசுமதியைப் பார்த்தார்கள்.. நுங்கம் பாக்கத்திலிருந்து வந்திருந்த கோதாவரியின் அக்கா மகள் சாவித்திரி வசுமதிக்கு ஒப்பனை செய்து கொண்டிருந்தாள்.. வாசுதேவனைக் கண்டதும்..

"தடியா.. இப்போத்தான் வர்றியா.." என்றாள்..

"ம்ம்ம்.. நீ எப்போக்கா வந்த..?"

"காலையிலேயே உன் அத்தான் அந்தப் பக்கம் கம்பெனிக்குப் போனதும் அஜய்யை ஸ்கூலில் விட்டுவிட்டு இந்தப் பக்கமா ஓடி வந்துட்டேன்.."

"காலையிலேயே வந்தாச்சா..?"

"அதுவே லேட்டுடா.. இன்னைக்கு பூரா நிற்க நேரமில்லாம சுத்தியாச்சு.. எம்புட்டு வேலை.."

"என்ன வேலை..?"

"வசுவை பியூட்டி பார்லருக்குக் கூப்பிட்டுக்கிட்டுப் போனேன்.. அவளுக்குத் தேவையான டிரஸ்ஸை செலக்ட் பண்ணி வைச்சேன்.. மெஹந்தி போட்டு விட்டேன்.. பொருத்தமான ஜ்வல்ஸை எடுத்து வைச்சேன்.. மதியம் ஆரம்பிச்ச மேக்-அப்.. இன்னும் முடிந்த பாடாக இல்லை.. ஏய் வசு.. தலையை ஆட்டாதேடி.."

வாசுதேவனிடம் பேசியபடி வசுமதிக்கு ஒப்பனை செய்து கொண்டிருந்த சாவித்திரி, தம்பியைத் திரும்பிப் பார்க்க முயன்ற வசுமதியை அதட்டினாள்..

வசுமதியைப் பார்த்த வாசுதேவனின் கண்கள் விரிந்தன.. பிரத்யேகமான ஒப்பனையில் தேவதையைப் போன்ற அழகுடன் இருந்தாள் வசுமதி.. தம்பியைப் பார்த்ததும் அவளுக்கு வெட்கம் வந்து விட்டது..

"வாவ்..! சூப்பரா இருக்கேக்கா.." என்றான் வாசுதேவன்.

"போடா.. கேலி செய்யாதே.." வசுமதி முகத்தை மூடிக் கொண்டாள்..

"போதும்டி.. கண் மை தீற்றிக்கப் போகிறது.." சிறிய கைக்குட்டையால் வசுமதியின் முகத்தில் ஒற்றி எடுத்தாள் சாவித்திரி..

"நீங்க ரெண்டு பேரும் காபி, டிபன் சாப்பிட்டிங்களா..?" வாசுதேவன் கேட்டான்..

"நான் சாப்பிட்டாச்சுடா.." சாவித்திரி அறிவித்தாள்..

"அக்கா..?" வாசுதேவன் வசுமதியைப் பார்த்தான்..

"அவ எப்படிடா இப்பச் சாப்பிடுவா.. லைட்டா ஆரஞ்சு ஜீஸ் குடிக்கச் சொல்லியிருக்கேன்.. அது போதும்.." என்றாள் சாவித்திரி..

"ஏன்..?" வாசுதேவனுக்கு கோபம் வந்து விட்டது..

"ஏனா..? இது என்ன சித்தி.. இவன் முட்டாள்தனமா உளறிக்கிட்டு இருக்கிறான்..?" சாவித்திரி விசித்திரமாக அவனைப் பார்த்து விட்டு கோதாவரியிடம் கேட்டாள்..

"அப்படித்தான் உளறிக்கிட்டு இருக்கான்.. இவனோட அக்காவைப் பட்டினி போடறோமாம்.. சண்டைக்கு வர்றான்.. வாடா.. வந்து உன் அக்கா கிட்டேயே கேட்டுக்கன்னு கூப்பிட்டுக்கிட்டு வந்தேன்.." கோதாவரி தலையைப் பிடித்துக் கொண்டாள்..

"ஏண்டா சித்தியைப் போட்டு இப்படிப் படுத்தற..? பாவம்.. காலையில இருந்து ஒற்றை ஆளா கிச்சனில் மல்லுக் கட்டிக்கிட்டு இருக்காங்க.. இதில நீ வேற படுத்தனுமா..?"

"ஏனாம்..?"

"உனக்கு விளக்கம் சொல்ல என்னால முடியாதுப்பா.. வசு.. மேக் அப் ஓவர்.. எதையும் கலைச்சுக்காம அசங்காம இருக்கனும்.. இந்தாடா தம்பி.. உன் அக்காகிட்ட விளக்கம் கேட்டுக்க.. நீங்க வாங்க சித்தி.. டிபன் அயிட்டங்களை எல்லாம் பிளேட்டுகள்ல எடுத்து வைக்கலாம்.. பாலைக் காய்ச்சிட்டிங்களா..? அஜய் அப்பா கம்பெனியில பர்மிசன் சொல்லியிருக்கார்.. அஜய்யை ஸ்கூலில் இருந்து கூப்பிட்டுக்கிட்டுப் போயி பிரஷ் அப் ஆகி டிரஸ் சேன்ஜ் பண்ணிட்டு வந்து விடுகிறேன்னு சொல்லியிருக்கார்.. இந்த வாசு ஏன் இப்படியே நிக்கிறான்.. அஜய்கூட பிரஷ் அப் ஆகி வந்துருவான் போல.. இவன் அசைய மாட்டேங்கிறானே.."

சாவித்திரி பேசியபடியே கோதாவரியுடன் சென்று விட்டாள்.. வசுமதி திரும்பி உட்கார்ந்து வாசுதேவனின் கையைப் பிடித்து இழுத்துப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டாள்.. தம்பியின் தலையை பாசத்துடன் கோதி விட்டாள்.. இவள் பிரியப் போகிறாளா என்று வாசுதேவனின் மனம் பதைத்தது..

"விடுக்கா.." தலையைச் சிலுப்பினான்..

"ஏண்டா..?" வசுமதி விடவில்லை..

"நீ ஒன்னும் என்னைக் கொஞ்ச வேணாம்.."

"அதுதான் ஏன்னு கேக்கறேன்.."

வாசுதேவனின் கண்கள் கலங்கி விட்டன.. என்னவென்று சொல்ல முடியாத துயரம்.. இன்னதென்று உணர முடியாத சோகம்.. ஆழ் மனதில் வியாபிக்கும் உணர்வுகளை இனம் காண்பதென்பது அத்தனை எளிதல்ல.. தாய், தந்தையைப் பிரிந்து படிக்கப் போகும் போது உண்டாகும் துக்கத்தை வார்த்தைகளில் வெளிப்படுத்த இயலுமா.. அதுபோல்தான் இதுவும்.. அடையாளமில்லாத சோகம்..

"டேய் வாசு.." வசுமதிக்குத் தம்பியை எப்படித் தேற்றுவதென்றே தெரியவில்லை.. திகைத்தாள்..

"இப்ப என்னடா ஆச்சு..? பெண் பார்க்கத்தானே வராங்க..? என்னைப் பார்க்கனும்.. அவங்களுக்குப் பிடிக்கனும்.. பிடித்தாத்தானே கல்யாணம் நடக்கும்..? பெண் பார்க்கும் படலமே இப்பத்தானே ஆரம்பிச்சிருக்கு..?"

"உன்னைப் போய் பிடிக்கலைன்னு சொல்லிருவாங்களா..? எந்த மாங்கா மடையனும் சொல்ல மாட்டான்.."

"இந்த மாங்கா மடையன் சொல்லிட்டாருன்னா..?"

வசுமதியின் விழிகளில் மின்னிய ரகசியக் கனவை வாசுதேவன் கண்டு பிடித்து விட்டான்.. அக்காவுக்கு இந்த ஏற்பாடுகளில் விருப்பம் இருக்கிறது என்பதில் தன் பிரிவாற்றாமையை மறைத்துக் கொண்டு..

"உனக்கு அவரைப் பிடிச்சிருக்கா..?" என்று கேட்டான்..

வசுமதியின் முகம் சிவந்து விட்டது.. தலை குனிந்து தம்பியின் கைவிரல்களோடு தன் விரல்களைக் கோர்த்துப் பிரித்தாள்.. அவளது விரல்களில் மெல்லிய நடுக்கத்தை உணர்ந்த வாசுதேவன் பரிவுடன் தமக்கையின் கையைப் பிடித்துக் கொண்டான்..

"வாசு.."

"சொல்லுக்கா.."

"எனக்கு அவரைப் பிடிப்பது இருக்கட்டும்.. அவருக்கு என்னைப் பிடிக்குமாடா..?"

வசுமதியின் இமைகள் படபடத்தன.. ரவிவர்மாவின் ஓவியம் போல இருந்த தமக்கையை வெகு பிரியத்துடன் பார்த்தான் வாசுதேவன்.. அவனது மனம் கனிந்தது.. தமக்கையின் முகத்தைக் கைகளில் ஏந்தியவன் பூவைப் பார்ப்பதைப் போல அவளைப் பார்த்தபடி..

"பிடிக்கும்க்கா.. நான் சொல்றேனில்ல.." என்றான்.

"பர்ஸ்ட்டா பார்க்க வர்ற மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக்கிறவ அதிர்ஷ்டசாலி வாசு.. அப்படிப்பட்ட அதிர்ஷ்டசாலியா நான் இருக்கனும்னு ஆசைப் படறேண்டா.. இவர்தான் மாப்பிள்ளைன்னு போட்டோவைப் பார்த்து ரசிச்சு, ரகசியக் கனவு கண்டு விட்டு அது இல்லேன்னு ஆனதும் மனதிலிருந்து தூக்கி எறிந்து விட்டு, அடுத்த பெண் பார்க்கும் படலத்துக்குத் தயாராகனும்னா அது கொடுமை வாசு.." வசுமதி தழதழத்தாள்..

"அந்தக் கொடுமையெல்லாம் உனக்கு நடக்கவே நடக்காதுக்கா.. யாரு நீ..? இந்த வீட்டின் இளவரசி..! உன்னைப் பார்த்தவுடன் மாப்பிள்ளை மயங்கிப் போய் விடுவார்.. பாரேன்.." அவன் தேற்றினான்..

"பார்க்கலாம்.." வசுமதி நம்பிக்கையில்லாமல் சொன்னாள்.

"பார்க்கத்தானே போற.. ஆமாம்.. மாப்பிள்ளை போட்டோவை என்னிடம் காட்டவே இல்லையே.. இந்தப்

பேச்சையே இப்பத்தான் கேள்விப்படறேன்.."

"நீ எங்கடா வீடு தங்கற.. காலேஜ்.. பிரண்ட்ஸ்.. படிப்பு.. கிரிக்கெட்டுன்னு ஜாமத்துக்கு வீட்டுக்கு வர்ற.. காலையில எட்டு மணி வரைக்கும் இழுத்துப் போர்த்தித் தூங்கிட்டு.. அடிச்சுப் பிடிச்சுக் குளிச்சு காலேஜீக்கு ஓடிடறே.."

"இந்தச் சாக்கெல்லாம் சொல்லாதே.."

"கோவிச்சுக்காதேடா.. அப்பாவோட சித்தப்பா மகளுக்கு ஒரகத்தி மகனாம்.. நேத்துத்தான் அப்பாவுக்கு போன் வந்தது.."

"உறவு முறையெல்லாம் விளக்காதே.. எனக்குப் புரியாது.."

"நமக்கு அத்தை மகன் முறைதாண்டா.."

ரசித்துச் சொன்னாள் வசுமதி.. கடுப்பிலிருந்த வாசுதேவன்..

"உனக்கு அத்தை மகன்னு சொல்லு.." என்று எரிந்து விழுந்தான்..

"உனக்கு மட்டும் சித்தி மகனாடா..?" வசுமதி வாய்பொத்திச் சிரித்தாள்.. அவளுக்கு மாப்பிள்ளையைப் பிடித்திருக்கிறது என்பது கண்கூடாகத் தெரிந்ததில் வாசுதேவன் இளகிப் போனான்..

"சரி.. சரி.. போட்டோ இருக்கா..?" கித்ததாய்ப்பாய் கேட்டான்..

"இல்லாமல் இருக்குமா.. நீயே பாரு.." வசுமதி எக்கித் தலையணைக்கு அடியிலிருந்த போட்டோவை வலிக்குமோ என்பதைப் போல மிருதுவாக உருவிக் காட்டினாள்..

'விடிய விடிய போட்டோவைப் பார்த்துக்கிட்டு இருந்தது போல..'

தமக்கையின் உள்ளம் கவர் கள்வன் எப்படியிருக்கிறான் என்று போட்டோவைப் பார்த்தான்.. கண்ணியமான தோற்றமும் சிநேகிதப் புன்னகையுமாக அகிலன் போட்டோவில் இருந்தான்..

'நல்லாத்தான் இருக்காரு..' போட்டோவை தமக்கையிடம் நீட்டியபடி..

"என்ன செய்கிறாராம்..?" என்று விசாரித்தான்..

"தஞ்சாவூரில இன்கம்டாக்ஸ் ஆபிசரா வேலை பார்க்கிறாராம்டா.." பூரிப்புடன் சொன்னாள் வசுமதி..

'நல்ல வேலைதான்..' வாசுதேவன் எழுந்தான்..

"எங்கேடா போற..?"

"உனக்கு காபி டிபன் எடுத்து வரத்தான்.. அவங்க வந்து போக எவ்வளவு நேரமாகுமோ.. அதுவரை பசியோடு இருப்பியா..?"

"போடா.. காமெடி பண்ணாதே.. இப்பப் போய் சாப்பிட்டுக்கிட்டு உட்கார்ந்திருந்தா நல்லாயிருக்குமாடா..? மேக்-அப் கலைஞ்சிராது..?"

"அம்மாவும், சாவித்திரியக்காவும் உன்னை நல்லா பிரெயின்-வாஷ் பண்ணி வைச்சிருக்காங்க.."

"நீ போய் சாப்பிடு.."

"வேண்டாம்.."

"ஏண்டா..?"

"நீ பசியோடு இருக்க நான் மட்டும் சாப்பிடுவதா.. பிரஷ்-அப் ஆகிட்டு டிரஸ் சேன்ஜ் பண்ணிட்டு வந்துடறேன்.. மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்து பார்க்கிறப்ப பெண்ணோட தம்பி ஜம்முன்னு இருக்க வேண்டாமா..?"

"சமத்து.."

வசுமதியின் கண்கள் பனித்தன.. வாசுவேதன் பசி தாங்க மாட்டான்.. உணவுப் பிரியன் வேறு.. கல்லூரியிலிருந்து வந்ததும் சுடச்சுட அவனுக்கு உணவுப் பதார்த்தங்கள் இருக்க வேண்டும்.. இன்றைக்கு பிரத்யேக பலகாரங்கள் தயாராக இருக்கின்றன.. ஆயினும் அவன்

சாப்பிடவில்லை.. தமக்கைக்காக பசியைப் பொறுத்துக் கொள்கிறான்..

'என் தம்பி..!'

அகிலன் தன் குடும்பத்தோடு பெண் பார்க்க வந்து விட்டான்.. தமக்கையைக் கடத்திக் கொண்டு போக வில்லன் வந்து விட்டான் என்றே வாசுதேவனுக்குத் தோன்றியது.. அவனால் அகிலனிடம் பிரியத்துடன் பேச முடியவில்லை.. வசுமதிக்கு அகிலனைப் பிடித்திருக்கிறது என்பதினால் முறைப்பை வெளிக்காட்டாமல் இயல்பாக பேச முயன்றான்..

வாசுதேவன் சொன்னதைப் போல முதல் பார்வையிலேயே வசுமதியிடம் மயங்கி விட்டான் அகிலன்.. வசுமதியின் வேண்டுதல்படியே அவளைப் பெண் பார்க்க வந்த முதல் மாப்பிள்ளையையே திருமணம் செய்து கொள்ளும் அதிர்ஷ்டசாலியாக அவள் ஆகிவிட்டாள்.. வசுமதியின் திருமணத்தின் போது வாசுதேவன் ஒர்நொடி கூட நிற்காமல் ஓடி ஓடி வேலை பார்த்தாலும் மனம் முழுவதும் தமக்கை அவனைப் பிரிந்து புகுந்த வீட்டிற்குச் செல்லப் போகிறாள் என்ற பிரிவுத்துயரே மண்டிக் கிடந்தது.. வசுமதி தாய் வீட்டிற்கு வந்து செல்லும் போதெல்லாம் வாசுதேவன் புத்துணர்வைப் பெறுவான்.. அவள் அதிகநாள்கள் இருக்க மாட்டாள்.. ஓரிரு நாள்களிலேயே சென்று விடுவாள்.. தலைப் பிரசவத்துக்கு வந்தவள் நான்கு மாதங்களுக்கும் மேல் தாய் வீட்டில் தங்கியதில் வாசுதேவன் இறக்கையில்லாமல் பறந்தான்.. அதற்கடுத்து பழைய கதைதான்.. இரண்டு நாள்கள் தங்குவது கூட குறைந்து விட்டது. இப்போது இரண்டாவது பிரவசத்திற்காக வந்திருக்கிறாள்.. வீடே உயிர்ப்புடன் இருப்பதைப் போல மகிழ்ந்து போனான் வாசுதேவன்.. அக்காவும், தம்பியும் பழைய நாள்களுக்குத் திரும்பினார்கள்.. எப்போதும் பேச்சுத்தான்.. சிரிப்புத்தான்.. கிண்டல்தான்..

பிள்ளைகளின் கலகலத்த சிரிப்பில் ஹாலில் உட்கார்ந்திருந்த பூபதி திரும்பிப் பார்த்தார்..

பூபதி அவருடைய பிள்ளைகள் வர்ணித்ததைப் போல விசுவைப் போன்ற தோற்றத்துடன்தான் இருந்தார்.. பேச்சும் விசுவைப் போலவே அமைந்து விட்டதில் அவருடைய முதுகிற்குப் பின்னால் அவரது பேச்சை மிமிக்ரி செய்து காட்டித் தமக்கையை சிரிக்க வைத்துக் கொண்டிருப்பான் வாசுதேவன்.. அதிலும் அவர் மனைவியை..

"கோதாவரி.." என்று அழைக்கும் தொனி, அச்சு அசல் 'சம்சாரம் அது மின்சாரம்..' விசுவின் அழைப்பைப் போலவே இருக்கும்..

அப்போதும் அவர் "கோதாவரி.." என்று அழைக்க அக்காவும் தம்பியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்..

பூபதிதான் விசுவின் சாயலில் இருந்தார்.. கோதாவரி உயரம் குறைவாக பூசினாற் போன்ற உடல்வாகுடன் செழுமையாக மஞ்சள் பூசியதைப் போன்ற நிறத்துடன் இருந்தாள்.. இளகிய மனம்.. வேலையாள்களை அதட்டி வேலை வாங்கத் தெரியாது..

"குட்மார்னிங் அப்பா.. இன்னைக்குப் பேப்பரில என்ன ஸ்பெசல்..?" வாசுதேவன் பூபதியின் பக்கத்தில் உட்கார்ந்து பேப்பரை உருவினான்.. பூபதி மகனை முறைத்து விட்டு.

"ஏண்டா.. இது என்ன தோசையா..?" என்று கேட்டார்..

"தோசையிலதான் ஸ்பெசல் தோசை, சாதா தோசைன்னு இருக்கனுமா..? வாழ்க்கையில இருக்கக் கூடாதா..?" அவன் பேப்பரை விரிக்க..

"இந்த வியாக்கினத்தையெல்லாம் வீட்டுக்குள்ள மட்டும் பேசு.." என்று முணுமுணுத்தார் பூபதி..

"வெளியிலயும் பேசுவேன்.." பேப்பரில பார்வையைப் பதித்தபடி சொன்னான் வாசுதேன்..

"காதில் விழுந்துருச்சா..?"

"பக்கத்திலதான் உக்காந்திருக்கீங்க..? விழுகாம என்ன செய்யும்..?"

"வாய்க்குள்ளதான முணுமுணுத்தேன்..?"

"எட்டுத் தொண்டையில முணுமுணுத்தா இப்படித்தான்.. நம்ம தெருவோர டீக்கடைக்காரன் உங்கம்மா பேரு கோதாவரியா சார்ன்னு கேக்கறான்.. நீங்க வீட்டுக்குள்ள செகண்டுக்கு ஒருதரம் 'கோதாவரி' 'கோதாவரி'ன்னு மாடுலேசனோட கூப்பிட்டு வைக்கிறது தெருமுனை வரைக்கும் கேட்டிருக்குது.. வாயைக் குறைங்கப்பா.."

"இதுக்கு சவுண்டைக் குறைன்னுல்ல சொல்லனும்..?"

"ரெண்டும் ஒன்னுதான்.."

பூபதியின் அருமந்த புத்திரன் பேப்பருக்குள் கவிழ்ந்து கொள்ள பூபதி அவனை ஒரு தினுசாகப் பார்த்து விட்டு மனைவியிடம்..

"ரெண்டும் எப்புடிடீ ஒன்னாகும்..?" என்று கேட்டார்.

வசுமதி வாய்க்குள் சிரிப்பை மெல்ல.. கோதாவரி மகளின் முதுகில் ஒரு மொத்து மொத்திவிட்டு..

"அப்பாவையா கிண்டல் பண்ற..?" என்று அதட்டினாள்..

"நம்ம அப்பாதானேம்மா.." மகன் செல்லம் கொஞ்சினான்..

"உனக்குத்தான் அப்பா.. அவளுக்குப் புருசன்.." பூபதி நினைவுறுத்தினார்..

"அதுக்குத்தான் 'கோதாவரி.. கோதாவரி..'ன்னு மைக் போட்டுக் கத்தறீங்களே.." மகன் ஒரு தாக்குத் தாக்கினான்.

"இங்கதான் வாய் கிழியுது.."

"வேற எங்க கிழியனும்..?"

"பக்கத்து வீட்டுப் பல்லவிகிட்டக் கிழியனும்.."

"என்னது..?"

வாசுதேவன் பேப்பரிலிருந்து தலையை விலக்கித் தகப்பனாரை விரோதமாக பார்த்தான்.. அவர் முகம் அவனுக்கு மேல் கடுகடுவென இருந்ததில்..

"வாட் ஹேப்பன்..?" என்றான்..

"மனுஷியாடா அவ..? நம்ம நிஷாக்குட்டி பந்து விளையாடியிருக்கு.. பந்து பறந்து போய் பக்கத்து வீட்டுத் தோட்டத்தில விழுந்துருச்சு.."

"எடுத்துத் தரச் சொல்லிக் கேட்டிங்களா..?"

"இல்லையே.. அப்படியிருந்தாக்கூட மகராசி அந்தக் கத்துக் கத்தினதில ஒரு அர்த்தம் இருக்குமே.."

"பின்னே..? எதுக்காக கத்தினாளாம்..?"

"அவ தோட்டத்தில ஊஞ்சலாடிக்கிட்டு இருந்தாளாம்.."

"அவமேல பந்து பட்டிருச்சா..?"

"அதுவும் இல்லைடா.. அவளுக்குப் பக்கத்தில பந்து விழுந்துருச்சாம்.. அந்தச் சத்தம் அவளை டிஸ்டர்ப் பண்ணிருச்சாம்.. காலாங்கார்த்தாலே காம்பவுண்டுக்குப் பக்கத்தில நின்னு அப்படியொருசத்தம் போடறா.. உன் பேத்தி உனக்குச் செல்லம்ன்னா உன் வீட்டோட வைத்துக்கனும்னு சொல்றா.. பந்து விளையாடனும்னா பிளேகிரௌண்டுக்குப் போகனும்ன்னு கை காட்டறா.. தெருவே வேடிக்கை பார்த்துச்சுடா.."

"வாட்..? உங்களை 'வா, போ'ன்னு பேசினாளா..?"

வாசுதேவன் பேப்பரை விசிறி விட்டு எழுந்தான்.. கோபமாக ஹாலை விட்டு வெளியே வந்து தோட்டத்துப் பக்கம் போனான்.. வசுமதியும், கோதாவரியும்..

"வேண்டாம் வாசு.. அவ பஜாரி.." என்று தடுத்தார்கள்..

"அவ பஜாரின்னா நான் கேப்மாரி.." என்று பல்லைக் கடித்தவன் பக்கத்து வீட்டுத் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்த அந்தப் பல்லவியைப் பார்த்து..

"ஏய்.. இங்கே வா.." என்று கைதட்டி அழைத்தான்.

திரும்பிப் பார்த்த பல்லவிக்கு முப்பத்தி ஐந்து வயதிருக்கும்.. பார்வைக்கு இருபதைப் போன்ற ஒப்பனையுடன் இருந்தாள்.. அந்த அதிகாலை நேரத்திலும் உதட்டுக்குச் சாயம் தீட்டியிருந்தாள்.. வாசுதேவனின் அலட்சிய அழைப்பில் அவளது விழிகளில் தீப்பொறி பறந்தது..

"ஹேய்.. மரியாதையாய் பேசு.." என்றாள்..

"உனக்கு மரியாதை தேவைப்படுதில்ல..? அதைப் போலதான் மத்தவங்களுக்கும் இருக்கும்..? என்னைவிட நீ வயதில் பெரியவள்ன்னா உன்னை விட என் அப்பா வயதில் பெரியவர்.. கிவ் ரெஸ்பெக்ட் அண்ட் கெட் ரெஸ்பெக்ட்ன்னு கேள்விப் பட்டதில்லையா..? நீ மரியாதை கொடுத்தால்தான் உனக்கு அது திருப்பிக் கிடைக்கும்.. மைண்ட் இட்.."

"நான் சென்ஸ்.."

"இதை நீ சொல்ற.. நேரம்மா.. சென்ஸீக்கும் உனக்கும் ஏணி வைத்தாலும் எட்டாத தூரம்ன்னு இந்த ஏரியா மக்களுக்கு நல்லாவே தெரியுமே.. எங்கேயிருந்து இங்கே வந்து தொலைச்ச..? உன்னைச் சொல்லக் கூடாது.. உனக்கெல்லாம் வீட்டை வாடகைக்குக் கொடுத்திருக்காரு பாரு.. நரசிம்மன் அங்கிள்.. அவரைச் சொல்லனும்.."

"ஹேய்.. மைண்ட் யுவர் டங்.."

"அப்படி என்ன நான் சொல்லக் கூடாததைச் சொல்லிட்டேன்..? மைண்ட் யுவர் டங்குன்னு எகிற்ர..?"

"பீஸ்ஃபுல்லா இருக்கனும்னு நினைக்கிறேன்.. எனக்குச் சத்தம், சந்தடி பிடிக்காது.. எப்பப்பாரு.. உங்க வீட்டில ஒரே இரைச்சல்.. வீடா இது..? சந்தைக்கடை மாதிரியில்ல இருக்கு.."

"எங்க வீட்டைப்பத்தி ஏதாச்சும் கமெண்ட் பண்ணின.. நடக்கறே வேற.. லேடின்னு பாக்கறேன்.. உன்னப் போல

ஒற்றைக்காட்டு ஒந்தியைப் போல இருக்கிறவளுக்கு குடும்பத்தின் அருமையைப் பற்றி என்ன தெரியும்..? வீடுன்னு இருந்தா சத்தம் வரத்தான் செய்யும்.. அது உனக்கு இடைஞ்சலா இருந்தா காதைப் பொத்திக்க.. முடியாதுன்னா வீட்டைக் காலி பண்ணிட்டு ஓடிப் போயிரு.."

"ஹேய் மேன்.. என்னவோ, நீதான் இந்த வீட்டோட ஓனரைப் போலத் திமிர் காட்டற.. ஆப்டர் ஆல், பக்கத்து வீட்டுக்காரன் நீ.."

"ஆப்டர் ஆல் பக்கத்து வீட்டுக்காரன்தான்.. ஆனா சொந்த வீட்டுக்காரன்.. ஒரு போனைப் போட்டாப் போதும்.. நீ குடியிருக்கிற வீட்டோட ஓனர் உன்னைக் காலி பண்ணிட்டுத்தான் வேற வேலையைப் பார்ப்பார்.. என்ன.. போனைப் போடவா..?"

"சொந்த வீடுன்னா உயர்த்தி.. வாடகை வீடுன்னா மட்டமா..?"

"அப்படி நான் சொன்னேனா..? எதிர் வீட்டிலயும்தான் வாடகைக்கு குடியிருக்கிறாங்க.. உன்னைப் போலவா சிடுமூஞ்சியா, சண்டைக்காரியா இருக்கிறாங்க..? சொந்த, பந்தம் போல அக்கம் பக்கத்தில பேசிப் பழகறாங்க.. நீ மட்டும் ஏன் இப்படி இருக்க..?"

"அது என் இஷ்டம்.. நீ யார் அதைக் கேட்க..?"

"அந்தக் கருமத்தை நான் ஏன் கேட்கப் போறேன்.. நீ எப்படியோ இருந்துட்டுப் போ.. சின்னக் குழந்தை பந்து விளையாடி உன் வீட்டுத் தோட்டத்தில விழுந்துட்டா 'லபோ திபோ'ன்னு கத்திக் கூப்பாடு போட்டு மட்டு மரியாதை இல்லாம சண்டைக்கு வருவியா..? உன் மேல பந்து விழுந்ததா..? இல்லை உன்னை எடுத்துத் தரச்சொல்லி டிஸ்டர்ப் பண்ணினோமா..?"

"அதையெல்லாம் நீ கேக்கக் கூடாது.. ஏன் கேக்கிற..?"

"பெரிய்ய்ய.. ய லேடி பிரகாஷ்ராஜ்.. வசனம் பேசற.. ஆளைப் பாரு.. சின்னக் குழந்தையோட விளையாட்டை

ரசிக்க முடியலை.. நீயெல்லாம் அமைதியைப் பத்திப் பேசற.. ம்ஹீம்.."

வாசுதேவனுக்கு ஆற்றாமையாக இருந்தது.. அந்தப் பல்லவி தோட்டத்திற்கு வருவதே அங்கு இருக்கும் ஊஞ்சலில் உட்கார்ந்து உற்சாகமாக ஆடுவதற்காகத்தான்.. ஒருநாள், ஒரு பொழுதாவது அவள் தென்றலை ரசித்தோ, பூக்களை வருடியோ வாசுதேவன் பார்த்தது இல்லை..

ஓர் அதிகாலைக் கதிரவனோ... அவனது செந்நிற ஒளிக்கதிர்களோ.. சாலையோர மரங்களோ.. அவையுதிர்க்கும் மலர்களோ.. பறவைகளின் 'கீச்கீச்..' குரலின் சங்கீதமோ.. அதன் இனிமையோ.. கவர முடியாத மனது, என்ன மனது..?

மனது என்பது விசாலமாக இருக்க வேண்டும்.. மனதின் சாளரங்கள் திறக்கப்படும் போது அதில் ஒளித்து வைக்கப் பட்டிருக்கும் கசடுகளும், தூசி, தும்புகளும் காணாமல் போய் விடும்.. நிர்மலமான மனதில் ஆத்ம திருப்தி நிறைந்திருக்கும்.. அப்படியில்லாமல் மனித மனதில் குறுக்குச் சந்துகள் உருவாகும் போது நிர்மலம் என்ற வார்த்தைக்கே அர்த்தமின்றிப் போய் விடுகிறது..

"என்ன.. இப்படிப் பார்க்கிற..?"

பல்லவி ஒரு மார்க்கமாகப் பார்த்து வைக்க வாசுதேவனுக்குத் தூக்கிவாரிப் போட்டு விட்டது..

'இவ ரூட்டு ராங் ரூட்டா இருக்கேடா வாசு..'

காரின் ஹாரன் ஒலி கேட்டது.. திரும்பிப் பார்த்த பல்லவியின் கொடூர முகம் ஸ்விட்ச் போட்டதைப் போல சோக முகமாக மாறிவிட்டது..

'என்னடா இது.. வில்லி சோகமாயிட்டா..'

இவள் இங்கிருந்தே கண்ணீர் மல்கும் விழிகளுடன் இந்த அபலையைக் கடை தேற்ற வந்தாயா என்பதைப் போல பார்த்து வைத்தாள்.. காம்பவுண்டின் கேட்டைத் திறக்கப் போகவில்லை.. காரை ஓட்டி வந்த பெண் காரை விட்டு

இறங்கிக் கேட்டை திறந்து வைத்து விட்டுக் காரில் ஏறி போர்டிகோவில் கொண்டு வந்து நிறுத்தி விட்டு மறுபடியும் கேட்டை மூடி விட்டு வரப் போனாள்..

அவள் இத்தனையையும் செய்வதைப் பார்த்தபடி இடித்த புளி போல இருந்த இடத்தை விட்டு நகராமல் ஆணியடித்ததைப் போல அங்கேயே நின்றிருந்தாள் பல்லவி.. காம்பவுண்டு கேட்டை மூடிய பெண் தோட்டத்திற்கு விரைந்து வந்தாள்.. அவளைக் கண்டதும் தாய்ப்பசு (?) வைக் கண்ட கன்றாக (தலையெழுத்து..) இவள் தாவி அவளது தோளில் முகம் புதைத்து.. 'கோ' வென அழ ஆரம்பித்தாள்..

'ஹையோடா.. நான் இந்தப் பொம்பளக் கையைப் பிடிச்சு இழுத்ததைப் போல கூப்பாடு போடறாளே..'

வாசுதேவன் ஊடே இருந்த காம்பவுண்டு சுவரைப் பார்த்துக் கொண்டான்.. திரும்பி போர்டிகோவில் நின்றிருந்த தாயையும் தமக்கையையும் ஓர் பார்வை பார்த்தான்.. தைரியம் வந்தது..

தாயையும், தமக்கையையும் வைத்துக் கொண்டு அவன் காம்பவுண்டு சுவரைத் தாண்டிக் குதித்து பல்லவியின் கையைப் பிடித்து இழுத்தான் என்று எவரும் அவன்மீது பழி போட்டு விட மாட்டார்கள்..

"அழாதீங்க அண்ணி.." அந்தப் பெண் பல்லவியைத் தேற்றினாள்..

'அண்ணியா..? அப்ப அண்ணன் எங்கே..?'

பல்லவியின் கழுத்தில் தாலிச்சரடு தென்படுகிறதா என்று ஆராய முற்பட்ட பார்வையை, வேண்டாம் இந்த விபரீதம் என்று அடக்கி வைத்தான் வாசுதேவன்.. சூழ்நிலை சரியில்லை.. அவனது ஆராய்ச்சிப் பார்வையை அலையும் பார்வை என்று வந்திருக்கும் நாத்தனார் நினைத்து விட்டால் என்ன செய்வது..?

'அண்ணன்காரன் ஓடிப் போயிருப்பானா இருக்கும்.. இப்படியாப்பட்ட தெய்வ மகள்கூட எவன் குடும்பம்

நடத்துவான்..? இமயமலைப் பக்கம் 'எஸ்கேப்' ஆகியிருப்பான்..'

பல்லவியைத் தோளில் சாய்த்திருந்த பெண் வாசுவேதனை வில்லனைப் பார்ப்பதைப் போல உக்கிரமாகப் பார்த்து வைத்தாள்..

'நானில்ல.. நானில்ல..' கூவத் துடித்த நாவைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்குள் வாசுதேவனுக்குப் போதும், போதும் என்றாகி விட்டது..

"சொல்லுங்க அண்ணி.. யார் உங்களை என்ன செய்தது..?" அந்தப் பெண் குண்டைத் தூக்கிப் போட்டாள்.

வாசுதேவனுக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது.. இருந்திருந்து பக்கத்து வீட்டுப் பிடாரியின் கையைப் பிடித்து இழுத்ததாகவா அவனுக்குப் பெயர் வந்து சேர வேண்டும்..?

'அதுக்கு இந்த அப்சரஸ் கையைப் பிடித்து இழுத்து வைச்சிரலாமே..'

அழகான மலரைப் போல.. இளந்தென்றலைப் போல.. பனியின் குளிர்ச்சியைப் போல.. மயிலிறகைப் போல.. அவனது மனம் வருடிய அந்தப் பெண்ணை போதையுடன் பார்த்தான்.. அவளை எங்கேயோ பார்த்திருப்பதைப் போல தோன்றியது.. மயக்கம் தரும் மணித்துளிகளை அவள் அவனுக்குத் தந்திருக்கிறாள்.. அவனது மனதைத் திருடிச் சென்றிருக்கிறாள்..

'எங்கே பார்த்தேன்..?' வாசுதேவனுக்கு ஞாபகம் வரவில்லை..

'சட்..' அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது..

தேவையில்லாத பல விசயங்கள், தேவையற்ற சமயங்களில் ஞாபகம் வருதே, ஞாபகம் வருதே என்று அணிவகுத்து வந்து நிற்கும்.. அதுவே தேவையென்ற ஒன்றை மூளையைக் கசக்கி யோசித்தாலும் வந்து தொலைக்காது.. பேருந்து நிலையத்தில் காத்து நிற்கும்

போது நாம் செல்ல வேண்டிய திசைக்கு எதிர் திசையில் செல்லும் பேருந்துகள் வரிசை கட்டி வந்து நிற்குமே.. அதுபோலதான் இந்த வாழ்க்கையும்.. தேவைப்படும் கால நேரத்தில் எதுவும் கிட்டாது.. விதிப்படிதான் வாழ்க்கை என்று மனதைத் தேற்றிக் கொண்டு வாழ்வதிலேயே வாழ்நாள்கள் கழிந்து விடுகின்றன.. வாழ்க்கையை வாழ்க்கையாக வாழ்ந்து பார்த்து மறைந்தவர்களை விரல் விட்டு எண்ணிவிடாம்.. இந்த வாழ்வு என்பது சுமையானது.. நமை அழுத்தும் பாறை போன்றது..

இந்த வாழ்க்கையானது.

'கிழக்குகள் வெளுக்கும் காலை வந்தால்

நீ நினைப்பது நடக்கும் வேளை வந்தால்..'

என்று சப்பைக் கட்டு கட்டுவது..

'இருட்டினில் வாழும் உயிர்களுக்கு - அந்த

இறைவன்தானே கை விளக்கு..

விடிந்த பின்னாலந்த விளக்கெதற்கு..? எல்லாம்

முடிந்த பின்னால் அவன் அருளெதற்கு..?'

என்ற பாடல் வரிகளை கேள்விகளாக்கிக் கேட்டால் பதில் கிடைத்து விடுமா..?

'என்னடா இது.. பப்பாளிப்பழம் போல தளதளன்னு பாத்தவுடன் மனசில பச்சக்குன்னு ஒட்டிக்கிறதைப் போல ஒரு பொண்ணு வந்தா ஜொள்ளு விடாம மனசுக்குள்ள பிலாசபியச் சொல்லிக்கிட்டு இருக்கேனே..'

'நானே நானா..?' என்று சந்தேகம் வந்தது..

'விட்ட விடிகாலையில இந்தப் பொம்பளகூட சண்டைக்கு வந்தாலும் வந்தேன்... எல்லாமே எகனைக்கு மொகனையாவே நடக்குது..' வெறுத்துப் போனான்..

"சுசி.." பல்லவி விம்மினாள்..

பல்லவிக்கு அழுகையும் வரக்கூடும் என்பதே வாசுதேவனுக்கு அதிர்ச்சி தரக் கூடியதாக இருந்தது.. அதிலும் இவள் விம்மி விம்மி அழுவதில் அவன் எல்லையற்ற துயரம் கொண்டான்.. இதுபோன்ற நாடக சாலைகள் பக்கத்து வீடுகளில் வசித்தால் எப்படி நிம்மதியாக வாசம் செய்வது..?

"வேண்டாம் அண்ணி.."

பல்லவியின் ஒவ்வொரு விம்மலுக்கும் அந்த 'சுசி' துடித்துப் போனாள்.. இந்த அளவுக்கு எமோசனல் ஆகிறாளே என்று வாசுதேவன்தான் ஏகத்துக்கும் வருத்தப் பட்டுப்போனான்..

"உங்கள் கண்ணீரை தகுதியில்லாத மனிதர்களுக்காக வீணடிக்கக் கூடாது அண்ணி.." எரித்து விடுவதைப் போல வாசுதேவனைப் பார்த்தபடி சுசி சொன்னதில்..

"முதலில் உங்க அண்ணி கண்ணுல கண்ணீர் வருதான்னு பாருங்க.." என்று சண்டைக்குப் போய் விட்டான் வாசுதேவன்..

"தகுதியைப் பத்தி யார்கிட்டப் பேசறிங்க..? உங்க அண்ணியோட தகுதியப் பத்தி இந்தத் தெரு முழுவதும் கேட்டுப் பாருங்கள்.. வண்ட, வண்டயாச் சொல்லுவாங்க."

அவனும்தான் என்ன செய்வான்..? வந்திருப்பவள் அழகிதான்.. அப்சரஸ்தான்.. அவளை எங்கேயோ பார்த்த மயக்கம் வாசுதேவனின் மனதுக்குள் ஊஞ்சலாடுகிறதுதான்.

'அதுக்குன்னு இவ பேறசதையெல்லாம் கேட்டுக்குவாங்களா..?'

"ஹலோ மிஸ்டர்.. லேடிஸ்ங்கிற மரியாதையில்லாம என்ன பேச்சுங்க இது..?" சுசி சீறினாள்..

வாசுதேவனுக்கு கோபம் வந்து விட்டது.. இதை இப்படியே விட்டுவிடக் கூடாது..

4

"எது..?" முறைத்தான்..

"அதான்.. 'வண்ட, வண்டயா..'ன்னு சொல்றது.."

"வண்டி, வண்டியான்னு சொன்னேங்க.. அதில என்னத் தப்பைக் கண்டு பிடிச்சீங்க..?"

கூறாமல் சன்யாசம் கொள் என்று யாரோ எவரிடமோ சொன்னது வாசுதேவனின் மனதில் கூசாமல் பொய் சொல் என்று பதிந்து விட்டது போல.. அவன் அலட்டிக் கொள்ளாமல் பல்டி அடித்தான்..

வேலை மெனக்கெட்டு அதைச் செய்திருக்க மாட்டான்தான்.. ஆமாம்.. அப்படித்தான்.. இப்ப என்ன என்று எகிறியிருப்பான்.. வந்திருப்பவள் சுந்தரியாக

இருந்து தொலைக்கிறாளே.. கேட்பார் கேள்வி கேட்டால் வாசுதேவனும் படிந்து போவான் என்பதற்கு இதை விட மிகச் சிறந்த உதாரணம் தேவையே இல்லை..

"தனியா இருக்கிற லேடியிடம் வம்பு பண்றீங்களா..?"

"ஏங்க.. உங்களுக்கே இது நியாயமா இருக்கா..? இவங்க எங்க அம்மா வயசில இருக்காங்க.. இவங்ககிட்ட யாருங்க வம்பு செய்வாங்க..?" வேண்டுமென்றுதான் வாசுதேவன் அம்பு விட்டான்..

அது குறிபார்த்து பல்லவியின் நெஞ்சத்தில் 'பளிச்' என்று தைத்து விட்டது.. அவள் அழுகை நாடகத்தை மறந்து 'விசுக்' கென நிமிர்ந்து வாசுதேவனைப் பொசுக்கி விடுவதைப் போல பார்த்தாள்..

"அண்ணி..?" சுசி என்பவள் திகைத்தாள்..

"ஏய்ய்.. என்னைப் பார்த்தா உன் அம்மா மாதிரி தெரியுதா..?" சுசியை மறந்து வாசுதேவனிடம் பொங்கினாள் பல்லவி..

"சேச்சே..! யார் சொன்னது..?" வாசுதேவன் மறுத்தான்..

"எங்கம்மா, அதோ அங்கே நிற்கிறாங்க.. பார்த்தவுடனே கையெடுத்துக் கும்பிடனும் போல இருக்கும்.. நீ என்ன அப்படியா இருக்கிற..?"

வாசுதேவன் சொல்லச் சொல்லத் தன்னிச்சையாக அவன் வீட்டுப் போர்டிகோவைப் பார்த்த 'சுசி'க்கு 'ஆமாம்தானே' என்று தோன்றியது.. கோதாவரி குடும்பப் பாங்கான அழகுடன் மிளிர்பவள்.. அந்தக் காலை வேளையிலும் ஒப்பனையுடன் உதட்டுச் சாயமுமாக இருக்கும் பல்லவி அவளின் பக்கத்தில் கூட நிற்க முடியாதுதான்..

வாசுதேவனிடம் மோதினால் தோல்விதான் மிச்சம் என்று தெரிந்து வைத்திருந்ததினால்..

"பாத்தியா சுசி.. நீ இருக்கும் போதே இவன் என்ன பேச்சுப் பேசறான்.. என்னைப் பேசினா கேள்வி கேட்க யாருமில்லைங்கிற எண்ணம்தானே இவனுக்கு.." என்று 'சுசி'யிடம் முறையிட்டாள்..

"உனக்காக கேள்வி கேட்க வேற ஒருத்தர் வரனுமாக்கும்.. நீ ஒருத்தி போதாதா..?" என்றான் வாசுதேவன்..

"ஆளில்லாத அனாதைங்கிற நினைப்பு இவனுக்கு.." பல்லவி விடாக் கண்டியாகத் தொடர்ந்தாள்..

"அப்படி நான் சொன்னேனா..?" வாசுதேவன் கடுப்பானான்..

"இப்ப நீ சொல்லலை..?" பல்லவி விரல் நீட்டிக் குற்றம் சாட்டினாள்..

"எப்பச் சொன்னேன்..?" வாசுதேவன் புருவங்களை உயர்த்தினான்..

"பாரு சுசி.. எப்படி நடிக்கிறான்னு பாரு.. இப்ப நீ வரும்போதுதான் சொல்லிக்கிட்டு இருந்தான்.." பல்லவி சாதித்தாள்..

"என்னன்னு..?" வாசுதேவன் மடக்கினான்..

"ஒற்றைக்காட்டு பூந்தியைப் போல இருக்கிறவன்னு சொல்லலை.." பல்லவி கண்களைக் கசக்க.. 'சுசி..'

"ஒற்றைக்காட்டு பூந்தியா..?" என்று வாசுதேவனைப் பார்த்தாள்..

"அது பூந்தியில்லங்க.. ஓந்தி.. எப்பப் பார்த்தாலும் தின்றுக்கிட்டே இருந்தா இப்படித்தான்.." வாசுதேவன் தலையில் அடித்துக் கொள்ள 'சுசி' சிரிப்பதா, அழுவதா என்று திணறிப் போனாள்..

"ஏய்ய்.. பூந்தியோ, ஓந்தியோ.. ஒற்றைக்காடுன்னு நீ சொல்லலை..?"

"ஆமாம்.. சொன்னேன்.. குடும்பம் வாழ்கிற வீட்டில் சத்தம் வந்தா உன் அமைதி கெடுதுன்னு சலம்பல் பண்ணினா அப்படிச் சொல்லாம என்ன பண்ணுவாங்க..? ஏங்க.. நீங்களே இந்த நியாயத்தைக் கேளுங்க.. என் அக்கா குழந்தை நிஷா.. மூணு வயசுங்க.. பூட்டிக் கிடக்கிற காம்பவுண்டில தன்னந்தனியா பால் விளையாண்டாத் தப்பா..?"

சுசியின் பார்வை வசுமதியின் புடவை முந்தானையின் பின்னால் ஒளிந்திருந்த கொழுக்கொழு குழந்தையின் மீது படிந்து கனிந்தது..

"தப்பில்லை.." மிருதுவாகப் புன்னகைத்தாள்..

"அது உங்க அண்ணிக்குத் தப்பாம்.. பாவம் குழந்தை.. இந்தப் பிசாசு இங்கே உட்கார்ந்து ஊஞ்சலாடுதுன்னு அது ஒளிஞ்சு விளையாடுது.. அப்படியிருந்தும் பாருங்க.. அது உதைத்த பந்து எம்பி இந்த வீட்டுத் தோட்டத்துக்குள்ள விழுந்துருச்சு.. அத

எடுத்துக் கொடுங்கன்னு கூட நாங்க கேட்கலை.. உங்க அண்ணியார்கிட்ட நாங்க பேச்சே வைத்துக்க மாட்டோம்.. அப்படியிருந்தும் பந்து விழுந்த சத்தத்திலே ஊஞ்சலாடிக்கிட்டு இருந்த உங்க அண்ணியின் நிஷ்டை கலைஞ்சிருச்சாம்.. காடு காக்குது.." பொரிந்து தள்ளினான் வாசுதேவன்..

"காடு காக்கிறதா..?" 'சுசி' புரியாமல் விழித்தாள்..

"இதுக்கும் விளக்கம் சொல்லனுமா..? என்னங்க நீங்க நாட்டுப் பக்க லாங்வேஜே தெரியாம இருக்கீங்க..? காடு காக்கிறதுன்னா செம சண்டை போடறதுன்னு அர்த்தம்.."

"ஓ.. அப்படியா..?"

அவள் உதடுகளைக் குவித்து 'ஓ' போட்ட விதத்தில் தன் சொத்துக்கள் அனைத்தையும் அவளுக்குச் சாசனம் செய்து கொடுத்து விடும் உத்தேசம் வந்தது வாசுதேவனுக்கு.. பூபதிக்கு தெரிந்தால் பிய்த்து விடுவார் பிய்த்து என்பதினால் அந்த உத்தேசத்தை மாற்றிக் கொண்டான்..

"பாவம் அண்ணி.. பச்சைக் குழந்தை..!"

மிருதுவான புன்னகையுடன் 'சுசி' பேசிய விதத்தில் ஈர்க்கப் பட்டான் வாசுதேவன்.. கடவுளின் கணக்கீடுகள் அதிசயமானவை.. சூர்ப்பனகைக்கு நாச்சியார் போன்ற நாத்தனாரா..?

'சுசி' யின் பரிவான பேச்சில் பல்லவியின் முகம் பயங்கரமாக மாறி நொடிப் பொழுதில் பரிதாபகரத்துக்குப் போனதை வாசுதேவன் பார்த்து விட்டான்.. கண்ணிமைக்கும் நேரம்தான்.. அதற்குள் அவள் முகபாவத்தை மாற்றிக் கொண்டாள்.. வாசுதேவனுக்கு கவலையாக இருந்தது..

'சுசி..' குனிந்து பந்தை எடுத்தாள்.. அதை வாங்க கைநீட்டிய வாசுதேவனைப் புன்னகையுடன் புறக்கணித்து விட்டுத் தாயின் முந்தானைச் சேலையின் பின்னால் ஒளிந்திருந்த நிஷாவைக் கையசைத்து அருகில் வரும்படி அழைத்தாள்.. குழந்தை பயந்தது..

"ஸ்வீட் ஆண்ட்டிதான் செல்லம்.. கிட்டவா.." கிடைத்த சந்தர்ப்பத்தை அருமையாகப் பயன்படுத்திக் கொண்டான் வாசுதேவன்...

'அசத்தறடா..' வசுமதியின் கண்களில் கேலி தெரிந்தது..

தாய்மாமனின் அழைப்பில் தயங்கியபடி நிஷா வந்தது.. 'சுசி'யின் விழிகளில் மென்மையான அன்புப் பிரவாகம்

வெளிப்பட்டதில் பயம் அகலப் பக்கத்தில் போனது..

"இந்தா உன் பந்து.." 'சுசி' பந்தை நீட்டினாள்..

"தேங்க்ஸ் ஆண்ட்டி.." நிஷாவின் முகத்தில் மகிழ்ச்சி.

துள்ளிக் குதித்தபடி வசுமதியிடம் ஓடினாள்.. அதைப் பார்த்தபடி பல்லவியிடம் திரும்பிய 'சுசி'

"ஸோ.. ஸ்வீட்டில்ல அண்ணி..?" என்றாள்..

"ஆமாம்.. ஆமாம்.." வார்த்தைகளை பல்லிடுக்கில் மென்று துப்பினாள் பல்லவி..

"அந்தக் குட்டிப் பெண்ணோட முகத்தில தெரியற சந்தோசத்தப் பாத்தீங்களா அண்ணி.. அதுக்கு விலை மதிப்பில்ல.. அதைப் பார்க்கக் கொடுத்து வைச்சிருக்கனும் அண்ணி.. நீங்க தனிமையா ஃபீல் பண்ணக் கூடாதுன்னு தானே இப்படிக் குடும்பங்களா இருக்கிற ஏரியாவாப் பாத்து வீடு பிடித்துக் குடி வைத்தேன்..? இவங்களோட மிங்கிள் ஆகாம நீங்க தனித்து நிற்கிறது சரியா..?"

வார்த்தைகளுக்கு வலிக்குமோ என்று விதத்தில் இதமாக சிறு குழந்தைக்கு எடுத்துச் சொல்வதைப் போல பரிவுடன் சொன்னாள் 'சுசி..' அவளது அறிவுரையைத் துளியும் பல்லவி விரும்பவில்லையென்பது வாசுதேவனுக்குப் புரிந்தது.. 'சுசி'க்குத் தான் புரியவில்லை..

'இதெல்லாம் சொல்லித் திருந்துகிற ஜென்மமா..?' என்ற நினைவோடு..

"தேங்க்ஸ் ஃபார் யுவர் அப்ரோச்.." என்று 'சுசி'யிடம் விடை பெற யத்தனித்தான்..

"அண்ணிக்காக நான் உங்க எல்லோரிடமும் ஸாரி கேட்டுக்கறேன்.. அண்ணி பாவம்.. தனிச்சு நிக்கிறாங்க.. ஸ்ட்ரெஸ்ஸசில ஏதாச்சும் சொல்லியிருப்பாங்க.. நீங்க அதைப் பெரிதா எடுத்துக்க வேணாம்.."

இறைஞ்சுதலாக வெளிப்பட்ட அவளது வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு ஆஹா.. அதற்கென்ன என்று சொல்லத்தான்

வாசுதேவன் நினைத்தான்..

"வாட் இஸ் திஸ் சுசி.. நீ எதுக்காக இவங்களிடம் ஸாரி சொல்கிற..? பக்கத்து வீட்டில இருந்துக்கிட்டு இவங்க பண்ற கரைச்சல் கொஞ்ச நஞ்சமில்ல.. எப்பப் பாரு.. பேச்சும் சிரிப்பும் தான்.. அப்பப்பா காது கொடுத்துக் கேட்க முடியலை.." என்று பல்லவி கத்த ஆரம்பித்ததில் நினைத்ததை மாற்றிக் கொண்டு..

"மனிதர்கள்ன்னா.. பேசுவாங்க.. சிரிப்பாங்க.. உன்னை மாதிரி ஊமைக் கோட்டான்களாய் உர்ருன்னு குரங்கு மாதிரி உக்காந்திருக்க மாட்டாங்க.." என்று சொல்லி விட்டான்..

"கேட்டேல்ல.. உன் முன்னாடியே என்ன பேச்சு பேசறான்னு கேட்டேல்ல.." பல்லவி குதித்தாள்..

"அவன், இவன்னா நடக்கறதே வேற.." வாசுதேவன் எச்சரித்தான்..

"நீ உள்ளே வா சுசி.. இவன்கிட்டேயெல்லாம் நின்று பேசக்கூடாது.. மரியாதையில்லாத ஜென்மங்கள்.. யார், யாரிடம் ஸாரி கேட்பது..? இவங்களுக்கு அதுக்கான தகுதி இல்லம்மா.."

பல்லவி 'சுசி'யின் கையை இழுத்துக் கொண்டு போகக் காட்டிய அவசரத்தில் யோசனையானான் வாசுதேவன்.. அவனது நெற்றியில் படிந்த சிந்தனை ரேகைகளை பல்லவி துளியும் விரும்பவில்லை.. வேட்டைப்புலித் தன் இரையைப் பாதுகாக்கும் வெறியை அவளது கண்களில் கண்டான் அவன்..

'ஏன்..?'

"நீங்க போங்க அண்ணி.. நான் வர்றேன்.." சுசி கண்டிப்புடன் தன் கையை உறுவிக் கொண்டாள்...

பல்லவிக்கு 'சுசி'யை அங்கேயே விட்டுச் செல்ல மனமில்லை.. தயங்கி நின்றாள்.. வாசுதேவனின் கூர்மையான பார்வை அவளுக்கு முள்ளின் மீது நிற்பதைப்

போல இருந்ததில் வருவது வரட்டும் என்று விரைந்து விட்டாள்..

'சுசியை என்ன பண்ணிருவான்..? மனசைக் கலைச்சிருவானா..?' இகழ்ச்சியாக உதட்டை வளைத்துக் கொண்டாள்..

மனதைக் கலைக்கிற கலையில் கை தேர்ந்தவள் அவள்.. அந்தக் கலையில் அவளை மிஞ்சியவர்கள் எவரும் இல்லை.. என்னதான் மற்றவர்கள் எடுத்துக் சொன்னாலும் பல்லவியின் விழிகளில் இருந்து உதிரும் ஒரு சொட்டுக் கண்ணீர் போதும்.. 'சுசி' வழிக்கு வந்து விடுவாள்.. ஆயினும் அவள் ஒன்றும் சும்மா போய் விடவில்லை.. போகிற போக்கில்..

"அடக்க ஒடுக்கமா இருக்கிற இடம் தெரியாம இருக்கச் சொல்லு சுசி.." என்று வம்பிழுத்து விட்டுத்தான் போனாள்..

அங்கேயே நின்றிருந்தால் வாசுதேவன் சண்டையைக் கட்டி இழுத்துக் காதை அறுத்திருப்பான்.. அதைத் தெரிந்து வைத்திருந்ததினாலேயோ என்னவோ பல்லவி நிற்காமல் ஓடிவிட்டாள்.. யாரிடம் பாய வேண்டும்.. யாரிடம் பதுங்க வேண்டும் என்ற கலையிலும் அவள் கை தேர்ந்தவள்..

பேசாமல் குறுக்கே இருக்கும் காம்பவுண்டு சுவரில் ஏறி எகிறிக் குதித்து ஓடிக் கொண்டிருப்பவளின் குடுமியைப் பிடித்து இழுத்துக் கும்மாங் குத்து குத்தி விடலாமா என்று யோசித்தான் வாசுதேவன்..

'என்ன தைரியமிருந்தா இவ எங்க குடும்பத்தை அடக்க ஒடுக்கமா இருக்கச் சொல்லுவா.. அடக்கத்தைப் பத்தி யார் பேசறதுன்னு ஒரு வரைமுறை வேண்டாமா..? இருட்டினதுக்குப் பின்னால அரைகுறையா டிரஸ் பண்ணிக்கிட்டு ஏதேதோ காரில ஏறி எங்கேயோ போயிட்டு விடிஞ்ச பின்னால திரும்பி வருகிறாளே... இவளா அடக்கத்தைப் பத்திப் பேசறது..? அதுவும் தினமும் ஒரு கார்.. ச்சே.. இவ வீட்டுத் தோட்டத்தில விழுந்த பந்தைக்கூட எடுக்கக் கூடாதுன்னு அருவெறுப்பு பட்டுக்கிட்டு

இருக்கிறவங்க நாங்க.. இவ அது தெரியாம ஆட்டம் காட்டிக்கிட்டு இருக்கிறா..'

"ஸாரி எகெய்ன்.."

'சுசி' யின் மென்மையான குரல் அவனது கோபத்தைக் கொஞ்சமாக தணித்து வைத்தது.. மென்மையே வடிவாக நின்றவளை ஊன்றிப் பார்த்தான்.. கள்ளமில்லா பிள்ளை முகம்.. காருண்யம் சொட்டும் விழிகள்.. இதைப் போன்ற கருணையின் வடிவாக கோதாவரியைப் பார்த்திருந்த வாசுதேவனுக்குள் பிரியம் வந்தது.. கோதாவரி அப்படித்தான்.. இரக்க சுபாவம் கொண்டவள்.. அந்த இரக்க சுபாவத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவளிடம் ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டால் போதும்.. கையில் உள்ளதையெல்லாம் அள்ளிக் கொடுத்து விடுவாள்.. கருணைக்குப் பெயர் ஏமாளித்தனமா என்று வாசுதேவன் மனம் நொந்ததுண்டு.. அதை கோதாவரியிடம் சொன்னால் மிக எளிதாக..

"விடுடா.. போய் தொலையுது.. அவளுக்கு என்ன கஷ்டமோ..? இல்லாத கழுத, பொய் சொல்லிட்டா.. இருக்கப்பட்ட நாம கண்டுக்காம போயிட்டா குறைஞ்சா போயிரும்..?" என்பாள்..

அன்னையின் அந்தக் குணம் வாசுதேவனை ஈர்க்கும்.. அவள் ஒன்றும் ஏமாளியல்ல.. பொய்யென்று தெரிந்தும் உதவும் மனப்பான்மை கொண்ட கருணைக்கடல் என்பதில் அவனுக்குப் பெருமை அதிகமுண்டு..

கோதாவரியைப் போலவே 'சுசி' யும் இருந்ததில்..

'இவள் இந்தப் பல்லவியிடம் ஏமாந்து கொண்டிருக்கிறாளோ..' என்ற சந்தேகம் அவனுக்கு வந்தது.

'சுசி'யின் முகத்தில் புத்திசாலித்தனம் தெரிந்தது.. இவள் எப்படிப் பல்லவிக்கு உறவானாள் என்று பரிதாபம் கொண்டான் அவன்.. 'சுசி' ஏமாந்தாலும் கோதாவரியைப் போலத் தெரிந்தேதான் ஏமாறுகிறவளாக இருக்கும்..

அவளது புத்திசாலித்தனமான முகபாவம் அவள் ஒன்றும் எளிதில் ஏமாறக்கூடியவளல்ல என்று அறிவித்தது..

"அண்ணி.. அப்படித்தான்.." தழைந்த குரலில் பேசினாள்.. 'சுசி..'

"அவங்க அப்படித்தான்னா, அதுக்கு நாங்க என்னங்க செய்யனும்..? அடக்க ஒடுக்கமா வாய் பொத்தி இருக்க எங்களால் முடியாதுங்க.. வீடு பிடிக்கலைன்னா வீட்டை மாத்திக்கிட்டுப் போங்க.."

"ப்ளீஸ்.."

"என்ன ப்ளீஸ்..? எங்களைப் போகச் சொல்கிறீங்களா..? வாடகை வீடா இருந்தா நீங்க சொல்கிறதுக்கு முன்னாலேயே வீட்டைக் காலி பண்ணிட்டு ஓடியிருக்க மாட்டோமா..? உங்க அண்ணி முகத்தில விழிக்க எங்களுக்கு மட்டும் ஆசையா..? முகமா அது..? நேத்து ஆபிஸ் போறப்பப் பாத்துத் தொலைச்சிட்டேன.. வழியில நாலு இடத்தில கார் மோதத் தெரிஞ்சது.. அப்படியாப்பட்ட அழகு மூஞ்சிய வைச்சுக்கிட்டு இவங்கள்ளாம் பக்கத்து வீட்டு மேல பிராது சொல்லக் கூடாது.."

"கூல்.. கூல்.."

"கொதிக்குதுங்க.. ஒரு நாளைப் போல ஒருநாள் இருக்காது.. சொல்லி வைச்சிருங்க.. பெரியவங்க, சின்னவங்கங்கிற வித்தியாசம் இல்லாம சகட்டு

மேனிக்கு எல்லோரையும் வாய்க்கு வந்தபடி பேசறாங்க.. என்ன.. இவங்களுக்குத்தான் பேசத் தெரியும்ன்னு நினைக்கிறாங்களா..? நான் லோகல் லாங்வேஜில இறங்கினேன்னு வையுங்க.. நாறிப் போயிருவாங்க நாறி.. லேடி ஆச்சேன்னு பாக்கறேன்.."

"ஐ நோ ஆல்.."

சோகம் ததும்பும் அமைதியுடன் அவள் சொன்னதும் வாசுதேவன் புருவங்களை உயர்த்தினான்..

'இவ என்ன சொல்ல வர்றா..?'

"அண்ணி எப்படி பிஹேவ் பண்ணுவாங்கன்னு எனக்கும் தெரியும்.."

"என்னது..?" வாசுதேவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது..

"தெரிஞ்சுமா அவங்களுக்காக சண்டைக்கு வந்தீங்க..?"

"எல்லா நேரமும் ஒரே மாதிரி இருக்கறதில்ல.. உண்மையாகவே அண்ணி பாதிக்கப்பட்ட இன்ஸிடெண்டுகளும் உண்டு.. தனியா இருக்கிறாங்கன்னு எளிதா சண்டைக்கு வர்றதும், மிஸ்பிஹேவ் பண்றதும்ன்னு சிலதை நான் ஃபேஸ் பண்ணினதாலேதான் நீங்களும் அந்தக் கேட்டகிரியோன்னு நினைத்துட்டேன்.. அதுக்கும் ஒரு ஸாரி.."

தயங்காமல் அவள் மன்னிப்புக் கேட்டதில் வாசுதேவன் தன்மையானான்..

"நீங்க என்ன ஸாரியை லாரியில அள்ளிக்கிட்டு வந்திருக்கீங்களா..? எதுக்கெடுத்தாலும் ஒரு ஸாரியை அள்ளி வீசறிங்க..?" அவளைப் பருகுவதைப் போலப் பார்த்தபடி கேட்டான்..

அவனது பார்வையில் அவள் முகம் சிவந்தாலும் தடுமாறவில்லை.. கட்டுப்பாடுடன் கூடிய நிதானத்துடன் அவனது விழிகளை நேருக்கு நேர் பார்த்து வெகு இயல்பாக உரையாடினாள்..

"என்னங்க செய்கிறது..? அண்ணியைப் பார்க்க வந்தா லாரி நிறைய ஸாரியை அள்ளிக்கிட்டுத்தான் வர வேண்டியிருக்கு.. தனிமை அண்ணியின் மனநிலையை பாதிச்சிருக்கனும்.. விசித்திரமா பிஹேவ் பண்றாங்க.."

"இல்லையே.. பக்கத்து வீடுகளை அட்டாக் பண்றதுன்னா மிகத் தெளிவா பிஹேவ் பண்றாங்களே.."

"அதுதான் கவலையா இருக்கு.. இதோடு இது பதினைந்தாவது வீடு.."

"பதினைந்தாவது வீடா..? அப்படின்னா..?" வாசுதேவன் மலைத்து விட்டான்..

5

"இரண்டு மாதங்களுக்கு ஒர்முறை வீட்டை மாத்திக்கிட்டே இருக்காங்க... எங்கே போனாலும் இதே பிரச்னைதான்... அக்கம் பக்கத்தில் சண்டை.. கேட்டால் வாடகை வீட்டில் குடியிருக்கிறதினால சொந்த வீட்டுக்காரங்க ஈஸியாப் பேசறாங்கன்னு அழுகிறாங்க.. இப்ப நான் வீட்டுக்குள் போனதும் இதைத்தான் சொல்லப் போகிறாங்க.. சொந்தவீடு வாங்கிக் கொடுக்கிற அளவுக்கு எனக்கு வசதியில்லை.. அபார்ட்மெண்டுன்னா ஓகே.. சிங்கிள் பெட்ரூம்ன்னா உடனேகூட வாங்கிக் கொடுத்து விடுவேன்.. அண்ணிக்கு அது பிடிக்கவில்லை.. பாவம்.. வசதியாய் வாழ்ந்தவங்க.. தனிபங்களா.. தோட்டம்.. பெரிய போர்டிகோன்னு வீடு இருந்தாத்தான் அவங்களுக்குப் பிடிக்கும்.. அதுக்குக் கொஞ்சம் நாளாகும்.. அதுவரை அவங்களுக்குப் பிடித்த மாதிரியான பெரிய வீடுகளில் குடியிருக்கச் சொல்லியிருக்கிறேன்.."

"வாடகையை நீங்க கொடுக்கறீங்களா..?" ஆழ்ந்த குரலில் கேட்டான் வாசுதேவன்..

'ஆம்' எனும் விதத்தில் தலையசைத்தாள் அவள்.. போர்டிகோவில் நின்றிருந்த காரைப் பார்த்தான்.. விலையுயர்ந்த பி.எம்.டபிள்யூ கார்..

அவனது பார்வையைக் கவனித்த 'சுசி...'

"இது டாடி வாங்கிக் கொடுத்த கார்.." என்றாள்..

யார் உன் டாடி என்று கேட்க விரும்பினாலும் ஓர் அளவுக்கு மேல் அவளது சொந்த விவரங்களைக் கேட்பது அநாகரிகம் என்ற நினைவுடன் பேசாமல் தலையை அசைத்தான் வாசுதேவன்..

"டாடியோட கம்பெனியில்தான் வொர்க் பண்றேன்.. சேலரியாகக் கிடைக்கும் பணத்தைத்தான் நான் என் விருப்பப்படி செலவளிக்க முடியும்.. அதற்கு மேல் ஒற்றை

ரூபாய் கூடக் கொடுக்க மாட்டார்.. என் சேலரி போதவில்லை.." அவள் பெருமூச்சு விட்டாள்..

"எவ்வளவு..?" வாயிருக்க மாட்டாமல் அவன் கேட்டுவிட்டான்..

"இரண்டு லட்சம்.." சோகமாக அவள் சொன்னாள்..

"இரண்டு லட்சமா..?" வாய் பிளந்தான் வாசுதேவன்..

'அந்தப் பணம் இவளுக்குப் போதவில்லையா..?'

அவளைப் பார்த்தால் பார்ட்டி, டிஸ்கொதே என்று போகிறவளைப் போலத் தெரியவில்லை.. அவ்வளவு பெரிய கோடிஸ்வரரின் மகள் காட்டன் சுடிதாரில் எளிமையாக இருந்தாள்..

'பணக்காரங்களின் எளிமையும் ஓர் அழகுதான்..' ரசித்தான் அவன்..

"இரண்டே லட்சம்தான்... இந்த வீட்டுக்கு வாடகையே ஐம்பதாயிரம் ரூபாய்.. அண்ணிக்கு வீட்டுச் செலவுக்கு ஒரு லட்சம் கொடுக்கனும்.."

அவள் விவரித்ததில் அவனுக்குத் தலையில் அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது... பணக்காரர்களுக்கு வீட்டுச் செலவு எவ்வளவு ஆகும் என்று தெரியவே தெரியாதா..?

'கொடுமைடா சாமி..'

'சுசி..'யின் விழிகளில் தெரிந்த கவலை வாசுதேவனை பாதித்தது.. பல்லவி மிகப் பெரிய சுமையாக அவளை அழுத்திக் கொண்டிருப்பதை அவன் உணர்ந்தான்.. அதை அவள் உணர்ந்திருக்கிறாளா..? இனி உணருவாளா..?

"வீட்டுச் செலவுக்கு ஒரு லட்சமா..? ஒற்றை ஆளுக்கு என்னங்க செலவு இருக்கப் போகுது..?"

"உஸ்ஸ்.. சத்தமாப் பேசாதீங்க.. அண்ணி அதுவே பத்தலைன்னு அழறாங்க.. அவங்க கார் டியூவுக்கு வேற ஐம்பதாயிரம் கட்டனும்.."

'சுசி..' வீட்டைத் திரும்பிப் பார்த்துக் கொண்டாள்..

"அண்ணி காதில விழுந்துட்டா அவ்வளவுதான்.. கோபப் பட்டிருவாங்க.."

"இல்லைன்னா மட்டும் அது அமைதியின் சிகரம்தான்.. காமெடி பண்ணாதீங்க.. சிப்புச் சிப்பா வருது."

வாசுதேவன் சொன்ன விதத்தில் அவள் சிரித்து விட்டாள்.. வரிசைப் பற்கள் தெரிய மனம் விட்டுச் சிரித்த அந்தச் சிரிப்புக் குறிஞ்சிப் பூவின் அற்புதமான அழகோடு இருந்தது..

'அரிதான எதுவும் அழகானதுதான்..'

அடிக்கடி அவள் சிரிப்பதில்லையோ என்று சம்சயம் கொண்டான் வாசுவேதன்.. பல்லவியைப் போன்ற சுமையை சுமக்கும் சுமை தாங்கியினால் எப்படிச் சிரிக்க முடியும்..?

"இப்படியே சிரிச்சுக்கிட்டு இருக்கலாமே.." இதமாகச் சொன்னான்..

அதுபோல அவளிடம் யாரும் பேசியதில்லை போல.. லேசாகக் கண்கள் கலங்கி விட்டன.. இமைகளைச் சிமிட்டிக் கண்ணீரை மறைத்துக் கொண்டு துன்பப் புன்முறுவல் பூத்தாள்..

"சிரிக்கிறதுக்கும் ஒரு கொடுப்பினை இருக்கனுமே.. அது ஒரு வரம்.. எனக்கும் அதுக்கும் நொம்பத் தூரம்.."

இவ்வளவு சோகம் வேண்டாமே என்று தோன்றியது வாசுதேவனுக்கு.. அவளது வயதுக்கும் இந்த சோகத்துக்கும் துளியும் சம்பந்தமில்லை.. பாரம் சுமக்கும் வயதா இது..?

'அதுசரி.. இந்த பாரத்தை இவளுடைய அப்பா சுமக்கலாமே.. இவளுக்கு அண்ணின்னா அவருக்கு மருகளாச்சே..'

மனதில் தோன்றியதை கேட்டு விட்டான் வாசுதேவன்.. அவளுடைய முகம் மாறிவிட்டது.. கல்லைப் போல இறுகிப் போன கடினமான முகத்துடன் அவனை ஏறிட்டாள்..

"உங்களை மீட் பண்ணினதில சந்தோசம்.. உங்க பெயர் கூட என்னன்னு தெரியலை.. முன்பின் தெரியாத தேர்டு பெர்சனிடம் இவ்வளவு பேசியதே அதிகம்.. பை.." என்று விடைபெற யத்தனித்தாள்..

முகத்தில் அறை வாங்கியதைப் போல உணர்ந்தான் வாசுவேதன்.. அவனா அவளிடம் போய் பேசினான்..? அவள்தானே அவளுடைய அண்ணிக்கு ஆதரவாகப் பேச வந்தாள்..?

"ஹலோ.. நான் ஒன்னும் உங்களிடம் பேச வரலை.. மைண்ட் இட்.. என்னடா.. இந்த வீட்டு மகராசியோட சொந்தக்காரங்க இவ்வளவு பொலைட்டாப் பேசறாங்களேன்னு பாத்தேன்.. அண்ணியோட காத்து நாத்தனார் பக்கம் அடிக்காம இருக்குமா.. உங்க அண்ணிகிட்ட சொல்லி வைத்துட்டுப் போங்க.."

"ஊம்.. ஊம்.. அதுக்கென்ன.. சொல்லி வைச்சிட்டாப் போச்சு.. நீங்களும் உங்க ஃபேமிலி கிட்டச் சொல்லி வைங்க.."

"என்னன்னு..? சிரிக்காதீங்க, பேசாதீங்கன்னா..? ஹலோ.. எங்க வீட்டில நாங்க சிரிப்போம், குதிப்போம், ஓடிப் பிடிச்சுக் கூட விளையாடுவோம்.. அதைக் கேக்க உங்களுக்கு ரைட்ஸ் இல்லை.. உங்க வீட்டிலயும் பேசுங்க, சிரிங்க, விளையாடுங்க.. நாங்க வேண்டாம்ன்னு சொன்னா அப்போ ஏன்னு கேளுங்க.. அதை விட்டுட்டு எங்களுக்கு ஆர்டர் போடுகிற வேலையை எல்லாம் வைத்துக்காதீங்க.. ஐ திங்க்.. நீங்க ஏன் உங்க அண்ணியை பதினாறாவது வீட்டைப் பார்த்துக் குடி வைக்கக் கூடாது..? இந்த வீட்டின் ஓனர் எங்களுக்குப் ஃபேமிலி பிரண்ட்தான்.. வீட்டை உங்க அண்ணி மாதிரியான ஆளோட தலையில கட்டி எங்களுக்குத் தலை வேதனை கொடுத்துட்டு ஃபாரின்ல இருக்கார்.. ஒரு போனைப் போட்டாப் போதும்.. உங்க அண்ணிக்கு உடனே கல்தாதான்.. உங்களுக்குச் சொல்லச் சிரமமாயிருந்தாச் சொல்லுங்க.. நான் அவருக்கு போன் போடறேன்.. எனக்கு டிஸ்டர்பா இருக்குமேன்னு நினைக்காதீங்க.. இந்த உதவியைச் செய்ய நான் வரம்

வாங்கியிருக்கனும்.. என் உதவி உங்களுக்குத் தேவையா..?"

அவள் இதழ்களைக் கடித்துத் தன் உணர்வுகளை அடக்கிக் கொண்டாள்.. வீட்டைத் திரும்பிப் பார்த்தாள்.. பல்லவி வீட்டுக்குள் போகாமல் போர்டிகோவில் நின்றபடி அவர்கள் இருவரையும் கொலைவெறியுடன் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.. அவள் பக்கத்தில் வராதது ஆச்சரியமாக இருந்தது.. இதற்கு முன்னால் இருந்த வீடுகளில் பக்கத்து வீடுக்காரர்களுடன் 'சுசி'யை பேச விட்டதில்லை.. அவர்களுடன் உனக்கென்ன பேச்சு என்று அவர்கள் முன்னிலையிலேயே 'சுசி'யின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் விடுவாள்.. இங்கே அதுபோல அவள் செய்யாததிற்கு பக்கத்து வீட்டுக்காரனின் பராக்கிரம்தான் காரணமாக இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டவளுக்கு ஒர்வகையில் அது ஆறுதலாக இருந்தது..

"ப்ளீஸ்.. அப்படி ஏதும் செய்து வைத்து விடாதீங்க.. எனக்கு வீடு தேடியெல்லாம் பழக்கமில்லை.. இந்த பதினைந்து வீடுகளைத் தேட நான் பட்டபாடு இருக்கே.. கூகுளில் சர்ச் பண்ணி அட்ரஸ் கேட்டுப் போய் பார்த்துன்னு ஏகப்பட்ட வேலை.. இதில் அண்ணி சிங்கிள் வுமன் அப்படிங்கிறதினால வீட்டைக் கொடுக்க மாட்டேன்னு சொன்னவங்களும் உண்டு.."

"இவங்களோட மத்த குணாதிசியங்களும் தெரிஞ்சிருந்ததுன்னா உங்ககிட்ட நின்று கூடப் பேசியிருக்க மாட்டாங்க.."

"இருக்கலாம்.. எது எப்படியிருந்தாலும் இப்ப அண்ணி என் பொறுப்பில் இருக்காங்க.. அவங்களைக் கண்கலங்காம வாழ வைக்க வேண்டியது என்னோட கடமை.."

உருக்கமாக அவள் பேசிய விதத்தில் மனம் கரைந்து போனான் வாசுதேவன்.. பணக்காரர்களுக்கு இதயமிருக்காது என்று யார் சொன்னது..? இதோ எதிரில் இருக்கிறாளே.. இவளுக்குத் தெரியாமல் இருக்காது,

இவளுடைய இந்த இரக்கமும் ஓர் வகையான ஏமாளித்தனம் என்று.. இருந்தும் இவள் ஏமாறுகிறாள்.. தெரிந்தே பாரம் சுமக்கிறாள்.. இந்த உலகில் தேவதைகளும் ஜனிக்கிறார்கள்..

"உங்களுக்குன்னும் ஓர் வாழ்க்கை இருக்குங்க.."

தன்னையும் அறியாமல் சொல்லி விட்டான் வாசுதேவன்.. அவளது உடல் உலுக்கி விட்டதைப் போலக் குலுங்கியதில் கைகள் இரண்டையும் உயர்த்தி சரணடைகிறவனைப் போலப் பாவனை செய்து..

"ஸாரி, ஸாரி, ஸாரி.. நான் தேர்ட் பெர்சன்தான்.. உங்களுக்கு முன் பின் தெரியாதவன்தான்.. என் பெயர் என்னன்னு கூட உங்களுக்குத் தெரியாதுதான்.. உங்க பெர்சனல் விசயங்களில நான் லிமிட்டைக் கிராஸ் பண்ணி மூக்கை நுழைக்கக் கூடாதுதான்.. மனசு கேக்கலை.. சொல்லனும்னு தோணுச்சு.. சொல்லிட்டேன்.. சண்டைக்கு வந்துராதீங்க.. ப்ளீஸ்.. அழகான பெண்களுடன் நட்பாகத்தான் இருக்கனும்.. சண்டை போடக் கூடாதுன்னு ஆச்சரியார் சொல்லியிருக்கார்.."

அவள் அதிர்ச்சியிலிருந்து மீண்டவளாக கலகலத்து சிரித்துவிட்டு..

"எந்த ஆச்சாரியார்..?" என்றாள்..

அவள் சிரிக்கும் போது இமைகள் சுருங்கி கண்கள் மலர்ந்து என்று பலவிதமான வசீகரங்கள் வெளிப்பட்டதில் மயங்கிப் போன வாசுதேவன்..

"ஏதோ ஒரு ஆச்சாரியார்.. அதை விடுங்க.. நீங்க சிரிக்கறப்ப இன்னும் அதிகமா அழகாகிடறீங்க.. சிரித்த முகமாய் இருக்கலாமே.. ஏன் எதையோ பறிகொடுத்ததைப் போல சோகமா முகத்தை வைத்துக்கிட்டு இருக்கீங்க..?" என்று கேட்டான்..

அவளது சிரிப்பு மறைந்து விட்டது.. 'கடவுளே..' என்று தன்னைத் தானே நொந்து கொண்டான் வாசுதேவன்.. இருந்திருந்து இப்போதுதான் அவள் முழுமனதாகச்

சிரித்தாள்.. அதையும் இவன் வாய் விட்டுக் கெடுத்து விட்டானே..

"பறி கொடுத்தவள்தான்.." அவள் தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டாள்.. பல்லவியையும் திரும்பிப் பார்த்தாள்..

"நான் பறி கொடுத்தது மட்டுமில்லாம மத்தவங்களையும் பறி கொடுக்க வைத்த பாவி.."

'இவ யாரைச் சொல்கிறா.. அந்தப் பல்லவியையா..?'

வாசுதேவன் பல்லவியைப் பார்த்தான்.. நாராசமான முகத்துடன் அனல் கக்கும் பார்வையுடன் நின்றிருந்தாள்.. முடியலை என்று முகத்தைத் திருப்பிக் கொண்டான்..

'இவளைப் பார்த்தா பறி கொடுக்கிறவ மாதிரியா தெரியுது..? மத்தவங்ககிட்ட இருக்கிற எல்லாத்தையும் பறிச்சுக்கிறவ மாதிரி தெரியுது..'

இதை 'சுசி'யிடம் யார் சொல்வது..? அதனால்தான் அவளுடைய அப்பா பல்லவியை விலக்கி வைத்திருக்கிறார் போல.. மகளுக்கும் சம்பளம் கொடுத்து இறுக்கிப் பிடித்திருப்பதற்கு இதுதான் காரணமாக இருக்க வேண்டும்..

"ஓகே.. உங்களை மீட் பண்ணினதில ரொம்ப சந்தோசம்.."

அவள் விடைபெறப் போகிறாள் என்பதில் வாசுதேவனுக்குள் ஏமாற்றம் பரவியது..

'இன்னும் கொஞ்சநேரம்..

இருந்தாத்தான் என்ன..?

ஏன் அவசரம் ஏன் அவசரம்

சொல்லு புள்ள..?'

மனது பாடியது.. நேரமோ, 'படவா, ஒரு மணி நேரத்துக்கும் மேல கடலை வறுத்துக்கிட்டு இருக்க.. உன் மனச்சாட்சியத் தொட்டுச் சொல்லு.. நீ பல்லவி கூடத்தான சண்டை போட

வந்த..? அவ அங்கே நிற்கிறா.. இவளோடு உனக்கென்ன பேச்சு..?' என்று அதட்டியது..

"உங்களுக்கு சந்தோசம்.. உங்க அண்ணிக்குத்தான் ரொம்ப காண்டு போல.." இவன் பேச்சை வளர்த்தான்..

"எனக்காக கொஞ்சம் மன்னிச்சுருங்க.."

"உங்களுக்காகன்னு சொல்லிட்டிங்க.. இன்றைக்குப் போனால் போகிறதுன்னு பொறுத்துப் போகிறேன்.. பட்.. நாளைப் பின்னே இதுபோல இன்ஸிடெண்ட் நடந்தா நான் யோசிக்காம நரசிம்மன் அங்கிளுக்குப் போனைப் போட்டிருவேன்.. அப்புறம்.. என்னைக் குற்றம் சொல்லாதீங்க.."

வார்த்தைகள் என்னவோ படு கறாராகத்தான் வெளி வந்தன.. ஆனால் அவன் அதை உச்சரித்த விதம்தான் ஊற்றிக் கொண்டது.. மயிலிறகால் மனம் வருடுவதைப் போல அவன் பேசிய விதத்தில் சோகமாக முகத்தை வைத்திருந்தளின் இதழ்களில் இளநகை தோன்றியது..

"அதற்கு என்ன.. அப்படியே செய்து விடுங்க.." என்றவள் நிற்காமல் நடந்து விட்டாள்..

'நின்றால்தான் நீ பேச்சில பிடிச்சுக்குவியே.. நீயென்ன உன் அப்பாவிடம் அந்தப் பல்லவி மரியாதையில்லாம பேசினதுக்குத் தட்டிக் கேட்க வந்தியா.. இல்லை.. கடலை சாகுபடி பண்ண வந்தியா..' அவனது மனச்சாட்சி எள்ளி நகையாடியது..

"இப்பவாவது வீட்டுப் பக்கம் வருவியாடா வாசு..?" கேலிக் குரலில் அழைத்தாள் வசுமதி..

"ஹி.. ஹி.." வாசுதேவன் பிரிய மனமில்லாமல் காம்பவுண்டு சுவரை விட்டுப் பிரிந்து வந்தான்..

'அவளை எங்கேயோ பார்த்ததைப் போலவே இருக்கே..'

அடையாளம் பார்க்கும் சாக்கில் அவன் திரும்பிப் பார்த்தான்.. பக்கத்து வீட்டு போர்டிகோவில் யாருமில்லை..

"அதுக ரெண்டும் அப்பவே உள்ளே போயாச்சு.." தம்பியின் பின் மண்டையில் தட்டிய வசுமதி..

"படவா.. இதுதான் அப்பாவுக்காக நீ தட்டிக் கேட்கப் போன லட்சணமா..? யாருடா அந்தப் பொண்ணு..?" என்று உள்ளங்கையை விரித்துக் கேட்டாள்..

"யாருக்குத் தெரியும்..? ஃபெமிலியர் ஃபேஸா இருந்தது.. யாரா இருக்கும்ன்னு கெஸ் பண்றதுக்குள்ள போயிட்டா.."

பக்கத்து வீட்டு ஜன்னல்களில் அவளது முகம் தென்படுகிறதா என்று பார்வையில் துழாவினான் வாசுதேவன்..

"எல்லா ஜன்னலும் இறுக்கமா மூடிக் கிடக்குடா மகனே.. அந்தப் பல்லவி எந்தக்காலத்தில ஜன்னல் கதவுகளைத் திறந்து வைச்சிருக்கா..? மர்மக் கோட்டையைப் போல இல்ல வீடு இருக்கு.." மகனிடம் சொன்ன கோதாவரி.. மகள் பக்கம் திரும்பி..

"வசு.. உன் சின்ன மாமனாரோட கொழுந்தியா வீட்டில பொண்ணு இருக்குன்னு சொன்னேல்ல..?" என்று ஆரம்பித்தாள்..

வாசுதேனுக்குப் 'பகீர்' என்றது..

"இப்ப என்னத்துக்கும்மா ஊரு நாட்டுல இருக்கற பொண்ணுகளப் பத்தி விசாரணையை ஆரம்பிக்கிறிங்க..?" பலமாக ஆட்சேபித்தான்..

"எல்லாம் உனக்கு காலாகாலத்தில ஒரு கால்கட்டைப் போட்டு விடலாம்ன்னுதான்.." முறைப்பாகப் பதில் சொன்னாள் கோதாவரி..

"நான் என்ன கால்நடையாம்மா..? கால் கட்டைப் போட..?"

"இல்லைன்னா பக்கத்து வீட்டுக் காம்பவுண்டில எகிறிக் குதிச்சிருவ போல இருக்கே.. ஏண்டா.. தெரியாத பெண்கிட்ட எதுக்குடா இவ்வளவு நேரம் நின்று பேசின..?"

"உட்கார அவ சேர் கொடுக்கலைம்மா.."

கோபத்தில் கொந்தளித்த கோதாவரிக்கு வாசுதேவன் சிரிக்காமல் பதில் சொன்ன விதத்தில் வசுமதி சிரிக்க ஆரம்பித்து விட்டாள்.. மகளின் சிரிப்பு கோதாவரியையும் தொற்றிக் கொண்டது..

"உன்னை.. இருடா.."

அடிக்கத் தோதாக எது கிடைக்குமென்று தேடிய கோதாவரியின் கையில் கிரிக்கெட் மட்டை சிக்கி விட்டது.. அவள் அதை எடுத்து உயர்த்தியபடி மகனை அடிக்கத் துரத்த அவன் வசுமதியின் முதுகிற்குப் பின்னால் ஒளிந்து கொண்டான்.. தம்பியைக் காப்பாற்றத் தன் இரு கைகளையும் விரித்து மறைத்தாள் வசுமதி..

கலகலத்துச் சிரித்து விளையாடிக் கொண்டிருந்த அந்தக் குடும்பத்தைப் பக்கத்து வீட்டின் மாடி ஜன்னலை லேசாகத் திறந்து மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்த 'சுசி'யின் கண்கள் கலங்கின.. அவளுக்கு ஏக்கமாக இருந்தது..

## 6

'சுசி..'யின் வீட்டிலும் இது போலதான் கலகலப்பாக இருப்பார்கள்.. 'இப்போதுதான் அந்தக் கலகலப்பெல்லாம் காணாமல் போய் விட்டதே..'

நெடிய பெருமூச்சு அவளிடமிருந்து வெளியேறியது.. பாரம் சுமந்து பழக்கமில்லாத மனது கனத்தது.. சுமக்க முடியாத பெரும்பாரம்.. இத்தகைய பாரத்தை அவள் ஏன் சுமக்கிறாள், எதற்காக சுமக்கிறாள் என்று சில சமயங்களில் அவளுக்கே தெரியவில்லை..

"நீ இங்கேயா இருக்கிற..? இவ்வளவு நேரமா கீழே உன்னைத் தேடிக்கிட்டிருக்கேன்.." கண்டனத்துடன் ஒலித்தது பல்லவியின் குரல்..

மிக லேசாக திறந்திருந்த ஜன்னல் கதவை இமைக்கும் நேரத்தில் சத்தம் வராமல் மூடிவிட்டுத் திரும்பினாள் 'சுசி..'

"அங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்க..?" சந்தேகமாகப் பார்த்தாள் பல்லவி..

'சுசி' அதை விரும்பவில்லை.. புருவங்களை நெரித்தாள்..

"சும்மா கேட்டேன்.. நீ வா.. இப்படி வந்து உட்காரு.. உனக்காக லெமன் ஜூஸ் போட்டுக் கொண்டு வந்திருக்கிறேன்.." சட்டென சுதாரித்துக் கொண்டு பேச்சை மாற்றி விட்டாள் பல்லவி.

'இதிலெல்லாம் இவள் கெட்டிக்காரி..'

'சுசி..'க்கு மூச்சு முட்டியது.. பல்லவியின் சாகசங்களை இவள்அறிவாள் என்பதை உணராமல் தான் பெரிய சாதுர்யக்காரி போல அவள் பொய், பொய்யாகப் பேசும் சமயங்களில் எல்லாம் 'சுசி'க்கு அருவெறுப்பாக இருக்கும்.. எங்காவது கண்காணாத இடத்திற்கு ஓடி ஒளிந்து கொள்ள வேண்டும் என்ற உத்வேகம் தோன்றும்..

"நீ எதுக்காக ஓடி ஒளியனும்..?" அவளுடைய அப்பா கோபப்படுவார்..

ஒரேயொரு நொடி போதும்.. அவர் பல்லவியை இருக்கும் இடம் தெரியாமல் காலி பண்ணி விடுவார்.. அந்த ஓர்நொடியை அவருக்குத் தர மறுத்தாள் 'சுசி..' அவளது மௌனக் கண்ணீர் அவரது கைகளைக் கட்டிப் போட்டு வைத்திருக்கிறது.. அதுவே அவருக்கும் மகளுக்கும் இடையில் ஓர் ஆழமான அகழியையும் பறித்து வைத்திருக்கிறது.. அதைத் தாண்டி மகள் அவருக்கருகில் வரும் நாளுக்காக அவர் காத்திருக்கிறார்..

"வா.. சுசி.."

பல்லவி 'சுசி'யின் சிந்தனையை விரும்பவில்லை.. இவள் சிந்திக்காமல் இருக்கும் வரைதான் அவளுக்குப் பாதுகாப்பு, வாழ்வு என்பதை அவள் நன்கு அறிவாள்..

"இங்க வந்து உட்காரு.."

பல்லவியின் கையில் சின்னஞ்சிறு கண்ணாடி தம்ளர் இருந்தது.. அதில் மஞ்சளும் இல்லாத, வெண்மையும்

இல்லாத ஏதோ ஓர் நிறத்தில் திரவம்.. தம்ளரின் அடியில் கலங்கலாக தெரிந்தது.. சர்க்கரையாக இருக்கலாம் என்று நினைத்துக் கொண்டாள் 'சுசி'.. அது எழுமிச்சைபழ ஜூஸ் என்பதற்கான எந்தவிதத் தடயமும் தென்படவில்லை..

'இதை நான் குடித்து டிஸ்ஸண்ட்ரியை இழுத்துக்கனுமா..?'

முகத்தைச் சுளித்தபடி பல்லவி உட்கார்ந்திருந்த சோபாவிற்கு எதிர் சோபாவில் உட்கார்ந்தாள் 'சுசி..' பல்லவியின் முகம் மாறியது.. 'சுசி..' பல்லவியின் பக்கத்தில் உட்காருவதை தவிர்த்து விடுவாள்.. அவள் வீட்டில் எதையும் சாப்பிடவும் மாட்டாள்.. இரண்டாவதில் பல்லவிக்கு எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை.. 'சுசி'யின் தயவில் வாழ்ந்தாலும் அவள் 'சுசி'க்கென்று உடம்பை வளைத்து உணவு சமைத்துப் பரிமாற மாட்டாள்..

அந்த வீட்டில் வேலைக்கு ஆள்கள் இருக்கிறார்களா என்று 'சுசி'க்குத் தெரியவில்லை.. வேலைக்காரர்களுக்குச் சம்பளம் கொடுக்க என்று இருபதாயிரம் ரூபாய்க்கு கணக்குக் காண்பிக்கிறாள் பல்லவி.. அவர்களில் யாரையும் 'சுசி' பார்த்ததே இல்லை..

"லெமன் ஜூஸ் குடி சுசி.. உனக்கு ஆப்பிள், ஆரஞ்சுன்னு வாங்கி வைத்து ஜூஸ் போட்டுக் கொடுக்கனும்னு ஆசைதான்.. எங்கே முடியுது..? நீ கொடுக்கிற பணம் வீட்டுச் செலவுக்குப் போத மாட்டேங்குது.. மாதத்தில் பாதிநாள் தயிர்சாதமும் ஊறுகாயும்தான்.. உனக்குக் காபி போட்டுக் கொடுக்கக் கூட வீட்டில் காபிப்பொடி, ஜீனி, பால்ன்னு எதுவுமே இல்ல.. லெமன்கூட சின்னதா ஒன்னே ஒன்னுதான் இருந்தது.."

"அதை எதுக்கு எனக்குக் குடுக்கறீங்க.. நீங்களே குடிங்க.."

"எப்ப வந்தாலும் இப்படியே சொல்லிடற.."

"நீங்களும் நான் எப்ப வந்தாலும் இதே டயலாக்கைத்தான் சொல்லிக்கிட்டு இருக்கீங்க..? எவ்வளவு பணம் கொடுத்தாலும் போதலைங்கறிங்க.."

'சுசி..' தலையைப் பிடித்துக் கொள்ள, பல்லவி அவளை நிஷ்டூரமாக முறைத்தாள்..

"உனக்கென்னம்மா.. பணக்காரி.. ஏழைகளின் கஷ்டம் உனக்கெங்கே புரியப் போகுது..?"

"எந்த ஏழையும் இரண்டு லட்சத்தை ஏப்பம் விட்டுவிட்டுப் போதலைன்னு அடிச்சுக்க மாட்டாங்க.."

"இரண்டு லட்சம் உனக்குப் பெரிசாப் போச்சா..? நான் எப்பேற்பட்ட வாழ்க்கை வாழ்ந்தவ தெரியுமா..? என் போதாத காலத்திற்கு உன்னிடம் இரண்டு லட்சத்திற்காக பேச்சு வாங்கிக் கொண்டிருக்கிறேன்.."

பல்லவி வராத கண்ணீரை நாசுக்காக கைக்குட்டையில் ஒற்றி எடுத்து 'சுசி'க்கு கடுப்பைக் கிளப்பினாள்..

"அண்ணி ப்ளீஸ்.." பொறுமையிழந்தவளாக தலையைப் பிடித்தாள் 'சுசி'..

பல்லவியைப் பார்த்தாலே அவளுக்குத் தலைவேதனை வந்து விடுகிறது.. பார்க்காமலும் இருக்க முடியவில்லை.. தெரிந்துதானே அவளது பொறுப்பை இவள் ஏற்றாள் என்று மனச்சாட்சி குத்திக் காட்டுகிறது.. தூக்கமிழந்து தவிக்க நேரிடுகிறது..

"எனக்கு சேலரியே இரண்டு லட்சம்தான் அண்ணி.. அதை முழுமையாக உங்களுக்கே செலவளித்து விடுகிறேன்.. என் காருக்கு பெட்ரோல் போட.. மற்ற செலவுகளுக்குன்னு என்ன பண்ணுவேன்னு ஒன் செகண்ட் திங்க் பண்ணி பாத்தீங்களா..?" ஆற்றாமையுடன் கேட்டாள்..

கொஞ்சமாவது பல்லவி இவளது சங்கடங்களை புரிந்து கொண்டால் போதும் என்றிருந்தது.. அவளா புரிந்து கொள்வாள்..? எதுவும் புரியாத அப்பாவியைப் போல இமைகளைக் கொட்டியபடி..

"இது என்ன சுசி..? எப்போப் பார்த்தாலும் இப்படியே பேசுகிற.. உன் அப்பா பரம்பரைக் கோடிஸ்வரர்.. நீ நினைத்தால் டெய்லி பாக்கெட் மணியாகவே இரண்டு

லட்சம் வாங்கிக்கலாமே.. என்னவோ மன்த்லி சேலரியில் பிழைப்பை நடத்துகிறவளைப் போலயில்ல பேசி வைக்கிற.. வாட் எ ஜோக்..! வாட் எ ஜோக்..!" என்று கைகளையும் சேர்த்துக் கொட்டினாள்..

"கொஞ்சம் நிறுத்தறிங்களா..?" வெடித்தாள் 'சுசி..'

"ஏன் கோபமாய் பேசற..?"

"சிரித்துக்கிட்டே பேசற தலைவிதி எனக்கு இல்லை அண்ணி.. நீங்க சொல்கிறபடி நான் கோடிஸ்வரிதான்.. டெய்லி பாக்கெட் மணியா இரண்டு லட்சம் என்ன.. இருபது லட்சத்தைச் செலவளித்தால் கூட என் டாடி எதுவும் சொல்ல மாட்டார்தான்.. அப்பேற்பட்ட வாழ்க்கை எனக்கு வாய்த்தும் நிம்மதியா வாழ முடியலையே.. இது யார் கொடுத்த சாபம் அண்ணி..? ஒரு காலத்தில டாடி என்னை உள்ளங்கையில் வைத்துத் தாங்கினார்.. என் தலைவிதி.. இப்ப என் முகத்தைக்கூடப் பார்க்க மாட்டேன் என்கிறார்.. இது உங்களுக்கு ஜோக்கா இருக்கா..?"

"நான் என்னவோ விளையாட்டாகச் சொன்னால் நீ அதை சீரியஸா எடுத்துக்காற.. எனக்கு சொந்தம்ன்னு யாரிருக்கா..?"

அடிக்க வேண்டிய இடத்தில் அடித்தாள் பல்லவி.. கொதித்த எரிமலை பனிமலையாய் குளிர்ந்து விட்டது..

"ஏன் அண்ணி இப்படிப் பேசறிங்க..? நானில்லையா உங்களுக்கு..?" உருகினாள் 'சுசி..'

"எத்தனை நாளைக்குத்தான் நீ துணையிருப்ப சுசி..? தாலி கட்டியவரும் இல்லை.. என்னைக் கண்ணுக்கு கண்ணாகப் பார்த்துக்கிட்ட தம்பியும் இல்லை... மத்தவங்களுக்குப் பாரமா இருக்கக் கூடாதுக்கான்னு பிரசன்னா அடிக்கடி சொல்வான்... அப்பேற்பட்ட சுயமரியாதை சிங்கத்தோட அக்கா.. உனக்குப் பாரமா உன்னை வருத்திக்கிட்டு இருக்கேன்.."

இது பல்லவியின் பிரம்மாஸ்திரம்.. இதை அவள் எய்து விட்டால் போதும்.. 'சுசி..' பொடிப்பொடியாக நொறுங்கி

சிதைந்து போவாள்.. பல்லவியே விலகிப் போகிறேன் என்று சொன்னாலும் விலக விடமாட்டாள்..

அன்றும் அப்படித்தான் ஆனது.. கண்கள் கலங்க.. உதடுகள் துடிக்க பல்லவியைப் பார்த்தவள்..

"எனக்கு நீங்க பாரமா அண்ணி..? என்ன வார்த்தை சொல்லிட்டிங்க..? என்னைக்குமே உங்களை நான் பாரமா நினைத்ததில்லை அண்ணி.. இனி நினைக்கவும் மாட்டேன்.." என்றாள்..

'அப்படி வா வழிக்கு..'

சாட்டையைச் சரியான முறையில் சுழற்றி விட்ட திருப்தி பல்லவிக்கு.. 'சுசி'யின் அறிவு எனும் யானை மதங்கொண்டு பிளிறினால் அதை அடக்கும் அங்குசம் பல்லவியிடம் இருந்தது.. அவள் எதற்கும் அஞ்சாதவள்..

"உன் டாடி உன்னைத் தள்ளி வைக்க நான்தானே காரணம்..?"

"அவர் என்னைப் புரிந்துக்காததுதான் காரணம் அண்ணி.."

"பணத்திற்குக் கணக்குப் பார்க்கிறாயே கண்ணம்மா.."

"நான் என்ன அண்ணி செய்வேன்..? பெற்ற கடமைக்கு வேலை போட்டுத் தருகிறேன்.. சேலரியும் தருகிறேன்.. என் வீட்டில் நீ இருந்து கொள்ளலாம்.. அதற்கு மேல் எதையும் எதிர்பார்க்காதேன்னு கட் அண்ட் ரைட்டாச் சொல்லிட்டாரே டாடி.. அப்போதே நான் வீட்டை விட்டு வெளியே வந்து விடுகிறேன்.. நாம் சேர்ந்து இருக்கலாம்.. வேறு கம்பெனியில் வேலைக்கு டிரை பண்ணலாம்ன்னு சொன்னேனே அண்ணி.. நீங்கதான் கேட்கலை.."

'எப்படிக் கேட்கிறது..? நீ பொன் முட்டையிடுகிற வாத்து..! கோடிஸ்வர அப்பனுக்குப் பெண்ணாய் பிறந்தவள் நீ என்கிறது தான் உன்னுடைய அடையாளமே... அது இல்லைன்னா உன்னை யாரு தேடுவாங்களாம்..? நீ யாரோ, நான் யாரோன்னு என் வழியில போயிருக்க மாட்டேனா..?'

பல்லவிக்குத் தெரியும்.. எந்த முட்டாளும் படித்து முடித்தவுடன் வேலைக்கு வரும் பட்டதாரிக்கு இரண்டு லட்ச ரூபாய் சம்பளத்தைக் கொடுக்க மாட்டார்கள் என்று.. இதில் பல்லவியையும் வேலை தேடச் சொன்னாள் 'சுசி'.. பல்லவியின் கல்வித்தரத்தைப் பற்றி பாவம் 'சுசி'க்கு எதுவும் தெரியாது.. அவள் ஆள் பார்க்கத்தான் அல்டாப்பாக நுனி நாக்கு ஆங்கிலத்துடன் மேல்தட்டு வர்க்கத்தில் பிறந்து வளர்ந்து ஆக்ஸ்போர்ட் யுனிவர்சிட்டியில் படித்து வந்ததைப் போல பீட்டர் வீடுவாள்.. படிப்பு ஐந்தாம் கிளாஸ்தான்.. நேர்த்தியான உடை.. ஸ்டைல்.. தெளிவான நுனி நாக்கு ஆங்கில உச்சரிப்பு என்று தன்னைத்தானே செதுக்கிக் கொண்டவள் அவள்.. இல்லையென்றால் அவளது இரவு நேர வாழ்க்கையைத் திறம்படி வாழ முடியாதே.. நமது ஊரில்தான் ஆங்கிலத்தில் வெளுத்துக் கட்டுகிறவர்கள் ஐந்தாறு டிகிரிகளைக் கையில் வைத்திருப்பார்கள் என்று நம்பி விடுவார்களே..

'சுசி'யும் அப்படித்தான் நினைத்தாள்..

"இரண்டு பேரும் வேலைக்கு டிரை பண்ணலாம் அண்ணி.. யாரையும் நம்பி நாம் இருக்க வேண்டாம்.." என்று ரோசப்பட்டாள்.. பல்லவி அரண்டு போனாள்.. ஐந்தாம் கிளாஸ் படிப்பை வைத்துக் கொண்டு அவள் எந்த வேலைக்குப் போவாள்..? என்ன வேலைக்குப் போவாள்..? அவளுக்கத் தெரிந்ததெல்லாம் ஒரே வேலைதான்.. அதைப் பற்றிச் சொன்னால் 'சுசி..' பல்லவியிருக்கும் திசைப்பக்கம் கூடத் திரும்பிப் பார்க்க மாட்டாளே..

'இவ என்ன இந்த பாடுபடுத்தறா.. கழுத.. கோடிஸ்வர அப்பனுக்குப் பொண்ணாப் பிறந்துட்டு வீட்டை விட்டு வெளியே வருதாம்.. அதுவும் என் கூட இருக்குதாம்.. இருக்கிற வினை போதாதுன்னு இதை வேற நான் மடியில் கட்டிக்கனுமா..?'

பல்லவி பகல்பொழுதில் மட்டும்தான் வீடு தங்குவாள்.. இரவில் அவள் வாழும் வாழ்க்கையே வேறு.. தினமும் ஒரு கார்.. அனுபவம் என்று திளைத்து விட்டு விடியும் போதுதான் வீட்டுக்குத் திரும்புவாள்.. 'சுசி..' யைக் கூட

வைத்துக் கொண்டு அந்த ரகசிய வாழ்க்கையை வாழ முடியுமா..?

"தப்பு சுசி.. பெற்றவங்களைப் பிரிஞ்சு நீ வீட்டை விட்டு வெளியே வர நினைக்கிறது தப்பு.. பெத்தவங்களை விட்டுப் பிள்ளையைப் பிரித்த பாவத்தை ஒருநாளும் நான் செய்ய மாட்டேன்.. பிரசண்ணா அதை விரும்பவே மாட்டான்.. என் கனவில் அவன் வந்து இப்படிச் செய்யலாமா அக்கான்னு கேட்டா என்ன பதிலைச் சொல்லுவேன்..? நீ உன் வீட்டில்தான் இருக்கனும்.. அதுதான் சரி.. யாரு உன்னிடம் கோபப் படுவது..? உன் டாடிதானே.. இன்றைக்குப் கோபப் படுகிறவர் நாளைக்கே உன் பக்கம் இருக்கும் நியாயத்தைப் புரிந்து கொள்ளப் போகிறார்.." என்று வாய்க்கு வந்ததைச் சொல்லி வைத்தாள்..

"என்றைக்குமே அவர் என்னைப் புரிந்துக்க மாட்டார் அண்ணி.. என்னை 'எமோசனல் இடியட்'ன்னு திட்டுகிறார்.." விசும்பிளாள் 'சுசி..'

'உண்மைதானே..'

'சுசி'யின் தந்தை மிகப் பெரும் தொழிலதிபர்.. வியாபார உலகில் வெற்றிக் கொடியை நாட்டியிருப்பவர்.. யார், யார் என்னென்ன குணாதிசியங்களுடன் இருப்பார்கள் என்று அவருக்குத் தெரியாதா என்ன..?

"அதையெல்லாம் இந்தக்காதில் வாங்கி அந்தக் காதில் விட்டுவிட வேண்டும் சுசிம்மா.. யார் உன்னைத் திட்டுகிறாங்க..? டாடிதானே.. திட்டினால் திட்டிவிட்டுப் போகட்டும்.."

எனக்கென்ன..? என்னையா உன் அப்பன் திட்டறான்..? உன்னைத்தானே திட்டறான்..? வாங்கிக் கட்டிக்க.. மண்டையில மூளை இருக்க வேண்டிய இடத்தில களி மண் இருக்கிற உன்னைப் போன்ற ஜென்மத்தைத் திட்டாமல் என்ன செய்வான் என்ற எகத்தாளத்துடன்தான் பல்லவி புத்திமதி சொன்னாள்..

போகப் போக 'சுசி' தன் தலையில் மூளை இருப்பதை நிரூபிக்க முற்பட்டபோதுதான் மிரண்டு போனாள்.. வேலைக்குப் போகாமல் 'சுசி'யின் பராமரிப்பில் சொகுசாய் வாழ பல்லவி சொன்ன கதையை நம்பிய 'சுசி'யா இவள்..?

"பிரசன்னாவுக்கு நான் வேலைக்குப் போனா பிடிக்காது சுசிம்மா.. உன்னைப் பூப்போல பார்த்துக்குவேன்னு அப்பா, அம்மாகிட்ட வாக்குக் கொடுத்திருக்கேன்க்கா.. நீ வீட்டை விட்டு வெளியில் வரக்கூடாதுன்னு சொல்லுவான்.. அதைப் போலவே பணக்காரராய் மாப்பிள்ளை பார்த்து என்னைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தான்.. என் தம்பியும் சரி, என் ஹஸ்பெண்டும் சரி.. என்னை வெளியுலகத்தில் கால் வைக்க விடாமப் பொத்திப் பாதுகாத்தாங்க.. அவங்க ரெண்டு பேரும் இன்றைக்கு இல்லைங்கிறதுக்காக நான் வேலை பார்க்க வெளியில் போனா அவங்க ஆத்மா சாந்தியடையாது சுசிம்மா.."

ஒவ்வொரு வார்த்தைக்கும் இடைவெளி விட்டு.. இடையிடையே இருமி.. லேடி நடிகர்திலகமாக உணர்ச்சிப் பிழம்பாய் பல்லவி பேசிய பேச்சில் 'சுசி..' அவளது கைகளைப் பிடித்து..

"அழாதீங்க அண்ணி.. அவங்களை விடப் பத்திரமா நான் உங்களைப் பார்த்துக்குவேன்.. நீங்க வேலைக் கெல்லாம் போக வேண்டாம்.." என்று சொல்லி விட்டாள்..

அப்படிப்பட்ட 'சுசி..' சமீபகாலமாக மாறிக் கொண்டு வருவதைப் போல உணர்ந்திருந்தாள் பல்லவி.

## 7

பல்லவியின் பொறுப்பை எடுத்துக் கொண்ட ஆரம்ப நாள்களில் 'சுசி..' கணக்குக் கேட்க மாட்டாள்.. பல்லவி கேட்பதையெல்லாம் செய்து விடுவாள்.. இப்போதுள்ள 'சுசி..' அப்படி இல்லையே.. யோசிக்கிறாள்.. கண்டிக்கிறாள்.. கணக்குக் கேட்கிறாள்..

அப்படி 'சுசி'யின் அறிவு திமிறும் போதெல்லாம் பல்லவி பிரசன்னாவின் பெயரைச் சொல்லி அழுது புலம்பி 'சுசி'யைத் தன் வழிக்கு கொண்டு வந்து விடுவாள்..

இது அடிக்கடி நடக்கும் நாடகம்தான்.. வழக்கமாக இது போல பல்லவியின் வழிக்குத் திரும்பி விட்ட பின்னால் 'சுசி' எதுவும் பேச மாட்டாள்.. கிளம்பிப் போய் விடுவாள்..

அன்று அப்படிச் செய்யவில்லை.. மறுபடியும் யோசிக்க ஆரம்பித்து விட்டாள்..

'இந்த மடச்சி யோசிச்சு என்னத்தைக் கிழிக்கப் போகிறா..?' பல்லவிக்கு வெறி வெறியாக வந்தது..

"எனக்கான வருமானம் இரண்டு லட்சம்தான் அண்ணி.. இதை நீங்கப் புரிந்துக்கனும்.." தன்மையாக எடுத்துச் சொன்னாள் 'சுசி..'

'இதில புரிஞ்சுக்க என்னடி இருக்கு..? எனக்கு அது தெரியாதா..? நானே இரண்டு லட்சத்துக்கு மேலே கறக்க முடியலையேன்னு ஆங்காரப்பட்டுக்கிட்டு இருக்கேன்.. இதில இவ கேள்வி வேற கேக்கிறா..'

"கொஞ்சம் செலவைக் குறைத்துக்கங்க அண்ணி.."

"எப்படிம்மா குறைக்கிறது..?"

"எப்படியாவது குறைத்துத்தான் ஆகனும் அண்ணி.. வீட்டு வாடகை ஐம்பதாயிரம்.. கார் டியூ ஐம்பதாயிரம்.. உங்க வீட்டுச் செலவுக்கு ஒரு லட்சம்ன்னு போயிட்டா என் செலவுக்கு என்ன பண்றது..?"

"உன் டாடியிடம் கேட்கலாமே.."

"அவர் உடனே இரண்டு லட்சத்துக்கு கணக்குக் கேட்பார்.."

"நான் எந்தச் செலவைக் குறைப்பேன் சுசி..? காரில்லாம இருக்க முடியாது.. நீ ரெடி கேஷ் கொடுத்து கார் வாங்கிக் கொடுத்திருக்கலாம்.. டியூவில் வாங்கிட்டு இப்பக் கணக்குப் பார்க்கிற.."

"சின்னக்காராய் வாங்கியிருந்தா ரெடி கேஷ் கொடுத்திருப்பேன்.. நீங்க பதினைந்து லட்ச ரூபாய் காரைத் தூக்கினா டியூ கட்டித்தானே வாங்கிக் கொடுக்க முடியும்..?"

"என்னம்மா செய்கிறது..? பிரசன்னா இருந்திருந்தா பி.எம் டபிள்யூ காரை வாங்கிக் கொடுத்திருப்பான்.."

சந்தடிசாக்கில் 'சுசி'யின் காருக்கு அடிப் போட்டாள் பல்லவி.. 'சுசி..' பல்லைக் கடித்தபடி..

"அவர்தான் இப்ப இல்லையே.. அப்புறம் அவரைப் பற்றி என்ன பேச்சு..? டாடி வாங்கிக் கொடுத்திருக்கிற கார் மீது நான் கையை வைத்தா அவர் என்னை வீட்டை விட்டு வெளியேற்றி விடுவார்.. பரவாயில்லையா..?" என்று கேட்டாள்..

'ஐயைய்யோ..'

முதலுக்கு மோசம் வந்து விடக் கூடாது என்று பயந்து போன பல்லவி.. அவசரம் அவசரமாக பேச்சை மாற்றினாள்..

"விலை உசத்தியான கார் எனக்கு எதுக்கு சுசிம்மா..? இப்ப இருக்கிற காரே போதும்.."

"இப்ப நான் வாங்கிக் கொடுத்திருக்கிற கார் ஒன்னும் குறைந்த விலைக் காரில்லை அண்ணி.. விலை உயர்ந்த கார்தான்.."

'எப்படிப் பந்தை வீசினாலும் திருப்பி அடிக்கிறாளே..'

"இத்தனை பிரச்சினைகளோடு நான் உங்களைப் பார்க்க வந்தா நீங்க பக்கத்து வீடுகளில வம்பை வளர்த்து சண்டைக்குப் போக வைக்கறீங்க.."

"உனக்கே தெரியும் சுசிம்மா.. நான் அமைதியா இருக்கனும்னு நினைக்கிறவ.. இதுக அடிக்கிற கூத்தில எனக்குத் தலைவலி வந்திருதும்மா.."

"இதுக்குத்தான் நீங்க அபார்ட்மெண்டில குடியிருங்கன்னு சொன்னேன்.. அங்கே கதவை இறுக மூடிக்கிட்டு

வீட்டுக்குள்ள பதுங்கிக்கலாம்.. தோட்டம், ஊஞ்சல்ன்னு வெளியே எட்டிப் பார்க்க வேண்டியதில்லை.. சிங்கிள் வுமனுக்கு அபார்ட்மெண்ட்தான் வசதி.. பாதுகாப்பானதும் கூட.."

சமயம் கிடைத்தது என்று 'சுசி' நினைவு படுத்தியதில் பல்லவிக்கு ஆத்திரம் ஆத்திரமாக இருந்தது.. அவளே இப்போதுதான் தனிபங்களா, கார் என்று ஆசைப்பட்ட வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.. அவளைப் பிடித்து இவள் அபார்ட்மெண்டில் அடைக்கப் பார்க்கிறாளே..

"வாடகையும் கம்மி.. அதை மறந்துட்டியே.." இடக்காக பல்லவி சொல்ல.. 'சுசி' நிதானமாக அவளைப் பார்த்து..

"மறக்கலை அண்ணி.. நினைவில் வைத்துத்தான் சொல்கிறேன்.. பத்தாயிரம், பதினைந்தாயிரத்தில் வாடகை முடிந்து விடும்.. மீதிப் பணம் என் பெட்ரோல் செலவுக்குப் போதுமானதாக இருக்கும்.. அபார்ட்மெண்டுக்கு மாறி விடறிங்களா..?" என்று கேட்டாள்..

"எங்க பரம்பரையில் யாருமே அபார்ட்மெண்டில் இருந்ததில்லை.."

தீப்பெட்டிகளைப் போல வரிசை கட்டிய ஒற்றை அறை வீடுகளில் குடியிருந்ததை அவள் சொல்லவா முடியும்..? அபார்ட்மெண்டெல்லாம் பல்லவிக்கு கனவு.. அந்த ஒற்றை அறைக்குக் கூட வாடகை கொடுக்க முடியாமல் வீட்டின் சொந்தக்காரியிடம் சகட்டு மேனிக்குத் திட்டு வாங்குவார்கள்..

அப்படிப்பட்ட வாழ்வை வாழ்ந்த பல்லவிக்கு அபார்ட்மெண்ட் என்பது மாளிகைக்கு நிகரானது..

ஆனால் அவள் அதற்கும் மேம்பட்ட வாழ்வை வாழ ஆசைப்பட்டாள்.. தனிபங்களா, கார், செலவளிக்க கை நிறையப் பணம்..

இவை அனைத்தும் 'சுசி'யின் தயவில் அவளுக்கு கிட்டி விட்டன.. சொகுசாக வாழ ஆரம்பித்து விட்டவள் தன் சொகுசைக் குறைத்துக் கொள்வாளா..?

"அப்ப வீட்டுச் செலவையாவது குறைத்துக்கங்க.."

"எப்படி சுசிம்மா..? வேலையாள்களுக்கே இருபதாயிரம் போய்விடுகிறது.. பால், எலக்ட்ரிக்பில், மளிகை, கேபிள், காய்கறி, மட்டன், சிக்கன், பிஷ் ன்னு செலவளித்துப் பார்த்தாத்தான் தெரியும்.. குடும்பம் நடத்தறது எவ்வளவு சிரமம்ன்னு.."

குடும்பத் தலைவியாக கணவரையும், குழந்தைகளையும் பராமரித்து ஓய்ந்து விட்டவளைப் போல மூச்சு வாங்கினாள் பல்லவி..

"குடும்பம் நடத்தறது சுலபம்தான் அண்ணி... அதுக்கான பணத்தைச் சம்பாதிப்பதுதான் கஷ்டம்.." 'சுசி' எழுந்து கொண்டாள்..

"கிளம்பிட்டியா..?"

"கிளம்பாம என்ன செய்கிறது..? இங்கேயே இருந்தா எனக்கு வெரைட்டியா டிபன் செய்து கொடுத்துறப் போறீங்களா என்ன..? டே அண்ட் நைட்டா அட்வைஸ் பண்ணினாலும் நீங்க செலவைக் குறைத்துக்கப் போறதில்ல.. என் எனர்ஜிதான் வேஸ்டாகும் போது நான் கிளம்பறதுதான் பெட்டர்.."

"இந்த மாதச் செலவுக்குப் பணம் கொடுக்கலையே கண்ணம்மா.."

"கொடுக்கத்தானே வந்திருக்கிறேன்.."

"ஒரு இருபதாயிரம் அதிகமாகக் கொடு சுசிம்மா.."

வேண்டுமென்றே கேட்டு வைத்தாள் பல்லவி.. அப்போதுதான் ஒரு லட்ச ரூபாய் முனை முறியாமல் கிடைக்கும் என்பது ஒருபக்கம்.. ஒருவேளை.. 'சுசி'யிடம் அதிகப் பணம் இருந்து இருபதாயிரம் அதிகமாகக் கிடைத்தாலும் கிடைக்கக் கூடும் என்பது மறுபக்கம்..

"ஒரு லட்சத்துக்கே தரிங்கினத்தோமா இருக்கு.. இதில் இருபதாயிரம் அதிகம் வேணுமா..? என்னங்கண்ணி.. விளையாடறீங்களா..?"

'உன் கூட விளையாடிட்டாலும்.. கழுதையில..'

பல்லவி பணம் போதவில்லை என்பதைப் போல முகத்தை வைத்துக் கொண்டாள்.. மூக்கை உறிஞ்சினாள்.. அதைப் பார்த்த 'சுசி' சகிக்க முடியாமல் பணத்தை எடுக்கப் போவதைப் போல முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.. நல்ல நாளிலேயே பல்லவியின் முகத்தைப் பார்க்கச் சகிக்hது.. இதில் மூக்கை உறிஞ்சினால் எப்படிப் பார்ப்பது..?

'சுசி'யைப் போன்ற நாசுக்கும், நாகரிகமும் கொண்ட பெண் மயிலுக்கு இதை விடச் சோதனை வேறேதும் இல்லை..

"ஹேண்ட் பேக் எங்கே.." 'சுசி' தேடினாள்..

"நீ ஹேண்ட் பேக் கொண்டு வரலையே.." நிச்சயத்துடன் சொன்னாள் பல்லவி.. அவளை விட்டால் அதை யாரறிவார்..?

'சுசி'யின் ஹேண்ட் பேகை சோதனை செய்து அதிலுள்ள பணத்தையும், பொருள்களையும் 'அபேஸ்' பண்ணுவது பல்லவிக்குப் பிடித்தமான ஒன்று.. சொல்லிச் சொல்லிப் பார்த்து பல்லவி திருந்தாததினால் இப்போதெல்லாம் வீசின கை வெறுங்கையாகத்தான் சுசி உள்ளே வருவாள்.. கையில் கார்ச் சாவி மட்டும்தான் இருக்கும்.. அதையும் கைப்பற்றி 'சுசி' வீட்டுக்குள் இருந்த போது பல்லவி காரை சோதனையிட்டாள்.. 'சுசி' ஹேண்ட் பேகை மறைத்து வைத்திருந்த இடத்தை அவளால் கண்டு பிடிக்கவே முடியவில்லை.. மாறாக கார் சாவியும் கையுமாக அவள் தான் 'சுசி'யிடம் அகப்பட்டாள்..

"இங்கே என்ன பண்றீங்க..?" என்று ஆரம்பித்த 'சுசி' அன்று அவளை வறுத்தெடுத்து விட்டாள்.. இதுதான் பெரிய குடும்பத்தில் பிறந்தவளின் லட்சணமா என்ற கேள்வியில் ஆரம்பித்து அவள் பல்லவியின் பூர்விகத்தை அலசி ஆராய முற்பட்டதில் அந்தலை சிந்தலையான பல்லவி பிரசன்னாவின் பெயரை இழுத்துத் தப்பித்தாள்.. அதற்குப் பின்னால் 'சுசி'யின் கார்ச் சாவியைத் தொடும் வேலையை வைத்துக் கொள்வதில்லை..

"ஆமாமில்ல.." என்ற 'சுசி' நடந்தாள்..

"பணம் கொடுக்காம போகிறியே பேபி.." பல்லவி பாய்ந்து வழியை மறித்தாள்..

"காரில் இருக்கு.. எடுத்துத் தருகிறேன்.. வழியை மறிக்காதீங்க.. என்ன ஹேபிட் இது.. பேட் ஹேபிட்.." 'சுசி' முகத்தைச் சுளித்தாள்..

அதனால் எல்லாம் பாதிப்படைகிறவளா பல்லவி..? அவள் அதைத் துடைத்துப் போட்டு விட்டு.. 'ஈ' யென்ற இளிப்புடன் 'சுசி'யைப் பின் தொடர்ந்தாள்.. தோட்டத்தை நெருங்கியதும்..

"இங்கேயே நில்லுங்க.." என்று கண்டிப்புடன் அவளை நிறுத்தி வைத்து விட்டுக் காரை நெருங்கிய 'சுசி' உள்ளே ஏறி உட்கார்ந்து குனிந்து எங்கிருந்தோ ஹேன்ட் பேகை எடுத்தாள்..

'எங்கே ஒளித்து வைத்திருந்தா..?' பல்லவியின் விழிகள் பெரிதாகின..

ஹேண்ட் பேகுடன் காரை விட்டு இறங்கிய 'சுசி' பல்லவியை அணுகி.. ஹேண்ட் பேகிலிருந்த பணத்தை எடுத்து ஒரு லட்சம் ரூபாயை எண்ணிக் கொடுத்தாள்..

"பணம் இல்லைன்னு சொன்ன..?" ஹேண்ட் பேக்கில் இருந்த பணத்தை எட்டிப் பார்த்தாள் பல்லவி..

"இரண்டு லட்சத்தில ஒரு லட்சத்தை உங்க கையில் கொடுத்தாச்சு.. மீதமிருக்கிற ஒரு லட்சத்தில ஐம்பதாயிரம் ஹவுஸ் ரெண்டுக்கு.. ஹவுஸ் ஓனரின் பேங்க் அக்கவுண்டில் கட்டிரனும்.. கார் டியூவுக்கு ஐம்தாயிரம்.. என் செலவுக்குத்தான் என்ன செய்யப் போகிறேனோ.. தெரியவில்லை.."

'சுசி' கடைசியில் சொன்ன வார்த்தைகள் காதுகளில் விழுகாததைப் போல முகத்தை வைத்துக் கொண்ட பல்லவி..

"அந்த ஒரு லட்சத்தை என்னிடம் கொடு 'சுசி'.. பாவம் உனக்கெதுக்கு சிரமம்..? வீட்டு வாடகையையும், கார் டியூவையும் நான் கட்டி விடுகிறேன்.." என்று குழைந்தாள்..

"நீங்க என்ன செய்வீங்கன்னு எனக்குத் தெரியும் அண்ணி.. மணி மேட்டரில் கரெக்டா இருந்துதான் எனக்குப் பழக்கம்.. ஹவுஸ் ரெண்டுக்கோ, கார் டியூவுக்கோ பதில் சொல்லக்கூடாது.. கரெக்டா கிரெடிட் ஆகிரனும்.. ஸோ.. நீங்க உங்க வேலையை மட்டும் பாருங்க.." முகத்தில் அடித்ததைப் போலச் சொல்லி விட்டாள் 'சுசி..'

'மசிய மாட்டேங்கிறாளே..' பல்லவிக்கு கோபம் வந்தது.. அடக்கிக் கொண்டாள்..

கிடைப்பதைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்றால் அடக்கித்தான் வாசிக்க வேண்டும்.. அவளும் அடக்கி வாசித்தாள்..

"நீ சொல்கிறதும் சரிதான் சுசிம்மா.." ஜால்ராத் தட்டினாள்..

"நான் சொல்கிறதுதான் சரி.." அழுத்தமாகச் சொன்னாள் 'சுசி..'

'எதுக்கெடுத்தாலும் விசும்பறாளே..'

'சுசி..' அவளைப் பிணைத்திருக்கும் தளையை அறுக்க முற்படுக்கிறாளோ என்ற சந்தேகம் எழுந்தது பல்லவிக்கு..

'அது கூடாதே..'

தளையை இறுக்க என்ன செய்ய வேண்டும் என்று யோசிக்க ஆரம்பித்தாள் அவள்.. 'சுசி'யெனும் பொன் முட்டையிடும் வாத்து விலகிச் சென்று விடக் கூடாது..

"அடுத்து எப்போ வருவ சுசி..?"

"இது என்ன புதுக் கேள்வி..? நெக்ஸ்ட் மன்த் சேலரி போட்டதும்தான் வருவேன்.. பணம் இல்லாம உங்களைப் பார்க்க வர முடியுமா..?"

'சுசி'யும் நன்றாகத்தான் கேள்வி கேட்கிறாள்.. பல்லவிக்குத்தான் அது உறைப்பதே இல்லை.. நீ பாட்டுக்கு

பேசிக் கொண்டிரு.. என்னை எதுவும் பாதிக்காது என்று எருமை மாட்டின் மீது மழை பெய்வதைப் போல நிற்பாள்..

"ஏன் சுசி.. வீடு வாங்க நீ லோன் போட முடியாதா..?" அடுத்த சொத்திற்கு அடி போட்டாள் பல்லவி..

"முடியாது அண்ணி.." திட்டவட்டமாகச் சொன்னாள் 'சுசி..'

"முடியாதா..?" பல்லவிக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது..

"கார் வாங்க லோன் போடலாம்.. வீடு வாங்க ஏன் லோன் போட முடியாது.. நீதான் ரெண்டு லட்ச ரூபாய் சம்பளமா வாங்கறியே.."

"வாங்கி என்ன பண்ண..? அதில் ஒரு லட்சம்கூட மிஞ்சுவதில்லையே.."

"இப்ப ஹவுஸ் ரெண்டுக்குக் கொடுக்கிற ஐம்பதாயிரத்தை ஹவுஸிங் லோனுக்குக் கட்டு.."

"கட்டலாம்.. அதுக்கு நீங்க அபார்ட்மெண்டை வாங்க ஒப்புக் கொள்ளனுமே.. இது போல ஒரு வீட்டைக் கை காட்டுவீங்க.. அது மெயினான ஏரியாவில் இருக்கனும்னு அடம் பிடிப்பீங்க.. இப்படிப் பட்ட வீட்டுக்கு விலை மூன்று கோடியைத் தாண்டும்.. அதுக்கு எனக்கு லோன் கிடைக்கனும்.. கிடைத்தாலும் மாதா மாதம் மூன்று லட்சம் டியூ கட்டனும்.. நடக்கிற காரியமா..?"

"நீ நினைத்தால் நடக்கும்.."

"யார் நினைத்தாலும் நடக்காது.. இன்னொன்றையும் மறந்துட்டிங்க அண்ணி.. ஹவுஸிங் லோனை என் பெயரில் போட்டால் வீடு என் பெயரில்தான் ரெஜிஸ்டர் ஆகும்.."

"என்னது..?"

பல்வியின் அறிவு இவ்வளவுதான்.. 'சுசி' லோன் போட்டுக் கடனைக் கட்ட வீடு இவள் பெயருக்கும் பதிவாகும் என்று கணக்குப் போடும் அறிவுதான் அவளது அறிவு..

"ஆமாம் அண்ணி.. என் பெயருக்கு வீடு வாங்கி அதில் உங்களைத் தங்க வைக்கிறதுக்கு நீங்க வாடகை வீட்டிலே இருங்க.. அதுதான் பெட்டர்.."

"ஆமாமாம்.. அதுதான் பெட்டர் பேபி.."

பல்லவி தாளம் போட்டாள்.. 'சுசி'யின் பெயரில் வீடு வாங்க பல்லவி எதற்காக செலவுகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும்..? அதற்குப் பதில் 'சுசி'யிடமிருந்து பிடுங்கும் பணத்தில் கொஞ்சத்தைச் சேர்த்து வைத்தால் பிற்காலத்தில் பல்லவியே சொந்தமாக ஒரு வீட்டை வாங்கிக் கொள்ளலாமே..

பல்லவியின் மனம் இப்படித்தான் கணக்குப் போடும் என்பதை கண்டறிந்து வைத்திருந்த 'சுசி..' கடுகடுத்த முகத்துடன் காரில் ஏறப் போனாள்.. தன்னிச்சையாக அவள் பார்வை பக்கத்து வீட்டின் பக்கம் பாய்ந்தது.. அதை எதிர்பார்த்து நின்றிருந்ததைப் போல போர்டிகோவில் நின்றிருந்த வாசுதேவனின் பார்வை அவள் பார்வையைக் கவ்வியது..

8

"தீன கருணாகரனே..!

நடராஜா..! நீலகண்டனே..!"

வாசுதேவனின் செல்போன் பாடியது.. டைனிங் டேபிளில் இருந்த செல்போனை எடுத்துப் பார்த்த வசுமதி குரல் கொடுத்தாள்..

"டேய் வாசு.. உன் பிரண்ட் கருணாகரன் கூப்பிடறாண்டா.."

"இதோ வந்துட்டேன்க்கா.."

அலுவலகம் போகத் தயாராகி அறையை விட்டு வெளியே வந்த வாசுதேவன் மடிப்புக் கலையாத பேண்ட், சர்ட், டை என்று கம்பீரமான அழகுடன் இருந்தான்..

"ஐம்முன்னு இருக்கீங்க மாமா.." நிஷாக்குட்டி சொக்கியது..

"அப்படின்னா மாமாவுக்கு ஒரு உம்மாக் கொடு.." குழந்தையைத் தூக்கிக் கொண்டான் வாசுதேவன்..

"இவன் இருக்கானே.. ஏண்டா.. உன் பிரண்ட் போனில் கூப்பிட்டுக்கிட்டு இருக்கான்.. நீ உன் அக்கா மகளை செல்லம் கொஞ்சிக்கிட்டு இருக்கிற.." அலுத்துக் கொண்ட வசுமதி தானே போனை எடுத்து ஆன் பண்ணினாள்..

"டேய் வாசு.." மறுமுனையில் கருணாகரன் அலறினான்..

"இருடா.. அவன் வருவான்.. எதுக்கு இப்படிக் காலில சுடுதண்ணியக் கொட்டிக்கிட்டதைப் போல அலருகிற..?" வசுமதி அதட்டினாள்..

"யாரு..?" கருணாகரன் திகைத்து விட்டு..

"இந்தப் பக்கம் கருணா.. அந்தப் பக்கம் யாரு..?" என்றான்..

"ம்ம்ம்.. அருணா.." வசுமதி கலாய்த்தாள்..

"அருணாவா..? எங்க அக்கா வாய்ஸ் போல இருந்துச்சே.."

"டேய்.. தெரிந்துக்கிட்டே நடிக்கிறயா..?"

"எப்போக்கா வந்தீங்க..?"

"ஏன்..? நான் எப்போ வந்தேன்னு உனக்குத் தெரியாதாக்கும்..? இதை நான் நம்பனுமாக்கும்..? உன் பிரண்டு உன்கிட் சொல்லலையாக்கும்..?"

"ஏன்க்கா இப்படிக் கேக்கறீங்க.. இந்த தாய்க்குலத்துக்கு எதுக்கெடுத்தாலும் சந்தேகம்தான்.."

"அப்ப.. எவளோ ஒருத்தி உன்னைச் சந்தேகப் பட்டிருக்கான்னு சொல்லு.. எவ.. அவ..?"

"அதையேன்க்கா கேக்கறீங்க.. தெரியாத்தனமா ஒருத்தியை டா வடிச்சுட்டேன்.."

"உன்னை சாவடிச்சுருவேன்.. ஒழுங்காச் சொல்லு.."

"சரிக்கா.. சரிக்கா.. நீங்க மலையேறிராதீங்க.. தெரியாத்தனமா ஒருத்தியைக் காதலிச்சுட்டேன்.."

"அஃது.. ஆனாத் தம்பி இந்த டயலாக்க அந்தப் பொண்ணுல்ல சொல்லனும்..? பாவம்.. யார் பெத்த பெண்ணோ..?"

"நக்கல்..?"

"இல்லேன்னு சொல்லுவேனாடா..?"

"யாரு நீங்க..? வாசுதேவனுக்கு அக்காவாச்சே.. சும்மாவா விடுவீங்க..?"

"தெரியதுதில்ல.. அடக்கி வாசி.."

"அதுசரி.. தாய்க்குலம்ன்னா சந்தேகம் மட்டுமில்ல.. அரட்டலும் ஜாஸ்தியாத்தான் இருக்குக்கா.."

"அப்படியென்னடா அந்தப் பொண்ணு உன்னைச் சந்தேகப்பட்டு அரட்டுச்சு..? இந்தப் புலம்பல் புலம்பற..?"

"அதையேன்க்கா கேக்கறிங்க.."

"வேற வழி..? இந்த வாசுப்பயல் நிஷாக்குட்டியக் கொஞ்சிக்கிட்டு இருக்கான்.. அவன் வருகிறவரைக்கும் உன் புலம்பலைக் கேட்டாகனுமே.."

"இது புலம்பலா..?"

"பின்னே..? தத்துவமா..?"

"இல்லேங்கறிங்களா..?"

"என்னடா நீ.. உன் புலம்பலெல்லாம் தத்துவம்ன்னு சொல்லக் கிளம்பினா.. தத்துவத்தை என்னன்னு சொல்றது..? அடேய் கருணா.."

"அக்கா..?"

"தத்துவத்துக்கும் புலம்பலுக்கும் நிறைய வித்தியாசம் இருக்குடா.."

"தோராயமா ஆறு வித்தியாசம் இருக்குமாக்கா..?"

"நீ அடங்கவே மாட்டேங்கிற பார்த்தியா..?"

"ச்சும்மா, சின்னதா ஒரு சந்தேகம் கேட்டேன்க்கா.."

"உனக்கச் சந்தேகம் வர்றப்ப.. உன்னையெல்லாம் நம்பி ஒரு பொண்ணு காதலிச்சிருக்காளே.. அவளுக்கு சந்தேகம் வரக் கூடாதாடா..?"

"என்னாக்கா நீங்க அவளைப் போலவே பேசறீங்க.. இப்ப தத்துவத்தைத்தான தாளிச்சுக் கொட்டிக்கிட்டு இருந்தீங்க..? அதிலேயே நில்லுங்க.. அந்தப்பக்கம், இந்தப் பக்கம் நகர வேணாம்.."

"சரி நகரலை.. நான் தத்துவத்தத் தாளிச்சுக் கொட்டிக் கிளறினதும் நீயும் உன் புலம்பல உருப்படியாப் புலம்பி முடிச்சுரனும்.. டீல் ஓகேயா..?"

"டபுள் ஓகேக்கா.."

"ஒரு மார்க்கமாத்தாண்டா இருக்க.. இந்தா.. கேட்டுக்க.. உனக்கு நீயே புலம்பினா அது தத்துவம்.. அதுவே யாராவது ஒருத்தங்க தெரியாத்தனமா மாட்டிக்கிட்டு உன் புலம்பலக் கேட்டு வெறுத்துப் போனாங்கன்னா அது அறுவை.."

"யு மீன் ரம்பம்..?"

"பிளேடுன்னு கூடச் சொல்லலாம்.. ஐ ஹேவ் நோ அப்ஜெக்சன்.."

"தம்பின்னும் பார்க்காம தாளிச்சுக் கொட்டிட்டீங்களேக்கா.."

"தாளிச்சுக் கொட்டறதில் எல்லாம் நான் ஃபார்சியாலிட்டி பார்க்க மாட்டேண்டா.. நவ் யு புரொசீட்.."

"அவளைக் காதலிச்சேனா..?"

"ஏண்டா இதையே திரும்பத் திரும்பச் சொல்ற..? உனக்கே அதில நம்பிக்கை இல்லையா..?"

"வேணாம்க்கா.. தாங்க மாட்டேன்.."

"புலம்பாதே.. சொல்லித் தொலை.."

"காதலை புரப்போஸ் பண்ணப் போறப்ப நான் பூ வாங்கிட்டுப் போனேன்.."

"சிகப்பு ரோஜாதானே..?"

"எப்புடிக்கா கரெக்டா கண்டு பிடிச்சீங்க..?"

"மலையாள மாந்திரிகனை வரவழைச்சு சோழி உருட்டிப் போட்டுக் கண்டு பிடிச்சேண்டா தம்பி.."

"கேலி பண்றீங்களா..?"

"வேற என்னத்தைப் பண்ணுவாங்க..? காதலைச் சொல்றதுன்னாலே நீங்க எல்லாம் ரெட் ரோஸைத் தூக்கிக்கிட்டுத்தானேடா அலையறீங்க..?"

"அவளுக முன்னாலே மண்டி போடறதைச் சொல்ல மறந்துட்டிங்களே.."

"எடுத்துக் கொடுக்கத்தான் நீ இருக்கறியே.. அந்தக் கருமத்தை என் வாயாலே வேற சொல்லனுமா...?"

"விடுங்கக்கா.. விடுங்கக்கா.. நான் பூ வாங்கிட்டுப் போனேனா.. அவ பூவை வாங்கிக்கிட்டா.."

"பாவம்.. அவ தலைவிதி அப்படியிருந்திருக்கு.. அவசரப் பட்டுட்டா.."

"நான் உங்க தம்பிக்கா.."

"அதனாலதான் இதை அவ வீடு தேடிப் போய் சொல்லாம இருக்கிறேன்.. நீ பூ விசயத்துக்கு வா.."

"ஆஹா.. நமக்கும் ஒரு காதலி கிடைச்சிட்டான்னு.."

"நமக்கா..? உனக்குன்னு சொல்லுடா.."

"எனக்கும் ஒரு காதலி கிடைச்சிட்டான்னு.."

"இப்படியே சொல்லிப் பழகு.."

"ஆகட்டும்க்கா.. மறு நாளும் அவளுக்குப் பூ வாங்கிக்கிட்டுப் போனேன்.."

"கஞ்சப் பிசுநாரி.. பத்துரூபாய் பூவில காதலியைக் கரெக்ட் பண்ணப் பார்த்திருக்கான் பாரு.."

"ரோஜாப்பூ ஐந்து ரூபாய்தான்க்கா.."

"அதிலயும் பாதியா..? கொடுத்து வைச்சவடா உன் காதலி.."

"அவளும் அதைத்தான் சொன்னாக்கா.."

"என்னன்னு..? கொடுத்து வைச்சிருக்கிறதாச் சொன்னாளா..? யாருடா அந்த வெள்ளந்தி..?"

"அவளா வெள்ளந்தி..? வெள்ளெலிக்கா.. என்னமா பிறாண்டறா தெரியுமா.. சந்தேகப் பிராணி.."

"காரணமில்லாம பிறாண்டியிருக்க மாட்டாடா.."

"உங்க தம்பி மேல அம்புட்டு நம்பிக்கை.. அவ கொடுத்து வைத்தவளோ இல்லையோ.. நான் கொடுத்து வைத்தவன்.."

"விடுடா.. விடுடா.."

"அவ கொடுத்து வைத்திருக்கிறதாச் சொல்லலைக்கா.. என்னைக் கஞ்சப் பிசுநாரின்னு சொன்னா.."

"கரெக்டாத்தான சொல்லியிருக்கா.."

"நீங்க ஒருத்தங்க போதும்க்கா.."

"எதுக்குடா தம்பி.."

"என்னை விட்டுக் கொடுக்கிறதுக்கு.."

"விடுடா.. விடுடா.."

"இதையும் விடனுமா..? சரி விட்டுட்டேன்.. ரோஜாப்பூவுக்குத்தான் இப்படிச் சொல்றாளேன்னு மறுநாளில் இருந்து மல்லிகைப் பூவை வாங்கிக்கிட்டுப் போனேன்.."

"அவ கஞ்சப் பிசுநாரின்னு சொல்லியும் நீ திருந்தலை..? ஏண்டா.. பூவைத் தாண்டி வேற எதையும் நீ யோசிக்க மாட்டியா..?"

"அதுக்கே இந்தப் பாடுப் படுத்தறா.. அதையும் தாண்டினா என்ன பாடுபடுத்துவாளோ.."

"என்னடா சொன்னா..?"

"தினமும் மல்லிகைப் பூவை வாங்க வேண்டி வந்ததினால பீச்சில பூ விற்கிற பூக்காரப் பெண்ணுக்கு நான் ரெகுலர் கஸ்டமராகிட்டேன்.."

"கேக்க கொஞ்சம் நான் சிங்கா இருக்கே.."

"அக்கா.. நான் அறியாப் பிள்ளைக்கா.."

"உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா..?"

"இதை நீங்க சொல்கிற டோனே சரியில்லையே.. எதுக்கும் என் காதலிக்குத் தாலி கட்டின பின்னாலே உங்க கண்ணில காட்டறேன்.. அதுதான் எனக்கு ஷேஃப்.."

"ஆமாமாம்.. அப்பத்தான் அவ தப்பிச்சு ஓட முடியாது. நீ இப்ப பூ வாங்கிட்டுப் போன கதைக்கு வா.."

"அந்தப் பூக்காரி கொஞ்சம் நிறமா, கொஞ்சம் அழகா இருப்பா.."

"அதான பார்த்தேன்.."

"இதைத்தான் அவளும் சொல்லி என் முதுகில டின் கட்டிட்டாக்கா.."

"மொத்தாம என்ன செய்வா..? உன்னைத் துவைச்சுத் தோரணம் கட்டித் தொங்க விடாம இருந்தாளே.. அதை நினைச்சுச் சந்தோசப் பட்டுக்க.."

"எதுக்குக்கா இம்புட்டுக் காண்டு..?"

"உன்னைத் திருத்தினாத்தான் வாசுவும் உருப்படுவான்.."

"எதுக்கும் எதுக்கும் முடிச்சுப் போடறீங்கக்கா.. தாய்குலத்தோட அராஜகம் நாளுக்கு நாள் அதிகமாகிக் கிட்டே வருது.."

"அப்படி என்ன அராஜகத்தைடா கண்டுட்ட..?"

"பூ வாங்காம வந்தா, உனக்குப் பூ வாங்கிட்டு வரக்கூட நினைவில்லையான்னு கேட்கிறது.. ஆசையா பூ வாங்கிட்டு வந்தா பூக்காரிய சைட் அடிக்கிறயான்னு சட்டையைப் பிடிக்கிறது.. இதெல்லாம் உங்க ஊரில அராஜகமில்லையா..?"

"அவ உன் சட்டையைப் பிடித்தாளாடா..?"

"ஆஹா.. என் காதலி என்னோட சட்டையைப் பிடிச்சு சத்தம் போட்டதில அக்காவுக்கு எம்புட்டு சந்தோசம்.. வாசு இன்னைக்குள்ள வந்து போனை வாங்கிக்குவானாக்கா..?"

"வந்துட்டான்டா.. பொறு.. டேய் வாசு.. உன் அக்கா மகளைக் கொஞ்சினது போதும்.. இங்கே வந்து போனை வாங்கு.. இவன் புலம்பற புலம்பலில காதில ரத்தம் கொட்டப் போகுது.."

"ஆமாக்கா.. இம்புட்டு நேரமா குடைஞ்சு குடைஞ்சு கதை கேட்டுட்டு.. இப்ப என் புலம்பலைக் கேட்க முடியலைங்கறிங்களா..?"

போனில் கருணாகரன் நொந்து போய் பேசிக் கொண்டிருக்க ஒருவழியாய் நிஷாவைக் கொஞ்சி முடித்து இறக்கி விட்டு விட்டு வந்த வாசுதேவன்..

"என்னத்தப் புலம்பப் போறான்.. பூக்காரி மூக்கும் முழியுமா இருந்தா.. அவகிட்ட ஏன் பூ வாங்கினன்னு என் காதலி சண்டை போட்டான்னு புலம்பியிருப்பான்.." என்றபடி போனை வாங்கினான்..

"எப்படிடா கரெக்டாச் சொல்ற..?" வசுமதி வியந்தாள்..

"நீ வேறக்கா.. ஒருவாரமா இவன் இத மட்டும்தான் புலம்பிக்கிட்டு இருக்கான்.. ஆபிசில் இவனைக் கண்டாலே எல்லோரும் அலறியடிச்சுக்கிட்டு ஓடறாங்கன்னா பாரேன்.." என்று வசுமதியிடம் விவரித்து விட்டு.. போனை காதுக்குக் கொடுத்து..

"சொல்லுடா.." என்றான்..

"நீ சொல்லி முடிச்சிட்டியாடா..?" எரிமலையை அடக்கி வைத்தபடி கேட்டான் கருணாகரன்..

"நான் சொன்னதிலேதான் கெட்டுப் போச்சாக்கும்..? இவ்வளவு நேரமா அக்கா உன் வாயைப் பிடுங்கிக்கிட்டு இருந்ததை நானும் கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன்.. பூவில இருந்து பூக்காரி வரைக்கும் உண்மை, சண்மை அத்தனையையும் உளறிக் கொட்டிட்டு இப்ப என்னைக் குற்றம் சொல்றான்.." கருணாகரனை விடப் பொங்கினான் வாசுதேவன்..

"அக்காவுக்கேத்த தம்பி.."

"நீ தம்பியில்லையா..?"

"தம்பிதான்.. நானும் தம்பிதாண்டா.. அதானலதான அக்கா கழுவிக் கழுவி ஊத்தினதைத் துடைத்து விட்டுட்டு பேசறேன்.."

"என்ன கழுதைக்குப் பேசற..? அதைச் சொல்லு.."

"காரு ரிப்பேர்.."

"காயலான் கடையில போடு.."

"அதை அப்புறமாச் செய்துக்கறேன்.. இப்ப என்னை ஆபிஸ் போகிற வழியில பிக்கப் பண்ணிக்க.."

"செய்து தொலைக்கிறேன்.."

வாசுதேவன் அக்காவுக்கும் நிஷாவுக்கும் கைகாட்டி விட்டுக் காரைக் கிளப்பினான்.. காலையில் சந்தித்த காரிகையின் நினைவில் பக்கத்து வீட்டைப் பார்த்தான்.. அங்கே ஊஞ்சலாடிக் கொண்டிருந்த பல்லவி உக்கிரமாக அவனை முறைத்தாள்..

'இது மூஞ்சியில விழிச்சுக்கிட்டுப் போனா விளங்கிரும்..'

திரும்பி வீட்டைப் பார்த்தான்.. கோதாவரி தண்ணீர் தம்பளரோடு வந்து நின்றாள்.. நன்றியுணர்வுடன் வாங்கிக் குடித்து விட்டு..

"எப்படிம்மா..?" என்றான்..

"அவதான் வீட்டுக்குள்ள போகாம ஊஞ்சலாடிக் கிட்டே இருக்காளே.. பாத்துப் பத்திரமாப் போயிட்டு வா.."

"உன்னைப் பார்த்துட்டுப் போறேனில்ல.. நல்லதுதான் நடக்கும்."

கவனமாக பக்கத்து வீட்டைப் பார்ப்பதைத் தவிர்த்துச் சாலையைப் பார்த்துக் காரை ஓட்டினான்.. வழியில் கருணாகரன் வீடு இருக்கும் ஏரியாவுக்குள் காரைச் செழுத்தித் தயாராக வீட்டு வாசலில் காத்திருந்த கருணாகரனை ஏற்றிக் கொண்டான்.. அடித்துப்

பிடித்துக் காரில் ஏறிக் கொண்ட கருணாகரன் விளக்கெண்ணையைக் குடித்ததைப் போல முகத்தைக் கோணினான்.. வாசுதேவன் ஏனென்று கேட்பான் என்ற எதிர்பார்ப்பில் அவனது முகம் பார்த்தான்.. வாசுதேவன் கருணாகரன் பக்கம் திரும்பக்கூட இல்லை.. கார் ஓட்டுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தான்.. பொறுத்துப் பொறுத்துப் பார்த்த கருணாகரன் எதையோ சொல்ல முயல..

"வேண்டாம்டா கருணா.. ஏற்கனெவே நான் ஏகப்பட்ட எரிச்சலோட இருக்கேன்.. நீயும் புலம்பி என்னை மூட்-அவுட் ஆக்கினேன்னு வைய்யி.. ஃபிரண்டுன்னும் பார்க்காம வழியில் இறக்கி விட்டுட்டு நான்பாட்டுக்கு போயிருவேன்.. பார்த்துக்க.." என்று எச்சரித்தான்..

"ஏண்டா.. நான் வாயைத் திறக்கறதுக்குள்ள புலம்பப் போறேன்னு பேசினா என்னடா அர்த்தம்..? என்னை புலம்பல் மன்னன்னு முடிவே கட்டிட்டயா..?"

"கழுதையில.. நீ அதைத்தானடா பண்ணித் தொலைப்ப..?"

"ம்ஹீம்.. ஃபிரண்டுன்னு மனசு விட்டுப் பேசினா இப்படியா..?"

"நீ மனம் விட்டுப் பேசற லட்சணத்தை வெளியில் சொல்லிராதே.."

வாசுதேவனின் கடுப்பில் திறந்த வாயை மூடிக் கொண்ட கருணாகரன் வாய்க்குள் முணுமுணுத்தபடியே வந்தான்.. என்னவோ பண்ணித் தொலை என்று ஏனென்று கேட்காமல் காரை ஓட்டிக் கொண்டிருந்தான் வாசுதேவன்.. ஓர் அளவுக்கு மேல் புலம்ப முடியாமல் வாய் வலித்துப் போன கருணாகரன் முணுமுணுப்பதை நிறுத்தியபோது அவர்களின் கம்பெனி வந்துவிட்டது..

'டி.ஜி.எம் குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸ்..'

என்று பொன் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்த காம்பவுண்டின் வளாகத்திற்குள் நான்குமாடிக் கட்டிடம் நிமிர்ந்து கம்பீரமாக நின்றிருந்தது.. அதன் முகப்பு முழுவதும் ஆகாய நீலத்தை பிரதிபலிக்கும் கண்ணாடி மறைத்திருக்க ஒயிலாக நின்றிருந்த கட்டிடத்தைச் சுற்றிலும் கார், இரண்டு சக்கர வாகனங்களை நிறுத்துவதற்கான செட் போடப்பட்டிருக்க அதில் தனது காரை வாகாக நிறுத்தி விட்டு இறங்கினான் வாசுவேதன்..

9

விரைந்து நடந்த வாசுதேவனைத் தொடர்ந்து ஓடிவந்த கருணாகரன்..

"நில்லுடா.. நானும் வர்றேன்.. ஆபிஸ்க்குத்தான போகிற..? எதிரி நாட்டை அட்டாக் பண்ணப் போகலையே.. இந்த விரைப்பு வேண்டாம்டா மச்சான்.." என்று கெஞ்சினான்..

'யார் நீ..?' விறைப்பைக் கைவிடாமல் நண்பனை முறைத்துப் பார்த்த வாசுதேவன் தனது நடையை நிதானப் படுத்தவே இல்லை..

அவனுக்குத் தெரியும்.. அலுவலகத்தில் வேலை பார்த்துத் திரும்புவது என்பது எதிரி நாட்டுக்காரனைத் தாக்கி விட்டுத் திரும்புவதை விடக் கடினமான ஒன்று என்பது..

போர்க்களத்தில் யாருக்காக போர் புரிகின்றோம் என்ற தெளிவு இருக்கும்.. எதிரி யார் என்று இனம் காண முடியும்.. அலுவலகத்தில் அப்படியில்லை.. நிர்வாகத்திற்காக மாங்கு, மாங்கு என உழைத்தாலும் போட்டுக் கொடுக்கும் எட்டப்பன்களால் அந்த உழைப்பெல்லாம் விழலுக்கு இறைத்த நீராக மாறிப் பார்த்த வேலைக்குப் பரிசு கிட்டாமல் பதில் சொல்லிக் கை பிசைந்து நிற்க நேரிடும்..

தற்காத்துக் கொள்ளும் திறமை மிக்கவனே அலுவலகத்தின் மிகச் சிறந்த ஊழியன்.. அலுவலகத்தில் வேலை செய்து திரும்புவது என்பது அத்தனை சுலபமான ஒன்றல்ல... உலகத்தரம் வாய்ந்த ஒட்டுமொத்த ராஜதந்திரிகளும் ஒன்று கூடிக் கத்திகளை வீசும் போர்க்களம் அது.. அத்தனை பேரையும் சமாளித்து.. கருணாகரனின் பாசைiயில் சொல்வதாக இருந்தால் மாரடித்து.. வீடு திரும்ப வேண்டும்.. எந்த நேரம் எவர் போட்டுக் கொடுப்பார்களோ என்று பதைபதைக்கும் நெஞ்சத்துடன் வேலை செய்தாக வேண்டும்.. முகத்திற்கு நேரே வரும் கத்திகளை எதிர் கொண்டு போர் புரியலாம்.. முதுகிற்குப் பின்னால் குத்த வரும் கத்திகளை எப்படி இனம் கண்டு தப்பிப் பிழைப்பது..?

வாசுதேவன் அதில் கை தேர்ந்தவன்.. முதுகிற்குப் பின்னால் நெருடும் கத்திகளை இமைக்கும் பொழுதில் தட்டி விடுவதில் கெட்டிக்காரன்.. அவனைப் பற்றிப் போட்டுக் கொடுப்பவரை முந்திக் கொண்டு அவர்களைப் பற்றிய ஊழல்களை நிர்வாகத்திற்கு புரிய வைத்து விடுவான்.. எப்போது அவன் மாட்டுவான் என்று காத்துக் கிடக்கும் கூட்டம் ஒன்று அலுவலகத்தில் மையம் கொண்டிருந்தது.. வாசுதேவனை நேரிலே பார்த்து விட்டால் அவர்கள் சிரித்துச் சிரித்துப் பேசுவார்கள்.. தோளிலே கை போடுவார்கள்.. அவனுடன் பேசிக் கொண்டே அவனது காலுக்குக் கீழே குழி பறிக்க வேண்டிய அனைத்து வேலைகளையும் செய்வார்கள்..

"எப்புடிடா.. இப்படி இருக்கிறாங்க..?" அரளுவான் கருணாகரன்..

"அதை ஆராய்ச்சி பண்ணி என்ன கிடைக்கப் போகுது..? விட்டுத் தொலை..." அலட்சியமாக தோள்களைக் குலுக்கியபடி கண்டு கொள்ளாமல் வாசுதேவன் நகர்ந்து விடுவான்..

"ஹாய் வாசு.."

தன் முப்பத்தியிரண்டு பற்களையும் காட்டி வரவேற்றாள் கிரிஜா.. எம்.டியின் பி.ஏ என்ற கெத்தில் இருப்பவளிடம் மற்றவர்கள்தான் வலியப் பேசுவார்கள்.. அவள் யாரையும் கண்டு கொள்ள மாட்டாள்..

"இதுக்கு இருக்கிற கொழுப்பைப் பார்த்தியாடா..? உன்கூட நானும்தான வருகிறேன்.."

"அட்டையைப் போல ஒட்டிக்கிட்டு வர்றன்னு சொல்லு.."

"ஆமாண்டா மச்சான்.. எம்.டி உன்னைக் கூப்பிட்டு ஆயிரம் பொற்காசுகளை அள்ளிக் கொடுக்கப் போகிறார் பாரு.. அதில் பாதியைத் தட்டிப் பறித்துக்கலாம்ன்னு உன்னுடன் ஒட்டிக்கிட்டு வர்றேன்.."

"இல்லேன்னு தெரியுதில்ல.. தள்ளித்தான் வாயேன்.."

"எதுக்கு..? வேற எவனும் தள்ளிக்கிட்டு போகிறதுக்கா..?"

இதைச் சொல்லும் போதா கிரிஜா தலை நிமிர்ந்து வைக்க வேண்டும்..?

"வாட்..?" கண்களை அவள் உருட்டி விழித்ததில்..

"நீங்க நினைக்கிறதைப் போல ஒன்றுமில்லை மேம்.." என்று அலறி விட்டான் கருணகாரன்..

"வாயை வைத்துக்கிட்டு சும்மா இருக்க மாட்டியா..?" நண்பனை ரகசியமாகத் திட்டிவிட்டு..

"ஹி இஸ் இன்னொஸண்ட் மேம்.." என்று கிரிஜாவிடம் பரிந்துரை செய்தான் வாசுதேவன்..

"அப்படியெல்லாம் நம்பி விடாதீங்க சார்.. ஹி இஸ் வெரி டேன்ஜரஸ் ஃபெல்லோ.."

என்னவோ 'ரேப்' செய்ய வந்த வில்லனை முறைக்கும் கதாநாயகியைப் போல கருணாகரனை முறைத்தபடி விலகிச் சென்றாள் கிரிஜா..

"இதுக்கு இருக்கிற அழும்பைப் பாரேன்.. முப்பதைத் தாண்டி நாற்பதைத் தொடற வயசில இருக்கு.. இந்த பேரிளம் பெண் மேல நான் காதல் கணை விடறேனாம்.. கல்யாணம் ஆகலைன்னா கிழவியெல்லாம் குமரியா ஆகிடுவாங்களாடா..?" கருணாகரன் புலம்பினான்..

"லேடிஸைத் தப்பாப் பேசாதே.."

"நான் எங்கேடா பேசினேன்..?"

"அவங்களே பேரிளம் பெண்ணுன்னு தெரியுதில்ல.. உனக்கு அவங்க ஹாய் சொல்லலைன்னா என்ன..?"

"உனக்கு மட்டும் சொல்லுதில்ல.. அந்தத் திமிர்..? கூட ஒருத்தன் உரசிக்கிட்டே வர்றேனில்ல.. என்னைக் கண்டுக்காம உனக்கு மட்டும் ஹாய் சொன்னா கூட வந்துக்கிட்டு இருக்கிற எனக்கு எப்புடிடா இருக்கும்..?"

"இதை அவங்ககிட்டச் சொல்லவா..?"

"எதைடா..?"

"உனக்கு அவங்களைப் பார்த்தா எப்படியெப்படியோ இருக்குதுன்னு சொன்னியே.. அதை.."

அப்பாவி போல முகத்தை வைத்துக் கொண்டான் வாசுதேவன்..

"அடப்பாவி.." என்று வாய் பொத்தினான் கருணாகரன்..

"வாட்'ஸ் தி மேட்டர் கருணா..?"

"உனக்கு ஒன்னும் தெரியாது..?"

"யெஸ்.."

"யு மீன்.. யு ஆர் எ 'பப்பா..'?"

"அப்சல்யூட்லி ரைட்.."

"அடிங்.. ஏண்டா.. அந்தம்மாவே கற்பனைக் குதிரையை தட்டி விட்டுக்கிட்டு அதைக் கடத்த வந்த வில்லனைப் போல என்னை முறைச்சுக்கிட்டு இருக்குது.. அதுகிட்டப் போய் இதைச் சொன்னா அவ்வளவுதான்.."

"சொல்ல வேண்டாம்ங்கிறியா..?"

வாசுதேவன் கேட்டுக் கொண்டிருந்த போதே முன்னால் சென்று கொண்டிருந்த கிரிஜா திரும்பிப் பார்த்து நின்றாள்..

"எதுக்குடா அது நிக்குது..?"

"நீ சொன்னது அவங்க காதில விழுந்துருச்சோ என்னவோ.." வாசுதேவன் புளியைக் கரைத்து நண்பனின் வயிற்றில் ஊற்றினான்..

"நான் என்னடா சொன்னேன்..?" கருணாகரனுக்கு கண்ணைக் கட்ட ஆரம்பித்து விட்டது..

"எனக்கே மறந்துருச்சு.. அவங்ககிட்ட வேண்டும்ன்னாக் கேட்டுச் சொல்லவா..?" இமை கொட்டினான் வாசுதேவன்..

"அப்பா.. சாமி.. நீ ஒரு ஆணியையும் பிடுங்க வேணாம்." கருணாகரன் கையெடுத்துக் கும்பிட்டான்.

கிரிஜாவை அவர்கள் நெருங்கிவிட..

"என்னசார்.. உங்க பிரண்ட் என்னத்த வாய் விட்டார்..?" என்று கேட்டாள் கிரிஜா..

"ஏன் அப்படிக் கேட்கறிங்க..?"

"சோழியன் குடுமி சும்மா ஆடாதே.."

"தட் மீன்ஸ்..?"

"உங்க பிரண்ட் உங்களைக் கும்பிட்டுக்கிட்டே வர்றாரே.."

"ஹா.. ஹா.."

வாசுதேவன் சிரித்துச் சமாளித்து விட்டான்..

'பயபுள்ள.. இதில எல்லாம் எக்ஸ்பர்ட்..' கருணாகரனுக்கு சுவாசம் சீரானது..

"நீங்க ஆபிஸ்க்குள் எண்ட்ரி ஆனதுமே உங்களை எம்.டி ரூமுக்கு அனுப்பி வைக்கச் சொல்லி ஆர்டர்.."

"யார் போட்டது..?"

"எம்.டி.."

கிரிஜா வேலை முடிந்து விட்டது என்று அவளது சீட்டிற்குச் சென்று விட்டாள்.. போவதற்கு முன்னால் மறக்காமல் கருணாகரனை கண்ணகி மதுரையைப் பார்த்ததைப் போல கனிவான ஓர் பார்வையினைப் பார்த்து விட்டுத்தான் சென்றாள்..

"இது என்னடா.. இதை நான் ரூட் விட்டேன்னு முடிவே பண்ணிருச்சா..?" திகிலானான் கருணாகரன்.

"அப்படித்தான் தோணுது.."

ஐயோ, பாவம் என்ற பார்வையினைப் பார்த்து வைத்தான் வாசுதேவன்..

"அப்படிப் பார்க்காதேடா.."

"இதில இருந்து தப்பிப் பிழைக்க என்ன செய்யப் போகிறாயோ.. ஒரு 'ஹாய்'க்கு ஆசைப்பட்டு எங்கே வந்து நிற்கிற..த்ச்சு..த்ச்சு.."

"நான் என்னடா செஞ்சேன்..?"

"உனக்கு அவங்க 'ஹாய்' சொன்னா என்ன.. சொல்லலைன்னா என்ன..? அதைப் பத்திப் பேசப் போய்த்தானே அவங்களிடம் அகப்பட்டுகிட்ட.."

"நீ எங்கேடா போகிற..?"

"எம்.டியைப் பார்க்க.."

"நான் என்னடா செய்ய..?"

"வாங்குகிற சேலரிக்கு வேலையைப் பாரு.."

வாசுதேவன் என்னவோ எளிதாகச் சொல்லி விட்டுப் போய் விட்டான்.. கிரிஜாவின் பார்வை வீச்சை நினைத்துப் பார்த்த கருணாகரனால் வேலையில் மனம் போகவில்லை..

'காலக் கொடுமை..'

அலுவலகத்தில் நுழையும் போதே கிரிஜாவை எதிர் கொள்ள வேண்டும் என்று விதி ஏன் விதித்து வைத்தது..? வாழ்க்கையில் எதிர்கொள்ளும் இதுபோன்ற சோதனை களிலிருந்து தப்பிப் பிழைப்பது எப்படி..?

கருணாகரன் ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்தான்.. காலமென்னும் சிலந்தி வலையில் சிக்கிக் கொண்டிருந்த மனதினால் விடுபட்டு வெளியே வர முடியவில்லை.. மனக்குதிரையைத் தட்டி எழுப்ப முயன்றான்.. அது போடா என்று சிலந்திவலையைத் தாண்டி வெளியே குதிக்க மறுத்தது.. அதுவும்தான் என்ன செய்யும்.. மனதுக்கும் புத்துணர்வு தேவைப்படுகிறதே.. வாசுதேவனைப் போல வார்த்தைக்கு வார்த்தை சிரிக்க வைத்தால் சிலிர்த்துக் கொண்டு எழுந்து நிற்கும்.. கருணாகரனே மூக்குறுஞ்சி.. எதற்கெடுத்தாலும் புலம்பித் தள்ளுவான்.. இவன் புத்துணர்வைக் கொடுத்து அவனது மனக்குதிரையைப் பாயச் செய்வதெல்லாம் வேலைக்கு ஆவதில்லை.. அது சண்டிக்குதிரையாக சண்டித்தனம் செய்து கொண்டு சிலந்தி வலைக்குள்ளேயே சொகுசாக படுத்து விட்டது.. எழுந்திரு மனமே என்று இவன் கெஞ்சினால் அது 'போடா பட்டர்..' என்று பெப்பே காட்டிவிட்டது..

'இப்படி ஆகிப் போச்சே..'

கருணாகரன் அரைக் கண்களை மூடிக் கொண்டு கிரிஜா அவனைப் பார்க்கிறாளா என்று பார்த்தான்.. அவள் அந்தப் பக்கம் இந்தப் பக்கம் திரும்பாமல் கருணாகரனையே முறைத்துக் கொண்டிருந்தாள்.. படக்கென்று கண்களை இறுக மூடிக் கொண்டான்.. மனது படபடவென அடிக்க ஆரம்பித்து விட்டது..

'இதுதான் சாக்குன்னு அமுக்கிருவாளோ..' பதைத்துப் போனான்..

"இன்னா சார்..? வந்ததும் வராததுமா இன்னாத்துக்கு கண்ண இறுக்க மூடிக்கிட்டு உக்காந்திருக்க..? அப்புடி இன்னாத்த யோசன பண்ற..?" நீட்டி முழக்கிய நாராயணனின் சத்தத்தில் பதறிக் கண்விழித்தான்.

"சத்தம் போடாதேப்பா.." கிரிஜாவின் பக்கம் பார்த்தான்.

அவளும் இவனைப் பார்த்தாள்.. அவர்கள் பார்த்துக் கொள்வதை நாராயணனும் பார்த்து வைத்தான்..

"இன்னா சார்..?" ஆச்சரியப் பட்டுப் போனான்..

"என்னாய்யா..?" கருணாகரன் திருதிருத்தான்.

"இன்னாமோ, அண்ணாத்தயும் பாத்தான்.. அந்தம்மாவும் பாத்துச்சுங்கிற கணக்கா.. நீ அங்க பாக்கிற.. அது இங்க பாக்குது.. இன்னா..? இன்னா நடக்குது..?"

"எதுவும் நடக்கலை நாராயணா.. நம்பு.."

"இன்னாத்த நம்பச் சொல்ற..? இன்னா..? எனிக்கு எதுவும் தெரியாதுன்னு நினைச்சுக்கினியா..?"

"ஐயோ.. அப்பெடியெல்லாம் நினைப்பேனா நராயணா..? யாரு நீ..? ஆல் இன் ஆல் அழகு நாராயணனாச்சே.."

"அப்புறம் இன்னாத்துக்கு இம்மாங் கவலப் படற..? இன்னாவா இருந்தாலும் எங்கையில சொல்லு.. நானு இன்னான்னு ஒரு கையி பார்த்துடறேன்.."

"ஏதாச்சும் இருந்தாத்தானேப்பா சொல்கிறதுக்கு.."

"இன்னா சாரு.. இன்னாத்துக்கு புளுகற.. முகத்த வைச்சே இன்னாரு மனசில இன்னா இன்னா இருக்குதுன்னு கண்டு புடிச்சிருவான் சார் இந்த நாராயணன்.. நீ இன்னாத்துக்கு வந்த..?"

"வேலை செய்யத்தான் வந்தேன் நாராயணா.. வேற எதுக்கும் இல்லை.."

"அட.. இன்னா சார்.. இம்மாம் பெரிய பயந்தாக்கொள்ளியா கீற.. இப்ப நான் இன்னாத்தச் சொல்லிட்டேன்னு இம்மாங்க

கூவு கூவற..? உனிக்கு ஆறுதலாக் கீறும்ன்னு நாலு வார்த்த நல்லதாப் பேசுனா இம்மாம்பயம் பயப்படறியே.. உனிக்கு இன்னாதான் வேணும்..?"

அவன் கிரிஜாவைப் பார்த்துக் கொண்டே கேட்டதில் நடுநடுங்கிப் போனான் கருணாகரன்.. அந்த அலுவலகத்தின் காதல் தூதுவன் நாராயணன்.. காதலுக்கு மரியாதை செய்பவன்.. எதிரும் புதிருமாக முறைத்துக் கொண்டிருப்பவர்களைக் கூட இணை சேர்த்து விடுவான்.. அப்பேற்பட்ட வல்லமையாளன்..

'ஹைய்யோ.. ஹையய்யோ.. இவன் பாட்டுக்கு காதலுக்கு மரியாதை செய்கிறேன் பேர்வழின்னு அந்த கிரிஜாகிட்டத் தூது போயிட்டா என் கதி என்னத்துக்கு ஆகிறது..?'

கருணாகரன் கண்களில் நீர்மல்க நாராயணனை ஏறிட்டால்..

"இப்ப இன்னா ஆச்சுன்னு கண்கலங்கிற..? நான் இன்னா செய்யனும்..?" என்று அவன் 'இன்னா.. இன்னா' போட்டுப் படுத்தி வைத்தான்..

இப்படி 'இன்னா.. இன்னா..' என்று 'இன்னா' செய்பவனை வாயிலேயே இரண்டு குத்து வைத்து வாயை மூடிக் கொண்டு ஓடிவிடு என்று சொல்லத்தான் கருணாகரன் நினைத்தான்.. பதிலுக்கு நாராயணன் ஒரே ஒரு குத்தை விட்டால் கூட அவனால் தாங்கிக் கொள்ள முடியுமா என்ற முன்னெச்சரிக்கையால் அதைச் செய்யாமல்.

'இன்னா சொல்வாரை ஒருத்தல் - அவர்வழியில்

செல்லாமல் விலகி விடல்..'

என்ற புதுக்குறளுக்கேற்ப மன்னித்து வேலை இருப்பதைப் போன்ற பாவனையுடன் விலகி ஓடி விட்டான்.

அவன் தப்பித்து ஓடுகிறான் என்று புரியாமல்.

"இன்னாத்துக்கு இந்த மன்சன் இந்த ஓட்டம் ஓடறான்..? இன்னாவா இருக்கும்..? இன்னான்னு கேட்டா இன்னான்னு சொல்லவும் மாட்டேங்கிறான்.. இவன் மனசில இன்னா

இருக்குன்னு புரியலயே.." என்று நாராயணன் தனக்குத் தானே பேசியபடி குழம்பி நின்றான்..

இதுபோன்ற நாள் வேறேதும் இல்லை என்று ஆகி விட்டது கருணாகரனுக்கு..

'கொஞ்ச நாளைக்கு தலை மறைவா இருந்துட்டுத் திரும்பி வரலாமா..?' என்று கூட யோசித்தான்..

மருத்துவ விடுப்பு முதற்கொண்டு அனைத்து விடுப்புகளையும் எடுத்து விட்டவனுக்கு அலுவலகத்தை விட்டுத் தப்பியோட மார்க்கம் ஏது என்ற உண்மை உறைத்ததினால் தலையைப் பிடித்துக் கொண்டான்..

"ஹலோ.."

'இது கிரிஜாவின் குரல் மாதிரித் தெரியுதே..'

லேசாக இமைகளைத் திறந்தவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.. அங்கே கிரிஜாதான் நின்று கொண்டிருந்தாள்..

'என்னை விட்டிரு..' என்று ஓடிப் போய் விடலாம் என்று முடிவெடுத்தான் கருணாகரன்.. வேறு என்னதான் செய்வது..?

## 10

வாசுதேவன் எம்.டியின் அறைக்குப் போன போது அவர் கம்யூட்டரின் திரையில் கண்களைப் பதித்திருந்தார்.. வாசுதேவனைக் கண்டதும் விழியசைவில் எதிரே இருந்த சோபாவில் உட்காரும்படி சமிக்ஞை செய்துவிட்டு கம்யூட்டரை ஆராய ஆரம்பித்து விட்டார்..

'இதற்கா வரச் சொன்னார்..?'

வாசுதேவனுக்கு சலிப்பாக இருந்தது.. அன்றைய வேலை நாளின் தொடக்கம் அதுபோல அமைவதில் அவனுக்கு உடன்பாடில்லையென்றாலும், அழைத்து வெட்டியாக

உட்கார வைத்திருப்பது அவனுக்குச் சம்பளம் கொடுக்கும் எம்.டி என்பதினால் பொறுமையாக உட்கார்ந்திருந்தான்..

கம்யூட்டரைக் காதலியைப் போல உற்று நோக்கிக் கொண்டிருந்த தணிகாசலம் ஒருவழியாக அந்தக் காதலியின் மீதிருந்த பார்வையை விலக்கி எதிரே உட்கார்ந்திருந்த வாசுதேவனைப் பார்த்தார்..

"குட் மார்னிங் சார்.."

அவனது காலை வணக்கம் கூட எம்.டியின் கவனத்தைக் கலைத்து விடக் கூடாது என்று பொறுமை காத்திருந்தவனின் காலை வணக்கத்திற்கு பதில் வணக்கம் சொல்லாமல்..

"வாசு.. டு யு நோ எஸ்.எஸ் குரூப்ஸ் ஆஃப் கம்பெனீஸ்..?" என்று தீவிரமான முக பாவனையுடன் கேட்டார்..

"எதற்காக இந்தக் கேள்வியைக் கேட்கிறார் என்று புரியாமல்.."

"எஸ் சார்.. ஐ நோ தட்.." என்றான் வாசுதேவன்..

"அந்தக் கம்பெனியோட நமக்கு ஒரு அக்ரிமெண்ட் ஃபார்ம் ஆகப் போகுது.." சுழல் நாற்காலியில் சாய்வாக அமர்ந்து கொண்டார் தணிகாசலம்..

'அக்ரிமெண்ட்டா..?'

எஸ்.எஸ் குருப்ஸ் ஆஃப் கம்பெனியுடன் என்ன அக்ரிமெண்ட் உருவாகப் போகிறது என்று வாசுதேவனுக்குப் புரியவில்லை.. பல்வேறு தொழில்களைச் செய்து வரும் எஸ்.எஸ். டி.ஜி.எம். குரூப்ஸ் ஆஃப் கம்பெனிகளுக்குப் பொதுவாக இருந்து வரும் ஒரே

தொழில் ஏற்றுமதி இறக்குமதி வணிகம் மட்டும்தான்.. வெளிநாட்டில் இல்லாத உள்நாட்டு கம்பெனியுடன் என்ன வர்த்தக ஒப்பந்தத்தைப் போட்டு விட முடியும்..?

"ஐ கான்'ட் அண்டர்ஸ்டாண்ட்.."

"லாஸ்ட் வீக் நமக்கு ஒரு ஃபாரின் காண்ட்ராக்ட் கிடைத்தது.. இல்லையா..?"

"யெஸ் சார்.."

"அவங்க கோட் பண்ணியிருக்கிற அத்தனை புராடக்டும் நம்மிடம் இருக்கிறதா..?"

"இல்லை சார்.. இதைப்பற்றி நாம் ஏற்கனெவே டிஸ்கஸ் பண்ணியிருக்கிறோமே.. நாம் தயாரிக்கிற புராடெக்டைஸை மட்டும் அக்செப்ட் பண்ணிக் கொண்டு மீதியை அவர்கள் வேறு கம்பெனிகளில் வாங்கிக் கொள்ளட்டும்ன்னு அக்ரிமெண்ட் போட்டுக்கலாம்ன்னு டிசைட் பண்ணினோமே.."

"அதை இப்ப மாற்றிக்கப் போகிறோம் வாசு.. ஹோல் புராடக்டையும் நாமே எக்ஸ்போர்ட் பண்ணி விடலாம்."

"ஹெள இஸ் இட் பாஸிபிள் சார்..?"

"நம்மிடம் காண்ட்ராக்ட் போட்டிருக்கிற கம்பெனி பெரிய கம்பெனி வாசு.. அவங்க கேட்கிற புராடெக்ட்ஸ் மொத்தமாகக் கிடைக்கனும்னு எக்ஸ்பெக்ட் பண்ணுவாங்க.. நம்மிடம் பாதிதான் கிடைக்கும்.. மீதிக்கு வேறு கம்பெனியைத் தேடனும்னா டீலை முறித்துக்குவாங்க.. புராடெக்ட்ஸ் எல்லாம் மொத்தமாக எந்தக் கம்பெனியால் கொடுக்க முடிகிறதோ.. அந்தக் கம்பெனியில் காண்ட்ராக்ட் போட்டு விடுவாங்க.."

"எனக்குத் தெரிந்து அவங்க கேட்கிற புராடெக்ட்ஸ் அத்தனையையும் மொத்தமா புராடெக்ட் பண்ற கம்பெனி தமிழ்நாட்டில் இல்லைன்னுதான் சொல்லுவேன் சார்.."

"இல்லைதான் வாசு.. நீங்க கரெக்டாத்தான் சொல்கிறீங்க.. பட்.. வேற ஒரு மெத்தேட்ல நாம இந்தக் காண்ட்ராக்டை அசீவ் பண்ணி விடலாம்.."

"எப்படி சார்..?"

"அதற்காகத்தான் எஸ்.எஸ்.குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸோடு நாம் அக்ரிமெண்ட் போடப் போகிறோம்.."

வாசுதேவனுக்குப் புரிந்து விட்டது.. அந்த ஃபாரின் கம்பெனி கேட்கும் தயாரிப்புகளில் பாதி டி.ஜி.எம் குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸிடம் கிடைத்து விடும்.. மீதித் தயாரிப்புகள் எஸ்.எஸ் குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸ் தயாரிப்பவை..

"நாம் எஸ்.எஸ் குரூப்ஃ ஆஃப் கம்பெனியிடம் புராடெக்டுகளை பர்ச்சேஸ் பண்ணி நம் புராடெக்ட்ஸ்டன் ஜாயின் பண்ணி எக்ஸ்போர்ட் பண்ணி விடலாம்.. மொத்தமாக நமக்கும் லாபம்.. ஃபாரின் கம்பெனியையும் சேடிஸ்பை பண்ணி விடலாம்.."

"கிளவர் ஐடியா சார்.. எஸ்.எஸ் குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸ் இதற்கு ஒப்புகொண்டாங்களா சார்..? அவங்க நமக்கு போட்டிக் கம்பெனிஸ் ஆச்சே.."

"போட்டிக் கம்பெனிஸ்தான்.. சில சமயங்களில் போட்டியாளர்களும் ஒற்றுமையா ஆகிடுவாங்க வாசு.."

"புரியலை சார்.."

"இப்ப இரண்டு நாட்டின் மன்னர்கள் ஃபைட் பண்ணிக்கிட்டே இருக்கிறாங்கன்னு வைத்துக்கங்க.. ஒன்று சேர ஒர்வழியை ஃபாலோ பண்ணுவாங்க.."

"என்ன வழி சார்..?"

"எதிரி நாட்டுக்காரனிடம் சம்பந்தம் செய்து கொள்வது.. ஹா.. ஹா.."

தணிகாசலம் பழையபடி சுழல் நாற்காலியில் சரிந்து சாய்ந்து சிரிக்க ஆரம்பித்தார்.. இப்போது எதற்காக இந்த பி.எஸ் வீரப்பா சிரிப்பு.. என்று கேட்கத் தோன்றினாலும் அதைக் கேட்காமல் சின்சியர் சிகாமணியாக வாயை அடக்கிக் கொண்டு அவர் சிரிப்பதையே கர்ம சிரத்தையாகக் கவனித்துக் கொண்டிருந்தான் வாசுதேவன்.. முதலாளி சிரிக்கும் போது அதற்கான காரணத்தை அறிய முற்படாமல் அடக்கி வாசிக்க வேண்டும் என்பது அவன் படித்த எம்.பி.ஏ படிப்பின் பால பாடம்..

"எஸ்.எஸ் குருப்ஸ் கம்பெனியின் பழைய எம்.டி செந்தில் நாதன் இருக்கிறாரே.. எங்க கம்யூனிட்டிதான்.. சுற்றி வளைத்துத் தூரத்து சொந்தம்.. அவருக்கு ஒரே மகன்.. பெயர் சுசீந்திரன்.. அமெரிக்காவில எம்.பி.ஏ படிச்சுட்டு வந்து அப்பாவோட கம்பெனி பொறுப்பை எடுத்துக்கிட்டு இரண்டு வருசமாகுது.. கம்பெனிக்கு அவர் எம்.டி ஆனதும் ஜெட் வேகத்தில முன்னேற்றம்தான்.. புராக்ரஸ் சார்ட் மேலேதான் ஓடுது.. கீழே இறங்கவே இல்லை.. மாதங்கிக்கு இதைவிட பெட்டரான மாப்பிள்ளை கிடைக்கவே மாட்டார்.."

'பாருடா..' வாசுதேவன் நினைத்துக் கொண்டான்.. பாருடா என்று மனதுக்குள்தான் நினைக்க முடியும்.. வாய்விட்டுச் சொல்ல முடியுமா..?

தணிகாசலம் வெகு உற்சாகத்துடன் விவரித்துக் கொண்டிருந்தார்.. மகளுக்கு ஏற்ற மாப்பிள்ளையைத் தேர்வு செய்து சம்பந்தம் பேசி முடித்து விடட சந்தோசம் அவருக்கு..

தணிகாசலத்தின் மனைவி கௌரி.. மிகப் பெரிய செல்வந்தரின் மகள்.. அவள் மனைவியாக வந்த பின்னால்தான் தணிகாசலத்தின் வாழ்வில் மாற்றம் வந்தது என்று அடிக்கடி பெருமையாகச் சொல்வார்.. கௌரியை கை பிடித்த போது தணிகாசலத்தின் தொழிலில் பல்வேறு பிரச்னைகள் இருந்தன.. வெளியில் தெரியாமல் போராடிக் கொண்டிருந்தவர்க்கு மனைவி வழி வந்த செல்வம் தக்க தருணத்தில் உதவி செய்து அவரது அனைத்துப் பிரச்னைகளையும் சரி செய்து தொழிலில் தலை நிமிர்ந்து நிற்க வைத்தது.. அவர்களுக்கு ஒரேயொரு செல்ல மகள்.. பெயர் மாதங்கி.. மனைவி, மகளின் மீது இருந்த பாசத்தினால் தனது கம்பெனியை.. டி.ஜி.எம் குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸ் என்று அவர் பெயர் மாற்றம் செய்து தொழில்களைப் பெருக்கினார்.. கூ என்றால் தணிகாசலம், மு என்றால் கௌரி, ஆ என்றால் மாதங்கி கூமுஆ குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸ் பல தொழில்களில் வெற்றிகரமாக இயங்கினாலும் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் முதன்மை பெற்றிருந்தது..

மாதங்கி பி.ஈ முடித்து விட்டு எம்.பி.ஏ படித்துக் கொண்டிருந்தாள்.. அவளுக்கு மாப்பிள்ளை தேடுவது என்பது மிகப்பெரும் சாம்ராஜ்யத்தை ஆள ஓர் ராஜகுமாரனைத் தேடுவதற்குச் சமமானது.. மாதங்கியின் கணவன்தான் கூழுஆ குரூப்ஸ் ஆஃப் கம்பெனியின் வருங்கால நிர்வாகி..

'சரியாத்தான் செலக்ட் பண்ணியிருக்கிறார்..' மனதுக்குள் தணிகாசலத்தின் திறமையைச் சிலாகித்துக் கொண்டான் வாசுதேவன்..

சும்மாவா அவர் வெற்றிகரமான தொழிலதிபராக பரிமளிக்கிறார்..?

"நாங்க ரெண்டு ஃபேமிலியும் மீட் பண்ணிப் பேசி முடித்து விட்டோம்.. மாதங்கியும், மாப்பிள்ளையும் ஒருவரையொருவர் புரிந்துக்கிட்டாங்க.. ரெண்டு பேருக்கும் ஒருத்தருக்கொருத்தர் பிடித்துப் போய் விட்டது.."

'மாதங்கியைப் பிடிக்காமல் இருக்குமா..?'

வாசுதேவனுக்கு மாதங்கியைத் தெரியும்.. தணிகாலசத்தின் வீட்டில் நடக்கும் விழாக்களுக்கும், விருந்துகளுக்கும் அவன் செல்லும் போது எம்.டியின் மகள் என்ற கர்வம் துளியும் இல்லாமல் வாசுதேவனிடம் ஓர் சகோதர வாஞ்சையுடன் அவள் பேசிப் பழகுவாள்.. வசுமதியின் தம்பி அவன்.. தங்கையில்லாத குறை மாதங்கியின் மூலம் தீர்வதைப் போல உணர்ந்தாலும் வெளிக்காட்டிக் கொள்ள மாட்டான்.. எம்.டியின் மகள் என்ற மரியாதைப் புன்னகையோடு சில வார்த்தைகள் பேசி விட்டு விலகி விடுவான்..

"மனது ஒன்றாகி விட்ட பின்பு தொழிலில் போட்டி போட முடியுமா..? மாப்பிள்ளையிடம் பேசினேன்.. அதற்கென்ன மாமா.. அக்ரிமெண்ட் போட்டு விடலாம்ன்னு சொன்னார்.. ஃபார்மலா நம்ம கம்பெனியின் அக்ரிமெண்ட்ஸில் ஜி.எம் என்ற முறையில் நீங்கதானே சைன் பண்ணுவீங்க.. ஸோ.. நீங்க இப்போதே கிளம்பி

ளு.ளு. குரூப்ஸ் கம்பெனிக்குப் போய் அக்ரிமெண்டில் சைன் பண்ணிட்டு நம்ம காபியை வாங்கிக் கொண்டு வந்து விடுங்க.. தென், நமக்கு வேண்டிய புராடெக்ட்ஸ் எது எது, எவ்வளவு வேண்டும் என்பது போன்ற விவரங்களை தெளிவாக பேசிருங்க.. புராடெக்ட்ஸ் தயாராகிற இடத்துக்குப் போய் குவாலிட்டியை செக் பண்ணிருங்க.. ஏன்னா, ஃபாரின் கம்பெனியோடு காண்ட்ராக்ட் போட்டிருப்பது நம்ம கம்பெனி.. குவாலிட்டி மிஸ்ஸானா நாம்தான் ஆன்சர் பண்ணியாகனும்.. ஸோ பி கேர் புல்.."

'இதுதான் ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாக இருப்பது என்பது..' வாசுதேவனின் இதழ்களில் புன்னகை உதித்தது..

தணிகாசலத்தின் தொழில்சார்ந்த அணுகுமுறை குறித்த அவனது வியப்பும் பாராட்டும் இப்போதும் மனதில் எழுந்தன.. தலையை ஆட்டி விட்டு எழுந்தான்.

"தனியாகவா போகிறீங்க..?"

"ஏன் சார்..? வேண்டாம்ன்னு நினைக்கறீங்களா..?"

"யெஸ் வாசு.. கூட கருணாகரனை கூப்பிட்டுக்கங்களேன்.. ஜி.எம்முடன் பி.எம்மும் வருகிறார்ன்னு சொல்லிடறேன்.."

"ஓகே சார்.."

எம்.டியின் அறையை விட்டு வெளியே வந்த வாசுதேவன் பி.ஏ இருக்கையில் இருந்த கிரிஜாவிடம்..

"ஆன் டியுட்டியில் அவுட்டிங் போக வேண்டியிருக்கு மேம்.. என்னுடன் கருணாகரனும் ஜாயின் பண்றான்.. ளுளு குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸின் அக்ரிமெண்டில் சைன் பண்ணனும்.. அதுக்கான பேப்பர்ஸை ரெடி பண்ணி கருணாவிடம் கொடுத்துருங்க.. நான் என் கேபின் வரை போய்விட்டு வந்த விடுகிறேன்.." என்று சொல்லி விட்டு அவனுடைய அறையை நோக்கி விரைந்தான்..

க்ஷ. வாசுதேவன் எம்.ஈ, எம்.பி.ஏ., ஜெனரல் மேனேஜர் என்று பொறிக்கப் பட்டிருந்த அறைக் கதவைத் திறந்து

உள்ளே போய் சுழல் நாற்காலியில் உட்கார்ந்தவன் டேபிளில் இருந்த சிஸ்டத்தை உயிர்ப்பித்து அதி விரைவாக ஃபாரின் கம்பெனி கேட்டிருந்த தயாரிப்புகளில் டி.ஜி.எம் குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸில் தயாரிக்கப் படாத தயாரிப்புகள் எவையெவை என்று பட்டியலிட்டு விலக்கி பிரிண்ட் கொடுத்தான்.. பிரிண்டரில் வெளிவந்த பேப்பரை எடுத்துக் கொண்டு வெளியே வந்து கருணாகரனைத் தேடிப் போனான்.. அங்கே கிரிஜா நின்று கொண்டிருக்க கருணாகரன் ஆந்தைவிழி விழித்துக் கொண்டிருந்தான்..

"இவன் ஏன் மேம் இப்படி உட்கார்ந்திருக்கான்..?" கிரிஜாவிடம் விசாரித்தால் அவள் தலையில் அடித்துக் கொண்டு..

"எனக்கெப்படி சார் தெரியும்..?" என்று பதிலுக்குக் கேட்டாள்..

"நீங்க இங்க நின்றுக்கிட்டு இருக்கீங்களே.."

"அது ஒரு குற்றமா சார்..? நீங்கதானே ளுளு குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸ் சம்பந்தப்பட்ட பர்டிகுலர்ஸ் கேட்டிங்க..? பேப்பர்ஸை ரெடி பண்ணி இவரிடம் கொடுக்கச் சொன்னீங்களேன்னு கொண்டு வந்தா.. திரு திருன்னு முழிச்சுக்கிட்டு ஊமை மாதிரி 'பே..பே'ங்கிறாரு.. இவரெல்லாம் கூழுஆ குரூப்ஃ ஆப் கம்பெனிஸீக்கு பெர்சனல் மேனேஜர்.. நேரம் சார்.."

கிரிஜா கருணாகரனை ஜென்ம விரோதியைப் போல முறைத்தபடி கையிலிருந்த ஃபைலை வாசுதேவனிடம் கொடுத்து விட்டுப் போய் விட்டாள்.. அவள் அங்கிருந்து நகர்ந்த பின்னால்தான் கருணாகரனின் சுவாசம் சீரானது.. ஆசுவாசமாக நெஞ்சை நீவி விட்டபடி..

"நேரத்தைப் பத்தி இவ சொல்கிறா பாருடா.. இதைத்தான் நேரம் என்கிறது.." என்று புலம்பினான்..

"அடச்சீ.. வாயை மூடு.. கொஞ்சமாவது பெர்சனல் மேனேஜரா லட்சணமா பிஹேவ் பண்றியா..? எப்பப் பாரு..

புலம்பல்தான்..." வாசுதேவன் அதட்டி அவனை அடக்கினான்..

"உன்க்கென்னடா மச்சான்.. தப்பிச்சு ஓடிட்ட.. மாட்டிக்கிட்டவன் நான்தானே..?" மூக்கை உறிஞ்சினான் கருணாகரன்..

"என்னத்தை மாட்டிக்கிட்ட..?"

"இந்த கிரிஜாகிட்ட மாட்டிக்கிட்டேண்டா.."

"ஓங்கி அடிச்சேன்னா ஒன்றறை டன் வெயிட்டு விழும்.. அடிக்கவா..?"

"ஏண்டா..?"

"புரியறதைப் போலச் சொல்லித் தொலைடா.."

"வாசு.. இந்த கிரிஜா ஒரு மார்க்கமா பார்க்கிறாடா.."

"ஒரு மார்க்கமாப் பார்க்கிறாங்களா..?"

இயல்பாக பார்ப்பதைப் போல கிரிஜாவைப் பார்த்தான் வாசுதேவன்.. அவள் கையசைத்து வாசுதேவனை அருகில் கூப்பிட்டாள்..

"பார்த்தியா..? என்னை ஒரு தினுசாப் பார்த்தவ, உன்னைக் கையாட்டியே கூப்பிடறா.. கொஞ்சமாவது ஜி.எம்முங்கிற பயம் இருக்கா..?" கருணாகரன் உசுப்பேற்றி விட்டான்..

"நொய்யாலே.. உசுப்பேத்தி விடப் பார்க்கிறியா.. மகனே.. அகப்பட மாட்டேன்டா.. வயதிலே பெரியவங்க.. அந்த முறையில கூப்பிட்டிருப்பாங்க.. அவங்க எனக்க அக்கா மாதிரிடா.."

"எனக்கு மட்டும் ஏண்டா வேற மாதிரி தெரியறா.."

"உன் பார்வை அப்படி.. தப்பு அங்க இல்ல.. உன்கிட்ட இருக்கு.."

"அட்வைஸ்ஸீ..? பாக்கறதுக்கு டிப்டாப்பா இருக்க.. ஜெனரல் மேனேஜர் வேற.. வாயைத்திறந்தா 'அடிங், நொய்யாலே' பார்க்கத்தான் நீ ஜென்டிலு.. டோட்டலா கலீஜ்.."

"பன்ச்சு..?"

"ஹி.. ஹி.."

"இரு.. உன்னை கிரிஜாகிட்டப் பிடிச்சுக் கொடுக்கறேன்.. அவங்க உன்னைப் பஞ்சு பஞ்சாப் பறக்க விட்டாத்தான் அடங்குவ.."

வாசுதேவன் கிரிஜாவிடம் போய்விட.. உண்மையிலேயே அவனைப் பிடித்து கிரிஜாவிடம் கொடுத்து விடுவானோ என்ற திகில் வந்து ஆட் கொள்ள கருணாகரனை நெஞ்சுவலி ஆட்கொண்டது..

## 11

"ஹா.. ஹா.."

அடக்க முடியாமல் சிரித்தபடி காரை ஓட்டிக் கொண்டிருந்தான் வாசுதேவன்.. பக்கத்தில் உட்கார்ந்து நகம் கடித்துத் துப்பிக் கொண்டிருந்த கருணாகரனுக்கு டென்சனாக இருந்தது..

'அந்த கிரிஜா அப்படி என்னதான் சொல்லியிருப்பா.. இவன் இப்படிச் சிரிக்கிறான்..? ஒருவேளை என்னைப் பிடிச்சிருக்குன்னு சொல்லியிருப்பாளோ..'

அப்படி எதுவும் அவள் சொல்லியிருக்கக் கூடாது என்று குலசாமியை வேண்டிக்கொண்ட கருணாகரன்..

"அவ என்னடா சொன்னா..?" என்று பயந்தபடி கேட்டான்..

வாசுதேவன் நண்பனைத் திரும்பிப் பார்த்தான்.. அடக்க முடியாமல் சிரித்தான்.. கருணாகரனுக்கு வாழ்க்கையே வெறுத்தது..

கருணாகரன் உட்கார்ந்திருக்க கிரிஜா கூப்பிடுகிறாள் என்று அவளிடம் என்னவென்று கேட்கப் போன வாசுதேவன் அவளிடம் நின்று சில நிமிடங்கள் பேசினான்..

அந்த சில நிமிடங்களில் பலமுறை கருணாகரனைத் திரும்பிப் பார்த்தான்.. அதில்தான் கருணாகரன் பதறிப் போனான்.. காரணமமில்லாமல் நண்பன் திரும்பிப் பார்க்க மாட்டானே..

கிரிஜா கருணாகரனின் பக்கம் கையை நீட்டிநீட்டி ஏதோ சொன்னாள்.. வாசுதேவன் தலையைத்தலையை ஆட்டிக் கேட்டுக் கொண்டான்.. திரும்பி வந்தவனிடம்..

"அவ என்னடா சொன்னா..?" என்று கேட்டால் பதில் சொல்லாமல்..

"வா.. வா.. நேரமாகிருச்சு.. இன்னும் ஆஃப் அன் அவரில நாம ளுளு கம்பெனியில ரீச் ஆகியிருக்கனும்.." என்று பறந்தபடி விரைந்து விட்டான்..

கூட அவனும் போயாக வேண்டும் என்பதினால் ஓட்டமும் நடையுமாக வாசுதேவனைப் பின் தொடர்ந்தான் கருணாகரன்.. அன்று வெளியே போகும் வேலை வாய்த்ததில் அவனுக்குப் பரம சந்தோசம்.. அலுவலகத்தில் இருந்து கிரிஜாவை நினைத்து அஞ்சிக் கொண்டிருப்பதற்கு அவளுக்குக் கண் மறைவாக வெளியே திரிந்து வேலை பார்த்ததாகப் பேர் பண்ணி விட்டு வீட்டுக்கு ஓடி விடலாம்..

'இந்தப் பூக்காரி ரகளையை ஒரு முடிவுக்கு கொண்டு வந்து என் லவ்வர் கூடச் சமாதானமாகி அடுத்த முகூர்த்தத்தில கெட்டி மேளம் கொட்டிரனும்.. இல்லேன்னா வேற மாதிரி ஆகிரும் போல இருக்கே..'

வாசுதேவன் காரை பார்க்கிங் ஏரியாவில் இருந்து வெளிக் கொணர்ந்து ஓட்டி வந்து கருணாகரனின் பக்கத்தில் நிறுத்தினான்..

கிரிஜா பயத்தில் இருந்த கருணாகரன் பாய்ந்து ஏறிக் கொண்டான்.. கால் தடுக்கி அவன் தலை குப்புற விழ இருந்து கடைசி நொடியில் சுதாரித்துக் காரில் கால் பதித்து ஏறியதில்..

"உன்னையும் கூப்பிட்டுக்கிட்டுப் போகனும்ங்கிறது எம்.டியோட ஆர்டர்.. அதனால நீ ஏறின பின்னாலதான் காரைக் கிளப்புவேன்.. பறக்காவெட்டியைப் போலப் பறக்காதே.." என்று கடிந்து கொண்டான் வாசுதேவன்..

கார் வேகமெடுத்துச் சாலைப் போக்குவரத்தில் கலந்த பின்னாலும் வாசுதேவன் எதுவும் சொல்லாமல் இருந்ததில் படபடப்பானான் கருணாகரன்.. எவ்வளவு நேரம்தான் வாசுதேவனாகச் சொல்லுவான் என்று இவன் காத்திருப்பது..? வாசுதேவன் வாயைத் திறக்கும் எண்ணமே இல்லாதவன் போல காரை ஓட்டிக் கொண்டிருந்ததில் பொறுமையை கடல்காற்றில் பறக்க விட்ட கருணாகரன்..

"அந்த கிரிஜா எதுக்குடா உன்னைக் கூப்பிட்டா..?" என்று கேள்வியை மாற்றிக் கேட்டான்..

தீவிர சிந்தனையிலிருந்த வாசுதேவன் இவன் கேட்டதை செவி மடுத்ததும்.. "அதுவா.." என்று எதையோ சொல்ல வாய் திறந்தவன் அடக்க மாட்டாமல் சிரித்து விட்டான்..

அப்போது ஆரம்பித்த சிரிப்புத்தான்.. இன்னும் நின்ற பாடாக இல்லை.. பேச வாய்திறப்பான்.. உடனே சிரித்து விடுவான்.. கருணாகரனால் தாங்க முடியவில்லை..

'என்ன பிழைப்புடா இது..' என்று வெறுத்துப் போய் விட்டான்..

இப்படியா ஒரு மனிதன் சிரித்துச் சிரித்து இவனை பயமுறுத்துவான்..?

"என்னதாண்டா அவ சொல்லித் தொலைச்சா..?" வெடித்து விட்டான்..

"டேய்.. கருணா.. அவங்க உன் மேல கம்ப்ளெயிண்ட் பண்றாங்கடா.." வாசுதேவன் பொங்கிச் சிரித்தான்..

"என்மேல கம்ப்ளெயிண்ட் பண்றாளா..? என்னன்னு..?"

"கருணா.. நீ அவங்களை ஒரு மார்க்கமாப் பார்க்கிறியாம்.."

"என்னது..? நானா..? அவளையா..? பார்க்கிறேனா..?"

"சும்மா பார்க்கலையாம்டா.. ஒரு.."

"சொல்லாதேடா சொல்லாதே.. ஒரு மார்க்கமான்னு சொல்லாதே.."

"நானாடா சொன்னேன்..? அவங்கதான் சொல்கிறாங்க.. அவங்களை உற்று உற்றுப் பார்க்கிறாயாம்.. சங்கடமா இருக்காம்.. கல்யாணமே வேண்டாம்ன்னு ஆன்மிக பாதையில் போய்க்கிட்டு இருக்காங்களாம்.. நீ செய்வது சரியில்லையாம்.. உன்னைக் கண்டித்து வைக்கச் சொல்லி என்னிடம் ரிக்வஸ்ட் பண்ணிக்கிட்டாங்க.."

"தேவையாடா எனக்கு..?"

"இதை நான் உன்கிட்டக் கேட்கனும்.."

"இன்னைக்கு ராசிபலன்ல எக்குத்தப்பாப் போட்டிருக்கப்பவே நினைச்சேன்.."

"என்னத்தை நினைச்ச..?"

"இதைப் போல வில்லங்கம் வந்து சேரும்ன்னு.."

"நீயும்தான் எதுக்காக அவங்களை உத்து உத்துப் பார்த்த..?"

"வேணாண்டா வாசு.. இந்தக் கேள்வி கேட்கிறதுக்குப் பதிலா என்னை நாலு மொத்து வேணும்னா மொத்திக்க.. வெறுக்கடிக்காதே.."

கருணாகரன் மூக்கை உறிஞ்சினான்.. அவனது கலவரத்தில் வாசுதேவனுக்கு சிரிப்பு வந்தது.. கிரிஜா புகார் சொல்லும் போதே அவன் சிரிப்பை அடக்க வெகுவாகப் பிரயாசைப் பட்டான்... கருணாகரனுக்கு இது தெரிந்தால் எப்படியெல்லாம் புலம்புவான் என்று அவன் நினைத்தானோ.. அப்படியெல்லாம் கருணாகரன் புலம்பிக் கொண்டிருந்தான்.. நண்பனின் புலம்பலை ரசித்தான் வாசுதேவன்..

'புலம்பல் மன்னன்..'

அவர்கள் செல்ல வேண்டிய ளுளு குருப்ஸ் ஆஃப் கம்பெனியின் கட்டிட வளாகம் தொலைவில் உயர்ந்து

தெரிந்தது..

"நம்ம கம்பெனிக்கு சேலன்ஜா நிற்கிறது இந்தக் கம்பெனிதாண்டா.." கிரிஜாவை மறந்து சொன்னான் கருணாகரன்..

"நிஜம்தான்.." தலையை ஆட்டி ஆமோதித்தான் வாசுதேவன்..

"இவங்க பெயரைச் சொன்னாலே நம்ம எம்.டி சிலிர்த்துக்குவாரே.. எப்படிடா இவங்களோடு பிஸினெஸ் டீலிங் வைத்துக்கிறார்..?"

"இரண்டும் இரண்டும் ஒன்றுங்கிற கால்குலேசன்தான்.."

"இரண்டும் இரண்டும் நான்கு இல்ல..?"

"அது நீயும் நானும் போடுகிற கால்குலேசனில் வரும்.. பிஸினெஸ் மேக்னட்ஸோட கால்குலேசனே வேற மாதிரிடா கருணா.."

"என்ன கால்குலேசனோ..? ஒரு மண்ணும் புரியலை.."

"புரிந்து என்னத்தைக் கிழிக்கப் போகிற..?"

"ஒரு ஆணியையும் பிடுங்கப் போவதில்லை.."

"தெரியுதில்ல.. குளோஸ் யுவர் மவுத்.."

"ஓகே.. நீ சொல்லி நான் கேட்காமல் இருப்பேனா..?"

"கிரிஜா சொன்னாத்தான் கேட்க மாட்ட போல.."

"ஏன் கேட்க மாட்டேனாம்..? அவங்க என்னடா தப்பாச் சொல்லிட்டாங்க..?"

"'அவங்க..'ளா..? பிழைச்சுக்குவ.."

"என்னைப் பிழைக்க வைத்த தெய்வத்தாய்டா அவங்க.."

"பாருடா.. ஓவரா சாம்பிராணி காட்டற..? அந்தம்மா உன்னைத் தப்பாச் சொன்னாங்களேடா.."

"சொன்னாச் சொல்லிட்டுப் போகட்டும்.. என் அம்மா வயசில இருக்கிறவங்க ஒரு அட்வைஸைப் பண்ணினா நான் காது கொடுத்துக் கேட்க வேண்டாமாடா வாசு..?"

"ஓ.. நீ அப்படிக்கா வர்றயா..?"

"யெஸ் மை டியர் பிரண்ட்.."

"ஓகே.. ஓகே.."

காரை எஸ்.எஸ் கம்பெனியின் பார்க்கிங் ஏரியாவில் நிறுத்திவிட்டு நண்பர்கள் இருவரும் வரவேற்புப் பகுதிக்குச் சென்றார்கள்.. ரிசப்சனிஸ்ட்டிடம்.. அவர்கள் யார் என்பதைத் தெரிவித்தான் வாசுதேவன்..

"ஜஸ்ட் எ மினிட் சார்.."

ரிசப்சனிஸ்ட் ரோஜாவண்ண நிறத்தில் இருந்தாள்.. அரக்கு வண்ண பிரிண்டட் சேலையில் அமர்க்களமாக இருந்தவளைக் கருணாகரன்.. 'ஆ'வென பார்த்து வைக்க.. வாசுதேவன்..

"இப்படித்தான் கிரிஜா மேமைப் பார்த்து வைத்தியா..?" என்று கேட்டு வைத்தான்..

"டேய்.. அவங்க எனக்கு அம்மாடா.."

"இவங்க.."

"ஹி.. ஹி.. ச்சும்மாடா.."

போனை எடுத்து எஸ்.எஸ். கம்பெனியின் எம்.டியிடம் பேசிவிட்டு வைத்த ரிசப்சனிஸ்ட் அவர்களிடம் மரியாதையாக..

"அவர் எம்.டி இஸ் வெயிட்டிங் ஃபார் யு சார்.. ப்ளீஸ் கோ டு ஹிஸ் ரூம்.." என்று சொல்லியபடி அவர்களுடன் வந்து எம்.டியின் அறை வாசலில் விட்டுச் சென்றாள்..

"போறாளே.." சன்னமாகப் பாடினான் கருணாகரன்..

"நீயும் வேண்டும்ன்னாக் கூடச் சேர்ந்து போ.. ஐ ஹேவ் நோ அப்ஜெக்சன்.."

"என் லவ்வர் அப்ஜெக்ட் பண்ணுவாளேடா.."

"அப்ப வாயை மூடிக்கிட்டு என் பின்னால் வா.."

'ஞ.சுசீந்திரன் எம்.ஈ., எம்.பி.ஏ., மேனேஜிங் ரைடக்டர்' என்று பொறிக்கப் பட்டிருந்த கதவை நாசுக்காக இரண்டு விரல்களால் வாசுதேவன் தட்ட..

"கம் இன்.." என்ற இளமையும் கம்பீரமும் சேர்ந்த குரல் அவர்களை வரவேற்றது.. தணிகாசலத்தைப் போலவே..

சுழல் நாற்காலியில் சுழன்று திரும்பிய சுசீந்திரன் செக்கச் செவேல் என்று சிவந்த நிறத்தில் கவர்ச்சிகரமான அழகுடன் இருந்தான்..

"செம ஹேண்ட்சம்டா.." வாசுதேவனின் காதைக் கடித்தான் கருணாகரன்..

'மாதங்கிக்குப் பொருத்தமான மாப்பிள்ளைதான்..' ஒரு தமையனின் திருப்தி வாசுதேவனின் மனதில் வந்தது.

"சர்.. ஐ ஆம் வாசுதேவன்.. ஜி.எம். ஆஃப் டி.ஜி.எம் குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸ் அண்ட் ஹி இஸ் கருணாகரன் பெர்சனல் மேனேஜர்.." வாசுதேவன் அறிமுகப் படுத்திக் கொள்ள..

"வெல்கம் கை'ஸ்.. ப்ளீஸ் சிட்டவுன்.." என்றான் சுசீந்திரன்..

அவர்கள் அக்ரிமெண்டைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள்..

"அக்ரிமெண்ட் டைப் ஆகி ரெடியா இருக்கு.." சுசீந்திரன் அறிவுறுத்தினான்..

கையெழுத்துப் போட்டு விட்டுக் கிளம்பு என்ற மறைமுக அறிவுறுத்தலைப் புரிந்து கொள்ளாததைப் போல வாசுதேவன் தங்கள் கம்பெனிக்குத் தேவைப்படும் தயாரிப்புகளைப் பற்றியும்.. அவை தரமாக இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தான்.

"நாங்க எங்க புராடெக்ட்ஸில் ஹை-குவாலிட்டியை கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.." இறுக்கமான முகத்துடன் சொன்னான் சுசீந்திரன்..

"ஐ நோ இட் வெரி வெல் சார்.. திஸ் இஸ் மை டியூட்டி.. அக்ரிமெண்ட் சைன் ஆவதற்கு முன்னால் புராடெக்ட்ஸ் தயாராகும் இடத்தைப் பார்த்து அவற்றின் குவாலிட்டியை செக் பண்ண விரும்புகிறேன்.. டோன்ட் மிஸ்டேக் மி.."

வாசுதேவன் அழுத்தமான குரலில் அறிவித்ததில் சுசீந்திரனின் முகத்தில் கோபம் கலந்த வியப்பு வந்தது..

"ஐ ஆம் ஸோ பிஸி யு நோ.. பர்ஸ்ட் டைம்.. டி.ஜி.எம் கம்பெனியிடமிருந்து ஒரு ரிக்வஸ்ட் வந்திருக்கிறது.. அதை இக்னோர் பண்ண வேண்டாம்ன்னு நினைத்தேன்.."

"ஒன் ஸ்மால் கரெக்சன் சார்.. அது ரிக்வஸ்ட் இல்லை.. பிஸினெஸ் டீலிங்.."

வாசுதேவனின் அஞ்சாமை நிரம்பிய பதிலில் மறுபடியும் கோபம் கலந்த வியப்பை முகத்தில் காட்டிய சுசீந்திரன் போனை எடுத்துத் தன் பி.ஏவை அழைத்து..

"அக்ரிமெண்ட் ஃபைலை ஜி.எம்மிடம் கொடுத்து அவங்களை என் ரூமுக்கு இம்மீடியட்டா வரச் சொல்லுங்க.." என்று உத்தரவிட்டு விட்டு போனை வைத்தான்..

துளியும் சிரிப்பில்லாத கடின முகபாவனையுடன் வாசுதேவனைப் பார்த்தவன்..

"உங்களுடன் டைம் ஸ்பெண்ட் பண்ணி புராடெக்ட்ஸைக் காட்டி டெமான்ஸ்ட்ரேசன் பண்ண எனக்கு நேரமில்லை.. எங்க ஜி.எம் வருவாங்க.. இந்த பிஸினெஸ் அக்ரிமெண்டை அவங்களே டீல் பண்ணி சைன் பண்ணுவாங்க.." என்று சொன்னான்..

இனி இந்த ஒப்பந்தம் சம்பந்தமாக என்னைத் தொந்தரவு செய்யாதே என்று சொல்லாமல் அவன் சொல்வதைப் புரிந்து கொண்டான் கருணாகரன்.. வாசுதேவனைப் பார்த்தான்.. அவன் முகம் மாறாமல் உட்கார்ந்திருந்தான்.. எப்படித்தான் இப்படி உட்கார்ந்திருக் கிறானோ என்றிருந்தது கருணாகரனுக்கு..

'நானாயிருந்தா இம்மீடியட்டா ரியாக்ட் பண்ணிருவேன்..'

அறைக்கதவைத் தட்டாமல் திறந்து உள்ளே வந்த நபரைப் பார்த்ததும் அயர்ந்து போனான் வாசுதேவன்..

'இவளா..?'

"வாசு.. இந்தக் கம்பெனியில ரிசப்சனிஸ்ட்தான் அழகா இருக்கான்னு பார்த்தா. ஜி.எம் அதுக்கும் மேலே தூள் கிளப்புதுடா.. நம்ம கம்பெனியிலயும் இருக்குதுகளே.. வத்தலும், தொத்தலுமா.." நேரம் காலம் தெரியாமல்.. வாசுதேவனுக்கு வந்திருப்பவளைத் தெரியும் என்பதையும் தெரியாமல் முணுமுணுத்தான் கருணாகரன்..

"உங்க பெர்சனல் மேனேஜர் என்ன சொல்கிறார்..?" சுசீந்திரன் புருவங்களை உயர்த்தினான்..

"யு ஆர் வெரி ஹேண்ட்சம்ன்னு சொல்கிறார் சார்.."

கருணாகரன் சற்றுமுன் முணுமுணுத்ததை அப்போது தான் முணுமுணுத்ததாக மாற்றிச் சொல்லி நண்பனைக் காப்பாற்றினான் வாசுதேவன்..

சுசீந்திரனின் பாறை முகத்தில் லேசான இளக்கம் மின்னலென வந்து மறைந்தது.. கண்டிப்பான தோரணையுடன்..

"ஷி இஸ் சுசித்ரா.. அவர் ஜெனரல் மேனேஜர்.. இந்த செகண்டிலிருந்து இந்த பிஸினெஸ் டீலிங் இவங்க கைகளுக்கு மாறுகிறது.. இது சம்பந்தமான உங்களது அத்தனை கேள்விகளுக்கும் இவங்க பதில் சொல்வாங்க.. பதிலுக்கு இவங்களும் கொஸ்டின் பண்ணுவாங்க.. நீங்க கொடுக்கிற பதில்கள் திருப்தியாக இருந்தால் மட்டுமே அக்ரிமெண்டில் சைன் பண்ணுவாங்க.." என்று வந்து நின்றவளை அறிமுகப் படுத்தினான்..

யாரோ என்று திரும்பிப் பார்த்தவளின் விழிகள் வாசுதேவனைக் கண்டதும் அதிர்ச்சியாகின.. கலவரத்துடன் அவனைப் பார்த்தவள் அவளைத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ள வேண்டாம் என்று அவசர சமிக்ஞை செய்தாள்.. வாசுதேவனுக்குள் ஆயிரம்

கேள்விகள் சுழன்றன.. விடை தெரியாமல் அவன் மலைத்தான்..

"ஹாய் மேம்.. வி ஆர் கமிங் ஃபிரம் டி.ஜி.எம் குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸ்.. ஐ ஆம் ஜி.எம் அண்ட் ஹி இஸ் பெர்சனல் மேனேஜர்.."

அவள் கேட்டுக் கொண்டபடி முன் பின் அறிமுகமில்லாதவனைப் போல வாசுதேவன் பேசியதில் அவளது விழிகளில் இருந்த கலக்கம் காணாமல் போனது.. வாசுதேவன் பரிவு கொண்டான்..

அவள் கேட்டு அவன் மறுப்பானா..?

12

'சுசி' என்று காலையில் வாசுதேவனுக்கு அறிமுகமானவள்தான் இந்த சுசித்ராவா..? தனது தந்தையின் கம்பெனியில் அவள்வேலை பார்க்கிறாள் என்று சொன்னாளே.. அப்படியென்றால் இந்த எஸ்.எஸ் குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸின் பழைய எம்.டி செந்தில் நாதன்தான் இவளுடைய தந்தையா..? சுசீந்திரன் செந்தில் நாதனின் மகனென்று தணிகாசலம் சொன்னாரே.. இந்த சுசித்ரா சுசிந்திரனின் தங்கையா..?

'அப்படித்தான் இருக்கனும்.. சுசிந்திரன், சுசித்ரா.. பெயர்களே இவங்க இரண்டு பேரும் அண்ணன் தங்கைன்னு சொல்கிறதே.. அதோடு இத்தனை சின்ன வயதில் ஜெனரல் மேனேஜர் போஸ்ட்டுக்கு எப்படி வர முடியும்..?'

வாசுதேவனுக்குத் தலையைச் சுற்றியது.. இத்தனை உயர்ந்த இடத்தில் இருப்பவள் எதற்காக பல்லவியெனும் சுமக்கக் கூடாத சுமையைச் சுமந்து கொண்டிருக்கிறாள் என்று அவனுக்கு விளங்கவே இல்லை..

'அந்தப் பல்லவியைப் போய் அண்ணி, அண்ணின்னு கூப்பிடறாளே.. இவளோட அண்ணன் இங்கே

குண்டுக்கட்டா உட்கார்ந்திருக்கிறான்.. அந்த அண்ணன் யார்..? ஒருவேளை சுசீந்திரனுக்கும் மூத்தவனாக இருப்பானோ..?'

இருக்காது என்று திட்டவட்டமாக நினைத்தான் வாசுதேவன்.. அவனிடம் தணிகாசலம் மாதங்கியின் திருமணத்தைப் பற்றிப் பேசும்போது செந்தில் நாதனுக்கு 'ஒரே மகன்' என்று சொன்னாரே.. இன்னொரு மகன் இருந்திருந்தால் இரண்டாவது மகன் என்றல்லவா சொல்லியிருக்க வேண்டும்..?

தங்கமலை ரகசியத்தை விட இந்த மங்கையின் ரகசியம் வெகு சிக்கலாக இருக்கிறதே என்று தலை சுற்றியது வாசுதேவனுக்கு..

"சுசித்ரா.. டி.ஜி.எம் கம்பெனியின் ஜி.எம் நம்ம புராடெக்ட்ஸை செக் பண்ணனும்னு சொல்கிறார்.. அந்தந்த டிபார்ட்மெண்டுக்கு அழைத்துக் கொண்டு போய் காட்டி.. அக்ரிமெண்டைப் பற்றின ஃபைனல் டிசிசனை எடுங்க.."

அவனுடனான பேச்சு வார்த்தை அத்துடன் முடிந்து விட்டது என்பதைப் போல தலையை அசைத்தான் சுசிந்திரன்.. அதற்காகவே காத்திருந்த வாசுதேவன்..

"தேங்க் யு சார்.." என்று எழுந்து சுசிந்திரனிடம் கை குலுக்கி விடை பெற்று வெளியில் வந்தான்..

அவனுக்கு சுசித்ராவிடம் பேச வேண்டியிருந்தது.. அவளது விழிகளில் வந்த கலவரத்திற்கான காரணம் யாதென்று அறிய விரும்பினாலும்.. அதைக் குறித்த கேள்விகள் எதையும் கேட்காமல் சுசித்ராவின் அச்சத்தைப் போக்க விரும்பினான்.. அவளது வாழ்க்கையில் அவள் யாரைக் குறித்தும் பயப்படக்கூடாது.. முக்கியமாக அவனைக் குறித்து..

அவளைப் பார்த்தான்.. சுசிந்திரனின் அறையை விட்டு வெளியே வந்ததும் அவள் முகத்தில் படர்ந்த விடுதலையுணர்வைப் பார்த்தான்.. அவளது விழிகளில்

தெரிந்த அவனுக்கான நன்றியைப் பார்த்தான்.. அவளைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல இருந்தது..

'பூவினும் மெல்லிய பூங்கொடி..

பொன்னிறம் காட்டிடும் பைங்கிளி - சிறு

மாவிலை பின்னிய தோரணம் - இரு

மைவிழி நாடக காவியம்

அவள் வாழ்க.. தினம் வாழ்க - இந்த

ஏழை நெஞ்சின் கோவிலில் தெய்வப் பெண்ணாக..'

அவன் மனது பாடியது.. காலையில் அவளைக் கண்டதும் மனதில் மலர்ந்த பூவின் நறுமணம் அவனைத் தாக்கியதுதான்.. அப்போது தோன்றிய உல்லாசம் இப்போது தோன்றவில்லை.. எட்டாத உயரத்தில் கண்சிமிட்டும் வெந்நிலவை எட்டி நின்று ரசிக்கலாம்.. வர்ணிக்கலாம்.. அதன் அழகை ரசித்தபடி நிலாச்சோறு உண்ணலாம்.. அதைத் தொட்டு விட முடியுமா..?

கற்பனையில் மட்டுமே சாத்தியப்படும் ஒன்றுக்காக ஏங்கி நனவில் எதிரில் நிற்பவளின் மீது ஆசை வைத்து விடக் கூடாது..

சுசித்ரா அவனிடம் எதையோ சொல்லத் தவித்தாள்.. அருகிலிருந்த கருணாகரனை ஜாடையாகப் பார்த்தாள்.. வாசுதேவன் புரிந்து கொண்டான்.

"எங்களுக்குத் தேவைப்படும் புராடெக்ட்ஸ் தயாராகும் இடத்திற்குப் போகலாமா மேம்..? எங்க கம்பெனியின் பெர்சனல் மேனேஜர் இந்த அக்ரிமெண்டைப் படித்துப் பார்த்து சந்தேகங்கள் ஏதும் இருந்தால் நோட் பண்ணி வைத்துக் கொண்டிருக்கட்டும்.. டைம் ஸேவ் ஆகும்.." கருணாகரனைக் கழட்டி விட்டான்..

சுசித்ராவின் முகம் பிரகாசமடைந்தது..

"ஓ.. ஷ்யூர்.. என் பிரவின் கேபினில் இவர் உட்காரலாம்.. டவுட்ஸை அவங்க கிளியர் பண்ணத் தோதாக இருக்கும்.."

என்றவள் செல்போனில் தன் பிரவை வரச் சொன்னாள்..

"ஏண்டா.. நீ மட்டும் இந்த ஐஸ்கிரீம் பெண்ணோடு டிஸ்கஸ் பண்ணுகிற சாக்கில் கடலை வறுக்கப் போவ.. நான் தனியா உட்கார்ந்து இந்த உச்சி வெயிலில் அக்ரிமெண்டைப் படித்து மண்டை காயனுமா..?" கருணாகரன் அடிக்குரலில் அனலாக சீறினான்.

"ச்சும்மா துள்ளாதே.. காலாகாலத்தில் வேலை முடியனுமா வேண்டாமா..? இன்றைக்குப் பூராவும் இங்கேயே ஒப்பேத்தி விடலாம்ங்கிற முடிவோட இருக்கியா..?" சன்னக்குரலில் அதட்டினான் வாசுதேவன்..

"அடப்பாவி..! அப்படி நினைச்சு சந்தோசப் பட்டுத்தானே உன் பின்னால வந்தேன்.. ஆன் டியூட்டியில இன்றைக்கு ஒரு நாளைக் கடத்தி விட்டா நான் தப்பிச்சுக்குவேன்.."

"வேலையில இருந்தா..?"

"அந்தத் தப்பையெல்லாம் என்னைக்குடா பண்ணியிருக்கேன்..? எனக்கு சுப்பிரியர் நீதான்.. என் வேலையையும் சேர்த்து நீ பார்த்துக்குவியே.."

"இப்படியே சேரைத் தேய்த்துப் பிழைப்பை ஓட்டு.. வேலைக்குப் பயப்படலைன்னா வேற எதுக்குப் பயப்படற..?"

"கிரிஜாவை நினைத்துடா.."

"அவங்களைத் தாய்ன்னு சொன்ன..?"

"அது நாளையில இருந்து.."

"இன்னைக்கு என்னவோ..?"

"பேய்.."

"ஹா.. ஹா.."

அவர்கள் தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருந்ததால் அதைக் கவனிக்காமல் பிரவ வருகிறாளா என்று பார்த்துக் கொண்டிருந்த சுசித்ரா வாசுதேவனின் சிரிப்புச் சப்தத்தில் திரும்பினாள்.. அவனது சிரிப்பு அவளைக் கவர்ந்தது..

எப்போதும் முள்ளின் மீது நிற்பதைப் போன்றதொரு வேதனை கவ்வியிருந்த மனதிற்கு அவனது சிரிப்பு மருந்து தடவி விசிறி விட்டது.. லேசாகப் புன்னகைத்தவள்..

"உங்க ரெண்டு பேரையும் பார்த்தா ஜி.எம். பி.எம். மாதிரியே தெரியலை.." என்று குழந்தைத்தனமாகச் சொன்னாள்..

"வேற எப்படிங்க தோணுது.. உங்க கம்பெனியில கை வைக்க வந்த முகமூடிக் கொள்ளைக்காரங்களைப் போலத் தெரியுதா..?" குறும்பாகக் கேட்டான் வாசுதேவன்..

"நீங்க இருக்கீங்களே.." மனம் விட்டுச் சிரித்தாள் சுசித்ரா..

அவளது சிரிப்பைப் பரிவுடன் பார்த்தான் வாசுதேவன்.. அவள் யார் என்று இப்போதுதான் அவனுக்குத் தெரியும்.. காலையில் பக்கத்து விட்டுப் பிடாரியின் உறவுக்காரியாக அவள் அறிமுகமானாள்.. பிடாரியைப் பற்றியே அவனுக்கு ஏதும் தெரியாது எனும்போது உறவுக்காரியைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியுமா..? இப்போது சுசித்ரா என்று சுசிந்திரன் அறிமுகப் படுத்தியிருக்கா விட்டால் வாசுதேவன் அவளை 'சுசி' என்றுதான் நினைத்துக் கொண்டிருப்பான்..

ஆயினும் அவள் முகத்தின் சோகம் கலந்த வேதனை அவனைப் பாதிப்புக்குள்ளாக்கியது.. நெஞ்சைக் கிள்ளும் முகம் அவளது முகம்.. பால்நிலாவில் வேதனை படரலாமா..? நிலா முகம் ஒளிர்ந்து சிரிக்க வேண்டாமா..?

'இவளை எங்கே பார்த்தேன்..?' இதுவேறு ஊடே படுத்தி வைத்தது..

அவளது சோகம் போக்க விரும்பினான் வாசுதேவன்.. காரணம் எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும்.. அவனருகில் அவள் இருக்கும்போது சிரித்துக் கொண்டிருக்க வேண்டும்..

"பிரண்ட்லியாப் பேசிக்கிட்டு இருக்கீங்களே.. அதைச் சொன்னா.." சிரிப்பு மாறாமல் சொன்னாள் சுசித்ரா..

"பிரண்ட்ஸ் பிரண்ட்லியாத்தானே பேசிக்குவாங்க..? இவன் என்னோட பெஸ்ட் பிரண்டுங்க.. கருணாகரன்.. இவனும் நானும் ஒரே கம்பெனியில் வேலை பார்க்கிறது இவனுக்கு லக்.."

"உங்களுக்கு..?"

"என் சோகக் கதையைச் சொல்லத்தான் வேணுமா..?"

"மிஸ்டர் வாசுதேவன்.."

சுசித்ரா அவனை மிஸ்டர் போட்டு அழைத்தபடி கலகலத்து சிரித்தாள்.. கருணாகரன் நண்பனை முறைத்தான்..

'அடேய்.. சிநேகிதத் துரோகி..! நீ இவகிட்ட கடலை போடறதுக்கு என்னை ஜோக்கராக்கனுமா..?'

சுசித்ராவின் பி.ஏ வான நிர்மலா வேகமாக வந்து நின்றாள்.. மஞ்சள் வண்ண சுரிதாரில் இருந்தவளைப் பார்த்த கருணாகரனுக்கு 'மஞ்சக் காட்டு மைனா..' என்று பாட வேண்டும் போல வேகம் வந்தது.. அப்படிப் பாடி வைத்தால் அவள் அவனைக் கொஞ்சிக் கொஞ்சிப் போவாளா இல்லை கும்மாங் குத்துக் குத்திப் போவாளா என்ற சம்சயம் எழுந்ததால் வேகத்தை அடக்கிக் கொண்டான்..

"இப்ப உனக்கு இவங்க கேபினில் உட்கார்ந்து அக்ரிமெண்டை படித்துப் பார்த்து டிஸ்கஸ் பண்ணி டவுட்ஸைக் கிளியர் பண்ணிக்கிறதில எந்தவித அப்ஜெக்சனும் இருக்காதில்ல..?"

நண்பனை அறிந்து வைத்திருந்த வாசுதேவன் நமட்டுச் சிரிப்புடன் கேட்டான்..

"ஷ்யூர்.. ஷ்யூர்.." வேகமாக தலையாட்டி ஒப்புக் கொண்ட கருணாகரன்..

"அப்போதுதானே டைம் ஸேவ் ஆகும்..? நீ புராடெக்ட்ஸை செக் பண்ணிட்டு வா.. நான் அக்ரிமெண்டைப் படித்துப் பார்த்து இவங்களிடம் டிஸ்கஸ் பண்ணி டவுட்ஸை கிளியர்

பண்ணி வைக்கிறேன்.." என்று கெத்தாக முகத்தை வைத்துக் கொண்டான்..

இயல்பாக குனிவதைப் போல நண்பன் பக்கம் குனிந்த வாசுதேவன்..

"நீ ஒரு ஆணியையும் பிடுங்க வேண்டாம்.. நான் அக்ரிமெண்டைத் தரோவாப் படித்து செக் பண்ணிட்டேன்.. அது சம்பந்தமான டிஸ்கஸை நான் பார்த்துக்குவேன்.. நீ ஏஸி ரூமில் ரெஸ்ட் எடு.. புரிந்ததா..?" என்று எடுத்துச் சொன்னான்..

"ஹி.. ஹி.. சும்மா ஃபிலிம் காட்டினேன் மச்சி.. நீ சொன்னாலும் சொல்லலைன்னாலும் நான் அதைத்தான் செய்வேன்.." கருணாகரன் அசடு வழிந்தான்..

ஒரு வழியாக நண்பனைத் தவிர்த்து விட்டு சுசித்ராவுடன் நடந்த வாசுதேவன்..

"இப்போச் சொல்லுங்க.. ஏன் என்னைப் பார்த்து பயந்தீங்க..?" என்று மிருதுவாக வினவினான்..

சுசித்ரா தயங்கினாள்... வாசுதேவனின் மனம் வலித்தது.. மிகப் பெரிய சாம்ராஜ்யத்தின் இளவரசி அவள்.. முக்கிய பதவியை வசிப்பவள்.. தலைநிமிர்ந்து கம்பீரமாக நின்று எதிராளியின் முகத்தை நேருக்கு நேர் பார்த்து அதிகார தோரணையில் பேச வேண்டாமா..? இப்படியா அஞ்சி நடுங்குவது..?

ஆளுமை என்பது சாட்டையை எடுத்து அடித்து அடிமைப் படுத்துவதல்ல.. அஞ்சாமையுடன் நிமிர்ந்து நிற்பது.. வாசுதேவன் யார்..? அவளைப் போல அவனும் ஒரு கம்பெனியின் ஜி.எம் பதவியில் இருந்தாலும் அவளைப் போல கோடிஸ்வரக் குடும்பத்தில் பிறந்தவனல்ல.. மேல்தட்டு வர்க்கம் என்பது வேறு.. உயர்தர மத்திய வர்க்கம் என்பது வேறு.. அவன் அண்ணாந்து பார்க்கும் உயரத்தில் இருப்பவள் அவனைப் பார்த்து ஏன் பயப்படுகிறாள்..? இதனூடே அவனுக்கு அவளை எங்கேயோ பார்த்ததைப் போன்ற ஓர் மயக்கம்.. ஏன் ஏற்பட்டுத் தொலைக்கிறது..?

"வந்து.." அவள் மென்று விழுங்கினாள்.

"அதான் வந்துட்டிங்கள்ல... சொல்லுங்க..." இலகுவாக அவன் கேட்டான்..

"அண்ணாவுக்கு பிடிக்காது.." மெல்லிய குரலில் சொன்னாள்..

"அண்ணனா..? அது யார்..?" வாசுதேவன் புரியாதவனைப் போல நடித்தான்..

"இப்ப நீங்க பேசிக்கிட்டு இருந்தீங்களே.." அவள் விளக்க முற்பட்டாள்..

"எம்.டி சுசீந்தரன் சாரிடம் பேசிக் கொண்டிருந்தேன்.."

"அவர்தான் என் அண்ணன்.." சுசித்ராவின் கண்கள் கலங்கின..

'இதற்கு ஏன் கண் கலங்க வேண்டும்..?'

சுசித்ரா புரியாத ஒரு புதிராக இருந்தாள்.. கூடவே அவள் மென்மை ததும்பும் மலராகவும் இருந்ததில் வாசுதேவன் புதிருக்கான விடைகளைத் தேட முற்பட்டான்.

"அண்ணன் ஒர் கோவில்ன்னு தமிழ் சினிமாவே வந்திருக்குதுங்க.. நீங்க என்னடான்னா அவர் உங்க அண்ணன்னு சொல்லிட்டு கண்கலங்கறீங்க.. அவரைப் பார்த்தா சண்டைக்கார அண்ணன் போல தெரியலையே.."

"அவர் சண்டைக்காரரில்லை.. அதுதான் கஷ்டமே.."

'என்னடா இது..'

சுசித்ரா புதிர்களின் கூடாரம் என்று நொந்து போனான் அவன்.. அவள் மனதின் ஆழ்சுழல்களை இனம் கண்டு அவளை வெளிக்கொணர்வது சிரமம் என்று மனதிற்குத் தோன்றியது.. இதுவேண்டாத வேலை என்று மட்டும் தோன்றவில்லை.. இப்போதைக்கு அவளை எதுவும் கேட்க வேண்டாம் என்று மட்டும் தோன்றியது.. அவளது மன பயத்திலிருந்து அவள் வெளிவந்தால் போதும்.. அதை மட்டுமே அவன் செய்ய வேண்டும்..

'ஒரு நாளுக்குள்தான் எத்தனை நிகழ்வுகள்..'

காலையில்தான் அவளை முதன் முறையாக சந்தித்தான்.. நண்பகலுக்குள் அவன் மனதிற்கு அவள் நெருக்கமாகி விட்டாள்..

'அதிசயிக்கத்தக்க நிகழ்வுகளுல் இதுவும் ஒன்று..'

"அண்ணாவுக்கு நான் அண்ணிக்காக வீடு பார்த்து குடி வைப்பதும் அவங்க பொறுப்பை ஏற்றுக் கொள்வதும் பிடிக்காது.."

"ஏன்..?"

சுசித்ரா பதில் சொல்வதைத் தவிர்த்தாள்.. ஏன் என்ற கேள்விக்கான விடை அவளுக்கே தெரியாததைப் போல உதடுகள் துடிக்க வானத்தைப் பார்த்தாள்.. ஏன் என்ற ஒற்றை வார்த்தைக்கான பதில்கள் ஓராயிரமாக இருக்கக் கூடும் என்று அவன் மனதுக்குப் பட்டது.. சிலந்தி வலைக்குள் தெரிந்தே மாட்டிக் கொண்ட சிறு பூச்சியின் நிலை போல அவளது நிலைமை இருந்தது.. அந்த நிலையிலும் அவளை எங்கோ பார்த்ததைப் போல இருந்து தொலைத்தது..

ஏன் மாட்டிக் கொண்டாள்..? அதைவிட அவள் இப்படிப்பட்ட சிக்கலில் மாட்டியிருக்கிறாள் என்று தெரிந்தும் அவளது குடும்பம் எதற்காக அவளை மீட்டெடுக்க முயலவில்லை..

"அண்ணின்னு சொல்கிறீங்களே.. உங்களுக்கு அண்ணின்னா உங்க அண்ணனுக்கும் அவங்க அண்ணிதானே..?"

"வாட்..?"

கேட்கக் கூடாததை கேட்டு விட்டதைப் போல விதிர்த்து வியர்த்துப் போனாள் சுசித்ரா.. அவளது விதிர்ப்புக்குக் காரணம் புரியாமல்.

"நான் தப்பா எதுவும் கேட்டு விட்டேனா..?" என்று புருவங்களைச் சுருக்கினான் வாசுதேவன்..

"பல்லவி அண்ணி எங்களுக்கு ரிலேட்டிவ் இல்லைங்க.. எனக்கு ஒரு அண்ணன்தான்.. அவர் சுசிந்திரன்தான்.."

சுசித்ரா என்னவோ தெளிவாக திட்டவட்டமாகத்தான் இதைக் கூறினாள்... கேட்டுக் கொண்டிருந்த வாசுதேவன்தான் குழம்பிப் போனான்.. இதற்கு அர்த்தம்தான் என்ன..?

# 13

அடித்துப் போட்டதைப் போல உறங்கிக் கொண்டிருந்தான் வாசுதேவன்.. அந்த வாரம் முழுவதும் நிற்க நேரமில்லாத வேலை.. கால்களில் சக்கரம் கட்டிக் கொண்டு ஓடிக் கொண்டிருக்கிறான் என்று சப்தம் போட்டு அவனை சாப்பிட வைத்துக் கொண்டிருந்தாள் கோதாவரி.. அப்போதும் அவனுக்கு ஊட்டி விடத்தான் வேண்டியிருந்தது.. ஜெட் வேகத்தில் குளித்து முடித்து வருபவன் உடை மாற்றி முடிப்பதற்குள் அவனது வாயில் காலை டிபனைத் திணித்தாக வேண்டும்..

அவன் பின்னாலே டிபன் தட்டுடன் சுற்றிக் கொண்டிருக்கும் கோதாவரியைப் பார்த்துப் பாவப்பட்ட வசுமதி..

"கொடுங்கம்மா.. நான் ஊட்டி விடறேன்.." என்று கேட்டுப் பார்த்தாள்..

"வேண்டாம்டி.. நீயே வயிற்றுப் பிள்ளைக்காரி.. உன்னைக் கஷ்டப்படுத்த வேண்டாம்ன்னு என்பிள்ளை வெறும் வயிறா ஆபிசுக்கு ஓடிருவான்.." கோதாவரி மறுத்து விட்டாள்..

தள்ளாமையிலும் பிள்ளைகளுக்கு சேவை செய்யும் இயல்பு தாயின் இயல்பு..

"ஐய்யே.. மாமா என்ன குத்திப் பாப்பாவா..? நேக்கு அம்மா ஊத்தறத் போல மாமாவுக்கு ஊத்தி விதறேங்களே.." நிஷாப் பாப்பா கைகொட்டிச் சிரித்தாள்..

மூன்று வயதுதான் ஆகிறது.. மழலை இன்னும் மாறவில்லை.. 'ட' என்ற எழுத்தை 'த' என்று உச்சரிப்பாள்..

"உங்கம்மா உனக்கு ஊட்டி விட்டா எங்கம்மா எனக்கு ஊட்டி விட மாட்டாங்களா..?" ஓடுகிற ஓட்டத்திலும் மறக்காமல் தமக்கை மகளைக் கொஞ்சி விட்டு ஓடி விடுவான் வாசுதேவன்..

அன்று ஞாயிற்றுக்கிழமை.. அலுவலகம் செல்ல அரக்கப் பறக்க எழுந்து கொள்ள வேண்டியதில்லை என்பது மனதில்

ஆழப் பதிந்து விட்டிருந்ததினால் வாசுதேவன் தூக்கத்தில் அமிழ்ந்து விட ஒரு வார காலமாக விலகியிருந்த கனவு வந்து அவன் மீது கவிழ்ந்தது..

கனவில் அந்தத் தேவதை வந்தாள்.. பால் நுரை பொங்கும் அருவியின் ஓரமாக இருந்த பாறையின் மீது நின்று சிரித்தாள்.. காலளவு கருங்கூந்தல் தோகை போல விரிந்து காற்றில் அலைபாய திரும்பி அவன் முகம் பார்த்தாள்.. நிலவு முகம் கொண்ட அந்த தேவதையைக் கண்டவன் திடுக்கிட்டு எழுந்தான்..

'சுசித்ரா..!'

பனி மூட்டத்திலிருந்து வெளி வந்ததைப் போல சிலிர்த்துப் போனான்.. பனித்திரை விலகி விட்டது.. கனவில் கண்ட தேவதையின் சாயலில் சுசித்ரா இருந்ததினால்தான் இவனுக்கு அவளை எங்கேயோ பார்த்ததைப் போல இருந்திருக்கிறது..

'இது நிஜம்தானா..?'

நம்ப முடியாமல் திகைத்தான்.. கதைகளில்தான் அவன் இதுபோன்ற கனவுகளைப் படித்திருக்கிறான்.. நிஜத்தில் அது சாத்தியமா..? கனவில் வரும் தேவதையை அவன் நேரில் காண்பது எப்படி..?

கருணாகரனிடம் அவன் சொன்ன போது அவன் வாசுதேவனை மேலும் கீழும் பார்த்து வைத்து..

"ஆர் யு ஆல்ரைட்..?" என்று கேட்டு வைத்தான்..

அவனது பார்வை வாசுதேவனின் மனநிலையைச் சந்தேகிக்கும் பார்வையாக இருந்தது..

"அறைஞ்சேன்னா பாரு.." அவனது பார்வையைத் தாங்க முடியாமல் வெடித்தான் வாசுதேவன்..

"கண்ட்ரோல் யுவர் ஷெல்ப் வாசு.. ஆக்சுவலா இதைப்போல கேணத்தனமா நான்தான் பேசுவேன்.. இப்ப நீ பேசறயா.. கன்பியூஸ் ஆகுது.. இப்படியெல்லாம் பினாத்தற ஆளில்லையே நீ.. அதுதான் டவுட்டா இருக்கு.."

"அறிவு கெட்டவனே.. எனக்குத் தேவதைக் கனவு வருதுன்னு உன்கிட்ட நான் சொன்னதே இல்லையா..?"

"சொல்லியிருக்கதான்.. இல்லேன்னு நான் சொன்னேனா..?"

"சொல்லித்தான் பாரேன்.."

"எதுக்கு..? கை கால் எழும்புகளை சேதாரம் பண்ணிக்கிட்டு புத்தூருக்குப் போய் படுத்துக்கிறதுக்கா..?"

"அந்த பயம் இருக்கில்ல.. வாயை அடக்கு.."

"இது அடங்காத வாய்டா வாசு.. அடி வாங்கினாலும் அடங்காது.. நீ கனவில தேவதை மாதிரி ஒரு பொண்ணு வர்றான்னு சொன்ன.. கேட்டுக்கிட்டேன்.. வாலிப வயசு.. வயசுக் கோளாறு.. இந்த வயசில தேவதைக் கனவுக வரலைன்னாத்தான் ஆச்சரியப்படனும்.. ஆனா பாருடா வாசு.. நீ தேவதைக் கனவோடு நிறுத்திக்காம, அந்த தேவதைதான் இந்த சுசித்ரான்னு சாதிக்கிற பாரு.. அங்கேதான் இடிக்குது.."

"நான் பொய் சொல்கிறேன்னு சொல்கிறயா..?"

கருணாகரன் ஆமாம் என்று சொல்லி அடி வாங்கி விழவுமில்லை.. இல்லை என்று சொல்லி நண்பனின் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள முன் வரவும் இல்லை.. எதுவும் சொல்லாமல் நண்பனை விசித்திரமாகப் பார்த்து வைத்து சோதித்து வைத்தான்.. போடா என்று விட்டு விட்டான் வாசுதேவன்.. அவனது கனவில் வந்த தேவதை சுசித்ராதான் என்று கருணாகரனுக்கு இவன் நிரூபிக்க வேண்டிய அவசியம்தான் என்ன..?

சில உணர்வுகள் ஆராதனைக்குரியவை.. அவற்றை மனதுக்குள் பூட்டிப் பொக்கிசம் போல பாதுகாத்துப் போற்ற வேண்டும்.. சுசித்ரா தேவதைப் பெண்.. இதில் வாசுதேவனுக்குத் துளியளவும் சந்தேகம் இல்லை.. அவளது பயமும்.. தயக்கமும்.. இமைகள் படபடக்க எங்கோ தொலைதூர தொடுவானைத் துழாவும் அவளது சோகப் பார்வையும்.. எதையோ சொல்லத் துடிக்கும் இதழ்களும்..

அதைச் சொல்ல முடியாமல் தவிக்கும் தவிப்பும் என அவளை நினைத்தாலே அவன் மனதை ஏதோ செய்தது..

"எனக்கு ஒரே அண்ணன்தான்.. அவர் சுசிந்திரன்தான்.."

அன்று அவள் சொன்னபோது புரியாமல் குழம்பினாலும் அவன் என்ன ஏது என்று அவளைக் குடைந்து குடைந்து கேள்வி கேட்கவில்லை.. ஒரு சிறு பார்வையோடு மௌனித்து விட்டான்.. அவனது மௌனம் அவளைப் பாதித்திருக்க வேண்டும்.. தயக்கத்துடன்..

"அவங்க என் பொறுப்பில் இருக்கிறாங்க.. இதைத்தான் என்னால் சொல்ல முடியும்.." என்றாள்..

"ஓ.." இதற்கு மேல் எதையும் அவன் சொல்லவில்லை.. உதட்டைக் குவித்து ஓர் 'ஓ' போட்டதோடு சரி..

"டாடிக்கும், அண்ணாவுக்கும் அவங்க பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டதில் விருப்பமில்லை.."

"ரிலேட்டிவ் இல்லைங்கறிங்க.. பல்லவி எப்படிப்பட்ட கேரக்டர் உள்ள லேடின்னு எங்க ஏரியாவுக்கே தெரியும்.. உங்களுக்கும் அவங்களுக்கும் கனைக்ட் இருக்கிறதே உலக மகா அதிசயமாக எனக்கு இருக்கு.. நீங்க எங்கே.. அவங்க எங்கே..? மல்லிகைப் பூவுக்கு எருக்கம்பூ உறவா..? கேட்கவே சகிக்கலை.. எனக்கே இப்படியிருக்கும் போது உங்க டாடிக்கும் அண்ணனுக்கும் எப்படி இருக்கும்..?"

வாசுதேவனின் கேள்வி அவளைத் தாக்கியிருக்க வேண்டும்.. இமைமூடி ஓர் நொடி நின்றவள்..

"எந்த உறவையும் நானா ஏற்படுத்திக்கலை மிஸ்டர் வாசுதேவன்.. தேடிப் போகவுமில்லை.. தானா வந்து என்னை மீள முடியாத பெரும் சுழலில் சிக்க வைத்து விட்டது.." என்று விசனப் பட்டாள்..

"தீர்க்க முடியாத சிக்கல்ன்னோ.. மீள முடியாத பெருஞ் சுழல்ன்னோ எதுவுமே இல்லை.. மீள நீங்க டிரை பண்ணலை.. தட் இஸ் தி மேட்டர்.."

அழுத்தமாகச் சொன்னான் வாசுதேவன்.. அவள் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள்..

"அண்ணாவும் டாடியும் சொல்கிற அதே வார்த்தைகளை அப்படியே சொல்கிறீங்க மிஸ்டர் வாசுதேவன்.."

"அக்கறை இருக்கிறவங்க இதைத்தான் சொல்வாங்க மேம்.."

"மேம்ன்னு கூப்பிட வேண்டாமே.. கால் மி சுசித்ரா.."

"வித் பிளஷர்.."

வரிசைப் பற்கள் தெரிய அவன் சிரித்த நேர்த்தியில் தெறித்து விழுந்த வசீகரம் சுசித்ராவை ஈர்த்தது.. அவனது பரிவான பார்வையும்.. அவளது மனம் புரிந்து நடந்து கொள்ளும் இணக்கமும்.. இதமான பேச்சும் அவளுக்கு மிகப் பெரும் ஆறுதலாக இருந்தன.. அவனை யாரோ, எவரோ என்று நினைக்க முடியவில்லை.. நெடுநாள் பழகிய நண்பனைப் போல, நெருங்கிய உறவினனைப் போல தோன்றியது.. சுமைதாங்கியாய் மனதில் பாரத்தைச் சுமந்து கொண்டிருந்தவளுக்கு அந்தச் சுமைகளை இறக்கி வைத்து இளைப்பாறத் தோன்றியது விந்தையிலும் விந்தை..

"அம்மாவும் அழுகிறாங்க.." எவரிடமோ சொல்வதைப் போலச் சொன்னாள்..

திசை தெரியாமல் பறந்து கொண்டிருக்கும் பறவையின் சிறகசைவைப் போலிருந்தது அவளது பேச்சு.. குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டான் வாசுதேவன்.. மறைத்து வைக்கப் பட்டிருக்கும் உணர்வுகளை வெளிக் கொணர்வது என்பது மிகச் சிரமமானது.. அவை தானாக வெளி வரும் போது தடுக்கக் கூடாது.. வாசுதேவனின் 'ம்' என்ற ஒற்றை எழுத்து உச்சரிப்புக்கூட தடை போடும் அணைக்கட்டாக மாறி விடக் கூடும்..

"டாடியும், அண்ணாவும் என்னிடம் சரியாகப் பேசுவதில்லை.. இப்போ அண்ணன் பேசினாரே.. அது போல்தான் கம்பெனி சம்பந்தமாக ஒரு ஜி.எம்மிடம் என்ன

சொல்வாரோ, அதை மட்டும் சொல்வார்.. டாடி இதையும் சொல்வதில்லை.. அம்மா மட்டும்தான் எப்போதும் போலப் பேசுவாங்க.. திட்டுவாங்க.. அழுவாங்க.. என்னை நேரா நேரத்திற்கு சாப்பிட வைத்துத் தூங்க வைத்துன்னு கண்ணுக்குள் வைத்துக் கவனித்துக்குவாங்க.. எனக்காக புது டிரஸ், ஜ்வல்ஸ் எடுக்கிறது.. பாக்கெட் மணி கொடுக்கிறதுன்னு எல்லாத்தையும் பார்த்துப் பார்த்துச் செய்வாங்க.."

"அம்மான்னா அப்படித்தான்.."

கோதாவரியின் நினைவில் கூறினான் வாசுதேவன்.. கோதாவரியும் அப்படித்தான்.. சுசித்ராவின் அம்மாவைப் போலப் பெற்ற பிள்ளைகளைத் தாங்கி வளர்த்தாள்..

"ஷ்யூர்.. அம்மா கேர் எடுத்துக்கிறதினாலதான் நான் கொஞ்சம் சமாளிக்க முடியுது.."

"நீங்க இந்தக் கம்பெனியோட ஜி.எம். சேலரி இரண்டு லட்சம்.. இந்தப் பணம் போதாதுன்னா அம்மாவிடம் பாக்கெட் மணி வாங்கறீங்க..?"

"எப்படிங்க போதும்..? அதுதான் மார்னிங்கே சொன்னேனே.. அண்ணி குடியிருக்கும் வீட்டுக்கான ரெண்ட்.. அவங்க காருக்கான டியூ.. அவங்க செலவுக்கு கொடுக்கும் ஒன் லேக்ஸ்.. இரண்டு லட்சத்தில ஒற்றை ரூபாய்கூட மிஞ்சாதுங்க.. இதில் நான் எனக்கான செலவுக்கு என்ன செய்வது..? காருக்கு பெட்ரோல் போடவே பணம் இருக்காது.. இதில் புது டிரஸ், ஜ்வல்ஸ், கைச்செலவுக்குன்னு பணத்துக்கு என்ன செய்கிறது..?"

'இவள் கோடிஸ்வரி..! எஸ்.எஸ். கம்பெனியின் எம்.டியின் தங்கை.. என்று யாரிடம் சொன்னாலும் நம்ப மாட்டார்கள்..'

சுசித்ரா பாடிய பஞ்சப் பாட்டில் வாசுதேவனுக்கே கோபம் பொத்துக் கொண்டு வந்தது என்றால் அவளைப் பெற்றவருக்கும் கூடப் பிறந்தவனுக்கும் எப்படி இருக்கும்..?

"கஷ்டம்தான்.." பல்லைக் கடித்தான்..

"ரொம்பக் கஷ்டம்ங்க.." அவள் சோகமாக சொன்னாள்..

"சத்தமாகச் சொல்லாதீங்க.. நான்கு பேருக்கு கேட்டு விடப் போகிறது.. நீங்க இந்தக் கம்பெனிக்கு எம்.டி.."

"அது அண்ணன்ங்க.."

"நீங்க அவருடைய தங்கைங்க.."

"என்னவோ போங்க.. ஒவ்வொரு மாதத்தையும் கடத்துவது உன்பாடு, என் பாடுன்னு ஆகி விடுகிறது.."

'இவளுக்கு இந்தச் சுமை தேவைதானா..?'

வாசுதேவனின் மனதில் கோபம் கனன்றது.. பல்லவி அவனது மனக் கண்களில் வந்தாள்.. ஆரோக்கியமாக விளையாட்டு வீராங்கனை போன்ற உடல் வாகுடன் இருந்தாள்..

'உழைச்சுப் பிழைக்கிறதுக்கு என்ன..? பாவம் இந்தச் சின்னப்பெண்.. இவள் தோள்களில் சவாரி செய்ய எப்படித்தான் மனது வருகிறதோ.. கொடுத்துக் கிடுத்து வைத்திருக்கிறாளா..?'

இதைக் காலையிலேயே சுசித்ராவிடம் கேட்டு விட்டானே.. அவள் வெறுமையான பார்வையுடன் 'விதி' என்றாளே.. இவன்கூடக் காலக் கொடுமை என்று நினைத்துக் கொண்டானே..

சுசித்ராவைப் பார்த்தான்.. யூனிபார்ம் மாட்டி விட்டால் அச்சு அசல் பள்ளிச் சிறுமியேதான்..

'பாரம் சுமக்கிற வயதா இது..? வாழ்க்கையை சந்தோசமாக சிறகடித்துப் பறந்து வாழ வேண்டிய வயது..'

"ஒற்றைப் பொம்பளைக்கு எதுக்குங்க இவ்வளவு பெரிய தனி வீடு..? வசதியா வாழ்ந்தவங்கன்னு சொல்லாதீங்க.. அப்படி வாழ்ந்தவங்க சொந்தமா ஒரு

வீடு இல்லாமக் கூட வாழ்ந்தாங்களா..? கேட்கிறவங்க கேணையா இருந்தா கேழ்வரகில் கூட நெய் எடுக்கலாம்ன்னு சொல்வாங்க.."

அதை சுசித்ராவும் யோசித்திருக்கிறாள்தானே.. என்ன ஒன்று.. வாசுதேவன் சுசித்ராவிடம் கேட்பதைப் போல சுசித்ராவால் பல்லவியிடம் கேள்வி கேட்டு விடமுடியாது.. அவள் அழுது ஆகாத்தியம் பண்ணி மயக்கம் போட்டு விடுவாள்.. அதற்கு மருத்துவமனைச் செலவையும் இவள்தான் பார்க்க வேண்டும்.. எதற்கு அந்த இழுவையெல்லாம் என்று அமைதி காத்து விடுவாள்..

"வாயைத் திறந்தா பீட்டர்தான்.. ஏதாச்சும் கால் செண்டர்ல வேலைக்குச் சேர்த்துவிட வேண்டியதுதானே.. தன் உழைப்பில் பிழைக்கட்டுமே.. சிங்கிள் பெட்ரூம் அபார்ட்மெண்ட் போதாதா..? ஸ்கூட்டியில டிராவல் பண்ணினா ஆகாதா..?"

வாசுதேவன் சொல்லச் சொல்லக் கேட்க நன்றாகத்தான் இருந்தது.. இதையெல்லாம் பல்லவியிடம் சொல்லும் தைரியம்தான் அவளுக்கு இல்லை.. மூன்று படுக்கையறைகளைக் கொண்ட அபார்ட்மெண்டில் குடியிருக்கலாமே என்று சொன்னதற்கே பல்லவி சண்டைக்கு வந்து விட்டாள்..

'அண்ணியாவது.. சிங்கிள் பெட்ரூம் அபார்ட்மெண்டில் இருப்பதாவது..'

14

அன்றைய வேலையைக் குறைவின்றி முடித்து விட்டுத்தான் வாசுதேவன் திரும்பினான்.. டி.ஜி.எம் குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸீக்கு வேண்டிய பொருள்களைத் தயாரிக்கும் இடத்திற்கே சென்று மெஷின்களை ஆராய்ந்தான்..

"இதை ஏன் செக் பண்றீங்க..?" என்ற சுசித்ராவின் கேள்விக்கு..

"மெஷின் ரிப்பேர்ன்னு புராடக்ட்ஸை டெலிவரி பண்ண நீங்க டிலே பண்ணி விடக் கூடாதில்ல.." என்று விளக்கம்

சொன்னான்..

"அத்தனையும் ஃபாரின் இம்போர்ட்டட் மெஷின்ஸ்.."

"நம்ம ஊர் மெஷினும் பெட்டரா வொர்க் பண்ணும்தான்.. அது ரிப்பேரில்லாம குட் கண்டிசன்ல இருக்கனும்.. தட்ஸ் ஆல்.."

"நீங்க எஸ்.எஸ் கம்பெனியில நின்று பேசிக்கிட்டு இருக்கீங்க மிஸ்டர்... மைண்ட் இட்.."

"ஸோ வாட்..? எங்க டி.ஜி.எம். கம்பெனி மட்டும் குறைந்ததா என்ன..? அக்ரிமெண்ட் போடப் போகிறோம் மேம்.. செக் பண்ண வேண்டியது என் டியூட்டி.."

"கர்ம வீரர்தான் போங்க.. இப்படிக் கடமை, கண்ணியம், கட்டுப்பாடுன்னு தெறிக்க விடற சின்சீயர் ஜி.எம்மா நீங்க..? ஐ கான்ட் பிலிவ் இட்.."

"ஏன்.. ஏன்.. ஏன் நம்ப முடியல..?"

"காலையில் உங்களைக் கண்டவுடன் பக்கா ரௌடின்னு நினைச்சேன்.."

"பல்லவி மாதிரி மாதர்குல மாணிக்கம், மங்கையர் திலகமிடம் பேசிக்கிட்டு நின்றா என்னை வேறு எப்படி நினைப்பீங்க..?"

அவனது பேச்சை ரசித்துச் சிரித்தாள் சுசித்ரா.. அவனுடன் பேசும் போது அவள் அடிக்கடி சிரிக்கிறாள் என்பதை தொழிலாளர்கள் கவனித்துத் தங்களுக்குள் தாழ்ந்த குரலில் அதுபற்றிப் பேசிக் கொண்டார்கள்..

வாசுதேவன் அது குறித்துக் கவலை கொள்ளவில்லை.. மரியாதை கலந்த உரையாடலில் சிரித்தால் அது என்ன பெரும் குற்றமா..?

அவன் தயாரிக்கப் பட்டிருந்த பொருள்களின் தரத்தை சரி பார்த்தான்..

"இப்ப மட்டும் அண்ணன் வந்து உங்களைப் பார்க்கனும்.."

அந்தக் காட்சியை மனதில் நினைத்துச் சிரித்துத் தீர்த்தாள் சுசித்ரா.. அவளது சிரிப்புக்கும் அவனுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்பதைப் போல அவன் முகத்தை வைத்துக் கொண்ட தினுசில் அவளது சிரிப்பு அதிகரித்தது..

'நீ சிரித்தால் தீபாவளி..' அவனது மனம் பாடியது..

அன்றையப் பொழுதைப் போன்ற அருமையான பொழுது வேறேதும் இல்லை என்று அவனது மனம் கூவியது.. பல்லவியைப் பற்றிப் பேசினாலே அவளது முகம் கூம்பி விடுகிறது என்பதினால் அவன் பல்லவியைப் பற்றிப் பேசவே இல்லை.. மலர்கள் மணம் பரப்புவதற்காக.. கூம்புவதற்காக அல்ல..

தயாரிப்புக்களைச் சரி பார்த்தாகி விட்டது.. இனி அக்ரிமெண்டை சரிபார்த்துக் கையெழுத்திட்டு விட்டால் அவன் வந்த வேலை முடிந்து விடும்..

தொழிற்சாலையிலிருந்து நிர்வாகப் பகுதிக்குச் செல்லும் வழி அழகான பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்டு இருபுறமும் பூச்செடிகளுடன் இருந்தது.. இருவரும் அதில் நடந்தபோது பூங்காவில் நடந்து செல்வதைப் போல உணர்ந்தான் வாசுதேவன்.. இதோ, இப்போது நிர்வாகப் பகுதி வந்து விடும்.. ஏஸியின் இதமான சூழலில் நிர்மலாவிடம் கடலை வறுத்துக் கொண்டிருக்கும் கருணாகரனை அணுகி விடுவார்கள்.. அதன்பின் தனிமையில் பேச முடியாது..

அவளது அலைபேசி எண்ணை அறிந்து கொள்ளாத நிலையில் அவளது பயத்தைத் தவிர்க்கத் தான் சொல்ல வேண்டியதை வேகமாக சொல்ல ஆரம்பித்தான் வாசுதேவன்..

'கண்டேன் சீதையை..' என்று ஹனுமான் இரண்டே வார்த்தைகளில் ராமபிரானின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்து மனதுக்கு அமைதியை வழங்கியதைப் போல..

"டோன்ட் வொர்ரி.." என்று புன்னகைத்தான்..

"தேங்க்ஸ்.." மனதார நன்றி சொன்னாள் சுசித்ரா..

"நன்றியெல்லாம் பெரிய வார்த்தைங்க.. உங்களோட பெர்சனலில் நான் இண்டர்பியர் ஆக மாட்டேன்.. தட்ஸ் ஆல்.. அந்தப் பல்லவியை எங்க தெருவில் குடி வைத்திருக்கீங்க, அவங்களைப் பார்க்க நீங்க வந்து போகிறீங்கன்னு உங்க அண்ணனிடம் சொல்லவே மாட்டேன்.."

"அப்ப.. டாடியிடம் சொல்லிருவீங்களா..?"

"காமெடி..? இந்த ரண களத்திலும் ஜோக்கடிக்க டிரை பண்றீங்க பாருங்க.. அதுக்கு உங்களைப் பாராட்டியே ஆகனும்.. உங்க டாடி என்னங்க.. உங்க ஃபேமிலியில யார் கேட்டாலும் சொல்ல மாட்டேன்.. போதுமா..?"

"இப்போதைக்கு இது போதும்.."

சுசித்ரா விளையாட்டாக தலையை ஆட்டிச் சிரித்தபோது முகத்தில் விழுந்த முடி மேகம் மறைத்த நிலவை அடையாளம் காட்டியது.. அதை விலக்கி விட்டுக் கொண்டாள்.. கழிந்து கொண்டிருந்த மணித்துளிகளில் கரைந்து உருகியது அவன் மனம்.. பல்லவியைப் போன்ற ஒருத்திக்காக இந்த தேவதை பாரம் சுமப்பதா..?

திடிரென்று எதையோ நினைத்துக் கொண்டவனாக சிரித்தான்..

"என்னங்க..?" ஆர்வத்துடன் கேட்டாள் சுசித்ரா..

"ஒன்றுமில்லை.." கள்ளத்தனம் மின்னிய அவனது பார்வை எதுவோ இருக்கிறது என்பதைக் காட்டிய் கொடுத்துவிட..

"நீங்க பொய் சொல்கிறீங்க.." என்று சிணுங்கினாள் சுசித்ரா..

அனிச்சம் பூவின் நறுமணத்தை முகர்வதைப் போன்றதொரு மயக்கம் அவனது மனதில் முகிழ்ந்தது.. யாமவதனி நிசப்தத்தில் மேல்மாடி முற்றத்தில் யாழின் கானம் தரும் போதை ததும்பும் இசையை செவி மடுத்ததைப் போன்ற இன்ப ஊற்று அவனுள் சுரந்தது..

மிட்டாய்க்காக ஏங்கும் குழந்தையைப் போல நகைச்சுவை ததும்ப அவன் சொல்லப் போகும் வார்த்தைகளைக் கேட்கும் ஆவலோடு நின்றிருந்தாள் சுசித்ரா.. இது போன்ற அனுபவங்கள் அவளுக்கு அரிதாகத்தான் வாய்க்கின்றன.. இறுக்கம் மிகுந்த தினங்களை தினம்தினம் கடக்கும் சூழலில் மனம் வெதும்பிப் போயிருந்தாள்.. மூன்று வருட காலமாக விலகி நிற்கும் தகப்பனும், தனயனும்.. கண்ணீருடன் காத்திடும் தாய்மடி என்று காலத்தைக் கடத்துபவளுக்கு வாசுதேவனைப் போன்ற ஓர் மனிதனின் அறிமுகம் பாலைவனச் சோலை போன்ற இதத்தைக் கொடுத்தது..

"இல்லே.."

"எது இல்ல..?"

"சொன்னா நீங்க அடிக்க வரக் கூடாது.."

"நோ வாசுதேவன்.. அப்படியாகப்பட்ட கேரண்டியை யெல்லாம் நான் கொடுக்க மாட்டேன்.. அடிக்கிறதைப் போல இருந்தா நீங்க அடி வாங்கித்தான் ஆகனும்.."

"இதென்னங்க அநியாயமா இருக்கு.. சொல்லலைன்னா பிடிவாதம் பிடிக்கறீங்க.. சொன்னா அடிப்பேங்கறிங்க.. எஸ்.எஸ். கம்பெனியோட ஜி.எம்ன்னா அராஜகம்ன்னு டிக்சனிரியில போட்டிருக்கா..?"

"ஐ டோன்ட் நோ.. ஆனால்.. அது அப்படித்தான்.."

"ஓகே.. ஓகே.. எதுக்கும் உங்க கைவிரல்களை நீட்டுங்க.."

"எதுக்குங்க..?"

வினவியபடி அவள் கை விரல்களை சேர்த்து விரித்து நீட்டினாள்..

"அடி வாங்கினா வலிக்குமான்னு செக் பண்ணிக்கத்தான்.."

அவளது கைவிரல்களைத் தொட்டான் வாசுதேவன்.. காந்தள் மலரின் மென்மையுடன் அவை இருந்தன.. மெலிதான ஸ்பரிசத்தில் அவளது உடலில் நடுக்கம்

வந்ததை இவனால் உணர முடிந்தது.. பற்றிய விரல்களுக்கு அழுத்தம் கொடுத்து இதழ்களில் பதிக்க முரட்டுக் குதிரையாக ஆசை திமிறியது.. பிரவாகமாகப் பெருகும் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வந்து கை விரல்களை விட்டு விட்டான்..

"பஞ்சு போல இருக்குங்க.. எத்தனை அடி வேண்டுமானாலும் வாங்கிக்கலாம்.." சூழலை இலகுவாக்கப் பேசினான்..

"டி.ஜி.எம் கம்பெனியோட ஜி.எம்ன்னா செக்கிங் இன்ஸ்பெக்டர்ன்னு டிக்சனரி சொல்லுதாம்.." மனதின் படபடப்பை மறைத்து அவனது முயற்சியில் இணைந்து கொண்டாள் சுசித்ரா..

"யாரிடம் சொன்னதாம்..?"

"யாரிடமோ..? எதுக்காக சிரிச்சீங்கன்னு சொல்லுங்க.. அதை இதைன்னு பேசி ஏமாற்ற வேண்டாம்."

"அடி வாங்கித்தான் ஆகனும் போல.."

"அப்படித்தான்னு வைத்துக்கங்களேன்.."

"பல்லவியை மாதிரி லேடிக்கு ஏதாவது ஒரு ஆண் வீடு பார்த்துக் குடிவைத்து அவனுடைய வீட்டுக்குத் தெரியாம வந்து போகிறது செட் ஆகும்.. இங்கே கதையே தலைகீழாய் இருக்கேன்னு நினைத்தேன்.. சிரிப்பு வந்திருச்சு.."

"உங்களை.."

அவள் அடிப்பதைப் போல கையை ஓங்க.. அவன் பயப்படுவதைப் போல பாவனை செய்தான்..

"தப்பிச்சுக்கட்டும்ன்னு சும்மா விடறேன்.. ஆனாலும் தனியா குடியிருக்கிற சிங்கிள் வுமனை கலாய்க்கிற பெயரில தப்பாகப் பேசலாமா..?"

"தனியா இருக்கிறாங்களா..? நீங்க வேற.. நைட் டயத்தில அவங்க வீடு தங்கறதே இல்லை.. தினமும் ஒரு கார் வந்து

பிக்-அப் பண்ணிக்கிட்டுப் போகுது.. அது நீங்களா இருக்காதுன்னு நினைக்கிறேன்.."

"சேச்சே.."

அவளது விழிகளில் அதிர்ச்சி அப்பட்டமாகத் தெரிந்தது..

"நீங்க சொல்கிறதெல்லாம் நிஜமா..?" என்று கேட்டாள்..

"எங்க ஏரியாவுக்கே இது தெரியுமே.. சபலப் புத்தியிருக்கிறவன் எல்லாம் ஆளாளுக்கு நூல் விடலாமான்னு அலை பாய்ந்துக்கிட்டு இருக்கிறாங்க.. எங்க ஏரியாவுக்குன்னு சில கட்டுப்பாடுகள் இருக்கு.. அதுக்குப் பயந்துக்கிட்டு யாரும் பட்டம் விடறதில்லை.. அத்தோட.. எங்க ஏரியாவில இருக்கிற வீடுகளில் மெஜாரிட்டி ஆள்கள் வீட்டை வாடகைக்கு விடாமல் சொந்த வீடுகளில் குடியிருப்பவங்கதான்.. வாடகைக்கு குடி வருகிறவங்ககூட வருசக்கணக்கில் வீட்டை மாற்ற மாட்டாங்க.. ஸோ.. எல்லா மக்களும் தெரிந்த மக்களா இருக்கிறப்ப பெயர் கெட்டு விடும்ன்னு பயந்துக்கிட்டு அடங்கியிருக்கிறாங்க.."

சுசித்ரா யோசனையானாள்.. யோசிக்கட்டும் என்று மௌனமானான் வாசுதேவன்.. ஆழ்ந்து சிந்திக்கட்டும்.. அப்போதுதான் இவளது இரக்கத்திற்கு அந்தப் பல்லவி தகுதியானவள் அல்ல என்ற உண்மை விளங்கும்..

வாசுதேவனுக்கு இதுதான் புரியவில்லை... பல்லவியைப் பார்த்த உடனே அவள் எத்தகைய குணம் படைத்தவள் என்பது எளிதாகத் தெரிந்து விடுமே.. இதைக் கூட கணிக்க முடியாதவளா இந்த சுசித்ரா..? தகுதியில்லாத ஒருத்திக்காக தனது குடும்பத்திலிருந்தே விலகி நிற்கிறாளே.. சொந்தக் கம்பெனியில் சம்பளம் வாங்கி பிழைப்பது எவ்வளவு கொடுமை..!

இந்த நிலையில் அவளை நிறுத்தி வைத்திருக்கும் பல்லவியின் மீது அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

சுசித்ரா நின்றாள்.. அவனிடம் கை நீட்டினாள்.. ஏற்கனெவே ஸ்பரிசத்த மலர்க் கரத்தை மறுபடியும் ஓர்தரம் ஸ்பரிசிக்கும்

வாய்ப்பு.. அந்த மயக்கத்திலிருந்தே இன்னும் அவன் வெளி வரவில்லை.. இந்த மயக்கத்திலிருந்து எப்போது வெளி வருவான்..?

"உங்களைத் தேர்ட் பெர்சனா நினைக்க முடியலை.. ரொம்ப நாளைக்குப் பின்னால மனதுக்கு நெருக்கமானவங்களிடம் பேசிப் பழகற வாய்ப்புக் கிடைச்சிருக்கு.."

"ரொம்ப நாள்ன்னா தோராயமா எத்தனை நாளைக் கணக்கில் எடுத்திருக்கீங்க..?"

"த்ரீ இயர்ஸ்.."

'மூன்று வருடங்களா..?' வாசுதேவன் மலைத்தான்.

இளம் பருவத்தில் இருப்பவள் மூன்று வருடங்களாகத் தன்னைத் தனிமைப் படுத்திக் கொண்டு தனிமையில் தொலைந்து கொண்டிருக்கிறாள்.. ஏன்..?

'இவளுக்கென்ன தலையெழுத்தா..?'

வாசுதேவனுக்கு வேறு ஒன்றும் தோன்றியது.. சுசித்ராவிடம் கேட்டு விட்டான்..

"என்னோட கெஸ்ஸிங் சரியா இருந்தா அந்தப் பல்லவியை மீட் பண்ணின நாளில இருந்து நீங்க தனிமைப் பட்டிருக்கனும்.."

சுசித்ராவின் மௌனப் புன்னகை 'ஆம்' என்றது..

'ஏதாவது பிளாக்மெயிலில் சிக்கியிருப்பாளோ..?'

எப்படிக் கேட்பது..? அதிக உரிமை எடுத்துக் கொள்கிறான் என்று நினைத்துவிட மாட்டாளா..?

சுசித்ராவின் கையைப் பிடித்துக் குலுக்கி விடுவித்தான் வாசுதேவன்.. அவனது வலியகரத்தின் இறுக்கத்தில் அவளுக்குள் மின்சாரம் பாய்ந்ததைப் போன்ற உணர்வு வந்தது.. இதுபோன்ற உணர்வை இதற்கு முன்னால் அவள் உணர்ந்ததில்லையே என்ற அதிர்வு அவளுக்குள் எழுந்தது.. அவளது அதிர்வை உணர்ந்தவனின் புருவங்கள்

முடிச்சிட்டன.. அவனது தொடுகையினால்தான் அவள் அதிர்கிறாள் என்ற நினைவில் இறுக்கமானான்..

'இவதானே கையை நீட்டினா..'

மெலிதான கோபத்தை அவன் முகத்தில் பார்த்த சுசித்ரா தவித்துப் போனாள்.. கண்ணியமும் காருண்யமும் நிரம்பிய ஒருவனை அவள் சந்தித்திருக்கிறாள்.. அவனது மனத்தாங்கலுக்கு அவள் ஆளாவதா..? நிழல் தரும் மரத்தின் குளுமையில் திளைத்தவளுக்கு நிழலின் இறுக்கத்தில் பதட்டம் வந்தது..

"ஐ'ம் ஸாரி.." அவசரமாக மண்ணிப்புக் கேட்டாள்.

"ஃபார் வாட்..?" அவன் நிதானமாக வினவினான்.

என்னவென்று அவள் சொல்லுவாள்..? சில உணர்வுகளை வார்த்தைகளால் வெளிப்படுத்த இயலாதே.. லேசாக முகம் சிவக்கத் தடுமாறினாள்.. அவன் முகத்தில் இறுக்கம் அகன்று மென்மை படர்ந்தது..

"லீவ் இட்.."

இலகுவான இரண்டே சொற்கள்.. அவளது தடுமாற்றமும், பதட்டமும் அகன்று விட்டன.. அவனையே பார்த்தவளுக்கு இவன்தான் எத்தனை இதமானவன் என்று தோன்றியது..

காலம் கடந்து அவனைச் சந்தித்திருக்கிறாள் என்ற நினைவும் சேர்ந்து வந்ததில் சன்னமாக பெருமூச்சு விட்டாள்..

"எதையும் நினைத்துக் குழப்பிக்காதீங்க.. இந்த செகண்டில் வாழப் பழகுங்க.. உங்க மனதுக்கு எது சரின்னு தோணுதோ, அதைச் செய்யுங்க.. காலப் போக்கில் எல்லாம் சரியாகி விடும்.." அவளது துயரம் என்னவென்று தெரியாமலே ஆறுதல் சொன்னான் வாசுதேவன்..

"எதுவும் சரியாகாது.." நிராசையுடன் அவள் சொன்னாள்..

"வாழ்க்கை யாரையும் வஞ்சிக்காதுங்க.."

அந்த வார்த்தைகளில் அவனை நிமிர்ந்து பார்த்தவள் அப்படியே நின்று விட்டாள்.. அவனது விழிகளில் பொழிந்த பிரியமழை அவளை நனைத்தது.. கடந்த கால துயரங்களை அது அடித்துச் சென்று இனிதான குளிர் சாரலில் அவளை நனைப்பதைப் போல உணர்ந்தவள் அதிலிருந்து வெளியேற மனமின்றி இமை மூடினாள்..

15

குறித்த காலத்திற்குள் எஸ்.எஸ்.குரூப்ஸ் ஆஃப் கம்பெனியிலிருந்து டி.ஜி.எம் குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸ் கேட்டிருந்த தயாரிப்புகள் வந்து விட்டன… ஃபாரின் கம்பெனியுடன் போட்டிருந்த காண்ட்ராக்டை வெற்றிகரமாக செயல் படுத்தி விட்டதில் தணிகாசலத்துக்கு கொள்ளை மகிழ்ச்சி..

"நான் சொல்லலை.. சுசிந்திரன் கில்லின்னு.." என்று சொல்லிச் சொல்லி மகிழ்ந்து போனார்..

இந்த மகிழ்ச்சி ஃபாரின் கம்பெனியின் காண்ட்ராக்டை வெற்றிகரமாக செயல்படுத்தி விட்டதற்காகவா… இல்லை.. சுசீந்திரன் அவரது மருமகனாகப் போகிறான் என்பதற்காகவா என்று தன் மனதிற்குள் கேட்டுக் கொண்ட வாசுதேவன் வெளியே மரியாதை நிமித்தம் லேசாக சிரித்து வைத்தான்.

"இந்த சக்சஸ்ஸைக் கொண்டாட ஒரு பார்ட்டி வைக்கலாமா..?" தணிகாசலம் கேட்டார்..

சரியென்றும் சொல்லாமல் வேண்டாமென்றும் சொல்லாமல் ஞானியைப் போல பார்த்து வைத்தான்.. முதலாளிகளின் முடிவு கணத்திற்கு கணம் மாறும் தன்மையுடையது.. ஆதலினால் அமைதியாக இருப்பதே சாலச் சிறந்தது..

"ம்ப்ச்.. வேண்டாம்.." தணிகாசலம் உடனடியாக அந்த முடிவைக் கைவிட்டார்..

'இதுக்குத்தான் நான் வாயைத் திறக்கல..'

"மாதங்கி அப்செட்டா இருக்கா.. இப்பப் போய் பார்ட்டி அது இதுன்னா வெக்ஸ் ஆகிருவா.." தணிகாசலத்தின் முகத்தில் சிந்தனை படர்ந்தது..

மகளைக் குறித்து அவர் கவலை கொள்வதை அவன் இப்போதுதான் பார்க்கிறான்.. பொதுவாக மாதங்கியைப் பற்றிப் பேசுவது என்றால் அவர் முகம் மலர்ந்து விடும்.. ஒற்றை மகளைக் குறித்த பெருமை அவர் முகத்தில் தாண்டவமாடும்..

'என்னாச்சு..?'

மாதங்கிக்கு திருமணம் நிச்சயமாகியிருக்கிறது.. மாப்பிள்ளையோ மிக உயர்ந்த ஸ்டேட்டஸில் இருப்பவன்.. அவளுக்குப் பொருத்தமானவன்.. இப்போது அவள் சந்தோசமாக அல்லவா இருக்க வேண்டும்..

'மாதங்கிக்கு இந்த மேரேஜில் விருப்பமில்லையா சார்..?'

வாய்வரை வந்த வார்த்தைகளை விழுங்கி விட்டான் வாசுதேவன்.. முதலாளி உரிமை கொடுத்தாலும் அதை எடுத்துக் கொள்ளக் கூடாது.. எல்லைக் கோட்டைக் கடக்காமல் இந்தப் பக்கம் நின்று பழகுவதே பாதுகாப்பானது.. எப்போதும் அவன் அதை கடைப்பிடிப்பவன்..

தணிகாசலம் வேறு வேலைகளைப் பற்ற பேச ஆரம்பித்துவிட வாசுதேவன் மாதங்கியை மறந்து வேலையில் மூழ்கி விட்டான்.. மாலையில் வீடு திரும்பும் போது நிஷாக்குட்டியின் கரடிபொம்மை பழையதாகி விட்டது என்ற வசுமதியின் கோரிக்கை ஞாபகம் வர காரை நிறுத்தி விட்டுக் கடையின் படிக்கட்டுகளில் ஏறினான்.. கண்ணாடிக் கதவைத் திறந்து உள்ளே போனவன் பொம்மைகள் விற்கும் பகுதி எது என்று கேட்டுக் கொண்டிருந்த போது..

"அண்ணா.." என்ற குரல் கேட்டது..

'யார்..? என்னையா கூப்பிடறாங்க..?'

அவனை அண்ணா என்று அழைப்பது யாராக இருக்கும் என்று திரும்பிப் பார்த்தால் அங்கே மாதங்கி நின்றிருந்தாள்.. கையில் ஒப்பனைப் பொருள்கள் நிரம்பிய பை இருந்தது..

"ஹாய் மாதங்கி.. ஹௌ ஆர் யு..?"

"ஃபைன்.. நீங்க எங்கே இங்கே..?"

"இந்தக் கடையில் மேக்-அப் அயிட்டம்ஸ் மட்டும்தான் கிடைக்குமா என்ன..? பொம்மைகளும் கிடைக்கும்.. நான் கரடி பொம்மை வாங்க வந்தேன்.."

"கரடி பொம்மையா..? யாருக்கு..? உங்களுக்கா..?"

மாதங்கி சிரித்தாள்.. அவன் வேலை பார்க்கும் கம்பெனியின் வருங்கால முதலாளி.. பந்தா இல்லாமல் சரிக்கு சமமாக அவனுடன் நின்று பேசிச் சிரிக்கிறாள்..

மாதங்கியின் மீதான அவனது பாசம் அவளைக் கொண்டாடியது.. அவளுடன் இணைந்து நகைத்தவன்..

"கரடிக்கு கரடி பொம்மைதான் தோதுன்னு முடிவு பண்ணிட்டிங்களா..? ம்ம்ம்..?" என்று தலையை ஆட்டினான்..

அவள் அவனை 'அண்ணா..' என்று அழைத்தாலும் அவன் அவளை 'வா, போ' என்று அழைத்ததில்லை.. 'வாங்க, போங்க' என்று மரியாதையுடன்தான் பேசுவான்.. அவள் அதை ஆட்சேபித்தாலும் சின்னச் சிரிப்புடன் மறுத்து விடுவான்.. இதுவும் அவன் கிழித்துக் கொண்டிருக்கும் எல்லைக் கோடு..

இதுபோன்ற எல்லைக் கோடுகளும், வேலைத் திறமையும்தான் தணிகாலசத்தைக் கவர்ந்தன.. சிறு வயதில்.. 'ஜெனரல் மேனேஜர்' பதவியில் அவனை அவர் உட்கார வைத்ததிற்கு அவன்மீதான நம்பிக்கையும்.. மதிப்புமே காரணம்..

"கரடியா..? நீங்களா..? வாட் எ ஹேண்ட்சம் மேன் யு ஆர்..!"

மாதங்கி சத்தமாகச் சொல்ல அவர்களைக் கடந்து சென்று கொண்டிருந்த இளம்பெண்கள் கூட்டம் அவனைத் திரும்பி பார்த்து விட்டுத் தங்களுக்குள் கிசுகிசுத்துவிட்டு மறுபடியும் அவனைப் பார்த்து வைத்து..

"தே ஆர் சைட்டிங் யு.." மாதங்கி இமை சிமிட்டினாள்.

"ஆல் கிரெடிட்ஸ் ஆர் கோ டு யு.." பதிலுக்கு இவன் சட்டைக் காலரை உயர்த்திக் கொண்டான்..

"நான் என்ன செய்தேனாம்..?"

"இந்த மூஞ்சியையும் சைட் அடிக்க வைத்த பெருமை உங்களுடையதுதானே.. அது என்ன சின்னச் சாதனையா..?"

"அண்ணா.."

மாதங்கி அவன் தோளில் செல்லமாகக் குத்தினாள்.. அதை ஏற்றுக் கொண்டாலும் பதிலுக்கு அவளது காதைப் பிடித்துத் திருகி, கையில் கிள்ளி என்று எந்தவிதமான உரிமையையும் எடுத்துக் கொள்ளாமல் சிரித்தபடி நின்றிருந்தான் வாசுதேவன்..

"உங்களுக்கு டைம் இருந்தா நாம காபி சாப்பிட்டுக்கிட்டேப் பேசலாமா..?" மாதங்கி கேட்டாள்..

"வித் பிளசர்.. உங்க கூட ஸ்பெண்ட் பண்ண டைம் இருக்கனுமா..? உண்டாக்கிக்கலாமே.."

"நீங்க கரடி பொம்மை வாங்கணும்னு சொன்னீங்களே.."

"காபி குடித்து முடித்து வந்த பின்னாலே வாங்கிக்கிட்டாப் போச்சு.. அது என்ன கால் முளைத்து ஓடியா போகப் போகுது..?"

"இப்போ ரிமோட் கண்ட்ரோலில கால் முளைத்திருச்சே.."

"பட்.. ரிமோட் கண்ட்ரோல் கடைக்காரங்க கையிலதான இருக்கும்..? பணம் வாங்காம அவங்க ஓட விட்டிருவாங்களா..?"

"உங்களிடம் பேசி ஜெயிக்க முடியுமா அண்ணா..? வின்னர் நீங்கதான்.. அப்படியில்லாமலா டாடி உங்களை ஜி.எம் போஸ்ட்டில உட்கார வைத்திருக்கிறார்..? ஆமாம்.. பொம்மை யாருக்குண்ணா..? ஏதாச்சும் கிப்ட் கொடுக்கப் போகிறீங்களா..?"

"கிப்ட்தான்.. என் அக்கா மகளுக்கு.."

"ஓ.. வசுமதியக்கா வந்திருக்கிறாங்களா..?"

"யெஸ்.. செகண்ட் டெலிவரி.. குழந்தை பிறந்து த்ரீ மன்த்ஸ் ஆன பின்னாலதான் ஊருக்குப் போவாங்க.."

வாசுதேவனின் முகத்தில் தெரிந்த சந்தோசத்தை ரசித்த மாதங்கி..

"நீங்க லக்கி.. கூடப் பிறந்தவங்க இருக்கிறாங்க.. என்னைப் பாருங்க.. ஒற்றையாய் பிறந்து, மனதில் இருப்பதை ஷேர் பண்ணிக்கக் கூட ஆள் இல்லாம தவித்து.. ம்ப்ச்.." என்று பெருமூச்சு விட்டாள்..

'சுசித்ராவும் இது போலதான்.. அடிக்கடி பெருமூச்சு விடுவா..'

இருவருமே மிகப் பெரும் கோடிஸ்வரக் குடும்பத்தில் பிறந்த பெண்கள்.. இளவரசிகள்.. அவர்களின் மனதைக் கவ்வும் துயரம்தான் என்ன..?

மனம் தாளாத வாசுதேவன்..

"ஏன்.. நானில்லையா..?" என்று கேட்டு விட்டான்..

எல்லைக் கோடுகளைத் தாண்டக் கூடாதுதான்.. அதற்காக மனம் வருந்தும் சிறு பெண்ணிடம் ஆறுதலாகக் கூட சில வார்த்தைகளைச் சொல்லக் கூடாதா என்ன..?

மாதங்கியின் முகம் மலர்ந்து விட்டது.. இதற்காக எல்லைக் கோடு என்ன.. எதிரிநாட்டுக்காரனின் கோட்டை வாசலைக் கூடத் தாண்டிக் குதித்து விட்டு வரலாமே என்று மனம் நெகிழ்ந்தான் வாசுதேவன்..

அள்ள அள்ளக் குறையாத செல்வம் கொண்டவளுக்கு ஆறுதல் வார்த்தைகளுக்கு குறைவு வந்து விட்டதா..?

அந்த ஷாப்பிங் வளாகத்தில் இருந்த காபி ஹவுஸீக்குள் நுழைந்தார்கள்.. எதிரும் புதிருமாக உட்கார்ந்து மெதுவடைகளுக்கும் காபிக்கும் ஆர்டர் கொடுத்து விட்டு பேச ஆரம்பித்தார்கள்..

"அம்மா எப்படி இருக்காங்க மாதங்கி.."

"அவங்களுக்கு என்ன குறை..? டாடிதான் அவங்களை உள்ளங்கையில் வைத்துத் தாங்கிக்கிட்டு இருக்கிறாரே.."

இதற்கென்ன பதிலைச் சொல்வது என்று வாசுதேவன் திகைத்தான்.. இப்படிக்கூட குறைபடுவார்களா..?

"டாட் உங்களிடம் சொல்லியிருப்பார்.."

"எதைப்பற்றி.."

"என்னோட மேரேஜைப் பற்றி.."

'விசயம் இதுதானா..?'

சிக்கலின் நூல்முனை கிடைத்து விட்டது... ஆனால் இதில் சிக்கல் வர எதுவுமில்லையே.. சுசீந்தரன் அழகானவன், ஆளுமையானவன், டி.ஜி.எம் கம்பெனிக்குச் சமமான எஸ்.எஸ் கம்பெனியின் எம்.டி. தனிப்பட்ட குணாதிசியத்திலும் குறையொன்றுமில்லை.. நேர்படப் பேசுகிறான்.. நேர்மையாக இருக்கிறான்.. அவனைப் போன்ற கணவன் அமைவதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டுமே..

"சொன்னார் மாதங்கி.. வாழ்த்துக்கள்.."

"எதற்கு..?"

மறுபடியும் திகைப்பு.. மாதங்கிக்கு சுசீந்திரனைப் பிடிக்கவில்லையா என்று குழம்பினான் வாசுதேவன்.. வேறு ஏதேனும் காதல் விவகாரமா..? பேசினால் விடை தெரியும் என்ற நினைவோடு..

"உங்க மேரேஜீக்குத்தான் மாதங்கி.." என்றான் வாசுதேவன்..

"அது நடக்கும் போது பார்த்துக்கலாம்.." விட்டேற்றியாகச் சொன்னாள் மாதங்கி..

"என்ன விசயம் மாதங்கி.. உங்களுக்கு சுசீந்திரனைப் பிடிக்கவில்லையா..? பிடிக்கலைன்னா உங்க டாடியிடம் சொல்லி விடலாமே.. அவர் உங்களின் விருப்பத்துக்கு மாறா எதையும் செய்ய மாட்டாரே.."

"சுசீந்திரனைப் பிடிக்காமலிருந்தால்தானே டாடியிடம் சொல்ல முடியும்..? பிடித்திருக்கு அண்ணா.. ரொம்பப் பிடித்திருக்கு.. டாட் என்னிடம் கேட்டவுடன் ஓகே சொல்லிட்டேன்.."

"தென், வாட்'ஸ் தி பிராப்ளம்..? சுசீந்திரனுக்கும் உங்களைப் பிடித்திருக்கிறதுதானே..? நீங்க தனியா மீட் பண்ணிப் பேசிக்கிட்டிங்கன்னு சார் சொன்னார்.."

"ம்ம்ம்.. பேசினோம்.. ஹி லைக்ஸ் மி.."

"என்னங்க இது.. இரண்டு பேருக்குமே ஒருத்தருக்கொருத்தர் பிடிச்சிருக்கு.. அப்புறம் என்ன..?"

"அவர் மேரேஜை போஸ்ட்போன் பண்றார் அண்ணா.."

"ஏன்..?"

வாசுதேவனுக்கு விளங்கவில்லை.. மாதங்கியைப் போன்ற அழகும், குணமும், படிப்பும், பணமும் உள்ள பெண் கிடைக்க சுசீந்தனும்தானே கொடுத்து வைத்திருக்க வேண்டும்..? அவனுக்கு இணையான பெண் கிடைத்தும் திருமணத்தை எதற்காகத் தள்ளிப் போடுகிறான்..?

"அவருக்கு ஒரேயொரு தங்கை அண்ணா.."

'இதுதான் எனக்குத் தெரியுமே..'

என்னவோ புதியதொரு செய்தியைச் சொல்லுவதைப் போல மாதங்கி சொன்னதில் வாசுதேவன் புன்னகைத்தான்..

"என்ன அண்ணா..?" மாதங்கி வினவினாள்..

"இல்லை.. ஒரேயொரு ஊரில அப்படின்னு கதை சொல்வாங்க இல்ல.. அதைப் போல ஒரேயொரு தங்கைன்னு சொன்னீங்களா.. சிரிப்பு வந்து விட்டது.. எனக்கு சுசீந்திரனையும் தெரியும்.. அவருடைய தங்கையையும் தெரியும்.. பெர்சனலா இல்லை.. அஃபிசியலா.. நம்ம கம்பெனிக்கும் அவங்க கம்பெனிக்கும் இடையில ஒரு அக்ரிமெண்ட் சைன் ஆச்சு.. அந்த டீலைப் பேசி முடிக்க நான் அவங்க கம்பெனிக்குப் போயிருந்தப்ப இரண்டு பேரையும் மீட் பண்ணினேன்.. உங்களுக்குத் தெரிந்திருக்கும்ன்னு நினைக்கிறேன்.. அவரோட தங்கை சுசித்ராதான் அவங்க கம்பெனியின் ஜி.எம்.."

"ஐ நோ.. ஐ நோ.."

ரகுவரன் பேசிய அதே ஸ்டைல்.. அதே மாடுலேசன்.. கூடவே நம்பியாரைப் போல கை பிசைதல்..

'என்னடா இது.. எந்த ரியாலிட்டி ஷோவிலயும் இதைப்போல பெர்ஃபார்ம் பண்ணிப் பார்த்ததில்லையே.. எதுக்காக இப்படி வில்லி வேசம் கட்டி இந்தப் பொண்ணு கையைப் பிசையுது..'

"அந்த சுசித்ராதான் அண்ணா என்னுடைய பிராப்ளமே.."

வாசுதேவனின் மனதில் ஏழ்மைத்தனமான சிரிப்பும், சோர்ந்த முகமுமாக சுசித்ரா தோன்றி மறைந்தாள்..

மாதங்கிக்கு நிகரானவள்.. அழகு, பணம், படிப்பு, குணம் என்று எதிலும் குறைந்தவளல்ல.. அவளை மாதங்கி வெறுக்கிறாளா..? ஏன்..? இவளைப் போல சுசீந்தரனும் ஒற்றைப் பிள்ளையாகப் பிறக்கவில்லை யென்று குறைபடுகிறாளா..? நாத்தனார் இருப்பது பிடிக்கவில்லையா..? மாதங்கி அப்படிப்பட்டப் பெண்ணில்லையே..

"ஏங்க.. அவங்களை உங்களுக்குப் பிடிக்க வில்லையா..?"

"அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை அண்ணா.. ஷி இஸ் ஸோ குட்.. வெறுக்கும்படியான பிஹேவியர் இல்லை.."

'அதுதானே..'

மாதங்கியின் நேர்மை குறித்த பாராட்டு வாசுதேவனின் மனதில் எழுந்தது.. மாதங்கி தங்கமான பெண்.. நாத்தனார் என்ற காழ்ப்புணர்ச்சிகளுக்கு மனதில் இடம் கொடுக்க மாட்டாள்..

"சுசித்ராவால் பிரச்னைன்னு சொன்னீங்களே.."

"தங்கை மேல சுசீந்திரனுக்கு உயிர் அண்ணா.. ஐ ஹேவ் நோ அப்ஜெக்சன் ஃபார் தட்.. பட் அவளோட பிராப்ளத்தால எனக்கும் ப்ராப்ளம் வந்து சேர்கிறது பாருங்க.. அதைத்தான் நான் விரும்பலை.."

'என்னன்னு வெளிப்படையாச் சொல்லும்மா..'

ஒருபக்கம் மாதங்கி.. இன்னொரு பக்கம் சுசித்ரா.. மாதங்கியின் மீது தங்கை பாசம்.. சுசீத்ராவின் மீதோ எங்கேயோ பார்த்த மயக்கம்.. இரண்டுக்கும் இடையே தடுமாறினான் வாசுதேவன்..

மாதங்கி சொல்ல வருவது அவளது வாழ்க்கையைப் பற்றி மட்டுமல்ல.. சுசித்ராவின் வாழ்வில் மறைந்திருக்கும் மர்மத்தையும் தான் என்ற மணியடித்தது அவனது மனதுக்குள்..

இனம் காண முடியாத சுசித்ராவின் மனச் சிக்கலை இதன் மூலம் அறிந்து கொள்ள வழி கிடைத்தாலும் கிடைக்கும் அல்லவா..? தீர்வு இல்லாத சிக்கல் இல்லையே..

மாதங்கி என்ன சொல்லப் போகிறாள் என்று காதைத் தீட்டிக் கொண்டு காத்திருந்தான் வாசுதேவன்..

சுசித்ராவை நினைத்துக் கொண்டான்.. மென்மையே வடிவான பெண்.. மாதங்கியும் மென்மையானவளே.. ஆனால் சுசித்ராவின் முகத்தில் படர்ந்திருக்கும் மெலிதான சோகம் இவள் முகத்தில் இருக்காது, இவள் சந்தோசமயமானவள்..

'உண்மையில் நான் துக்கப்படவில்லை..

என் சோகத்தை

ருசி பார்த்துக் கொண்டிருக்கிறேன்..'

லா.ச.ராவின் வரிகளுக்கான அர்த்தத்தை சுசித்ராவிடம் காணலாம்.. எதையோ தொலைத்துவிட்ட முகபாவனை.. எங்கோ தொலைந்து விட்ட சோகம்.. விளக்கின் ஜ்வாலையில் வீழ்ந்து மடியும் விட்டில் பூச்சியாய் பல்லவி எப்படிப்பட்டவள் என்று தெரிந்திருந்தும் அவளை சுமந்து கொண்டிருக்கும் பரிதாபம்..

வாசுதேவன் விசனப்பட்டான்.. அவன் யாரோ.. அவள் யாரோ.. அவன் கனவில் வந்த தேவதைப் பெண்ணின் சாயலில் அவள் இருப்பதால் மட்டுமே அவன் மனம் இந்த அளவுக்கு வலிக்கிறதா என்று கேட்டால் இல்லையென்றே சொல்வான்.. எங்கேயோ பார்த்த மயக்கம் அவனுக்கு உண்டுதான்.. அதையும் தாண்டி அவன் மனதைக் கிள்ளியது அவளது கள்ளமற்ற நிலவு முகம்..

"அண்ணா.. எனக்க சுசீந்திரனை ரொம்பப் பிடிச்சிருக்கு.." மாதங்கி முகம் சிவந்தாள்..

தங்கை போன்றவளின் வெட்கத்தை வெகுவாகவே ரசித்தான் வாசுதேவன்.. திருமணம் என்றாலே இந்தப் பெண்கள் வெட்கத்தில் முகம் சிவக்கிறார்கள்.. வாசுதேவனுக்கு வசுமதியின் நினைவு வந்தது.. அவளும் இப்படித்தான்.. அகிலனின் பெயரைச் சொல்லும் போதே தடுமாறுவாள்.. முகம் குங்குமமாகி விடும்..

எத்தனை நூற்றாண்டுகள் வந்தாலும் பெண்களுக்கான சில பிரத்யேக குணாதிசியங்கள் மாறுவதில்லை..

"எம்.டி சாருக்கும் சுசிந்திரன் சாரைப் பிடித்திருக்குங்க.."

அப்புறம் எதற்காக கவலை என்பதைக் கேட்காமல் கேட்டான் அவன்.. மாதங்கி சோர்வாக அவனைப் பார்த்தாள்.. அந்தப் பார்வைக்கு என்ன அர்த்தம் என்று தெரியாமல் அவன் திருதிருத்தான்..

"எங்கள் வீட்டில் நான் மட்டும்தான்.. கூடப் பிறந்தவங்கன்னு யாரும் இல்லை.."

"சுசீந்திரனும் அப்படியிருந்திருக்கலாம்ன்னு நினைக்கறீங்களா.."

"இதுவரை நினைக்கலை.. இனி அப்படி நினைத்திருவேனோன்னு பயமாய் இருக்கு.."

மாதங்கியின் குரல் தழுதழுத்தது.. என்னடா இது என்று ஆகிவிட்டது வாசுதேவனுக்கு.. மாதங்கி தங்கமான பெண்.. அவள் மனதில் இப்படியொர் நினைவா..?

"ஐ கான்'ட் பிலிவ்.." தாங்க முடியாமல் சொல்லி விட்டான்..

"நீங்களா இப்படி நினைக்கிறிங்க..?"

"நானேதான்.. வாட் கேன் ஐ டூ..? இதுவரைக்கும், இப்படி நான் நினைத்ததில்ல அண்ணா.. இப்போ அப்படி நினைக்க வைத்து விட்டாள் அந்த சுசித்ரா.."

'சுசித்ரா என்னம்மா பாவம் பண்ணினா..?'

பாவம் அந்த சுசித்ரா என்று இரக்கப்படத்தான் முடிந்தது.. வேறு என்ன செய்ய முடியும்..? சுசித்ராவின் குண நலன்களை எடுத்துச் சொல்லி மாதங்கியிடம் சண்டையா போட முடியும்..? எதில் வேண்டுமானாலும் தலை கொடுத்து விடலாம்.. ஒரு பெண்ணைப் பற்றி இன்னொரு பெண் மனதாங்கலுடன் சொல்லும்போது அந்தப்பெண் நல்லவள் ஆயிற்றே என்று சொந்த அபிப்ராயத்தைச் சொல்லி விடக்கூடாது.. அவ்வாறு வாய் விட்டு விட்டால் நம்மிடம் முறையிட்டுக் கொண்டிருக்கும் பெண்ணின் முறைப்பிற்கும் பகைக்கும் ஆளாக வேண்டி வந்து விடும்.. ஜென்மத்திற்கும் அவள் நம்மிடம் பேச மாட்டாள்..

வாசுதேவன் உதடுகள் இரண்டையும் ஃபெவிகால் போட்டு ஒட்ட வைத்துக் கொண்டதைப் போல இறுக வாய்மூடி மௌனம் சாதித்தான்.. மனதிலிருப்பதைக் கொட்டத்தான் மாதங்கி அவனை காபி சாப்பிட அழைத்திருக்கிறாள்.. சுசித்ராவைப் பற்றிய அவளின் மனத்தாங்கலைச் சொல்லி விடுவாள்..

"எனக்கெல்லாம் இப்படி ஒரு அண்ணன் வாய்த்திருக்கனும்.. தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடியிருப்பேன்.."

"இப்பத்தான் யாரோ ஒற்றையாய் பிறந்ததை பிளஸ் பாயிண்டா சொன்னாங்க.."

"அது வருத்தத்தில் சொன்னது.."

"அப்படி என்னங்க உங்களுக்கு வருத்தம்..?"

"சுசிந்திரன் மேரேஜை அவாய்டு பண்றார்.."

மாதங்கி அழுது விடுபவளைப் போல ஆகியிருந்தாள்... இமையோரங்களில் துளிர்த்த கண்ணீர்த் துளிகளை கைக்குட்டையினால் நாசுக்காக ஒற்றியெடுத்தாலும் மறுபடியும் மறுபடியும் கண்ணீர் துளிகள் துளிர்த்துக் கொண்டே இருந்தன..

அவர்களுக்கான மெதுவடைகள் வந்துவிட்டன.. வாசுதேவன் அவள் பக்கமாக ஒரு பிளேட்டைத் தள்ளி வைத்து..

"ரிலாக்ஸ்.." என்றான்..

மாதங்கி புன்னகைக்க முயன்று தோற்றாள்.. பிளேட்டில் இருந்த வடையை ஸ்பூன் கொண்டு துண்டுகளாக்கினாள்.. எடுத்து உண்ண மனமின்றி அவற்றைக் கிளறிக் கொண்டிருந்தாள்..

"வழியோடு போனவனை வடை சாப்பிடலாம் வாடான்னு கூப்பிட்டுக்கிட்டு வந்து வடையை மட்டும் கண்ணில காட்டிட்டு சாப்பிட விடாம செய்தா என்னங்க அர்த்தம்..? பசிச்சவன் பாவம் பொல்லாததுங்க.."

சூழ்நிலையைக் கலகலப்பாக்க போலியாக மனத்தாங்கல் பட்டான் வாசுதேவன்.. அவன் பேசிய விதத்தில் அவள் லேசாக சிரித்தாள்..

"இன்னும் கொஞ்சம்..

சிரித்தால்தான் என்ன..?"

அவன் பாடியதில் முழுவதுமாக சிரித்தாள்.. சிரித்தபடியே கண்ணீர் துளிகளை ஒற்றியெடுத்து விட்டு வடையைச் சாப்பிட ஆரம்பித்தாள்..

"வடையைச் சாப்பிட அலோவ் பண்ணினதுக்கு தேங்க்ஸ்.." வாசுதேவன் விளையாட்டைத் தொடர்ந்தான்.

"உங்களிடம் எனக்குப் பிடித்ததே இந்தக் குணம்தான் அண்ணா.. எதுக்கும் அப்செட் ஆக மாட்டிங்க.. கேசுவலா இருப்பீங்க.."

"பிகாஸ்.. நான் பிரச்னைக்கு வெளியே இருக்கிறேன்.. இதுவே பிரச்னைக்கு உள்ளே.. அதாவது பிரச்னை எனக்கு வந்திருந்தா நானும் அப்செட் ஆகியிருப்பேன்.. வேதனைகள் எல்லோருக்கும் பொதுவானவை மாதங்கி.. அடிபட்டால் வலிக்கத்தானே செய்யும்..? வலியை நான் மறைப்பேன்.. நீங்க வெளிப்படுத்தறீங்க.. அவ்வளவுதான் வித்தியாசம்.. மத்தபடி வலி எல்லோருக்கும் ஒன்றுதான்.."

"இந்த மேரேஜ் புரபோசல் ஆரம்பித்தப்ப எனக்கு இந்த வலி வரும்ன்னு தெரியாது அண்ணா.."

"ம்ம்ம்.."

"இரண்டு குடும்பமும் மீட் பண்ணினோம்.. என்னையும் அவரையும் தனியே பேசச் சொன்னாங்க.. நாங்களும் பேசினோம்.. எனக்கு அவரைப் பிடித்திருந்தது.."

"இப்போது பிடிக்கவில்லையா..?"

"இப்போது மட்டுமில்லை அண்ணா.. எப்போதும் அவரை மட்டும்தான் பிடிக்கும்.. இதை அவரிடமும் சொல்லிட்டேன்.. அப்ப என்னை அவர் பார்த்த பார்வை இருக்கே..

அதிலிருந்த காதலை ஆயுளுக்கும் என்னால் மறக்க முடியாது.."

மழைத் துளிகளைச் சுமந்திருக்கும் மரத்தின் இலைகள் காற்றில் சிலிர்த்துப் பனித்தூறல்களைக் கொட்டுமே.. அதைப் போன்றதொரு சிலிர்ப்புடன் தன் காதல் உணர்வுகளைச் சொல்லிக் கொண்டிருந்தாள் மாதங்கி.. வாசுதேவன் சிலிர்த்துப் போனான்.. காதல் உணர்வுகளை அவன் அனுபவித்ததில்லை.. சுசித்ராவின் மீது அவனுக்கு இருக்கும் உணர்வுகளுக்குப் பெயர் கிடையாது.. இரக்கம், பிரியம், நட்பு எனப் பலக் கலவைகளால் ஆன உணர்வு அது..

கருணாகரனின் காதல் கதைகளைக் கேட்டால் காதல் மீதான மரியாதை சொல்லாமல் கொள்ளாமல் ஓடி விடும்.. அத்தகைய காதல் கதைகளைக் கொண்டவன் அவன்.. அலுப்பின்றி தினமும் சொல்லி உயிரைக் குறைப்பான்..

இப்போது மாதங்கி வெளிப்படுத்தும் காதல் உணர்வலைகள் பனியின் குளுமையோடு அவனைச் சூழ்ந்தன.. இது போன்றதொருக் காதலை வெளிப்படுத்தும் சந்தர்ப்பம் கிட்டினால் அவன் பாக்யசாலி என்று நெகிழ்ந்து போனான்..

"அப்புறமும் ஏன் மேரேஜை அவாய்டு பண்ணுகிறாராம்..? அவருக்கு உங்களைப் பிடித்திருக்கிறது தானே.. தென்.. வாட்'ஸ் தி பிராப்ளம்..?"

"அதைத்தான் நானும் கேட்டேன்.. அவர் சுசித்ராவைக் கை காட்டுகிறார்.."

"ஓ.."

எதனால் மாதங்கி சுசித்ராவின்மீது கோபம் கொள்கிறாள் என்று வாசுதேவனுக்கு விளங்கி விட்டது.. ஆனால், தந்தையும், தமையனும் அவளை வெறுத்து ஒதுக்கி நிற்பதாகச் சுசித்ரா சொன்னாளே..

"வாட்'ஸ் தி ரீசன்னு தெரியலை.. அந்த சுசித்ரா மேரேஜே வேண்டாம்ன்னு சொல்லிட்டாளாம்.. ஸோ.. தங்கை

தனிமரமாய் நிற்கும் போது இவரால் மேரேஜ் பண்ணி ஃபேமிலி மேனாய் வாழ முடியாதாம்.. ஸாரி மாதங்கின்னு சொல்கிறார்.. ஸாரி சொல்லிட்டாச் சரியாப் போச்சா அண்ணா..? எப்படி ஒற்றை வரியில என் இதயத்தை நொறுக்கிட்டார்ன்னு பார்த்தீங்களா..?"

பொலபொலவென கண்ணீரை உகுத்தாள் மாதங்கி.. இப்போது அழுகையை மறைக்க முடியவில்லை.. தேம்பித் தேம்பி அழுதாள்.. அழாதே என்று வாசுதேவனால் சொல்ல முடியவில்லை.. துயரத்தை மனதில் தேக்கி வைப்பதை விட அதை மதித்துக் கேட்பவரிடம் சொல்லி அழுது விட வேண்டும்.. மனது லேசாகும்.. சில தருணங்களில் மனதை அழுத்தும் துயரத்திடமிருந்து விடுபட மார்க்கமும் கிடைக்கலாம்..

"ஒரு அண்ணனா அவரால இப்படியொரு டிசிசனை மட்டும்தான் எடுக்க முடியும்ன்னு எனக்குத் தோணுது மாதங்கி.."

ஒரு நண்பனாகப் பரிவுடன் பேசினான் வாசுதேவன்.. அவளின் மனது புண்படாத வகையில் இதம் தரும் வகையில் பேசலாம்தான்... அவை பொய்யான வார்த்தைகள்.. உண்மையைச் சொல்லித் தீர்வு காண முற்படுவதே உகந்த செயல்..

"அப்ப நான்..? அவர் மீது நான் வைத்திருக்கும் காதல்..?"

"அவருக்கும் உங்கள் மீது காதல் இருக்கிறது மாதங்கி.. உங்களுக்கு இருக்கும் பெயின் அவருக்கும் இருக்கும்.. அதையேன் நீங்க யோசிக்கலை..?"

மாதங்கியின் தேம்பல் நின்றது.. கண்ணீருடன் அவனை ஏறிட்டாள்..

"அப்படியா சொல்கிறீங்க..?"

"யெஸ்.. இப்போதுதானே சொன்னேன்.. வலி எல்லோருக்கும் பொதுவானதுன்னு.. கூடப் பிறந்த தங்கை தனிமரமாய் நிற்கும்போது அவங்க கண் முன்னால் இவர்

மேரேஜ் பண்ணக்கிட்டு சந்தோசமா வாழ முடியாதுங்கிறது உண்மைதானே மாதங்கி..?"

"இதுக்கு என்னதான் வழி..?"

"சுசீந்திரனுக்காக காத்திருப்பதுதான்.."

"அதை நான் சொல்லாமல் இருப்பேனா அண்ணா.. அதற்கு அவர் ஓகே சொல்லனுமே.. அவருக்காக நான் காத்திருப்பது வேஸ்ட்டுன்னு சொல்கிறாரே.."

நிறுத்தி வைத்திருந்த அழுகை ஆரம்பமானது.. மாதங்கி கேவுவதை காபியுடன் வந்த சர்வர் விசித்ரமாக பார்த்தான்..

"காபியை வைத்து விட்டுப் போகிறீங்களா..?"

வாசுதேவன் அதட்டியதில் அவசரமாகக் காபிக் கப்புகளை வைத்து விட்டு ஒடிவிட்டான்..

மாதங்கி அழுது ஓயும்வரை பொறுமையாகக் காத்திருந்தான் வாசுதேவன்.. முகத்தைத் துடைத்து விட்டு சிவந்த கண்களுடன் நிமிர்ந்தவளிடம் காபிக்கப்பை நீட்டினான்.. மறுக்காமல் வாங்கி உறிஞ்சினாள்... வாசுதேவனுக்குத் தெரியும்.. தொண்டையில் இறங்கும் சுடுகாபி தெம்பைத் தரும் என்பது..

"இந்த பிராப்ளத்திற்கு எனக்குத் தெரிந்த சால்வ் ஒன்றை நான் சொல்லட்டுமா..?" வாசுதேவன் கேட்டான்.

"சொல்லுங்க அண்ணா.."

"எனக்கென்னவோ பிராப்ளம் சுசீந்திரனிடம் இல்லைன்னு தோணுதுங்க.."

"அதைத்தான் நானும் சொல்கிறேன்.. அந்த சுசித்ராதான் பிராப்ளமே.."

"அந்த பிராப்ளத்திடமே பிராப்ளத்துக்கான சொலுசனைக் கேட்டால் என்ன..?"

மாதங்கியின் விழிகள் ஒளிர்ந்தன.. நம்பிக்கையின் வெளிச்சம் அவள் முகத்தில் படர்ந்தது..

"இதையேன் நான் யோசிக்கலை..?"

"எனக்கென்ன தெரியும்..?"

"தேங்க் யு அண்ணா.. இதற்குத்தான் உங்களிடம் பேச நினைத்தது.. எப்படியும் என் பிராப்ளத்துக்கான சொலுசனை நீங்க சொல்லி விடுவீங்கன்னு நினைத்தேன்.. யு டிட் இட்.."

"அண்ணனுக்குத் தங்கைமீது பாசம் இருப்பதைப் போல தங்கைக்கும் அண்ணன்மீது பாசம் இருக்கும் மாதங்கி.. அவங்களால் உங்க லைஃப் பாதிக்குதுன்னு எடுத்துச் சொல்லுங்க.. ஏதாச்சும் வழி கிடைக்கும்.."

"அந்தப் பெண் சுசிந்திரனோடும் அவளுடைய டாடியுடனும் பேச மாட்டாளாம் அண்ணா.. சொந்தக் கம்பெனியிலேயே சேலரி வாங்கிக் கொண்டு வேலை செய்கிறாளாம.. டூ லேக்ஸாம்.. அந்த டூ லேக்ஸையும் என்ன செய்கிறான்னு தெரியாதாம்.. காருக்குப் பெட்ரோல் போடக்கூட பணமில்லாம அவரோட அம்மாதான் ஹெல்ப் பண்ணுவாங்களாம்.. அவள் ஒரு புரியாத புதிராம் அண்ணா.."

"புரிந்துக்க யாரும் டிரை பண்ணியிருக்க மாட்டாங்க.. நீங்க டிரை பண்ணிப் பாருங்க மாதங்கி.."

"அப்படிங்கறிங்க..?"

"ம்ம்ம்.. அண்ணன் தங்கைக்குள் கோபதாபம் இருக்கலாம்.. ஈகோ இருக்கலாம்.. பாசப் போராட்டம் இருக்கலாம்.. உங்களிடம் அதையெல்லாம் காட்ட முடியாதில்லையா..?"

"யார் கண்டது..? அங்கே இருக்கும் காண்டை என்மீது காட்டினாலும் காட்டலாம்.."

"அப்ப.. எதற்கும் தயாராய் பேச்சுவார்த்தைக்குப் போங்க.."

"போகத்தான் போறேன்.. அவளாலே என் லைஃப் கொஸ்டின் மார்க்கா ஆகியிருக்கு.. அவ மர்மப் புதையல் போல எதையும் சொல்லாம அமுக்குளி மாதிரி இருப்பாளாமா..? மேரேஜ் வேண்டாம்ன்னு ஏன்

சொல்கிறாளாம்..? சன்யாசினியாப் போகப் போகிறாளா..? சன்யாசினிக்கு ஏன் அண்ணா இரண்டு லட்ச ரூபாய் போத மாட்டேன் என்கிறது..?"

ஏன் என்று வாசுதேவனுக்குத் தெரியும்.. சொல்லத்தான் முடியாது.. எது எப்படியோ.. மாதங்கியின் கோபத்தினால் சுசித்ராவின் மர்மம் உடைபடும் வாய்ப்பு இருக்கிறது.. அப்படி அது உடைந்து சுசித்ராவும் மற்ற பெண்களைப் போல சந்தோசமானதொரு வாழ்க்கையை வாழ வேண்டும் என்று மனதார அவன் நினைத்தான்..

17

கரடி பொம்மையைக் கட்டியணைத்து பொசுபொசுவென்ற பொம்மையின் மீது முகம் பதித்து உறங்கிக் கொண்டிருந்தாள் நிஷாக்குட்டி.. காபியை உறிஞ்சியபடி வந்த வாசுதேவன் அசையாமல் நின்றான்.. தூங்கும் குழந்தையைப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை.. அழகான ஓவியம் ஒன்றைப் பார்ப்பதைப் போல இருந்தது.. குழந்தைகள் என்றுமே ஓவியங்கள்தான்.. கடவுள் வரைந்து மனிதனுக்காக அனுப்பி வைக்கும் ஓவியம்..

"தூங்கற பிள்ளை மேல கண் வைக்காதேடா.." மகனிடம் எதையோ சொல்ல வந்த கோதாவரி அதட்டினாள்.

"சும்மா இருங்கம்மா.. என் தம்பி கண் வைத்துதான் உங்க பேத்திக்குத் திருஷ்டி பட்டிருமாக்கும்..?" வசுமதி செல்லக் கோபத்துடன் தம்பிக்காக பரிந்து கொண்டு வந்தாள்.

"பெத்த தாய் கண்ணே படும்ங்கிறேன்.. தாய்மாமன் கண் படாதா..?" கோதாவரி விடவில்லை..

"அப்படித்தான் கண் வைப்பேன்.. என் அக்கா மகள்.." வாசுதேவன் காலி காபிக் கப்பை தாயிடம் கொடுத்து விட்டு தூங்கும் குழந்தையின் தூக்கத்தைக் கலைத்து விடாமல் இதமான முத்தமொன்றைப் பதித்தான்..

கோதாவரிக்குச் சந்தோசமாக இருந்தது.. மகள்மீது மகன் காட்டும் அன்பும் பாசமும்.. மகள்வழிப் பேரன் பேத்திகளின் மீது மகன் காட்டும் வாத்சல்யமும் எந்தத் தாய்க்கும் பிடித்தமானதுதானே..

சொல்ல வந்ததை மறந்துவிட்டு அவள் நெகிழ்ச்சியாக நிற்க.. குழந்தைக்குப் போர்த்திவிட்டு எழுந்து வந்த வாசுதேவன்..

"என்னவோ சொல்ல வந்தீங்களே.. என்னம்மா..?" என்று விசாரித்தான்..

"பக்கத்து வீட்டு நரசிம்மனோட போன் நம்பர் உன்னிடம் இருக்கா..? அப்பா கேட்கச் சொன்னார்..?"

"அவரிடம் இருக்குமே.."

"அது நாட் ரீச்சபிள்ன்னு வருதாம்டா.."

"திரும்பவும் டிரை பண்ணச் சொல்லுங்க.."

"பண்ணியாச்சுடா.. கிடைக்கலை.."

"புது நம்பருக்குத்தானே கால் பண்ணீனார்..?"

"புது நம்பரா..?"

"சரியாப் போச்சு போங்க.."

"எதுடா சரியாப் போச்சு..?"

"எல்லாம்தான்.."

"எல்லாம்ன்னா..?"

"எல்லாம்ன்னா, எல்லாம்தான்.. உங்களிடம் போய் இதைச் சொல்கிறேன் பாருங்க.. நீங்கத் தெளிவாகச் சொன்னாலே.. 'ஙே'ன்னு விழிப்பீங்க.. சஸ்பென்ஸாச் சொன்னாக் கிழிஞ்சிரும்.."

"தெரியுதில்ல.. அப்ப விளக்கமாச் சொல்லித் தொலை..."

"ம்மா.. அவரோட பழைய நம்பரை மாத்தி ரொம்ப நாளாகுது.. அது தெரியாம அந்த நம்பருக்கே கால்

பண்ணினா எப்படிம்மா லைன் கிடைக்கும்..?"

"அந்த மனுசன் நம்பர மாத்தினது அப்பாவுக்கு எப்படிடா தெரியும்..?"

"என்னவோ நரசிம்மன் அங்கிளையும் இவரையும் பிய்த்தாலும் பிய்க்க முடியாதுன்னு பீத்திக்குவாரே.. மூழ்காத பிரண்ட்ஷிப்பே இவங்க பிரண்ட்ஷிப்தான்னு மார் தட்டிக்குவாரே.. அந்த நாள் ஞாபகம் இந்த நாளில் எங்கே போச்சும்மா..?"

"குருவி வந்து தூக்கிக்கிட்டுப் பறந்து போயிருச்சாம்.. ஏழு கடல் ஏழு மலையைத் தாண்டி உச்சாணிக் கொம்பிலே உட்கார்ந்திருக்குதாம்.. நீ போய் பிடுங்கிக்கிட்டு வர்றியா..?"

இடக்காக கேட்டு வைத்தாள் கோதாவரி.. தாய்க்கும் தம்பிக்கும் இடையில் நடக்கும் உரையாடலை செவி மடுத்துக் கொண்டிருந்த வசுமதி தம்பியின் முதுகில் தட்டிச் சிரித்தாள்.. தாயின் இடக்கும் பேச்சில் வாசுதேவனுக்கும் சிரிப்பு வந்தது..

"பார்த்தியாக்கா.. நம்ம தெய்வத்தாய் காலையிலேயே இடக்கு மடக்காப் பேசறதை.."

"பார்த்தேன்.. கேட்டேன்.. ரசித்தேன்.. சிரித்தேன்.."

"தேன் சிந்துதுக்கா உன் பேச்சில.."

"என் பேச்சை விடுடா தம்பி.. நம்ம தெய்வத்தாய் பேச்சுக்கு வா.. இந்தம்மா நம்மகிட்ட இத்தனை வித்தாரம் பேசறாங்களே.. பக்கத்து வீட்டுக்காரிகிட்ட மட்டும்

பேச முடியாம ஏன் பம்மிக்கிட்டு வந்தாங்கன்னு கேளுடா தம்பி.."

'அந்தப் பல்லவி மறுபடியும் உறண்டை இழுக்க ஆரம்பிச்சுட்டாளா..?' பல்லைக் கடித்தான் வாசுதேவன்..

அது என்னவோ தெரியவில்லை.. சுசித்ரா வந்து போனதிற்குப் பின்னால் அவளது ஆட்டம் அதிகமாகியிருந்தது.. அதற்கு முன்னால் கொஞ்சம்

அடக்கித்தான் வாசிப்பாள்.. அக்கம் பக்கத்தினர் சப்தம் போட்டால் பதிலுக்கு கொஞ்சம் சத்தம் போட்டுவிட்டு வீட்டுக்குள் போய் பதுங்கிக் கொள்வாள்.. இப்போதோ வேண்டுமென்றே வம்பு வளர்க்கிறாள்.. அதுவும் வாசுதேவனின் வீட்டினரோடு சண்டை வளர்ப்பதென்றால் அவளுக்கு அல்வா சாப்பிடுவதைப் போல இருக்கிறது.. தினந்தோறும் கோதாவரி புலம்பும் புலம்பலில் வாசுதேவனின் ரத்தம் 'சளக், புளக்' எனக் கொதிக்கிறது.. சுசித்ராவின் வேண்டுகோளை நினைத்துத் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு வீட்டினரையும் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறான்..

"என்னடா ஆச்சு உனக்கு..? நாங்க சும்மா இருந்தாலும் நீ அவளை உண்டு இல்லைன்னு சத்தம் போட்டு ரகளை பண்ணிட்டு வந்துடுவியே.. இப்ப ஒவ்வொரு நாளையும் ரணகளமா ஆக்கிக்கிட்டு இருக்கிறா.. கம்முன்னு இருக்கிற.. சண்டை போடப் போகிற எங்களையும் கம்முன்னு இருக்கச் சொல்கிற.. ஏண்டா..?" வசுமதி ஆற்றாற்றுப் போனாள்..

"வேற ஒன்னும் இல்லைடி.. அன்னைக்கு அவ வீட்டில ஒரு அதிரூப சுந்தரியைப் பார்த்துட்டு வந்தானில்ல.."

"ஆமாம்மா.. ஆமாம்.. ஜொள்ளு விட்டானே.."

"அன்னையில இருந்து இவன் ஒரு மார்க்கமாவே இருக்காண்டி.."

கோதாவரியின் சூட்சும புத்தி மகனை இனம் காட்டி விட்டது.. அவள் பார்க்கத்தான் வெகுளி போல இருப்பாள்.. பிள்ளைகளின் செய்கைகளில் சிறு வித்தியாசம் ஏற்பட்டாலும் அதன் காரணத்தைக் கண்டு பிடித்து விடுவாள்.. பிள்ளை வளர்ப்பில் கை தேர்ந்தவள்..

"ஏண்டா.. அப்படியா..?"

வசுமதி தனிமையில் தம்பியிடம் கேட்டாள்.. என்னவென்று பதில் சொல்வது..? தமக்கையிடம் மறைக்க வேண்டிய அவசியம்.. இனம் காண முடியாத ஒன்றை இருப்பதாக

எப்படி ஒப்புக்கொள்வது..? மர்மங்கள் சூழ நிற்கும் தேவதைப் பெண் சுசித்ரா.. அவனுக்கு எட்டாத தொலைவில் நிற்பவள்.. நடக்காது என்று நிச்சயமாகத் தெரியும்போது கனவுகளை வளர்த்துக் கொள்ளக் கூடாது.. அவன் தனி மனிதனல்ல.. தாய், தந்தை, தமக்கை, சுற்றமென்று வாழ்பவன்.. அவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய கடமையில் பிணைக்கப்பட்டிருப்பவன்..

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லைக்கா.. அம்மாவுக்கு என்ன.. எதையாவது சொல்லிக்கிட்டு இருப்பாங்க.."

"அவங்க சொல்கிறதை வைத்து மட்டும் கேட்கலை வாசு.. எனக்கே உன்னிடம் ஒரு சேன்ஜ் தெரியுது.."

"என்ன சேன்ஜ் தெரியுது.. தலையைச் சுத்தி ஒளிவட்டம் தெரியுதா..? கல்யாணக் கனவில இருக்கிறவனுக்கு சன்யாசிப் பட்டம் கொடுத்துராதேக்கா.. கருணை காட்டு.."

"பிழைத்துப் போ.."

அப்போது தம்பியுடன் சேர்ந்து சிரித்தாலும் வசுமதியின் விழிகளில் நம்பிக்கை வரவில்லை.. தம்பியை யோசனையுடன்தான் பார்த்தாள்.

நிலைமை இப்படியிருக்க இந்தப் பல்லவிக் குரங்கு அடங்கி இருந்து தொலைத்தால்தான் என்ன..?

"அவ என்னக்கா பேசினா..?"

"சொல்லிட்டா மட்டும் நீ தாண்டிக் குதித்து அவகூட சண்டைக்குப் போய்விடப் போய் விடுவாயாக்கும்..?"

"இது அபாண்டம்க்கா.. அவகூட நான் சண்டைக்குப் போனதே இல்லையா..? உன் மனதைத் தொட்டுச் சொல்லு.."

"அது அப்போ.. இது இப்போ.. அன்னைக்கு இருந்த கோபக்கார வாசு இப்ப குணசாலி வாசுவா ஆகிட்டானே.. போடா டேய்.. இந்த ஃபிலிமையெல்லாம் வேற எங்கேயாவது ஓட்டு.. இப்ப அம்மாகிட்ட நரசிம்மன் அங்கிளோட போன் நம்பரைக் கொடு.."

அவர்கள் சாதாரணமாக பேச வேண்டும் என்று சொல்லிக் கேட்டிருந்தால் வாசுதேவன் நம்பரைச் சொல்லியிருப்பான்.. பக்கத்து வீட்டுப் பல்லவியுடன் சண்டை என்தைச் சொல்லி நம்பரைக் கேட்டதும் உஷாராகி விட்டான்..

நரசிம்மனும் பூபதியும் பால்யகால சிநேகிதர்களாம்.. அதனால் வீடு காட்டும் போது அடுத்தடுத்த பிளாட்டுகளை வாங்கி ஒரே மாடலில் வீடு கட்டி ஒன்று போலக் கிரகப்பிரவேசம் பண்ணி அவரவர் வீடுகளில் குடியேறினார்கள்.. அவர்களது சிநேகிதம் அந்த ஏரியாவில் பிரசித்தமானது.. அப்படிப்பட்ட நண்பர் புகார் செய்தால் நரசிம்மன் அடுத்த நொடியில் பல்லவியை வீட்டைவிட்டு வெளியேறச் சொல்லி விடுவார்..

பல்லவி வெளியேற்றப் படுவதில் வாசுதேவனுக்கு யாதொரு ஆட்சேபனையும் இல்லைதான்.. அந்த ஏரியாவே சுத்தமாகி விடும்தான்.. அவளைப் போன்ற ஒருத்தியை பக்கத்து வீட்டில் பார்க்க நேர்வது அருவெறுக்கத்தக்க ஒன்றுதான்.. இவனே நரசிம்மனுக்கு போனைப் போட்டு அவளை வெளியேற்றி விட்டு மறுவேலையைப் பார்க்கலாம்தான்.. ஆனால் அதைச் செய்ய முடியாமல் அவனது கைகள் கட்டிப் போடப் பட்டிருக்கின்றனவே..

சுசித்ரா கேட்டுக் கொண்டிருக்கிறாள் என்று வீட்டினரிடம் சொல்ல முடியாது.. பிடிபிடியென்று பிடித்து உலுக்கி விடுவார்கள்.. சுசித்ராவினால் வீடு தேட முடியாது என்பது மட்டும் காரணமல்ல.. வாசுதேவன் நினைத்தால் இதைப்போல ஒருவீட்டை பல்லவியின் ஆட்டத்திற்குத் தகுந்ததைப் போன்ற ஏரியா ஒன்றில் பார்த்துக் கொடுத்து விடலாம்..

'அதன் பின்.. சுசித்ராவைப் பார்க்க முடியுமா..?'

டி.ஜி.எம் கம்பெனிக்கும் எஸ்.எஸ் கம்பெனிக்குமான டீலிங் முடிந்து விட்டது.. அலுவலக வேலையின் பொருட்டு சுசித்ராவை இரண்டு முறைதான் சந்திக்க முடிந்தது.. முதல்முறை பேசியதைப் போல இரண்டாம் முறை அதிக

நேரம் தனிமையில் பேச முடியவில்லை.. சுசித்ராவை அவன் பார்க்கும் வாய்ப்பு அவள் பக்கத்து வீட்டுக்கு

வந்து போனால்தான் கிடைக்கும்.. பல்லவியைப் பார்க்க அவள் மாதம் ஓர்முறைதான் வந்து போவாளாம்.. அடிக்கடி வந்தால் அண்ணி பணம் கேட்கிறாங்க என்று மருட்சியுடன் சொல்லியிருந்தாள்.. இரண்டு லட்சம் ரூபாயை ஏப்பம் விட்டு விட்டு இன்னமும் பணம் வேண்டும் என்று கேட்கிறாளா என்று இவன்தான் சினம் கொண்டான்.. எப்படித்தான் அடுத்தவரின் தோள்களில் சுமையாக உட்கார்ந்து சொகுசாக வாழ்கிறார்களோ..

சுசித்ரா பக்கத்து வீட்டுக்கு வந்து போனால்தான் இவன் அவளைப் பார்க்கவாவது முடியும் என்ற நிலையில் எப்படி நரசிம்மனின் போன் நம்பரைக் கொடுப்பான்..? எப்போதடா ஒரு மாதம் முடியும் என்று நாள்களை எண்ணிக் கொண்டிருக்கிறான்.. அன்று மாதம் முடியும் நாள்.. இன்னும் ஓரிரண்டு நாள்களுக்குள் சுசித்ரா பல்லவியைப் பார்க்க வருவாள்.. இவன் தூங்க மறந்து அவளது வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறான்.. வாசுதேவனின் குடும்பத்தினரோ இவன் சுசித்ராவைப் பார்ப்பதற்கென அமைந்திருக்கும் ஒரே வாய்ப்பையும் ஓட்டி விடப் பார்க்கிறார்கள்.. வசுமதியிடம் சொல்லலாம்.. ஒரே ஒரு நாள் பேசினாய்.. அதுவும் சண்டை போட்டாய்.. அந்த சில மணித்துளிகளுக்குள் அவள்மீது உனக்கு மயக்கம் வந்து விட்டதா.. அப்படியென்னடா குடும்பத்தினரின் நலனையும் தாண்டி அவள் உனக்கு உயர்வு என்று கேட்பாள்..

சுசித்ராவைப் பற்றி எப்படிச் சொல்வது..? சில உணர்வுகளை வார்த்தைகளால் வெளிப்படுத்தி விட முடியாது.. உணர்வினால் உணர்ந்து கொள்ளத்தான் முடியும்.. சுசித்ராவின் தன்மையும் அத்தகைய நுட்பம் வாய்ந்ததுதான்.. நுண்ணிய உணர்வுகளால் வேயப்பட்டவள்.. ஈர மனம் கொண்டவள்.. மோப்பக் குழையும் அனிச்ச மலர்.. சிறு முக மாறுபாட்டையும் தாங்கிக் கொள்ள மாட்டாள்.. மெல்லிய இயல்புடையவள்.

"டேய்.. வாசு.." வசுமதி தம்பியின் தோள்களைப் பிடித்து உலுக்கினாள்..

"என்னடா.. முழிச்சுக்கிட்டே கனவு காணற..?"

"ஹி.. ஹி.. இல்லைக்கா.."

"வாய்தான் அப்படிச் சொல்லுது.. முழி மட்டும் மந்திரிச்சு விட்டக் கொண்டைச் சேவல் மாதிரியே இருக்கு.."

"நீ எப்போக்கா அதையெல்லாம் பார்த்த.."

"நான் எங்கே பார்த்தேன்..? எல்லாம் அம்மா சொல்கிறதுதான்.. நீ இப்ப நம்பரைக் கொடு.." வசுமதி காரியத்திலேயே கண்ணாக இருந்தாள்..

"யாரோட நம்பர்..?" நடித்தான் வாசுதேவன்..

"ஏய்.. விடிய விடிய ராமாயணம் கேட்டுட்டு விடிந்த பின்னாலே கந்த புராணம் நல்லாயிருந்ததுன்னு சொல்ற கதையாப் பேசின.. நான் மனுசியாவே இருக்க மாட்டேன்.. அட்டூழியம் பண்ணாம நம்பரைக் கொடுடா.." அதட்டினாள் தமக்கை..

"என்கிட்ட இல்லை.." தம்பி எங்கோ பார்த்தான்..

"எது இல்லை..?" வசுமதிக்கு கோபம் வந்து விட்டது.

"நரசிம்மன் அங்கிளோட போன் நம்பர்.." சாதித்தான் வாசுதேவன்..

"இப்ப மட்டும் யாரோட நம்பர்ன்னு தெரிஞ்சிருச்சா..? ஏண்டா.. பக்கத்து வீட்டுக்கு ஒரு பஜாரி குடி வந்திருக்கிறா.. அவளால நம்ம கும்பத்தோட நிம்மதி காத்தில பறக்குது.. நீ என்னடான்னா அவளுக்குச் சப்போர்ட் பண்ற.." வசுமதி சண்டைக்குத் தயாரானாள்..

"என்னக்கா பேசற நீ.. நானா அவளுக்கு சப்போர்ட் பண்றேன்..? இவதான் பஜாரிக்கா.. இவளை இங்கே குடி வைச்சிருக்கிறவ தேவதை.. அவளுக்காக யோசிக்கிறேன்.."

தன்னையும் அறியாமல் சொல்லி விட்டான் வாசுதேவன்.. வசுமதியின் புருவங்கள் சுருங்கின.. தமக்கையின் சிந்தனை இறக்கை விரித்து விட்டதை உணர்ந்த வாசுதேவன் அங்கிருந்து தப்பிக்கும் மார்க்கமாகத்தான் பக்கத்து வீட்டுப் பக்கம் போனான்.. காம்பவுண்டிற்கு அந்தப் பக்கம் உலாவிக் கொண்டிருந்த பல்லவியைக் கண்டதும் அவனுக்கு உண்மையாகவே எக்குத் தப்பான கோபம் வந்து விட்டது..

'சுசித்ராங்கிற சின்னப் பொண்ணோட வாழ்க்கையில விளையாடிக்கிட்டு இருக்கிற ராட்சசி..' அவன் கண்களில் தீப்பொறி பறந்தது..

பக்கத்து வீட்டிலிருந்து யாராவது போர் தொடுக்க வருவார்கள் என்று ஆயுதபாணியாக காத்திருப்பவளைப் போல முகத்தை சிடுசிடுவென வைத்துக் கொண்டு அவள் இந்தப் பக்கம் பார்க்க.. இவன்..

"ஏய்ய்.." என்று சொடக்குப் போட்டு அழைத்து வைத்தான்..

'சொடக்குப் போட்டுக் கூப்பிடறானே..' பல்லவியின் ரத்தஅழுத்தம் எகிறியது..

எப்போதும் அவள் வாசுதேவன் அலுவலகத்திற்குப் போனபின்னால்தான் அவனது குடும்பத்தினரோடு வம்பிழுப்பாள்.. வாசுதேவன் கொடுத்த கொடுப்பில் கதிகலங்கிப் போயிருந்தவள் அவனுடன் வம்பு வைத்துக் கொள்வதில்லை.. அதே சமயம், சுசித்ரா அவனிடம் நின்று பேசியதையும் அவள் மறக்கவில்லை..

வாசுதேவனைப் போன்ற ஆளுமையான ஆண்மகனிடம் சுசித்ரா நின்று பேசிவிட்ட ஒரே காரணத்தினாலேயே அவள் வாசுதேவனின் குடும்பத்துடன் தினந்தோறும் சண்டையிட்டாள்..

எந்த வீட்டிற்குக் குடிபோனாலும் முதல் வேலையாக அக்கம் பக்கத்து வீடுகளுடன் சண்டை வளர்த்துப் பகையாளிகளாக மாற்றிக் கொள்வதை வழக்கமாக வைத்திருந்தாள் பல்லவி.. அப்போதுதானே சுசித்ரா அவர்களுடன் பேச்சு வைத்துக் கொள்ள மாட்டாள்..? அவர்களும் சுசித்ராவை விரோதியின் வீட்டைச் சேர்ந்த பெண் என்று பகைமை பராட்டுவார்கள்..? அக்கம் பக்கத்தினருடன் சுமுகமாக பேசிப் பழகிவிட்டால் சுசித்ராவும் அவர்களிடம் பேசுவாள்.. அவர்கள் பல்லவியின் இரவு நேர வாழ்க்கையை அவளிடம் போட்டுக் கொடுத்து விட்டால் என்ன ஆவது..? மூன்று வருடங்களாக பல்லவி வாழும் உல்லாச வாழ்க்கை பறி போய் விடாதா..?

இல்லாவிட்டாலும் பல்லவி ஒன்றும் அக்கம் பக்கத்தில் நட்புப் பயிரை வளர்க்கும் ரகமல்ல.. அவர்களும் இவளைப் போன்ற பெண்ணிடம் பேசிப் பழகுவதே தவறு என்று விலகிப் போய் விடுவார்கள்..

இந்த வீட்டிலும் பல்லவி அவள் கையாண்டு கொண்டிருந்த அதே வழிமுறையைத்தான் பின்பற்றினாள்.. அக்கம் பக்கத்து வீடுகளில் சண்டை வளர்த்தாள்.. பொதுவாக அவள் போடும் சண்டைகளில் அக்கம் பக்கத்து வீடுகளில் ஒதுங்கிப் போய் விடுவார்கள்.. சுசித்ரா பல்லவியை குடி வைக்கும் ஏரியாக்கள் அப்படிப் பட்டவை.. அவர்கள் தெருச்சண்டையை விரும்பாதவர்களாக இருந்தார்கள்... அதே சமயம் பல்லவிக்கு வீட்டை வாடகைக்கு விட்டிருப்பவர்களுக்கு போன் பண்ணி சப்தம் போட்டு உடனடியாக பல்லவியை வீட்டைக் காலி பண்ண வைத்து விடுவார்கள்..

அதைப்பற்றி பல்லவிக்கென்ன கவலை..? அவளா வீடு தேடுகிறாள்..? அது சுசித்ராவின் தலை மீதல்லவா விழுந்திருக்கிறது.. இவள் கவலையில்லாமல் வீட்டில் சொகுசாக உட்கார்ந்திருக்க, சுசித்ரா இணைய தளத்தில் வாடகைக்கு வீடு கிடைக்குமா என்று தேடிக் கொண்டிருப்பாள்.. வன்பாடுபட்டு வீட்டைக் கண்டு பிடித்து பல்லவியை இடம் மாற்றிக் குடி வைத்தால் மறுநாளே

பல்லவி புதிதாக வாய்த்திருக்கும் அக்கம் பக்கத்து வீடுகளிடம் போர் முரசு கொட்டி விடுவாள்..

இப்படி சற்றும் அயராமல் சண்டை போட்டு அக்கம் பக்கத்து வீடுகளைத் தள்ளி வைத்து, தள்ளி நின்ற பல்லவிக்கு சவாலாக வந்து நின்றான் வாசுதேவன்.. இதுவரை அவள் குடியிருந்த வீடுகளில் ஆண்கள் அவளிடம் சண்டைக்கு வந்ததில்லை..

"அந்த லேடியுடன் என்ன பேச்சு..?" என்று தங்கள் வீட்டுப் பெண்களையும் அதட்டி வீட்டுக்குள் அழைத்துக் கொள்வார்கள்..

பல்லவிக்கும் பெண்களுடன் சண்டையிட்டு துரத்தி விட எளிதாக இருக்கும்.. இங்கு என்னவென்றால் வாசுதேவன் தம் வீட்டுப் பெண்களை வீட்டுக்குள் பாதுகாப்பாக இருத்தி வைத்து விட்டுப் பல்லவியுடன் சண்டைக்கு வந்தான்.. அவனது பார்வையில் தெரிந்த அசூசை பல்லவியை 'நீயெல்லாம் ஒரு பிறவி..' என்று சாடிக் கூனிக் குறுக வைத்தது.. அப்படியொரு இகழ்ச்சியான அருவெறுப்பைக் கக்கும் பார்வையை பல்லவி சந்தித்ததே இல்லை.. ஒன்று வழியும் சபலப் பார்வையைப் பார்ப்பார்கள்.. இல்லையெனில் வெறுத்து விலகும் பார்வையைப் பார்ப்பார்கள்.. இப்படி விரட்டும் அசூசைப் பார்வையைப் பார்க்க மாட்டர்கள்..

சாக்கடையில் நெளியும் புழுவைப் பார்ப்பதைப் போல அவளைப் பார்த்து முகம் சுளித்தான் வாசுதேவன்.. அவன் முன்னால் நின்று பேசுவது முற்களின் மீது நிற்பதைப் போன்ற வேதனையைப் பல்லவிக்குத் தந்தது..

அத்துடனும் நில்லாமல் அவன் சுசித்ராவிடம் நின்று பேசியது வேறு பல்லவியின் வயிற்றில் புளியைக் கரைத்தது.. வாசுதேவன் சுசித்ராவைப் பார்த்த ஆராதிக்கும் பார்வையில் பல்லவி பொறாமையில் பொசுங்கிப் போனாள்.. வாசுதேவனின் கம்பீரமான வசீகரம் ததும்பும் தோற்றப் பொலிவில் சுசித்ரா மயங்கி விட்டால் என்ன செய்வது..?

'இதற்கான ஒரேவழி இந்த வீட்டையும் காலி செய்வதுதான்.. அப்படியாவது இந்த சுசித்ராக் கழுதை வீடு தேட முடியாம சொந்தமா ஒரு வீட்டை வாங்கிக் குடுக்கிறாளான்னு பார்க்கலாம்.. கழுதை.. அப்பன்காரன் கிட்டத்தான் கோடி கோடியாப் பணம் கொட்டிக் கிடக்குதே.. என்பேரில வீட்டை வாங்கிக் குடுக்கிறதுக்கு என்ன..? கேக்கிற விதமாக் கேட்டா அவன் வாங்கிக் கொடுக்க மாட்டேன்னா சொல்லப் போறான்..? இந்தக் கழுதைக்கு அழுது ஆகாத்தியம் பண்ணத் தெரியல.. பெரிசா ரெண்டு லட்ச ஓவா தர்றாளாம்.. அதையே சொல்லிக் காட்டறா.. இவள்ளாம் கோடிஸ்வரின்னு வெளியே சொல்லிக்கிட்டு அலைகிறா.. வெட்கக் கேடு..'

வெட்கக்கேடு சுசித்ராவுக்கா இல்லை பல்லவிக்கா என்ற கேள்வி மட்டும் அவள் மனதில் வரவே வராது.. பல்லவியைப் போலதானே அவளது மனமும் இருக்கும்..? அவள் மனம் என்றால் என்னவென்று கேட்கும் ரகம்.. அது கருப்பா, சிகப்பா என்பாள்.. மனச்சாட்சியைப் பற்றிய பேச்சே வராது.. மனதே இல்லாதவளிடம் மனச்சாட்சி மட்டும் இருக்குமா..?

வாசுதேவனின் குடும்பத்தினரிடம் ஜென்மப்பகை கொண்ட பல்லவி தினந்தோறும் அவர்களிடம் குடுமிப்பிடி சண்டை போடுவதைக் குறிக்கோளாக்கிக் கொண்டாள்.. அவர்களது தலையைக் கண்டு விட்டால் போதும்.. ஜாடை கூடப் பேசாமல் நேரடியாகவே சத்தம் போட்டு களத்தில் இறங்கி விடுவாள்.. ஃபாரின் கம்பெனியின் காண்ட்ராக்டைக் காப்பாற்றும் மும்முரத்தில் இருந்த வாசுதேவன் பரபரப்பாக இருந்தான்.. அலுவலகத்துக்கு சீக்கிரமாகக் கிளம்பிப் போகிறவன் தாமதமாக வீடு திரும்புவான்.. வேலையில் மூழ்கியிருப்பவனிடம் பக்கத்து வீட்டுப் பஜாரி படுத்தும் பாட்டைச் சொல்லத் தயங்கி மௌனம் காத்தது அவன் வீடு..

வேலையின் நெருக்கடி குறைந்து வாசுதேவன் இயல்பானதும் அவனிடம் பல்லவியைப் பற்றிய பஞ்சாயத்து வந்து விட்டது.. இம்முறை அவனது

குடும்பம் பல்லவியுடன் சண்டை போட அவனை அழைக்கவில்லை.. மாறாக பக்கத்து வீட்டு நரசிம்மனிடம் பேசி பல்லவியை வீட்டை விட்டுத் துரத்தி விடும் முடிவை எடுத்து விட்டது..

'இந்தப் பாடு படுத்தறாளே..'

வாசுதேவன் வெறி கொண்ட சிங்கமாகத்தான் சென்றான்..

"ஏய்.." என்று பல்லவியைச் சொடக்குப் போட்டு அழைத்தான்..

பல்லவியின் ரத்த அழுத்தம் எகிறியது.. அவனுடன் சண்டைக்குப் போனால் தோல்வி நிச்சயம் என்பது மறந்து விட்டது.. ரத்தத்தில் ஊறியிருந்த பஜாரித்தனம் மேலே எழ.. அவள் போட்டுக் கொண்டிருக்கும் நாகரிக நாரி மணி வேடத்தை மறந்து ராங்கித்தனமாக..

"இன்னா..? ஆரைப் பாத்து ஏய்ங்கிற..? அடிச்சேன்னு வைச்சுக்க.. உன் வாய் வெத்தல பாக்க மென்னுரும்.. கசுமாலம்.. உன் மூஞ்சியில என் பீச்சாங்கைய வைக்க.." என்று ராவடித்தனமாக அணிந்திருந்த நைட்டியை வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக்கு வந்து விட்டாள்..

"அய்யய்யே.. என்னடி இவ இப்படிப் பேசறா..?"

மகன் நான்கு அதட்டல்களை அதட்டி வைப்பான்.. அப்படியாவது பக்கத்து வீட்டு பஜாரியின் வாய்க்கொழுப்பு அடங்கி விடாதா என்ற ஆவலுடன் வாசலுக்கு வந்திருந்த கோதாவரி பல்லவியின் பேச்சில் வந்த கூவம் நதியின் நறுமணத்தில் பயந்து போனவளாக மகளிடம் கேட்டாள்..

"இவளோட ஒரிஜினல் லாங்வேஜ் இதுதான் போலம்மா.." வசுமதி முகம் கோணினாள்..

"இவகூட நம்ம வாசு சண்டைக்குப் போயிருக்கானே வசு.."

"வாடான்னு கூப்பிட்டிருவோம்மா.. இவ என்னமோ மாதிரி பேசறா.. முதல்ல அப்பாவை நிஷாக்குட்டியக் கூப்பிட்டுக்கிட்டு வீட்டுக்குள்ள போகச் சொல்லுங்க.."

"ஏங்க.. நீங்க வீட்டுக்குள்ளயே இருங்க.. நிஷாக்குட்டிய வெளியில விட்டுராதீங்க.."

கோதாவரி எச்சரிக்கும் முன் பூபதி நிஷாக்குட்டியுடன் வீட்டுக்குள் ஓடி விட்டார்.. இவ்வாறு ஆண்குலத்தை வீட்டுக்குள் பதுங்க வைத்த பல்லவி தன் கூவம் நதியின் நறுமணம் கொண்ட பேச்சைத் தொடர்ந்து பேசலானாள்.. கோதாவரியும் வசுமதியும் காதுகளைப் பொத்திக் கொண்டு..

"டேய் வாசு.. வந்திருடா.." என்று அனத்தினார்கள்..

அக்கம் பக்கத்து வீடுகளின் ஜன்னல்களில் முகங்கள் தெரிய ஆரம்பித்தன.. அவர்கள் பார்த்த 'ஐயோ பாவம்..' பார்வையில் தலையில் அடித்துக் கொண்டாள் வசுமதி..

"நம்ம ஏரியாவில இப்படியாப்பட்ட ஒருத்தியா..? முடியலம்ம.. நிம்மதியா தாய்வீட்டில தங்கிட்டுப் போகலாம்ன்னு வந்தா இப்படியா..? ஒற்றைப் பொம்பளையா இருந்துக்கிட்டு ஏரியாவையே ஆட்டி வைக்கிறா பாருங்க.."

"அது தெரியாம இவன் வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிக்கப் போயிருக்கிறானேடி வசு.."

"படட்டும்.. விடுங்கம்மா.."

"நீயாடி வசு இப்படிப் பேசற..? எல்லாம் தங்கைக் கோர் கீதம்ன்னு பாடினா நீ தம்பிக்கோர் கீதம் பாடறவளாச்சே.."

"பின்னே என்னம்மா..? இவகூடல்லாம் சரிக்குச் சரியா நின்று சண்டை போடலாமா..? நமக்குத்தான் மரியாதை குறையும்.. காதும் காதும் வைச்சதைப் போல நரசிம்மன் அங்கிளுக்குப் போனைப் போட்டு இவளை வீட்டைக் காலி பண்ண வைக்கிறதை விட்டுட்டு போன் நம்பரைக் கொடுக்காம சண்டைக்குப் போயிருக்கான்.. பொம்பளையா அவ..? கலீஜ்.."

"கலிஜ்ன்னா என்னடி..?" அப்பாவியாக கேட்டாள் கோதாவரி..

"யாருக்குத் தெரியும்.. ஏதோ வசவு போல.. புதுசா வந்த பாட்டில கேட்டேன்.. சொன்னேன்.." வசுமதி சொல்லிக் கொண்டிருக்கும் போதே..

"இன்னா.. பாக்க டீசன்டா இருக்கேன்னு பாக்கறியா.. பக்கா கலிஜீ நானு.. யாருகிட்ட ஒன் பம்மாத்தக் காட்டற.." என்று பல்லவி சவுண்டு விட்டாள்..

"வசு.. கலிஜ்ன்னா சாக்கடை போலடி.." கோதாவரி அர்த்தத்தைக் கண்டு பிடித்து விட்டாள்..

வசுமதிக்குச் சிரிப்பதா அழுவதா என்றே தெரியவில்லை... பல்லவியென்றால் சாக்கடை என்று திட்டவட்டமாக கோதாவரி வரையறுத்து வைத்திருக்கிறாள் என்றால் இந்தப் பல்லவி எப்படிப்பட்டவாளக இருப்பாள்..? இத்தனைக்கும் இவள் பக்கத்து வீட்டிற்கு குடி வந்து இரண்டு மாதம்தான் ஆகிறது..

"நீ யாருன்னு பெருமையாச் சொல்லிக்கிற பாரு.. அந்த நேர்மையைப் பாராட்டித்தான் தீரனும்.. அதுக்குன்னு உன்னை ஆடவிட்டு வேடிக்கைப் பார்த்துக்கிட்டு இருப்பேன்னு மட்டும் நினைக்காதே.. நியுஸென்ஸ் கேஸில தூக்கி உள்ளே போட்டிருவேன்.. உன் ஆட்டத்தையெல்லாம் வேற எங்கேயாவது வைத்துக்க.."

அலட்சியமாக வாசுதேவன் மிரட்ட கோதாவரி மகனின் தீரத்தில் 'ஆ' வென வாய் பிளந்தாள்..

"என்னடி வசு.. உன் அப்பா வீட்டுக்குள்ள ஓடிப் போயி ஒளிஞ்சுக்கிட்டாரு.. உன் தம்பியென்னடான்னா இந்தப் போடு போடறான்.." மகளிடம் வியந்தாள்..

"இந்தக் கேடிப்பயல் எல்லா வேலையையும் செய்வான்ம்மா.." வசுமதி தம்பியின் அடாவடியை ரசித்தாள்..

'நியுஸென்ஸ் கேஸில் உள்ளே தூக்கிப் போட்டிருவானா..?' பல்லவி திகிலானாள்..

விவரம் தெரிந்த நாளிலிருந்து மோசடி செய்வதையும், ஏமாற்றுவதையும் மட்டுமே பிழைப்பாக வைத்திருப்பவள் பல மோசடிக் கேஸ்களில் சிக்கித் தொலைத்திருக்கிறாள்.. இப்போது மாட்டிக்கொண்டால் பழைய கேஸ்களைத் தூசி தட்டி இவளை வெளியில் வர விடாமல் பூட்டி வைத்து விடுவார்களே..

மனதின் பயத்தை வெளியில் காட்டி விடக் கூடாது என்பது பல்லவி கற்று வைத்திருந்த பாடம்.. அதனால்..

"இன்னா.. மிரட்டறியா..? இதுக்கெல்லாம் பயந்தவ நானில்ல.. நீயென்ன பருப்பா..?" என்று வீடு கட்டினாள்..

"ஆமாம்.. பருப்புத்தான்.. அதுக்கு இப்ப என்னாங்கிற..? சும்மா ஃபிலிம் காட்டிக்கிட்டு இருக்க.. நான் ஒரு ஃபிலிமக் காட்டறேன் பார்க்கறியா..?" வாசுதேவன் நிதானமாக ஊடே இருந்த காம்பவுண்டு சுவரில் சாய்வாக வைத்திருந்த செல்போனைக் காட்டினான்..

'என்னத்த ஃபிலிம் காட்டறான்..' அசட்டையாகப் பார்த்த பல்லவிக்குத் தூக்கிவாரிப் போட்டது..

செல்போனின் திரையில் பல்லவி 'இன்னா' என்று வரிந்து கட்டிக் கொண்டு பேசிய ஆபாச வார்த்தைகள் ஒளியும், ஒலியுமாக தெரிந்தது.. அவள் வீடு கட்டியதும், கைகளை விரித்தும் மடக்கியும் காட்டிய குறீயீடுகளும் 'தூ' என்று காறி உமிழும் வகையில் நேர்த்தியாக படம் பிடிக்கப் பட்டிருந்தது..

"என்னை என்னன்னு நினைத்த..? உன்னைப் பேச விட்டு வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்கேன்னு நினைத்தியா..? என் ஒரு அடிக்குத் தாங்குவியா..? கலிஜ்ன்னு பெருமை வேற.. இப்படிப் பேச வெட்கமா இல்ல..? அதுசரி.. உனக்கும் அதுக்கும்தான் ஏணி வைச்சாலும் எட்டாதே.. ஒழுங்கா மரியாதையா சத்தம் வராம வீட்டுக்குள்ளயே இருக்கனும்.. வெளியே உன் தலை தெரியக் கூடாது.. அப்படித் தெரிஞ்சதுன்னு வைய்யி.. ஹவுஸ் ஓனர்கிட்டச் சொல்லி வீட்டைக் காலி பண்ண வைக்கல்லாம் மாட்டேன்.. அதைச் செய்ய எனக்கு ஒரு செகண்டு போதும்.. உனக்குத்தான்

வீடு வீடா மாற ரொம்பப் பிடிக்குமே.. இந்த ஏரியாவை விட்டுட்டு வேற ஏரியாவுக்குப் போய் அங்கே இருக்கிறவங்க நிம்மதியைக் குறைப்ப.. நீயெல்லாம் விசக்கிருமி.. பரவ விடக் கூடாது.. ஒரேயடியா ஒளிச்சுக் கட்டிரனும்.. அதான்.. உன்னை ஆட விட்டு வீடியோவ எடுத்தேன்.. போலிஸ்ல எனக்கு ஹைலெவல்ல இன்புளூயென்ஸ் இருக்கு.. இந்த வீடியோவைக் காட்டி உன்னை உள்ளே தூக்கிப் போட்டுட்டுத்தான் மறுவேலை.. யாரும் உனக்கு வீடு கொடுக்கக் கூடாது.."

வாசுதேவன் பேசப் பேச பயத்தில் பதறிப் போன பல்லவி வீட்டைப் பார்த்து ஓடிவிட்டாள்.. வெற்றித் திருமகனாகத் திரும்பிய மகனை ஆரத்தி எடுக்காத குறையாக வரவேற்றாள் கோதாவரி..

## 19

காலையின் பரபரப்பு சாலையில் தெரிந்தது.. கொத்துக் கொத்தாக பள்ளி வாகனங்களில் ஏறும் மாணவ, மாணவிகள்.. அவசரகதியில் இரண்டு சக்கர வாகனத்தில் பயணிக்கும் ஆண், பெண்கள்.. இடைவெளியின்றி முட்டி மோதும் கார்கள், பேருந்துகள் என்று களேபரமாக இருந்தது..

"இரை தேடும் பறவைகள்..!" என்றான் கருணாகரன்.

"கருணா.." காரோட்டிக் கொண்டிருந்த வாசுதேவன் ஆச்சரியத்துடன் நண்பனைப் பார்த்தான்.. பதிலுக்கு ஞானியைப் போல பார்த்து வைத்தான் கருணாகரன்..

சில நேரங்களில் இது போன்ற அழகான வார்த்தைகளும் அவனது திருவாயிலிருந்து உதிரும்..

"எதுக்காகடா இப்படிப் பார்க்கிற..? காலையில எழுந்ததும் பறவைகள் இரை தேடி கூட்டை விட்டு வெளியே பறந்துட்டு சாயங்காலம் கூட்டைத் தேடி வந்து அடையுதுக.. நாமளும்

அப்படித்தானே.. பொழுது விடிஞ்சதும் பையத் தூக்கிக்கிட்டு வீட்டை விட்டு வெளியில பறக்கறோம்.. பொழுது சாய்ந்ததும் கட்டையைச் சாய்க்க வீட்டைத் தேடி வர்றோம்.. சின்ன வயசில சுமக்க புத்தகப் பை.. இப்போ ஆபிஸ் பை.. அதுமட்டும்தான் வித்தியாசம்.. ம்ப்ச்.." சூள் கொட்டினான் திடிர் தத்துவ ஞானியான கருணாகரன்..

"நீயாடா இப்படிப் பேசற..?"

"நானேதான்.. இதுக்கு ஏண்டா இப்படி ஜெர்க் ஆகிற..?"

"ஆஹா.. நீ பேசறப்ப அப்படியே ஏழுஸ்வரமும் காதில பாய்கிறதைப் போல இருக்குடா மச்சான்.."

"இந்தா பாரு.. என்னை எது வேணும்னாலும் சொல்லு.. பாடகன்னு மட்டும் சொல்லிராதே.. நானே நொந்து போயிருக்கேன்.."

"ஏன்டா.."

"ம்ப்ச்.. சரிதா என்கிட்ட முகம் கொடுத்துப் பேசறதில்லடா.."

"கிட்ட முகத்தக் காட்டினா நீ கிஸ் பண்ணிருவியோன்னு பயந்திருப்பா.." நண்பனை ஆராய்ச்சியாக ஓர்பார்வை பார்த்த வாசுதேவன்..

"நீ அப்படிச் செய்கிற ஆள்தான்.." என்றான்..

"அதில்லடா.."

"அதுவும் இல்லையா..? அப்புறம் எப்படிடா அவ உன்னைக் காதலிப்பா..?"

"டேய் வாசு.." கருணாகரன் கெஞ்சினான்..

"என்னடா கருணா..?" கருணையுடன் கேட்டான் வாசுதேவன்..

"இப்படிப் போட்டுத் தாக்காதேடா.. தாங்க மாட்டேன்.."

"காலங்கார்த்தாலேயே மூக்கால அழுகாத.. விசயத்தைச் சொல்லு.."

"முந்தாநாள் அவளைப் பார்த்தேண்டா.."

"யாரை..? சரிதாவையா..?"

"வேற யாரைடா பார்ப்பேன்..?"

"அதைச் சொல்லு.. வேற யாரு உன்னைப் பார்ப்பா..?" என்ற வாசுதேவன் நண்பனை உற்றுப் பார்த்து விட்டு..

"கிரிஜாகூட அலருகிறா.." என்று சொல்லி விட்டு கடகடவென ஒரு வில்லன் சிரிப்பை சிரித்து வைத்தான்..

"அடங்குடா.. டேய்.." ஆக்ரோசக் குரலில் கத்தினான் கருணாகரன்..

"முடியாதுடா.. உன்னால முடிஞ்சா என்னை அடக்கு பார்ப்போம்.." சவால் விட்டான் வாசுதேவன்..

"அடங்குடா டேய்.." அழுகுரலில் கெஞ்சினான் கருணாகரன்..

"இதுக்கும் அழுகையா..? ச்சை.. எப்படித்தான் உன்னைப் போய் அந்த சரிதா காதலிக்கிறாளோ.."

"உன் வாயில விழுந்து விழுந்துதான் என் காதல் ஊத்திக்கப் பாக்குது.."

"அடிச்சேன்னா பாரு.. பூக்காரி மூக்கும் முழியுமா இருக்கான்னு தினமும் அவகிட்ட பூவாங்கி மாட்டிக்கச் சொல்லி நானாடா ஐடியா கொடுத்தேன்..?"

"நானாத்தான் மாட்டிக்கிட்டேன்.."

"அப்புறம் என்மேல குத்தம் சொல்ற..? ஆமாம்.. அந்தச் சண்டையில சரிதா உன்கூடப் பேச மாட்டான்னு சொன்ன..?"

"ஏண்டா.. டேய்.. அடிச்சுக்கிட்ட லவ்வர்ஸ் மறுபடியும் சேரவே மாட்டாங்களாடா..? நீங்கள்ளாம் நல்லா வருவீங்கடா.."

"விடுடா.. விடுடா.. டூ விட்டவங்க பழம் விட்டு ஒன்று சேர்ந்தாச்சுல்ல.. அதுவரைக்கும் சந்தோசம்தான்.."

"எங்கே..?"

"மறுபடியும் மூக்குறுஞ்ச ஆரம்பிச்சாச்சா..? நீயா உன் காதலை உசுப்பேத்தி உக்கார வைக்கிற.. அதுக்கப்புறம் ஊத்தி படுக்கவும் வைக்கிற.. கேள்வி கேட்டா கடிக்க வர்ற.. என்னதாண்டா ஆச்சு..?"

"டேய் வாசு.."

"வாசுதான்.. உன் பிரண்ட் வாசுவேதான்.. நீ அடையாளம் பாக்காம விசயத்துக்கு வா.."

"அவ என்னை சைட் அடிக்கிறவதான்.. இப்பத்தான் அடிக்கடி எதிரிக்காரனை முறைக்கிறதைப் போல என்னையும் முறைச்சுக்கிட்டு இருக்கா.. எல்லாம் விதிடா.."

"உன் கொழுப்புன்னு சொல்லு.. வாயை வைத்துக்கிட்டு சும்மா இருந்திருக்க மாட்ட.. நேரம் காலம் தெரியாம எதையாவது பேசி வைச்சிருப்ப.. வாழ்க்கையில எவன் எவனோ எதனாலோ கெட்டுப் போகிறான்.. நீ ஒருத்தன்தாண்டா வாயாலே கெட்டுப் போகிற.."

"இல்லேன்னு சொல்ல மாட்டேண்டா.. நேத்து அவளைப் பாத்தேன்.. ஊடல் முடிவுக்கு வந்திட்டதில கொஞ்சம் சந்தோசமா இருந்தா.. என்னைத் தொட்டுத் தொட்டுப் பேசினா.. ஜிவ்வுன்னு ஏறிருச்சு.."

"அட்ரா சக்கை.. அப்புறம்..?"

"அதையேண்டா கேக்கிற.. நான் வாயை வைச்சுக்கிட்டு சும்மா இருக்காம.." கருணாகரன் தழுதழுத்தான்..

இவன் என்னவோ இசகு பிசகா செய்து விட்டான் போல என்று நினைத்து விட்ட வாசுதேவன்..

"என்னத்தடா பண்ணித் தொலைச்ச..? முத்தம் கித்தம் கொடுத்துட்டியா..?" என்று விசாரித்தான்..

"இல்லடா வாசு.. பாட்டுப் பாடித் தொலைச்சுட்டேன்.." என்றான் கருணாகரன்..

"பாட்டுப் பாடினயா..?"

"ஆமாண்டா வாசு... காதல் பாட்டுத்தாண்டா பாடினேன்... நான் பாடப்பாட அவ முகம் விளக்கெண்ணையைக் குடிச்சதைப் போல ஆகிருச்சு.. சுத்திக் கூட்டம் வேற கூடிருச்சு.."

"பாருடா.. உன் பாட்டுக்கு இம்புட்டு வேல்யூ இருக்கா..? வாட் எ மிராக்கிள்..! கூட்டத்தைப் பார்த்தாவது உன் பாட்டோட லெவல் என்னன்னு உன் லவ்வருக்குப் புரிஞ்சிருக்குமே.."

"அது புரிஞ்சதினாலதான திரும்பவும் சண்டை போட்டுட்டுப் பேசாம இருக்கா.."

"ஏண்டா..?"

"கூடினது கழுதைக் கூட்டம்டா.."

"என்னது..?"

வாசுதேவனுக்கு சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை.. நண்பனின் காதல் அனுபவங்கள் ஏன் அவனைப் போலவே விசித்திரமாக இருக்கின்றன என்று புரியாமல் மண்டை காய்ந்தான்..

"கருணா.."

"சொல்லுடா.. நீ சொல்கிற ஆறுதலிலாவது என் மனம் ஆறட்டும்.."

"அது கழுதையை மேய்க்கட்டும்.. நான் ஒன்னும் உனக்கு ஆறுதல் சொல்ல வரலை.."

"பின்னே..?"

"இந்த மண்டையைப் பிளக்கிற மொட்டை வெயிலில உன்னோட அரை பிளேடு காதல் கதைகளைச் சொல்லிக் கடுப்பேத்தினன்னு வைய்யி.. தாட்சண்யம் பார்க்காம நடுரோட்டில இறக்கி விட்டுட்டுப் போய்கிட்டே இருப்பேன்.. பார்த்துக்க.. எப்பப்பாரு.. பெட்ரோலுக்கு கஞ்சத்தனம் பண்ணிக்கிட்டு கார் ரிப்பேர்.. டயர் பஞ்சர்ன்னு கதை சொல்லிக்கிட்டுக் காரில தொத்திக்க வேண்டியது.. வழி

நெடுக ரம்பம் போட்டு முடியைப் பிய்ச்சுக்க வைக்க வேண்டியது.. இதே பிழைப்பாய் வைத்திருக்க.."

"பெட்ரோல் விலை எக்குத்தப்பா ஏறினா நான் என்னடா பண்ணுவேன்..? முன்னெல்லாம் ஒவ்வொரு ரூபாயா ஏத்தினாங்க.. அதுக்கே கொடி பிடிச்சுப் போராட்டம் பண்ணி ஐம்பது காசைக் குறைக்க வைப்பாங்க.. இப்பத்தான் எதுவுமே கேட்க முடியலையே.. தினமும் பத்து ரூபாய் கூடினா காரை வெளியே எடுக்காம பூப்போட்டு பூஜை பண்ண வேண்டியதுதான்.."

"நீ என்னத்தையோ பண்ணித்தொலை.. என் தலைமேல் ஏறாதே.."

கருணாகரன் வாசுதேவனின் கண்டனத்தையும் கண்டு கொள்ளவில்லை.. கண்டிப்பையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை..

"ஏஸியைக் கூட்டி வைடா.." என்று எதுவும் நடக்காதவனைப் போலச் சொன்னான்..

"எருமைமாட்டின் மீது மழை பெய்த கதைதான்.." வாசுதேவன் நெற்றியில் அடித்துக் கொண்டான்..

"தலை வலிக்கும்டா.." அக்கறைப்பட்டான் கருணாகரன்..

"அடிங்..! உன்னையெல்லாம் கிரிஜாகிட்டப் பிடிச்சுக் கொடுக்கனும்டா.." வாசுதேவன் பல்லைக் கடித்தான்..

"அதுக்கு நீ என்னை அடியே கை வைக்கலாம்டா மச்சான்.." பரிதாபமாக கெஞ்சினான் கருணாகரன்..

நண்பர்கள் இருவரும் அலுவலகத்திற்குள் சென்ற போது சொல்லி வைத்ததைப் போல எதிரில் வந்தாள் கிரிஜா..

"உன் ஆள் வருதுடா.." கருணாகரனை கடுப்பேற்றினான் வாசுதேவன்..

"நான் இப்பவே சன்யாசம் வாங்கிக்கிட்டு ஓடிடறேன்.." என்றான் கருணாகரன்..

"வாயிலதான் சொல்ற.. செய்ய மாட்டேங்கறேயே.." என்றான் வாசுதேவன்..

கண்ணகி மதுரையைப் பார்ப்பதைப் போலக் கனல் பறக்க கருணாகரனை முறைத்தபடி..

"குட் மார்னிங் சார்.." என்று வழக்கம் போல வாசுதேவனுக்கு மட்டும் காலை வணக்கம் சொன்னாள் கிரிஜா..

அவள் நகர்ந்ததும் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு ஆசுவாசமாக பெருமூச்சு விட்ட கருணாகரன்..

"ஆண்ட்டிக்கு இருக்கிற நினைப்பைப் பாரேன்.. இந்த கிளியோபாட்ராவை நான் சைட் அடிக்கிறேனாம்.. கொடுமைடா வாசுதேவா.." என்று புலம்பினான்..

"உன்னைப் பாத்தா ஆண்ட்டி ஹீரோ மாதிரியே இருக்குன்னு நீதானேடா பெருமைப் பட்டுக்கிட்ட..?"

"ஆண்ட்டி ஹீரோவாகனும்னுதானேடா ஆசைப் பட்டேன்..? ஆண்ட்டிக்கு ஹீரோவாகனும்னா ஆசைப் பட்டேன்..?"

கருணாகரனின் அங்கலாய்ப்பு எதிரில் வந்த மாதங்கியைப் பார்த்தவுடன் ஓடி ஒளிந்து கொண்டது..

"வெல்கம் அண்ட் குட்மார்னிங் மேம்.." சலாம் வைக்காத குறையாகப் பணிந்தான்..

"என் கம்பெனியிலேயே எனக்கு வெல்கம் சொல்வீங்களா..?" மாதங்கி 'சுள்'ளெனப் பேசினாள்..

'நல்வரவுன்னு சொன்னாக் கூடத் தப்பா..?'

என்ன தவறு செய்தேன்..? அதுதான் எனக்கும் புரியவில்லை என்று பாடி விடலாமா என்று பரிதவித்துப் போனான் கருணாகரன்.. அது எப்படி அவன் வாயைத் திறந்தாலே வம்பு வந்து சேர்கின்றது..? அதுவே வாசுதேவன் வாய் திறந்தால் வரவேற்பு மட்டும்தான்..

'யாராச்சும் எனக்கு செய்வினை செய்துட்டாங்களோ..'

அவனுக்கு செய்வினை வைக்கும் அளவிற்கு வெஞ்சினம் கொண்ட வஞ்சகர் யார் யார் என சொந்த பந்தம், நட்பு, அக்கம் பக்கம் என்று ஆராய்ந்து அவன் சிந்திக்க ஆரம்பிக்க மாதங்கி வாசுதேவனைப் பார்த்தாள்..

"ஐ வான்ட் டு டால்க் வித் யு.. அண்ணா.." என்றாள்..

கருணாகரனுக்கு நெஞ்சு வலித்தது.. அவன் என்ன மாதங்கி அவனைப் பார்த்துக் காதல்புறாவைப் பறக்க விட வேண்டும் என்றா பேராசை கொண்டான்..? வாசுதேவனிடம் வளர்ப்பதைப் போல பாசப் பயிரைக் கூட வளர்க்க வேண்டாம்.. அவளது தொழில் சாம்ராஜ்யத்தில் பணிபுரியும் ஊழியன் என்ற முறையில் அவன் சொன்ன காலை வணக்கத்தையும், நல்வரவையும் அங்கீகரித்திருக்கலாமே..

'இவன்கிட்ட ஏதோ ஒரு சக்தி இருக்கு..' வாசுதேவனை பொறாமையுடன் பார்த்துப் பொசுங்கினான்.

"ஷ்யூர் மேம். வாங்க போகலாம்.." வாசுதேவன் வழி காட்டுவதைப் போலக் கரம் நீட்டினான்..

"கால் மி மாதங்கி.. நாட் மேம்.." மாதங்கி ஆட்சேபித்தாள்..

"இது ஆபிஸ்.. நீங்க வருங்கால எம்.டி.. சில இடங்களில் புரொஜிசரை ஃபாலோ பண்றது பெட்டர்.."

"எல்லாத்துக்கும் ஓர் ஆன்சர் வைத்திருப்பீங்களே.."

மாதங்கி நட்புடன் சிரிக்க.. லேசாகப் புன்னகைத்தபடி இடைவெளி விட்டு விலகி உடன் நடந்தான் வாசுதேவன்.

'எல்லா வித்தாரத்தையும் கத்து வைச்சிருக்கான்.. அடேய் நண்பா.. முதலாளி மகள் வந்ததும் என்னைக் கழட்டி விட்டுட்ட பார்த்தியா.. இங்கே கருணாகரன்னு ஒரு பரிதாபத்துக்குரிய நண்பன் நிற்கிறாண்டா..'

கருணாகரன் இருந்த இடத்திலேயே ஆணி அடித்ததைப் போல நின்றுவிட.. அவனைக் கடந்து போன கிரிஜா..

"கேபினுக்குப் போக வழி தெரியாதா..?" என்று கேட்டு விட்டுப் போனாள்..

'ஐயைய்யோ.. இவ எம்.டிகிட்டப் போட்டுக் கொடுத்திருவாளே..' கால்களில் சக்கரங்களைக் கட்டி விட்டதைப் போல அவளை முந்திக் கொண்டு ஓடினான் கருணாகரன்..

வாசுதேவனின் கேபினுக்குள் நுழைந்த மாதங்கி டேபிளின் எதிரேயிருந்த சோபாவில் உட்கார்ந்தாள்.. சுழல் நாற்காலியில் உட்கார்ந்த வாசுதேவன் இண்டர்காமை எடுத்து அவர்கள் இருவருக்கும் குளிர் பானம் கொண்டு வரச் சொல்லும்படி பி.ஏ வுக்கு உத்தரவிட்டு வைத்தான்..

"சொல்லுங்க.." மாதங்கியைப் பார்த்தான்..

"நீங்க சொன்னதைப் போல சுசித்ராவுக்கு போன் பண்ணி மீட் பண்ணனும்னு சொன்னேன்.. ஓகேன்னு ஒப்புக்கிட்டா.. யெஸ்டர்டே ஈவினிங் ரெஸ்ட்டாரெண்டில் மீட் பண்ணினோம்.."

"ம்ம்ம்.."

"சுசீந்திரன் சொன்னதைச் சொன்னேன்.. ஷாக் ஆயிட்டா.. ஐ திங்க்.. ஷி டஸ்'ன்ட் நோ எபௌட் திஸ் மேட்டர்.."

"மே பி.."

"கண்ணெல்லாம் கலங்க பித்துப் பிடித்தவளைப் போல ஆகிட்டா.. அவளை லெப்ட் அண்ட் ரைட் வாங்கி விடனும்ங்கிற செமத்தியான கோபத்தோடுதான் போனேன்.. அவ தவிக்கிற தவிப்பைப் பார்த்ததும் எனக்கு என்ன சொல்வதுன்னே தெரியலை அண்ணா.."

"ஷி இஸ் ஸோ ஸாப்ட்.."

"ஐ நோ.. ஐ நோ.."

இதை ரகுவரன பாணியில் சொல்லாமல் பெண்மைக்கேயுரிய காருண்யத்துடன் மாதங்கி சொன்னது வாசுதேவனின் மனதிற்கு இதமாக இருந்தது..

ஏனோ.. மாதங்கி சுசித்ராவை வெறுக்கக் கூடாது என்று அவன் மனம் அடித்துக் கொண்டது.. சுசித்ராவின் மனம் பூப்போன்ற மென்மை கொண்டது என்பதை மாதங்கி புரிந்து கொள்ள வேண்டும் என்று அவன் விரும்பினான்..

20

வரையறுக்க முடியாத உணர்வுகள் பல உண்டு.. இதுதான் என்று நிர்ணயிக்க முடியாது.. இனம் காணவும் இயலாது.. சுசித்ராவின் மீதான வாசுதேவனின் உணர்வும் அதைப் போன்றதுதான்.. இன்னதென்று சொல்ல முடியாத இதமான உணர்வுகள் அவை.. மாதங்கியும் சுசித்ராவும் உறவினர்களாக மாறப் போகிறார்கள்.. தாய்க்குப் பின் தாரம் என்பதைப் போல அம்மாவிற்கு அடுத்து அண்ணியெனும் உறவு இன்றியமையாதது..

சுசித்ரா திருமணத்தைத் தவிர்க்கிறாள் எனும் போது அவள் காலம் முழுவதும் சுசீந்திரனின் பாதுகாப்பில்தான் வாழ்ந்தாக வேண்டும்.. சுசீந்திரனின் மனைவியின் ஆதரவு இல்லாமல் அது சாத்தியமாகாது.. அண்ணி என்பவள் சுசித்ராவை விரோதியாக நினைத்து விட்டால் சுசித்ரா தன் வீட்டிலிருந்து வெளியேற வேண்டிய சூழல் ஏற்பட்டு விடும்.. இதை மனதில் கொண்டுதான் சுசீந்திரனும் திருமணத்தைத் தவிர்க்க நினைத்தானோ என்னவோ..

மாதங்கியின் விருப்பப்படி அவள் சுசீந்திரனை மணந்து கொள்ள வேண்டும் என்று மனதார நினைத்தான் வாசுதேவன்.. அப்படி சுசீந்திரனை மணந்து கொள்ளும் மாதங்கி தன் நாத்தனாரான சுசித்ராவின் மீது பாசமாக இருக்க வேண்டும் என்றும் விரும்பினான்.. சுசித்ராவின் பூஞ்சை மனதைப் பற்றி அவனும் கொஞ்சம் அறிவானே..

"எனக்காக அண்ணாவின் வாழ்வு கொஸ்டின் மார்க்கா ஆவதான்னு என்னிடமே கொஸ்டின் பண்றா அண்ணா.. உன்னாலே என் வாழ்க்கை பாதிக்குதுன்னு திட்டித்

தீர்க்கப் போனா அவ என்னைப் பேச விடாம புலம்ப ஆரம்பிச்சுட்டா.."

"அவங்க ஏன் மேரேஜை அவாய்ட் பண்றாங்க மாதங்கி..? அதைக் கேட்டிங்களா.. பிகாஸ்.. இந்த பிராப்ளத்துக்கான சொலுசன் அவங்க சொல்கிற ஆன்சரில இருக்கலாம்.."

"கேட்டேனே.. பதில் சொல்ல மாட்டேங்கிறாளே.. எதுவும் சொல்லாம தாரைதாரையாக் கண்ணீரை விடறா.."

"சுசீந்திரனிடம் கேட்டிருக்கலாமே.."

"கேட்காமல் இருப்பேனா அண்ணா.. தட்'ஸ் அவர் பெர்சனல்ன்னு முகத்தில் அடித்ததைப் போலச் சொல்லி என்னைப் பிரித்து நிறுத்தி விட்டார் அண்ணா.. மை பெர்சனல்ன்னு கூடச் சொல்லலை.. அவர் பெர்சனல்ன்னு சொன்னார்.. அவரும் அவருடைய குடும்பமும் ஒன்றாம்.. நான் தனியாம்.. எனக்கு மட்டும் அப்படி ஏன்

அண்ணா தோணலை..? அவரும் நானும் ஒன்றுன்னு தோணுதே.."

ஏக்கமாகக் கேட்டாள் மாதங்கி.. அவளது இமையோரம் விளிம்பு கட்டியிருந்த கண்ணீர் துளிகளைக் கண்டு சங்கடம் கொண்டான் வாசுதேவன்.. டி.ஜி.எம் குரூப்ஸ் ஆஃப் கம்பெனியின் வருங்கால எம்.டி அவள்.. காதலுக்காக கசிந்து உருகுகிறாள் என்றால் இதை என்னவென்று சொல்ல..?

அவளுக்காக எதையாவது செய்ய வேண்டும் என்று அவன் மனம் துடித்தது.. தங்கள் கம்பெனியில் வேலை பார்ப்பவன் என்று நினைக்காமல் 'அண்ணா' என்று

வாய் நிறைய அழைத்துத் தங்கை உறவுமுறை கொண்டாடுகிறாளே.. அவளது அண்ணனாக அவளது கண்ணீரைத் துடைக்கும் பொறுப்பு அவனுக்கில்லையா..? உண்மையில் அவளுடன் பிறந்திருந்தால் அவள் கண்ணீர் விடுவதைப் பார்த்துக் கொண்டிருப்பானா..? வசுமதிக்கு இப்படி ஒரு பிரச்னை வந்திருந்தால் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டா இருந்திருப்பான்..?

"மாதங்கி.. ப்ளீஸ்.. கண்ட்ரோல் யுவர் ஷெல்ப்.. எல்லா பிராப்ளத்துக்கும் சொலுசன் உண்டு.. யாரு நீங்க..? பெரிய சாம்பராஜ்யத்துக்கே ராணி.. நீங்க போய் மனம் உடையலாமா..? என்ன செய்யலாம்ன்னு யோசிக்கலாம்.." மாதங்கியைத் தேற்ற முயன்றான்..

அவள் கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவனை ஏறிட்டாள்.. விழிகளில் இறைஞ்சலுடன்..

"எனக்கொரு ஹெல்ப் பண்ணுவீங்களா..?" என்று கேட்டாள்..

"இது என்னங்க கேள்வி..! இன்னது செய்யனும்னு சொல்லுங்க.. செய்து முடிக்கிறேன்.."

"சுசித்ராவிடம் இதைப் பற்றி பேசுவீங்களா..?"

"நானா..?"

வாசுதேவன் திகைத்தான்.. என்னதான் சுசித்ராவுடன் பேசிப் பழகியிருந்தாலும் அவளுடைய குடும்ப விசயத்தில் அவன் மூக்கை நுழைக்கலாமா..? இதுவரை அவன் எல்லை கடந்து பேசியதே இல்லையே.. பொதுவாகத்தான் பேசிப் பழகியிருக்கிறான்..

'ஆனால்.. மாதங்கி..? அவளுடைய வாழ்க்கை..'

வாசுதேவன் முடிவு செய்து விட்டான்.. சில தருணங்கள் எல்லைகளைக் கடக்க வேண்டியவை.. இது அது போன்றதொரு தருணம்..

"எனக்காக இதைச் செய்ய மாட்டிங்களா அண்ணா..? டாடியிடமோ அம்மாவிடமோ சுசித்ராவிடம் பேசுங்கன்னு கேட்டு விட முடியாது.. அதற்கு என்ன அவசியம்ன்னு கேட்பாங்க.. நம் லெவலுக்கு ஈக்குவலா வேறு ஒரு அலையன்ஸ் பார்ப்போம்ன்னு சொல்வாங்க.. அதோடு என் பேரண்ட்ஸ் சுசித்ராவிடம் பேசினாங்கன்னு சுசீந்திரனுக்குத் தெரிந்து விட்டால் வேறு வினையே வேண்டாம்.. சுசித்ரா ரொம்ப சென்சிடிவ்ன்னு சொல்லியிருக்கார்.. அவளிடம் அவரும், அவளுடைய

டாடியும் டீப்பான் கொஸ்டின்களைக் கேட்டதில்லையாம்.. அவள் பதறிப் போய் பார்த்தாலே பேச்சை நிறுத்தி விடுவார்களாம்.. நானே அவளிடம் பேசக் கூடாதுன்னு வார்ன் பண்ணியிருக்கிறார்.. சீக்ரெட்டாத்தான் மீட் பண்ணியிருக்கிறேன்.. நான் பேசினேன்னு சுசித்ராவும் சொல்ல மாட்டா.. நானும் சொல்ல மாட்டேன்.. என் பேரண்ட்ஸ் அப்படி டீல் பண்ண மாட்டாங்க அண்ணா.. தேங்காயை உடைப்பதைப் போலப் பட்பட்டுன்னு சுசித்ராவின் மனம் புண்படப் பேசி விடுவாங்க.. அதை சுசீந்திரனிடமும் அவரோட பேரண்ட்ஸிடமும் சொல்லி விடுவாங்க.. அதற்குப் பின்னால் சுசீந்திரனோடு என் மேரேஜ் நடப்பது கனவாகி விடும்.."

"நோ.. நோ.. அவசரப்பட்டுப் பேச வேண்டாம் மாதங்கி.. நல்லதே நடக்கும்.. நாம் நல்லதையே நினைப்போம்.."

"நீங்க அவளுடன் பேசி அவள் மனதில் என்ன இருக்கிறதுன்னு தெரிந்து சொன்னா நல்லது நடக்க சான்ஸ் இருக்கு.."

"பெண்ணுக்குப் பெண் உங்களிடம் சொல்லாததை என்னிடம் சொல்லி விடுவாங்களா மாதங்கி..?"

"டவுட்தான்.. நீங்க கேட்பது கரெக்ட் கொஸ்டின்தான்.. எதுவுமே செய்யாமல் இருக்கிறதுக்கு எதையாவது செய்யனுமில்லையா..? ஃபாரின் காண்ட்ராக்ட்டுக்காக நம்ம கம்பெனி, சுசீந்திரனின் கம்பெனியிடம் ஒரு டீல் போட்டது.. அதற்காக அஸ் எ ஜிம்மா நீங்க சுசீந்திரனின் கம்பெனியோட ஜி.எம்மா இருக்கிற சுசித்ராவை மீட் பண்ணிப் பேசியிருக்கீங்க.. சேர்ந்து வேலை செய்திருக்கீங்க.. அந்த அறிமுகம் உங்களுக்கு அவளிடம் இருக்கு.. நீங்க ரெண்டு பேரும் ஃபிரண்டலியா பேசிச் சிரித்துக்கிட்டு இருந்ததை சுசீந்திரன் பார்த்திருக்கிறார்.. உங்களிடம்தான் அவள் சிரித்துப் பேசினாளாம்.. தங்கை சிரிப்பதைப் பார்த்து த்ரீ இயர்ஸ் ஆகிருச்சாம்.. கேசுவலாகப் பேசிக் கொண்டிருக்கும் போது சொன்னார்.. ஸோ.. சுசித்ரா உங்களிடம் ஃபிரண்ட்லியாப் பேசிப் பழகறா.. உங்களிடம் பேசுவதைப் போல வேறு யாரிடமும்

அவள் குளோசாப் பேசிப் பழகறதில்லை.. இது ஒரு அட்வான்ட்டேஜ் அண்ணா.. நாம் ஏன் இதை யூஸ் பண்ணிக்கக்கூடாது..?"

மாதங்கி கேட்ட தொனியை வாசுதேவன் விரும்பவில்லை.. அவனிடம் சுசித்ரா மனம் திறந்து பேசிப் பழகுவதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற வார்த்தைப் பிரயோகமே அவனுக்குப் பிடிக்கவில்லை..

'பட் மாதங்கி இன்னொஸென்ட்.. சுசித்ராவை எனக்கு அஃபிசியலாத் தெரிவதற்கு முன்பே பக்கத்து வீட்டுப் பஜாரியின் உபயத்தால் கொஞ்சம் பெர்சனலாகவும் தெரியும், அவள்மீது என் மனதில் ஓர் ஷாப்ட் கார்னர் இருக்கிறதுன்னு இவளுக்குத் தெரியாது.. இவளோட வியூவில் இருந்து இவ பேசுகிறா..' மனதை சமாதானப் படுத்திக் கொண்டவன்..

"ஓகே.. நான் பேசிப் பார்க்கிறேன்.." என்று சம்மதித்து விட்டான்..

மாதங்கி சொன்ன செய்திகளில் ஒன்று மயிலிறகாய் வாசுதேவனின் மனதை வருடிக் கொண்டிருந்தது.. அது அவனிடம் மட்டும்தான் சுசித்ரா மனம் விட்டுப் பேசிச் சிரித்தாள் என்று சுசீந்திரனே சொன்னதாகச் சொன்னது..

'ஈஸிட்..? என்னிடம் பேசியதைப் போல வேறு யாரிடமும் அவள் பேசினதில்லையா..?' அவனது மனம் சிறகடித்தது..

அந்த சந்தோசத்தை மறுபடியும் அனுபவிக்க அவனுக்கு ஓர் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.. சுசித்ராவிடம் பேசிப் பழக மாதங்கி ஓர் காரணத்தை உருவாக்கித் தந்திருக்கிறாள்.. கரும்பு தின்ன ஏன் அவன் தயங்க வேண்டும்..? இதனால் மாதங்கியின் விருப்பப்படி சுசீந்திரனுடனான அவளது திருமணம் தடையின்றி நடந்தாலும் நடந்து விடலாம்.. தன் கம்பெனியில் ஜி.எம்மாக வேலை பார்ப்பவன் என்ற பேதம் பார்க்காமல் மனப்பூர்வமாக அவனை அண்ணா, அண்ணா என்று அழைக்கும் மாதங்கிக்கான நன்மையை ஓர் அண்ணனாக அவன் செய்தற்கான வாய்ப்பும் இதுதானே..

"தேங்க்ஸ் அண்ணா.." மாதங்கியின் முகம் மலர்ந்தது..

"ஐ ஷல் டூ மை பெஸ்ட்.." அதற்கு மேல் பேச வாசுதேவன் தயங்கினான்.. ஒருவேளை சுசித்ரா மனம் மாறாவிட்டால் என்ற கேள்வியை மனதுக்குள் புதைத்துக் கொண்டான்..

நம்பிக்கையாக முகம் பார்ப்பவளிடம் எப்படி அதைச் சொல்வது..?

"நீங்க பேசுங்க அண்ணா.. ரிசல்ட் என்னன்னு இப்பவே டிஸ்கஸ் பண்ண வேண்டாம்.." என்று மாதங்கி சொல்லிவிட்டாள்..

மாதங்கி கிளம்பிப் போனதும் கருணாகரன் கேபினுக்குள் வந்தான்.. மாதங்கி வாசுதேவனிடம் என்ன பேசினாள் என்பதைத் தெரிந்து கொள்ளாவிட்டால் அவனுக்குத் தலை வெடித்துவிடும் போல இருந்தது..

"என்னவாம்டா..?" ஆர்வமாகக் கேட்டான்..

"எதைக் கேட்கிற..?" ஒன்றும் அறியாதவனைப் போல முகத்தை வைத்துக் கொண்டான் வாசுதேவன்.

"நீ ஒன்னும் தெரியாத சின்னக் கண்ணன்தான்.."

"நீ எல்லாம் தெரிந்த அறிவாளிதான்.. போ.. போய் வேலையைப் பாரு.. அயர்லாந்துக் கம்பெனியோடு அக்ரிமெண்ட் போட்டிருக்கோம்.. நினைவில் இருக்கில்ல..?"

"அதை நான் நினைவில் வைத்து என்ன பண்ணப் போறேன்..? அதுக்குத்தான் நீ இருக்கியே.."

"ஆக.. வாங்கற சம்பளத்துக்கு ஒரு துரும்பைக் கிள்ளிப் போடக் கூட உன்னால் முடியாது..?"

"பேச்சை மாத்தாதே... எம்.டியோட டாட்டர் உன்னோடு இம்புட்டு நேரமா என்னத்த டிஸ்கஸ் பண்ணுனாங்க..?"

இதிலெல்லாம் கருணாகரன் செம விவரம்.. தூக்கத்தில் எழுப்பினால் கூட எம்.டியைப் பற்றியும் அவனுடைய மகளைப் பற்றியும் படு மரியாதையாகப் பேசுவான்..

தனித்துப் பேசுகிறோம் என்ற நம்பிக்கையில் வாய் விட்டு விட மாட்டான்..

'எதுக்கு வம்பு..? ஆபிஸீக்குள்ளே எந்த இடத்தில சிசிடிவி கேமரா இருக்குதுன்னு யாருக்குத் தெரியும்..?'

நண்பனின் முன்னெச்சரிக்கையை மனதுக்குள் குறித்துக் கொண்ட வாசுதேவன்..

"அலர்ட் ஆறுமுகம்டா நீ.." என்று சிலாகித்தான்..

"பட்டம் கொடுக்கிறதெல்லாம் இருக்கட்டும்.. அவங்ககூட என்ன பேசின..?"

"கம்பெனியைப் பற்றிப் பேசினோம்.."

எதைச் சொன்னால் கருணாகரன் தூண்டித் துருவ மாட்டானோ.. அதைச் சொன்னான் வாசுதேவன்..

"கம்பெனியைப் பற்றியா..?" விளக்கெண்ணையைக் குடித்ததைப் போல முகத்தை வைத்துக் கொண்டான் கருணாகரன்..

"கம்பெனியைப் பற்றித்தான்.. இவங்க சொல்கிற சில ஐடியாக்கள எம்.டி காதில் போட்டுக்க மாட்டேங்கிறாராம்.. அதனால் அப்பாவுக்கும் பெண்ணுக்கும் இடையில் கருத்து மோதல்.."

"கருத்து மோதலா..? அப்படின்னா..?"

கருத்துச் சொல்லிப் பழக்கமில்லாத கருணாகரன் விளக்கம் கேட்டான்.. வாசுதேவனும் பார்க்க வேண்டிய வேலைகளைக் கிடப்பில் போட்டு விட்டு விளக்கம் சொல்ல ஆரம்பித்தான்..

"கருத்து மோதல்ன்னா வேறுபட்ட சிந்தனைகளை எடுத்துச் சொல்லி கத்திச் சண்டை போட்டுக்கிறது.."

"கத்திச் சண்டையா..?"

"இது அந்தக் 'கத்தி'ச் சண்டையில்லைடா.. மடையா.. வாயாலே கத்தி சண்டை போட்டுக்கிறது..?"

"ப்பூ.. இதுக்குத்தான் இம்புட்டுப் பில்ட்-அப்பா..? எங்க ஊர்ல ஆத்தங்கரையிலயும் குழாயடியிலயும் லேடிஸ் கத்திக் கத்தி சண்டை போடுவாங்க பாரு.. அனல் பறக்கும்.. அத்தனை பேரும் சைதை தமிழரசிகதான்.. டிக்சனரியில இல்லாத வெர்ட்ஸா அள்ளிப் பறக்க விடுவாங்க.. அதைவிடவா பெரிசான கருத்து மோதல் இருக்க முடியும்..?"

"ஸோ.. நம்ம எம்.டியும், அவரோட டாட்டரும் டிஸ்கஸ் பண்றதை நீ குழாயடிச் சண்டைன்னு சொல்ற..?"

நிதானமாக வாசுதேவன் தூக்கிப் போட்ட அணுகுண்டில் சோபாவில் சாய்ந்து வாயடித்துக் கொண்டிருந்த கருணாகரன் அந்தலை சிந்தலையாகி விட்டான்..

"நான் எப்போடா அப்படிச் சொன்னேன்..?" என்று நெஞ்சைப் பிடித்துக் கொண்டான்.

"இப்போச் சொன்னியேடா.."

"ஐயா..! சாமி..! ஆளை விடு.. தெரியாம உன் கேபின் பக்கம் வந்துட்டேன்.. எம்.டியோட டாட்டர் என்ன பேசினாங்கன்னு கேட்டுட்டேன்.. அதுக்காக இப்புடிக் கவிழ்க்கறேயேடா மச்சான்.."

"நீ அப்படித்தாண்டா சொன்ன.."

"நான் ஓடியே போயிட்டேன்.. உன்கூட இருக்கிற ஒவ்வொரு செகண்டும் எனக்குத்தான் ஆபத்து.."

"தெரியுதில்ல.. ஸ்டார்ட் ரன்.."

வாசுதேவன் சொல்லி வாய் மூடுவதற்குள் கருணாகரன்.. 'டிஷ்' என மாயமாக மறையாத குறையாக ஓடி விட்டான்..

'அஃது..'

வாசுதேவன் செல்போனை எடுத்தான்.. மன்மதனின் வில்லை எடுத்து மலர்க்கணையைப் பூட்டுவதைப் போல மனதுக்குள் மழைச்சாரல்..

'ரொம்பவும் துள்ளாதே.. நீ மாதங்கிக்காகத்தான் பேசப் போகிற.. அதை மனசில வை..' உற்சாகத்தை அடக்கிக்

கொண்டு சுசித்ராவின் செல்போன் நம்பர்களை அழுத்தினான்..

"ஹலோ.." சோர்வு நிரம்பிய மென்மையான குரல் அவனது செவிகளை வருடியது..

"வாசுதேவன் பேசறேங்க.."

"ஐ நோ.. சொல்லுங்க.."

அவனது போன் நம்பர் இது என்பதை பதிந்து வைத்திருக்கிறாளா..? மனதுக்குள் பெய்த மழை அதிகரித்தது..

"உங்களுடன் பேசனுமே.."

"ம்ம்ம்.."

ஒற்றை எழுத்தின் சம்மதம் அவனை பேச அழைத்தது..

## 21

மழை கொட்டிக் கொண்டிருந்தது.. கண்ணாடி கதவுகளுக்கு வெளியே மழைத் தாரைகளின் கோடுகளும், புள்ளிகளும் கோட்டோவியம் போலத் தெளிவில்லாத தெளிவோடு ஈர்த்தன.. அவன் மனதில் கொட்டிய மழை எப்போது கார்மேகத்திற்கு இடம் பெயர்ந்தது என்று அவன் யோசித்தான்.. வெளிர் நீலத்தில் சன்னமான ஜரிகைக் கரையிட்ட சேலையை உடுத்தியிருந்த சுசித்ரா தேவதையைப் போல அவனெதிரில் அமர்ந்திருந்தாள்.. மழையிருட்டு ரெஸ்ட்டாரெண்டுக்குள் வரவில்லை.. ஒளிர்ந்த விளக்கின் வெளிச்சம் அவர்களை நனைத்துக் கொண்டிருந்தது.. வாசுதேவன் அவளது முகம் பார்த்துக் கொண்டிருக்க அவள் விரல்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள்..

வந்ததிலிருந்து இப்படித்தான்.. வாசுதேவன் முதலில் வந்து காத்திருக்க அவள் அன்னப்பட்ஷியைப் போல அசைந்தபடி வந்து சேர்ந்தாள்.. கோபித்துக் கொள்ள முடியவில்லை..

சோர்ந்திருந்த அவளது முகம் அவன் மனதை பாதித்து கோபத்தை விரட்டி விட்டு விட்டது.. கோபம் கொள்ள மனம் வரவில்லை.. அமைதியாக உட்கார்ந்தவள் அதிலேயே மூழ்கிப் போனாள்..

மௌனம் என்பது பெரும் இரும்புத்திரையாய் அவனுக்கும் அவளுக்கும் இடையில் நங்கூரமிட்டு நின்று விட்டது.. திரை விலக்கி அவளை அணுகுவது வெகு சுலபம்.. அவன் தீரன்.. பெண்களிடம் அதுவும் மனதைக் கிள்ளும் மென்மையான சுபாவம் கொண்ட தேவதைப் பெண்களிடம் அவன் தீரம் காட்டுவதில்லை.. பொறுமை காத்தான்..

"வாட் டு யு வான்ட் சர்..?"

வெண்மை நிறச் சட்டை, கருப்பு வண்ண பேன்ட், டை சகிதம் வெளிநாட்டுக் கம்பெனியின் எக்ஸ்யூட்டிவ்வைப் போல உள்ளங்கைக்குள் அடங்கும் போன் வடிவக் கருவியுடன் பேரர் வந்து நின்று இரும்புத்திரையை விலக்க வாசுதேவனுக்கு வழி காட்டினான்..

"என்ன சாப்பிடறீங்க..?" வாசுதேவன் மௌனமெனும் இரும்புத் திரையைத் தகர்த்து அதன் பின்னால் மறைந்திருந்த சுசித்ராவை வெளியே இழுத்து விட்டான்..

"எதுவும் வேண்டாம்.." அவள் மௌனத்தை உடைத்து விட்டாள்..

"உங்களுடன் பேச வேண்டும் என்பதற்காக வீட்டுக்குக் கூடப் போகாமல் நேரே ரெஸ்ட்டாரெண்டுக்கு வந்து விட்டேன்.. செம பசி.. எதையாவது வயிற்றில் போட்டால்தான் வாயைத் திறக்கவே முடியும்.."

"நீங்க சாப்பிடுங்க.."

"உங்களைப் பார்க்க வைத்துக்கிட்டுச் சாப்பிடச் சொல்கிறீங்களா..? என்னால் முடியாதுங்க.. எங்க அம்மா என்னை அப்படி வளர்க்கலை.."

"இதுக்கு எதுக்குங்க அம்மாவை இழுக்கறீங்க..?"

சுசித்ராவின் முகத்தில் இளநகை வந்தது.. அவள் சிரிக்க ஆரம்பிக்கிறாள் என்பதில் வாசுதேவனின் மனம் லேசானது..

'இதை இப்படியே மெயின்டெயின் பண்ணு வாசுதேவா..' மனதிற்குள் சொல்லிக் கொண்டவன்,

"அவங்களைத்தானே இழுக்க முடியும்..? உங்களை இழுத்தாச் சண்டைக்கு வந்துவிட மாட்டிங்களா..?" என்று படு வினயமாக கேட்டு வைத்தான்..

"இழுத்து விடுவீங்களோ.." சுசித்ராவின் முகம் சிவந்து விட்டது.. அது வெட்கத்தினால் என்பதை அவளது விழிகள் காட்டிக் கொடுத்தன..

"மாட்டேன்னுதானே சொல்றேன்.. ஐ ஆம் இன்னொஸென்ட்ங்க.."

"யாரு..? நீங்க..? நம்பிட்டேன்.. அது என்ன எங்க கம்பெனிக்கு வந்தப்ப விறைப்பாப் பேசறீங்க.. இங்கே வேற மாதிரி பேசறீங்க.."

"ஒரு மாதிரிப் பேசினேனா..? அதைச் சொல்லுங்க.."

வாசுதேவனின் விசமத்தில் அவளது இமைகள் படபடத்தன.. மழைக்கு ஏங்கும் சாதகப்பட்ஷியைப் போல இலகுவான உரையாடலுக்கு அவளது மனம் ஏங்குவதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.. செல்வச் சீமாட்டி அவள்.. பிரியத்தைத் தேடுவதில் வறியவளா..?

வாசுதேவன் இளகிப் போனான்.. அவளது விழி நீர் துடைத்து நானிருக்கிறேன் உனக்கு என்று சொல்ல முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்..? அதைச் சொல்ல முடியாமல் வாழ்க்கை தடுக்கிறதே.. உயரத்தில் அவள்.. அண்ணாந்து பார்க்கும் அவன்.. விதி வகுத்த இந்த நியதியில் அவன் விலகித்தானே நின்றாக வேண்டும்..? வானத்தில் பவனி வரும் நிலவை ரசிக்கலாம்.. கையில் எட்டிப் பிடித்து விட முடியுமா..? அது போலதான் அவளும்..

வாழ்க்கைப் பயணத்தின் ஊடே அவனும் அவளும் சந்தித்துக் கொண்டதே அரிதான ஒன்று.. அதிலும் அவனுடன் அவள் சேர்ந்து உட்கார்ந்து பேசிச் சிரிப்பது அரிதிலும் அரிதானது.. இதற்கு மேல் ஆசைப்படக் கூடாது என்று அவளது முகம் பார்த்தான்.. சோர்ந்திருந்தாள்.. விழிகளில் நிராசை நிரம்பியிருந்தது..

காலமென்னும் கடலில் கரை சேர்ந்தால் போதும் என்ற மனநிலை அவனுக்கு இருக்கலாம்.. அவளுக்கு இருப்பதுதான் அவனுக்கு ஆச்சரியத்தைத் தந்தது..

அலைகடலின் ஆர்ப்பரிப்பில் சிக்கிக் கொண்ட தோணியைப்போல அவளது முகம் பரிதவித்தது.. காப்பாற்றிக் கரை சேர்க்க எவரும் வர மாட்டார்களா என்று தேடும் பார்வையினை அவளிடம் கண்டான் அவன்.. மனம் தாளவில்லை.. வரம் கொடுக்கும் தேவதை வரம் கேட்பதா என்று துடித்துப் போனான்..

என்னதான் அவனது விசமப் பேச்சில் அவள் துயரத்திலிருந்து விடுபட முனைந்தாலும் அவளை அமுக்கியிருக்கும் துயரம் அவ்வளவு எளிதாக அவளைச் சிறகடிக்க விடவில்லை என்பதை கண்டு கொண்டவனுக்கு இரக்கமாக இருந்தது..

"சொல்லுங்க.. நான் ஒரு மாதிரிப் பேசினேனா..?" அவன் அவளைப் பேச்சுக்குள் இழுத்தான்..

"பலமாதிரி பேசினிங்க.." சிரித்தாள் சுசித்ரா..

"பசி மயக்கத்திலே பேசியிருப்பேங்க.. இப்ப உங்களுக்கும் சேர்த்து நான் ஆர்டர் பண்றேன்.. எனக்குப் பிடித்த ஃபுட் அயிட்டம் உங்களுக்கும் பிடிக்கனும்னு ப்ரே பண்ணிக்கறேன்.."

அவன் சொல்லி வாய் மூடுவதற்குள் ரெஸ்ட்டாரெண்டில்..

"எனக்குப் பிடித்த பாடல் - அது

உனக்கும் பிடிக்குமே..

என் மனது போகும் பாதை - உன்

மனது அறியுமே.."

என்ற பாடல் ஒலித்தது.. பேச்சிழந்தவளாக அவள் பிரமிப்புடன் அவனைப் பார்த்தாள்.. புரிந்து கொள்ளலுடன் கூடிய சிறிய தலையசைவுடன் அவன் உணவு வகைகளைக் கூற பேரர் நகர்ந்து விட்டான்.. வாசுதேவன் கைகளை டேபிளில் பரப்பிக் குனிந்து அவளது முகம் பார்த்தான்.. ஊடுறுவும் அவனது பார்வையில் அவள் இமைகள் படபடக்கத் தலை குனிந்தாள்.. அந்த நொடியில் அவளுக்கும் அவனுக்கும் இடையில் இருந்த பொருளாதார ஏற்ற தாழ்வு மறைந்து போய்விட ஒரு ஆணாக பெண்மையின் பொழிவுடன் நாணும் சுசித்ராவை ஊன்றிப் பார்த்தான்..

"பேசனும்னு சொன்னீங்க.." அவன் முகம் பார்க்க முடியாத தவிப்புடன் அவள் முணுமுணுத்தாள்..

"ம்ம்ம்.. பேரர் ஆர்டர் எடுத்துட்டுப் போகட்டும்னு வெயிட் பண்ணினேன்.. ஃபுட் அயிட்டம்ஸ் வர கொஞ்ச நேரமாகும்.. இனி நாம் ஃப்ரீயாப் பேசலாம்.."

அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.. என்ன பேசப் போகிறாய் என்று அவளது விழிகள் கேட்டன..

"ஆக்சுலா நான் பேச வந்தது மாதங்கிக்காக.. யு நோ ஷி இஸ் மை எம்.டி'ஸ் டாட்டர்.. உங்களை எனக்குத் தெரியும்னு உங்க அண்ணன் சொன்னாராம்..

அதனால் உங்களிடம் அவங்களுக்காக நான் பேசனும்னு கேட்டுக்கிட்டாங்க.."

நாசுக்காக விவரத்தை உணர்த்தி விட்டான் வாசுதேவன்.. சுசித்ராவின் முகம் சோர்ந்தது.. கண்கள் கலங்கின..

"நோ.. நோ.." கண்டிப்புடன் அதட்டினான் வாசுதேவன்.

"மாதங்கி பேசும் போதும் அழுதீங்களாம்.. எந்தப் பிரச்னைக்கும் தீர்வு என்பது இல்லாமல் போய் விடாது சுசித்ரா.. நாமதான் அதைத் தேடனும்.. அழுதுக்கிட்டு

இருந்தா பிரச்னை நம்மை விட்டு ஓடி விடுமா..? சொல்லுங்க.."

"என் பிராப்ளத்துக்கு சொலுசனே கிடையாது மிஸ்டர் வாசுதேவன்.. கடைசிவரைக்கும் நான் தனிமரமாத்தான் நின்றாகனும்.. இதுதான் லைஃப்ன்னு ஆகிவிட்ட பின்பு நான் அதைப்பத்தி திங்க் பண்றதேயில்லை.. என்னோட துயரமெல்லாம் என்னோட பிராப்ளம் என் அண்ணனின் லைஃபையும் ஸ்வாஹா பண்ணக் கிளம்பியிருக்கே என்பதுதான்.."

'கடைசி வரைக்கும் தனி மரமா நிக்கப் போகிறாளா..? என்ன கழுதைக்காம்..?'

சுசித்ராவின் மனநிலையைக் குறித்து எழுந்த சந்தேகம் வந்த வழியில் ஓடிப் போய் விட்டது.. அவள் தெளிவான மனநிலையுடன் தான் இருக்கிறாள் என்பதில் வாசுதேவனுக்கு யாதொரு சந்தேகமுமில்லை.. மனநிலை சரியில்லாதவள் ஆழ்ந்த சிந்தனையுடன் பேசுவாளா என்ன..?

"உங்க பெர்சனலைப் பத்திக் கேட்கிறேனேன்னு தப்பா நினைக்காதீங்க.. இப்ப கிளம்பியிருக்கிற பிரச்னைக்கான ஆணிவேரே உங்க பெர்சனலில்தான் இருக்கு என்கிறப்ப நான் அதைக் கேட்டுத்தான் ஆகனும்.."

ஆழ்ந்த குரலில் அறிவுறுத்தினான் வாசுதேவன்.. சுசித்ரா மௌனமாக விரல்களைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்..

'பத்து விரல்தானான்னு எண்ணிப் பார்க்கிறாளா..?'

எரிச்சல் வந்தது.. அடக்கிக் கொண்டான்.. சுசித்ராவின் முன்னிலையில் அவனுக்கு எரிச்சல் ஏற்படுவது ஆச்சரியமான ஒன்றுதான்.. அவளைப் பற்றி நினைத்தாலே அவனுக்கு ஜில்லென்று இருக்கும்.. பனித்துகள்களின் மீது உருண்டு புரள்வதைப் போல சிலிர்த்துப் போவான்.. நினைவுக்கே அப்படியென்றால் எதிரில் அவள் நிஜமாக உட்கார்ந்திருக்கும் போது எப்படியெல்லாம் இருந்திருக்க வேண்டும்..?

'இவ இப்படிப் புலம்பினா ஜில்லுன்னுதான் இருந்து வைக்கும்..'

அலுப்பாக இருந்தது.. உலகத்தில் எத்தனையோ பெண்கள் இருக்க அவன் மனம் ஏன் இந்தச் சிக்கலான மனநிலையுடன் இருப்பவளைத் தேடிப் பிடித்து ஆராதனை செய்து தொலைக்கிறது..?

'அத்தனை மலர்களும் அனிச்ச மலருக்கு ஈடாகுமா..?' அவன் மனம் பாகாக உருகியது..

எதிரில் இருப்பவளைப் பார்த்தான்.. அவனது பார்வையைத் தாள மாட்டாதவளாக இமைகள் படபடக்கத் தலை குனிந்து கொண்டாள்.. அவனுக்குள் பிரியம் பொங்கியது..

'மோப்பக் குழையும் அனிச்சம்..!'

முகர்ந்தாலே வாடிப் போகும் தன்மை கொண்டதாம் அனிச்சமலர்..! மலரே மென்மையானது.. அந்த மலர்களில் அதிமென்மையான மலர் அனிச்சமலர்..! தொட்டால் சிணுங்கியைப் போல நம் மூச்சுக் காற்றுப் பட்டால்கூட தாங்கிக் கொள்ளாது..

"சுசித்ரா.." மென்மையாக அழைத்தான்.

"ம்ம்ம்.." இமைகள் படபடக்க ஏறிட்டாள்..

"ஏன் மேரேஜை அவாய்டு பண்றீங்க..?" கேட்டு விட்டான்..

சுசித்ரா உதடுகள் துடிக்க விரல்களை வெறித்தாள்.. அங்கே என்னதான் இருக்கிறது என்று விரல்களைப் பிடித்து உலுக்க வேண்டும் போன்ற ஆவேசம் வந்தது.. அந்தச் சாக்கில் அவளது விரல்களைப் பிடிக்க நினைக்கிறாய்தானே என்று அவனது மனச்சாட்சி கேலி செய்ததில் அடக்கிக் கொண்டான்..

"சொல்லுங்க சுசித்ரா.. இந்தக் கேள்விக்கு விடை கிடைக்காமல் நான் இங்கேயிருந்து போவதாக இல்லை.. உங்களையும் போக விடமாட்டேன்.. என்ன நடந்தாலும் சரி.. எனக்கு இந்தக் கேள்விக்கான ஆன்சர் கிடைத்தே ஆகனும்.. மாதங்கி என் எம்.டியின் மகள் என்றாலும் எனக்குத்

தங்கையைப் போல.. என்னை அவங்களோட கம்பெனியின் ஜி.எம்மா ஒருநாளும் நினைத்ததில்லை.. அண்ணா, அண்ணான்னு பாசமா கூப்பிடுவாங்க.. நானும் அவங்களை என் தங்கையாகத்தான் நினைக்கிறேன்.. உங்க அண்ணன் அவருடைய தங்கைக்காக நான் தங்கையாக நினைப்பவங்களை மேரேஜ் பண்ணிக்க முடியாதுன்னு சொன்னா, அவருடைய தங்கையிடம் ஏன் மேரேஜை அவாய்டு பண்ணி நான் தங்கையாக நினைப்பவங்களின் லைஃபில் விளையாடறீங்கன்னு கேட்கிற ரைட்ஸ் எனக்கு இருக்குன்னு நம்பறேன்.."

சொல்ல வந்ததைத் தான் சரியாக சொல்லி விட்டோமா இல்லையா என்ற சந்தேகம் வாசுதேவனுக்கு வந்தது.. என்னுடைய தங்கையாருக்கு மனைவியாக விரும்பினாளோ அவருடைய தங்கை எனது கேள்விக்குப் பதில் சொல்லியே ஆக வேண்டும் என்ற ரீதியில் பேசி வைத்திருப்பதாகத் தோன்றியது.. வேறு எந்த வகையில்தான் பேசுவது..?

"என்ன சொன்னீங்க..?" இமைகள் படபடக்க அவள் இவனைக் கேட்டு வைத்தாள்..

அப்படி என்னத்தைச் சொல்ல கூடாத ஒன்றை அவன் சொல்லி விட்டான்..? வாசுதேவனுக்குப் புரியவில்லை..

"எதைக் கேட்கறீங்க..?" விளக்கம் கேட்டான்.

"மாதங்கியை உங்கள் தங்கைன்னா சொன்னீங்க..?"

"தங்கையைப் போலன்னு சொன்னேங்க.. அவங்க நான் வேலை பார்க்கிற கம்பெனியின் எம்.டியோட டாட்டர்.."

"தங்கையைப் போலன்னா தங்கை தானே..?"

எதற்கு இத்தனை விளக்கம் கேட்கிறாள் என்று அலுப்பாக இருந்தது.. மாதங்கி அவனுக்குத் தங்கையைப் போல என்று அவன் சொன்னது இடியாப்பச் சிக்கலுடன் கூடிய சொற்றொடரா..?

"தங்கையைப் போலன்னு சொன்னா தங்கைதாங்க.. அத்தை மகள்ன்னு அர்த்தம் வராதுன்னுதான் நினைக்கிறேன்.."

கடுப்புற்றவனாக அவன் இடக்காக சொல்லியதில் அவள் உதட்டைக் கடித்தாள்.. இவள் அனிச்சமலரே தான் என்று அவன் மனம் அவளைக் கொண்டாடக் கிளம்பி விட்டது..

"ஐ ஆம் ஸாரி.." முணுமுணுத்தாள்..

"ஹலோ.. உங்க ஸாரியெல்லாம் யாருக்கு வேண்டும்..? எனக்குத் தேவை,

நான் கேட்ட கேள்விக்கான பதில்.. ஸாரி சொல்லிட்டா விட்டு விடுவேன்னு நினைத்தீங்களா..?"

"விடாம என்னை மேரேஜ் பண்ணிக்குவீங்களா..?"

'என்னது..?..!..'

எதிர்பாராத பதில் போன்ற கேள்வியில் அவன் கேட்க நினைத்த கேள்வி தொண்டையில் சிக்கிக் கொண்டது.. விளையாட்டுக்குச் சொல்கிறாளோ என்று அவள் முகத்தை உற்றுப் பார்த்தான்.. முகம் சிவந்தாலும் அவளது பார்வையை விலக்கிக் கொள்ளாமல் நேர் கொண்ட பார்வையாக அவனைப் பார்த்ததில் அவள் விளையாட வில்லை என்பது உறுதியானது..

"என்னங்க.. பட்டுன்னு இப்படி ஒரு கேள்வியைக் கேட்டுட்டிங்க..?" அவனால் நம்ப முடியவில்லை..

"நீங்கதானே சொன்னீங்க.. மாதங்கி உங்களுக்குத் தங்கை.. நான் அவங்களோட மேரேஜ் நடப்பதற்குத் தடையாக இருக்கிறேன்னு... என் அண்ணனுக்காக நான் மேரேஜ் பண்ணிக்க டிசைட் பண்ணினா உங்க தங்கைக்காக நீங்க ஏன் என்னை மேரேஜ் பண்ணிக்க ஓகேன்னு சொல்லக் கூடாது..?"

'என்ன டீல்டி இது..!'

வாசுதேவன் இமைக்க மறந்து அவளையே பார்த்தான்.. செர்ரி பழங்கள் அவன் முன்னால் கூடை கூடையாக குவிந்து கிடப்பதைப் போல அவள் தெரிந்தாள்.

22

மணக்கோலம் பார்க்க வந்தேன்..

மணமகள் ஆனேன்..

மலர்சூட வந்தேன் - நான்

மலர் சூடிக் கொண்டேன்

விருந்துண்ண வந்தேன் - நான்

விருந்தாகிப் போனேன்..

டிவி பார்த்துக் கொண்டிருந்த போது சேனல்களை மாற்றியதில் ஏதோ ஓர் சேனலில் இந்தப் பாடலைக் கேட்ட ஞாபகம் வந்தது வாசுதேவனுக்கு.. வாழ்க்கை என்பது ஆச்சரியங்களை அள்ளித் தரும் அமுத சுரபி, அட்சயப் பாத்திரம் என்பதை அப்போதுதான் கண்டுணர்ந்தான்.. பிரமிப்பிலிருந்து அவனால் வெளியே வரவே முடியவில்லை.. சுசித்ராவின் மீது அவன் மனதில் ஓரமாக சிறு மையல் இருக்கிறதுதான்.. அதற்காக அவளைத் துரத்திப் பிடித்துக் காதலித்துக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் அவன் நினைத்ததில்லை..

இளம் வயது ஆண்களுக்கு வரும் ஈர்ப்புத்தான் அவனுக்கும் சுசித்ராவின் மீது இருந்தது.. அதைத் தாண்டி எதுவுமில்லை என்று சொல்ல முடியாமல் கனவில் வந்த தேவதையின் முகச் சாயலில் அவள் இருந்தாள்.. அதையும் அழகான பெண்கள் அனைவரும் தேவதையின் சாயலில்தான் இருப்பார்கள் என்று அவனால் தள்ளி

விட முடிந்தது.. வேறு வழியில்லை.. அவள் எட்டாத உயரத்தில் இருந்தாள்.. ஏதோ ஓர் நிர்பந்தத்திற்குக் கட்டுப் பட்டவளாக, புரியாத புதிராக.. இனம் காண முடியாத மர்ம வலைக்குள் சிக்குண்டவளாக.. தன் குடும்பத்திலிருந்து தனிமைப் படுத்திக் கொண்டவளாக.. ஓர் சோக வளையத்துக்குள் தன்னை சிறைப் படுத்திக் கொண்டிருந்தாள்..

வாசுதேவன் அவளுடன் பேசிப் பழக நினைத்திருந்தால் வாய்ப்புக்களை உருவாக்கியிருப்பான்.. அதற்காக அவன் மெனக்கெடவே தேவையில்லாமல் பக்கத்து வீட்டில் குடியிருந்த 'பஜாரி பல்லவி' சுசித்ராவின் பொறுப்பில்தான் இருந்தாள்..

'என்னங்க.. உங்க அண்ணின்னு நீங்க குடி வைத்திருக்கிற பொம்பளையினால எங்க நிம்மதி கெடுது.. அதைப் பத்திப் பேசனும்ங்க..' என்று சொல்லி அழைத்தால் சுசித்ரா என்னவோ ஏதோ என்று அவனை சந்திக்க வந்திருப்பாள்..

அப்படி அழைக்க வேண்டிய சூழலை அனுதினமும் பல்லவி உருவாக்கிக் கொண்டுதான் இருந்தாள் என்றாலும் வாசுதேவன் அதை முன்னிறுத்தி சுசித்ராவைச் சந்திக்க முயன்றதே இல்லை..

சுசித்ராவின் சூழலை அவன் பயன்படுத்திக் கொள்ள விரும்பவில்லை.. அனிச்ச மலரைப் போன்ற மென்மையான பெண்ணொருத்தியை வாழ்வில் சந்தித்ததே போதும் என்ற எண்ணம் அவனுக்கு.. பூப்போன்ற குணமுடையவளுக்கு பூப்போட்டு ஆராதிக்க வேண்டாம்.. புண்படுத்தாமல் இருந்தாலே போதும் என்றுதான் அவன் நினைத்தான்.. ஏதோ ஒரு காரணத்தினால் அவள் திருமணத்தைத் தவிர்க்கிறாள்.. பல்லவி எனும் சுமையைச் சுமந்து கொண்டிருக்கிறாள் என்பது அவனுக்குப் புரிந்திருந்தது.. அது என்னவென்று வினவுவது நாகரிகமாகாது என்று நாசுக்காக அதைப் பற்றிப் பேசாமல் வேறு பேச்சைப் பேசி அவளை சிரிக்க வைத்து அழகு பார்த்தவன் அவன்..

மாதங்கியின் மீதான அவனது பாசம் சுசித்ராவிடம் அவன் கடைபிடித்து வந்த எல்லைக் கோட்டைத் தாண்டிக் கேள்வி கேட்க வைத்து விட்டது.. அதற்கு அவள் இப்படியொரு பதில் கேள்வியைக் கேட்பாள் என்று அவன் துளியளவும் எதிர்பார்க்கவில்லை..

"ஆன்சர் மீ மிஸ்டர் வாசுதேவன்.. ஆர் யு மேரி மீ..?"

"ஆர் யு ப்ளே வித் மீ..?"

"ப்ளே..?" அவள் பெருமூச்சு விட்டாள்..

"விளையாட்டுத்தனமாக நான் இருந்த காலமெல்லாம் மலையேறி விட்டது வாசுதேவன்.. மூன்று வருசங்களுக்கு முன்னால் நான் கவலையில்லாமல் சிட்டுக்குருவியைப் போலச் சிறகடித்து பறந்து கொண்டிருந்தேன்.. இப்போது அப்படியில்லை.. சிறகடிக்க முடியாத நானா உங்களுடன் விளையாடப் போகிறேன்..?"

அந்தக் காலத்து கருப்பு வெள்ளைத் திரைப்படங்களில் வரும் கதாநாயகிகள் பேசும் வசனத்தைப் போல ஏற்ற இறக்கத்துடன் பேசியவளைப் பார்த்துத் தலையிலடித்துக் கொள்ளலாம் போல இருந்தது வாசுதேவனுக்கு.. இப்படியொரு துயரத்துடன் அவள் வாழ்வதற்கான காரணம் எதுவாக இருக்கக் கூடும்..?

"மேரேஜ் பண்ணிக்க மாட்டேன்னு சொன்னவங்க உங்க அண்ணனுக்காக மேரேஜ் பண்ணிக்க ஒப்புக்கிட்டிங்க.. சந்தோசம்.."

"சின்ன சேன்ஜ்.. உங்களை மேரேஜ் பண்ணிக்கத் தயார்ன்னு சொல்லியிருக்கிறேன்.. நீங்க அதை இன்னும் ஒப்புக்கலை.."

"உங்க ஊரில இது சின்ன சேன்ஜா..? ஏங்க மேரேஜ் பண்ணிக்கனும்னு டிசைட் பண்ணிட்டா உங்க வீட்டில் பார்க்கிற மாப்பிள்ளைக்கு ஓகே சொல்லி விட வேண்டியது தானே..? என்னை எதுக்குங்க இதில் கோர்த்து விடறீங்க..?"

இதைச் சொல்ல அவனுக்குச் சிரமமாகத்தான் இருந்தது.. என்ன செய்வது..? சுசித்ரா அவன் அண்ணாந்து பார்க்கும் உயரத்தில் இருந்து தொலைக்கிறாளே.. அவள் சொல்வதை சுசீந்திரனும் மாதங்கியும் எப்படி எடுத்துக் கொள்வார்களோ.. சந்தர்ப்பம் வாய்த்ததும் கோடிஸ்வரியை வளைத்துப் பிடித்து விட்டான் என்று அவர்களும் ஊர் உலகமும் சொல்லிவிட மாட்டார்களா..? கருணாகரனே அப்படித்தான் சொல்லி வைப்பான்..

"நீ மச்சக்காரண்டா.." என்று பொறாமையில் வெந்து பொசுங்கிப் போய் விடுவான்..

'தேவையா..?'

"கோர்த்து விடறதா..? ஆக.. என்னை மேரேஜ் பண்ணிக்கிறது என்பது மிகப் பெரிய பனிஷ்மெண்ட்டுன்னு உங்களுக்கே புரிந்திருக்கு.."

"சேச்சே.. நான் அப்படிச் சொல்லலை.."

"சொன்னாலும் தப்பில்லை.. அது உண்மைதான்.."

'என்னடா இது.. இப்படிச் சொல்றா.. ஒருவேளை, மூணு வருசத்துக்கு முன்னாடி இவ எசகு பிசகா எதிலாவது மாட்டியிருப்பாளோ.. காதல் அது இதுன்னு எல்லை மீறியிருப்பாளோ.. இல்லை ரேப்பில் சிக்கி..'

அதற்கு மேல் நினைக்கக் கூட முடியவில்லை.. இப்படியெல்லாம் நினைக்கிறோமே என்று அவனுக்கே என்னவோ போல ஆகிவிட்டது.. அவளது களங்கமற்ற பால்நிலவைப் போன்ற முகம் 'கயவா..' என்று சாடியதில் குற்ற உணர்வு கொண்டான்.. அவனும்தான் என்ன செய்வான்..? அவள் பேசி வைப்பது அப்படித்தானே அவனை நினைக்கத் தூண்டுகிறது..

"'செய்வனத் திருந்தச் செய்'ன்னு பெரியவங்க சொல்வாங்க.."

"திடிர்ன்னு மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடறீங்களே.. வாசுதேவன்.."

"இதையெல்லாம் தெளிவாப் பேசிருங்க.. மத்ததைச் சொதப்பிருங்க.."

"நான் சொதப்பல் ராணிதான்.. நீங்கதான் தெளிவாப் பேசறதில 'கிங்' ஆச்சே.. கிங் சொதப்பலாமா..?"

"யாரும் இங்கே சொதப்பலை ராணி அவர்களே.. செய்வன மட்டும் திருந்தச் செய்தால் போதாது.. சொல்வதையும் விளங்கச் சொல்லனும்னு சொல்ல வந்தேன்.."

"ஓ.. நீங்க அப்படி வர்றீங்களா..?"

"அப்பாடி.. ஒரு வழியாப் புரிஞ்சுக்கிட்டிங்க.."

வாசுதேவன் தண்ணீர் தம்ளரை எடுத்துத் தொண்டையில் சரிக்கப் போனான்.. ஆர்டர் கொடுத்த உணவு வகைகளுடன் பேரர் வந்து விட்டதில் தண்ணீரைக் கொஞ்சமாக 'சிப்' பண்ணிக் குடித்து விட்டு டேபிளில் வைத்தான்..

"ஏங்க..?" என்று கேட்டவளிடம்..

"எப்படியும் நீங்க ஒழுங்காய் சாப்பிடப் போகிறதில்லை.. சோகச் சித்திரம் போல எதையாவது புரியாமல் பேசிக்கிட்டு ஒருவாய் சாப்பிடப் போகிறீங்க.. எனக்குப் பிடிச்ச அயிட்டங்களா ஆர்டர் பண்ணியிருக்கேன்.. அத்தனையும் வேஸ்டாப் போயிராதா..?"

"அதுக்கு..?"

"ஃபுல் கட்டுக் கட்டனும்ங்க.. தண்ணி வயித்தை ரொப்பிட்டா சாப்பிட முடியாதே.."

"ஆஹா.. சொல்வதைத் திருந்தச் சொல்கிறது அப்படின்னா இதுதாங்க.. பட்.. எனக்கு செமத்தியாப் பசிக்குது.. உங்க பங்கையும் சேர்த்து நானே வெட்டினாலும் வெட்டிடுவேன்.."

"எப்படிங்க.. நீங்க சோகமா இருக்கீங்க.."

"இப்ப நீங்க சோகமாகிட்டிங்களே.. என்னை மேரேஜ் பண்ணிக்கிறதுன்னா ஹேப்பியான மேட்டர்ன்னு நினைத்தீங்களா..? என் சோகத்தை உங்களுக்கு

டிரான்ஸ்பர் பண்ணியாச்சு மிஸ்டர் வாசுதேவன்.. மனசு கொஞ்சம் லேசா இருக்குதா.. வயிறு பசிக்குது.."

தலையைச் சாய்த்து இமைகளைச் சிமிட்டி அவள் சொன்ன விதத்தில் மயங்கிப் போனான் அவன்.. இமைக்காமல் அவளையே பார்த்தவன்..

"இப்படி நீங்க இருக்கிறதா இருந்தா தாராளமா உங்க சோகத்தை நான் வாங்கிக்குவேங்க.." என்று ஆழ்ந்த குரலில் சொன்னான்..

அவள் முகத்தில் வந்தது நிம்மதியா, சந்தோசமா, நன்றியா, இல்லை இவை அனைத்தையும் கலந்த உணர்வுக் கலவையா என்று அவனால் அறுதியிட்டுக் கூற முடியவில்லை.. ஓர் நெருக்கத்தை மட்டும் அவனால் உணர முடிந்தது..

"எனக்குத் தெரியும் வாசுதேவன்.. அதனால்தான் இந்தக் கேள்வியை நான் உங்களிடம் கேட்டேன்.." மெல்லிய குரலில் அவள் சொன்னாள்..

வாசுதேவன் பதில் பேசவில்லை.. அவளைப் பேசவிட்டு அமைதி காத்தவனின் முன்னால் உணவுத் தட்டை நகர்த்தி வைத்து விட்டு அவள் சாப்பிட்டபடி பேச ஆரம்பித்தாள்.. உணவின் வாசனையில் ஆகர்ஷிக்கப்பட்ட வாசுதேவன் சாப்பிட்டபடி அவளுடன் உரையாட ஆரம்பித்தான்..

"நான் சொன்னால் நம்ப மாட்டிங்க வாசுதேவன்.."

"நீங்க எதைச் சொன்னாலும் நம்புவேங்க.."

"ஆஹா.. நம்பிட்டேன்.."

"என்னைத்தானே.."

"குட்ஜோக்.."

"ஊஹீம்.. நான் நம்பிக்கையைக் காப்பாத்தறவன்ங்க.."

அவன் சொன்னதை அங்கீகரிக்கும் விதமாக அவள் இமைகளை மூடித் திறந்த விதம் அவனை வசீகரித்தது.. அந்த நொடிகளை அவன் விரும்பி அனுபவித்தான்..

மனதுக்குப் பிடித்தவளுடன் தனித்து அமர்ந்து பேசுவது பரமசுகம்.. அன்று அவனுக்கு அது வாய்த்திருக்கிறது.. அதைக் கொண்டாட வேண்டாமா.. அந்த மணித்துளிகளில் நிலைத்திருக்க வேண்டாமா..?

"யெஸ்.. எனக்கு உங்கள் மீது அதிகமான நம்பிக்கை இருக்கிறது.. அதனால்தான் இந்த முடிவுக்கு வந்தேன்.. நீங்கள் நினைக்கலாம்.. அதற்கு உங்களை ஏன் நான் தேர்ந்தெடுத்தேன் என்று.. என் தோற்றத்தை ரசிக்காமல் என் மனதைப் பார்த்தவர் நீங்க.. என் மனக்குறைகளைக் கேட்டவர் நீங்க.. பர்ஸ்ட் டைம் உங்களை மீட் பண்ணினப்ப நீங்க தேர்ட் பெர்சன்னே எனக்குத் தோணலை.. மூன்று வருசங்களா யாரிடமும் பேசிப் பழகாமல் என்னை நானே தனிமைப் படுத்திக் கொண்டிருந்தேன்.. அதை உடைத்து என்னைப் பேச வைத்தவர் நீங்க.."

'இந்த அளவுக்கு இவள் என்னை நினைத்துப் பார்த்திருக்கிறாளா..?' வாசுதேவனுக்குள் பூமழை பொழிந்தது..

"உங்களிடம் நான் எதையும் கேட்கலாம் என்ற நம்பிக்கை எனக்குள் இருந்ததினால்தான் நீங்க பேசக் கூப்பிட்டதும் வந்தேன்.. வரும்போதே இந்தக் கேள்வியை உங்களிடம் கேட்க வேண்டும் என்ற டிசிசனோடுதான் வந்தேன்.."

"தேங்க் யு சுசித்ரா.. என் மீது உங்களுக்கு இருக்கும் உயர்ந்த ஒப்பினியனுக்கு நன்றி.. பட்.. உங்க ஸ்டேட்டஸ் வேறு.. என் ஸ்டேட்டஸ் வேறு.. எனக்கு உங்களைப் பிடிக்கும்தான்.."

இதைச் சொல்லும் போது அவளது விழிகளை உற்றுப் பார்த்தபடி சொன்னான் வாசுதேவன்.. வெட்கத்துடன் முகம் மலர்ந்தாள் சுசித்ரா.. கூடவே சோக மூட்டம்.. அது எதனால் என்று அவனுக்குத் தெரிய வேண்டியிருந்தது.. அதைத் தெரிந்து கொள்ளாமல் எந்த ஒரு வாக்குறுதியையும் அவனால் கொடுத்து விட முடியாது..

"அதற்காக நீங்கள் கேட்பதற்கு ஒகே சொல்லி விட முடியாது.. நாலையும் யோசிக்னும்.. உங்க ஸ்டேடஸ்றகாக

உங்களை மேரேஜ் பண்ணிக்கிட்டேன்னு மத்தவங்க பேசுவாங்க.."

"அதில் உண்மையில்லைன்னு உங்களுக்கும் தெரியும்.. எனக்கும் தெரியும்.. இது ஒரு டீல்.. தட்ஸ் ஆல்.."

"நினைத்தேன்.." ஊடுறுவும் பார்வையுடன் சொன்னான் வாசுதேவன்..

சுசித்ராவின் விழிகள் கலங்கி விட்டன.. அவளால் வாசுதேவனின் முகத்தை நிமிர்ந்து கூடப் பார்க்க முடியவில்லை..

"சங்கடப்பட வேண்டாம்.. நம்ம ஊரில ஒருத்தனை 'இவன் ரொம்ப நல்லவன்'னு சொல்லிட்டா சந்தோசப் பட்டிற முடியாது.. வைச்சுச் செய்யப் போறாங்கன்னு புரிஞ்சுக்கனும்.. இவன் எத்தனை அடி அடிச்சாலும் தாங்குவான்னு தயாராகிட்டாங்கன்னு சுதாரிச்சுக்கனும்.."

"ஐ ஆம் ஸோ ஸாரி மிஸ்டர் வாசுதேவன்.. அண்ணனின் மேரேஜீக்கு நான் தடையா இருக்கேன்.."

"அதுக்கு என்னை பொலி போடலாம்ன்னு டிசைட் பண்ணினீங்க பாருங்க.. அங்கே நிக்கறீங்க நீங்க.."

"ஜஸ்ட் டூ இயர்ஸ் வாசுதேவன்.."

"எதுக்கு..?"

"நம்ம மேரேஜ் அக்ரிமெண்ட் முடிவதற்கு.."

"மேரேஜீக்கே நான் ஓகே சொல்லலைங்க... எங்க ஃபேமிலி கல்ச்சரே வேறங்க.. கல்யாணம்ங்கிறது அவங்களுக்கு ஆயிரம் காலத்துப் பயிர்.. இந்த அக்ரிமெண்ட், டீல், இதெல்லாம் பிஸினெஸ்ஸில பேசனும்.. கல்யாணத்தில வரக் கூடாதும்பாங்க.."

"ப்ளீஸ் வாசுதேவன்.. டூ இயர்ஸில அண்ணாவுக்கும் மாதங்கிக்கும் பேபி பிறந்துரும்.."

"நமக்கு..?"

இதைச் சொல்லும் போதே நாவில் தேனூருவதைப் போல இருந்தது வாசுதேவனுக்கு.. திருமணம் என்ற பந்தத்தை அவள் முன்னிறுத்தி அதைப் பற்றி பேச ஆரம்பித்து விட்ட பின்னால் வரம்பாவது, ஒன்றாவது.. எல்லைக் கோடுகளுக்கு எல்லாம் இடமேயில்லை..

"நமக்கா..?" சுசித்ரா தடுமாறினாள்..

"நமக்குத்தான்.." வாசுதேவன் அழுத்தமாகச் சொன்னான்..

"நான்.. வந்து.. நீங்க.."

"சொல்லுங்க.."

"நாம் மேரேஜ் பண்ணிக்கலாம் வாசுதேவன்.. டூ இயர்ஸ் கழித்து டைவர்ஸ் பண்ணிக்கலாம்.."

"ஓ.."

"அது வரைக்கும் நாம் மத்தவங்க கண்ணுக்கு முன்னாடி ஹஸ்பெண்ட் அண்ட் வொய்ப் போல நடிக்கனும்.. தனிப்பட்ட முறையில் பிரண்ட்ஸ்.."

"என்ன கழுதைக்கு..?"

நிதானமாகக் கேட்டான் வாசுதேவன்.. சுசித்ராவின் பார்வையில் இருந்த இறைஞ்சுதலை அவன் சட்டை பண்ணவே இல்லை.. அவனது வாழ்க்கையோடும், ஆசையோடும், உணர்வுகளோடும் அவள் விளையாட முற்படும்போது அவளது உணர்வுகளுக்கு ஏன் அவன் மதிப்புக் கொடுக்க வேண்டும்..?

23

"வாசுதேவன்.."

சுசித்ராவின் குரல் நடுங்கியது.. இதுபோன்ற பேச்சுக்களை அவள் முதன் முறையாகப் பேசுகிறாள் என்பதை அவனால்

புரிந்து கொள்ள முடிந்தது.. ஆண் உணராத பெண்ணின் நாணமா..?

அனிச்ச மலரின் குணத்தைக் கொண்ட சுசித்ராவின் மனதையும் உடலையும் வேறு ஒரு ஆண் ஸ்பரிசித்திருந்தால் இதுபோன்ற வெட்கமும், தடுமாற்மும் அவளிடம் வந்திருக்காதே..

'அப்புறம் ஏன் எதுவோ நடந்து விட்டதைப் போலவே பேசி வைக்கிறா..?'

புரியாத புதிராக தெரிந்தாள் சுசித்ரா..

'ரகசிய சுரங்கம் நீ..

நாடக அரங்கம் நீ..

சோதனைக் களம் அல்லவா..?'

வாசுதேவனின் மனதில் பாடல் வரிகள் தோன்றின..

"நான் முற்றும் துறந்த முனிவன் இல்லை சுசித்ரா.. கல்யாணம் என்பது வாழ்க்கையில் ஓர் முறைதான் என்கிற கொள்கையுடையவன்.. வரப் போகும் மனைவியிடம் தீர்த்துக் கொள்ள ஆசையும், தவிப்பும் என்னிடம் ஏராளமாக இருக்கின்றன.. புலனடக்கி வாழ்வதெல்லாம் எனக்கு கஷ்டம்.. ஸோ.. உங்க டீல்படி என்னால் தள்ளியிருக்கவும் முடியாது.. அக்ரிமெண்டின்படி ரெண்டு வருசத்தில டைவர்ஸ் கொடுக்கவும் முடியாது.. உங்களைப் புரிஞ்சுக்கிட்டவன்னு சொல்கிறீங்க.. நம்பிக்கையானவன்னு நம்பறீங்க.. அதனால்தான் வெளிப்படையா பேச வேண்டியதா இருக்கு.. இன்றைக்கு உங்களோட புகழ்ச்சிக்கு மயங்கி 'ஓகே' சொல்லிட்டு நாளைக்கு விலகியும் நிற்க முடியாது.. உங்களை விலக விடவும் முடியாது.."

"வேண்டாம் வாசுதேவன்.. என்னால் உங்களுக்கு ஏற்ற மனைவியா வாழ முடியாது.."

"அதை நீங்க சொல்லக்கூடாது.. உங்களுடன் வாழப் போகிற நான் சொல்லனும்.. உங்களை உங்களுக்காகவே

விரும்புகிறேன் சுசித்ரா.. யெஸ்.. ஐ லைக் யு.. 'லவ் யு'ன்னு ஏன் சொல்லலை தெரியுமா.. அது உங்களுக்கு விலங்காகி விடக் கூடாது.."

"என்ன சொன்னீங்க..?"

அதிர்ச்சியுடன் கேட்டாள் சுசித்ரா.. எதற்கு இந்த அதிர்ச்சி என்று ஒரு மண்ணும் புரியாமல் அவன் எரிச்சலடைந்தான்.. அவள் சொன்ன டீலுக்கும் அக்ரிமெண்டுக்குமே அயராமல் அதிர்ச்சியடையாமல் அவன் நிதானமாகப் பேசிக் கொண்டிருக்கிறான்..

இவன் சொன்ன இரண்டு சொல்லுக்கு (அதிலும் ஒரு சொல், ஒற்றையே ஒற்றை எழுத்து..) அவள் அதிர்ச்சியாகிறாள்..

'நான் பார்த்தாலும் பார்த்தேன்.. இவளைப் போல விசித்திரமான ஒருத்தியைப் பார்த்ததே இல்லைடா சாமி..'

"சொல்லுங்க வாசுதேவன்.. என்ன சொன்னீங்க..?"

"நீங்க சொன்னதைப் போல எடக்கு மடக்கா எதையும் சொல்லிடலைங்க.. எனது காதல் உங்களுக்குத் தளை போட்டு விடக் கூடாதுன்னு சொன்னேன்.."

"யு ஆர் ஸோ கிரேட் வாசுதேவன்.. இப்பப் புரியுதா நான் ஏன் இந்த டீலிங்கையும் அக்ரிமெண்டையும் உங்களிடம் சொன்னேன்னு.."

"இப்பப் புரியுதா.. நான் ஏன் இந்த டிடர்ஜென்ட் சோப்பை வாங்கினேன்னு கேக்கிற மாதிரியே கேட்டு வைக்கறீங்களேங்க.. உங்களுக்கே இது நல்லாயிருக்கா..? வாழ்க்கைன்னா உங்களுக்கு அவ்வளவு ஈஸியாப் போயிருச்சா..? உங்க லைஃபில் என்ன நடந்தது.. ஏது நடந்ததுன்னு எனக்குத் தெரியாது.. எது நடந்திருந்தாலும் அதற்காக என் வாழ்க்கையை பணயம் வைக்க நினைக்காதீங்க.. உங்களுக்கு அந்த ரைட்ஸ் இல்லை.."

சுசித்ராவின் முகம் விழுந்து விட்டது.. அவள் எதிர்பார்த்து வந்தது நடக்கவில்லை என்பதில் ஏமாற்றத்துடன்

வெகுண்டாள்..

"அப்ப.. என்னையும் நீங்க மீட் பண்ணியிருக்கக் கூடாது.. ஏன் நான் மேரேஜை அவாய்டு பண்றேன்னு கேட்டிருக்கக் கூடாது.. உங்க தங்கையின் மேரேஜீக்காக என்னைக் கொஸ்டின் பண்ற ரைட்ஸ் உங்களுக்கு வந்து விடுமா..? யார் அந்த ரைட்ஸைக் கொடுத்தது..?"

"ஓ.. நீங்க இப்படிக்கா வர்றீங்களே.. நான் கேட்டது தப்புத்தாங்க.. எந்த ரைட்ஸீம் எனக்கு வேண்டாம்.. உங்க அண்ணன் மேரேஜ் பண்ணிக்கிட்டா எனக்கென்ன..? உங்களைப் போலவே தனிமரமா துணைக்கு நின்றா எனக்கென்ன..? யாரோ எக்கேடோ கெட்டுப் போங்க..

கூடப் பிறந்த உங்களுக்கு இல்லாத அக்கறை எனக்கு எதுக்கு..? மாதங்கிக்கு என்னங்க.. கொஞ்ச நாள் வருத்தப் படுவாங்க.. அதுக்கப்புறம் சுசீந்திரனை விடப் பெட்டரா மாப்பிள்ளை பார்த்து அவங்கப்பா கல்யாணம் பண்ணி வைப்பார்.. இழப்பு மாதங்கிக்கு இல்லை.. உங்க அண்ணனுக்குத் தான்.. தெரிந்தவங்களாச்சேன்னு நியாயம் பேச வந்தா என்னைப் புருசன் மாதிரி நடிக்கவா சொல்கிறீங்க..? தேவைதாங்க எனக்கு.."

சுர்ரென கோபம் தலைக்கேற கத்தி விட்டான் வாசுதேவன்.. சுசித்ரா மிரண்டு போனாள்.. மற்ற டேபிள்களில் இருந்தவர்கள் திரும்பிப் பார்த்ததில்..

"ப்ளீஸ்.. சவுண்டை ரெய்ஸ் பண்ணாதீங்க.. எனக்கு ஷேமா இருக்கு.." என்று வேண்டிக் கேட்டுக் கொண்டாள்.

வாசுதேவன் பல்லைக் கடித்தபடி தன் கோபத்தை அடக்கிக் கொண்டு அடிக்குரலில் சீறினான்..

"சம்பந்தமே இல்லாம பஞ்சாயத்து பேச வந்தேன் பாருங்க.. எனக்கு இது தேவைதான்.. கல்யாணம் பண்ணிக்கிட்டு இரண்டு வருசப் புருசனா நடிக்கச் சொல்கிறீங்க பாருங்க.. அது எனக்கு ஷேமிலும் ஷேமா இருக்கு.."

"நீங்க ப்ரெண்ட்லி டைப்ன்னு நினைத்து.. ஒரு ஹெல்ப்பா.." சுசித்ரா மென்று விழுங்கினாள்..

"ப்ரெண்ட்லியாப் பேசிப் பழகினா..? நீங்க எது வேண்டும்னாலும் கேட்டுருவீங்களா..? இதுக்கு நான் எனிமியாகவே பேசிப் பழகியிருக்கலாம் போல இருக்கே.." பல்லிடுக்கில் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான் வாசுதேவன்..

"ஸாரி.. ஸாரி.. ஸாரி.." சுசித்ராவின் முகம் கன்றிவிட்டது..

"பேரர்.." வாசுதேவன் பில்லுக்காகக் குரல் கொடுத்தான்..

"நான் 'பே' பண்றேன்.." சுசித்ரா ஹேண்ட் பேகை எடுத்தாள்..

"பில் 'பே' பண்ண வக்கில்லாமத்தான் நான் ரெஸ்ட்டாரெண்டில் பேசலாம்னு கூப்பிட்டேனா..?" வாசுதேவன் மிளகாயின் காரத்தோடு கேட்டான்..

"நான் அப்படி மீன் பண்ணலை.."

"இதுக்கு அதுதாங்க மீனீங்.."

வாசுதேவன் கோபத்துடன் பில்லுக்கான பணத்தைக் கொடுத்தான்.. சுசித்ராவின் முகம் கலங்கிச் சிவந்தது..

"யு ஹர்ட் மீ.." என்றாள்..

"இதை நான் சொல்லனும்.." கடுமையுடன் அவன் சொன்னான்..

"என்னை மேரேஜ் பண்ணிக்கச் சொல்லி நான் கேட்டிருக்கக் கூடாது.. அது உங்களை ஹர்ட் பண்ணும்னு எனக்குத் தெரியாது.." நலிந்த குரலில் அவள் முணுமுணுத்தாள்..

"மாத்தி யோசிங்கிற மாதிரி மாத்திப் பேசக் கூடாது.. உங்களை மேரேஜ் பண்ணிக்கச் சொல்லி நீங்க கேட்டதில நான் ஹர்ட் ஆகலை.. இரண்டு வருச அக்ரிமெண்ட்.. அதுக்கப்புறம் டைவர்ஸ்.. பெயருக்குத்தான் புருசன்னு டீல் போட்டிங்களே.. அட.. அட.. அட.. என்னமா பிளான பண்றீங்க.. என் முகத்தில இளிச்சவாயன்னு எழுதி ஒட்டியிருக்கா..? அதலதான் நான் ஹர்ட் ஆனேன் மிஸ்

சுசித்ரா.. உங்க அக்ரிமெண்டுக்கான ஆள் நானில்லை.. வேறு ஆளைத் தேடிப் பிடிங்க... உங்க அண்ணி.. பத்தரைமாற்றுத்தங்கம்.. மாதர்குல மாணிக்கம்.. மங்கையர்க்கரசி இருக்காங்கள்ல.. அதுகிட்டக் கேட்டிங்கன்னா இதுமாதிரி அக்ரிமெண்டுக்கு ஆள் பிடிச்சு விடுவாங்க.. அதான் தினமும் ஒரு கார் வந்து பிக் அப் பண்ணிக்கிட்டுப் போகுதே.. ஆள் பழக்க வழக்கமெல்லாம் அதுக்குத்தான் ஜாஸ்தி.. நீங்க அதைப் பிடிங்க.. என்னை விட்டிருங்க.." வாசுதேவன் பெரிய கும்பிடாகப் போட்டு விட்டு எழுந்து கொள்ளப் போனான்..

"வாட்..! அண்ணி தினமும் ஒரு காரில் போகிறாங்களா..?" சுசித்ரா பதறினாள்..

"இது வேறயா..? உங்க கம்பெனிக்கு வந்திருந்தப்ப சொன்னேனேங்க.. மறந்து போயிட்டிங்களா..? போனது அப்படியே போய் விடலைங்க.. விடியறதுக்குள்ள திரும்பிருது.. தெருவே அந்த லேடியைக் காலி பண்ண வைக்கனும்னு துடிச்சுக்கிட்டு இருக்குன்னா பாருங்களேன்.. உங்க நல்ல நேரம்.. நரசிம்ன் அங்கிளோட பழைய சிம் நம்பர்தான் எல்லோரிடமும் இருக்கு.. புது சிம் நம்பர் எனக்கு மட்டும்தான் தெரியும்.. யாருக்கும் நான் நம்பரைக் கொடுக்கலை.. டேக்கா விட்டுக்கிட்டு இருக்கேன்.."

"தேங்க்ஸ்.."

"அதை நீங்களே வைத்துக்கங்க.."

அதற்கு மேலும் பேச விருப்பப்படாமல் வாசுதேவன் எழுந்து விட வேறு வழியில்லாமல் சுசித்ரா அவனைப் பின் தொடர்ந்தாள்.. அழகாக ஆரம்பித்த.. பாடலின்

ஸ்வரம் பிசகி விட்டதைப் போல உணர்ந்தாள்.. அழுகையழுகையாக வந்தது.. திக்குத் தெரியாத காட்டில் தன்னந்தனியாக நிற்பதைப் போல இருந்தது.

அருகருகே நின்றிருந்த கார்களில் பிரிந்து அவர்கள் ஏறினார்கள்.. கார்க் கதவைத் திறந்த சுசித்ரா ஏக்கத்துடன் வாசுதேவனைப் பார்த்தாள்.. அதே நொடியில் அவனும்

அவளைப் பார்க்க.. இருவரின் விழிகளும் சந்தித்துக் கொண்டன.. அவளது விழிகளில் தெரிந்த பரிதவிப்பில் அவன் அசைவற்று அப்படியே நின்று விட்டான்..

வழி தெரியாத குழந்தையைப் போல மிரள மிரள விழித்தவளை விட்டுச் செல்ல மனம் வராமல் கார்க் கதவை மூடி விட்டு அவளருகில் வந்தான்.. தீர்க்கமாக அவளைப் பார்த்தான்.. அவனது விழிகளின் தீட்சண்யத்தில் அவளது இதயம் படுவேகமாக அடித்துக் கொண்டது..

"ஏன் இந்தத் தவிப்பு சுசித்ரா..? உங்க மனசில் என்னதான் இருக்கு..?" தாள மாட்டாமல் கேட்டு விட்டான்..

"அது.. அது.." அவள் விம்மினாள்..

"அழாதீங்க ப்ளீஸ்.. நீங்க அழக்கூடாது, உங்க கண்களில் கண்ணீரை நான் பார்க்கக் கூடாதுன்னுதான் விரும்புகிறேன்.. பட்.. நீங்க கேட்ட கேள்வி, போட்ட அக்ரிமெண்ட் எல்லாம் என் மனதைப் புண்படுத்திருச்சு.. நீங்களா அப்படிக் கேட்டிங்க..? ஐ கான்ட் பிலீவ்.."

"ஐ'ம் ஸாரி.."

"இப்பச் சொல்கிறேன் கேட்டுக்கங்க.. என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறது கம்பர்ட்டபிள்ன்னு நீங்க ஃபீல் பண்ணினீங்கன்னா ஐ ஷல் மேரி யு.. பட்.. அந்த மேரேஜ் லைஃப் முழுவதும் நிலைத்திருக்கனும்.. எங்க ஃபேமிலி கல்ச்சர் வேறங்க.. ஒருவனுக்கு ஒருத்தி.. வாழ்க்கையில் ஒர்முறைதான் கல்யாணம்.. அப்படி, இப்படின்னு ஆயிரம் நெறிமுறைகளைச் சொல்வாங்க.. என் தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, அக்கா, மாமா எல்லோரும் அப்படிப்பட்ட வாழ்க்கையைத்தான் வாழ்ந்துக்கிட்டு இருக்காங்க..

நானும் அதே நெறிமுறைகளோடுதான் வாழ்ந்தாகனும்.. உங்க ஹை கிளாஸ் லெவலில் டைவர்ஸெல்லாம் சகஜம்.. எங்களுக்கு அப்படியில்லை.."

"எங்களுக்கும் அப்படியில்லை.." ரோசத்துடன் குறுக்கிட்டாள் சுசித்ரா..

"அதென்ன.. ஹைகிளாஸ் சொசைட்டியில தினமும் ஒரு டைவர்ஸ் நடக்கிறதைப் போலப் பேசறீங்க.. அங்கொன்றும் இங்கொன்றுமா நடந்திருக்கலாம்.. எங்க ஃபேமிலியிலும் தாத்தா பாட்டி, அப்பா அம்மான்னு ஒருவனுக்கு ஒருத்தின்னுதான் வாழ்கிறாங்க.. அவங்களுக்கும் மேரேஜ்ன்னா ஆயிரம் காலத்து பிளான்ட் தான்.."

"அப்புறம் ஏன் அப்படிக் கேட்டிங்க..?"

"அது.. அது.."

"சொல்ல முடியலைன்னா விட்டிருங்கன்னு என்னால சொல்ல முடியாது.. உங்களை இப்படியே விட்டு விட்டுப் போக மனசு வந்து தொலைக்கலை.. எதை மனசில வைச்சுக்கிட்டு மருகறீங்கன்னு சொல்லித் தொலைங்க.. என்ன செய்யலாம்ன்னு யோசிக்கலாம்.. பட் ஒன் திங்.. உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்டுத் தள்ளி

நிக்க முயற்சி வேண்டுமானால் பண்ணலாம்.. டைவர்ஸ்ங்கிற பேச்சுக்கே இடமில்லை.. உங்க முடிவை இப்பச் சொன்னாலும் சரி.. இல்லை.. இரண்டு நாள்கள், இரண்டு வாரங்கள், இரண்டு மாதங்கள்ன்னு நிதானமா டைம் எடுத்துக்கிட்டு யோசிச்சு சொன்னாலும் சரி.. மாதங்கிக்கு வேறு யாருடனாவது கல்யாணம் ஆகிறதுக்குள்ள சொல்லிருங்க.. இல்லேன்னா.. விரதம் காக்கிற புருசனா வாழ்கிற ரிஸ்க்கை நான் எடுக்கவே மாட்டேன்.."

அவள் முகம் சிவந்தாள்.. ரசிக்கும்படிதான் இருந்தது.. ரசிக்கும் மனநிலைதான் அவனுக்கு இல்லை.. இது போல யாராவது மனதுக்குப் பிடித்த பெண்ணிடம் பேசியிருப்பார்களா என்று யோசித்துப் பார்த்தான்.. கருணாகரனுக்குக்கூட இந்தத் கதி நேர்ந்திருக்காது என்று தோன்றியது.. விதி அவனுடன் மட்டும் ஏன் சடுகுடு விளையாடுகிறது என்று அவனுக்குப் புரியவே இல்லை.. வாழ்நாள் முழுவதும் அடுத்தவனைக் கெடுத்தே வாழ்கிறவனுக்கு நல்ல வாழ்க்கை அமைகிறது..

'தெய்வம் கூட அடாவடி செய்கிறவனைப் பார்த்தா பயந்துருது போல..'

ஆயாசம் கொண்டான் வாசுதேவன்.. அனிச்சமலர் போல அவனது முகம் பார்த்து அவனது உணர்வுகளின் வெளிப்பாட்டில் தன் உணர்வுகளை வெளிப் படுத்திக் கொண்டிருந்த சுசித்ராவைப் பார்க்கப் பாவமாகத்தான் இருந்தது..

'நானும் பாவம்தான்..'

தன் மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.. அவளுக்காக அவன் பாவம் பார்ப்பதைப் போல.. அவனுக்காக அவள் ஏன் பாவம் பார்க்கவில்லை.. இந்தக் கோபம்தான் அவனுக்கு..

'இவள் அத்தனை சுயநலமானவளா..?'

இல்லையெனும் வகையில் மருட்சியுடன் விழித்தாள் சுசித்ரா.. இரும்பு மனம் இளக ஆரம்பித்தது.. இதை அவள் உணர்ந்திருக்க வேண்டும்.. அதனால்தான் இரும்பு

மனிதன் என்ற பயம் சிறிதும் இன்றி அவனுடைய உணர்வுகளுடன் கண்ணாமூச்சி விளையாடுகிறாள்..

நொடியில் பாடம் கற்றுக் கொடுத்து விடலாம்தான்.. இதுபோன்ற விளையாட்டை என்னிடம் விளையாடாதே என்று முகம் சுளித்துச் சொல்லி விட்டேன்.. அந்த வார்த்தைகளைத் தாங்கிக் கொள்ள முடியாமல் முகம் கூம்பித் தவித்துப் போய் நிற்கிறாள்.. இதற்கு மேலும் அவளைத் தண்டிக்க வேண்டாம்.

'தண்டிக்க வேண்டும்ன்னு நினைத்தாக் கூட என்னால் இவளைத் தண்டிக்க முடியாதே..'

அவனுடன் கண்ணாமூச்சி ரே ரே விளையாட்டை விளையாட விழைவது அவளல்ல.. வாழ்க்கைதான் அவனுடைய உணர்வுகளைச் சீண்டிப் பார்க்கிறது.. என்று சினம் கொண்டான் வாசுதேவன்..

இல்லையென்றால்.. அவன் மனதுக்குள் ஆராதிக்கும் அனிச்ச மலருக்கு நிகரான பெண் அவனிடம் இப்படி ஒரு

ஒப்பந்தத் திருமணத்தைப் பற்றிப் பேச வருவாளா..?

இது அடுத்துக் கெடுப்பவருக்கான காலம் என்று வெறுத்துப் போனான் வாசுதேவன்.. கயவர்களின் வாழ்வு இனிமையாக அமைகிறது.

மனதால் கூட அடுத்தவருக்குக் கெடுதல் நினைக்காத அப்பாவிகளுக்கு வன் கொடுமையான வாழ்க்கை அமைகிறது என்றால் என்னவென்று சொல்லுவது..?

'காலக் கொடுமை..'

வாசுதேவன் புருவங்களை நெரித்தபடி விலகி நடந்தான்..

"வாசு.." அவசரமாக அழைத்தாள் சுசித்ரா..

"என்னையா கூப்பிட்டிங்க..?" வியப்புடன் நின்றான் வாசுதேவன்..

"ம்ம்ம்.."

"வாசுதேவன், மிஸ்டர் வாசுதேவன்.. இப்படித்தானே கூப்பிடுவீங்க..? ஷார்ட்டா பெயரைச் சுருக்கி வாசுன்னு கூப்பிடறீங்களே.. வாட் எ சர்ப்ரைஸ்..! எதனால் இந்த மாற்றம்..?"

"என் முடிவை இப்போதே சொல்லவா..?"

தடுமாற்றத்துடன் கேட்டவளை உற்றுப் பார்த்தான் வாசுதேவன்.. அவளது முகச்சிகப்பில் அவளது முடிவு என்னவாக இருக்கும் என்று அவனுக்குப் புரிந்து விட்டது.. தலையை இடம் வலமாக அசைத்தான்..

"அவசரப் படாதீங்க.. நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கனும்னா சில விவரங்கள் எனக்குத் தெரிந்தாகனும்.."

"என்ன விவரம்..?"

"உங்க சொத்துக்களைப் பற்றின விவரமில்லை.. யாருக்கு வேண்டும் உங்க சொத்து..?"

அவள் கண்ணீர்மல்க அவனை பிரமிப்புடன பார்த்தபடி மறுபடியும் ஒரு.. "என்ன சொன்னீங்க..?" வைப் போட்டாள்..

"இப்படிக் கேட்கிறதை ஒரு மேனரிசமாகவே வைத்திருக்கீங்க.. எனக்குத் தெரிய வேண்டிய விவரங்கள் இதுதான்.. யார் அந்தப் பல்லவி..? அவளுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்..? எதுக்காக அவ ஒரு சுமையா உங்க தலைமேல உட்கார்ந்துக்கிட்டு இருக்கா..? நீங்க ஏன் மேரேஜை அவாய்டு பண்ணினீங்க..? பல்லவியைப் பத்தி உங்க வீட்டில சொல்லாம ஏன் மறைக்கறீங்க..? உங்க அப்பாவும் அண்ணனும் ஏன் உங்க மேல கோபமா இருக்கிறாங்க..? என்னோட இத்தனை 'ஏன், எதுக்கு' களுக்கு நீங்க பதில் சொன்னா.. நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிறதைப் பத்தி யோசிக்கறேன்.."

இதுதான் என் முடிவு என்று அழுத்தமாக அறிவித்து விட்டான் வாசுதேவன்..

## 24

அலைகடலைப் பார்த்தபடி அசைவற்று அமர்ந்திருந்தாள் சுசித்ரா.. அவளது இறுக்கமான தோற்றத்தில் வாசுதேவனுக்குள் கவலை வந்தது.. சும்மாவே அவள் துறவியைப் போலப் பற்றற்றுப் பேசுவாள்.. இப்போதோ கையில் கமண்டலம் ஏந்தாத குறைதான்.. காவி நிறம் போல ஏதோ ஓர் கலவை நிறத்தில் சேலை அணிந்திருந்ததால் புதிதாக காவியைத் தேட வேண்டிய அவசியமில்லை..

'சுகபோகமா வாழ வேண்டிய கோடிஸ்வரியைக் காவியக் கட்ட வைச்சுட்டு அங்கே அந்தப் பல்லவி அலப்பறை பண்ணிக்கிட்டு இருக்கிறா.. இவ என்னடான்னா சர்வம் புத்த மயம்ன்னு முகம் பூரா வெளிச்சத்த வர வைச்சுக்கிட்டு யோகியப் போல உக்காந்திருக்கா..'

"அப்ப நான் என்ஜினியரிங் ஃபைனல் இயர்ல இருந்தேன்.."

'அப்பா.. வாயைத் திறந்து பிளாஷ் பேக்கைச் சொல்ல ஆரம்பிச்சுட்டா..' ஆசுவாசமானான் வாசுதேவன்..

"என் கிளாஸ்மேட்ஸ் எல்லோருமே என் மீது பிரியமா இருப்பாங்க.. நானும் அப்படித்தான்.."

'இவள் ஹைகிளாஸ், மிடில் கிளாஸ்ன்னு பிரிச்சுப் பார்க்காத மனசிருக்கிறவ..' அவன் கனிவுடன் அவளைப் பார்த்தான்..

"என் பிரண்ட்ஸில கொஞ்சபேர் ஸ்டேட்டஸ் பார்த்துப் பழகுன்னு அட்வைஸ் பண்ணுவாங்க.. நான் கேட்டுக்க மாட்டேன்.."

வாசுதேனுக்கு அவள் மீதான காதல் பெருகியது.. எளிமையான தோற்றத்துடன் இருந்த அந்தக் கோடிஸ்வரி அவனது 'ஏன்' என்ற கேள்விகளுக்கான அவளது கடந்த காலத்தைச் சொல்லிக் கொண்டிருந்தாள்.. பூட்டி வைக்கும் பொருள்கள் மட்டுமல்ல.. உணர்வுகளும் பூசணம் பிடித்து விடும்.. மனதைத் திறந்து கொட்டி விட வேண்டும்.. இதயத்தின் சாளரங்கள் திறந்தால் அங்கே சில்லெனும் தென்றல் காற்று உட்புகுந்து மனதின் வெக்கையைத் தணித்து விடும்..

"ஒரு நாள் என் பிரண்ட்ஸோட பஸ்ஸில் போக ஆசையாக இருந்தது.. காருடன் வந்த டிரைவரிடம் பஸ்ஸை ஃபாலோ பண்ணச் சொல்லி விட்டு என் பிரண்ட்ஸீடன் பஸ்ஸில் ஜர்ன் பண்ணினேன்.."

உலகச் சுற்றுலாவை விவரிப்பதைப் போல அவள் விவரித்தாள்.. குறுக்கே பேசாமல் தலையை மட்டும் அசைத்துக் கேட்டுக் கொண்டிருந்தான் வாசுதேவன்.. படாதபாடு பட்டு அவளை பிளாஷ்பேக்கை சொல்ல வைத்திருக்கிறான்.. ஊம் கொட்டி அதை கெடுத்துக் கொள்ள வேண்டுமா என்ன..?

"செம ஜாலியா இருந்தது.. பஸ்ஸை விட்டு இறங்கியதும் என் பிரண்ட்ஸ் டாட்டா சொல்லிட்டுக் கிளம்பிட்டாங்க.. நான்

காருக்காக வெயிட் பண்ணினேன்.."

ஊடே குறுக்கிட்டால் அவள் பிளாஷ்-பேக்கிலிருந்து பின் வாங்கி விடுவாள் என்று சர்வ ஜாக்கிரதையாக வாய் பொத்தியிருந்த வாசுதேவன், ஆர்வக் கோளாறில்..

"பஸ்ஸை ஃபாலோ பண்ணின கார்.. பஸ்ஸீக்கு முன்னாடி வந்து நின்னிருக்கனுமே.. உங்க கார் டிரைவருக்குக் காரோட்டத் தெரியாதா..?" என்று கேட்டு விட்டான்..

"அவர் பாவம்... பஸ்ஸை விடாம ஃபாலோ பண்ணியிருக்கார்.. ஊடே ரெண்டு சிக்னல்.. மனுசன் இந்த பஸ்ஸை விட்டுட்டு வேறு ஒரு பஸ் பின்னாலே போய் விட்டார்.."

"பாருடா.. அழகான பெண்ணை ஃபாலோ பண்றப்ப வேற ஒரு அழகான பெண் வந்தா இவளை விட்டுட்டு அவளை ஃபாலோ பண்ணுவாங்கன்னு கேள்விப் பட்டிருக்கேன்.. பஸ்ஸிலும் அப்படியா..? இந்த பஸ்ஸை விட அந்த பஸ் அட்ராக்சனா இருந்துச்சோ..? இருக்காதே.. நம்ம சென்னை சிட்டி பஸ்கள் எல்லாமே ஒன்னு போல இருக்குமே.."

"இப்ப நான் பிளாஷ்-பேக்கை கண்டினியூ பண்ணவா.. இல்லை எங்க காரோட டிரைவர் எதைக் கண்டு அந்த பஸ் பின்னாலே ஜொள்ளு விட்டுக்கிட்டுப் போனார்ன்னு கேட்டுத் தெரிந்துக்கிட்டு வரவா..?"

"இதுக்குத்தான் வாயை மூடிக்கிட்டு இருந்தேன்.. அடேய் வாசுதேவா.. அடங்க மாட்டியாடா.. மேடம் கோவிச்சுக்கிறாங்கள்ல.. நீங்க பிளாஷ்-பேக்கை கண்டினியூ பண்ணுங்க.."

"இதுதானே முக்கியம்..?"

"ரொம்ப, ரொம்ப முக்கியம்.."

"அஃது.. டிரைவருக்குப் போன் போட்டேன்.. வழி மாறி வேற பஸ் பின்னாலே போய் விட்டதாச் சொன்னார்.. நான் எங்கே நிற்கிறேன்னு லொகேசனைச் சொல்லிட்டு காருக்காக வெயிட் பண்ணினேன்.."

"இதை முதலிலேயே சொல்லியிருக்கலாமில்ல.."

"இப்பச் சொல்லியாச்சில்ல.."

"சரி.. சரி.. யு புரொசீடு.."

"அப்பத்தான் பிரசன்னாவை பர்ஸ்ட் டைம் பார்த்தேன்.." அவளது உதடுகள் துடித்தன..

வாசுதேவனுக்குள் பிரளயம் வெடித்தது..

சுசித்ராவின் வாழ்வில் ஓர் வாலிபன் குறுக்கிட்டிருக்கிறான் என்ற செய்தி அவனுக்கு வேம்பாக கசந்தது.. கடைசியில் காதலில் விழுந்ததினால்தான் சுசித்ரா குடும்பத்தாருடன் போராடிக் கொண்டிருக்கிறாளா..? பொருளாதார ஏற்றதாழ்வா..? தனிமைப் பட்டு அவள் நிற்கும் கொடுமைக்கு அவளது மனது பிரகாரம் திருமணத்தை நடத்தி வைத்திருக்கலாமே என்று பலவற்றையும் யோசித்தவனுக்கு அது உறைத்தது..

வாசுதேவனிடம் திருமண ஒப்பந்தம் போட விழைகிறவள் ஏன் அந்தப் பிரசன்னாவையே திருமணம் செய்து கொள்ளக் கூடாது..? அவனிடம்தானே அவள் கேட்டிருக்க வேண்டும்.. சுசீந்திரன் இப்போது இருக்கும் மனநிலையில் அவள் யாரைத் திருமணம் செய்து கொண்டாலும் இருகரம் நீட்டி வரவேற்பானே..

'முதல் சந்திப்பு இனிமை நிறைந்திருந்ததாக இருந்திருக்கும்.. பஸ் ஸ்டாப்பில் அவனும் நின்றிருப்பான்.. இவளும் நின்றிருப்பாள்.. பர்ஸ்ட் சைட்டே லவ் சைட்டா இருந்திருக்கும்.. கண்ணோடு கண் கலக்க காதல் வந்திருக்கும்..'

மனதுக்குப் பிடித்தவளின் காதல் அனுபவத்தைப் பற்றிக்காது கொடுத்துக் கேட்பதை விடக் கொடிது வேறொன்றுமில்லை..

'கொடிது.. கொடிது..

காதலிக்கு கடந்தகாலக் காதல் இருப்பது..

அதனினும் கொடிது..

அவ்வனுபவத்தைக் காது கொடுத்துக் கேட்பது..'

கரையில் உட்கார்ந்திருப்பதைவிடக் கடலில் இறங்கி விடுவது சாலச் சிறந்தது.. எங்கே.. அதைச் செய்ய முடியாமல் கண்ணியவான் வேடம் அவனைக் காவல் காக்கிறதே..

பற்றற்ற துறவியைப் போல முகத்தை வைத்துக் கொள்ள அவன் படாத பாடு பட்டான்.. காதலியின் காவியக் காதல் கதையின் அடுத்த கட்டம் எதுவாக இருக்கும் என்று கடுப்புடன் அவன் காத்திருக்க..

"கண் சிமிட்டற நேரம்தான்.. பிரசன்னா என் கழுத்தில் இருந்த செயினை அறுத்துக்கிட்டு ஓடிட்டான்.." என்றாள் சுசித்ரா..

"என்னது..?"

தான் சரியாகக் கேட்கவில்லையோ என்று தன் காதுகளைச் சந்தேகித்தான் அவன்.. இப்போதுதான் இது போல அடிக்கடி நிகழ்ந்து தொலைக்கிறது.. முதலில் எல்லாம் அப்படியில்லை.. உதடுகளில் இருந்து சிறு சப்தம் வெளிப்பட்டால் கூட சொல்ல வருவதைச் சரியாக இவன் சொல்லி விடுவான்.. இப்போது என்னவென்றால் தெள்ளத் தெளிவாக காதில் விழுகும் வார்த்தைகளைக் கூட இதைத்தான் சொன்னார்களா என்று சந்தேகித்து ஸ்தம்பிக்க வேண்டியிருக்கிறது..

'எந்த நேரத்தில் இவளை மீட் பண்ணினேன்..?'

அது அழகான இளங்காலைப் பொழுது என்று அவன் மனம் ஜொள்ளியது.. என்ன பொழுதோ என்று அலுத்துக் கொண்டான் வாசுதேவன்.. காதலனைப் பற்றிச் சொல்கிறாள் என்று பார்த்தால் அவள் கழுத்திலிருந்த செயினை அறுத்தத் திருடனைப் பற்றிச் சொல்லுகிறாள்.. திருடனைப் பற்றிப் பேசும் போது ஏன் அவளது உதடுகள் துடிக்கின்றன..?

"ஏங்க.. சரியாச் சொல்லுங்க.. அந்த பிரசன்னா உங்க கழுத்தில இருந்த செயினை அறுத்தானா..?"

"யெஸ்.. ஹி டிட் இட்.."

என்னவோ மகத்தான சாதனையை அவன் செய்து விட்டதைப் போல அவள் சொன்னதில் கன்னத்தில் பொளேர் என்று ஒரு அறை விடலாம் போலக் காண்டாகிப் போனான் அவன்..

"செயினைப் பறிக்கறதெல்லாம் ஒரு பிழைப்பு.. அப்பேற்பட்ட புறம்போக்கின் பெயரை இன்னும் நினைவில் வைத்திருக்கீங்க.. உங்களை என்னன்னு சொல்றது..?"

"திருடன்னுதான் நானும் நினைச்சேன்.."

'பின்னே.. இல்லையா..?'

"என்னை யாருன்னு நினைத்த..? தி ஃபேமஸ் எஸ்.எஸ் குருப்ஸ் ஆஃப் கம்பெனியோட எம்.டி மகள்டா.. டாடியிடம் சொல்லி உன்னை உள்ளே தூக்கிப் போடறேன் பார்.. அவர் போலிஸ்ல கம்ப்ளெயிண்ட் பண்ணினா ஒன் அவரில உன்னைக் கண்டு பிடித்து அரெஸ்ட் பண்ணிருவாங்கன்னு சத்தம் போட்டேன்.. ஓடிக்கிட்டு இருந்தவன் நின்று திரும்பிப் பார்த்தான்.. எனக்குப் பயமாகிருச்சு.. பஸ் ஸ்டாப்பில் யாருமில்லை.. தனியாக நின்றிருந்தேன்.. அவன் என்னிடம் வந்தான்.."

"வாயை வைத்துக்கிட்டு சும்மா இருக்க வேண்டியது தானே.. எதையும் யோசித்துச் செய்ய மாட்டிங்களா..?"

"இப்படியாகும்ன்னு எனக்கு எப்படித் தெரியும்..? நான் பஸ்ஸில போனதேயில்லையே.."

"சரி.. சரி.. கிட்ட வந்தவன் என்ன செய்தான்..? கத்தியைக் காட்டிக் கிட்நாப் பண்ணப் பார்த்தானா..?"

செயின் திருடன் வேறு என்ன செய்திருக்கப் போகிறான் என்ற எண்ணம் வாசுதேவனுக்கு.. யாரோ ஒரு பெண் என்று நினைத்து தனியாக நின்ற பெண்ணின் செயினை அறுத்துக் கொண்டு ஓடியிருப்பான்.. அவள் கோடிஸ்வரி

என்று தெரிந்ததும் 'ஆஹா' என்று அவளையே கடத்தி விடலாம் என்று பக்கத்தில் வந்திருப்பான் என்றுதான் அவன் கணக்குப் போட்டான்..

"சேச்சே.." என்று சுசித்ரா அவனது கணக்கீடை மறுத்தாள்..

'இவள் விசயத்தில் எதை நினைத்தாலும் எகனைக்கு மொகனையாகத்தான் இருந்து தொலைக்குது..'

"பாவமா என்னைப் பார்த்தான்.."

'இவ பாவம்ன்னு பரிதாபப் பட்டானா..? இல்லை.. அவனே பாவம் போல பரிதாபமாய் நின்றானா..?'

இதற்கான விடையையும் அவளே சொல்லி விடட்டும் என்று விட்டு விட்டான் வாசுதேவன்.. சுசித்ராவே விசித்திரமான பிறவி.. அவள் சொல்லும் கதையும் அப்படித்தான் இருந்து வைக்கும்..?

"கண்ணில தண்ணி விடாத குறைதான்.. எனக்குப் பாவமாகிருச்சு.."

'அப்ப.. அவன்தான் பாவம்போல முகத்தை வைச்சுக்கிட்டு நின்றிருக்கான்..'

"ஸாரிங்க.. எங்க பக்கத்துவீட்டுக் குட்டிப் பாப்பாவுக்கு ஹார்ட் ஆப்பரேசன்.. பணமில்லாத ஏழைங்க எங்கே போவோம்..? அதான்.. வேற வழி தெரியாம செயினை அறுத்துட்டேன்.. உங்க அப்பாகிட்டச் சொல்லி என்னை உள்ளே தூக்கிப் போட்டிராதீங்க.. என்னைப் பத்திக் கவலையில்லைங்க.. நான் பணம் கொண்டு போனாத்தான் அந்தப் பாப்பாவுக்கு ஆப்பரேசன் நடக்கும்ன்னு சொன்னான்.."

'இதைத் திரும்பி வந்து சொன்னானா..? எங்கேயோ இடிக்குதே.. ஓடிப் போனவன் முகத்தைக்கூட இவ பார்த்திருக்க மாட்டா.. அடையாளம் காட்டப் பக்கத்திலேயும் யாருமில்லை.. அப்புறம் ஏன் திரும்பி வந்து விளக்கம் சொன்னான்.. அந்த விளக்கத்தையும் அவன் வீட்டில் இருக்கும் யாரோ ஒருவருக்காக திருடினான்னு

சொல்லலை.. அடுத்த வீட்டுப் பாப்பாவுக்காக திருடியதாய் சொல்லியிருக்கான்.. ஸோ.. அவன் சிம்பதியைக் கிரியேட் பண்ணலை.. ஊருக்கு உழைக்கும் ராபின்ஹீட் இமேஜைக் கிரியேட் பண்ண நினைச்சிரிக்கான்..'

ஏமாளியே என்ற பார்வையை வாசுதேவன் பார்க்க..

"இந்தக் காலத்திலேயும் இப்படி ஒரு மனிதனான்னு ஆச்சரியமா இருக்கில்ல.." என்று கேட்டாள் சுசித்ரா..

"ஆமாம்ன்னு எல்லாம் சொல்ல முடியாதுங்க.." கட் அண்ட் ரைட்டாக அறிவித்து விட்டான் வாசுதேவன்..

"ஏன் இப்படியிருக்கீங்க..?"

"அது என் இஷ்டம்ங்க.. நான் இப்படித்தான் இருப்பேன்.."

"பிரசன்னாவும் இப்படித்தான் சொன்னான்.. அடுத்தவங்களுக்காக நீங்க திருடனாகலாமான்னு நான் கேட்டதுக்கு எல்லோரும் இப்படியே நினைத்தா அந்தக் குழந்தை பிழைக்க வேண்டாமான்னு கேட்டான்.. எனக்கு 'ஜிம்'முன்னு ஆகிருச்சு.."

"அவன் பெரிய தியாகி.. அதைக் கண்டு பிடித்த நீங்க மகா புத்திசாலி..."

"ஏன் இப்படிச் சொல்கிறீங்க..?"

"பின்னே என்னங்க.. கவர்ண்மென்டில் காப்பீட்டுத் திட்டம்ன்னு இருக்கு.. முதலமைச்சர், பிரைம் மினிஸ்ட்டர்ன்னு மனுப் போட்டு உதவி கேட்கலாம்.. ஃபேஸ்புக், டிவிட்டர், வாட்ஸ் அப்ன்னு ஷேர் பண்ணலாம்.. இதையெல்லாம் விட்டுவிட்டு தனியா நின்ன பெண்ணின் செயினைப் பிடித்து இழுத்து அறுத்தானாம்.. கதை கேக்கறப்பவே தலையை வலிக்குது.."

சுசித்ராவின் முகம் வாடி விட்டது.. அதற்காக இந்த கிறுக்குத்தனத்தையெல்லாம் நம்ப முடியாது என்பதைப் போல கறாராக முகத்தை வைத்துக் கொண்டான் வாசுதேவன்..

"உங்களைப் போல எல்லாம் என்னால் நினைக்க முடியாது.."

"நினைக்க வேண்டாம்.. என்ன பண்ணித் தொலைச்சீங்க..?"

"செயினை அறுத்ததுக்கு கில்ட்டியா ஃபீல் பண்ண வேண்டாம்ன்னு சொன்னேன்.."

"அப்படியே உங்க காலேஜ் அட்ரஸைக் கொடுத்து அங்கே வந்தா நிறையச் செயினை அறுத்துக்கிட்டுப் போகலாம்ன்னு ஐடியாக் கொடுத்திருக்களாமே.."

"கேலி பண்றீங்களா..?"

"சேச்சே.. எஸ்.எஸ் கம்பெனியோட அட்மினிஸ்ட்ரேசனை ஏன் உங்க அப்பா உங்க அண்ணன் கையிலே கொடுத்தார்ன்னு இப்போதுதான் புரியுது.. உங்க கையில கொடுத்திருந்தா இந்நேரம் கம்பெனியே காணாமல் போயிருக்கும்.."

"டாடி பேசினதைப் போலவே பேசறிங்க.."

"சொல்லிட்டாரா..? சொல்லாமல் எப்படி இருப்பார்.. உங்க டிசைன் அப்படி.. என்ன டிசைனோ.. பகவானே..!"

"போதும்.. மனிதத்தன்மையோட பேசுங்க.."

"நீங்க ஒரு ஆள் மனிதத்தன்மையோட இருக்கறீங்கள்ல.. அது போதும்.. இதுக்கும் மேலே இருந்தா உலகம் தாங்காது.."

"நீங்க என்ன வேண்டும்னாலும் சொல்லிக்கங்க.. ஐ டோன்ட் கேர்.."

"அதானே.. கேர் பண்ணியிருந்தாத்தான் உருப்பட்டிருப்பீங்களே.."

"நீங்க என்னைக் கலாய்க்கறீங்க.."

"சத்தியமா இல்லைங்க.. இதைக் கலாய்ப்புன்னு எடுத்துகிற மனோ தைரியம் உங்களுக்கு இருக்கு.. எனக்கு இல்லை.."

"எல்லோரையும் சந்தேகக் கண்ணோட்டத்தோடு பார்க்கக் கூடாதுங்க.."

"அது நமக்கு ஷேஃப் சுசித்ரா.."

"அப்படி நீங்க நினைக்கறிங்க.. நான் நினைக்கலை.."

"அதுக்கான விலையைத்தான் இப்போது கொடுத்துக்கிட்டு இருக்கீங்க.. பெண்கள் சந்தேகப்படனும்.."

கூர்மையாகப் பார்த்தபடி வாசுதேவன் சொன்ன வார்த்தைகள் சுசித்ராவின் இதயத்தில் தைத்தன.. மனவலியின் அதிர்வோடு அவனை நிமிர்ந்து பார்த்தாள்.. விழிகளில் கண்ணீர்த் துளிகள் திரண்டிருந்தன.. வாசுதேவன் சொல்வதைப் போல அவள் சந்தேகித்திருக்க வேண்டுமோ என்று அவள் தடுமாறினாள்..

25

"அப்புறம் என்ன ஆச்சு..?"

"என் கையிலிருந்த வைர வளையலைக் கழட்டிக் கொடுத்து விட்டேன்.."

"வாட்..!"

பேசாமல் காதைக் கழட்டிக் கடலில் எறிந்து விடலாமா என்று வெறுத்துப் போனான் வாசுதேவன்.. உனக்கு ஒரு கும்பிடு, உன் கதைக்கு ஒரு கும்பிடு என்று பெரிய கும்பிடுகளாகப் போட்டு விட்டு வீட்டைப் பார்த்து ஓடி விடுவது சாலச்சிறந்தது.. சுசித்ராவின் கடந்த காலக் கதை இந்த அளவுக்குக் கடுப்படிக்கும் என்று ஏன் அவனுக்குத் தெரியாமல் போனது..? சர்வ முட்டாளாக இருப்பதற்குப் பெயர்தான் மனிதத்தன்மையா..?

"யெஸ் மிஸ்டர் வாசுதேவன்.. ஏதோ என்னால் ஆன உதவி.."

"ஆமாமாம்.. பத்து பைசா தானம் செய்தீருக்கீங்க பாருங்க.. தன்னடக்கமாகச் சொல்லிக்கறீங்க.."

"பத்துப் பைசா..? யு மீன் டென் பெய்ஸ் காயின்..?"

"அதானே.. உங்களுக்கெல்லாம் கோடியே சர்வ சாதாரணம்.. இதில் நான் பத்துப் பைசாவைப் பத்திச் சொல்கிறேன் பாருங்க.."

"அது இன்வாலிட் காயின் ஆச்சே.."

"இம்புட்டுப் புத்திசாலியா நீங்க..? பத்துப் பைசாக் காயின் செல்லாதுங்கிற அளவுக்கு உலக விவரம் தெரிஞ்சிருக்கே.."

"ஹலோ.. ஐ ஆம் பி.ஈ. அண்ட் எம்.பி.ஏ.."

"படித்துக் கிழித்து என்ன பிரயோசனம்..? பத்துப் பைசாவுக்குப் பிரயோஜனமில்லை.. அந்த வைர வளையல் என்ன விலைக்குப் போகும்..?"

"ஹீ நோஸ்..? பரம்பரை வளையலாம் அது.. அம்மா சொன்னாங்க.. மார்க்கெட் வேல்யூ ஒரு கோடியோ என்னவோன்னு நினைவு.."

"அறிவில்லை உங்களுக்கு..? உதவி செய்யனும்னு நினைக்கிறவங்க எந்த ஹாஸ்பிடல்ன்னு கேட்டு அங்கே போய் குழந்தையைப் பார்த்து விட்டுப் பணத்தைக் கட்ட வேண்டியதுதானே..? வைர வளையலையா கழட்டிக் கொடுப்பீங்க..?"

"ஆமாமில்ல.. அப்படியும் செய்திருக்கலாமில்ல.."

"அப்படித்தான் செய்திருக்கனும்.."

"அப்ப அதெல்லாம் எனக்குத் தோணலைங்க.. அவன் சொன்னதைக் கேட்டதும் இரக்கப்பட்டுக் கையிலிருந்த வளையலைக் கழட்டிக் கொடுத்துட்டேன்.."

என்னவோ செய்து தொலை என்று மௌனமாகி விட்டான் வாசுதேவன்.. அவனது மௌனம் அவளை பாதித்தது..

தயக்கத்துடன் அவனைப் பார்த்தாள்.. அவன் விழியசைவில் என்னவென்று கேட்டான்.. அவளது முகம் செவ்வானமானது..

கடல்காற்று முகம்தனை வருடிக் கொடுக்க 'ஜில்' லென்று ஆகிப் போனான் வாசுதேவன்... அவளது முகச்சிகப்பு மாயம் செய்தது.. எரிச்சலை மறந்து அவளை ஊன்றிப் பார்த்தான்.. உதட்டைக் கடித்துக் கொண்டு அவள் வேறு திக்கில் பார்த்தாள்..

அது அழகானதொரு கண்ணாமூச்சி விளையாட்டாக இருந்தது.. அவள் அவன் பார்க்கிறானா என்று பார்ப்பதும், அவனது பார்வையை உணர்ந்ததும் தவிப்புடன் வேறு பக்கம் பார்ப்பதுமாக குறளோவியத்தை வரைந்து கொண்டிருந்தாள்.. கருப்பு வெள்ளைத் திரைப்படம் போல இருந்த சூழல் திடிரென்று கலர்ஃபுல்லாக மாறி விட்டதில் உற்சாகமாகிப் போனான் வாசுதேவன்.. உல்லாசமாக இருந்தது..

"அரச பரம்பரை தானம் செய்தா இப்படித்தான் செய்வாங்க போல.. நீங்கன்னு இல்லை.. சங்க காலத்தில கடையேழு வள்ளல்களில ஒருத்தரான பாரி முல்லைக் கொடி படறத் தேரைக் கொடுத்தாராம்.. எப்பேற்பட்ட அறிவாளின்னு பாருங்க.. படருகிற முல்லைக் கொடிக்குத் தேரோட விலை மதிப்புத் தெரியுமா..? அதுக்குத் தேவை, படற ஒரு பந்தல்.. அதைப் போட்டுத் தருவதை விட்டுட்டு இவர் தேரைக் கொடுத்துட்டு வந்தாராம்.. நீங்க அந்த வம்சாவழி போல.." சிரித்தபடி கேலி செய்தான்..

அவன் இலகுவான மனநிலைக்குத் திரும்பி விட்டதில் நிம்மதியடைந்தாள் சுசித்ரா.. அவனது மனநிலை எதுவாக இருந்தால் அவளுக்கென்ன என்று திகைப்பாக இருந்தது.. அவன் மூட்-அவுட் ஆகிவிட்டால் இவளுக்கு ஏன் என்னவோ போல இருக்கிறது..?

மனதை கடந்த காலத்திற்கு வலுக்கட்டாயமாகத் திருப்பி விட்ட இடத்திலிருந்து கதையைத் தொடர்ந்தாள்..

"அந்த வீக் எண்டிலே பிரசன்னாவை மறுபடியும் மீட் பண்ணினேன்.."

"அவன் உங்களை மீட் பண்ணினான்னு சொல்லுங்க.."

"இரண்டும் ஒன்றுதானே.."

"இல்லை சுசித்ரா.. இரண்டும் வேறு வேறு.. நீங்க ஷாப்பிங் போயிருப்பீங்க.. போன இடத்தில அவனைப் பார்த்திருப்பீங்க.."

"கரெக்ட்.. பக்கத்தில் இருந்து பார்த்ததைப் போலச் சொல்றீங்களே.."

"இதை கெஸ் பண்ண பக்கத்திலிருந்து பார்க்கனுமாக்கும்..? எங்கே ஷாப்பிங் போனீங்க..?"

"ஸ்பென்சர் பிளாசாவுக்கு.."

"அங்கே அவனுக்கென்ன வேலை..? ஊருக்கு உழைப்பவன்.. ஏழைப்பாங்காளன்.. ஒரு நோயாளிக் குழந்தைக்கு வைத்தியம் பண்ணப் பணம் கொடுக்க வக்கில்லாம தனியா நின்ற பெண்ணின் கழுத்துச் சங்கிலியை அறுத்தவன்.. ஸ்பென்சர் பிளாசாவுக்கு ஷாப்பிங் பண்ண வந்தானா..? இடிக்குதே.."

"இந்த அளவுக்கு நான் யோசிக்கலை.." சுசித்ராவின் குரல் இறங்கியிருந்தது..

"இனி யோசித்தும் பிரயோசனமில்லை.. நடந்து முடிந்ததை யாராலும் மாற்ற முடியாது.."

"ஷாப்பிங் போன இடத்தில் அவனைப் பார்த்தேன்.. எதிரே நடந்து வந்தவன் என்னைப் பார்த்ததும்.. 'ஹாய்'ன்னு சொன்னான்.. நான் குழந்தையைப் பற்றி விசாரித்தேன்.. ஆபரேசன் சக்சஸ்ன்னு சொன்னான்.. குழந்தையின் அம்மா என்னை நினைத்துக் கையெடுத்துக் கும்பிட்டு வணங்கினாங்களாம்.."

"நீங்க நேரில போய் பார்த்திருக்கலாமே.."

"நான் வரேன்னுதான் சொன்னேன்.. பிரசன்னாதான் வேண்டாம்ன்னு சொல்லிட்டான்.. உதவி வாங்கினவங்க நன்றிக் கடனில என் காலில் விழுந்து விடுவாங்களாம்.." நான் சங்கடப்படுவேனாம்..

"அதெல்லாம் எனக்கு ஒரு சங்கடமுமில்லைன்னு சொல்ல வேண்டியதுதானே.."

"நான் சொல்லலை.."

"ஏன் சொல்லலை..?"

"தோணலை.. சொல்லலை.. போதுமா.."

சுசித்ரா வெடித்தாள்.. வாசுதேவன் இமைக்காமல் அவளைப் பார்த்த பார்வையில் கண்ணீர் சிந்தினாள்..

"இப்ப நான் என்ன சொல்லிட்டேன்னு இந்த அழுகை..?" காட்டமாகக் கேட்டான் வாசுதேவன்..

"மிஸ்டர் வாசுதேவன்.. நடந்ததெல்லாம் சரியோ, தவறோ, நடந்து விட்டது.. அதெல்லாம் நடக்கனும்னு நான் ஆசைப்படலை.. என்னைச் சுற்றி நடந்த எதுவுமே என் கட்டுப்பாட்டில் நடக்கலை.. ப்ளீஸ்.. டிரை டு அண்டர் ஸ்டாண்டு மீ.. வாட் கேன் ஐ டூ..?"

"ஓகே.. ஓகே.. லீவ் இட்.."

"ஷாப்பிங் காம்ப்ளெக்ஸில் பிரசன்னாவைப் பார்த்துப் பேசின டூ ஆர் த்ரி டேஸில் அவன் காலேஜிக்கு என்னைத் தேடி வந்தான்.."

எதையோ சொல்லப் போன வாசுதேவன்... 'வேண்டாம்..' என்பதைப் போன்ற முகபாவனையுடன் பேசாமல் இருந்தான்..

"என்ன..?" சுசித்ரா வினவினாள்..

"நத்திங்.." என்றான் அவன்..

"இல்லை.. எதுவோ இருக்கு.."

"எது இருந்தா உங்களுக்கென்ன..? கடுப்படிக்குது எனக்கு.. வாய் இருக்க மாட்டாம நான் எதையாவது சொல்லித் தொலைப்பேன்.. நீங்க அதான் சாக்குன்னு கண்ணீரை விடுவீங்க.. எதுக்குங்க வம்பு..? நீங்க கதையைக் கண்டினியூ பண்ணுங்க.."

"என்ன சொல்ல வந்தீங்க..? அதைச் சொல்லுங்க.."

"பிடிவாதமா..?" வாசுதேவன் ஆழ்ந்த குரலில் வினவினான்..

சுசித்ரா முகம் சிவந்தாலும்.. விட்டுக் கொடுக்காமல்..

"ஆமாம்.. அப்படித்தான்.." என்றாள்..

"அவனையெல்லாம் வைக்க வேண்டிய இடத்திலே நீங்க வைத்திருந்தா காலேஜீக்கே வந்து நிற்பானா..?"

வாசுதேவன் தேங்காயை உடைத்ததைப் போல மனதில் இருந்ததைச் சொல்லி விட சுசித்ராவின் முகம் கூம்பியது.. அனிச்ச மலரின் முகம் வாடுவதா என்று அவனது மனம் பதறியது.. இவள் எப்பேற்பட்டவள்.. போயும் போயும் ஒரு கயவன் இவளை வட்டமிட இடம் கொடுத்து விட்டாளே என்ற கோபம்தான் அவனுக்கு..

"நானா அவனைத் தேடிப் போய் பேசினேன்..?"

"அவன் பேச வந்தபோது தள்ளி நிறுத்தியிருக்கனும்.."

"அதிகமாப் பேசலை.. குழந்தையைப் பற்றித்தான் கேட்டேன்..."

"காலேஜீக்கு வந்தவனிடம் கோபமாய் பேசியிருக் கலாமே.. அது உங்களுக்குப் பிடிக்கவில்லைன்னு முகத்தில் அடித்ததைப் போலச் சொல்லியிருக்கலாமே.."

"சொல்லத்தான் நினைத்தேன்.. அதுக்குள்ளே அவன் முந்திக்கிட்டான்.."

"இப்ப என்னத்தைச் சொல்லித் தொலைச்சான்..?"

"எதிர் வீட்டு ஆண்ட்டிக்கு பிரைன் டியூமராம்.. ட்ரீட்மெண்டுக்குப் பணமில்லாம இவனிடம்

கேட்டாங்களாம்.. என்ன செய்வதுன்னு தெரியாம என்னைத் தேடி வந்ததாச் சொன்னான்.."

"மனிதராப் பிறந்த எல்லோருக்கும் ஹார்ட், பிரெயின்னு இருக்கும்ங்க.. அதுக்காக ஒவ்வொன்னுக்கும் ஒவ்வொரு நோயோட பெயரைச் சொல்லி ஒருத்தன் வசூல் வேட்டை நடத்துவானா..? இவனோட அக்கம் பக்கத்து வீடுகளில வியாதி வந்தா இவன்தான் டாக்டர் ஃபீஸ் கொடுக்கனுமா..?"

"அவனோட அப்பா பெரிய பணக்காரராம்.. எல்லோருக்கும் தர்மம் பண்ணிப் பண்ணி ஏழையாகி மனது உடைந்து இறந்துட்டாராம்.. அந்த வள்ளலோட பையன் என்கிறதினால எல்லோரும் இவனிடம் உதவி கேட்டு வருவாங்களாம்.. கையில் இருந்தாக் கொடுப்பானாம்.. இல்லைன்னா திருடியாவது தான தர்மம் பண்ணுவானாம்.."

"அப்படின்னு அவன் சொல்ல நீங்களும் தலையைத் தலையை ஆட்டிக் கேட்டுக்கிட்டீங்க.."

"ம்ம்ம்.."

"முடியல.. மிச்சக் கதையையும் சொல்லித் தொலைங்க.."

"எவ்வளவு வேணும்ன்னு கேட்டேன்.."

"சரியாப் போச்சு போங்க.. அவன் உங்க சொத்து முழுவதையும் எழுதிக் கொடுக்கச் சொல்லிக் கேட்டிருப்பானே.."

"ஐம்பது லட்சம் வேண்டும்ன்னு கேட்டான்.."

"ஐம்பது லட்சமா..?"

"ம்ம்ம்.. என் பேங்க் பேலன்ஸ்.. அம்மாவுக்குத் தெரியாமல் அப்பாவிடம்.. அப்பாவுக்குத் தெரியாமல் அம்மாவிடம்.. இரண்டு பேருக்கும் தெரியாமல் அண்ணாவிடம்ன்னு பணம் கலெக்ட் பண்ணினேன்.. அவன் கேட்ட ஐம்பது லட்சத்தையும் கொடுத்து விட்டேன்.."

சுசித்ராவின் கன்னத்தில் இரண்டு அப்பு அப்பிக் கடலில் தள்ளி விடலாமா என்று வெறியானான் வாசுதேவன்.. எவனோ ஒருவன் கதை சொன்னான் என்று ஒருவாரத்திற்குள் ஒன்றரை கோடியைக் கொடுத்து ஏமாந்த கோடிஸ்வரியை இப்போதுதான் பார்க்கிறான்.. கேட்டவுடன் இப்படி கோடி கோடியாக பணம் கொடுத்தால் அந்தப் பிரசன்னா அது போதும் என்று விட்டு விடுவானா..? அடுத்தவரின் பணத்தின் மீது ஆசை கொண்டவர்களுக்குப் போதும் என்ற நிறைவு வந்து தொலைக்காதே..

"கெட்டிக்காரத்தனமான வேலைகளைத்தான் செய்திருக்கீங்க.. உங்களைப் பாராட்டிப் பேச வண்டை வண்டையா வார்த்தைகள் வருது வாயில.."

"வண்டை.. வண்டையாவா..? அப்படின்னா..?"

"அதுவும் தெரியாதா..? விளங்கிரும்.. வண்டி, வண்டியான்னு அர்த்தம்ங்க.."

"ஓ.."

"இதையும் நம்பிட்டிங்களா..?"

"ஏங்க..?"

"ஒன்றுமில்லைங்க.. உங்க புத்திசாலித்தனத்தில புல்லரிச்சுப் போயிட்டேங்க.. அப்புறம், அந்த வள்ளல்பிரான் உங்களைப் பார்க்க வந்தாருங்களா..?"

"வந்தான்.."

"வராம எப்படி இருப்பான்..? வாங்கிப் பழகின கை சும்மா இருக்குமா..? நமநமன்னு இருந்திருக்கும்.. இப்ப என்ன கதை சொன்னான்..? கோடி வீட்டு மாமாவுக்கு பிளட் கேன்சர்ன்னு கதை விட்டானா..? எத்தனை கோடி கேட்டான்..?"

"பணம் கேட்கலை.."

"நம்ப முடியலையே.. அவனாவது.. பணம் கேட்காம இருக்கிறதாவது.."

"என் காதலைக் கேட்டான்.."

இந்த வார்த்தைகளைச் சொல்லும் போது முற்றிலுமாக அவனது முகம் பார்ப்பதைத் தவிர்த்து புறமுதுகு காட்டித் திரும்பி விட்டாள் சுசித்ரா.. வாசுதேவனின் முகம் பயங்கரமாக மாறிவிட்டது.. ஒரு வகையில் ஏதேனும் ஒரு காதல் கதை அவளிடம் ஒளிந்திருக்கக் கூடும் என்று அவன் எதிர்பார்த்திருந்தாலும் இப்படிப்பட்ட ஒரு திருடனுடன் அந்தக் காதல்கதை பிணைந்திருக்கக் கூடும் என்று எதிர்பார்க்கவில்லை..

"நீங்க என்ன சொன்னீங்க..?" அழுத்தமாகக் கேட்டான்..

"அவன் மேல் எனக்குக் காதலில்லைன்னு சொன்னேன்.. அது வரவும் வராதுன்னு சொன்னேன்.. அவன் மத்தவங்களுக்காக உதவி கேட்டான்.. நான் செய்தேன்.. அதைத்தவிர அவனுக்கும் எனக்கும் இடையில் வேறு எதுவும் இல்லைன்னு எடுத்துச் சொன்னேன்.. அவன் கேட்கலை.. ஆத்திரப்பட்டான்.. அவன் ஏழை என்கிறதுக்காக நான் அவனைத் தட்டிக் கழிக்கிறேன்னு குற்றம் சாட்டினான்.. இப்போதுதான் அவன் ஏழை.. பிறக்கும் போது பணக்காரன்னு ஆர்கியு பண்ணினான்.. நான் ஸ்ட்ராங்கா மறுத்துட்டேன்.. இந்த நினைவு அவன் மனதில் வந்த பின்னாலே.. மத்தவங்களுக்காக ஹெல்ப் கேட்கிறதுக்குக் கூட என்னைப் பார்க்க வரவேண்டாம்ன்னு சொல்லிட்டேன்... மீறி வந்தா டாடியிடமும் அண்ணாவிடமும் சொல்லி விடுவேன்.. அவங்களோட பவர் என்னன்னு உனக்குத் தெரிய வைத்து விடுவேன்னு வார்ன் பண்ணினேன்.."

'சரியாகத்தான் செயல் பட்டிருக்கிறாள்..'

இந்த அளவுக்காவது தற்காத்துக் கொள்ளும் புத்தி இருந்திருக்கிறதே என்று ஆறுதலைடைந்தான் வாசுதேவ்ன..

"அதுக்கப்புறம் அவன் வரலையில்ல.." உறுதியாகக் கேட்டான்..

பிரசன்னாவைப் போன்ற மோசடிக்காரத் திருடன் பெரிய இடத்தில் மோதுவதை விரும்ப மாட்டான் என்ற எண்ணம் வாசுதேவனுக்கு.. இளகிய மனதுடைய சுசித்ராவை ஏமாளி என்று நினைத்திருப்பான்.. அடிக்கடிப் பேசிப் பழகி காதலிக்க வைத்து விடலாம் என்று கணக்குப் போட்டிருப்பான்.. அவள் சுதாரித்து எச்சரிக்கை செய்ததும் பயந்து ஓடியிருப்பான்..

26

சுசித்ராவின் விழிகள் சிந்திய கண்ணீருக்கான காரணம் புரியாமல் திகைத்தான் வாசுதேவன்.. அவள்தான் கறாராகச் சொல்லியிருக்கிறாளே.. அவனுடைய காதலை ஏற்றுக் கொள்ள மறுத்திருக்கிறாளே.. அவளை தொந்தரவு செய்தால் ஏற்படப் போகும் பின்விளைவுகளைப் பற்றி எச்சரித்திருக்கிறாளே.. அதன் பின்னரும் அவளைப் பின் தொடரும் தைரியம் அவனுக்கு வந்திருக்குமா என்ன..?

"அவன் வரலை.. பட்.. அண்ணி என்னைத் தேடி ஓடி வந்தாங்க.." சுசித்ரா விசும்பினாள்..

"அண்ணியா..?" வேம்பைக் கடித்து விட்டதைப் போல முகத்தைச் சுளித்தான் அவன்..

"யாரு..? இந்த பக்கத்து வீட்டுப் பல்லவியா..?"

"ம்ம்ம்.."

"அவ எதுக்காக உங்களைத் தேடி ஓடி வந்தா..? அது உங்களுக்கு ரிலேட்டிவ்தானே..?"

"ஊஹீம்.. பிரசன்னாவுக்கு ரிலேட்டிவ்.."

"அவனோட ரிலேட்டிவ்வா..?"

"யெஸ்.. அண்ணி பிரசன்னாவுடைய அக்கா.."

"அக்காவா..? அவனுக்கா..? கூடப் பிறந்த அக்காவா..?"

"ம்ம்ம்.."

"அவன் என்னமோ தனியாத்தான் இருந்தான்னு சொன்னீங்க.."

"நான் என்ன அவன் வீட்டுக்கா போய்ப் பார்த்தேன்..? எல்லாம் அவன் சொன்னதுதான்.."

"ஓ.. அவன் வீட்டுக்குப் போனதில்லையா..?"

"போனதே இல்லை.."

இதில் எல்லாம் ஆறுதலடைந்து விட முடியாது என்றிருந்தது வாசுதேவனுக்கு.. சிலந்தி வலையைப் போல சுசித்ராவைச் சுற்றி வலை பின்னப்பட்டிருக்கிறது.. விடுபட வழியில்லாமல் அவள் சிக்க வைக்கப் பட்டிருக்கிறாள்.. எந்த அளவுக்குச் சிக்கியிருக்கிறாள் என்று இன்னும் அவன் முழுமையாக தெரிந்து கொள்ளவில்லை.. அது தெரியாமல் எந்த முடிவுக்கும் அவன் வந்துவிட முடியாது.

"இந்த கேடு கெட்ட பல்லவிதான் உங்களுக்குச் சொந்தமில்லையே.. அப்புறம் என்ன கழுதைக்கு அவளைப் போய் அண்ணின்னு உறவு கொண்டாடித் தூக்கிச் சுமந்துக்கிட்டு இருக்கீங்க..?"

"அவங்களை பர்ஸ்ட் டைம் மீட் பண்ணினப்ப அண்ணின்னு உறவு கொண்டாடலை.. 'யார் நீ'ன்னுதான் கேட்டேன்.."

"சபாஷ்..! சரியான கொஸ்டின்.." மகிழ்ந்து போனான் வாசுதேவன்.. சுசித்ரா பார்த்த பார்வையில் அந்த மகிழ்ச்சி ஓடோடிப் போனது..

'இப்பத்தான் இவ விசயத்தில எந்த முடிவுக்கும் வந்து விடக் கூடாதுன்னு நினைச்சேன்.. நினைச்சு ஒரு செகண்ட் கூட ஆகலை.. நினைப்பை ஆட்டம் காண வைச்சிட்டாளே.. மகராசி.. ஷெர்லெக் ஹோம்ஸ் கதைகூட இத்தனை சஸ்பென்ஸா இருக்காது.. ஒட்டடைக் கொம்பு போல இத்தனூண்டா இருந்துக்கிட்டு.. அடுத்தடுத்து ஆட்டோ ஃபாமா வீசி அலற வைக்கிறாளே.. எந்த நேரத்தில் இவளைப் பார்த்துத் தொலைத்தேனோ..'

இது போல அவன் நினைக்கும் போதெல்லாம் சொல்லி வைத்ததைப் போல ஒரு பாடல் அவன் நினைவுக்கு வரும்.. அப்போதும் அந்தப் பாடல் மனதில் ஒலித்து அவனை ஓர் வழியாக்கியது..

'அதிகாலை.. சுபவேளை..'

மனதில் ஒலித்த பாடல் அவனை ஒரு மார்க்கமாக்கியது.. சித்தனைப் போலப் புத்தனைப் போல பற்றற்ற ஞானியாய் அவன் பார்த்து வைத்த பார்வையில் நிலைகுலைந்து போனாள் சுசித்ரா.. அவளுடைய காற்று அவன் பக்கம் அடித்து இந்த நிலைக்கு ஆளாக்கி விட்டதே..

"ஸாரிங்க.." மனப்பூர்வமாக மன்னிப்புக் கேட்டாள்..

"உங்க ஸாரியை நீங்களே வைத்துக்கங்க ப்ளீஸ்.."

"ஆக்சுலா நான் ஸாரி சொல்லவே மாட்டேன்.."

"அவ்வளவு திமிரா..?"

"எனக்குத் திமிரா..? உங்களுக்கே இது ஓவர்ன்னு தோணலையா..?"

"தோணுது.. திமிர் இருந்திருக்கலாம்ன்னு தோணுது.. திமிர் இருந்திருந்தா பிரசன்னாவையெல்லாம் மதித்துப் பேசியிருக்க மாட்டிங்க.. அந்தத் திமிர் உங்களைப் பாதுகாத்திருக்கும்.."

இப்படியொரு கோணம் இருக்கிறதா என்று வியந்து போனாள் சுசித்ரா.. இவனால் மட்டும் எப்படி இப்படியெல்லாம் யோசிக்க முடிகிறது..? அவனது அண்மையிலும் பேச்சிலும் ஓர் அருள் ஜோதி அவளுக்கு இருண்ட கானகத்தில் வழிகாட்டி அழைத்துச் செல்வதைப் போல உணர்ந்தாள்.. இது நீடிக்க வேண்டும்.. இறந்த காலம் மருட்ட, நிகழ்காலம் சுமையாக கனக்க, எதிர்காலத்தைப் பற்றி யோசிக்கக்கூட முடியாமல் ஒரு வட்டத்துக்குள் உழன்று கொண்டிருக்கும் இந்த அவதி மறைய வேண்டுமானால் இவனது துணை கிடைக்க வேண்டும்.. கிட்டுமா..?

"நான் ஸாரி சொல்ல வேண்டிய சிச்சுவேசனே வந்ததில்லை.. யாரையும் ஹர்ட் பண்ணியதில்லை.. என்னோட ஆக்டிவிட்டீஸ்.. எவரையும் அபெக்ட் பண்ணியதில்லை.. எப்போ பல்லவி அண்ணியை மீட் பண்ணினேனோ.. அப்போதிலிருந்து அடிக்கடி ஸாரி கேட்க வேண்டியதா ஆகிவிட்டது.."

"நல்லவங்கள மீட் பண்ணினா லைஃப் நல்ல விதமா இருந்திருக்கும்.. கழிசடைகளை மீட் பண்ணினா இந்தக் கதிதான்.."

எந்தக் கதியென்று சுசித்ராவும் கேட்கவில்லை.. வாசுதேவனும் சொல்லவில்லை..

"'யார் நீ'ன்னு நான் கேட்டதுக்கு.. நீயே எல்லாம்ன்னு ஒருத்தன் உயிருக்குப் போராடிக்கிட்டு இருக்கானே.. அவனோட கூடப் பிறந்த அக்கா.. என் தம்பி என்னைக் கண்ணுக்குள்ள வைச்சுப் பாதுகாத்தானே.. இருக்கிற சொத்து பத்தையெல்லாம் வித்துப் பணக்கார மாப்பிள்ளையாப் பாத்துக் கல்யாணம் பண்ணி வைச்சானே.. மும்பைக்கு வாழப் போனவ சென்னையில என் தம்பி நல்லாத்தான் இருக்கான்னு நினைச்சுக்கிட்டு இருந்தேனே.. அந்த நினைப்பில மண்ணை அள்ளிப் போட்டுட்டு என் தம்பி மருந்தைக் குடிச்சுட்டு சாகப் பொழைக்கக் கிடக்கிறானேன்னு கதறி அழுதாங்க.."

சுசித்ராவின் உதடுகள் துடித்த துடிப்பில் பல்லவியின் நடிப்பில் அவள் எந்த அளவுக்குப் பதறிப் போயிருந்திருப்பாள் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது..

'இவ பூஞ்சை மனசுக்காரின்னு தெரிந்து வைச்சுக்கிட்டு குறி பார்த்து அடிச்சிருக்காங்க.. இவளை குற்ற உணர்வில மாட்ட வைச்சிருக்காங்க..' வாசுதேவனின் மனம் கனத்தது..

"என்னால ஒருத்தன் சாகவும் துணிஞ்சிட்டான்னு கேள்விப் பட்டதும் நான் துடித்துப் போய் விட்டேன்."

"லூசு மாதிரி பேசக் கூடாது.. உங்களாலே அவன் சாகத் துணியலை.. விருப்பமில்லாத பெண்ணை வழிக்குக்

கொண்டு வர அவன் டிராமாப் போட்டிருக்கான்.."

"இல்லை வாசு.. பிரசன்னா டிராமாப் போடலை.. நிஜமாகவே பாய்சனைச் சாப்பிட்டு விட்டு ஹாஸ்பிடலில் அட்மிட் ஆகியிருந்தான்.. நான் போய் பார்த்தப்ப டேன்ஜரஸ் கண்டிசன்ல இருந்தான்.."

"விசத்தைக் குடிச்சவன் சாகிற அளவுக்குக் குடிக்கலை போல.. இந்த சினிமாவில் வர்ற பாலிடால் கேஸ்தான்.." என்றான் வாசுதேவன்..

"இரக்கமில்லாம பேசாதீங்க.." பொங்கினாள் சுசித்ரா.

"நீங்க ஒரு ஆள் இரக்க மனசோட இருந்து உங்க குடும்பத்தைப் பாடாப் படுத்திக்கிட்டு இருக்கிறது போதாதா..? ஆம்பளைங்க.. குடும்பத்தைக் காப்பாத்தனும்.. உங்களுக்கென்ன.. நீங்க ஊருக்கு உழைச்சாலும் குடும்பத்தையும் கம்பெனியையும் கட்டிக் காப்பாத்த உங்க அண்ணன் இருக்கார்.. எனக்கிருக்கிறது அக்காங்க.. அக்கா பிள்ளைகளுக்கு தாய்மாமன் சீர் செய்ய நான் உருப்படியா இருந்தாகனும்.."

சுசித்ராவின் பொங்கல் வந்த வேகத்தில் அடங்கிப் போனது.. வாயை மூடிக் கொண்டாள்.. ஓங்கி ஒரு குட்டு வைத்தால் என்ன என்று யோசித்தான் வாசுதேவன்.. பாவம் என்று விட்டு விட்டான்..

"நீங்க என்ன என்னவோ சொல்கிறீங்க.." என்று முணுமுணுத்தாள் சுசித்ரா..

"அந்தப் பிரசன்னாவைப் போலச் சொல்லலையில்ல..?" குடுத்துக் கட்டினான் வாசுதேவன்.

சுசித்ராவின் முகம் விழுந்து விட்டது.. தலை கவிழ்ந்து மௌனம் சாதித்தாள்.. வாசுதேவனின் மனம் வலித்தது.. பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் பருவப் பெண் பூவைப் போன்ற குணாதிசியத்துடன் இருப்பவள்.. அவளை அவனுக்கு மிகவும் பிடிக்கும்.. தேவதைப் பெண்..! பேரழகி..! அவளை மணம் முடித்துக் கொள்ளச் சொல்லி வேண்டுகிறாள்.. அதைக் கேட்டதும் ஆனந்தத்தில்

ஆகாயத்துக்கும், பூமிக்குமாக குதிக்க முடியாமல் அவளது கடந்த காலக் காதல் (?) கதையை 'ஊம்' கொட்டிக் கேட்டுக் கொண்டிருக்கும் வன்கொடுமையை என்னவென்று சொல்லுவது..? விதி செய்யும் சதி என்று சொல்தா..?

'வாழ்க்கை விசித்திரமானது..'

நெடிய பெருமூச்சுடன் கடலை வெறித்தான்.. இது போன்ற பெருமூச்சுக்கள் கருணாகரனுக்குச் சொந்தமானவை.. வாசுதேவன் உயிர்ப்பு மிக்கவன்.. அவன் இருக்கும் இடங்களில் ஜீவஅலை மிதக்கும்..

'என்னைக்கு இவளைப் பாத்தேனோ.. அப்ப இருந்து டோட்டலா என் வாழ்க்கையே மாறிப்போச்சு..'

வசுமதியை ஹாஸ்பிடலுக்கு அழைத்துச் செல்வதாக கூறியிருந்தான்.. யூசுவல் செக்கப்.. அவன் வாக்குக் கொடுக்கும் போதே மலையில் அவன் சீக்கிரமாக வீடு திரும்புவானா என்று வசுமதி சந்தேகத்துடன் கேட்டாள்.. கட்டாயம் வருவேன் என்று சொல்லி விட்டு இவன் கடர்கரையில் உட்கார்ந்து சுசித்ரா சொல்லம் கண்றாவி ஏமாளிக் கதையை கேட்டுக் கொண்டிருக்கிறான்..

அவனது பெருமூச்சில் நிமிர்ந்து பார்த்தாள் சுசித்ரா.. ஊடுறுவும் அவனது பார்வையில் தீட்சண்யத்தைத் தாங்க முடியாமல் தவித்துப் போனாள்.. எதனால் அந்தத்தவிப்பு..? வாசுதேவனின் புருவங்கள் சுருங்கின..

"மூட்-அவுட் ஆகிட்டிங்களா..?"

"இல்லேன்னு சொல்வேன்னு நினைத்தீங்களா..?"

"ஐ ஆம் ஸாரி.."

"அடிக்கடி சொன்னா மன்னிப்புக்கான மதிப்பே போய் விடும்.."

"நான் என்னதான் செய்வது..?"

"அன்றைக்கு என்னதான் செய்தீங்க.. அதைச் சொல்லுங்க.."

"அது.. வந்து.. வந்து.."

சுசித்ராவின் இமைகள் துடித்தன.. மணலில் குழி தோண்டி அதில் முகத்தை மறைத்துக் கொள்ள முயலும் வான்கோழி போல முழங்கால்களில முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.. அவளால் வாசுதேவனின் முகத்தைப் பார்த்துப் பேச முடியவில்லை என்பதைப் புரிந்து கொண்ட வாசுதேவனின் மனம் கசந்து போனது..

இது கொடுமை.. காதலியின் கடந்தகாலக் காதல் கதையைக் கேட்க நேர்வது..

எவ்வளவு நேரம்தான் தப்பிக்க முடியும்..? கடந்த காலக் கதையைத் தெரிந்து கொள்ளாமல் வாசுதேவன் ஒரு முடிவுக்கும் வர மாட்டான்.. அவன் கேட்பதில் நியாயமும் இருந்தது.. திருமண பந்தத்திற்கான புனிதத்தை அறியாதவள் இல்லை சுசித்ரா..

'ஆனால்..'

வாசுதேவன் வாழ வேண்டும்.. தேவையற்ற பந்தத்தில் மாட்டிக் கொண்டு உழலும் சுசித்ரா அவன் வாழ்வில் சுமையாக ஏறி உட்கார்ந்து விடக்கூடாது.. அதனால்தானே இரண்டு வருடங்களில் விவாகரத்து என்ற வேண்டுகோளை அவன்முன் வைத்தாள்.. அவன் ஒப்புக் கொள்ளவில்லையே..

'பிளாஷ் பேக்கைக் கேட்டவுடன் ஒப்புக் கொள்வான்..'

நிச்சயமாக நினைத்தாள் சுசித்ரா.. அவள் அதிர்ஷ்டமில்லாதவள்.. ராசியில்லாதவள்.. அவளால்தான் பல்லவியும் அநாதையாகி அவளை அண்டி வாழ்கிறாள்..

கண்களில் கசிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்..

"நீங்க கண்ணீர் விட்டுக் கொண்டே கதை சொல்கிறதினால இது கண்ணீர் காவியமா ஆகிவிடாது.. கண்றாவிக் காவியம்.. கடுப்படிக்காமச் சொல்லித் தொலைச்சாத் தேவலாம்.. என்னையென்ன வேலை வெட்டியில்லாத வெட்டிப்பையன்னு நினைசீங்களா..?

உங்களைப் போல நானில்லை.. நீங்க வேலை செய்தாலும் செய்யலைன்னாலும் சம்பளம் வந்துரும்.. வீட்டைப் பார்த்துக்காம தெருவில் போக வேண்டிய ஏதோ ஒன்றுக்கு வீடு பார்த்துக் கொடுத்துத் தாலாட்டினாலும் யாரும் உங்களை ஏன்னு கேட்கப் போகிறதில்லை.. நான் அப்படியில்லை.. வாங்கின காசுக்கு வஞ்சமில்லாம வேலையைப் பாத்தாகனும்.. பொறுப்பான மகனா, தம்பியா என் குடும்பத்தையும் கவனிச்சாகனும்.. கண்ட கருமாந்திரங்களைப் பத்திக் கண்ணீர் விடறதுக்கு ஆறுதல் சொல்லெல்லாம் எனக்கு நேரம் கிடையாது.." வாசுதேவன் வெடுவெடுத்தான்..

இறைஞ்சலுடன் ஏறிட்டுப் பார்த்த பார்வைக்கு அவன் மசியவில்லை.. நிர்தாட்சண்யமாக முறைத்தான்... நடுக்கத்துடன் சொல்ல ஆரம்பித்தாள் சுசித்ரா..

அவளால் வாசுதேவனின் முகத்தை ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை.. அது வெட்கமல்ல.. குன்றல் என்பதில் அவனது கடுப்பு அதிகமாகியது.. கண்கள் சிவந்தான்..

"நான்.. நான்.. பிரசன்னாவின் காதலை ஏற்றுக் கொள்வதாகச் சொல்லி விட்டேன்.." நடுக்கத்துடன் வெளிவந்தன அவளது வார்த்தைகள்..

அவ்வளவுதான் என்பதைப் போல வாசுதேவனின் இமைகள் மூடித் திறந்தன.. இதுதான் என்ற யூகம் இருந்தது.. இதுதான் என்று உறுதி ஆன போது ஏன் மனம் வலிக்கிறது..?

"பிரசன்னாவின் காதலை ஏற்றுக்கலைன்னா அவன் செத்துப் போய் விடுவான்னு பயந்தேன்.. அவனைப் போல நல்லவன் சாகக் கூடாது.. அப்படி அவன் செத்துட்டா ஆயுளுக்கும் என் மனச்சாட்சி அவனைக் கொன்று விட்டாய்ன்னு உறுத்தும்.."

"நல்லவன்..? அவன்..? ம்ம்ம்.."

"என் பார்வைக்கு அவன் நல்லவன்தான்.."

"ம்ப்ச்.. நெக்ஸ்ட்.."

"பிரசன்னா மேரேஜீக்கு அவசரப்படுத்தினான்.. பல்லவி அண்ணியும் அதை சப்போர்ட் பண்ணினாங்க.."

"பன்னி.. ஐ ஆம் ஸாரி.. அண்ண்ண்..ணி.. மும்பைக்குப் போகலையா..?"

"ஊஹீம்.. பிரசன்னாவுக்கு அவன் மனம் போல மேரேஜ் பண்ணி வைத்துட்டுத்தான் ஊருக்குப் போவேன்னு சொல்லிட்டு சென்னையிலேயே ஸ்டே பண்ணிட்டாங்க.."

"அம்மணிக்கு பணக்கார இடத்தில கல்யாணம் ஆகியிருந்துச்சில்ல.. அந்தக் காதல் கணவர் எங்கே போனாராம்..?"

"என்னாலே.. என்னாலே.."

"உங்களாலே.. உங்களாலே.."

"அண்ணி கடைசி வரைக்கும் அவங்க ஹஸ்பெண்டைப் பார்க்க முடியாமலே போயிருச்சு.. நான் பாவி.."

சுசித்ரா முகத்தில் அறைந்து கொண்டு கதறினாள்.. அவளை சமாதானப் படுத்தும் முயற்சியில் சற்றும் இறங்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த வாசுதேவன் அவள் அழுது ஓய்ந்ததும்..

"கதைக்கு இன்னும் நீங்க எண்டு போடலையே.." என்றான்..

இதழ்கள் துடிதுடிக்க அவனை வெறித்துப் பார்த்த சுசித்ரா..

"உங்க மனது என்ன கல்லா..?" என்று பொருமினாள்.

"ஊஹீம்.. இரும்புங்க.. கல் தானா உடைஞ்சு மணலா ஆகிரும்.. இரும்பை அத்தனை எளிதா உடைத்து விட முடியாது.. நான்தான் சொல்றேனே.. உங்களுக்கு வெளுப்பாத் தெரியறது எனக்குக் கருப்பாத் தெரியுது.. நான் இப்படித்தான் இருப்பேன்.. மைண்ட் இட்.."

நிராசையுடன் அவனைப் பார்த்த சுசித்ரா கதையைத் தொடர்ந்தாள்..

அந்திவானம் வாசுதேவனின் விழிகள் போலச் சிவந்திருந்தது.. வாசுதேவன் கையிலிருந்த கடிகாரத்தைப் பார்த்ததில் சுசித்ரா மனம் நைந்தாள்.. அவளது உணர்வுகளுக்கு அவன் கொடுக்கும் மரியாதையா இது..? அவள் எவ்வளவு துயரமான சம்பவத்தைக் கூறிக் கொண்டிருக்கிறாள்.. அது குறித்த இரக்கம் அவனிடம் துளியும் இல்லையே..

"ப்ளீஸ்.. உங்க கதையை நீங்க சீக்கிரம் முடித்தாத் தேவலாம்.. நான் கிளம்பனும்.. எனக்கு வேலையிருக்கு.."

"இவ்வளவு கறாரா பேசறிங்களே வாசுதேவன்.."

"வேற எப்படிப் பேசச் சொல்கிறீங்க..? நானும் கேக்கறேன், கேக்கறேன், கேட்டுக்கிட்டே இருக்கேன்.. நைல் நதியை விட நீளமா இருக்கே உங்க கண்றாவிக் காதல் கதை.."

"ஷட் அப் வாசுதேவன்.. கண்றாவிக் காதல் கதையா..? ஐ அப்ஜெக்ட் இட்.."

"உங்க அப்ஜெக்ட்டையெல்லாம் கன்சிடர் பண்ண முடியாதுங்க.. ஆர்டர் போடறீங்களா..? யு ஆர் நாட் மை பாஸ்.. என்னவோ போனாப் போகுதுன்னு கதை கேக்க வந்தா 'ஷட் அப்'ங்கறிங்க.."

"நீங்க பேசுவது மட்டும் சரியா..?"

"சரி, தப்பையெல்லாம் நீங்க பேசக் கூடாது.. அதை கண்டுபிடிக்க முடிஞ்சங்கதான் பேசனும்.. நீங்க வெள்ளைக்காக்கா மல்லாக்கப் பறக்குதுன்னு சொன்னா அப்படியான்னு நம்புகிற கேஸ்.."

"அப்படியே இருந்துட்டுப் போறேன்.."

"அது உங்க பிரச்னை.. உங்க பன்னிக்கென்ன பிரச்னை..?"

"பன்னியா..?"

"அண்ணி.. போதுமா.."

"அவங்க.. அவங்க.."

சண்டை போடும் மும்முரத்தில் நின்றிருந்த கண்ணீர் பெருக்கெடுக்க சுசித்ரா தேம்பியழ ஆரம்பித்தாள்.. கடந்து சென்றவர்கள் திரும்பிப் பார்த்ததில் வாசுதேவன் தலையில் அடித்துக் கொண்டான்..

"நான் என்னவோ உங்களைக் காதலிச்சு கை விட்டுட்டேன்னு எவனாவது தர்மஅடி கொடுத்துரப் போறான்.. அழுகையை நிறுத்தித் தொலைச்சுட்டு கதைக்கு வந்து தொலைங்க.."

"அன்றைக்கு பல்லவி அண்ணியோட ஹஸ்பெண்ட் மும்பையிலிருந்து சென்னைக்கு வந்தாராம்.."

"எதில..?"

"பிளைட்டில..."

"வந்தாராம்ன்னா... நீங்க அவரைப் பார்க்கலியா..?"

"ஊஹீம்.. நான் அவரைப் பார்த்ததே இல்லை.. பிரசன்னா பாய்சன் சாப்பிட்டுட்டு ஹாஸ்பிடலில் சாகப் பிழைக்கக் கிடந்த செய்தியைக் கேட்டதும் அண்ணி பிளைட் பிடித்து ஓடி வந்திட்டாங்களாம்.. அண்ணியோட ஹஸ்பெண்ட் அப்ப பிஸினெஸ் விசயமா ஃபாரின் போயிருந்தாராம்.."

"பாருடா.. பன்னியோட ஹப்பி ஃபாரினுக்கெல்லாம் போயிருக்கு.."

"மிஸ்டர் வாசுதேவன்.."

"ஓகே.. ஓகே.. சாருக்கு என்ன பிஸினெஸ்ஸாம்.."

"தெரியாது.. அண்ணி சொல்லலை.."

"சொல்லியிருக்காதே.. அந்தப் பிரசன்னா சாகப் பிழைக்கக் கிடந்தானே.. எந்த ஹாஸ்பிடலில் அட்மிட் பண்ணியிருந்தாங்க..?"

"அவனுக்குத் தெரிந்த ஹாஸ்பிடலாம்.."

"வெரிகுட்.."

"ஏன் வெரிகுட்ன்னு சொல்றீங்க.."

"இப்படி பப்பாவா இருக்கீங்களே.. அதுக்குத்தான் 'வெரிகுட்' சொன்னேன்.."

"அன்றைக்கு வந்த அண்ணியோட ஹஸ்பெண்ட் ஸ்டார் ஹோட்டலில் ரூம் போட்டுத் தங்கியிருந்தாராம்.."

"ஏனாம்.."

"அவருக்கு பிரசன்னாவின் சின்ன வீட்டில் ஸ்டே பண்ண வசதி பத்தாதாம்.. இப்பத்தானே இப்படி.. நாளைக்கு உன்னை என் தம்பி மேரேஜ் பண்ணிக்கிட்டா என் ஹஸ்பெண்ட் மைத்துனன் இருக்கிற பங்களாவில தானே ஸ்டே பண்ணுவார்ன்னு அண்ணி கேட்டாங்க.."

"ஓ.. உனக்காக பன்னியோட தம்பி வசந்தமாளிகை கட்டித் தருவான்னு சொல்லுச்சாக்கும்.."

"டாடி எப்படியும் என்னை மன்னித்து ஏத்துக்குவார்.. அவரோட மகளுக்காக மாளிகையை வாங்கித் தருவார்ன்னு அவங்க நினைச்சாங்க.."

"அருமையான திட்டம்தான்.."

"அன்றைக்கு பிரசன்னா அண்ணியோட ஹஸ்பெண்டை ஸ்டார் ஹோட்டலில் மீட் பண்ணிட்டு அவருடன் வருவதாக இருந்தானாம்.. அண்ணி எனக்காக வீட்டில் வெயிட் பண்ணிக்கிட்டு இருந்தாங்களாம்.."

"இரு.. இரு.. அன்றைக்கு அன்றைக்குன்னு சொல்கிறாயே.. என்றைக்கு..? அந்த நாளில் அப்படியென்ன விசேசம்..?"

"அன்றைக்குத்தான் எனக்கும் பிரசன்னாவுக்கும் ரெஜிஸ்டர் மேரேஜ் நடப்பதாக இருந்தது.."

'கல்யாணம் வரைக்கும் போயிருக்கிறா..'

வாசுதேவனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.. எழுந்து போய்விடலாமா என்றுகூட நினைத்தான்.. என்ன

கழுதைக்காக அங்கே உட்கார்ந்திருக்கிறான்..?

"முதல் நாள் நைட்டில திடிர்ன்னு பிரசன்னா போன் பண்ணினான்.. அவனுக்கும் எனக்கும் ரிஜிஸ்டர் மேரேஜீக்கு ஏற்பாடு பண்ணி விட்டதாகச் சொன்னான்.. திடிர்ன்னு சொன்னா எப்படின்னு கேட்டேன்.. அதெல்லாம் எனக்குத் தெரியாது.. நீ வர்ற.. இல்லேன்னா நான் பாஸ்சனைச் சாப்பிட்டு விடுவேன்னு மிரட்டிவிட்டு போனனை வைத்துட்டான்.. பயந்து போன நான் காலையிலே கிளம்பலாமா வேண்டாமான்னு யோசித்துக் கொண்டிருந்த போது அண்ணி போன் பண்ணி கதறினாங்க.. அவங்க சொல்லித்தான் எனக்கு அத்தனை விவரமும் தெரியவந்தது.."

"நீங்க விவரம் தெரியாதவங்கன்னு உலகத்துக்கே தெரியுமே.."

"ப்ளீஸ் வாசு.. இது ஜோக்கடிக்கிற நேரமில்லை.."

"உங்ககூட இந்த லட்சணத்தில பேசி இப்படியாப் பட்டக் கதையைக் கேட்டா ஒரு மனுசனுக்கு சிரிப்பே மறந்து போயிரும்.. ஜோக்கடிக்கவா மூடு வரும்..? ஸோ சேடு.."

"இட்'ஸ் டூ பேட்.."

"இருக்கட்டும்.. நீங்க பன்னியிடம் கேட்டறிந்த விவரங்கள் என்னவோ.."

"அண்ணியோட ஹஸ்பெண்ட் பிரசன்னாவின் மேரேஜில் கலந்துக்கனும்னு பிளைட் பிடித்துச் சென்னைக்கு வந்து ஸ்டார் ஹோட்டலில ரூம் போட்டுத் தங்கியிருந்தாராம்.. பிரசன்னா அவரைப் பார்த்துவிட்டு அவருடன் ரிஜிஸ்டர் ஆபிஸீக்கு வந்து விடுவதாகச் சொல்லி விட்டுப் போனானாம்.. அண்ணியை என்னை அழைத்துக் கொண்டு வருவதற்காக வீட்டில் இருக்கச் சொல்லியிருந்தானாம்.."

"ஏன்..? நீயென்ன பப்பாவா..? ரிஜிஸ்டர் ஆபிசுக்குப் போக உனக்கு வழி தெரியாதா..?"

"எந்த ஏரியாவில் இருக்கிற ரிஜிஸ்டர் ஆபிஸ்ன்னு தெரியாதே.."

"அதுசரி.."

"எனக்காக காத்திருந்த அண்ணிக்குப் போன வந்ததாம்.."

"என்னன்னு.."

"பிரசன்னாவும், அண்ணியோட ஹஸ்பெண்டும் போன கார் ஆக்ஸிடெண்ட் ஆகி இரண்டு பேரும் ஸ்பாட் அவுட்டாம்.."

சுசித்ரா முகம் மூடி அழ ஆரம்பித்தாள்.. ஏன் தனக்கு ஒரு சொட்டுக் கண்ணீர்கூட வர மாட்டேன் என்கிறது என்று யோசித்தான் வாசுதேவன்.. அவன் மனதில் ஈரம் அற்றுப் போய் விட்டதா..? எவ்வளவுதான் யோசித்தாலும் காதில் கேட்டவைகளை உண்மை என்று நம்ப அவன் மனம் மறுக்கிறதே.. ஏன்..?

"நீங்க ஹாஸ்பிடலுக்குப் போனீங்களா..?"

'இல்லை' எனும் விதமாக இடம் வலமாக தலையை அசைத்தாள் சுசித்ரா.. கண்ணீர் நிரம்பிய விழிகளுடன் காவியம் போல் இருந்தாள்.. எதற்காக இந்த துக்கம் என்று வேதனை கொண்டான்..

"ஏன் போகலை..?"

"அண்ணி வேண்டாம்ன்னு சொல்லிட்டாங்க.. நான் தாங்க மாட்டேன்னு சொல்லிட்டுப் போனை வைத்துட்டாங்க.."

"அதுக்காக நீங்க போகாமல் இருக்கலாமா..?"

"எந்த ஹாஸ்பிடலில் அவங்களை வைத்திருக்காங்கன்னு எனக்குத் தெரியாதே.. அண்ணிக்குப் போன் பண்ணினால் 'ஸ்விட்ச் ஆஃப்'ன்னு வந்தது.. அவங்க வீட்டுக்கு ஓடினாப் பூட்டுத் தொங்கியது.. அக்கம் பக்கத்தில் விசாரித்தால் எதுவும் தெரியாதுன்னு சொல்லிட்டாங்க.. வீட்டுக்கு வந்திட்டேன்.. இரண்டு நாள் கழித்து அண்ணி போன் பண்ணினாங்க.. அவசரமா அட்டெண்ட் பண்ணினேன்.. என்னை நாகேஸ்வரராவ் பார்க்குக்கு வரச் சொன்னாங்க..

போனேன்.. பெட்டி படுக்கையோட ஒரு மரபெஞ்சில் அழுதுகிட்டே உட்கார்ந்திருந்தாங்க.."

'ஓ.. அப்ப இருந்துதான் அவ இவ தலைமேல ஏறி உட்கார்ந்திருக்கிறாளா..?'

"என்ன அண்ணி இங்க உட்கார்ந்திருக்கீங்கன்னு பதறினேன்.. வேறு எங்கே போவது..? என் தம்பியும், ஹஸ்பெண்டும் ஒரே நேரத்தில ஒன்னாப் போயிட்டாங்க.. ஆதரிக்க ஆளில்லாம அனாதையா தெருவில் நிற்கிறேன்னு அழுதாங்க.. பிரசன்னா நினைத்தபடி உனக்கும் அவனுக்கும் மேரேஜ் நடந்திருந்தா இந்நேரம் நீ என் தம்பி பொண்டாட்டியா இருந்திருப்ப.. காலத்துக்கும் என்னைத் தாங்கியிருப்ப.. உன்னை மேரேஜ் பண்ணிக்கனும்னு அவன் வந்தப்பதான் அவனுக்கு ஆக்ஸிடெண்ட் ஆகிப் போய்ச் சேர்ந்துட்டான்.. கூடவே என் ஹஸ்பெண்டும் போயிட்டார்.. உனக்காகன்னு பார்த்து என்னை என் தம்பி அநாதையாக்கிட்டானே.. உன்னாலே என் குடும்பமே அழிந்திருச்சேன்னு கதறினாங்க.."

'என்ன ஒரு பிரெயின் வாஷ்.. அவ ஜில்லாக்கேடி..'

"அண்ணியோட ஹஸ்பெண்ட் மும்பையில பணக்காரர் ஆச்சேன்னு கேட்டேன்.. கொஞ்சநாளா அவரோட பிஸினெஸ் லாஸில இருந்ததா பிஸினெஸ் பார்ட்னர்ஸ் சொல்லிக் கம்பெனியையும் வீட்டையும் அவங்க பெயருக்கு மாற்றிக்கிட்டாங்களாம்.. பிரசன்னாவும் அண்ணியோட ஹஸ்பெண்டும் இருந்திருந்தா இப்படி ஆகியிருக்காதுன்னு அழுதாங்க.. என்னாலே அவங்க எல்லாத்தையும் இழந்துட்டதாப் புலம்பினாங்க.."

'இவளைக் குற்ற உணர்ச்சியிலேயே வைத்திருந்தாத்தான் அவளுக்கு வாழ்வுன்னு கணக்குப் போட்டு செயல்படுத்தியிருக்கா..'

"அவங்களுக்கும் அவங்க ஹஸ்பெண்டுக்கும் ரிலேட்டிவ்ன்னு யாரும் இல்லையான்னு கேட்டேன்.. இல்லைன்னு சொன்னாங்க.. பிரசன்னாவோட அம்மாவும், அப்பாவும் லவ் மேரேஜாம்.. அதனால இரண்டு பக்க

சொந்தமும் தள்ளி வைச்சுட்டாங்களாம்.. அண்ணியோட ஹஸ்பெண்டோ அநாதை விடுதியிலே வளர்ந்தவராம்.. உழைப்பால் முன்னேறியவராம்... அதனாலேயே அண்ணிக்கும் பிரசன்னாவுக்கும் அவரை ரொம்பப் பிடிச்சுப் போச்சாம்.."

'என்னமா கதை சொல்லியிருக்கா.. கற்பனைன்னா இது கற்பனை..'

"உன்னை என் தம்பி பெண்டாட்டியாகத்தான் பார்க்கிறேன் சுசி.. என்னால அப்படித்தான் உன்னை நினைக்க முடியும்.. எனக்கு நீதான் பிரசன்னா.. இந்த நிலையில நான் நிக்கிறதை பிரசன்னா பாத்திருந்தா என்னை உள்ளங்கையில வைச்சுத் தாங்கியிருப்பானே.. என் கண்ணில ஒரு சொட்டுக் கண்ணீர் வர விட மாட்டானேன்னு அழுதாங்க.. எனக்குத் தாங்கலை.. அவங்களோட அந்த நிலைமைக்கு நான்தானே காரணம்ன்னு என் மனச்சாட்சி உறுத்துச்சு.. நானிருக்கேன் அண்ணி உங்களுக்குன்னு வாக்குக் கொடுத்திட்டேன்.. அவங்களை என் வீட்டுக்குக் கூப்பிட்டுக் கொண்டு போனேன்.. டாடி மெயின் கேட்டைத் திறக்கக் கூடாதுன்னு செக்யூரிட்டிக்கு ஆர்டர் போட்டுட்டார்.. வந்தால் நான் மட்டும்தான் உள்ளே வரனும்னு சொல்லிட்டார்.. அண்ணியோடு என் பிரண்ட் வீட்டுக்குப் போனேன்.. கெஸ்ட் ஹவுஸ் சாவியைத் தந்தா.. அன்றைக்கு அங்கே தங்கினோம்.. தனியாய் வீடு பார்த்துக் குடியேறலாம்.. இரண்டு பேரும் வேலைக்குப் போகலாம்ன்னு சொன்னேன்.. அண்ணி மறுத்துட்டாங்க.. அவங்க அதிகமாப் படிக்கலைன்னாங்க.. இங்கிலீஷ் ஃப்ளூயென்ஸி இருக்கு.. கால் செண்டரில் வேலை கிடைக்கும்ன்னு சொன்னேன்.. பிரசன்னாவும் அவங்க ஹஸ்பெண்டும் அவங்களை வீட்டை விட்டு வெளியே போக விடாமல் ராணி போல வைத்திருந்தாங்கன்னு அழுதாங்க.. சரி நான் மட்டும் வேலைக்குப் போகிறேன்னு சொன்னேன்.. பெத்தவங்களையும் மகளையும் பிரித்த பாவம் எனக்கு எதுக்கு.. நீ உன் வீட்டுக்குப் போ.. எனக்குத் தனிவீடு பார்த்துக்குடு.. மாதச் செலவுக்குப் பணம் கொடு.. அது போதும்ன்னாங்க.."

'அது போதுமா.. மகராசி.. சின்னப்பெண்ணின் மனதைக் கரைத்து மாதாமாதம் இரண்டு லட்சத்தை பிடுங்கிக்கிட்டு இருக்கிறாளே..'

"அவங்க கேட்டுக்கிட்டபடி தனி வீடு பார்த்துக் குடி வைத்தேன்.. அப்போ என் பேங்க் அக்கவுண்டில எக்கச் சக்கமா பணம் இருந்தது.. ஃபர்னிச்சர்ஸ்.. ஜ்வல்ஸ்.. கிச்சன் அயிட்டம்ஸ்ன்னு அவங்க கைகாட்டியதையெல்லாம் வாங்கிக் கொடுத்தேன்.. அந்தப் பணத்தைச் செலவளிக்காம இறுக்கிப் பிடித்திருந்தா ஒரு சின்ன அபார்ட்மெண்ட், கார்ன்னு வாங்கிக் கொடுத்திருக்கலாம்.. அந்த அறிவு எனக்கு இல்லாம போயிருச்சு.. எல்லாப் பணமும் காலியானதும் டாடியிடம் போய் நின்னேன்.. அவருக்கு நான் என்ன செய்துக்கிட்டு இருக்கேன்னு தெரிந்திருந்தது... எனக்கு மேரேஜ் பிக்ஸ் பண்ணியிருக்கிறதாச் சொன்னார்.. இனி என் லைஃபில் மேரேஜீக்கு இடமில்லைன்னு சொல்லிட்டேன்... டாடியும், அண்ணாவும் சத்தம் போட்டாங்க.. அட்வைஸ் பண்ணினாங்க.. நான் அசைந்து கொடுக்கலை.. டாடி அண்ணனை 'எம்.டி'ஆக்கிட்டு எனக்கு ஜி.எம் போஸ்ட்டைக் கொடுத்தார்.. டூ லேக்ஸ் சேலரி.. அதற்கு மேல் நான் அவரிடம் பணம் கேட்கக் கூடாதுன்னு சொல்லி என்னை விலக்கி வைத்துட்டார்.. அம்மா மட்டும்தான் என்னுடன் பேசுவாங்க.."

அநாதையானது பல்லவியல்ல.. தான்தான் என்பதை உணராமல் சொல்லிக் கொண்டிருந்தாள் அந்தப் பேதை.. வாசுதேவனின் மனம் வலித்தது..

## 28

"எனக்குத் தெரிய வேண்டியது ஒன்றே ஒன்றுதான்.. அவன் உங்களைக் காதலித்ததாச் சொன்னான்னு சொல்கிறீங்க.. நீங்க அவனைக் காதலித்தீங்களா..?"

அவளது விழியோடு விழி பார்த்து நேருக்கு நேராக அந்தக் கேள்வியைக் கேட்டான் வாசுதேவன்.. அவள் சிறிதளவும் யோசிக்காமல் உடனடியாகப் பதில் சொன்னாள்..

"இல்லை.. நான் அவனைக் காதலிக்கவில்லை.. பட்.. அவனுடைய காதலை அக்செப்ட் பண்ணினேன்.."

"ம்ம்ம்.. அவன் உங்களை மேரேஜ் பண்ணிக்கச் சொல்லி ஃபோர்ஸ் பண்ணினப்ப நீங்க ஏன் ஓகே சொல்லலை..?"

"எனக்கு டைம் தேவைப்பட்டது.. அவன் சாகப் பிழைக்கக் கிடந்தான்.. காப்பாற்ற அவனுடைய காதலை ஏற்றுக்கிட்டேன்.. உடனே மேரேஜ்ன்னா என் மனது அதை ஏற்றுக்கலை.."

"விடிந்ததும் ரிஜிஸ்டர் மேரேஜ்.. கிளம்பி வான்னு போன் பண்றான்.. விடிந்ததும் நீங்க கிளம்பலை.. போகலாமா வேண்டாமான்னு யோசித்துக்கிட்டு இருந்தீருக்கீங்க.. ஏன்..?"

"ஐ டோன்ட் நோ.. என்னால் போக முடியலை.."

வாசுதேவன் எழுந்து கொண்டான்.. அவன் என்ன நினைக்கிறான் என்று அவனது முகத்தை வைத்துக் கண்டு பிடிக்க முடியவில்லை.. என்ன முடிவெடுத்திருக்கிறான் என்று புரியாமல் அவள் தடுமாறினாள்.. கல்போன்ற கடினமான முகத்துடன் கடலலையை வெறித்தபடி அவன் நின்றிருந்தான்.. சுசித்ரா கையை மணலில் ஊன்றி எழுந்து கொள்ள முயன்றாள்.. முடியாமல் தடுமாறப் போனவளுக்குக் கை கொடுத்து அவன் தாங்கிக் கொண்டான்.. சுசித்ராவின் வழவழப்பான இடையில் அவனது வலிமையான கைவிரல்கள் பதிந்து அழுத்தியதில் முதன் முறையாக ஆணின் அந்தரங்க ஸ்பரிசத்தை உணர்ந்த பதட்டத்தை அவளிடம் கண்டான் வாசுதேவன்.. அவளையே பார்த்த வண்ணம் அவளைச் சரியாக நிற்க வைத்து விட்டு விலகி நின்றான்.. கடற்கரைக் காற்றின் குளுமையையும் மீறி வியர்த்த முகத்தை அவள் துடைத்துக் கொள்வதைப் பார்த்தவனுக்கு இவள்தான் எவ்வளவு மென்மையானவள் என்ற கனிவு மிகுந்தது..

"நீங்க எதுவும் சொல்லலையே.." தயக்கத்துடன் அவள் கேட்டாள்..

"எதைப் பற்றி..?" தெரியாதவனைப் போல அவன் புருவங்களை உயர்த்தினான்..

"நான் சொன்னேனே.. அதைப்பற்றி.." அவள் தினறினாள்..

"இந்த பிளாஷ் பேக் கதையைப் பற்றியா..? என்னத்தைச் சொல்ல.. கடலில் குதிச்சிடுவேன் போல கடுப்பா இருக்கு.. இதில என்ன இருக்குன்னு மூணு வருசமா உங்க குடும்பத்தை எதிர்த்துக் கிட்டு இருக்கீங்க..? இதில கல்யாணம் வேண்டாம்ன்னு விரதம் வேற.. உங்களாலே உங்க அண்ணன் அவரை விரும்பற பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்க முடியாம சங்கடத்தில மாட்டியிருக்காரு.. நான்கூட என்னவோ தவமாய், தவமிருந்து, தவயோகி ரேன்ஜில கற்பனை பண்ணிக்கிட்டு கதை கேட்க ஆரம்பிச்சேன்.. கடைசியில பாத்தா கேலிக் கூத்தா இருக்கு.."

"என் உணர்வுகளைக் குறைவாகப் பேசாதீங்க வாசுதேவன்."

"அதிகமாப் பேச இதில என்னங்க இருக்கு..? செயின் திருடனாம்.. காதலிக்கலைன்னா செத்துருவேன்னு சொன்னானாம்.. இவங்க காதலைப் பிச்சை போட்டாங்களாம்.. கல்யாணம் பண்ணிக்க வான்னு கூப்பிட்டுட்டு அவன் செத்துப் போயிட்டானாம்.. அவனோட டெட் பாடியக்கூட இவங்க பாக்கலையாம்.. அவனுக்கு அக்கான்னு ஒருத்தி இருக்காளாம்.. அவளை இவங்க தூக்கிச் சுமந்துக்கிட்டு காலமெல்லாம் கன்னியாவே வாழப் போறாங்களாம்.. இதெல்லாம் உங்களுக்கே ஓவராத் தோணலையா..?"

"அண்ணியோட நிலைமையைப் பார்த்தா உங்களுக்கு இரக்கமா இல்லையா..?"

"யாரு..? அதுவா..? இரக்கப்பட வேண்டிய ஜென்மமா..? அது குடியிருக்கிற வீட்டுக்குப் பக்கத்து வீட்டில இருக்கிறோமே..

எங்களைப் பார்த்துத்தான் தெருவே இரக்கப்படுது.. ஆனாலும் ஒற்றைப் பொம்பளை செலவளிக்க இரண்டு லட்ச ரூபாய்ங்கிறது அநியாயம்ங்க.."

"அவங்களுக்கு அதுவே போதலைங்கிறாங்க.."

"எப்படி போதும்..? அடுத்தவங்க வீட்டுப் பணமில்ல.. வெல்லக் கட்டியா இனிக்கத்தான் செய்யும்.. போன ஜென்மத்தில அந்த லங்கிணிக்குக் கடன் பட்டிருப்பீங்க போல.. அதான்.. இந்த ஜென்மத்தில உங்களை இந்தப் பாடுபடுத்தி வசூல் பண்ணுது.."

லேசாக இதழ் விரித்துச் சிரித்து வைத்தாள் சுசித்ரா.. இந்தப் புன்னகை என்ன விலையென்று பாடத் தோன்றியது வாசுதேவனுக்கு.. தேவதைகள் சிரிக்கப் பிறந்தவர்கள்.. அது ஏன் இவளுக்குத் தெரியவில்லை..? ஒரு சூனியக்காரியின் சதிவலையில் அகப்பட்டுக் கொண்டு சிரிப்பைத் தொலைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறாளே..

"'ஓகே'ங்க.." வாசுதேவன் முடிவெடுத்து விட்டான்.

"எதைச் சொல்கிறீங்க..?"

"நீங்க எதைக் கேட்டிங்களோ.. அதைச் சொல்கிறேன்.."

"ஆர் யு ரெடி ஃபார் த மேரேஜ்..?"

சுசித்ராவின் முகம் ஜ்வலித்தது... என்னைத் திருமணம் செய்து கொள்வதில் இவளுக்கு இவ்வளவு சந்தோசமா என்று அவள் முகத்தையே ஊன்றிப் பார்த்தான் வாசுதேவன்.. சுசித்ராவின் முகம் சிவந்தது.. இந்தச் சிரிப்பு வெட்கத்தினால் என்பது நிச்சயமாக அவனுக்குத் தெரியும்..

"ஐ ஆம் ரெடி ஃபார் ஒன்லி தி மேரேஜ்.. நாட் தி டைவர்ஸ்.." அழுத்தமாகச் சொன்னான்..

"என் பிளாஷ்பேக்கை கேட்ட பின்னாலுமா இப்படிச் சொல்கிறீங்க..?"

"கருமம் பிடித்த பிளாஷ்பேக்.. பேசாம இருக்கீங்களா.. இல்லேன்னா நான் ஏதாச்சும் சொல்லிறப் போறேன்.."

"இதுக்கு மேலேயும் சொல்வீங்களா..?"

அப்பாவி போல இமை கொட்டி அவள் கேட்ட விதத்தில் அவன் ஆழ்ந்து அவளைப் பார்த்தான்.. மூச்சுத் திணறத் தவித்துப் போனவளை இழுத்து அணைத்து முகர்ந்து முத்தமிடும் ஆசை அவனுக்குள் வந்தது.. அடக்கிக் கொண்டான்..

"நான் சொல்லவே ஆரம்பிக்கலையே.."

"ஹைய்யோ.. இதுவே இப்படின்னா.. சொல்ல ஆரம்பிச்சா என்ன ஆகிறது..?"

அவள் பயப்படுவதைப் போல கண்விரித்துச் சிரித்தாள்.. 'இப்படியே சிரித்துக் கொண்டிரு..' மனம் நெகிழ்ந்தவன்..

"என்ன ஆவிங்கன்னு பார்க்கத்தானே போகிறீங்க.." என்று பூடகமாய் பேசினான்..

"மிஸ்டர் வாசுதேவன்.." எதையோ சொல்ல வந்தவளைத் தடுத்து..

"பேசிய வரைக்கும் போதும் சுசித்ரா.. எனக்கு உங்களை மேரேஜ் பண்ணிக்கச் சம்மதம்.. டைவர்ஸ் பண்ணச் சம்மதமில்லை.. 'ஓகே'ன்னா உங்க அண்ணனை என்னிடம் பேசச் சொல்லுங்க.. நான் என் குடும்பத்தோடு பெண் கேட்டு வர்றேன்.."

சுசித்ரா மருண்டாள்.. எதிர்பாராத வாழ்க்கைத் திருப்பத்தை எதிர்கொள்ள அஞ்சும் அச்சம் அவளது விழிகளில் தெரிந்தது..

"அண்ணி.. பிரசன்னா.. நான்.." வார்த்தைகள் கோர்வையாக வராமல் தந்தியடித்தாள்..

"பக்கத்து வீட்டுப் பஜாரியைப் பற்றி மேரேஜீக்குப் அப்புறமா டிசைட் பண்ணலாம்.. பிரசன்னாங்கிற பேர்கூட எனக்குப் பிடிக்கலை.. அந்த ராஸ்கல் உயிரோட இல்லைன்னு வேற சொல்லியிருக்கீங்க.. ஸோ.. அவனைப் பற்றிப் பேச என்ன இருக்கு..?"

"அவன் என்னாலே செத்துப் போனான்.."

சுசித்ரா புலம்பிய புலம்பலில் வாசுதேவனுக்கு கோபம் வந்து விட்டது..

"நீங்க என்ன அவன் தலையில கல்லைத் தூக்கிப் போட்டுக் கொன்றீங்களா..?" காட்டமாக கேட்டான்..

"ஹைய்யோ.." அவள் பதறினாள்..

"பின்னே.. கத்தியால் குத்திக் கொன்றீங்களா..?"

"என்னங்க இப்படியெல்லாம் பேசறீங்க..? நீங்களே எனக்குக் கொலைகாரி பட்டம் கொடுத்துருவீங்க போல இருக்கே.."

"புதிதா நான் வந்துதான் பட்டமளிப்பு விழாவை நடத்தனுமாக்கும்..? அதுதான் மேடம் வார்த்தைக்கு வார்த்தை என்னாலே.. என்னாலேன்னு தலை தலையாய் அடிச்சுக்கறிங்களே.."

"அண்ணியோட ஹஸ்பெண்ட் போனதும் என்னால.."

"ஹைய்யோ.. முடியலடா சாமி.. அதுகூட மனுசன் குடித்தனம் பண்ணுவானா..? விட்டுட்டு ஓடியிருப்பான்.. இது உங்க மேல பழியைப் போடுது.."

"வேண்டாம் வாசு.. டிராஜடியைக் காமெடியா ஆக்காதீங்க."

"நீங்க சொல்கிற டிராஜடி அத்தனையுமே காமெடித்தானேங்க இருக்கு..?"

"லீவ் திஸ் டாபிக்.. ப்ளீஸ்.."

"இந்தக் கர்மத்தைக் கண்டினியூ பண்ணனும்னு எனக்கு மட்டும் ஆசையா என்ன..? லீவ் விட்டு விடலாம்.. நான் சொன்னது சொன்னதுதான்.. உங்களைக் கல்யாணம் பண்ணிக்க எனக்கு பரிபூரண சம்மதம்.. பட் அந்தக் கல்யாணம் காலமெல்லாம் நிலைத்திருக்கனும்.. ஒன்ஸ் உங்க கையை நான் பிடித்துட்டேன்னா கடைசி வரைக்கும் பிடித்த கையை விட மாட்டேன்.. நீங்க விரலை உறுவிக்கிட்டு

விலகி ஓட அனுமதிக்க மாட்டேன்.. பிடித்தா பிடித்த பிடிதாங்க.. என் பிடி உடும்புப் பிடி.. என்ன சொல்கிறீங்க..?"

சுசித்ரா கைகளைப் பிசைந்தபடி நின்றாள்.. அவள் நிற்பதை லட்சியம் பண்ணாமல் வேகமாக வாசுதேவன் நடக்க ஆரம்பித்து விட்டான்.. சற்று தூரம் சென்றவன் மனது கேட்காமல் திரும்பிப் பார்த்தான்.. அசையாமல் நின்றிருந்த சுசித்ராவின் விழிகளில் மின்னல் வந்தது.. முகத்தில் உயிர்ப்பு எழுந்தது.. அவன் கைநீட்டி அழைத்ததும் ஓடி வந்து விட்டாள்..

'உன்னைத் தனியா விடுவேனாடி.. என் அன்பே..! நீ அனிச்ச மலரடி..' மனதுக்குள் அவளைத் தாலாட்டினான்.

"டேக் யுவர் ஓன் டைம் சுசித்ரா.. இப்ப எதையும் யோசிக்காம வீட்டுக்குப் போய் படுத்துத் தூங்குங்க.. ம்ம்ம்.." சிறு குழந்தைக்குச் சொல்வதைப் போல மென்மையாகச் சொன்னான்..

"ம்ம்ம்.." அவளும் குழந்தை போலவே தலையை அசைத்தாள்..

இருவரும் கார்களை நிறுத்தியிருந்த இடம் வரை சேர்ந்தே நடந்தார்கள்.. கார்களை நெருங்கியதும் நின்று கையசைத்து விடை கொடுத்துப் பிரிந்து கார்களில் ஏறினார்கள்.. அவரவர் பாதைகளில் பிரிந்து விரைந்தார்கள்.

போர்டிகோவில் காரை நிறுத்தி விட்டு வீட்டுப் படியேறும் போதே விசிலடித்தான் வாசுதேவன்.. உடை மாற்றித் தயாராக காத்திருந்த வசுமதி உர்ரென்ற முகத்துடன் அவனை வரவேற்றாள்.. கோபமாய் இருந்தவளிடம் விசிலிலேயே அவன் காரணம் கேட்க..

"மணியைப் பாருடா.." என்று வெடித்தாள்..

"அதை எதுக்குப் பார்க்கனும்.."

"எத்தனை மணிக்கு செக்கப்புக்குப் போகனும்னு சொன்னேன்.. நீ எத்தனை மணிக்கு வந்து நிற்கிற..?"

"திடிர்ன்னு வேலை வந்திருச்சுக்கா.."

"பொய் சொல்லாதே.. நீ அப்பவே கிளம்பிட்டன்னு கருணா சொன்னானே.. எங்கே ஊரைச் சுத்திட்டு வர்ற..?"

"கருணாதானே.. அவன் வேலையைத் தவிர மத்த எல்லா வேலையையும் பார்ப்பான்.. அவன் போட்டுக் கொடுத்தான்னு சொந்தத் தம்பியை நிற்க வைத்துக் கேள்வி கேட்கறியேக்கா.."

"டேய்.. நீ சோபாவில உட்கார்ந்து காலை ஆட்டிக்கிட்டு இருக்க.."

"கால் வலிக்குதுக்கா.. காபி குடேன்.."

"ஏன்..? கால் வலிக்கு காபியை ஊற்றி வைத்தியம் பார்க்கப் போகிறயா..?"

"உன் தம்பியைப் பார்த்தா பாவமா இல்லையாக்கா..?"

"இல்லை.."

கோபம் போல முகத்தை வைத்தபடி காபியைக் கொண்டு வந்தாள் வசுமதி... வாசுதேவன் நிஷாக்குட்டியைத் தூக்கி மடியில் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தான்..

"விடுடா.. என் மகளை.." செல்லமாக அதட்டினாள் வசுமதி..

"முடியாது.. இவ என்னோட அக்காமகள்.." உரிமைக் குரலை எழுப்பினான் வாசுதேவன்..

"வந்தவுடனே காபி வேணும்னு நேரத்தை ஓட்டியாச்சு.. இப்ப அக்கா மகளுடன் கொஞ்சலா..? எப்படியும் என்னை நீ செக்அப்புக்கு அழைத்துப் போகப் போறதில்ல.."

"யார் சொன்னது..?"

"யாருடா சொல்லனும்..? நான் சொல்றேன்.. உனக்கு அந்த உத்தேசமே இல்லை.."

"இருக்குன்னு சொன்னா நீ நம்பவா போற..?"

"இந்த காபியைக் குடிச்சுட்டுக் கிளம்பிட்டன்னா நம்பறேன்.."

"ஒரே செகண்டில குடிச்சு முடிக்கலைன்னா ஏன்னு கேளு.."

"அப்படியெல்லாம் குடிக்க வேணாம்.. நிறுத்தி.. நிதானிச்சு.. ரசிச்சுக் குடி.. நீ காபிப்பிரியன்னு ஊருக்கே தெரியும்.."

"ஊரா வந்து காபி போட்டுக் கொடுக்கப் போகுது..? உனக்கும் அம்மாவுக்கும் தெரிந்தாச் சரிதான்.."

"ஆமாண்டா.. எனக்கும் அம்மாவுக்கும் உனக்குக் காபி போட்டுக் கொடுத்து ஊட்டி விட்டுக்கிட்டு இருக்கிறதுதான் வேலை.. காலாகாலத்தில கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டு உன் பெண்டாட்டியைக் காபி போட்டுத் தரச் சொல்லிக்குடி.."

"அதுக்கென்ன.. செஞ்சுட்டாப் போச்சு.. கல்யாணத்தைப் பண்ணி பெண்டாட்டியைக் கொண்டு வந்து விடலாம்.. அதில ஒன்னும் பிரச்னையில்லை.."

"வேற எதிலடா பிரச்னை..?"

"அவளுக்குக் காபி போடத் தெரிந்திருக்கனுமே.. அதுதான் பிரச்னை.."

"இதப்பாருடா.. வரப் போகிற பெண்டாட்டிக்கு காபி போடத் தெரிஞ்சிருக்காதுன்னு இம்புட்டுக் கன்பர்மா சொல்ற..? என்னடா.. பொண்ணுக் கிண்ணுப் பாத்து வைச்சிருக்கியா..? டாவா..?"

"நான் என்ன கருணாவா..? டாவு விட.."

"கேட்டதுக்குப் பதிலைச் சொல்லுடா.."

"உனக்கு இப்ப செக் அப்புக்கு போகனுமா, வேண்டாமா..?"

வாசுதேவன் காபியை குடித்து முடித்துக் காலிக் கப்பை டீப்பாயில் வைத்தபடி கேட்டான்.. வெளியில் செல்லத் தயாராக இருந்த நிஷாக்குட்டி..

"போகனும்.. போகனும்.." என்று குதித்தது..

"வா குட்டிம்மா.. நாம போகலாம்.." குழந்தையை அள்ளிக் கொண்டு வாசுதேவன் போர்டிகோவுக்குப் போய் விட்டான்..

"எஸ்கேப் ஆகறயா..? இருடா.. காருக்குள் ஏறினதும் என்கொயரியை கண்டினியூ பண்றேன்.. வாங்கம்மா.. அப்பா.. வீட்டை பத்திரமாப் பார்த்துக்கங்க.."

வசுமதி தாயை அழைத்தாள்.. கோதாவரியோ பூஜையறையைப் பார்த்துக் கன்னத்தில் போட்டபடி..

"பக்கத்து வீட்டுப் பஜாரி இவரிடம் வம்பிழுக்காம பத்திரமாப் பார்த்துக்கங்க தெய்வங்களே.." என்று வேண்டிக் கொண்டிருந்தாள்..

"ம்மா.. அப்பா அதெல்லாம் ஜன்னலைக் கூடச் சாத்திக்கிட்டு வீட்டுக்குள்ள பதுங்கிக்குவார்.. கவலைப்படாதீங்க.." வசுமதி தாயின் கையைப் பிடித்து இழுத்துச் சென்றாள்..

காரில் வாசுதேவனுக்குப் பக்கத்தில் நிஷாக்குட்டி உட்கார்ந்து வேடிக்கை பார்த்தபடி வர.. பின்சீட்டில் உட்கார்ந்திருந்த கோதாவரியும் வசுமதியும் கதை பேசியபடி வந்தார்கள்.. சளசளப்பு மிகுந்த அந்தக் கலகலப்பு வாசுதேவனை ஈர்த்தது.. இதுதான் அவன் குடும்பம்.. தன் மன விலங்கை உடைத்து இக்கலகலப்பில் ஐக்கியமாக சுசித்ரா வருவாளா..?

## 29

செல்போனின் சங்கீதம் வாசுதேவனை எழுப்பியது.. முதல்நாள் இரவில் வசுமதியை டாக்டரிடம் காண்பித்து விட்டு வரும் வழியில் அம்மா, தமக்கை, நிஷாக்குட்டியுடன் ஹோட்டலில் இரவு உணவை முடித்து விட்டு தந்தைக்கு பார்சல் வாங்கிக் கொண்டு ஜாமத்தில் வீடு திரும்பியவன் தான்.. உடை மாற்றிய வேகத்தில் படுக்கையில் விழுந்து தூங்கி விட்டான்.. மற்ற நாள்களிலேயே அதிகாலையில் எழுந்து கொள்ள மாட்டான்.. அயர்வோடு படுத்தவன் அவ்வளவு சீக்கிரமாக எழுந்து விடுவானா..?

தூக்கக் கலக்கத்துடன் செல்போனை உயிர்ப்பித்தவன்..

"ஹலோ.." என்றான்..

"சுரேந்திரன் ஸ்பீக்கிங்.." என்றது மறுமுனை..

அவ்வளவுதான்.. ஸ்விட்ச் போட்டதைப் போல வாசுதேவனின் தூக்கம் ஓடோடி விட்டது.. தடபுடா என்று புரண்டு எழுந்து கட்டிலில் உட்கார்ந்தவன்..

"சொல்லுங்க சார்.." என்றான்..

"தேங்க் யு வாசுதேவன்.." சுசிந்திரன் உணர்ச்சிப் பெருக்குடன் தழுதழுத்தான்..

சுசித்ரா அவனிடம் பேசி விட்டாள் என்பதைப் புரிந்து கொண்ட வாசுதேவனுக்கு வானில் பறப்பதைப் போலவே இருந்தது..

"சுசித்ரா சொன்னா.. மாதங்கிக்காக அவளிடம் பேச வந்தீங்களாம்.. ஐ டோன்ட் நோ, ஹௌ டு எக்ஸ்ப்ளெயின் மை ஃபீலிங்ஸ்.. என் தங்கையை நினைத்து நான் கவலைப்படாத நாளே இல்லை.. டாடி உடைந்து போய் விட்டார்.. எங்களின் பாசத்தை அவளிடம் வெளிப்படுத்த முடியாமல் நடிக்க வேண்டிய நிலையில் நாங்கள் இருந்தோம்.. எங்களின் பாசம் அவளுக்கான நெருக்கடியை இன்க்ரீஸ் பண்ணிவிடும்.. பணம் கேட்பாள்.. அது அவளுக்காக கேட்கப்படும் பணமில்லை என்பது எங்களுக்குத் தெரியும்.. தெரிந்தும் தெரியாதவர்களைப் போல இருந்தோம்.. எங்களின் கண்டிப்பு மாதா மாதம் இரண்டு லட்ச ரூபாய் இழப்புடன் அவளை நிறுத்தி வைத்தது.."

"உங்களுக்கு எல்லாம் தெரிந்திருந்தும் சுசித்ராவுக்கு எடுத்துச் சொல்லி சரியாக்கலையே.. ஏன்..?"

"சொன்னால் கேட்டுக் கொள்வாளா..? எதையெதையோ பேசினா.. என்னையும் டாடியையும் வில்லன்களைப் போலப் பார்த்தா.. வீட்டை விட்டு வெளியில் போகத் தயாராகிட்டா.. நாங்க தடுக்கமாட்டோம், இப்போது கிடைக்கும் இரண்டு லட்ச ரூபாயும் நின்று விடும்ன்னு அந்த லேடி காதுக்கு எட்ட வைச்சோம்.. அவ பிடியில்தான் சுசித்ரா

இருக்கிறாளே.. அவள் இவளிடம் என்ன சொன்னாளோ.. வீட்டை விட்டு வெளியேறாமல் ஜி.எம். போஸ்ட்டை ஏற்றுக் கொண்டா.."

"ஃபாஸ்ட் இஸ் ஃபாஸ்ட்.. லீவ் இட் சார்.."

"கால் மி சுரேந்திரன்.. தங்கை ஹஸ்பெண்டா ஆகப் போகிறீங்க.. சார்ன்னு கூப்பிட வேண்டாம்.."

"உங்களுக்கு இதில் சம்மதம்தானே..?"

"எதில்..?"

"சுசித்ராவை நான் மேரேஜ் பண்ணிக் கொள்வதில்.."

"இதை நானில்ல கேட்கனும்..? அவளைப் பற்றித் தெரிந்த பின்னும் நீங்க மேரேஜ் பண்ணிக்க 'ஓகே' சொல்லியிருக்கீங்களே.. தேங்க்ஸ்.."

"அவங்களைப் பற்றிப் பேச என்னங்க இருக்கு..? இரக்க குணம்.. அதுவே அவங்களுக்கு வினையா வந்து முடிஞ்சிருச்சு.. ஏதோ ஒன்று இருப்பதாக அவங்க நினைத்துக்கிட்டு இருக்காங்க.. எல்லாமே ஒரு மாயைன்னு நான் ப்ரூவ் பண்ணும் காலமும் வரும்.. டோன்ட் வொர்ரி.. நான் கேட்க வந்தது வேறு சுரேந்திரன்.. நீங்க ஹை கிளாஸ் சொசைட்டி.. நான் அப்பர் மிடில் கிளாஸ்.. செட் ஆகுமா..?"

"இனியொரு முறை இதைப் போலப் பேசினா உங்களுடன் சண்டை போட்டு விடுவேன்.. ஜாக்கிரதை.."

"மாதங்கியின் கணவருடன் சண்டையா..? வேண்டவே வேண்டாம்.."

"மைத்துனன் கூடச் சண்டையான்னு கேளுங்க வாசுதேவன்.. அந்த வார்த்தையைக் கேட்க முடியுமான்னு எத்தனை நாள் நான் தூக்கமில்லாம இருந்திருக்கேன் தெரியுமா..? இந்த மேரேஜை மாதங்கிக்காக நீங்க ஓகே பண்ணியிருந்தாலும் எனக்கு நீங்க எவ்வளவு முக்கியம்ன்னு உங்களுக்குத் தெரியாது வாசுவேதன்.. ஐ லவ் மை சிஸ்டர் ஸோ மச்.."

'நானும்தான்..' மனதுக்குள் சொல்லிக் கொண்ட வாசுதேவன்..

"இல்லை சுரேந்திரன்.. மாதங்கிக்காகத்தான் நான் சுசித்ராவிடம் பேசப் போனேன்.. அண்ணன் மீது அவங்களுக்குப் பாசமில்லையான்னு கேட்டேன்.. அவருக்காக அவங்க மேரேஜ் பண்ணிக்கலாமேன்னு எடுத்துச் சொன்னேன்.. அவங்க பட்டுன்னு நீங்க என்னை மேரேஜ் பண்ணிக்குவீங்களான்னு கேட்டுட்டாங்க.. அவங்களை அவங்களுக்காகவே மேரேஜ் பண்ணிக்கப் போகிறேன் சுசீந்திரன்.. மாதங்கிக்காக இல்லை.."

"என்ன சொன்னீங்க.." பரபரப்புடன் கேட்டான் சுசிந்திரன்..

வாசுதேவன் பொறுமையாக ஒவ்வொரு வார்த்தைக்கும் இடைவெளி விட்டுச் சொன்னதும் பரவசப்பட்டுப் போனான்..

"தேங்க்யு.. தேங்க்யு.." என்று ஆயிரம் முறை நன்றி சொன்னான்..

'இதை நான் உனக்குச் சொல்லனும்டா..'

அழகிய பெண்களின் சகோதரர்கள் ஆராதனைக்கு உரியவர்கள்.. சுசீந்திரன் நெடுநேரம் பேசினான்.. மாதங்கியைத் திருமணம் செய்து கொள்ளப் போகும் சந்தோசத்தைவிட, சுசித்ரா திருமணத்திற்கு சம்மதம் சொல்லி விட்டாள் என்ற சந்தோசம்தான் அவனிடம் மிகுதியாகத் தெரிந்தது..

"இன்றைக்கே பெண் பார்க்க வருகிறீங்களா..?" சுசிந்திரன் ஆவலுடன் பேசினான்..

'இப்படி ஜெட் வேகத்தில பறக்காதேடா மச்சான்.. இதைப் பத்தி என் வீட்டில நான் இன்னும் மூச்சுக்கூட விடல.. குடும்ப சட்டசபையைக் கூட்டனும்.. தீர்மானம் நிறைவேற்றனும்.. எத்தனை இருக்கு தெரியுமா..' வாசுதேவன் சன்னமாக புன்னகைத்தபடி..

"வீட்டில் இன்னும் பேசலை.. நீங்க ஓகே சொன்ன பின்னாலே பேசலாம்ன்னு இருந்தேன்.. பேசிட்டுச் சொல்லவா..?" என்று கேட்டான்..

"ஓகே.. ஓகே.. டேக் யுவர் ஓன் டைம்.. ஒன் ஆர் டூ டேஸில வந்து விடுவீங்கள்ல.."

'இதுதான் டேக் யுவர் ஓன் டைமா..? முடியல..'

வாசுதேவனுக்கு மட்டும் அவசரமில்லையா என்ன..? எட்டாத நிலவாக இருந்தவளைக் கட்டிக் கொள்ளப் போகிறான்.. வானத்துக்கும் பூமிக்குமாக குதிக்க வேண்டும் போல இருந்தது.. ஆனாலும் முறை என்ற ஒன்று இருக்கிறதே.. அவனைப் பெற்றவர்களும், கூடப் பிறந்தவளும் அவனுடைய திருமணத்தைப் பற்றி ஆயிரம் கனவுகளுடன் இருக்கிறார்கள்.. அவன் மீதான அவர்களது உரிமையை அவனால் மறுக்க முடியாதே..

"டிரை பண்றேங்க.."

"ஓ..."

சுசீந்திரனின் குரலில் ஏமாற்றம் வழிந்தது.. போனை துண்டிக்க மனமில்லாமல் அவன் துண்டிப்பதை வாசு தேவனால் புரிந்து கொள்ள முடிந்தது.. சுசிந்திரன் போன் அழைப்பைத் துண்டித்த மறுநொடியில் மாதங்கியின் போன் அழைப்பு வந்து விட்டது..

"அண்ணா.." மாதங்கியின் குரலில் கடலளவு உற்சாகம்..

"சுசீந்திரன் பேசிட்டாரா..?"

"ஊம்.. எனக்கு டபுள் சந்தோசம் தெரியுமா..? சுசீந்திரன் என்னை மேரேஜ் பண்ணிக்க ஓகே சொல்லிட்டார்.."

"ஏற்கனெவே ஓகே சொன்னவர்தானே.."

"தங்கைக்காக மேரேஜ் பண்ணிக்காமல் இருக்கப் போகிறேன்னு சொன்னவரும் அவர்தானே.."

"உங்களிடம் பேசி ஜெயிக்க முடியுமா..?"

"ஜெயித்தது நீங்கள்தான் அண்ணா.. நானில்லை.. யு டிட் இட்.."

மாதங்கி உணர்ச்சிக் குவியலாகப் பேசினாள்.. மனதார நன்றி சொன்னாள்.. மனதில் நினைத்தவனையே திருமணம் செய்து கொள்ளப் போகிறாள் என்ற சந்தோசம் அவளது பேச்சில் தெரிந்தது..

"எனக்கும் சுசீந்திரனுக்கும் மேரேஜ் நடக்கப் போகிறது முதல் சந்தோசம்ன்னா, அடுத்த சந்தோசம் நீங்க எனக்கு நிஜமாகவே அண்ணனாகப் போகிறது.."

"இத்தனை நாளாப் பொய்யான அண்ணனாக இருந்தேனா..?"

"ஓ அண்ணா..! எனக்கு என்றைக்குமே நீங்க அண்ணன்தான்.. பட்.. நீங்க 'எம்.டி, ஜி.எம்' என்கிற கேப்பை மெயின்டெயின் பண்ணித் தள்ளித்தானே இருந்தீங்க.. ஒரு லிமிட்டைக் கால்குலேட் பண்ணி அதுக்குள்ள நின்றிருந்தீங்க.. லிமிட்டைக் கிராஸ் பண்ணியதில்லை.. இப்ப எல்லாமே மாறிப் போச்சே.. மனதால மட்டுமில்லாம உறவாலும் நீங்க எனக்கு அண்ணன் ஆகிட்டிங்க.. ஐ ஆம் ஸோ ஹேப்பி.."

"இப்படியே சந்தோசமா இருக்கனும்.." நெகிழ்ச்சியுடன் வாழ்த்தினான் வாசுதேவன்..

முதலாளி, தொழிலாளி என்ற பேதம் பார்க்காமல் மாதங்கி காட்டிய பாசமல்லவா வாசுதேவனை சுசித்ராவிடம் பேச வைத்தது.. அவளால் அல்லவோ சுசித்ரா எனும் தேவதைப்பெண் வாசுதேவனின் வாழ்வில் வரப் போகிறாள்..

'நன்றி தங்கையே..' மனதுக்குள் சொல்லிக் கொண்டான்..

காபியுடன் அறைக்குள் வந்த வசுமதி கட்டிலில் உட்கார்ந்திருந்த வாசுதேவனைப் பார்த்ததும் ஆச்சரியமாகி.

"எப்படா எழுந்திரிச்ச..? கால்மாடு, தலைமாடா உறங்கிக்கிட்டு இருப்ப.. முதுகில நாலு போடு போட்டு எழுப்பலாம்ன்னு வந்தா போனைக் காதுக்குக் கொடுத்துக்கிட்டு உட்கார்ந்திருக்க.. சும்மா நாளிலேயே கும்பகர்ணத் தூக்கம் போடுவ.. நேத்து ஜாமக்கோழி கூவினப்ப தூங்கப் போனியே.. எழுந்திரிச்சுக்க லேட்டாகும்ன்னு நினைச்சா விட்ட விடிகாலைல எழுந்திரிச்சு மயக்கம் போட வைக்கிற..?" என்றாள்..

"கால்மாடு..! தலைமாடு..! உன் தம்பிகாரனை மாடுன்னே முடிவு பண்ணிட்ட.." வாசுதேவன் காபிக் கப்பை வாங்கி உறிஞ்ச ஆரம்பித்தான்..

தம்பியின் முகத்தில் என்றும் தெரியாத சூரியப் பிரகாசம் தெரிவதைப் பார்த்த வசுமதிக்கு என்னடா இது என்று ஆகிவிட்டது..

இப்படியொரு தேஜஸீடன் எந்த நாளும் அவன் எழுந்ததில்லையே.. தூக்கம் வழியும் கண்களுடன் தூங்கு மூஞ்சியாக விரித்து வைப்பான்..

"இன்னும் கொஞ்ச நேரம் தூங்கறேன்க்கா.." என்பான்.

இந்த ஞானத்தேடல், ஞானத் தேடல் என்பார்களே.. அதைப் போல அவளுடைய தம்பி எதையாவது தேடி அடைந்து விட்டானோ..

"என்னக்கா என் முகத்தை இப்படிப் பார்க்கிற.. அங்க என்ன தெரியுது..?"

"உன் தலைக்கு மேலே ஒளிவட்டம் தெரியுதுடா தம்பி.."

"விட்டா உன் தம்பியை போதி மரத்தடி புத்தனா ஆக்கிருவ போல இருக்கே.. வேணாம்க்கா.. ஆசையைத் துறக்க எனக்கு இஷ்டமில்லை.. அப்பாவைப் போல குடும்பஸ்தனா ஆகனும்.. அதுதான் என்னோட குறிக்கோள்.."

"எப்பேற்பட்ட குறிக்கோள்.. இமயமலை உச்சியைத் தொடனும் என்கிறதைப் போலவே சொல்றான் பாரு.. அப்பாவைப் போல குடும்பஸ்தனா ஆகனும்னா உனக்கு

முதலில கல்யாணம் ஆகனும்.. அப்பத்தான் அவர் ஹாலில் உக்காந்து பேப்பரை விரிச்சுக்கிட்டே கிச்சன்ல இருக்கிற அம்மாவை "கோதாவரி.. இங்க வந்து டீப்பாயில இருக்கற காபிக் கப்பை எடுத்து என் கையில குடுடி.."ன்னு சொல்கிறதைப் போல அழிச்சாட்டியமா பெண்டாட்டியை வேலை வாங்க முடியும்.."

வசுமதி முன்னே செல்ல.. போர்வையை உதறிவிட்டு வாசுதேவன் பின்னே சென்றான்.. திரும்பிப் பார்த்த வசுமதியின் விழிகள் உலக மாக அதியத்தைப் பார்த்ததைப் போல விரிந்தன..

"என்னடா.. என் பின்னால வர்ற..?"

"உனக்குப் பின்னாடி பொறந்தவன்தானேக்கா.."

"ஹ..! புல்லரிக்குதுடா தம்பி.. திரும்பவும் தூக்கம் போடுவியே.. அதைப் போடலியான்னு கேட்டேன்.."

"ஊஹீம்.. விடியலை இந்த வீடே ரசித்துக் கொண்டாடுது.. நான் மட்டும் தூங்கிக்கிட்டு இருந்தா நல்லாயிருக்காது.."

"நீ என் தம்பிதானாடா.. எனக்கு மயக்கம் மயக்கமா வருதே.."

"அதெல்லாம் உன்னைப் பார்த்தா மாமாவுக்குத்தான் வரனும்.."

"போடா.."

வெட்கத்துடன் தம்பியின் முதுகில் செல்லமாக மொத்திய வசுமதி,

"என்னவோ போடா வாசுதேவா.. இன்னைக்கு நீ இருக்கிற ஸ்பிரிட்டப் பார்த்து அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக் வந்திறப்போகுது.." என்று கேளியாகச் சொன்னாள்..

அக்காவும் தம்பியும் ஹாலுக்குள் பிரவேசித்த போது சோபாவில் சரிந்து அமர்ந்து பேப்பரை விரித்து முகத்தை மறைத்திருந்த பூபதி..

"கோதாவரி.. இந்த டீப்பாயில இருக்கிற காபியை எடுத்துக் குடுடி.." என்று குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்..

அக்காவும் தம்பியும் ஒருவரையொருவர் பார்த்துக் "குபீர்.." எனச் சிரித்து வைத்ததில் பேப்ரை கீழே இறக்கிய பூபதி, வாசுதேவனைக் கண்டதும் மொத்தமாக அதை நழுவ விட்டார்..

"சொன்னாக் கேட்டியா..? இந்த நேரத்தில நீ கண் முழிச்சு எழுந்து வந்தா வீட்டில இருக்கிறவங்க நெஞ்சைப் பிடிச்சுக்கிட்டு உட்கார்ந்து விட மாட்டாங்களா..?" வசுமதி தம்பியின் தலையில் குட்டு வைத்தாள்..

"அடடா.. இந்த மனுசனோட பெரிய அக்கப்போரா இல்ல இருக்கு.. கைக்கு எட்டறதைப் போல டீப்பாயில இருக்கிற காபிக் கப்பை எட்டி எடுத்துக்க மாட்டாரா..? அதுக்கும் இந்த கோதாவரிதான் கிச்சன்ல இருந்து ஓடிவரனுமா..?"

சப்தம் போட்டுக் கொண்டே வந்த கோதாவரி.. மகனைக் கண்டதும் என்னவோ கடல் கடந்து சென்று விட்டு வந்த மகனைக் கண்டு விட்டதைப் போல விழி விரித்து..

"வாசு.." என்று அடையாளம் பார்த்தாள்..

"பார்த்தியா.. வீடே உன் திருப்பள்ளி எழுச்சியில் ஷாக் ஆகுது.." வசுமதி பூபதியின் பக்கத்தில் அயர்வாக உட்கார்ந்து இடுப்பை நீவி விட்டாள்..

"கர்ப்பிணிப் பொண்ணு.. ரெஸ்ட் எடுக்கத்தானே தாய் வீட்டுக்கு வந்திருக்கிற.. அப்படியே இருக்காம உன் தம்பிக்கு எதுக்காக சேவகம் பண்ணக் கிளம்பற.. இந்தா இருக்கிற காபிக்கப்பை எடுத்துக்க உடம்பை வளைக்காம கூப்பாடு போட்டுக்கிட்டு இருக்காரு உன் அப்பா.. அவருக்கே ஊட்டி விடறவ, நான் பெத்த பிள்ளைக்கு காபியைக் கொண்டு போய் கொடுக்க மாட்டேனா..?" கோதாவரி மகளைக் கோபித்தாள்..

"உங்க பிள்ளையா..? என் தம்பியாக்கும்.." சோபாவில் வசதியாக கால் நீட்டித் திரும்பி அமர்ந்தபடி சொன்னாள் வசுமதி..

அவளது உரிமைக் குரலில் வாசுதேவனுக்குள் பிரியம் வந்தது..

"அன் கம்பர்டபிளா ஃபீல் பண்றியே அக்கா.. டாக்டரிடம் போகலாமா..?" கவலையுடன் கேட்டான்..

"நைட்தானேடா செக்-அப் பண்ணிட்டு வந்தோம்.. ஒன்னுமில்லை.. இப்படிக் கால் நீட்டி உட்கார்ந்தா சரியாகிரும்.."

"பார்த்து.. விழுந்து விடப் போற.."

அவள் சோபாவிலிருந்து விழுந்த விடாமலிருக்க அணைவாய் தரையில் உட்கார்ந்து சோபாவின் மீது சாய்ந்து கொண்டான் வாசுதேவன்.. தம்பியின் கரிசனத்தில் நெகிழ்ந்து போன வசுமதி பாசத்துடன் அவனது தலையைக் கலைத்து விட்டாள்..

பிள்ளைகள் இருவரும் ஹாலில் இருந்ததில் உலக நடப்பை மடித்து டீப்பாயில் வைத்து விட்டார் பூபதி.. கோதாவரியும் சமையலை மறந்து அங்கேயே உட்கார்ந்து விட்டாள்..

"இன்றைக்கு என்னவோ நாளே நல்லாயிருக்கிறதைப் போல இருக்கில்ல..?"

வசுமதி சொன்னதற்கு வாசுதேவன் தலையசைத்து ஆமோதித்தான்..

"எல்லாம் உன்னால்தாண்டா.. இன்றைக்கு விடிந்திருக்கும் இந்த விடியல் உன்னாலே விசேசமா விடிந்திருக்கிறதைப் போலத் தோணுதுடா.." என்றாள் கோதாவிரி..

பெற்றவர்களும் பிள்ளைகளும் சேர்ந்து உட்கார்ந்து பேசிக் களிக்கும் தருணங்கள் அனைத்தும் பெற்றோருக்கு விசேச தருணங்கள்தான்..

"அம்மா.."

வாசுதேவன் ஆரம்பித்தான்.. அவனது குரல் வழக்கமான கலகலப்புடன் இல்லாமல் ஆழ்ந்து ஒலித்ததில் மகன் ஏதோ ஒரு முக்கியமான விவரத்தைப் பேசப் போகிறான் என்பதைப் புரிந்து கொண்டாள் கோதாவரி.. அதனால்..

"சின்னப் பப்பா.. அம்மான்னு கொஞ்சறான்.." என்ற வசுமதியின் கலாய்ப்பைக் கவனிக்காமல்..

"என்னப்பா..?" என்று பரிவுடன் கேட்டாள்..

"எஸ்.எஸ்.குரூப்ஸ் ஆஃப் கம்பெனியோட எம்.டி காலையில் பேசினார்ம்மா.."

"இதையேண்டா என்னிடம் சொல்கிற..? எனக்கு நீ வேலை பார்க்கிற கம்பெனியோட பெயர் மட்டும்தான் தெரியும்.."

"அதைச்சொல்லு.. இவளுக்கு அது தெரியறதே பெரிய விசயம்.. மக்கு.. மக்கு.. அந்தக் கம்பெனியும் வாசுவோட கம்பெனியைப் போல பெரிய கம்பெனிதாண்டி.."

"சான்ஸ் கிடைத்தாப் போதுமே.. அம்மாவை மட்டம் தட்டி உட்கார வைச்சுருவீங்களே.. வீட்டில எந்த சாமானை எங்கே வைத்தீங்கன்னு தெரியாது.. எதுக்கெடுத்தாலும் கோதாவரி.. கோதாவரிதான்.. இதில அம்மாவை மட்டம் தட்டியாகிறது.. நீ சொல்லுடா வாசு.. அந்தக் கம்பெனியோட எம்.டி என்ன விசயமா போன் பண்ணினார்..? அஃபிஷியலா இருந்தா நீ எங்ககிட்ட ஷேர் பண்ணிக்க நினைச்சிருக்க மாட்ட.."

"உண்மைதான் அக்கா.. எங்க கம்பெனி எம்.டியோட மகள் மாதங்கிக்கும் எஸ்.எஸ்.குரூப்ஸ் ஆஃப் கம்பெனியோட எம்.டி சுசிந்திரனுக்கும் கல்யாணம் பிக்ஸ் ஆகியிருக்கு.."

"அப்படியா..? அந்தப் பெண் மாதங்கியைக் கோவிலில் பார்த்தேன்.. முதலாளி மகள்ங்கிற கர்வமில்லாம அம்மா, அம்மான்னு அப்படிப் பேசுச்சு.. அதுக்குக் கல்யாணம் கூடி வந்திருக்கிறதில ரொம்ப சந்தோசம்.. மாப்பிள்ளைப் பையன் எப்படி..?"

"தங்கமானவர்ம்மா.. மாதங்கிக்கு பொருத்தமான மாப்பிள்ளை.."

"இதைப் பத்தித்தான் அவர் போனில் பேசினாரா..?"

"கூடவே அவரோட தங்கையைப் பற்றியும் பேசினார்ப்பா.."

"அவரோட தங்கையைப் பற்றியா..? உன்னிடமா..?"

"ஆமாம்ப்பா.. அவரோட தங்கையை எனக்கு மேரேஜ் பண்ணி வைக்கனும்னு அவரும், அவரோட குடும்பமும் ஆசைப்படறாங்களாம்.. நம்ம விருப்பத்தைக் கேட்கிறாங்க.."

வாசுதேவன் சொல்லி விட்டான்.. கால்களை நீட்டி அமர்ந்திருந்த வசுமதி திரும்பி கால்களைத் தொங்க விட்டுத் தம்பியின் பக்கமாக நகர்ந்து உட்கார்ந்தாள்..

பூபதி காபியை மறந்து மகனின் முகத்தை உற்றுப் பார்த்தார்.. கோதாவரியிடம் மட்டும்தான் எந்த வித அதிர்வும் இல்லை.. அவளுக்கு அவளது மகன்தான் ராஜா.. எஸ்.எஸ்.கம்பெனியென்ன.. இங்கிலாந்தின் ராணியே பெண் கொடுக்க வந்தாலும் அவங்க என்ன பெரிய ஆளா என்று கேட்பாள்..

"அந்தப் பொண்ணு என்னப்பா படிச்சிருக்கு..?" இயல்பாக அவள் கேள்விகளை ஆரம்பிக்க..

"ஆர் யு ஷ்யூர் எபௌட் இட் வாசு..?" என்று செய்தியை உறுதிப்படுத்திக் கொள்ள முயன்றார் பூபதி..

"ஷ்யூர்தான்ப்பா.. அந்தப் பொண்ணுக்கு என்னைப் பிடித்திருக்கிறதாம்.." என்றான் வாசுதேவன்..

"என் புள்ளையோட பெர்சனாலிட்டிக்கு பெரிய இடத்தில இருந்துதான் பெண் அமையும்னு தெரிந்தது தானே.." கோதாவரி பெருமைப் பட்டாள்..

"அந்தப் பெண்ணை நீ பார்த்திருக்கிறாயாடா..?" வசுமதி கேட்டாள்..

"பார்த்திருக்கிறேன் அக்கா.. எங்க கம்பெனியும், எஸ்.எஸ். கம்பெனியும் ஒரு அக்ரிமெண்ட் போட்டிருந்தாங்க.. அது

சம்பந்தமா நான் அவங்க கம்பெனிக்குப் போயிருந்தேன்.. இந்தப் பெண்தான் அங்கே ஜி.எம்.."

"நினைச்சேன்.. நீ.. காதல் மன்னன்டா.. கருணாவெல்லாம் எதுக்கும் லாயக்கில்லை.. தினம் ஒரு காதல் கதையைச் சொல்வான்.. மறுநாளே அது சொதப்பிருச்சுன்னு பெருமூச்சை விட்டே நம்மைத் துரத்தியடிப்பான்.. நீ கில்லிடா தம்பி.."

"ரொம்பவும் பாராட்டாதே.. நான் மட்டுமில்லை.. நம்ம குடும்பமே அந்தப் பெண்ணைப் பார்த்திருக்கோம்.."

"நம்ம குடும்பமே பார்த்திருக்கோமா..? எப்ப..?"

வசுமதி பெற்றோரைப் பார்க்க.. அவர்கள் மகனைப் பார்த்தார்கள்..

"இன்னும் சொல்லப் போனா அதான் எங்களோட பர்ஸ்ட் மீட்டிங்.. செகண்டாத்தான் அவளோட கம்பெனியில மீட் பண்ணனோம்.."

"என்னப்பா.. இவன் இப்படிச் சொல்றான்..?"

"அதானே.. கோதாவரி.. உனக்கேதும் ஞாபகத்தில வருதாடி.."

"இல்லையேங்க.. ஏண்டா வாசு.. எங்கேடா அவளைப் பார்த்தோம்.."

"இங்கேதான்.. நம்ம வீட்டுக் காம்பவுண்டுக்குள்ள நாம இருந்தோம்.. பக்கத்து வீட்டுக் காம்பவுண்டுக்குள்ள அவ இருந்தா.."

"டேய்.. டேய்.. அந்த பஜாரியவா சொல்ற..? என்னங்க எனக்கு நெஞ்சு வலிக்குதுங்க.." கோதாவரி நெஞ்சைப் பிடித்துக் கொண்டு அலற.. வசுமதி..

"இருங்கம்மா.." என்று அதட்டி விட்டு தம்பியைக் கூர்ந்து பார்த்தாள்..

"வாசு.. பக்கத்து வீட்டுக்கு மாதாமாதம் ஒரு பெண் வந்துட்டுப் போகுதே.. அதையா சொல்கிற..?" என்று

புருவங்களைச் சுருக்கினாள்..

"கேட்ச் தி பாயிண்ட்க்கா.. யாரு நீ.." வாசுதேவன் பாராட்டினான்..

"அந்தப் பொண்ணா..?"

அந்த ஒற்றைக் கேள்வியில் வாசுதேவனின் மனம் நைந்தது.. சுசித்ராவைப் போன்ற உன்னதமான பெண் ஏற்க வேண்டிய கேள்வியா இது..? என்ன தவறு செய்தாள்..? ஏன் இந்த சிலுவையைச் சுமக்கிறாள்..?

அவனுடைய தமக்கையும் தாய், தந்தையும் வேம்பைக் கடித்து விட்டதைப் போல முகத்தைச் சுளித்தார்கள்..

"என்னடா வாசு.. இப்படிச் சொல்ற..?"

"ஏன்ப்பா.."

"இந்தப் பல்லவிப் பிசாசு நல்ல பொம்பளையில்லைன்னு உனக்கே தெரியும்.. அந்தப் பொண்ணு இவளை அண்ணின்னு கூப்பிடுது.. எப்படிடா..?"

வாசுதேவனுக்குத் தலையை வலித்தது.. குடும்பத்தினருக்குப் புரிய வைப்பது சிரமம்தான்.. ஆனாலும் அவன் புரிய வைத்தாக வேண்டுமே.. வசுமதியின் முகத்தில் பலத்த ஆட்சேபனையும் கோதாவரியிடம் கண்டனமும் தெரிந்தன..

"அம்மா.. நரசிம்மன் அங்கிளுக்கு ஒரு போனைப் போட்டா போதும்.. வீட்டைக் காலி பண்ணச் சொல்லிருவார்.. இந்த பஜாரி வேற வீட்டைப் பார்த்து ஓடிடுவா.. அதுக்கு நான் பொறுப்பு.. இவளை மறந்திருங்க.. இவள்ளாம் ஒரு ஆளா..?"

"இதையேண்டா நீ முதலிலேயே செய்யலை..?"

"இப்பச் செய்யறேன்னு சொல்லிட்டேன்ல்ல.. அப்புறம் என்ன..?"

"வாசு.. நீ பேசறது எப்படியிருக்கு தெரியுமா.."

"தெரிய வேண்டாம்.. அம்மா.. அவ நல்லவ.. அது மட்டும் எனக்குத் தெரியும்.. என் மேல உங்களுக்கு நம்பிக்கையில்லையா..?"

கோதாவரி பேசாமல் இருந்தாள்.. தாயின் அமைதி புயலை உள்ளடக்கியது என்பதை உணர்ந்து கொண்ட வாசுதேவன் நகர்ந்து அவள் மடியில் தலை சாய்த்துக் கொண்டான்.. மகனின் தலைமுடியை பாசத்துடன் நீவி விட்ட கோதாவரியின் குரல் கம்மியிருந்தது..

"நமக்குக் கோடிஸ்வர வீட்டுப் பொண்ணெல்லாம் வேண்டாம்டா வாசு.. நம்மளப் போல இருக்கிறவங்க வீட்டில பெண்ணெடுப்போம்.. அதுதான் சரி.. விலை உசத்தியான காரில வந்து இறங்கறவ கழிசடையை இல்ல அண்ணின்னு உறவு கொண்டாடறா.."

"பாவம்ன்னு பாத்து உதவி செய்திருக்காம்மா.. மத்தபடி இவ அவளுக்குச் சொந்தமில்ல.. அவளோட பிரண்டுக்குத்தான் சொந்தமாம்.."

"சொந்தமில்லாதவ வீட்டுக்கு இவ ஏன் வந்து போகனும்..?"

களைத்துப் போனான் வாசுதேவன்.. கோதாவரியின் கேள்விகளுக்கான பதிலை அவனால் சொல்ல முடியாது.. சுசித்ரா சொன்ன வார்த்தைகளில் இருந்த உண்மையை அவன் ஜீரணித்துக் கொள்வான்.. அவனுடைய குடும்பம் ஏற்றுக் கொள்ளுமா..? பிரசன்னா என்ற அயோக்கியனும் பல்லவியென்ற பஜாரியின் கணவனும் இறந்து போனதற்கு தான்தான் பொறுப்பு என்ற குற்ற உணர்வில் சுசித்ரா சிக்கிக் கொண்டிருக்கிறாள் என்பதைச் சொன்னால் அவர்கள் புரிந்து கொள்வார்களா..? பிரச்ன்னாவை சுசித்ரா காதலித்திருக்கிறாள் என்று சொல்வார்கள்.. அவன் நினைவில் வாழ்கிறாள் என்பார்கள்.. அவனுடைய அக்காவை தன் பொறுப்பில் ஏற்றுக் கொண்டு 'அண்ணி' யென்று அழைக்கிறாள் என்பதைச் சுட்டிக் காட்டுவார்கள்.. இவள் அண்ணியென்றால் நான் யாருடா அவளுக்கு என்று வசுமதி கேள்வி கேட்பாள்..

"அம்மா ப்ளீஸ்.. அவளை எனக்குப் பிடிச்சிருக்கு.. கல்யாணம்ன்னு ஒன்று என் வாழ்கையில நடக்கிறதா இருந்தா அவளோடுதான் நடக்கும்.. இல்லைன்னா எனக்குக் கல்யாணமே வேண்டாம்.." சட்டென்று அறிவித்து விட்டான் அவன்.

தப்பிக்க வேறு மார்க்கமில்லை.. துரத்தும் கேள்விக்களுக்கான பதில்கள் அவனிடம் உண்டு.. அவை எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாதவை.. அத்துடன் அவை அவனுக்கும் சுசித்ராவுக்குமான அந்தரங்கம்.. அவனுடைய வருங்கால மனைவியின் உள்ளுணர்வை அவன் குடும்பத்தினரிடம் வெளிப்படுத்தி விடக்கூடாது..

"இதுதான் உன் முடிவா வாசு..?" பூபதி அழுத்தமான குரலில் கேட்டார்..

"ஆமாம்ப்பா.."

"இதில் மாற்றமில்லையா..?"

"இல்லை.."

"ஏன் இந்த முடிவை எடுத்திருக்கிறன்னு நான் தெரிந்துக்கலாமா..? பெத்தவனா இல்லைப்பா.. உன்கூட ஒரே வீட்டில் இருக்கிற ஹவுஸ்மேட்ங்கிற ஆதங்கத்தில கேட்கிறேன்.. பெத்த மகனின் கல்யாணத்தை முடிவு செய்கிற உரிமையைத்தான் நீ தட்டிப் பறிச்சுக்கிட்டியேப்பா.."

"அப்பா.."

எங்கு நோக்கினும் பாலைவனம் என்பதைப் போல துவண்டு போனான் வாசுதேவன்.. என்ன செய்வான்..? எதிர்த்து நிற்பவர்களிடம் போர் புரியலாம்.. பெற்று வளர்த்தவர்களிடம் எப்படி வாள் வீசுவது..?

'அர்ஜீனா.. இதனால்தான் நீ குருஷேத்திர களத்தில் மயங்கிப் புலம்பினாயா..?'

அவனுக்கு கீதை சொல்லி பாதை காட்ட யாரிருக்கிறார்கள்..? காண்டிபனை கண்ணன்

அரவணைத்தான்.. அவனை யார் அரவணைப்பார்கள்..?

'நானிருக்கிறேன்..' என்பதைப் போல தம்பியின் தோளில் கைபோட்டு அரவணைத்துக் கொண்டாள் வசுமதி..

"அம்மா.. அப்பா.. நம்ம வாசுவைப் பற்றி நமக்குத் தெரியாதா..? இந்த சின்ன வயசில இவ்வளவு பெரிய பதவியில இருக்கிறான்.. இவனுக்குத் தெரியாத நல்லது கெட்டதா நமக்குத் தெரிந்து விடப் போகுது..? அந்தப் பெண்ணோட பணத்து மேலயா என் தம்பி ஆசைப் பட்டிருக்கான்..? இல்லையே.. அவமேல ஆசைப்பட்டுட்டான்.. கல்யாணத்தைப் பேசி முடித்து விடலாம்மா.. சேற்றில மலர்ந்த செந்தாமரையையே ஏற்றுக்கிறோம்.. அவ சேற்றில மலரலை.. கோவில் குளத்திலே மலர்ந்திருக்கா.. மாதங்கியைப் போன்ற நல்ல பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிற மனிதர் அவளைப் போலதானே இருப்பார்..? அவரோட தங்கையும் நல்லவளாத்தான் இருப்பா.. வாசுவோட எம்.டி குணமான குடும்பத்தில்தான் பெண் கொடுப்பார்.. நாம அங்கிருந்து பெண்ணெடுக்கப் போகிறோம்.. அவ்வளவுதான்.." வாசுதேவனின் திருமணத்தை முடிவு செய்து விட்டாள்..

"பக்கத்து வீட்டில இந்த பஜாரி இருக்காளோம்மா.."

"இன்னும் ரெண்டே நாளில நம்ம ஹீரோ இந்த ஏரியாவை விட்டே இவளைத் துரத்தியடிச்சுருவான்.. பாருங்களேன்.."

"இவ எங்கே போனாலும் அந்தப் பொண்ணு இவளைப் பார்க்கப் போகுமில்ல..?"

"அதை வாசு பார்த்துக்குவான்.. இல்லேடா வாசு.."

வசுமதியின் கைகள் வாசுதேவனின் தோள்களை அழுத்திப் பதில் சொல்ல வலியுறுத்தின..

"ஆமாம்ப்பா.. அதுக்கு நான் கேரண்டி.."

எதற்கு அவன் உத்திரவாதம் கொடுக்கிறான் என்று புரியாமல் அவனைப் பெற்றவர்கள் மனத்தாங்கலுடன் வாய்க்குள் முணுமுணுத்தார்கள்..

"சுசீந்திரனுக்கு நான் என்ன பதிலைச் சொல்லட்டும்..?" பவ்யமாகக் கேட்டு அவர்களின் கோபத்தைக் கிளறி விட்டு வாங்கிக் கட்டிக் கொண்டான்..

"கேட்டுக்கடி வசு.. உன் தம்பி பப்பா.. நம்மளை கேட்டுக்கிட்டுத்தான் முடிவு சொல்லுவானாம்.. கட்டிக்கிட்டா அவளைத்தான் கட்டிக்குவேன்னு சொல்லிட்டு இப்பப் பச்சைப்புள்ள மாதிரி பாவ்லா காட்டறான்.." கோதாவரி சினந்தாள்..

"வாசு.. டிசிசன் நீ எடுத்துட்ட.. அப்ரூவலுக்கு மட்டும் எதுக்கு நாங்க.. எப்பக் கல்யாணம்ன்னு இன்பர்மேசன் மட்டும் கொடு.. அது போதும்.. பெத்த கடமைக்கு வந்து நின்னு அட்சதை போட்டு வாழ்த்திட்டு வரோம்.." பூபதி மலையேறினார்..

"அடடா.. இவன் ஒன்றும் பச்சைப் புள்ளையில்ல.. நீங்க ரெண்டு பேரும்தான் பச்சைப் புள்ளைக.. இப்ப இவன் என்ன பண்ணிட்டான்னு ரெண்டு பேரும் ஒன்று கூடிக்கிட்டு இவனை இந்தப் பேச்சு பேசறிங்க..? அவளைப் பிடிச்சிருக்கு.. கல்யாணம் பண்ணி வையுங்கன்னுதான கேட்டான்..? கல்யாண்ததையா பண்ணிக்கிட்டு வந்துட்டான்..?"

"உனக்கு அது ஒரு குறையா இருக்கும் போல இருக்கு.. அதை மட்டும் ஏன் விட்டு வைச்சிருக்கான்..? அதையும் பண்ணிக்கிட்டு வர வேண்டியதுதானே.."

"அதானே.. இவன் ஒப்புக்குச் சப்பாணியா நிக்க வாங்கன்னு கூப்பிடுவானாம்.. நாங்களும் வந்து நிற்கனுமாம்.. நல்லா இருக்குடி மகளே.. நீ சொல்கிற நியாயம்.."

"ஊஹீம்.. உங்களிடம் பேசிக்கிட்டு இருந்தா வேலைக்கு ஆகாது.. இப்ப என்னதான் சொல்கிறீங்க..? டேய் வாசு.. நாளைக்கு வெள்ளிக்கிழமைதானே.. நாளைக்கே பெண் பார்க்க வரோம்ன்னு சொல்லிருடா.. ச்சும்மா பேச்சை வளர்த்துக்கிட்டே இருப்பாங்க.."

வசுமதியின் உத்தரவுக்கு பூபதியும், கோதாவரியும் மறுப்புத் தெரிவிக்கவில்லையென்றாலும் முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு ஆளுக்கு ஒரு திசையில் எழுந்து போய் விட்டார்கள்.. சோர்வுடன் மடி சாய்ந்த தம்பியின் தோளைத் தட்டிக் கொடுத்த வசுமதி..

"விடுடா.. இவங்க கோபத்தைப் பத்தி உனக்குத் தெரியாதா..? கொஞ்ச நேரத்தில சமாதானம் ஆகிருவாங்க.." என்று தேற்றினாள்..

அவள் சொன்னதைப் போலதான் நடந்தது.. மறுநாள் பெண் பார்க்கக் கிளம்பிய போது கொண்டு செல்ல வேண்டிய பூ, பழங்கள், இனிப்புக்களை பார்த்துப் பார்த்து வாங்கினாள் கோதாவரி.. காரைக் கழுவி துடைத்துப் பளபளப்பாக்கி வைத்தார் பூபதி.. வாசுதேவன் ஆறுதலானான்.. சுசித்ராவின் வீட்டில் தடபுடலாக வரவேற்றதில் பூபதி மொத்தமாக மலையிறங்கி விட்டார்.. பானுபிரியாவின் சாந்தமான முகமும், செந்தில்நாதனின் மரியாதையான பேச்சும், சுசீந்திரனின் கவனிப்பும் கோதாவரியைக் கவர்ந்து விட்டதில் அவளும் சமாதானமாகி விட்டாள்.. வசுமதிக்கு வேண்டியது வாசுதேவனின் மகிழ்ச்சி.. அது அவன் முகத்தில் பூரணமாகத் தெரிந்ததில் இவள் மனநிறைவோடு சுசித்ராவின் தலையில் பூவை வைத்துத் திருமணத்தை உறுதி செய்தாள்..

சுசீந்திரன்-மாதங்கியின் திருமணத்திற்கு முன்னதாகவே சுசித்ராவின் திருமணம் நடைபெற வேண்டும் என்று செந்தில்நாதன் கேட்டுக் கொண்டதால் அடுத்த முகூர்த்தத்தில் திருமணத்தை நடத்திவிட உத்தேசித்து நிச்சயம் செய்தார்கள்..

## 31

சுசித்ராவுக்கு படபடப்பாக இருந்தது.. தான் எடுத்த முடிவு சரியா, தவறா என்ற குழப்பம் மனதுக்குள் வர கால்கள்

தள்ளாடினா.. ஏதோ ஒரு தவறைச் செய்து விட்ட குற்ற உணர்வு மனதுக்குள் அரிக்க அவள் எங்கேனும் ஓடி ஒளிந்து கொள்ளாலாமா என்று மிரட்சியுடன் பார்த்தாள்.. அவளது காதோரமாக வாசுதேவனின் குரல் ஒலித்தது..

"இனி நீ ஓடவும் முடியாது.. ஒளியவும் முடியாது.."

மிரண்டு திரும்பினாள்.. வாசுதேவன் பூட்டியிருந்த கதவின் மீது சாய்ந்து நின்றிருந்தான்.. துளைக்கும் அவனது பார்வை நிதானமாக அவளை உரிமையுடன் ரசிக்க ஆரம்பித்தது..

'நான் வந்தப்ப இவன் ரூமில் இல்லையே.. கதவும் திறந்திருந்ததே..' சுசித்ரா தாழ்ப்பாளைப் பார்த்தாள்..

"பூட்டிச் சாவியையே கைப்பற்றியாச்சு.." அறைச் சாவியைக் கைவிரலில் சுழற்றிக் காண்பித்தான் வாசுதேவன்.

சுசித்ராவின் மிரட்சி அதிகமானது.. பயத்துடன் பின் வாங்கினாள்.. அவளையே பார்த்தபடி வாசுதேவன் முன்னேறினான்.. அவள் ஒரு அடி பின்னால் வைக்க.. இவன் ஒரு அடி முன்னால் வைக்க என்று நகர்ந்தவள் கட்டில் இடிக்கவும் என்னவென்று பார்த்தாள்..

மெத்தையெங்கும் பூக்கள் நறுமணத்துடன் பரப்பப் பட்டிருந்தன.. கட்டிலைச் சுற்றி மலர்சரங்கள் தொங்க விடப் பட்டிருந்தன.. என்ன செய்வது என்று தெரியாமல் அவள் திருதிருக்க அவன் அவளது தடுமாற்றத்தை ரசித்துச் சிரித்தான்..

"தப்பிக்கிறேன் பேர்வழின்னு நகர்ந்து, நகர்ந்து தோதா கட்டிலுக்குப் பக்கத்தில வந்து நிற்கிற பார்த்தியா.. அங்கேயே நின்றிருந்தாலாவது ஓடிப் பிடிச்சு விளையாண்டிருக்கலாம்.. காய்ந்த மாட்டுக்கு கம்மங் கொல்லையைக் காண்பிக்கிறதைப் போல இப்படிக் கட்டிலைக் காண்பித்து வைத்தா மனுசனுக்கு ஓடிப் பிடித்து விளையாடற சிந்தனை வருமா..?"

"காய்ந்த மாட்டுக்கு கம்மங் கொல்லையைக் காண்பிக்கிறதா..? அப்படின்னா..?"

அவள் வெகுளியாகக் கேட்க அவனுக்குள் பிரியம் பொங்கியது..

"அப்படின்னா.." அர்த்தம் சொல்ல ராகம் இழுத்தவன் அவளை பாதாதி கேசம் முதல் மேய்ச்சல் பார்வை பார்த்தபடி..

"நீ கம்மங்கொல்லை.. நான் காய்ந்த மாடு.." என்று விளக்கம் சொன்னான்..

அவளுக்குப் புரிந்து விட்டது.. முகத்தில் ரத்தம் பாய வெட்கத்துடன் "ச்சீ.." என்று முகத்தை மூடிக் கொண்டாள்..

அவளது வெட்கம் அவனை காந்தமென ஈர்த்து 'வா, வா' என அழைத்ததில் வாசுதேவன் கிளர்ந்தான்.. அவளை நெருங்கித் தொட்டான்.. மின்சாரம் பட்டதைப் போல அவளுடைய உடல் தூக்கிப் போட்டது.. அதிர்ந்து விலகியவளை சினத்துடன் பார்த்தவன்..

"ஏன்..?" என்று அதட்டினான்..

சுசித்ரா என்ன சொல்வதென்று தெரியாமல் தவித்தாள்.. தீட்சண்யம் மிக்க வாசுதேவனின் பார்வையை எதிர்கொள்ள முடியாமல் தரையைப் பார்த்தாள்.. அவன் தொட்டவுடன் பதறி விலக முயன்றாள்.. விடாமல் மூர்க்கத்தனத்துடன் அவளை இழுத்து அணைத்து அவளது இதழ்களில் முரட்டுத்தனமாக முத்தமிட்டான்.. சுசித்ராவுக்குள் பிரளயம் வெடித்தது.. அதன் அதிர்வில் நடுங்கியவள் பற்று கோலாக வாசுதேவனின் தோள்களை இறுக்கிப் பற்றிக் கொண்டதில் வாசுதேவனின் கண்கள் மின்னின.. அவனது இதழ்கள் அவளது இதழ்களைக் கவ்விக் கொண்டதில் சுசித்ரா மூர்ச்சையுறும் நிலைக்கு ஆளானாள்.. திடிரென்று நிகழ்ந்த நிகழ்வின் அதிர்ச்சியில் அவளுக்குப் போராட வேண்டுமென்ற எண்ணம் கூடத் தோன்றவில்லை.. அவனது ஆண்மை மிக்க ஆக்ரமிப்பில் தன் வசமிழந்து நிலை குலைந்து போனாள்..

நீண்ட நெடும் நிமிடங்களுக்குப் பின்னர் அவளை விடுவித்தான் வாசுதேவன்.. நிற்க முடியாமல்

தள்ளாடியவளின் இடுப்பில் கைகொடுத்து அவன் தூக்கிக் கொண்டதில் அடுத்த அதிர்ச்சிக்கு ஆளானாள் சுசித்ரா.. கட்டிலில் பூ மெத்தையின் மீது பூமாலையைக் கிடத்துவதைப் போல அவன் அவளை கிடத்தி அவள் மீது சரிந்ததில் மூச்சுத் திணறி அவனை விலக்க முற்பட்டாள்.. முடியவில்லை..

"ஏண்டி..?"

வாசுதேவனின் முகம் அவள் முகத்தின் மீது படிந்திருந்தது.. அவளது காதோரமாக மீசை ரோமங்கள் உராய்ந்ததில் நினைவு தப்ப ஆரம்பித்தது.. சுசித்ரா தன் உணர்வுகளுடன் போராடியபடி..

"லீவ் மீ.." என்று கெஞ்சினாள்..

'அப்படியே வில்லனிடம் ஹீரோயின் கெஞ்சறதைப் போலவே கெஞ்சி வைக்கிறா..' வாசுதேவன் பல்லைக் கடித்தபடி சுசித்ராவின் கழுத்தில் இருந்த மஞ்சள் கயிறைத் தூக்கிக் காண்பித்தான்..

"இது என்னன்னு தெரியுதில்ல.. தாலி.. நான் கட்டியது.. இப்ப நீ என் பெண்டாட்டி.. நான் உன் புருசன்டி.."

"அதுக்காக என் விருப்பமில்லாமல் தொடுவீங்களா..?"

"ஏன் விருப்பமில்லை..? அதைச்சொல்லு.. என்னை உனக்குப் பிடிக்கலையா..? நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு உன் பின்னாடி வரலை சுசித்ரா.. நீதான் வந்த.. கெஞ்சின.. அப்பவே நான் உன்னிடம் கட் அண்ட் ரைட்டாச் சொன்னேனா இல்லையா..?" வாசுதேவன் அதட்டினான்..

"கடைசி வரைக்கும் இந்த மேரேஜ் நிலைக்கும்.. டைவர்ஸ் தர முடியாதுன்னு சொன்னீங்க.." சுசித்ரா முணுமுணுத்தாள்..

"பர்ஸ்ட் நைட்டிலேயே டைவர்ஸைப் பத்திப் பேசற பாரு.. அங்கே நிற்கிறடி நீ.. நம்ம மேரேஜீக்கு நீ கொடுக்கிற

இம்பார்ட்டன்ஸில புல்லரிச்சுப் போகுது சுசித்ரா.." கசப்புடன் விலகிப் படுத்தான் வாசுதேவன்..

அவனது விலகலில் மகிழ்ந்து போக முடியாமல் மருகினாள் சுசித்ரா.. பட்டுவேட்டி சட்டையில் ஆளை அயர வைக்கும் கம்பீர அழகோடு இருந்தவனிடம் மயங்கினாள் அந்த மாது.. இன்று வரும் இந்த மயக்கம் என்றுமே பிரசன்னாவின் மீது வந்ததில்லை என்பதில் மனம் சோர்ந்தது.. காதல், அன்பு, மயக்கம் என்று எந்தவித உணர்வுகளுமே பிரசன்னாவின் மீது அவளுக்கு ஏற்பட்டதில்லை.. இரக்கம் என்று கூடச் சொல்ல முடியாது.. அவளுக்கு பிரசன்னாவின் மீது இரக்கமும் வந்ததில்லை.. யோசித்துப் பார்த்த போது அவள் பிரசன்னாவைக் கண்டு பயந்தாள் என்றுதான் கணிக்க முடிந்தது.. அவளைக் காரணம் காட்டித் தொலைத்து விட்டு அவன் தற்கொலை பண்ணிக் கொள்வானோ என்ற பயம்.. வாழ்நாள் முழுவதும் அந்தக் குற்றஉணர்வு துரத்திக் கொண்டிருக்குமோ என்ற அச்சம்தான் அவளை எங்கே கொண்டு வந்து நிறுத்தி விட்டது..

"யாரை நினைத்துக்கிட்டு இருக்க..? அவனையா..?" கடுமையாக கேட்டான் வாசுதேவன்..

இல்லையென்று சொல்ல முடியாமல் அவள் துடித்துப் போனாள்.. பிரசன்னாவைப் பற்றி அவள் நினைத்துக் கொண்டிருந்தது என்னவோ உண்மைதான்.. ஆனால், வாசுதேவன் நினைப்பதைப் போன்ற நினைவில்லை என்பதை எப்படிச் சொல்லிப் புரிய வைப்பாள்..?

"அவனுக்காக காப்பாற்றி வைத்திருந்த கற்புக்கு ஆபத்து வந்து விட்டதுன்னு உன் மனது அலை பாயுதோ..?" வார்த்தைகளால் அவளைக் குதறி விட்டான் வாசுதேவன்..

"ச்சே.." சுசித்ரா காதுகளைப் பொத்திக் கொண்டதில் வாசுதேவனின் கண்களில் மின்னல் திரும்பியது..

"ஏய்.. உன் கற்பு எனக்குச் சொந்தம்டி.. எனக்கு மட்டும்தான் சொந்தம்.. இனி அவனைப் பத்தின நினைவு உனக்கு வந்ததுன்னா நான் மனிதனா இருக்க மாட்டேன் சுசித்ரா.. மைண்ட் இட்.."

ஆத்திரத்துடன் புரண்டு அவள் முகத்தை இழுத்துப் பிடித்தவனின் கைவிரல்கள் அழுத்திப் பற்றியிருந்ததில் அவள்..

"ஸ்ஆ.." என்றாள்..

வலியில் அவள் முகம் சுளித்ததை அவன் தொட்டதினால் முகம் சுளிக்கிறாள் என்று தப்பாக புரிந்து கொண்ட வாசுதேவனுக்கு வெறி வந்து விட்டது..

"ஏய்ய்.. அவனுக்கு மட்டுமே உண்மையாக இருக்கிறவன்னா என்னை ஏண்டி கல்யாணம் பண்ணிக்கடான்னு கேட்ட.." என்று எரிந்து விழுந்தான்..

"தப்புத் தப்பாய் பேசக் கூடாது.." சுசித்ராவுக்கு கண்ணீர் வந்துவிட்டது..

வாசுதேவன் இமைக்காமல் அவளைப் பார்த்த பார்வையில் தலை குனிந்தாள்.. இவன் மனதில் சாரல் அடித்தது..

"சுசித்ரா.. ஒன்றை நினைவில் வை.. புருசன்ங்கிற உரிமையை எடுத்துக்காமத் தள்ளி நிற்பேன்னு நான் உனக்கு வாக்குக் கொடுக்க முடியாதுன்னு சொல்லிட்டுத்தான உன் கழுத்தில தாலியைக் கட்டியிருக்கேன்.. இந்த விரதமிருக்கிற வேலையெல்லாம் எனக்கு சரிப்பட்டு வராது.. ஸோ.. இன்றைக்கு பிளான் பண்ணியிருக்கிற நம்ம பர்ஸ்ட் நைட் நடந்தே தீரும்.."

"ப்ளீஸ்.." சுசித்ரா கெஞ்சினாள்..

"ஐ ஆம் ஸோ ஸாரி மை டியர்.." இவன் புரண்டு அவளை இறுக்கி அவள் மீது கால் போட்டான்..

சுசித்ராவுக்குள் ஆழிப் பேரலையொன்று 'ஹோ'வென எழுந்தது... விடுபட முயன்றாள்.. முடியவில்லை.. அவளைக் கட்டி முகர்ந்து வாசம் பார்த்தவன்..

"உன்னைத் தொட்டு தொடங்கற இந்த நொடிக்கு ஒரு தனி வாசம் இருக்குதுடி.." என்று கிறங்கினான்..

காதலைத் தொடர்ந்த காமத்திற்குள் அவளைத் தள்ளி விட்டது அவனது வேட்கை.. தாபத்துடன் அவளது இதழ் சுவைத்த அவனது இதழ்களைப் புறக்கணிக்க முடியாத போராட்டம் அவளது தடைகல்.. தாகம் கொண்டவனின் முன்பு நதியாக அவள் இருந்தால் அள்ளிப் பருகித் தாகம் தணித்துக் கொள்ளாவிடின் அவன் என்ன ஆண்மகன்..!

"கடந்த காலத்தை மறந்து விடுடி.. இந்த நொடிக்குள் என் கையில் நீ.. இதுக்குள் மனதைச் செழுத்து.. என்னுடன் வாழ்ந்து விடு.."

காதோரம் கிசுகிசுத்த அவனது குரல் அவளை இழுத்துச் சென்று மாய நதித் தீரத்தில் நனைய வைத்து விடுபட முடியாததொரு சுழலுக்குள்ளே அமிழ்த்தி விட்டது.. மூச்சுத் திணற அவள் மூழ்கினாள்.. உடல் சார்ந்த சூட்சும முடிச்சுகள் அவிழத் தொடங்கியபோது அவனது தேடலை நிறுத்த அவள் வெகுவாகப் பிரயத்தனப்பட்டாள்.. கெஞ்சினாள்.. யாசித்தாள்.. அனைத்தையும் மூர்க்கமாக மறுத்தான் அவன்.. அவனது தேவை எதுவோ அதை நிறைவேற்றிக் கொள்வதில் மட்டும் கவனமாக இருந்தான்.. சில தேவைகளை நிறைவேற்றச் சொல்லி அவளது காதோரம் அவன் விடுத்த ரகசிய கோலிக்கைகளில் உடல் கூச அவள் செவிகளைப் பொத்திக் கொண்டாள்..

குளிர் ஜீரம் போல உடல் வெடவெடத்தது.. விலக முடியாத வேட்கைக் கடலில் தள்ளப்பட்டவளுக்கு பற்றித் தப்பிக்க சிறு துரும்பும் சிக்கவில்லை.. அவன் இழுத்து, இறுக்கி அணைத்துக் கிடத்திப் புரண்டதில் படுக்கை விரிப்பும் அதில் தூவப்பட்டிருந்த மலர்களும் கசங்கித் தரையில் சிதறின.. சுசித்ரா வாய் திறக்க முயன்றாள்.. வாசுதேவன் ஆள்காட்டி விரலால் அவளது இதழ்களுக்குப் பூட்டுப் போட்டு அழுத்திக் கோடிழுத்தான்.. அவள் பேச்சிழந்தாள்.. அவனது மூச்சுக் காற்றின் வெப்பம் அவளது உடல் முழுவதும் படிந்து கூச வைத்தது.. விரல்களின் ஸ்பரிசம் வேட்கையைக் கிளப்பி மோகத்தீயை மூட்டி அதில் குளிர் காய வா என்று அழைத்துப் பாடாய் படுத்தியது.. விருப்பும்

வெறுப்பும் இல்லாமல் எப்படி யோசிக்க முடியும்..? அவன் மீதான ஈர்ப்புக்கு என்ன பெயர்..?

பூக்களின் வாசனையுடன் கூடிய அந்த இரவு அவள் மீது புதுவகையான அனுபவங்களைத் தூவிக் கொண்டேயிருந்தது.. அவனுடனான அந்த இரவு இன்பம் ததும்பும் இம்சைகளுடன் கூடிய போராட்டக் களமாக இருக்கக்கூடும் என்று அறியாதிருந்த அப்பேதை அவன் நிகழ்த்தி விட்ட யுத்தங்களில் கலைந்து நிலை குலைந்து களைத்துச் சரிந்திருந்தாள்..

மீள முடியாத ஓர் பேரலை..! விலக முடியாத ஓர் சுழல்..! பெரும் கானகத்தில் தொலைந்து போகுதல்.. இதுவென்று சொல்ல இயலாத, இனம் காட்ட முடியாத பேரின்பம் ஒன்றை சிற்றின்பம் என்று பெயரிட்டவன் எவன் என்று தனக்குள் கேட்டுக் கொண்டான் வாசுதேவன்.. அவனது முத்தங்களின் ஈரங்களில் கசங்கியிருந்த அவளது கூந்தலைச் சீராக்கி முன்னுச்சியில் முத்தமிட்டு..

"சுசித்ரா.." என்று மென்மையாக அழைத்தான்..

அவள் பேசவில்லை.. உடல் கூச விழிகளை இறுக்கி மூடிக் கொண்டாள்.. அவனுக்கு வேடிக்கையாக இருந்தது..

'இவள் அனிச்ச மலர்..!' முத்தமிட்டான்..

"போதும்.." அவள் விசும்பினாள்..

"இப்ப என்ன ஆகிருச்சுன்னு இந்த அழுகை..? ஊம்..? தொட வேண்டிய உன் புருசன்தானே தொட்டிருக்கேன்..? எனக்கு உரிமையானதைத்தானே எடுத்துக்கிட்டு இருக்கேன்..?"

"இது அராஜகம்.."

"ஹா.. ஹா.."

அவனது சிரிப்பை விரலிடுக்கில் பார்த்தவளின் விரல் பற்றி இழுத்தான்.. சிவந்த முகத்துடன் அவனைப் பார்க்க மறுத்தவளைப் பார்க்கப் பார்க்க அவனுக்குள் காதலும் காமமும் கலந்த பெருந்தணல் எழுந்தது.. உடல் முழுவதும்

சூடு பரவ அவளை அணைத்து அதைத் தணிக்க முற்பட்டான்.. அவள் திமிறினாள்..

"இது நீ அணைக்க வேண்டிய தீ சுசித்ரா.."

"வெட்கமில்லாமல் பேச வேண்டாம்.."

"பெண்டாட்டியிடம் பேச என்னடி வெட்கம் வேண்டிக்கிடக்கு..?"

"த்தூ.."

"ஸோ.. ஸ்வீட்.."

"லீவ் மி.."

"அது மட்டும் நடக்காது.."

பற்றி எறியும் காட்டுத் தீயை அணைக்க மலரால் எப்படி முடிகின்றது..? மோகத்தின் வாசம் பூவாசம் நிரம்பிய பெண் வாசத்தோடு கலக்க பெரும்யுத்தம் போன்ற கூடலுக்குப் பின் அவன் விலக, சருகென அவள் சுருண்டாள்..

"இதுதான் உங்க காதலா..?"

"இதுவும் ஓர்வகையான காதல்தான்.. கணவன்.. மனைவியிடம் காட்டும் காதல்.. நீ பாட்டுக் கேட்டதில்லையா..?"

"இதுக்கும் ஒரு பாட்டை வைத்திருப்பீங்களே.."

"நான் வைத்திருக்கலைடி.. சினிமாப் பாட்டில வைத்திருக்காங்க.."

"என்னவாம்..?"

"கணவனின் துணையோடுதானே.. காமனை வென்றாக வேண்டும்.."

"இதையெல்லாம் தெள்ளத் தெளிவாச் சொல்லுவீங்களே.."

"ஹா.. ஹா.. சுசித்ரா.. என் காதலின் துணையோடு நீ வெல்ல நமக்கே நமக்கான ராஜ்யம் ஒன்று இருக்கு.."

"எனக்கு எந்த ராஜ்யமும் வேண்டாம்.."

"எனக்கு வேண்டுமே.."

எது என்று அவள் கேட்கவில்லை.. உடல் கூசச் செய்யும் அவனது பார்வை சற்றுமுன் அவளிடம் அவன் நிகழ்த்திய நிகழ்வையெல்லாம் சொல்லி லஜ்ஜை கொள்ளச் செய்தது.. வெட்கம் கெட்டவன் என்று அவள் மனதுக்குள் அவனைத் திட்டித் தீர்த்தாள்.. அது அவனுக்கும் அவளுக்குமான அந்தரங்க உலகம் என்று அவன் சொன்னதை வெளியில் மறுத்தாலும் உள் மனம் அது உண்மையென்று ஒப்புக் கொண்டது..

"ஏய்ய்.. நீ நில்லுன்னா நான் நிற்பேன்.. உட்காருன்னா உட்காருவேன்.." அடுத்து அவன் சொன்னதைக் கேட்க இயலாமல் அவனது வாய்பொத்தி தடுத்தாள்.. அவன் கடகடவென்று சிரிப்புடன் அவளை இழுத்துத் தன் கைவளைவுக்குள் வைத்துக் கொண்டு..

"வாசுதேவன்டி.. யாருக்கும் கட்டுப்படாதவன்.. அப்பாம்மா, அக்கா பாசத்துக்கு மட்டும் நேத்து வரைக் கட்டுப்பட்டவன்.. இன்றைக்கு உன்னிடம் அடிமையாகி யிருக்கேன் சுசித்ரா.." என்றான்..

சுசித்ரா பிரமித்தாள்.. அவளுக்குத் தெரியும்.. அவளது பணத்தை அவன் பெரிதாக நினைக்கவில்லை என்பது.. அவளது கடந்த காலச் சிக்கல்களை தெரிந்த பின்பும் அவற்றைப் பற்றி அவனது குடும்பத்தாரிடம் சொல்லாமல் அவளைப் பெண் கேட்டு வர வைத்து திருமணமும் செய்து கொண்டான்.. முதலிரவில் அவன் காட்டிய மூர்க்கத்தனத்தில் அவள் என்ன அவனுக்கு அடிமையா என்று மனம் குமுறினால் அவன்தான் அவளுக்கு அடிமையென்று முத்தமிடுகிறானே..

அதிகாலையில்தான் வாசுதேவன் அயர்ந்து உறங்க ஆரம்பித்தான்.. மெல்ல நழுவிக் குளியலறைக்குள் புகுந்த சுசித்ராவின் மனதில் இனம் புரியாத ஒரு சந்தோசம் நிறைந்திருந்தது.. அது ஏனென்று தெரியவில்லை.. குளித்து உடை மாற்றி ஈரத் தலையை.. ஹீட்டர் போட்டு உலர்த்தி விட்டு.. விரிய விட்ட கூந்தலுடன் அறைக் கதவைத் திறந்து வெளியில் வந்தாள்..

சுசித்ராவின் வீட்டில் விடிந்த பின்னால்தான் எழுந்து கொள்வார்கள்.. அவரவர் அறைகளில் இருக்கும் இண்டர்காமில் சமையலறைக்குத் தகவல் சொன்னால் காபி வந்து விடும்.. டிபனையும் அறைகளுக்கே கொண்டு வரச் சொல்லி விடுவார்கள்.. குடும்பத்தில் உள்ள நால்வரும் சேர்ந்து அமர்ந்து சாப்பிட பெரிய டைனிங் ஹாலும்.. அங்கே நீண்டிருக்கும் தேக்குமர டைனிங் டேபிளும்.. டேபிளைச் சுற்றிக் குஷன் பதிக்கப்பட்ட நாற்காலிகளும் உண்டு.. அங்கே சேர்ந்து அமர்ந்து சாப்பிடத்தான் அந்த நால்வருக்கும் நேரம் வாய்த்ததில்லை.. ஆளுக்கொரு நேரத்தில் அமர்ந்து சாப்பிட்டு விட்டுப் போவார்கள்..

மிகப் பெரும் பணக்காரர்களின் வாழ்க்கை முறையே வேறு, அவர்கள் குடும்பத்திலும் தனித்து நிற்பவர்கள்.. வீட்டையே நட்சத்திர ஹோட்டலாக மாற்றி விடுவார்கள்.. அழகும் அமைதியும் நிரம்பியிருக்கும் வீடுகள் அவர்களின் வீடுகள்.. உயிர்ப்பு இருக்குமா என்று கேட்டால்..

'வாட் இஸ் இட்..?' என்று கேட்பார்கள்.. உயிர்ப்பு என்றால் என்னவென்று தெரியாதவர்களிடம் உயிர்ப்பை பற்றிப் பேசினால் புரியவா போகிறது..?

அறைக்கதவைத் திறந்து மாடிப்படியிறங்கி ஹாலுக்கு வந்த சுசித்ரா ஆச்சரியப் பட்டுப் போனாள்... பூஜையறையிலிருந்து ஊதுபத்தியின் நறுமணம் வெளிப்பட்டு வீட்டை நிறைத்துக் கொண்டிருந்தது.. பூஜையறையை ஒட்டியிருந்த டைனிங் ஹாலில் இருந்த சி.டி பிளையரில் 'கௌசல்யா சுப்ரஜா..' என்று சுப்ரபாதம் ஒலித்துக் கொண்டிருக்க.. பூஜையறையிலிருந்து

'கிண்கிணி' என்று மணிச் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.. சாம்பிராணியின் சுகந்த நறுமணம் கோவிலில் நின்று கொண்டிருப்பதைப் போன்ற உணர்வை எழுப்ப சுசித்ரா பார்த்துக் கொண்டிருந்த போதே சாம்பிராணி புகையின் மத்தியிலிருந்து கற்பூரத் தட்டுடன் வெளிப்பட்டாள் கோதாவரி.. சுசித்ராவைக் கண்டதும் அவளது விழிகளில் வாஞ்சை பொங்கியதில் சுசித்ரா மலைத்தாள்..

மருமகளிடம் வாத்சல்யம் காட்டும் மாமியாரா அவளுடைய மாமியார்..?

"எழுந்துருச்சிட்டியாம்மா..? தொட்டுக் கும்பிட்டுக்க.." கனிவுடன் சொன்னாள்..

சுசித்ரா விழி மூடிப் பக்திப் பரவசத்துடன் கற்பூரச் சுடரைத் தொட்டுக் கும்பிட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்ள கோதாவரி ஹாலில் இருந்த வசுமதியிடம் போனாள்.. அவள் தன் மகளுடன் விளையாடிக் கொண்டிருந்தாள்..

"அப்பா எங்கே வசு..?"

"தோட்டத்துப் பக்க வராண்டாவில ஊஞ்சலாடிக் கிட்டே பேப்பரைப் பார்த்துக்கிட்டு இருக்காரும்மா.."

"பேப்பரைப் படிக்கத்தானே செய்வாங்க..?"

"நீங்க காபி கொடுத்தவுடனே அதைச் சொட்டுச் சொட்டாக் குடித்தபடி பேப்பரில் வந்திருக்கிற நியுஸை ஒரு வரி விடாம படித்தாத்தான் பேப்பரைப் படித்ததைப் போல இருக்குமாம்.."

தாய்க்குப் பதில் சொல்லியபடி சுசித்ராவைப் பார்த்த வசுமதி..

"ஹாய்.. குட்மார்னிங்.." என்று வரிசைப் பற்கள் தெரிய சிரித்தாள்..

"குட்மார்னிங் அண்ணி.." என்றபடி வசுமதியின் பக்கத்தில் போய் நின்றாள் சுசித்ரா..

"உட்காரேன்.." என்றாள் வசுமதி..

"இருக்கட்டும்.." தயக்கத்துடன் கோதாவரியை சுசித்ரா பார்க்க..

"ம்ம்h.." என்றபடி வாய் பொத்தி சிரித்தாள் வசுமதி..

"என்னடி..?" கோதாவரிக்கு மகள் எதற்காக சிரிக்கிறாள் என்று புரியவே இல்லை..

"நீங்க நிற்கறிங்கன்னு உங்க மருமகள் உட்காரத் தயங்கறா.. உனக்கு வாய்த்திருக்கிற மருமகள்.. சூப்பர் மருமகள்ம்மா.."

"அதுக்கு நீயேண்டி சிரிக்கிற..?" முக மலர்ச்சியுடன் மகளைக் கடிந்து கொண்ட கோதாவரி மருமகளைப் பாசத்துடன் பார்க்க.. வசுமதி அதற்கும் கேலி செய்தாள்..

"பாருடா.. மருமகள் மேல பாசம் பொங்கி வழிகிறதை.. அம்மா.. இங்கே நீங்க பெத்த மகள் குத்துக் கல் போல உட்கார்ந்திருக்கேன்.. உங்க பாசத்தை இந்தப் பக்கமும் கொஞ்சம் பாய்ச்சி விடறது..?"

"போடி.." பெருமிதத்துடன் மருமகளைப் பார்த்தபடி கோதாவரி சென்று விட்டாள்..

"அதான் உன் பாசக்கார மாமியார் போயாச்சே.. இனி மேலாவது உட்காரு.." வசுமதி சுசித்ராவின் கையைப் பிடித்து இழுத்தாள்..

அவள் பக்கத்தில் உட்கார்ந்த சுசித்ரா ஆசையுடன் நிஷாக்குட்டியை அள்ளப் போக குழந்தை நகர்ந்து வசுமதியிடம் ஒன்றிக் கொண்டது.. ஏமாற்றமடைந்த சுசித்ராவைப் பார்த்த வசுமதி..

"புது அத்தையாச்சே.. அதான் வர மாட்டேங்கிறா.. இரண்டு, மூன்று நாள்களில் நீ இந்த வீட்டின் மகாலட்சுமின்னு புரிஞ்சுக்கிட்ட உடனே உன் மடியிலேயே குடியிருப்பா.. பாரேன்.." என்று சமாதானமாகச் சொன்னாள்.

இலகுவாக பழகும் வசுமதியின் சிநேகிக்கும் சுபாவம் சுசித்ராவிற்கு இதமானதாக இருந்தது.. நிஷா இங்கும் அங்கும் ஓடி விளையாட சமையலறையில் வேலைக்காரியை கோதாவரி அதட்டிக் கொண்டிருக்க.. வாசல் பக்கமிருந்து பூபதி எதிர் வீட்டுக்காரரிடம் பேசிக் கொண்டிருக்கும் பேச்சுச் சப்தம் கேட்டுக் கொண்டிருக்க.. டிவியை ஒலிக்க விட்டு பழைய பாடல்களைக் கேட்டு, அதனுடன் சேர்ந்து பாடியபடி சுசித்ராவிடமும் வசுமதி அரட்டையடித்துக் கொண்டிருக்க.. சுசித்ராவின் பிறந்த வீட்டில் இல்லாத உயிர்ப்பலைகளை வாசுதேவனின் வீட்டில் உணர்ந்தாள் சுசித்ரா..

"நிஷாக்குட்டி உனக்குப் பால்.. வசு, சுசித்ரா உங்களோட காபிக் கப்புகளை எடுத்துக்கங்க.." கோதாவரி வந்து விட்டாள்..

சட்டென எழுந்து நின்ற சுசித்ரா சங்கடத்துடன்..

"எனக்கும் நீங்களே காபி கொண்டு வரனுமா அத்தை..? குரல் கொடுத்தா நான் வந்து எடுத்துக்க மாட்டேனா..?" என்று கேட்டாள்..

"நீயும், வசுவும் வேற வேறயா சுசித்ரா..? அவளுக்கு கொண்டு வருவதைப் போல உனக்கும் கொண்டு வரேன்.. இதிலென்ன இருக்கு..?" கோதாவரி பாசத்துடன் மருமகளின் கன்னத்தை வருடிக் கொடுத்தாள்..

"ஹ.. கருப்பு, வெள்ளை ஃபிலிம் தோத்துச்சு.." வசுமதி கிண்டலடித்தாள்..

"போடி.. உனக்குப் பொறாமை.."

"அம்மா.. என் மாமியார் உங்களை விட ஒரு படி மேலே போய் என்னை மடியில உட்கார வைச்சு கொஞ்சுவாங்களாக்கும்.."

"நான் என் மருமகளை தலைமேல தூக்கி வைத்துக் கொண்டாடுவேண்டி.."

"முடியல.."

வசுமதி தோள்களைக் குலுக்க கோதாவரி காபிக் கப்புகளுடன் வாசல் பக்கமாகப் போய் விட்டாள்..

"அத்தை.. காபி குடித்தாங்களா..?" சுசித்ரா கவலைப்பட்டாள்..

"அதெல்லாம் வாசலுக்குப் போய் காதல் கணவருடன் காபி சாப்பிட்டுக்குவாங்க.. நீ உட்காரு.. என் அப்பாவும், அம்மாவும் இருக்காங்களே.. வெளியில பார்க்கத்தான்

டாம் அண்ட் ஜெர்ரி சண்டை போட்டுக்குவாங்க.. மனசுக்குள்ளே வள்ளுவரும்.. வாசுகியும்தான்.. நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும்ன்னு ஒரு பழைய பாட்டு இருக்கில்ல.." வசுமதி விளக்கம் சொல்ல யத்தனிக்க..

"இருக்கா..?" என்று சந்தேகம் கேட்டு வைத்தாள் சுசித்ரா..

"சரியாப் போச்சு போ.. உனக்குப் பாட்டுக் கேட்கிற பழக்கமே இல்லையா..?" வேற்றுகிரகவாசியைப் போல அவளை மேலும் கீழும் பார்த்து வைத்தாள் வசுமதி..

"கேட்பேன்.. கேட்பேன்.." பறந்தடித்துக் கொண்டு மறுத்துரைத்தாள் சுசித்ரா..

"என்னென்ன பாட்டைக் கேட்ப..?"

சுசித்ரா பட்டியலிட்ட அத்தனை பாடல்களும் ஆங்கிலப் பாடல்களாக இருக்க.. "வேண்டாம்மா.. இதுவே போதும்.. இதுக்கு மேல தாங்காது.." என்று அவளைத் தடுத்து நிறுத்திய வசுமதி..

"இந்தப் பாட்டையெல்லாம் உன் மாமியார் முன்னாடி பாடியேன்னு வைய்யு.. ஒரே ஓட்டமாக் கன்யாகுமரிப் பக்கம் ஓடிப்போய் நின்று விடுவாங்க.." என்று பயமுறுத்தினாள்.

"கன்யாகுமரிக்கு எதுக்குப் போகனும்..?" சுசித்ரா திருதிருத்தாள்..

"அங்கேதான் அவங்க பிறந்தவீடு இருக்கு..?"

"ஓ.. அத்தை கன்யாகுமரியில பிறந்தவங்களா..?"

"அதே.. குமரிமுனையில பிறந்து சென்னையில வாழ்க்கைப்பட்டு வந்திருக்காங்க.. பாவமில்ல..?"

இதை ஏன் வசுமதி அவளிடம் கேட்கிறாள் என்று புரியாமல் மறுபடியும் திருதிருத்தாள் சுசித்ரா..

'இதில் பாவம் பார்க்க என்ன இருக்கு..?'

"உன் மாமியாரை இங்கிலிஷ் பாட்டுப் பாடித் துரத்தி விட்ட பாவம் உன்னைச் சேரக் கூடாதில்ல..?"

'ஓ.. இதைத்தான் சொன்னாங்களா..?'

"இந்த வீட்டில அவங்க எப்பப் பார்த்தாலும் கேட்டுக்கிட்டு இருக்கிற பாட்டுக்களே வேறம்மா.. தாய்மொழின்னு ஏன் சொல்கிறாங்க..? தாய் பேசுகிற மொழியைத்தான் பிள்ளைகளும் பேசுவாங்க.. அதைப் போல எனக்கும் வாசுவுக்கும் பழைய பாட்டெல்லாம் தாய்ப்பாட்டு.."

வசுமதி சொன்ன விதத்தில் ரசித்துச் சிரித்தாள் சுசித்ரா.. இது போன்ற காலை நேரம் இதற்கு முன்னால் அவளது வாழ்வில் வந்திருக்கிறதா..?

சுசித்ராவின் மனக் கண்ணில் பிரம்மாண்டமான அவளது பிறந்தவீடு தோன்றியது.. வீடல்ல அது.. மாளிகை.. அதான் உள்புறமும், வெளிப்புறமும் அழகும் செல்வமும் சேர்ந்து இழைக்கப்பட்டு மிளிர்ந்து கொண்டிருக்கும் மாளிகை.. அங்கு கிடைக்காத சந்தோசம் இங்கே எப்படிக் கிடைக்கிறது..?

நின்று பேச நேரமில்லாமல் பணத்தைத் துரத்திக் கொண்டிருந்த தந்தை.. அவரது வளர்ப்பாக உருவாக்கப் பட்ட தமையன்.. அவன் படித்தது ஊட்டி காண்வென்டிலும் வெளிநாட்டு யுனிவர்சிட்டிகளிலும்தான்.. இந்த நான்கு வருடங்களில்தான் சுசித்ரா தன் தமையன் எப்படியிருப்பான் என்று பக்கத்தில் நின்று பேசிப் பார்த்திருக்கிறாள்.. செந்தில்நாதன் ஒரே வீட்டில் இருக்கிறார் என்றுதான் பெயர்.. பல தினங்கள் சுசித்ரா அவரைப் பார்த்ததே இல்லை.. எப்போதாவது ஒருநாள்

வழியில் எதிர்படுவார்.. மகளைப் பார்த்துச் சின்னதான புன்னகை..

"ஹாய் டியர்.. எப்படி செல்லம் இருக்கிற..?" என்ற நலவிசாரிப்பு..

நிற்காமல் போய் விடுவார்.. ஒரே வீட்டில் இருந்து கொண்டு நலம் விசாரிக்கும் கொடுமையெல்லாம் மேல்தட்டு வர்க்க மக்களிடம்தான் இருக்கும்.. பானுபிரியாதான் மகளுடன் அடிக்கடி பேசுவாள்.. அவளும் லேடிஸ் கிளஸ், கோவில், தோழிகளின் வீடுகள் என்று சென்று வந்த நேரம் போக மீதியிருக்கும் நேரத்தில்தான் மகளிடம் பேச வருவாள்..

'ஒருவேளை ஏனென்று கேட்க ஆளில்லாத தனிமைதான் பிரசன்னாவின் மீது இரக்கம் காட்டத் தூண்டியதோ..?'

இந்த நேரத்தில் அந்த நினைவெதற்கு என்று ஒதுக்கத்தான் அவள் முயன்றாள்.. ஒதுக்க முடியாமல் ஓர் குற்றஉணர்வு மனதில் கவிந்தது.. அதை விரட்டியடித்தாள் வசுமதி..

"இப்படியாகத்தானே ஒவ்வொரு நாளும் பழைய பாட்டுக்களில் மூழ்கி நீச்சலடித்து வளர்ந்தவங்க நாங்க.. அந்தப் பாட்டுக்களில ஒரு பாட்டுத்தான் நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும்ங்கிற பாட்டு.. அதைப் போல அம்மா நினைக்கிறதை அப்பா பேசுவார்.. அப்பா மனசில இருக்கிறதைத்தான் அம்மா நினைப்பாங்க.. இவங்க சூப்பர் கப்புள்.. தெரியுமா..?"

நாத்தனாரின் பேச்சில் கடந்த காலத் துயரத்தின் சுவடை மறந்து விட்டாள் சுசித்ரா... ஹாலின் ஜன்னலிலிருந்து பார்த்தால் போர்டிகோவை ஒட்டியிருக்கும் வராண்டா தெரியும்.. இவள் ஜன்னல் வழி பார்த்த போது பூபதியும் கோதாவரியும் இணக்கமாக எதையோ பேசியபடி காபியை உறிஞ்சிக் கொண்டிருந்தார்கள்.. பார்க்கவே அழகாக இருந்தது..

"அங்கே என்ன பார்க்கிற..?" எட்டிப் பார்த்த வசுமதி..

"காபி வித் கோதாவரிங்கிறதுதான் எங்கப்பாவுக்கு பிடித்த டயலாக்.. சொட்டு நீர்ப் பாசனம் போலச் சொட்டுச் சொட்டாக்

காபியைக் குடித்தபடி கதை பேசுவாங்க.." என்று சிரித்தாள்..

பதிலுக்கு சிரித்த சுசித்ரா நிஷாவைப் பார்த்து இமைகளைக் கொட்டினாள்.. நிஷா லேசாக நகர்ந்து சுசித்ராவைப் பார்த்து..

"நீங்க யாரு..?" என்று கேட்டது..

"உன் அத்தை.."

வாசுவின் குரல் ஒலித்ததில் தன்னிச்சையாக இமைகள் படபடக்க விழிகளை உயர்த்தினாள் சுமித்ரா.. குளித்திருந்தான்.. பட்டுவேட்டி, சட்டையென்று இல்லாமல் கைலியும், டிசர்டுமாக இருந்தவனின் ஈரத்தலையில் நீர் கோர்த்திருந்தது..

'ஒழுங்காய் தலையைத் துவட்டியிருக்கலாம்.. இல்லைன்னா டிரையர் போட்டுக் காய வைத்திருக்கலாம்..'

அவளது எண்ணவோட்டத்தைப் படித்து விட்டதைப் போல..

"நீதான் உன் சேலை முந்தானையாலே என் தம்பிக்கு தலை துவட்டி விடேன்.." என்று கேலி செய்தாள் வசுமதி..

சுதித்ராவின் முகம் குங்குமமாக சிவந்து விட்டது.. வாசுதேவனின் பார்வை அவளைத் துளைப்பதை அவனைப் பார்க்காமலே உணர்ந்தவளின் கை விரல்கள் நடுங்க ஆரம்பித்தன.. வாசுதேவன் அவளை உரசிக் கொண்டு உட்கார்ந்தான்.. நகர்ந்து உட்கார்ந்தால் வசுமதி கவனித்து விடுவாள் என்பதால் அப்படியே உட்கார்ந்திருந்த சுசித்ரா உணர்ச்சிப் பெருக்கால் தன் உதடுகளைக் கடித்துக் கொண்டாள்..

"ஏன்..? இவ மடியிலயே உட்கார்ந்து விடேன்.." வசுமதி தன் தம்பிக்கு ஆலோசனை கூறினாள்.

"அப்படிங்கிற..?" வாசுதேவன் சுசித்ராவின் மடியில் உட்காரப் போவதைப் போல நகர முனைய.. சுசித்ரா அவனது தொடையில் கை வைத்து லஜ்ஜையுடன் கிள்ளி விட்டாள்..

"ஸ்ஆ.. பாருக்கா.. உன் முன்னாடியே இவ என்னை கிள்ளி வைக்கிறான்னா.. தனி ரூமில என்ன சாத்துச் சாத்தியிருப்பான்னு யோசிச்சுப் பாரு.." வாசுதேவன் தமக்கையிடம் புகார் செய்தான்..

"யாரு..? இவ..? உன்னை சாத்துச் சாத்துன்னு சாத்தியிருப்பா..? போடா டேய்.. இவ பாவம் பச்சை மண்ணு.."

"நம்பிக்கிட்டு இரு.." சுசித்ராவின் வழவழப்பான இடையில் வாசுதேவனின் விரல்கள் ரகசியமாக ஊர்ந்ததில் அவள் நெளிந்தாள்..

"உன்னைத்தான் நம்ப மாட்டேன்.."

வசுமதி தம்பியின் தலையில் ஒரு கொட்டு வைத்து விட்டு காபி கலந்து கொண்டுவர எழுந்து சென்று விட்டாள்.. நிஷா தாய் மாமனின் கரங்களுக்கு அகப்படாமல் தாயின் முந்தானைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு ஓடி விட்டாள்..

"புகுந்த வீடு.. இனிமையான

மல்லிகைப் பந்தல்..

அங்கு புதிய வாழ்வைத்

தேடி வந்த

இவளொரு தென்றல்..!"

டிவியில் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது.. தற்காலிகமாக கிடைத்த தனிமையைப் பயன்படுத்திக் கொண்ட வாசுதேவன் அவளை இறுக்கி அணைத்து 'உம்மா' கொடுக்க.. சுசித்ரா விழி மூடி அதை ஏற்றாள்..

# 33

"இந்தாடா காபி.." வசுமதி வந்து விட்டாள்..

சுசித்ரா நகர்ந்து உட்கார்ந்தாள்.. வாசுதேவன் சாதாரணமாக அசைவதைப் போல நகர்ந்து அவனுக்கும் அவளுக்குமான இடைவெளி குறையாமல் பார்த்துக் கொண்டான்..

'இவன் இருக்கானே..'

வசுமதி இருக்கிறாள் என்ற நினைவில் சங்கடமுற்றாள் சுசித்ரா.. வசுமதியோ தம்பிகாரனின் அழிச்சாட்டியத்தை ரசித்தபடி..

"ராஸ்கல்டா நீ.." என்றாள்..

"என்னக்கா..?" ஏதுமறியாத சின்னக் கண்ணன் போல இமை கொட்டிக் கேள்வி கேட்டான் வாசுதேவன்..

"அடேங்கப்பா.. நீ ஒன்னும் தெரியாத பப்பாதான்.. அடங்குடா.."

இலகுவாக தம்பியின் தலையைக் கலைத்து விட்டவளை ஆச்சரியமாகப் பார்த்தாள் சுசித்ரா.. சுசீந்திரன் அவளிடம் அன்பாக இருப்பான்தான்.. இதுபோல இருந்ததில்லை.. மேல்தட்டு வர்க்கத்தில் தந்தை-மகள் பாசத்திலிருந்து அண்ணன்-தங்கை பாசம் வரை அத்தனையும் அளவுகோலுடன் அளந்துதான் வழங்கப்படும்.. தாமரையிலைத் தண்ணீர் போல ஒட்டியும் ஒட்டாத உறவு.. அந்த அளவுகோல் உறவிலும் தங்கையின் மீது ஆழ்ந்த பாசம் வைத்திருந்தான் சுசீந்திரன்.. தங்கைக்காக தன் மனதுக்குப் பிடித்தவளைத் திருமணம் செய்து கொள்வதையும் தவிர்த்தான்..

'அண்ணா..' தமையனின் நினைவில் சுசித்ராவின் விழிகள் பனித்தன..

"என்னாச்சு சுசித்ரா.. வீட்டு நினைவா..?" இதமாக வினவினாள் வசுமதி..

"ம்ம்ம்.." சிரிக்க முயன்றாள் சுசித்ரா..

வாசுதேவன் அவளை முறைத்தான்.. பயந்து போனவளாக சுசித்ரா இமைகொட்ட.. வசுமதி தம்பியை அதட்டினாள்..

"இப்ப எதுக்குடா இவளை முறைக்கிற..?"

"ஏன்க்கா.. உன்னைத்தான் வெளியூரில் கல்யாணம் பண்ணிக் கொடுத்திருக்கோம்.. நினைத்தவுடன் நீ பிறந்த வீட்டுக்கு வந்து போக முடியாது.. இவளுக்கு அப்படியா..? இதோ இருக்கு இவளோட அம்மாப்பா வீடு.. ஆஃப் அன் அவர் டிரைவிங்கில போய்ப் பார்த்துட்டு வந்து விடலாம்.. அதுக்குப் போய் ஃபிலிம் காட்டறா பாரு.. ஏய்ய்.. இனி இதுதான் உன் வீடு.."

"டேய் டேய்.. ஏண்டா.. என் முன்னாடியே இந்த மிரட்டு மிரட்டறியே.. தனியா அகப்பட்டா எப்படியெல்லாம் பாடாய் படுத்துவ.."

இரவு முழுவதும் அவனிடம் தனியாக அகப்பட்டுக் கொண்டபோது என்ன பாடுபடுத்தினான் என்ற நினைவு வர சுசித்ரா பிறந்த வீட்டை மறந்தாள்.. கூச்சம் அவளை ஆக்ரமிக்க முகம் சிவந்தாள்.. வாசுதேவனுக்கு அவளது நிலை புரிந்தது.. உடலில் சூடு ஏற அவளை உராய்ந்தான்.. அவளது மடி மீதுதான் ஏறி உட்காரவில்லை..

'அடங்க மாட்டேங்கிறானே..' சுசித்ரா தவித்தாள்..

"அப்படியே எருமை மாடு சுவரில் உராய்கிறதைப் போலவே இருக்குடா தம்பி.." சிலாகித்தாள் வசுமதி..

அவளது சிலாகித்தல் சுசித்ராவுக்குப் பிடித்திருந்தது..

"கலீர்.." என வாய் பொத்திச் சிரித்தாள்..

'இவனுக்கு இவங்கக்காத்தான் சரி..'

இவளால் சொல்ல முடியாததை உடனே சொல்லி விடும் வசுமதியின் மீது இவளுக்கு பிரியம் பொங்கி வழிந்தது..

"கூட்டுச் சேர்க்கிறதைப் போல இருக்கே.." மனைவியைப் பார்த்து புருவங்களை உயர்த்தினான் வாசுதேவன்..

"ஆமாண்டா.. கூட்டுத்தான் சேர்றோம்.. நான் மட்டுமில்ல... அம்மாவும் மருமகள் பக்கம்தான்.. அப்பா வெளிப்படையா மருமகளுக்குச் சப்போர்ட் பண்ணலைன்னாலும் எதிர்த்து

ஒட்டுப் போட மாட்டாரு.. உன் மாமா சாய்ந்தாடம்மா சாய்ந்தாடுன்னு தங்கை பக்கம் சாய்ந்துருவார்.. நீ ஒற்றை ஆளாய் எங்களிடம் மாட்டியிருக்க.. பார்த்துப் பேசனும்.. தெரிஞ்சதா.." வசுமதி கொக்கரித்தாள்..

"ஹ.." புறங்கையால் தமக்கையின் கொக்கரிப்பைப் புறம் தள்ளிய வாசுதேவன்..

"சிங்கம் எப்பவும் ஒற்றையாத்தான் இருக்கும்.." என்று சட்டைக் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான்.

பக்கவாட்டில் தெரிந்த அவனது தீர்க்கமான நாசியும், ரோமானிய சிற்பம் போன்ற முகவடிவும் சுசித்ராவை ஈர்த்ததில்..

'இவன் சிங்கமே தான்..' என்று அவள் சொக்கிப் போனாள்..

இரவில் அவளை வேட்டையாடிப் புசித்த சிங்கம்..!

"என்ன சத்தம் இந்த நேரம்.." பாட்டுப் பாடியபடியே அங்கே வந்த அகிலன் மகளை இழுத்து மடியில் உட்கார வைத்துக் கொண்டு..

"உன் தம்பிக்கு மட்டும்தான் காபி குடுப்பியா..?" என்று மனைவியிடம் செல்ல கோபம் காட்டினான்..

"கும்பகர்ணன் போல நீங்க தூங்கினா நான் என்ன செய்கிறதாம்..? என் தம்பியைப் பார்த்தீங்கள்ல.. இந்த நேரத்திலேயே குளித்து பிரஷ்ஷா இருக்கான்.." பெருமைப் பட்டாள் வசுமதி..

"ஹலோ.. இன்றைக்கு உன் தம்பி ஊருக்கு முதலில் குளித்து உட்கார்ந்துட்டா உன் புருசன் தூங்குமூஞ்சியா கிருவானா..? நான் இங்கே வரும்போதெல்லாம் பார்த்துக் கிட்டுத்தானே இருக்கேன்..? அடித்துப் போட்டதைப் போலத் தூங்கறது.. ஆபிஸ் போகிற டயத்தில முழிச்சு அவசரக் குளியலைப் போட்டுட்டு ஆபிசுக்கு ஓடறதுன்னு இருக்கிறவர்தானே உன் தம்பி.." அகிலன் காட்டிக் கொடுத்தான்..

"நேத்தைக்குக் கதை நேத்தோடு போச்சு.. இன்றைக்கு கதைக்கு வாங்க.. நேற்றுக் காபி குடிச்சதினால இன்றைக்குக் காபி வேண்டாம்ன்னு சொல்லிருவீங்களா..? புதுசா காபி தேவைப்படுதில்ல.. அதைப் போலதான் இதுவும்.." சட்டம் பேசினாள் வசுமதி..

"தம்பின்னு வந்துட்டா நீ எதுக்கும் எதுக்கும் வேணும்னாலும் முடிச்சுப் போடுவ.. வேண்டாம் தாயி.. என் மைத்துனர் தூங்கா மூஞ்சிதான்.. நான்தான் தூங்கு மூஞ்சி.. போதுமா.. எனக்கும் ஒரு கப் காபி குடுடி.." அகிலன் பணிந்து விட்டதைப் போல பாவனை செய்தான்.

"அஃது.." வசுமதி ஒற்றை விரலை உயர்த்திக் கணவனை எச்சரிப்பதைப் போல பாவனை செய்தபடி காபி கலக்கப் போனாள்..

அகிலன் சுசித்ராவைப் பார்த்து சிநேகிதமாய் சிரிக்கப் பதிலுக்கு இவளும் சிரித்து வைத்தாள்..

"நிஷாக்குட்டி என்னிடம் வர மாட்டேங்குது.." என்றாள்..

"பழகினா வந்து விடுவா.." அகிலன் மகளின் உச்சந்தலையில் முத்தம் பதித்தான்..

இதுபோல செந்தில்நாதன் கொஞ்சியது இல்லையென்ற நினைவுடன் தந்தையும் மகளும் கொஞ்சி விளையாடுவதை வியப்புடன் பார்த்தாள் சுசித்ரா.. அவளுக்கு எல்லாமே புதிதாக இருந்தன.. நீர் புதிது.. நிலம் புதிது.. வான் புதிது.. விண்மீன் புதிது என்று காணும் இடமெங்கும் புதிதாக மாறி விட்டதைப் போல இருந்தது..

"அப்புறம் என்ன ஆச்சாம்..?"

கணவருடன் கதை பேசியபடி உள்ளே வந்த கோதாவரி மருமகனைக் கண்டதும் சேலை முந்தானையை இழுத்துப் போர்த்தியபடி..

"காபி கொண்டு வரேன் மாப்பிள்ளை.." என்று விரையப் போனாள்..

"அதெல்லாம் கொண்டு வந்தாச்சும்மா.." வசுமதி காபியுடன் வந்தாள்..

'மருமகனுக்கு மாமியார் இவ்வளவு மரியாதை காட்ட வேண்டுமா..?'

பிறந்த வீட்டுக்குப் போகும் போது பானுபிரியா இதே அளவு மரியாதையையும் கவனிப்பையும் வாசுதேவனுக்கு அளிக்க வேண்டுமே என்று சுசித்ராவுக்கு கவலையாகி விட்டது..

வாசுதேவன் போகும் நேரத்தில் தாய் பாட்டுக்கு எனக்கு லேடிஸ் கிளப்பில் வேலையிருக்கு மாப்பிள்ளை.. உங்களுக்கு வேலைக்காரி காபி கொண்டு வந்து தருவாள் என்று ஓடி விட்டால் என்ன செய்வது..? சுசித்ராவின் வீட்டில் அப்படி நடக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இருந்தனதான்..

"என்னடி.. தலை போகிற கவலை போல தெரியுது.. உன் மண்டைக்குள்ள என்ன குடையுது..?" வாசுதேவன் அவளது காதோரமாக கிசுகிசுத்தான்..

"ஒன்றுமில்லை.." வாயைத் துடைப்பதைப் போல நாசுக்காக அவள் முணுமுணுத்தாள்..

"எந்தக் கவலையாக இருந்தாலும் தூக்கித் தூரப் போட்டுட்டு இந்த செகண்டின் சந்தோசத்தில் வாழ்ந்து விடு.. எல்லாத்தையும் சரி பண்ண நான் இருக்கிறேன் உனக்கு.."

வாசுதேவன் என்னவோ இயல்பாகத்தான் இதைச் சொன்னான்... அவனைப் பார்த்த சுசித்ராவின் பார்வையில்தான் ஓரராயிரம் உணர்வலைகள் தெரிந்தன.. மனைவியை அந்த நிலையில் பார்த்ததும் மார்பில் சாய்த்துக் கொள்ளத் துடித்தது வாசுதேவனின் மனம்.. அனைத்தும் இருந்தும் அடைக்கலம் தேடும் மனநிலையை யார் அவருக்குக் கொடுத்தது.. அடைக்கலம் கொடுக்கும் அனாதை ரட்சகனாய் அவன் இமைகளை மூடித் திறந்து அவளை ஆறுதல் படுத்தினான்..

"உன் கண்ணில் நீர் வடிந்தால்..

என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி..

என் கண்ணில் பாவையன்றோ - கண்ணம்மா

என்னுயிர் நின்னதன்றோ.."

டிவியில் பாடல் ஒலித்தது.. சுசித்ராவின் மனம் பாகாக உருகியது.. இப்படியொரு காவல் கிடைக்க அவள் என்ன தவம் செய்தாள்..?

'நான் இருக்கிறேன் உனக்கு..'

இந்த ஒற்றை வரி கொடுக்கும் ஓர் யுகத்திற்கான மனத்தெம்பை..!

"நிஷாக்குட்டிக்கு அவ அப்பா வந்தாப் போதும்.. தாத்தா, பாட்டி, மாமாவை 'யார் நீ' ன்னு கேக்கும்.." பூபதி பேத்தியைக் கொஞ்சியபடி எதிரே இருந்த சோபாவில் உட்கார்ந்தார்..

"நாங்களும் அப்படித்தானேப்பா.." என்று கேட்டபடி வசுமதி கணவனின் பக்கத்தில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள்..

"டயர்டா ஃபீல் பண்றியா..?" கர்ப்பிணி மனைவியிடம் கரிசனம் காட்டினான் அகிலன்..

"அதெல்லாம் ஒன்னுமில்லை.." சிரித்தபடி மறுத்தாள் வசுமதி..

"நீயும் அப்படித்தான்னு சொல்லாதே.. கல்யாணம் முடிகிற வரைக்கும் அப்பா பொண்ணுன்னு சொன்ன.. தாலி கழுத்தில ஏறினதும் அத்தானுக்குப் பெண்டாட்டிடான்னு மாமா பின்னாலே கிளம்பி விட்ட அக்காதானே நீ.." வாரினான் வாசுதேவன்..

"அங்கே மட்டும் என்னவாம்..? நேத்துத்தான் கல்யாணமாச்சு.. இன்றைக்கு அக்காவை மறந்து பெண்டாட்டி சேலை முந்தானையைப் பிடிச்சாச்சு.. இவன் என்னைச் சொல்றான்.." பதிலுக்கு வாரினாள் வசுமதி..

"இப்படிச் சண்டை போடக் கூடாது.. இரண்டு பேரும் குடுமியைப் பிடிச்சுக்கிட்டு சண்டை போடனும்.."

சிரிக்காமல் ஆலோசனை வழங்கினான் அகிலன்..

அதற்கு வாசுதேவன் ஒன்றைச் சொல்ல.. 'ஆமாம்டா தம்பி..' என்று வசுமதி ஆமோதிக்க.. அப்படியா என்று அகிலன் ஒன்றைச் சொல்ல.. 'அப்படிச் சொல்லுங்க..' என்று வசுமதி கணவனுடன் கூட்டுச் சேர்ந்து கொள்ள.. வாசுதேவன்..

"அக்கா.. ஸேம் சைடு கோல் போடாதே.." என்று ஒற்றை விரலை உயர்த்திக் காட்ட..

"போடா.. டேய்.." என்று வசுமதி வாசுதேவன் உயர்த்திய விரலை மடக்கிவிட..

அங்கே ஆனந்த அரட்டை ஓடிக் கொண்டிருந்தது.. வாயில் ஈ நுழைந்து வட்டமிட்டு பாட்டுப் பாடி, ஆட்டம் ஆடி வெளியில் வருவதைக் கூட உணராமல் 'ஆ'வென வாய்பிளந்து அவர்களின் அரட்டையைப் பார்த்துக் கொண்டிருந்தாள் சுசித்ரா..

'இப்படிக்கூட ஃபேமிலியில் பேசிச் சிரித்து அரட்டையடித்து என்ஜாய் பண்ண முடியுமா..?'

"போடா.. சிரித்துச் சிரித்து வயிறு வலிக்குது.." தம்பியை செல்லமாக கோபித்துக் கொண்டாள் வசுமதி..

"நிஷா.. குளிச்சுட்டியா.." அகிலன் மகளைக் கேட்க..

"அவளை நான் குளிக்க வைச்சுக்குவேன்.. நீங்க முதலில் குளிக்கப் போங்க.." கணவனை விரட்டினாள் வசுமதி..

"பார்த்து வைத்துக்க சுசித்ரா.. இவ தம்பியையும் நீ இப்படித்தான் டிரில் வாங்கனும்.." சுசித்ராவிடம் சொன்னான் அகிலன்..

"என்ன மாமா.. உசுப்பேத்தி விடறிங்களா..?" என்றான் வாசுதேவன்..

"ஆமாம் வாசு.. உங்க அக்கா என்னை விரட்டறாள்ல.. அதான் பழிக்குப் பழி..!" முஷ்டியைத் தட்டினான் அகிலன்.

"பார்த்துக்க அக்கா.."

"பார்த்துக்கிட்டுத்தாண்டா தம்பி இருக்கேன்.."

"பழிக்குப் பழியாம்.."

"யாரு..? இவரு..? பழிக்குப் பழி வாங்கப் போகிறாரு..? உனக்குக் கல்யாணமாகி ஒ...ரு.. நாளாச்சு.. நீயும் குடும்பஸ்தனா ஆகிட்ட.. இன்னுமாடா இதை நம்பற..?"

"அப்படிப் போடு ஏ.கே.47-ஐ.. ஹா.. ஹா.. மாமா.. அக்கா பேசினது காதில விழுந்துச்சா.."

"இங்கே சுத்தமா டவர் இல்லை வாசு.. கொர கொரன்னு இருக்கா.. என் காதில் எதுவும் விழுகலை.."

அகிலனின் சமர்த்தான பதிலில் சுசித்ராவுக்கே சிரிப்பு வந்து விட்டது..

"அண்ணா.." என்றபடி அவள் சிரிக்க..

"நீங்க குளிக்க வாங்க.." என்று அகிலனின் முதுகில் கை வைத்துத் தள்ளிக் கொண்டு போனாள் வசுமதி..

"அடுப்படியில் இந்த ரூபா என்னத்தை செய்து வைத்திருக்கிறாளோ.. இன்னும் கொஞ்ச நேரத்தில சம்பந்தி வீட்டில இருந்து மறுவீட்டு விருந்துக்கு அழைக்கன்னு வந்து விடுவாங்க.. நம்ம வீட்டு விருந்து ஒழுங்கா இருக்கனுமே.." கோதாவரி சமையலறைக்கு விரைந்தாள்..

"அயர்ன் பண்ணி வந்திருக்கிற துணிகளை அடுக்கி வைத்துவிட்டு வர்றேன்.." பூபதி நாசுக்காக அங்கிருந்து நகர்ந்து விட்டார்..

வாசுதேவனையும் சுசித்ராவையும் தனிமை சூழ்ந்தாலும் எந்த நேரமும் யாராவது வந்து விடுவார்கள் என்ற சூழல்..

வாசுதேவனின் கரம் சுசித்ராவின் தோள் மீது தவழ்ந்து ஊர்ந்து இறங்கியது.. சுசித்ரா நெருப்புப் பட்டவளைப் போலத் துள்ளித் தள்ளி அமர்ந்தாள்..

"ஏய்ய்.." கடுப்பானான் வாசுதேவன்..

"உங்களுக்கு கொஞ்சமாச்சும்.. 'இது' இருக்கா..?" சுசித்ராவின் கோபத்தில் அவனது கோபம் பறந்து விட்டது.

கணவனைக் கோபித்துக் கொள்ளும் மனைவியாக அவள் மாறியிருந்ததில் அவனுக்குள் ஆனந்த ஆலாபனை ஒலித்தது..

"'இது'ன்னா..?" வேண்டுமென்றே சீண்டினான்..

"இதுன்னா.. இதுதான்.." தெளிவாக விளக்கம் சொன்னாள் சுசித்ரா..

"ஓ.. நீ சொல்கிற 'இது'.. எது மேம்..?"

"இது ஹால்.."

"ஓ.. இதுதானா அது..?"

"ம்ப்த்சு.. குறுக்கே பேசாதீங்க.."

"நீ சொன்னா வாயைத் திறப்பேனா..?"

"குழந்தை, அண்ணா, அண்ணி, மாமா, அத்தைன்னு யாராச்சும் வந்துக்கிட்டே இருப்பாங்க.."

"அதுக்கு..?"

"கையையும், காலையும் கண்ட்ரோல் பண்ணிக்கனும்.. புரிந்ததா..?"

அவளது முயல்குட்டி பாதங்களின் மீது பதிந்து தடவிக் கொண்டிருந்த வாசுதேவனின் பாதங்களைத் தள்ளி விட்டபடி அவள் சொன்னாள்..

"அப்ப வெளியில் போய் விடலாம்.. வா.."

வாசுதேவன் கையைப் பிடித்து இழுக்க மறுக்க முடியாமல் அவனுடன் வாசல் பக்கமாக இருந்த வராண்டாவிற்குச் சென்றாள்.. பக்கத்து வீட்டின் மீது அவளது பார்வை போனது.. தோட்டத்தில் சிறுவனும், சிறுமியுமாக இரு குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.. சுசித்ரா வாசுதேவனைப் பார்க்க..

"பல்லவி பஜாரி காலி பண்ணின அன்றைக்கே இவங்க குடி வந்துட்டாங்க.. இவங்களுக்கு வீட்டை வாடகைக்கு விடப் பேசி முடித்து விட்டுத்தான் அந்த பஜாரிக்கு வீட்டைக் காலி பண்ணச் சொல்லி பிரசர் கொடுத்தேன்.." என்றான் அவன்..

34

சுசித்ராவுடனான திருமணம் உறுதியானதும் வாசுதேவன் செய்த முதல்வேலை பல்லவியை பக்கத்து வீட்டிலிருந்து துரத்தியதுதான்..

"அவளிடம் நம்ம மேரேஜைப் பற்றிச் சொல்ல வேண்டாம்.." என்று கடுமையாக சுசித்ராவை எச்சரித்து வைத்திருந்தான்..

"எப்படியும் அவங்களுக்குத் தெரிந்து விடும்.." சுசித்ரா பயந்தாள்..

"தெரியும்போது தெரியட்டும்.. அதைப் பற்றி யோசிக்காதே.."

"உங்க வீட்டுக்குப் பக்கத்து வீட்டிலதானே அவங்க இருக்காங்க.."

"இனி இருக்க மாட்டா.."

"அப்படின்னா..?"

"என்னையென்ன மாங்கா மடையன்னு நினைத்தியா..? பக்கத்து வீட்டில உன்னை பிளாக் மெயில் செய்துக்கிட்டு இருக்கிற பஜாரியை வைத்துக்கிட்டு உன்னோடு சந்தோசமா நான் வாழ்ந்து விட முடியுமா..? அவளை எங்கே வைக்கனுமோ அங்கே வைத்து விடுவேன்.."

சுசித்ராவுக்கும் வாசுதேவன் சொல்வதுதான் சரி என்று பட்டது... பல்லவிக்கு சுசித்ராவுக்கும் வாசுதேவனுக்கும் இடையில் நடந்து கொண்டிருந்த திருமணப் பேச்சு வார்த்தைகளைப் பற்றி எதுவும் தெரியாது.. அவள் வழக்கம்

போல சுசித்ரா தன் கட்டுப்பாட்டுக்குள்தான் இருக்கிறாள் என்றே நினைத்துக் கொண்டிருந்தாள்.. சுசித்ரா அவளுடைய குடும்பத்தை விட்டு ஒதுங்கி நிற்கிறாள், திருமணம் வேண்டாம் என்ற முடிவில் இருக்கிறாள், காலம் முழுவதும் பல்லவியைக் கண்கலங்காமல் வாழ வைப்பதை மட்டுமே தன் வாழ்வின் லட்சியமாக வைத்திருக்கிறாள் என்ற இறுமாப்புடன் இருந்தாள்.. அவளுடைய அப்போதைய தலைவேதனை பக்கத்து வீட்டு வாசுதேவனின் பார்வையில் படாமல் சுசித்ராவைத் தொலைதூரமாக நிற்க வைக்க வேண்டியது மட்டுமே..

பொதுவாக மனிதப்பிறவி ஒன்றை நினைத்தால் கடவுள் வேறு ஒன்றைத்தான் நினைப்பாராம்.. நல்ல மனிதருக்கே அந்தக் கதி எனும்போது பல்லவியைப் போன்ற இழிபிறவிகள் நினைப்பது எப்படி நிறைவேறும்..?

பல்லவி சூட்சுமப் புத்தி கொண்டவள்.. சாகசக்காரி.. ஒரு பார்வையிலேயே மனிதர்களின் மன உணர்வுகளை இனம் கண்டு விடுவாள்.. வாசுதேவனின் பார்வையில் சுசித்ராவின் மீதான தேடலும் மையலும் இருந்தன.. எவரிடமும் நின்று பேசாத சுசித்ராவோ அவனிடம் நின்று பேசினாள்.. இவையிரண்டும் நல்லதற்கு அல்ல என்று பல்லவி கணக்கிட்டு விட்டாள்..

அவளுக்குத் தெரியாது.. அவள் பக்கத்து வீட்டில் குடியிருப்பது நல்லதற்கு அல்ல என்று வாசுதேவன் முடிவெடுத்து விட்டது..

அந்த வீட்டில் குடியிருந்தால் சுசித்ரா பல்லவியைப் பார்க்க வந்து போகும்போது வாசுதேவனையும் பார்ப்பாள்.. அவர்களுக்குள் புதிதாக அன்பு, பிரியம், காதல் என்ற கண்றாவியெல்லாம் உருவாகித் தொலைத்து விடும் என்று பல்லவி வீடு மாற்றப் பறப்பாய் பறந்து கொண்டிருக்க காலம் சுசித்ராவையும், வாசுதேவனையும் அலுவல்

ரீதியாக சந்திக்க வைத்துத் தன் விளையாட்டை ஆரம்பித்து வைத்தது.. விதி சுசித்ராவையும், வாசுதேவனையும் வாழ்வில் ஒன்றாக்கி விடத் தீர்மானிக்க, வாசுதேவன்

பல்லவியை பக்கத்து வீட்டிலிருந்து துரத்தி விடத் தீர்மானித்து விட்டான்..

பல்லவியின் வீட்டுக்கு வரும் சுசித்ராவைச் சந்திப்பதற்காகத்தான் அவன் பல்லவியை வீட்டைக் காலி பண்ண விடாமல் விட்டு வைத்திருந்தான்.. அந்தத் தெரு முழுவதும் ஒன்றுகூடி பல்லவியை விரட்டி அடித்து விட வேண்டும் என்று கோசமிட்டுக் கொண்டிருந்த போது இவன் மட்டும் பக்கத்து வீட்டு நரசிம்மனின் போன் நம்பரைச் சொல்லாமல் போக்குக்காட்டித் தேக்கி வைத்திருந்தான்.. யாரை சந்திப்பதற்காக கேடு கெட்ட பல்லவியைத் துரத்த விடாமல் காத்து வந்தானோ அந்த சுசித்ரா அவனுக்கு மனைவியாகி அவன் கூடவே வாழ வரப் போகிறாள் என்று ஆகிவிட்ட பின்பு பல்லவி அவன் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் குடியிருக்கலாமா..?

'நரசிம்மன் அங்கிள், நரசிம்மன் அங்கிள்..' என்று அவன் போனைப் போட்டு பல்லவியைப் பற்றிய அத்தனை செய்திகளையும் பற்ற வைத்ததில் அந்த நல்ல மனிதர் கொதித்துப் போனார்..

"பகலெல்லாம் அக்கம் பக்கத்து வீடுகளில் சண்டை போடறா.. ராத்திரியானா பெரிய பெரிய கார்களா வந்து நிக்குது.. அதில ஏறி எங்கேயோ போயிட்டு, விடிஞ்ச பின்னாலே வந்து சேருகிறா.. நம்ம ஏரியாவின் பெயரே கெட்டு விடும் போல இருக்கு அங்கிள்.."

"ச்சே.. நல்ல குடும்பத்துப் பெண் ஒன்று வீட்டை வாடகைக்குக் கேட்டது.. பெரிய குடும்பத்துப் பெண்.."

"ஐ நோ.. ஐ நோ.. ஷி இஸ் எஸ்.எஸ். குரூப்ஸ் ஆஃப் கம்பெனி எம்.டி'ஸ் டாட்டர்.."

"யெஸ்.. யெஸ்.. அந்தப் பெண் ரெக்கமெண்ட் பண்ணினதாலதான் நான் வீட்டைக் கொடுத்தேன்.. அவங்க உறவுக்காரப்பெண்ணுன்னு நினைத்தேன்.."

"நோ அங்கிள்.. ஷி இஸ் இன்னொஸென்ட்.. அவளோட பிரண்ட் ஒருத்திக்காகத்தான் உங்களிடம் பேசியிருக்கிறா..

அந்த பிரண்ட் என்னடான்னா

இந்த பஜாரியைக் குடி வைத்துட்டா, இவளுக்கும் சுசித்ராவிற்கும் எந்தவித சம்பந்தமுமில்லை.."

"சுசித்ராதான் அவங்க பெயர்.. அந்தப் பெண்ணை உங்களுக்குப் பெர்சனலாத் தெரியுமா வாசு..?"

"யெஸ் அங்கிள்.. ஷி இஸ் மை வுட்-பி.."

"ஓ.. வித் பிளசர்.. அட்வான்ஸ் கங்கிராஜீலேசன்ஸ் வாசு.."

"தேங்க் யு அங்கிள்.. வீட்டைக் காலி பண்ணச் சொல்லி அந்தப் பல்லவியிடமே பேசி விடுங்கள் அங்கிள்.. இதில் சுசித்ராவை கமிட் பண்ண வேண்டாம்.. அவள் பாவம்.. பிரண்டுக்காக உதவி செய்தாள்.. அந்த பிரண்ட் உங்களைப் போல ஃபாரினில் இருக்கிறவளாம்.. சென்னைக்குத் திரும்பப் போகிறேன் சுசித்ரா.. ஒரு வீடு பார்த்துக் கொடுன்னு கேட்டாளாம்.. இவளும் யதார்த்தமாக நெட்டில் சர்ச் பண்ணி உங்க வீட்டைப் பேசி முடித்திருக்கிறாள்.. அந்த பிரண்ட் என்னடான்னா இப்போதைக்கு நான் இந்தியாவுக்குத் திரும்பலை.. என் பிரண்டோட பிரண்ட் இருந்துக்கட்டும்ன்னு சொல்லி இந்தப் பல்லவியை குடி வைத்துட்டா.."

"இவ்வளவு நடந்திருக்கா..? ஹவுஸ் ஓனரிடம் ஒரு வார்த்தை சொல்லனும்னு தோணியிருக்கா பாருங்க.. யாருக்கோ பார்த்த வீட்டில் யாரோ ஒருத்தி குடி வந்திருக்கா.."

"டோன்ட் ஒர்ரி அங்கிள்.. பக்கத்து வீடுன்னு நாங்க எதுக்கு இருக்கிறோம்..? உங்க வீட்டைப் பார்த்துக்க நாங்களாச்சு.. இந்த பல்லவி வீட்டைக் காலி பண்ணிக் கொடுத்துட்டா உடனே குடி வர ஒரு ஃபேமிலி ரெடியா இருக்காங்க.. ஹஸ்பெண்டு அண்டு வொய்ப், இரண்டு குழந்தைகள்.. ஹஸ்பெண்ட் பேங்க் மேனேஜர்.. அவரோட வொய்ப் கஸ்டம்ஸ் ஆபிசர்.. குழந்தைகள் இரண்டு பேரும் நம்ம ஏரியா கான்வென்டில படிக்கிறதால இந்த ஏரியாவில வீடு வேண்டும்ன்னு ஒரு மாதமா அலைகிறாங்க..

நான் உங்க வீட்டைப் பற்றிச் சொன்னதும் உடனே அட்வான்ஸை எடுத்து நீட்டிட்டாங்க.."

"தேங்க்ஸ் ஃபார் திஸ் ஹெல்ப் வாசு.. அட்வான்ஸை வாங்கிருங்க.. அந்தப் பல்லவிக்கு கொடுக்க வேண்டிய அட்வான்ஸ் பாக்கியைக் கொடுத்து செட்டில் பண்ணிட்டு மீதியை என் பேங்க் அக்கவுண்டில் கிரெடிட் பண்ணிருங்க.."

"ஓகே அங்கிள்.. வாடகை அறுபதாயிரம் அட்வான்ஸ் ஆறு லட்சம்.."

வாசுதேவன் சொன்ன விவரத்தில் மகிழ்ந்து போனார் நரசிம்மன்.. வாடகை கூடுதலாக பத்தாயிரம்.. அட்வான்ஸும் கூடுதலாக ஒரு லட்சம் எனும் போது கரும்பு தின்ன அவருக்குக் கசக்குமா..? உடனே பல்லவிக்குப் போனைப் போட்டு அவர் கட்டி ஏற.. அதற்காகவே காத்திருந்த பல்லவி அவள் ஸ்டைலில் கத்து கத்து எனக் கத்தி விட்டாள்..

"என் லைஃபில இப்படியொரு லோக்கல் லாங்வேஜை நான் கேட்டதே இல்லை வாசு.. கூவத்தை மணக்க செய்திட்டா அந்தப் பல்லவி.. இப்படி கலீஜா இருக்காளே.." நரசிம்மன் புலம்பிய புலம்பலில் வாசுதேவனுக்கு பாவமாகி விட்டது..

"விடுங்க அங்கிள்.. இதுவும் ஒர் எக்ஸ்பிரியன்ஸ்ன்னு கிராஸ் பண்ணிட்டு இக்னோர் பண்ணிடுங்க.. வீட்டைக் காலி பண்ணச் சொல்லி ஹவுஸ் ஓனரா இன்பார்ம் பண்ணிட்டிங்க இல்லையா.. அது போதும்.. இனி அவளைக் காலி பண்ணிட்டு நான் சொன்ன ஃபேமிலியைக் குடி வைக்க வேண்டியது என்னோட பொறுப்பு.." வாசுதேவன் அபயமளித்தான்..

"ஸாரி வாசு.. என்னுடைய கவனக் குறைவினால பக்கத்து வீட்டில் இப்படியொரு பெண்ணை சகித்துக் கொண்டதுமில்லாம அவளைக் காலி பண்ண வைக்கிற வேலையையும் செய்யப் போகிறீங்க.. என்னால்தானே இத்தனை துன்பம்..." உண்மையாக வருந்தினார்நரசிம்மன்..

'உங்களால் மட்டுமில்லை அங்கிள்.. சுசித்ராவினாலும் தான் இத்தனை துன்பம்..'

சொல்ல நினைத்ததை சொல்ல முடியாமல் மென்று விழுங்கி விட்டு..

"இதுக்கெல்லாம் ஸாரி சொன்னா என்னை நீங்க தேர்டு பெர்சனா நினைக்கறீங்கன்னு அர்த்தமாகிரும் அங்கிள்.. வேண்டாம்.. நான் செய்யாம வேறு யார் செய்வாங்க..?" இரு பொருள்பட நரசிம்மனிடம் கேட்டு விட்டு பல்லவியிடம் ஹோதாவில் இறங்கப் போனான் வாசுதேவன்..

திறந்திருந்த வீட்டுக் கதவை இவன் வேண்டுமென்றே காலால் ஓங்கி ஒரு உதை விட்டு விட்டு உள்ளே போக..

"யாரைக் கேட்டு வீட்டுக்குள்ள வந்திருக்க..?" என்று கத்த ஆரம்பித்து விட்டாள் பல்லவி..

"மூச்.." என்று அவளை அடக்கியவன்..

"உன் ஆட்டத்தையெல்லாம் வேறு எங்காவது வைத்துக்க.. ஒழுங்கு மரியாதையா நாளைக்கு மதியத்துக்குள்ள வீட்டைக் காலி பண்ணலேன்னு வைய்யி.. ஒட்டு மொத்தத் திங்ஸையும் தூக்கித் தெருவில் எறிந்து விடுவேன்.. உன்னையும் சேர்த்துத்தான் சொல்றேன்.. நீயெல்லாம் மனிதப் பிறவியிலே சேர்த்தியே இல்லை.." என்று அருசையாக அவளைப் பார்த்தான்.

பல்லவிக்கு ரத்த அழுத்தம் எகிறியது..

"நான் போலிசுக்குப் போவேன்.." என்று குதித்தாள்..

"போ.. ஆல்ரெடி இந்த ஏரியா பீப்புள் உன்னைப் பத்திக் கம்ப்ளெயிண்ட் கொடுத்திருக்காங்க.. யார் அந்த ராத்திரி நேர மோகினின்னு பார்க்க அவங்களும் ஆவலாத்தான் இருக்காங்க.. நீ அவங்களைக் கூப்பிட்டா அவங்களும் வந்து உன் மூஞ்சியைப் பார்த்துட்டு இந்த தகரடப்பாவுக்கா தினசரி பெரிய பெரிய காரா வந்து நிக்குதுன்னு தலையில அடித்துக்கத் தோதா இருக்கும்.. கூப்பிடு.." அங்கிருந்த

சோபாவில் கால்மீது கால் போட்டு அமர்ந்து விட்டான் வாசுதேவன்..

'தங்கம் நான்.. தகரடப்பான்னு சொல்றானே..'

பல்லவிக்கு நெஞ்சுவலியே வந்து விட்டது.. அவள்..

"சுசீ.." என்று செல்போனில் அலற.. வாசுதேவன் வெளியில் வந்து விட்டான்..

அவனுடைய சுசித்ரா உடனே 'வாசு..' என்று இவனிடம்தானே அலறுவாள்..? அவளும் செல்போனில் அலறினாள்..

"கவலைப்படாதே கண்ணம்மா.. இந்த பஜாரிக்குத் தோதா பஜார் பக்கமா வீடு பார்த்து அட்வான்ஸ் கொடுத்துத் தயாரா வைச்சிருக்கேன்.. வீடு பெரிசா இருக்கும்.. ஏரியாதான் தலைவேதனை பிடித்த ஏரியா.. இதுக்கு அதுதான் லாயக்கு.. வாடகையும் இருபதாயிரம்தான்.."

"அண்ணி ஒப்புக்கனுமே.."

"எல்லாம் ஒப்புக்கும்.. பாக்கறதுக்கு வீடு பளபளன்னு இருந்தா இதுக்குப் போதாதா..? புது வீடு.. மூச்சு விடாது.."

"அட்வான்ஸ் எவ்வளவு கொடுத்தீங்க..?"

"இரண்டு லட்சம்தான்.."

"உங்க பேங்க் அக்கௌண்ட் நம்பர் சொன்னா கிரெடிட் பண்ணிவிடுகிறேன்.. எனக்காக நீங்க செலவு செய்யலாம்.. நான் சுமக்கிற சுமைக்காக செலவு செய்யக் கூடாது.."

"இந்த ஈர ஆனியனெல்லாம் எனக்கும் தெரியும்.. பக்கத்து வீட்டு பஜாரி பட்டருக்கு செலவு செய்ய நான் என்ன கேனையா..? ஒற்றைப் பைசா ஈய மாட்டேன்.. அட்வான்ஸ் பணத்தை பக்கத்து வீட்டுக்கு நரசிம்மன் அங்கிள வாங்கியிருக்கிற அட்வான்ஸ் பணத்தில் இருந்து கழித்துக்குவேன்.. இன்றைக்கு தேதி இரண்டுதானே..? நேற்றைக்கே நீ போன மாத வாடகைப் பணத்தை

நரசிம்மன் அங்கிளோட பேங்க் அக்கவுண்டில் கட்டியிருப்பதானே..?"

"மணி டிரான்ஸ்பர் பண்ணிட்டேன்.."

"குட்.. அட்வான்ஸ் ஐந்து லட்சத்தில் இரண்டு லட்சம் போக மூன்று லட்சம் பேலன்ஸ் என்னிடம் இருக்கும்.."

"தேங்க்ஸ் வாசு.."

"ஆமாண்டி.. நான் தெருவில் போகிறவன் பாரு.. தேங்க்ஸ் சொல்லு.."

"ஸாரி.. ஸாரி.."

"இதுவும் வேண்டாம்.. புரிந்ததா.. உனக்கும் எனக்கும் இடையில் இந்த தேங்க்ஸ், ஸாரியெல்லாம் வர வேண்டாம் சுசித்ரா.."

"சுசின்னு கூப்பிடலாமே.."

"கூப்பிடலாம்தான்.. கூப்பிடனும்னு எனக்கும் ஆசைதான்.. ஆனா பக்கத்து வீட்டுப் பஜாரி உன்னை 'சுசி'ன்னு கூப்பிட்டுத் தொலைக்கிறாளே.. சுசின்னு சொல்லும் போதெல்லாம் அவ கூப்பிடும் பெயராச்சேன்னு நினைவுக்கு வந்து தொலைக்கும்.. எதுக்கு தொல்லை..? ஊம்..? இரண்டு எழுத்தைக் குறைத்துக் கூப்பிடாமல்.. 'சுசித்ரா'ன்னு அழகான உன் பெயரை முழுசாச் சொல்லிக் கூப்பிட்டு விடலாமே.. அது என்ன ஆரவள்ளி சூரவள்ளி அம்புஜவள்ளிங்கிறதைப் போல அவ்வளவு நீளமான பெயரா..?"

"களுக்.."

சுசித்ரா சிரித்து விட்டாள் என்பதில் வாசுதேவன் மனம் கனிந்தான்..

'மனம் கனிவான - இந்தக்

கன்னியைக் கண்டால்

கல்லும் கனியாகும்..'

அவன் மனம் பாடியது... பல்லவி ஏன் கனியவில்லை..?

'அவளையெல்லாம் கல்லோடு இணை சேர்த்தா பாறாங்கல்லுக்கே கோபம் வந்து மண்டையைப் பிளக்க வந்து விடும்..'

"லாரிக்கு போன் பண்ணனும்.."

"அதை எங்க ஏரியாக்காரங்க பார்த்துக்குவாங்க.. இவளை துரத்திவிட எப்போ எப்போன்னு காத்துக்கிட்டு இருக்காங்க.. அப்புறம் சுசித்ரா.. வாடகை இருபதாயிரம் தான்னு பஜாரியிடம் சொல்லி விடாதே.. இந்த வீட்டைப் போல ஐம்பதாயிரம் வாடகை.. ஐந்து லட்சம் அட்வான்ஸ்ன்னு சொல்லு.."

"ஏன்..?"

"உனக்கெல்லாம் அறிவுங்கிறதே இல்லையா..? அவ யாரு உன் வரவு செலவைக் கணக்குப் பார்க்க.. அடுத்தவர் உழைப்பைச் சுரண்டித் திங்கிற பித்தலாட்டக்காரியிடம் உண்மை பேசனுமா..?"

வாசுதேவனின் கோபத்துக்கு அஞ்சிய சுசித்ரா அரை மனதாக..

"சரி" என்றாள்..

"அவளுக்கு வாங்கிக் கொடுத்திருக்கிற கார் டியு எத்தனை பாக்கியிருக்கு..?"

"ஏறக்குறைய முடிந்துருச்சு.. இரண்டு லட்சம் பேலன்ஸ் இருக்கும்.."

"மீதமிருக்கும் மூன்று லட்சத்தில் இரண்டு லட்சத்தை அதுக்குக் கட்டி விடறேன்.. மறக்காம 'நோ டியு' சர்ட்டிபிகேட்டை வாங்கி வைத்துக்க.. நீ கடன்காரியாய் இருக்கக் கூடாது.."

"ஓ.. தேங்க்ஸ்.." உற்சாகத்துடன் சொல்லிவிட்டு..

"தேங்க்ஸ் சொல்லக் கூடாதுல்ல.. ஸாரி.. ஸாரி.." என்றாள் சுசித்ரா..

"ஸாரியும் சொல்லக் கூடாது.. கார் டியு முடிந்து விட்டதை பஜாரியிடமும் சொல்லக்கூடாது.. அவ உடனே அடுத்த கடனில் உன்னை மாட்டி விட்டிருவா.."

"ஆமாமாம்.. சொல்ல மாட்டேன்.."

"குட்.."

இப்போதைக்கு சுசித்ராவின் சம்பளத்தில் எண்பதாயிரம் ரூபாயைக் காப்பாற்றிக் கொடுத்தாகி விட்டது.. பல்லவி சம்பந்தமான அதிரடி நடவடிக்கைகளைத் திருமணத்திற்குப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்ற நினைவுடன் அன்று மாலைக்குள் பல்லவியை ஏரியா விட்டு ஏரியா கடத்தி விட்டான் வாசுதேவன்..

35

'இந்நேரம் பல்லவிக்கு சுசித்ராவுக்குக் கல்யாணமாகி விட்டது.. அதுவும் எனக்கு மனைவியாகி விட்டாள் என்கிற விவரம் தெரிந்திருக்கும்..'

வாசுதேவன் நினைத்து முடிப்பதற்குள் சுசித்ராவின் செல்போன் ஒலித்தது.. எடுத்துப் பார்த்தவள் மிரண்டு விழித்தாள்..

"அண்ணி.." என்றாள்..

"இங்கே கொடு.." என்று சுசித்ராவின் செல்போனை வாங்கிய வாசுதேவன்.. பல்லவியின் செல்போன் எண்களைத் தன் செல்போனில் பதிந்து கொண்டு சுசித்ராவின் செல்போனை அணைத்து அதிலிருந்த சிம் கார்டை வெளியில் எடுத்து விட்டான்..

"என்ன செய்கிறீங்க.." பதறிய சுசித்ராவை..

"உஸ்ஸ்.." என்று வாயில் ஒற்றை விரலை வைத்து அடக்கி விட்டு..

"இந்த சிம் என்னிடம் இருக்கும்.. உனக்கு வேற சிம்மை வாங்கித் தரேன்.. இம்பார்ட்டன்ஸ் மெம்பர்ஸீக்கு புது நம்பரை அனௌன்ஸ் பண்ணி விடு.." என்றான்..

"அண்ணி..?"

"அந்த பஜாரிக்கு உன் போன் நம்பர் தெரியவே கூடாது.."

"அவங்களைப் பார்க்க நான் போகும் போது கேட்டு வாங்கிக்குவாங்களே.. நான் கொடுக்கலைன்னா என் செல்போனை பிடுங்கி நம்பரைத் தெரிந்துக்குவாங்க.. மன்த்லி ஒன்ஸ் சிம் கார்டை மாற்றிக்கிட்டு இருக்க முடியுமா..?"

"உன்னை மாற்றிக்க.. அது போதும்.. முதல்ல கண்ட பஜாரியையெல்லாம் அண்ணி முறை சொல்லிக் கூப்பிடுவதை நிறுத்து.. உன் நாத்தனார் வீட்டுக்குள்ள இருக்காங்க.. அண்டர்ஸ்டாண்ட்.."

வாசுதேவன் கண்கள் சிவந்ததில் நடுங்கிப் போனாள் சுசித்ரா.. அவனது சினத்திற்கான காரணத்தை அவளது பெண்மை புரிந்து கொண்டது.. வாசுதேவன்தான்

அவளது கணவன்.. பிரசன்னா அல்ல.. அவன் அதை அறிவுறுத்துகிறான்..

"அண்ணியாம் அண்ணி.. யாருடி உனக்கு அண்ணி..?"

"ப்ளீஸ்.. கோபப்படாதீங்க.. அவங்க என்னை நம்பி இருக்காங்க.."

"அதை நான் பார்த்துக்கறேன்.."

வாதேவன் பல்லவியை போனில் அழைத்தான்.. அது வாசுதேவனின் போன் அழைப்பு என்று தெரியாமல்..

"ஹலோ.." என்று குழைந்தாள் பல்லவி..

"இந்தா பாரு.. சுசித்ரா என்னுடைய வொய்ப்.. அவளை போனில் கூப்பிடுகிற வேலையை எல்லாம் வைத்துக்காதே.. என் வொய்ப் உன்னை மாதிரி பஜாரிகள் கூடப் பழக்கம் வைத்துக்கிறதை நானும் விரும்ப மாட்டேன்..

என் ஃபேமிலியும் விரும்ப மாட்டாங்க.." கடுமையாகப் பேசினான் வாசுதேவன்..

"அதைத்தான் நானும் அவளிடம் கேட்கனும்.. எப்படி அவ உன்னைக் கல்யாணம் பண்ணிக்கலாம்.. இந்தப் பல்லவி என்ன கேணையா..? என்னை ஏமாத்த பிளான் பண்ணியிருக்காளா..?"

"அடிங்.. யாரு யாரை ஏமாத்தப் பிளான் போட்டிருக்கிறது..? அவளென்ன உனக்குக் கொத்தடிமையா..? ராணி.. மகாராணி.. அவளிடம் நீ கொத்தடிமையாய் இருக்கக் கூட தகுதியில்லாதவ.." வாசுதேவன் கொதித்தான்..

"ஏய்.." பல்லவி அலறினாள்..

"ஏய், கீய்ன்னு கத்தின.. பல்லைத் தட்டிக் கையில் கொடுத்து விடுவேன்.. மரியாதையாய் பேசிப்பழகு.. என்ன..? சவுண்டெல்லாம் பலமா இருக்கு..?"

"நீ போனை அவகிட்டக் கொடு.. அவ போன் ஸ்விட்ச் ஆஃப்ன்னு வருது.. என்ன..? சிம்மை மாத்திட்டாளா..?"

"கண்டு பிடிச்சிட்டயேன்னு சொல்ல மாட்டேன்.. இதைக் கூடக் கண்டு பிடிக்கலைன்னா நீயெல்லாம் என்ன கிரிமினல்..? கிரிமினலிலயும் கிரிமினல்.. நீ கடைந்தெடுத்த கிரிமினலாச்சே.. அதென்ன என் வொய்பை அவ, இவன்னு பேசற..? அவ யாருன்னு தெரியுமில்ல.. அவ தயவில உட்கார்ந்து சாப்பிட்டுக்கிட்டு எவ்வளவு ஏத்தம் உனக்கு.. அவங்க இவங்கன்னு பேசிப் பழகு.. இல்லைன்னா நடக்கறதே வேற.. நான் ஆக்சன் எடுத்தேன்னா உன்னைக் காப்பாற்ற ஒருத்தன் கூட வர மாட்டான்.."

வாசுதேவனின் கோபத்தில் மறுமுனை அமைதியானது.. பல்லவிக்குத் திகில் பிடித்திருக்க வேண்டும்..

"நான் சுசியிடம் பேசனும்.." பொத்தாம் பொதுவாகச் சொன்னாள்..

"அவளிடம் உன்னால் பேச முடியாது.. எதுவாக இருந்தாலும் என்னிடம்தான் நீ பேசியாகனும்.."

"உன்னிடம் பேசனுமா..? ஏன் பேசனும்..? எதுக்குப் பேசனும்..? உனக்கும் எனக்கும் பேச்சில்லை.."

"அவளுக்கும் உனக்கும் மட்டும் என்ன பேச்சு..? அவளிடம் நீ பணத்தைக் கொடுத்துக் கிடுத்து வைத்திருக்கியா..? உட்கார்ந்து தின்கிறது ஓசிச் சோறு.. அய்யோ பாவமே.. அனாதையாய் நிற்கறியேன்னு இருக்க வீடு பாத்துக் கொடுத்து சாப்பாட்டுக்குப் பணம் கொடுத்தா.. நீ தலைக்கு மேலேயா ஏறி நிற்கிற..? தொலைத்து விடுவேன் தொலைத்து.."

"வாசு.."

"பெயரைச் சொல்லிக் கூப்பிடாதே.. எனக்கு நீதான் பெயர் வைத்தியா..? ஆளைப் பாரு.. இதில வேற, வா, போன்னு பேசற.. நான் யார், என் லெவல் என்னன்னு உனக்குத் தெரியுமா..? உன்னை மாதிரி ஆள்களிடம் நாங்க நின்று கூடப் பேச மாட்டோம்.. போனால் போகுதுன்னு பேசினா வா, போங்கிற.. நான் யாருன்னு காட்டினாத் தாங்க மாட்டே.. பார்த்துக்க.."

பல்லவி ஆடிப் போய்விட்டாள் ஆடி.. சுசித்ராவிடமும் பேச வழியில்லை.. அவள் வாசுதேவனிடம்தான் பேசியாக வேண்டும் என்ற நிலையில் வாயைக் கட்டுப் படுத்திக் கொண்டாள்..

"நான் சுசியைப் பார்க்க வேண்டும்.."

"உன்னையெல்லாம் அவள் பார்க்க வரமாட்டாள்.."

"அப்போ என் கதி..?"

"உன் கதிக்கு என்ன குறைச்சல்.. உட்கார்ந்து திங்க சாப்பாடு.. செலவளிக்கப் பணம்.. இருக்க வீடு.. ஊர் சுத்தக் கார்ன்னு உல்லாசமாத்தானே இருக்கிற..?"

"எனக்கு உடம்பு சரியில்லை.."

"டாக்டரிடம் போ.."

"போனேன்.. அவங்க ஹார்ட் பிராப்ளம்ன்னு சொல்கிறாங்க.. சர்சரி பண்ணனுமாம்.. அதுக்குப் பதினைந்து லட்சம் ஆகுமாம்.."

'ஆஹா.. இவ லட்சக்கணக்கில பணத்தைப் பிடுங்கப் பிளான் போடறா..' வாசுதேவன் உஷாராகி விட்டான்..

எதிரே கவலையுடன் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த சுசித்ராவுக்குத் தெரியாமல் போன் பேசுவதைப் போல போனை சுவிட்ச் ஆஃப் செய்தான்..

"அப்படியா.. வெறும் வாயு பிராப்ளம்ன்னு சொன்னாங்களா.. அளவோடு திங்கனும்.. என்னது.. சுசித்ராவுக்கு வாழ்த்துச் சொல்லனுமா..? அதை நான் சொல்லிக்குவேன்.. உனக்கு வர வேண்டிய உதவி வந்துக்கிட்டே இருக்கும்.. சுசித்ரா வரமாட்டா.. அவ சார்பில் நான் வந்து வீட்டு வாடகையைக் கொடுத்து செலவுக்குப் பணமும் கொடுத்துவிட்டு வருவேன்.. நன்றியா..? அட.. நீ நன்றி கூடச் சொல்வியா..? என்னவோ போ.. போன ஜென்மத்தில என் வொய்ப் உனக்குக் கடன்பட்டிருக்கா போல இருக்கு.. இந்த ஜென்மத்தில கொடுத்துக்கிட்டு இருக்கா.. பிழைத்துப் போ.."

அப்போதுதான் செல்போனை அணைப்பதைப் போல பாவனை செய்தபடி சுசித்ராவைப் பார்த்தான்..

"என்னவாம்..?" கவலையுடன் அவள் கேட்டாள்..

"வேறு என்ன..? நான் சொன்னதுக்கு ஒப்புக்கிட்டா.. நான் சொல்லலை.. இதுகளுக்கு ஓசியில எல்லாம் கிடைத்தா போதும்.. அது நின்று விடுமோன்னு பயம் வந்தா சல்யூட் வைத்துக்கிட்டு அடங்கிருவாங்க.."

"என்னைப் பார்க்கனும்னு சொல்லலையா..?"

"இல்லையே.. உன்னைப் பார்த்து அவளுக்கென்ன ஆகப் போகிறது..? அவளுக்குத் தேவையானது பணம்.. வசதியான வாழ்க்கை.. அதை நீ கொடுத்தால் என்ன.. நான் கொடுத்தால் என்ன..?"

"என்னது..?"

சுசித்ரா உக்கிரமானாள்.. அவள் எதற்காக உக்கிரமாகிறாள் என்று புரியாமல் விழித்தான் வாசுதேவன்.. அவன் ஒன்றும் குற்றமாக எதையும் சொல்லி விடவில்லையே.. அப்புறம் எதற்காக அவன் மனைவி அவனை அக்கினி பார்வை பார்க்கிறாள்..?

"என்னடி..?"

"உங்களை உத்தமர்ன்னு நினைத்தேன்.."

"ஆஹா.. அப்படியே நினை.. நான் உத்தம புருசன்தான்.. அதில் உனக்கு என்னடி சந்தேகம்..?"

"பல்லவிக்கு நீங்க வாழ்க்கை கொடுக்கப் போகிறீங்களா..?"

"அவளுக்கு..? நான் வாழ்க்கை கொடுக்கப் போகிறேனா..? அடச்சீ.. வாயை டெட்டால் போட்டுக் கழுவு.. அம்மா காதில் மட்டும் இது விழுந்திருந்தது.. ஹார்ட் அட்டாக் கன்பர்ம்.. போயும் போயும் அவகூட என்னைக் கோர்த்து விடறியே.. உனக்கே இது அடுக்குமா சுசித்ரா..? உன்புத்தி ஏன் இப்படிப் போகுது..?"

வாசுதேவன் தலையில் அடித்துக் கொண்டான்.. சுசித்ரா சமாதானம் ஆகாமல் உதட்டைக் கடித்தபடி அவனுக்குப் புறமுதுகு காட்டித் திரும்பி நின்று கொண்டாள்.. அவளது பொறாமையிலும் உரிமை பாராட்டிய கோபத்திலும் அவன் மனதில் மழைச்சாரல் அடித்தது.. பல்லவியைப் பற்றி அவனிடம் பேசும் போது அண்ணி என்று சொல்லி விட்டு வாங்கிக் கட்டிக் கொள்கிறவள்.. 'பல்லவி' என்று பெயர் சொல்லி அவனிடம் சண்டைக்கு வருகிறாள்.. கணவன் என்று வரும்போது இந்தப் பெண்கள்தான் எப்பேற்பட்ட போராளிகளாக மாறி விடுகிறார்கள்..

"ஏய்ய்.."

அவனுக்கு முதுகு காட்டி நின்றிருந்தவளின் தோளைத் தொட்டான்.. சுசித்ரா சிலிர்த்தாள்.. இவன் உடலுக்குள் உஷ்ணம் பரவியது.. நெருங்கி அவளது உடல்மீது இவனது

உடல் முழுவதும் படிய ஒட்டி உரசியபடி நின்றான்.. அவனது வெப்ப மூச்சுக் காற்று அவளது பின்னங் கழுத்தைச் சுட்டது.. சுசித்ரா போர்டிகோவைத் தாங்கி நின்ற தூணில் முகம் பதித்து விலக முயன்றாள்.. அவன் விடவில்லை.. அவனது கரங்கள் அவளை சுற்றி வளைத்து சிறை செய்தன.. குனிந்து அவளது பின்னங் கழுத்தில் முத்தமிட்டான்.. தொய்ந்து தூணின் மீது சாய்ந்து விட்ட சுசித்ராவின் உடல் நடுங்கியது.. அவளைத் தன் பக்கம் திருப்பியவன் அவளது முகத்தை விரலால் நிமிர்த்தி பார்த்தான்.. இமைகள் படபடக்க விழி மூடி நின்றவளின் தோற்றம் மலர்போல இருந்தது.. வாசுதேவன் மயங்கிப் போனான்..

'அன்பே..! நீ அனிச்ச மலர்..!'

குனிந்து மென்மையாக அவளது இமைகளில் இதழ் பதித்தான்.. கிறங்கி நின்றாள் சுசித்ரா.. அவனது இதழ்கள் அவளது கன்னத்திலும் பதிந்ததில் தாள மாட்டாமல் அவனது மார்பில் முகம் புதைத்தாள்.. அவளது மனதை வென்றுவிட்ட மமதையுடன் கட்டித் தழுவி அவளது காதோரமாக கிசுகிசுத்தான் வாசுதேவன்..

"சுசித்ரா... நான் உன்னை எவ்வளவு காதலிக்கிறேன்னு உனக்குத் தெரியுமா..?" அவனது குரல் கரகரத்தது..

சுசித்ராவிடமிருந்து பதில் வரவில்லை.. மாறாக அவனது சட்டைதான் நனைந்தது.. துணுக்குற்று அவளது முகத்தை நிமிர்த்தினான்.. கண்ணீருடன் அவன் முகத்தைப் பார்க்க முடியாமல் தடுமாறினாள் அவள்..

"ஏய்ய்.. என்னடி ஆச்சு..? நான் காதல் சொன்னது பிடிக்கலையா..?" கோபத்துடன் கேட்டான்..

துடித்துப்போன சுசித்ரா அவசரமாகக் கையை உயர்த்தி அவனது வாயைப் பொத்தினாள்.. அவளது விழிகள் மன்றாடின.. அவள் துடித்த துடிப்பில் அவனது கோபம் தணிந்தது..

"பின்னே.. எதுக்காக அழுகிற..?" அதட்டினான்..

"இல்லை.." சொல்ல வந்ததை சொல்ல முடியாமல் அவள் தடுமாறினாள்..

"என்ன இல்லை..?" அவன் விடவில்லை..

"உங்கள் காதல் உன்னதமானது வாசு.. இந்தக் காதலுக்கு நான் தகுதியானவள்தானா..?" சுசித்ராவின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது..

"அடித்தேன்னா.. பாரு.." அவளை இறுக்கி அணைத்துக் கொண்டான் வாசுதேவன்..

சுசித்ரா மறுப்புச் சொல்லாமல் அவனது கைகளில் அடங்கி மார்பில் ஒன்றிக் கொண்டாள்.. அதில் வாசுதேவன் சந்தோசம் கொண்டான்... அவளது காதோரமாக முத்தமிட்டு..

"நீயே உன்னதமானவள்.." என்றான்..

"ஆனால் பல்லவி.. பிரசன்னா.."

"ஒருநாள் எல்லாவற்றையும் உனக்குப் புரிய வைப்பேன் சுசித்ரா.. என்னை நம்பு.. இவர்களைப் பற்றிய பிரச்னையை என்னிடம் விட்டு விடு.. நீ பல்லவியைப் பார்க்கவோ, பேசவோ கூடாது.. நம் குடும்பத்துக்கு அது பிடிக்காது.. உன்னைத்தான் நான் கல்யாணம் பண்ணிக்குவேன்னு சொன்னபோது நீயேன் அந்த பஜாரியை அண்ணின்னு கூப்பிட்ட.. ஏன் அவ வீட்டுக்கு வந்து போனன்னு ஆயிரத்தைந்து கேள்விகள் கேட்டாங்க.. அம்மா நெஞ்சைப் பிடித்துக்கிட்டு உட்கார்ந்துட்டாங்க.. நீ பாவம் பார்த்து உதவி செய்கிற.. மத்தபடி அவளுக்கும் உனக்கும் எந்த விதச் சம்பந்தமுமில்ல.. உன் பிரண்டுக்கு அவ சொந்தம்ன்னு வாயில் வந்ததைச் சொல்லிச் சமாளித்து வைத்திருக்கேன்.. அதை உண்மையாக்கனும்னா நீ அந்த பஜாரி இருக்கிற பக்கம் கூட தலை வைத்துப் படுக்கக் கூடாது.."

"நீங்க போவிங்களே.."

"வேற என்ன செய்து தொலைக்கிறது..? நீ இழுத்து வைத்திருக்கும் வினை.. சரிக்கட்டித்தானே ஆகனும்.."

"அவங்க ஒரு மாதிரி டைம்.."

"உன் புருசன் ஒழுக்கமான டைப்.. அதனால ஒரு டைப்பான சந்தேகங்களையெல்லாம் மூட்டை கட்டித் தூரப் போட்டுட்டு மறுவீட்டு விருந்துக்குப் போக தயாராகு.. இன்றைக்கும் நாளைக்கும் உன் வீட்டு விருந்து.. நாளைக்கு மறுநாள் எங்க ஊர் குலதெய்வ கோவிலில் பொங்கல் வைக்கப் போகனும்.. வீக் எண்டில் நாம ஹனிமூன் கிளம்பியாகனும்.."

வாசுதேவன் வகுத்த நிகழ்ச்சி நிரலில் பல்லவியை மறந்து விட்டாள் சுசித்ரா.. பாவம் அவள்.. உற்சாகத்திற்கு ஏங்கியவள்.. துள்ளித் திரியும் இள வயதில் தேவையற்ற குற்ற உணர்வுகளால் அடிமைப் படுத்தப்பட்டு வாழ்வை சுமைதாங்கியாய் வாழ்ந்து கொண்டிருந்தவள்.. இன்று வாசுதேவன் அந்தச் சுமையை இறக்கி விட்டு

அவளை விடுவித்து விட்டதில் விட்டுச் சிறகடிக்கும் சிட்டுக்குருவியின் மனநிலைக்கு வந்து விட்டாள்.. கைகளை விரித்துத் தட்டாமாலை சுற்றி 'லாலல்லா' என்று மட்டும்தான் பாடவில்லை.. மற்றபடி சிறகடிக்கும் பறவையின் சந்தோசம் அவளை ஆக்ரமித்திருந்தது..

"தேங்க்ஸ்.." வாசுதேவன் எதிர்பாராத நொடியில் அவன் கன்னத்தில் முத்தமிட்டு விட்டு வீட்டுக்குள் ஓடி விட்டாள்..

கன்னத்தில் அவளது இதழ்பட்ட இடத்தில் சில்லென்ற சிலீர் உணர்வு கன்னத்தைத் தடவியபடி சற்று நேரம் நின்றிருந்தான்.. உடலில் உணர்வலைகள் பொங்கி எழுந்தன.. வீட்டுக்குள் சென்றான்.. நிஷாக்குட்டியைக் கொஞ்சிக் கொண்டிருந்தாள் சுசித்ரா.. அகிலனும் வசுமதியும் சுசித்ராதான் புது அத்தை என்பதை எடுத்துச் சொல்லி நிஷாவை சுசித்ராவிடம் ஒட்ட வைத்து விட்டார்கள்.. சுசித்ரா தூக்கியதும் நிஷா மறுப்புச் சொல்லாமல் வந்து விட்டதில் சுசித்ராவுக்கு கொள்ளை சந்தோசம்.. அவள் குழந்தைகளைத் தூக்கிக் கொஞ்சியது இல்லை.. அவளது உறவினர் வீடுகளில் நாசுக்காகத் தள்ளி நின்று பேசிப் பழகுவார்கள்.. குழந்தைகளைக் கன்னத்தில்

ஒரு விரலால் பட்டும் படாமலும் தொட்டு.. "ஹாய்" என்பார்கள்.. அதுபோன்ற சூழலில் வளர்ந்தவளுக்கு வாசுதேவனின் குடும்பத்தில் நிலவிய அன்பும், பிரியமும், அன்யோன்யமும் ஆச்சரியமாக இருந்தன..

'இவ நாத்தனார் மகளைத் தூக்கிக் கொஞ்சிப் பாசப் பயிரை வளர்த்துக்கிட்டு இருக்காளே.. நேத்து இந்நேரம் கல்யாணம் செய்து கொண்டவ செய்கிற வேலையா இது..?'

வாசுதேவன் சுசித்ராவை ஒரு மார்க்கமாகப் பார்த்தபடி மாடிப் படிகளில் ஏறினான்.. திரும்பிப் பார்த்து..

"சுசித்ரா.. என் வாட்ச் எங்கே..?" என்று குரல் கொடுத்தான்..

'இவன் வாட்சை என்னிடம் ஏன் கேட்கிறான்..?' விழித்தாள் சுசித்ரா..

அதைப்பற்றி அவளுக்கு எப்படித் தெரியும்..?

"வாசு கூப்பிடறானில்ல.. போய் வாட்ச்சை எடுத்துக் கொடுத்துட்டு வா.." குறுஞ்சிரிப்புடன் மகளை வாங்கிக் கொண்டு தம்பி மனைவியை அனுப்பி வைத்தாள் வசுமதி..

அவளுக்கா தெரியாது..? அவளும் அது போன்ற அகிலனின் அழைப்புக்களைக் கேட்டுப் பழக்கப் பட்டவளாயிற்றே..

## 36

மெலிதான கொழுசொலியுடன் மாடியேறிய சுசித்ராவிற்கு தன்னைப் பிடித்திருந்தது.. இந்தக் கொழுசு வாசுதேவன் வாங்கிக் கொடுத்தது.. சுசித்ரா கொழுசை அணிந்ததில்லை.. மெலிதான சலங்கையொலி அவளுடைய வட்டாரத்தில் இல்லாத ஒன்று.. திருமணத்திற்காக புடவை எடுக்க வாசுதேவனின் குடும்பத்தார் அவளையும் அவளுடைய குடும்பத்தையும் அழைத்திருந்தார்கள்.. சுசித்ராவின் கோடிஸ்வரியென்ற அடையாளத்தைத் துளியும் பொருட்படுத்தாமல்.. நீ எங்கள் வீட்டிற்கு வரப்போகும் மருமகள்.. உனக்கான புடவை, நகைகள், மாங்கல்யம் ஆகியவற்றை நாங்கள்தான்

உனக்கு வாங்கித் தரவேண்டும் என்று உரிமையை விட்டுக் கொடுக்காமல் வாசுதேவனின் குடும்பத்தினர் நடந்து கொண்ட விதம் சுசித்ராவை மட்டுமல்ல.. அவளுடைய குடும்பத்தினரையும் சேர்த்து இழுத்துக் கவர்ந்தது.. சுசிந்திரன் அதை வாய் விட்டுச் சொன்னான்..

"வாட் எ வொண்டர்ஃபுல் ஃபேமிலி.."

சுசித்ரா விருப்பப்பட்ட புடவைகளையும் நகைகளையும் வாங்கிக் கொண்டிருந்த போதுதான் வாசுதேவன் ரகசியமாக அந்தப் பரிசை அவளுக்கு அளித்தான்..

"கொழுசு..!" அவளது விழிகள் விரிந்தன..

"எங்க குடும்பத்துப் பெண்கள் கொழுசு போடாம இருக்க மாட்டாங்க.. மெலிசான கொழுசு சப்தமும், மல்லிகைப்பூ வாசனையுமா நீ என் பக்கத்தில் வந்தா எப்படியிருக்கும் தெரியுமா..?" வாசுதேவனின் கண்கள் தாகத்துடன் அவளை மேய்ந்தன..

சுசித்ராவிற்கு கூச்சமாக இருந்தது.. அவனது வர்ணனைகள் அவளுக்குள் கிளப்பி விட்டக் கிளர்ச்சியையும், தாபத்தையும் அவள் அதற்கு முன்னால் உணர்ந்ததில்லையே.. இதுதான் காதல் என்பதா..? இல்லை காமம் என்பதா..? வாசுதேவனின் மோகம் நிரம்பிய பார்வை இரண்டையும் கூறி அவற்றை அவளுக்கு உணர்த்த முற்பட்டன.. சுசித்ரா படபடப்பாக உணர்ந்தாள்.. கொழுசும், மல்லிகைப் பூவுமாக அவளது குடும்பத்துப் பெண்கள் வளைய வந்ததில்லையே.. பானுபிரியா கொண்டையிட்டு ஒற்றை ரோஜாவை செருகுவாள்.. சுசித்ராவோ விரிய விடப்பட்டக் கூந்தலும் அந்தந்த விழாக்களின் தன்மையைப் பொறுத்து ஜீன்ஸ், சுடிதார், சேலையென்ற உடைகளுமாக இருப்பாள்.. இப்படிப்பட்டவளுக்கு வாசுதேவன் கொழுசையும் மல்லிகைப் பூவையும் அறிமுகம் செய்து வைத்தான்.. அவனது விழி செருகலில் மயங்கியவள் அவன் கூறுவதைப் போல அவள் கொழுசொலியும் மல்லிகைப் பூவுமாக அவனருகே போனால் எப்படியிருக்கும் என்று யோசித்துப் பார்த்தாள்..

அன்று அவளுக்கு அது புரியவில்லை.. இன்று..

'ஸ்வீட் ராஸ்கல்..' கன்னம் சிவந்தாள்..

அறைக்குள் போனதும் அவன் என்னவெல்லாம் செய்யப் போகிறானோ என்று பயப்படுவதைப் போல அவள் மனம் பாசாங்கு செய்தது.. தலையில் மொட்டுக்களாக அவள் சூடியிருந்த மல்லிகைப் பூவின் வாசனை அவளையே மயக்க யத்தனித்தது..

'எப்படியெல்லாம் ரசித்து யோசித்திருக்கிறான்..'

அவளுக்காக அவன் ஏங்குவதும்.. அவளது அழகில் மயங்கி மோகிப்பதும் அவளுக்குப் புதிதானவையாக இருந்தன.. அவன் அவளை சுசித்ரா என்ற மனுஷியாக மட்டுமே பார்த்தான்.. அவளது அழகை வர்ணித்து அவள் அழகியென்பதை அவளுக்கு உணர்த்தினான்.. யாதும் நீயே என்று அவளிடம் மயங்கி அவளை அவனிடம் சரணடைய வைத்தான்.. அவள் வாழ்வின் வசந்த காலத்திற்கான திறவுகோல் அவனிடம் இருந்தது..

"என்னவாம்..?"

தலைக்கு மேல் வேலை இருப்பவளைப் போல முகத்தை வைத்துக் கொண்டு அறைக்குள் நுழைந்தாள்.. அவன் அவளை தீர்க்கமாகப் பார்த்த பார்வையின் வேகம் தாளாமல் முகம் சிவந்தாள்.. பெண்மையின் நளினத்துடன் கூடிய அவளது மென்மையான வெட்கம் அவனை ஈர்த்தது.. மனதுக்குள் உற்சாகம் குமிழிட அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.. ஆகாய நீலத்தில் கைக்குள் அடங்கி விடும் மென்மையான பட்டுச் சேலையை உடுத்தி அடர் நீலத்தில் கற்கள் பதித்த ரவிக்கை அணிந்திருந்தாள்.. வெட்டி விடப்பட்டு இடுப்பைத் தொட்ட கூந்தலை லேசாகப் பின்னலிட்டு மல்லிகைப்பூவை சூடியிருந்தாள்.. காதோரங்களில் கற்றை முடி பின்னலுடன் சேராமல் முகத்தில் விழுந்து அவனை வாவென்று அழைத்தது.. கதவைத் தாழிட்டான்.. சுசித்ராவுக்குள் 'குப்' பென ஒரு பரபரப்பான எதிர்பார்ப்பு எழுந்தது..

"ஏன்.. ஏன்.. கதவைச் சாத்தறிங்க..?"

வார்த்தைகள் தந்தியடிக்க பின் வாங்கினாள்.. வாசுதேவன் அவளை நெருங்கினான்.. அதற்கு மேல் நகர முடியாமல் சுவர் தடுக்க அவள் சிணுங்கினாள்.. மயங்கிப் போன வாசுதேவன் அவள் மீது சாய்ந்து அப்பினான்.. சுசித்ராவின் மேனி சிலிர்த்தது.. தாள மாட்டாமல் இதழ்கள் நடுங்க விழி மூடினாள்.. வாசுதேவனின் கரங்கள் அவளைச் சுற்றி வளைத்துத் தன்மீது சரித்துக் கொண்டன.. அவனது முகம் அவளது முகம்மீது கவிழ்ந்தது.. அவனது வெப்ப மூச்சு அவளது கன்னத்தைச் சுட்டது.. அவளது நெற்றியில் பதிந்த அவனது இதழ்கள் கன்னம் தேடி இறங்கி.. ஈரம் படிய வைத்து குளிர வைத்தன.. சுசித்ரா தவிப்புடன் அவனது தோள்மீது கைகளைப் படற விட்டாள்.. பற்றுகோலைத் தேடும் கொடியாக நடுங்கியவள் தன்னையறியாமல் அவனுக்கு இணங்கியதில் அவனுக்குள் சந்தோச பிரளயம் வெடித்தது..

அவளது காதோரமாக பூவை முகர்ந்த அவனது நாசி அவளது முகத்தில் உரசி இன்ப இம்சையைக் கிளப்பி விட்டது..

"மயக்கறியேடி.." அவளது காதோரமாக கிசுகிசுத்து மயக்கினான் அவன்..

தாபத்துடன் அவளது இதழ்களைத் தேடிக் கவ்வியவன் அங்கேயே தேங்கி நின்று விட உணர்ச்சி மிகுதியால் அவனது பின்னந் தலை முடியை இறுக்கிப் பிடித்து அவனுடன் ஒன்றி விட்டாள் சுசித்ரா..

விலக முடியாமல் அவளும், விலகலைத் தராமல் அவனும் இதழோடு இதழ் பதித்திருந்த நீண்ட நெடும் மணித்துளிகள்.. இன்பமா, துன்பமா என்று கணிக்க முடியாத ஓர் அவஸ்தையில் சிக்குண்ட சுசித்ரா.. அவளைக் கட்டித் தழுவி முதல் நாள் புதைய வைத்த மாய நதிச் சுழலுக்குள் புதைய வைத்துக் கொண்டிருந்த வாசுதேவன் என்று அவர்களுக்கே அவர்களுக்கான அற்புத உலகம் விரிந்து கொண்டிருந்தது..

சுசித்ராவின் உடல் உணர்ச்சி மிகுதியில் நடுங்கியது.. புரிந்து கொண்டவனாக அவளது இதழ்களை விடுவித்தான் வாசுதேவன்.. அண்ணாந்து அவனைப் பார்த்த சுசித்ராவின் முகத்தின் மீது விழுந்த முடிக் கற்றையை ஒதுக்கி விட்டான்.. அவனது விழிகளில் தெரிந்த எல்லையற்ற பிரேமையில் பிரமித்தாள் சுசித்ரா..

"சுசித்ரா.. மை டியர்.." வாசுதேவனின் இதழ்கள் முணுமுணுத்தன..

அவனது மார்பில் அவள் முகம் புதைய அவளது கழுத்தில் இதழ் பதித்துத் தழுவிக் கொண்டான்.. அணைப்பு இறுகி உணர்வுகள் கட்டவிழ்ந்த நிலையில் அவள் முணுமுணுத்தாள்..

"அண்ணாவும் டாடியும் வந்து விடுவாங்க.."

வாசுதேவன் நகைத்தான்.. அவள் விலகி நின்று அவனைச் செல்லமாக முறைத்தாள்.. அவளது விலகலை விரும்பாமல்..

"ம்ப்ச்.." என்று ஆட்சேபித்தான் வாசுதேவன்..

செய்யக் கூடாத எதையோ அவள் செய்து விட்டதைப் போல அவன் அதட்டியதில் அவளுக்குச் சிரிப்பு வந்து விட்டது.. இளநகையுடன் நின்ற இளமங்கையை ஆசையுடன் பார்த்தான் அவளது கணவன்..

"வா.."

தாபத்துடன் இருகரம் விரித்து பார்வையால் அவன் அழைத்தபோது அவளால் விலகி நிற்க முடியவில்லை.. அனைத்தையும் மறந்து அவன் கரங்களுக்குள் புகுந்து மார்பில் ஒன்றிக் கொண்டாள்.. அவன் இறுக்கி அணைத்துக் கொண்டான்.. உணர்வுகள் கட்டவிழ்ந்த நிலையில் அவன் அவளைக் கைகளில் தூக்கிக் கொண்டு கட்டிலை அடைய.. அவள் பலவீனமாக மறுத்தாள்..

"இப்போதுதான் குளித்தேன்.."

"மறுபடியும் குளித்துக்கலாம்.."

"எங்க வீட்டிலிருந்து மறுவீட்டுக்கு அழைக்க வந்து விடுவாங்க.."

"எங்க வீட்டில் அவங்களை ரிஸீவ் பண்ணி ஹாலில் உட்கார வைத்து காபி, டிபன் கொடுத்துப் பேசிக்கிட்டு இருப்பாங்க.. டோன்ட் வொர்ரி.."

அவள் என்னவோ அவளுடைய குடும்பத்திற்குக் காபி, டிபனும், உபசரிப்பும் வரவேற்பும் கிடைக்காது என்று கவலைப்படுவதைப் போலவும் அவன் அதற்குச் சமாதானம் கூறுவதைப் போலவும் இருந்தது அவன் பேச்சு..

"என்னங்க நீங்க.. நம்மைக் கூப்பிட அண்ணியோ, அத்தையோ வந்து விட்டால் என்ன செய்வது..?" முறையிட்டாள் சுசித்ரா..

"வர மாட்டாங்க.." சர்வ நிச்சயமாக அடித்துச் சொன்னான் வாசுதேவன்..

"அது எப்படி அவ்வளவு ஷ்யூராச் சொல்கிறீங்க..?"

"உனக்கு என் அக்காவைப் பற்றித் தெரியாது.. உன் ஃபேமிலி வந்து விட்டாங்கன்னா எனக்குப் போன்தான் பண்ணும்.. இங்கிதமில்லாம நம்ம ரூம் கதவைத் தட்டாது.."

வாசுதேவன் அவளைக் கலைப்பதிலேயே குறியாக இருந்தான்.. மெல்ல.. மெல்ல.. சுசித்ரா சிணுங்குவதை மறந்து அவன் வசப்பட்டாள்.. அவனுடைய மார்பில் ஒன்றிக் கைகளுக்குள் அடங்கினாள்.. வாசுதேவன் மோக வெள்ளம் கட்டுடைக்க அவளை இறுக்கி ஆக்ரமித்தான்..

"ஐ லவ் யு வாசு.."

கூடலின் உச்சத்தில் சுசித்ரா தன்னை மறந்து முணுமுணுத்தபோது ஒரு கணம் இயக்கத்தை நிறுத்தி விட்டான்..

ஆழ்மனதில் காதல் இல்லாமல் இந்த முணுமுணுப்பு வராது..

'அப்படியென்றால்..?'

வாசுதேவன் ஆவேசத்துடன் அவளை வேட்டையாடினான்.. புயலில் சிக்கிய பூங்கொடியாய் அலைக்கழிக்கப்பட்டு இதமான வேதனையுடன் கண்மூடிக் கிடந்தவளின் முகத்திலிருந்த நிறைவு அவனை எங்கோ கொண்டு சென்றது..

'இவளைப் போய் எவனோ ஒரு நாதாரியுடன் சம்பந்தப் படுத்தி புழுவாய் துடிக்க வைத்திருக்கிறார்களே..'

கானகத்தில் தொலைந்து விட்டவளைப் போல மிரண்டு விழிக்கும் சுசித்ராவின் முகத்திலிருந்த சோகம் தொலைந்து போயிருந்தது.. கூடலில் கசங்கிச் சிவந்திருந்த முகத்தில் நாணமும் பரவசமும் குடி கொண்டிருந்தன.. விலகி எழுந்து குளிக்க ஓடியவளைப் பார்த்தபடி படுத்திருந்தவனின் உடலும் மனமும் திருப்தியாகி யிருந்தன..

வாசுதேவன் குளித்து வெளியே வந்தபோது சுசித்ரா மின்னல் வேகத்தில் தயாராகியிருந்தாள்.. அவளையே மோகத்துடன் பார்த்தபடி நெருங்கிய வாசுதேவன் தலையைச் சிலுப்பினான்.. அவனது முடியில் கோர்த்திருந்த நீர் முத்துக்கள் அவளது முகத்தில் சாரலாய் தெளித்தன.. அவள் கண்மூடிச் சிலிர்த்தாள்.. வாசுதேவனின் விரல்கள் அவளது கன்னத்தில் கோலமிட்டன.. தள்ளி விட்டு நகர்ந்தவள் துவாலையை எடுத்து வந்து அவனுக்குத் தலை துவட்டி விட்டாள்.. அவன் கேட்காமலே அவள் செய்த உரிமையில் வாசுதேவன் காதலாகிப் போனான்..

'டிரையர் இருக்கிறதைப் பற்றியெல்லாம் யோசிக்கவே இல்ல..'

அவளது இடுப்பை வளைத்துத் தன்னிடம் இழுத்துக் கொண்டான்.. கைகளை அவன் கழுத்தில் மாலையாக்கி அவன் முகத்தை ஆசையுடன் பார்த்தவளை ஆசையுடன் இவன் பார்த்தான்..

"பார்த்தது போதும்.. தள்ளி நில்லுங்க.." குறுகுறுவெனப் பார்த்தபடி அவன் மார்பில் கை வைத்துத் தள்ளி விட்டாள்

சுசித்ரா..

"அதை நீ சொல்லக் கூடாது.. ஏன் சொல்ற.. ஏன் சொல்ற..?" பிரகாஷ்ராஜைப் போலப் பேசிக் காட்டினான் வாசுதேவன்..

"அப்போ அரவிந்தசாமி.. இப்போ பிரகாஷ்ராஜா..?"

"எப்போதும் நான் உன்னோட வாசுதேவன்டி.."

'என் வாசுதேவன்..' மனம் இனிக்க அவனை கட்டிக் கொண்டாள் சுசித்ரா.. வாசுதேவன் அவளது கூந்தலில் முகம் புதைத்து அணைத்துக் கொண்டான்.. விலக மனமில்லாமல் நின்றவர்களை விலக வைத்தது வாசுதேவனின் செல்போனின் இசையழைப்பு..

"அக்காதான் கூப்பிடுது.."

வாசுதேவன் செல்போனை உயிர்ப்பிக்க.. அவனிடமிருந்து விலகி பரபரப்பாக அறைக் கதவைத் திறந்து வெளியேறி விட்டாள் சுசித்ரா.. அவளது பதட்டத்தை ரசித்தபடி..

"என்னக்கா..?" என்றான் வாசுதேவன்..

"உன் மாமனார் வீட்டில இருந்து மறுவீட்டு விருந்துக்குக் கூப்பிட்டுப் போக வந்திருக்காங்கடா.." வசுமதி சொன்னாள்..

"சுசித்ரா கீழேதான் வர்றா.. நான் இப்போ வந்துடறேன்.."

வாசுதேவன் சட்டையை மாட்டிக் கொண்டு கீழே வந்தான்.. சுசித்ராவின் பெற்றோரும் சுசிந்திரனும் வாசுதேவனின் குடும்பத்தாருன் பேசியபடி காபியை அருந்திக் கொண்டிருந்தார்கள்.. சுசித்ரா பானுபிரியாவின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள்.. மகளுடன் பேசிக் கொண்டிருந்த தாயின் பார்வை மகளின் முகத்தை அங்குலம் அங்குலமாக ஆராய்ந்து கொண்டிருந்தது.. மூன்று வருடங்களாக வீண்பழி சுமந்து தன்னைத்தானே வருத்திக் கொண்டு குடும்பத்திலிருந்து தனிமைப்பட்டு நின்றிருந்த மகளின் முகத்தில் கலக்கம் விலகி சந்தோசம் குடி கொண்டிருந்ததை கண்டு பிடித்து விட்டாள் அந்தத் தாய்..

"வாங்க மாமா, வாங்க அத்தை.. வாங்க சுசீந்திரன்.."

வாசுதேவனின் குரலைக் கேட்டதும்.. சுசித்ராவின் உடலில் தெரிந்த சிலிர்ப்பு.. முகத்தில் தெரிந்த ஜ்வலிப்பு.. பானுபிரியாவுக்கு மகள் திருமண வாழ்வில் அடியெடுத்து வைத்து விட்டதை உணர்த்தின.. கணவனுடன் மனம் இணைந்து வாழாமல் இந்தத் துடிப்பும், பரவசமும் ஏற்படச் சாத்தியமே இல்லை..

'நன்றி கடவுளே..'

கண்கள் பனிக்கக் கணவரையும், மகளையும் பார்த்தாள்.. அவர்களது விழிகளும் பனித்திருந்தன.. பாசத்துடன் அவர்கள் வாசுதேவனைப் பார்த்தார்கள்..

"மறுவீட்டு விருந்துக்கு அழைத்துக்கிட்டுப் போக வந்திருக்கோம் மாப்பிள்ளை.. கிளம்பலாமா..?" செந்தில்நாதன் பவ்யமாக கேட்டார்..

"ஒரு விசயம் மாமா.."

"சொல்லுங்க மாப்பிள்ளை.."

"எங்க குலதெய்வ கோவிலில் பொங்கல் வைக்கனும்.."

"எப்போப் போகனும்..?"

"இரண்டு நாள்கள் கழித்துப் புறப்படனும்.. எங்க மாமா அதற்காகத்தான் லீவை எக்ஸ்டெண்ட் பண்ணியிருக்கார்.." வாசுதேவன் அகிலனைச் சுட்டிக் காட்டினான்..

"அதற்கென்ன மாப்பிள்ளை.. இரண்டு நாளில் மறுவீட்டு விருந்தை முடித்து உங்களை அனுப்பி வைக்கனும்.."

"போதாது மாமா.. நீங்களும், அத்தையும், சுசீந்திரனும் எங்களுடன் குலதெய்வ கோவிலுக்கு வரனும் மாமா.."

"நீங்க சொன்னா அதுக்கு மறுபேச்சே கிடையாது மாப்பிள்ளை.. நாங்களும் உங்க குலதெய்வ கோவிலுக்கு வர்றோம்.."

"ரொம்ப சந்தோசம் மாமா.."

"அதை நாங்க சொல்லனும் மாப்பிள்ளை.. அப்புறம் நாங்களும் உங்களிடம் ஒரு விசயம் சொல்லனும்.."

"என்ன மாமா..?"

"நீங்களும் சுசித்ராவும் சுவிட்சர்லாந்துக்கு ஹனிமூன் போக எல்லா ஏற்பாடுகளையும் பண்ணி விட்டோம்.. பிளைட் டிக்கெட்ஸ் அங்கே நீங்க தங்க ஹோட்டல் ரூம்.. சுற்றிக் காட்ட அங்கேயிருக்கும் எங்க ரிலேட்டிவ்ன்னு எல்லாம் தயாரா இருக்கு.. வீக் எண்டில நீங்க ரெண்டு பேரும் கிளம்பனும்.."

"எத்தனை நாள் மாமா.."

"ஒன் மன்த்துக்கு ரூம் புக் பண்ணியிருக்கோம் மாப்பிள்ளை.. தேவைன்னா எத்தனை மன்த் வேண்டுமானாலும் எக்ஸ்டென் பண்ணிக்கங்க.."

"ஒன் மனத்தே அதிகம் மாமா.."

அவர்களது உரையாடலை ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்த பூபதி..

"அப்படியே.. 'மாமா, மாப்பிள்ள'ன்னு அந்தக் காலத்துச் சினிமாப் பாட்டுப் போலவே இருக்குடி கோதாவரி.." என்று சிரித்தார்..

அனைவரும் சேர்ந்து சிரித்ததில் அங்கே இரண்டு குடும்பங்களின் சங்கமம் நிகழ்ந்தது.. திருமணம் என்பது இரு மனங்களும் இணையும் உறவு மட்டுமல்ல.. இரு வீட்டாரும் உறவில் இணைவது..

## 37

"கனகா.. சீக்கிரமா டிபன் அயிட்டங்களை டைனிங் டேபிளில் வை.. இப்ப மாப்பிள்ளை வந்து விடுவார்.."

ஹாலில் கால் மீது கால் போட்டு அமர்ந்தபடி செல்n பானில் நம்பர்களை அழுத்தியபடி வேலைக்காரப் பெண்ணை விரட்டிக் கொண்டிருந்தாள் பானுபிரியா..

"திலகா.. என்ன செய்கிற..? கனகாவுக்கு ஹெல்ப் பண்ணு.."

இருந்த இடத்தை விட்டு நகரவில்லை.. குரல்தான் உயர்ந்ததே தவிர அவளிடம் வேறு அசைவில்லை.. அவ்வளவுதான்.. கடமை முடிந்தது என்பதைப் போல செல்போனில் பேச ஆரம்பித்து விட்டாள்..

சுசித்ராவின் வீட்டில் இதுதான் வழக்கம்.. வீட்டுப் பெண்கள் சமையலையும் பரிமாறுவதையும் கவனிக்க வேண்டும் என்று ஆண்கள் நினைக்க மாட்டார்கள்.. அவர்கள் வளர்ந்த விதம் அப்படி.. சமையலுக்கு இரண்டு பேர்.. ஒருவர் விடுப்பு எடுத்தால் இன்னொருவர் அதை ஈடு கட்டி விடுவார்.. வீட்டு வேலைக்கு இரண்டு பேர்.. பரிமாற சமையல்காரரே வருவார்.. தோட்ட வேலைக்கு ஒருவர்.. வாயில் காக்கும் செக்யூரிட்டிகள் இருவர்.. கார் டிரைவர் இருவர்.. இவர்கள் அத்தனை பேரையும் வேலை வாங்கி.. கண்காணித்து.. மார்க்கெட்டில் காய் வாங்கி, சூப்பர் மார்க்கெட்டில் சாமான் வாங்கியென்று வெளி வேலைகளைக் கவனித்துக் கொள்ள ஒருவர் என்று வீட்டின் வேலைகள் பிரித்து வழங்கப்பட்டுத் தானாக நடக்கும்..

பூஜையறை தினமும் சுத்தம் செய்யப்பட்டு குத்து விளக்கில் எண்ணை நிரம்பி சுடர் விட்டு எரிந்து கொண்டிருக்கும்.. சுவாமி சிலைகளும், படங்களும்

புதுப் பூமாலைகளுடன் ஒளிரும்.. அதையெல்லாம் பானுபிரியாதான் செய்திருக்கிறாள் என்று நினைத்து விடக்கூடாது.. அந்த வீட்டிலிருக்கும் மற்ற நபர்கள் பூஜையறையில் நின்று நொடிப்பொழுது கண்மூடி வேண்டுவதைப் போல அவளும் செய்வாள்.. மற்றபடி பூஜையறையைக் கவனிக்கும் பொறுப்பு வேலையாள் களைச் சேர்ந்தது..

செந்தில்நாதன் அதைக் குறையாக நினைக்க மாட்டார்.. அவர் சாப்பிட வரும் போது பானுபிரியா இருந்தால் கூட உட்கார்ந்து சாப்பிடுவார்.. இல்லாவிட்டால் அவர் மட்டும் சாப்பிட்டு விட்டுக் கிளம்பி விடுவார்.. மனைவி பக்கத்தில்

நின்று பரிமாற வேண்டும் என்று எதிர்பார்த்ததேயில்லை.. கணவருக்குப் பரிமாறாமல் பானுபிரியா அப்படியொன்றும் வெட்டி முறிக்கும் வேலைகளைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டாள்..

லேடிஸ் கிளப் போவது, போனில் அரட்டை அடிப்பது, ஷாப்பிங் போவது, பியூட்டி பார்லர் போவது போன்ற அதிமுக்கிய வேலைகளைச் செய்து கொண்டிருப்பாள்.. இதைப்பற்றி ஏனென்று ஒர் கேள்வி கூடக் கேட்காமல் மனைவி கேட்கும் பணத்தைக் கொடுத்துக் கொண்டிருப்பதுதான் செந்தில்நாதனின் வேலை.. அதை அவர் விரும்பிச் செய்வார்.. மனைவி அப்படியிருப்பதுதான் அவரது சோசியல் ஸ்டேட்டஸ் சிம்பல்..

சுசித்ரா பானுபிரியாவைப் போல இருந்திருந்தால் அவள் கேட்காமலே கோடிக்கணக்கான பணத்தை அள்ளித் தந்திருப்பார்.. அப்படி தந்து கொண்டிருந்தவர்தான்.. சுசித்ரா செந்தில்நாதனின் குடும்பத்தில் தப்பிப் பிறந்தவள்.. அவளது வங்கிக் கணக்கில் இருக்கும் கோடிக் கணக்கான ரூபாய்களை செலவளிக்கும் வழிமுறை கூடத் தெரியாதவள்..

இரக்கம் அவளது சுபாவம்.. இல்லையென்று கேட்டால் உடனே கணக்குப் பார்க்காமல் அள்ளிக் கொடுத்து விடுவாள்.. மென்மையான குணம் கொண்டவள்.. அதிர்ந்து பேச மாட்டாள்.. எளிதில் யாரையும் நம்பி விடுவாள்.. அவளது இந்த குணங்களே அவளைத் துன்ப வலையில் சிக்க வைத்து விட்டன..

கோட், சூட்டுடன் படியிறங்கி வந்த செந்தில் நாதனைப் பார்த்து.. "ஹாய்.." என்று கைவிரல்களை அசைத்து விட்டு செல்போனில் பேச்சைத் தொடர்ந்தாள் பானுபிரியா.. மனைவிக்கு கையாட்டி விட்டு டைனிங் டேபிளில் உட்கார்ந்தார் செந்தில்நாதன்... பரிமாற விரைந்து வந்தார் சபாநாயகம்.. செந்தில் நாதன் வீட்டுச் சமையல்காரர்..

"சுரேந்திரன் ஆபிஸ் போயாச்சா..?"

மனைவியிடம் கேட்க வேண்டியதை சமையல் காரரிடம் கேட்டார் செந்தில்நாதன்..

"இல்லேங்கய்யா.." பரிமாறியபடியே பணிவுடன் பதில் சொன்னார் சபா நாயகம்..

"ஓ.." அதற்குமேல் எதுவும் கேட்காமல் செந்தில் நாதன் டிபனில் கவனமாகி விட..

"குட் மார்னிங் டாட்.." என்று டையின் முடிச்சை சரி செய்தபடி டைனிங் டேபிளுக்கு வந்து அமர்ந்தான் சுரேந்திரன்..

"மார்னிங் மை டியர் சன்.." என்ற தந்தையைக் கவனிக்காமல் சபாநாயகத்தைப் பார்த்த சுரேந்திரன்..

"சுசித்ராவும், மாப்பிள்ளையும் சாப்பிட வந்தாங்களா..?" என்று விசாரித்தான்..

பொட்டில் அடித்ததைப் போல இருந்தது செந்தில் நாதனுக்கு.. அவருடைய ஒரே மகள்.. கணவனுடன் மறுவீட்டு விருந்துக்கு வந்திருக்கிறாள்.. அவளைப்

பற்றிய நினைவு இல்லாமல் கம்பெனிக்கு கிளம்பிக் கொண்டிருக்கிறாரே.. கூடப் பிறந்தவனுக்கு இருக்கும் அக்கறை பெற்றவர்களுக்கு இல்லாமல் போய் விட்டதே..

பானுபிரியாவைப் பார்த்தார்.. "ஓ.. நோ.." என்று அவள் செல்போனில் பேசியபடி குலுங்கிச் சிரித்துக் கொண்டிருந்தாள்..

"பானு.." உரத்த குரலில் அழைத்தார்..

"வெயிட் டியர்.." செல்போனை மூடியபடி சிணுங்கிய பானுபிரியா செல்போன் பேச்சை தொடர்ந்தாள்..

"பாப்பாவும், மாப்பிள்ளையும் இன்னும் சாப்பிட வரலைங்கய்யா.." சபாநாயகம் குறுக்கிட்டார்..

அதைத் தெரிந்து கொள்ளவா செந்தில்நாதன் பானுபிரியாவை அழைத்தார்..?

என்றும் இல்லாத வகையில் இன்னதென்று தெரியாத கோபம் அவருக்கு வந்தது.. அதை எப்படி வெளிப்படுத்துவது என்று புரியாதவராகப் பல்லைக் கடித்தார்.. மாடிப்படியில் பேச்சுக் குரல்கள் கேட்டன.. அவசரமாகத் திரும்பிப் பார்த்தார்.. சுசித்ராவும் வாசுதேவனும் வந்து கொண்டிருந்தார்கள்..

"பானு.. சுசித்ராவும் மாப்பிள்ளையும் வந்துட்டாங்க பார்.." குரல் கொடுத்தார்..

பானுபிரியாவின் முகத்தில் எரிச்சல் வழிந்தது.. செல்போனை அணைத்து விட்டு எழுந்து வந்தவள் செந்தில் நாதனிடம் குனிந்து..

"வாட் இஸ் திஸ்..? நான் போனில் பேசறப்ப டிஸ்டர்ப் பண்றிங்களே.. சுசித்ராவும் மாப்பிள்ளையும் வந்தால் என்ன..? ஸ்பெசல் டிஷ்ஷை சொல்லி பிரிபேர் பண்ணச் சொல்லியிருந்தேனே.. தென் வாட்..?" என்று தாழ்ந்த குரலில் சீறினாள்..

"அது போதுமா..?" செந்தில் நாதனுக்கு கோபம் வந்து விட்டது..

வாசுதேவனின் வீட்டில் இருந்த உபசரிப்பு அவர் வீட்டில் இல்லாததைப் போல அவர் உணர்ந்தார்.. இத்தனைக்கும் அவர்வீடு மாளிகை.. கூப்பிட்ட குரலுக்கு ஓடி வர வேலையாள்கள்.. சுவை மிகுந்த உணவு வகைகள்.. எங்கு பார்த்தாலும் செல்வச் செழுமை.. இருந்தும் வாசுதேவனின் வீட்டில் இருக்கும் உயிர்ப்பு அவர் வீட்டில் ஏன் இல்லை..?

"போதாதா..?" பானுபிரியா விழித்தாள்..

இதுபோன்ற கேள்வியை இப்போதுதான் அவள் எதிர் நோக்குகிறாள்.. இதுவரை செந்தில்நாதன் இப்படிப் பேசியதேயில்லையே..

"மகளும் மருமகனும் மறுவீட்டு விருந்துக்கு வந்திருக்கிறாங்க.. அவங்களைப் பக்கத்திலிருந்து கவனித்துக் கொள்ளாமல் ஸ்பெசல் டிஷ்ஷை பிரிப்பேர் பண்ணச் சொல்லிட்டேன்னு பதில் சொல்கிறயே.."

பக்கத்திலிருந்து எப்படி கவனிப்பது..? பானுபிரியாவுக்கே வேலையாள்கள்தான் பரிமாறுவார்கள்.. சுசிந்திரனையும், சுசித்ராவையும் வளர்க்க ஆயாக்கள் இருந்தார்கள்.. பிள்ளைகள் தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ளும் வயது வந்தவுடன் ஆயாக்கள் வேலையை விட்டு அனுப்பப் பட்டார்கள்..

ஒரே பங்களாவுக்குள் தனித்தனி அறைகள்.. தனித்தனி வாழ்க்கை.. விருப்பப்பட்ட நேரத்தில் உணவு.. ஒருவரின் விருப்பு வெறுப்புகளில் மற்றவர் தலையிடாத மேல்தட்டு நாகரிகம்.. அவரவர் வாழ்க்கை அவரவர்க்கு என்ற தனிமனித சுதந்திரம்.. ஒருவருடன் ஒருவர் உட்கார்ந்து பேசக்கூட நேரமில்லாத வாழ்க்கை..

இதில் எவருமே தனிமையாக உணர்ந்ததில்லை என்பதுதான் மிகப் பெரிய ஆச்சரியம்... சுசித்ரா உணர்ந்திருக்கலாம்.. அப்படி அவள் உணர்ந்ததையும் உணராத வாழ்க்கைப் போக்கு அவர்களுடையது.. இந்த வாழ்க்கை முறைக்கு அவர்கள் பழக்கப்பட்டவர்கள்.. யாரும் யாரிடமும் எந்த பணிவிடையையும் எதிர்பார்த்ததில்லை.. எல்லாவற்றுக்கும் வேலையாள்களைத்தான் அழைப்பார்கள்.. இன்று என்னடாவென்றால் அந்த வாழ்க்கை முறையை செந்தில்நாதன் மாற்றப் பார்க்கிறார்.. பானுபிரியாவைக் குறை சொல்கிறார்..

"ஹாய் மாம்.. ஹாய் டாட்.. மார்னிங் அண்ணா.."

சுசித்ராவை இத்தனை கலகலப்பாக அவளது குடும்பத்தினர் பார்த்ததில்லை.. பானுபிரியா நெகிழ்ந்து போனாள்.. தாய்மையின் கனிவோடு செந்தில்நாதன் மீதிருந்த கோபத்தை மறந்து..

"சாப்பிட உட்காருங்க மாப்பிள்ளை.. நீயும் உட்காரு சுசித்ரா.." என்று பரிமாறத் தயாரானாள்..

உலகமகா அதிசயத்தைப் பார்ப்பதைப் போல சபாநாயகம் வாய் பிளந்து பார்க்க.. சுசித்ரா இயல்பாக வாசுதேவனுக்கு பரிமாற ஆரம்பித்தபடி..

"நான் பார்த்துக்கறேன் மம்மி.." என்று சொல்லி விட்டாள்..

தனக்குத்தானே போட்டுச் சாப்பிடத் தெரியாத பெண் கணவனுக்குப் பார்த்துப் பார்த்துப் பரிமாறுவதைப் பார்த்த பானுபிரியா இது தன் மகள்தானா என்று இமை கொட்டி விழித்தாள்.. செந்தில்நாதனுக்கோ வாசுதேவனின் மீது பொறாமை வந்து விட்டது.. ஒருநாளாவது பானுபிரியா அவருக்கு இப்படிப் பரிமாறியிருப்பாளா..?

"பாதாம்கீர் உங்களுக்குப் பிடிக்குமே.."

பானுபிரியா அவரது மனதைப் படித்தவளைப் போல ஒரு கப்பில் ஊற்றிக் கொடுக்க செந்தில்நாதனுக்கு வானத்தில் பறப்பதைப் போல ஆகிவிட்டது.. என் மனைவியும் எனக்குப் பரிமாறுவாளே என்ற கித்தாய்ப்புடன் வாசுதேவனைப் பார்த்தபடி பாதாம்கீர் கப்பை வாங்கிக் கொண்டார்.. நடக்கும் நாடகத்தைப் பார்த்தும் பார்க்காததைப் போல நோட்டமிட்டுக் கொண்டிருந்த சுசீந்திரன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.. தங்கையிடம் தென்பட்ட மாறுதல் அவனுக்கு நிம்மதியைத் தந்தது..

'மாதங்கியும் இதுபோல என்னைக் கவனிப்பாளா..?'

அவன் மனதிலும் ஏக்கம் வந்தது..

## 38

சுசித்ராவுக்கு பச்சைப் பசேலென்ற அந்தக் கிராமியச் சூழலை மிகவும் பிடித்திருந்தது.. வயல்களும் அதற்கடுத்த தென்னந்தோப்புகளும் இருபக்கமும் இருக்க.. நடுவே ஓடிய தார்ச் சாலையில் மித வேகத்தில் ஓடிக் கொண்டிருந்த காரின் ஜன்னல் கதவில் முகம் பதித்து ஆர்வமாக வேடிக்கை பார்த்தபடி வந்தாள்..

"அது கண்ணாடிக் கதவு.. உன் புருசனோட தோளில்ல.." அவள் காதோரம் கிசுகிசுத்தான் வாசுதேவன்.

அவனது மீசைமுடியின் ரோமத்தில் சிலிர்த்தவள் அவனைச் செல்லமாக முறைத்துவிட்டு மறுபடியும் கண்ணாடிக் கதவில் தலை சாய்ந்தாள்..

அது பார்ச்சுனர் கார்.. குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்து செல்லும்போது அந்தக் காரை வெளியில் எடுப்பார்கள்.. மற்ற சமயங்களில் வாசுதேவனின் ஹோண்டா சிட்டி காரில் போய் வருவார்கள்..

வாசுதேவன் புதுமாப்பிள்ளை என்பதால் அவர்கள் பார்ச்சுனர் காரில் சென்று கொண்டிருந்தார்கள் மாப்பிள்ளையான அகிலன் காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.. அவன் பக்கத்தில் வசுமதி.. நடுவீல் இருந்த சீட்டில் பூபதியும் கோதாவரியும் நிஷாவுடன் அமர்ந்து கொண்டு வாசுதேவனையும் சுசித்ராவையும் பின்பக்க சீட்டிற்கு தள்ளியிருந்தார்கள்.. பின்பக்கச் சீட்டில் சிறுவர்கள் உட்கார்ந்து வரத்தான் வசதியாக இருக்கும்.. மற்றவர்கள் கால் நீட்டுவது சிரமம்..

ஆனாலும் அந்த சீட் வாசுதேவனுக்குப் பிடித்தமானதாக இருந்தது.. முன்பக்க சீட்டுகளில் இருப்பவர்களின் பார்வை முன்னோக்கித்தான் இருக்கும்.. புது மணத் தம்பதிகளைத் திரும்பிப் பார்க்கத் தயங்குவார்கள்.. இது எப்பேற்பட்ட வசதி..! இத்தகைய வசதியின் முன்னால் கால் நீட்டச் சிரமப்படுவது பெரிதாக தோன்றுமா என்ன..? அத்துடன் கால் நீட்டச் சிரமமாக இருக்கிறது என்ற காரணத்தைக் காட்டி ஒரு பக்கமாக சுமித்ராவின் பக்கமாக சரிந்து சாய்ந்து திரும்பி கால்களை நீட்டிக் கொள்வதன் மூலம் சுமித்ராவின் மீது முழுமையாக படிந்து விடலாமே..

ரயிலில் தனி கூபேயில் பயணம் செய்வதைப் போல புதுமனைவியின் மீது சரிந்து, சாய்ந்து, படிந்து, படர்ந்து உல்லாசம் கொண்டாடிக் கொண்டு வந்தான் வாசுதேவன்..

"ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து..

ஓடம் போல

ஆடலாம்.. பாடலாம்.."

என்று சுசித்ராவின் காதில் ரகசியப் பாடல் வேறு..

சுசித்ராவைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.. அவளுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.. வாசுதேவனிடம் கிசுகிசுப்பாக..

"எனக்கு வெட்கம் வெட்கமா வருது.." என்று சொல்லி வைக்க.. அவன் அவளைக் கடித்துத் தின்று விடுவதைப் போல பார்த்து வைத்தான்..

'ஆதிலட்சுமி புரம் உங்களை வரவேற்கிறது..' என்ற பெயர் பலகை அவர்களை வரவேற்றது..

ஆறோட.. அதன் கரையோரம் இருந்த சாலையில் இவர்களின் கார் ஓட.. சுசித்ரா குதூகலமானாள்.. அகன்று ஓடிய ஆறைப் பார்க்க ஆசைப்பட்டாள்.. உலகம் முழுவதும் சுற்றி வந்த அந்தக் கோடிஸ்வரியின் குழந்தைத்தனமான ஆசையில் ஈர்க்கப்பட்ட வாசுதேவனின் குடும்பத்தார் ஏஸியை அணைத்து விட்டு ஜன்னல் கதவுகளை

இறக்கி விட்டார்கள்.. ஈரப் பசையுடன் கூடிய காற்று முகத்தில் படிந்ததை இமைகளையும் மூக்கையும் சுருக்கி அனுபவித்தாள் சுசித்ரா..

"நீ ஆறையே பார்த்ததில்லையா..?" ஆச்சரியத்துடன் கேட்டான் வாசுதேவன்..

"இதைப் போல விடுதலையுணர்வுடன் பார்த்ததில்லை.." பதிலளித்தாள் சுசித்ரா..

அந்த வார்த்தைகள் கூறிய கதையை வாசுதேவன் உணர்ந்து கொண்டதைப் போல அவள் உணரவில்லை.. கனிவுடன் அவளைப் பார்த்தான் வாசுதேவன்..

"கடற்கரை மணலில் நடந்ததுமில்லை..

காவிரிக் கரையை ரசித்ததுமில்லை..

சுதந்திரவானில் பறந்ததுமில்லை..

பொழிகின்ற மழையில் நனைந்ததுமில்லை

வாழ்க்கையை வாழ்க்கையாய்

வாழ்ந்ததுமில்லை.."

சுசித்ரா முணுமுணுத்த பாடல் வரிகளில் திரும்பிப் பார்த்துப் புன்னகைத்த வசுமதி..

"இந்தப் பாட்டை நானும் கேட்டிருக்கிறேன்.. வார்த்தைகள் மாறி வருதோ..?" என்று கேட்டாள்..

"தெரியலை அண்ணி.. மார்னிங் இந்தப் பாட்டை டிவியில் பார்த்தேன்.. பிடிச்சிருந்தது.. நினைவில் வந்ததைப் பாடினேன்.." கூச்சத்துடன் சொன்னாள் சுசித்ரா.

"அதுக்கென்ன.. நாம பாடறதுதான் பாட்டு..." சிநேகிதத்துடன் சொன்ன வசுமதியை சுசித்ராவுக்குப் பிடித்திருந்தது..

அதைவிட மருமகளின் மென்மையான குரலையும் பேச்சையும் பெருமிதத்துடன் பார்த்த கோதாவரியை மிக.. மிக பிடித்திருந்தது.. அதைப் புரிந்து கொண்டதைப் போல வாசுதேவன் இமை மூடித் திறந்து சிரித்தான்.. சுசித்ரா ஒட்டுதலுடன் அவனை ஒட்டி உட்கார்ந்தாள்.. மனைவியின் மனம் குடும்பத்துடன் ஒன்றி விட்டதை உணர்ந்து கொண்ட வாசுதேவனின் மனம் சிறகடித்தது..

ஆதிலட்சுமியும் உண்மையாகவே அவளை வரவேற்று அழைப்பதைப் போல சிலிர்த்துப் போனாள் சுசித்ரா.. ஆறும்.. அதை ஒட்டி ஓடிய சாலையும்.. ஆற்றங்கரை அருகினிலே ஊரை ஒட்டியிருந்த பெருமாள் கோவிலும்.. கோபுரத்தின் உச்சியில் கூடு கட்டிப் பறந்த புறாக்களும் என்று பார்க்கப் பார்க்க அவளுக்குத் தெவிட்டவேயில்லை.. ஒரு புது உலகில் நுழைவதைப் போல உற்சாகமாக உணர்ந்தாள்..

ஊரின் மத்தியில் சுற்றுச் சுவரும்.. அதனுள் இருந்த பெரிய தோட்டமும்.. தோட்டத்தின் மத்தியில் இருந்த பிரம்மாண்டமான பங்களாவுமாக வாசுதேவனின் பூர்விக வீடு அவளைக் கவர்ந்தது.. ஊரே சில நொடிகளில் அங்கு ஒன்று கூடி விட்டதில் இமை கொட்டி விழித்தாள்..

"அப்பா.. இந்த ஊர்ப் பண்ணையார்.." வாசுதேவன் விளக்கினான்..

"ஊர்ப் பண்ணையாருன்னா..?" சுசித்ராவுக்குப் புரியவில்லை..

"தி பர்ஸ்ட் பெர்சன் ஆஃப் திஸ் வில்லேஜ்ன்னு இந்தக் கிராம மக்கள் நினைக்கிறாங்கன்னு வைத்துக்கயேன்."

"ரியலி..?"

சுசித்ராவுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.. அமைதியாக.. தானுண்டு தன் வேலையுண்டு, அதற்கடுத்து தன் மனைவி பிள்ளைகளுண்டு என்று சென்னையில் இருக்கும் இடம் தெரியாமல் வசித்து வரும் பூபதி ஆதிலட்சுமிபுரத்தின் முதன்மை மனிதரா..?

"ஐயா வணக்கமுங்க.."

"பண்ணையாரு ஐய்யாவ பாத்து பல மாசமாச்சுங்களே.."

"சின்னப் பண்ணையாரு கல்யாணத்த நம்ம ஊரில நடத்தியிருக்கலாமில்ல.. நாங்கள்ளாம் பாக்க வேணாமுங்களா..?"

"இதான் பண்ணையார் வீட்டு மருமகளா..? ஆத்தி.. துடைச்சு வைச்ச வெங்கலச் சிலையாட்டம் இம்புட்டு அழகா இருக்காகளே.."

"சின்னப் பண்ணையாரு ஆணழகன் அர்ச்சுனனில்ல.. அவரோட சம்சாரம் என்ன குறைச்சலாவா இருக்கும்..?"

அந்த மக்களின் அன்பிலும் சிலாகிப்பிலும் மனம் கரைந்தாள் சுசித்ரா.. இதுபோன்ற சூழலும் வாழ்வில் உண்டோ என்று பிரமித்தது அவளது உள்ளம்.. ஊரே கூடி வரவேற்பது.. வாத்சல்யம் காட்டுவது.. வாய் ஓயாமல் பேசுவது என்று அவள் அன்றுவரைப் பார்த்திராத புதியதோர் உலகைப் பார்த்தாள்.. கிராமத்துப் பெண்கள் மங்கலக் குலவையிட்டு அவளுக்கும் வாசுதேவனுக்கும் ஆரத்தி எடுத்தார்கள்.. வாசுதேவனின் கரம் பற்றி அந்த

கிராமத்துப் பங்களாவுக்குள் நுழைந்த போது தன்னை ஒரு மகாராணியைப் போல உணர்ந்தாள் சுசித்ரா..

வீடு அழகாக ஓர் அரண்மனையைப் போல இருந்தது.. நுணுக்கமான மர வேலைப்பாடுகளும் தேக்கு மரக் கடைசலுமான பழங்கால சோபாக்கள்.. டீப்பாய்கள்.. சுவரில் தொங்கும் ஓவியங்கள்.. லஸ்தர் விளக்கு என்று அந்த வீடு பாரம்பர்யக் கலை நயத்துடன் மின்னியது.. விழி விரியப் பார்த்த மனைவியின் மைவிழி அழகில் சொக்கிப் போனான் வாசுதேவன்.. மற்றவர் அறியா வண்ணம் அவளது வளவளப்பான இடைப் பகுதியில் கை பதித்தான்.. சுசித்ரா தடுமாறினாள்.. அவனது விரல்கள் ஊர்ந்ததில் நிற்க முடியாமல் நெளிந்தாள்..

"ஸ்ஸ்.. என்ன இது..?" தாழ்ந்த குரலில் கிசுகிசுத்தாள்..

"எதைச் சொல்கிற..?" ஒன்றும் அறியாத சின்னக் கண்ணனாக புருவங்களை உயர்த்தினான் வாசுதேவன்..

"எதைச் சொல்கிறேனா..? உங்களுக்கு ஒன்றும் தெரியாதா..?"

"தெரியாததினாலதானே கேக்கிறேன்..?"

"ஆஹா.. இவர் அறியாப் பிள்ளைதான்.."

"இல்லையா பின்னே.. அறிந்து கொள்ளத்தான் நீ விட மாட்டேங்கிறியே.."

வாசுதேவனின் விழிகளில் தாகம் மிதந்தது.. தாபத்துடன் குழைந்து ஒலித்த அவனது குரலில் இவள் அனலில் பட்ட மெழுகாக உருகிப் போனாள்.. என்ன வேண்டும் உனக்கு.. எடுத்துக் கொள் என்றது அவளது பார்வை.. வாசுதேவனின் உடலில் மின்சாரம் பாய்ந்தது.. அந்தப் பொழுதில் அவளும் அவனும் தனித்திருந்தால் பசி தீர அவளைப் புசித்திருப்பான்.. எங்கே..? ஊர் மக்கள் தான் வீடு முழுவதும் நிரம்பியிருந்தார்களே..

பூபதி சோபாவில் தோரணையாக சாய்ந்திருந்த கம்பீரத்தை ரசித்துப் பார்த்தாள் சுசித்ரா... இந்தக்

கம்பீரத்தை அவளுடைய மாமனார் எங்கே ஒளித்து வைத்திருந்தார்..? யாரும் இருக்கும் இடத்தில் இருந்து விட்டால் எல்லாம் சௌக்கியமே என்பது இதுதானோ..!

சென்னையானது பூபதியின் கம்பீரத்தைக் கபளீகரம் செய்து விட்டது என்ற பரிதாபம் அவளுக்குள் எழுந்தது..

'பாவம்..' என்று நினைத்துக் கொண்டாள்..

அதை வாசுதேவனிடம் முணுமுணுத்த போது..

"என்னைப் பார்த்தா உனக்குப் பாவமா இல்லையா..?" என்று அவன் சண்டைக்கு வந்தான்..

மோக வெள்ளத்தில் மூழ்கத் துடிப்பவனின் வேகம் புரிந்தவளாக அவள் மோகனப் புன்னகை புரிந்தாள்..

"நானும் பாவம்தான்.."

இந்த இரண்டு வார்த்தைகளில்தான் எத்துனை மாயம் நிரம்பியிருந்தது..! அதைக் கேட்டவுடன் வாசுதேவனின் விழிகளில் ஒருகோடி சூரியன்கள் ஒளிர்ந்ததென்ன..!

"ஏய்ய்.." வேட்கையுடன் அவனது விரல்கள் அவளது இடைச் சதையைக் கிள்ளியெடுக்க முனைந்தன..

"கோதாவரி.. ஊர் விருந்துக்கு என்னென்ன மெனுன்னு முடிவு பண்ணிட்டியா..?" கனத்த குரலில் பூபதி அதட்ட..

"விசுவின் சாம்சராஜ்யமில்ல.. சத்தம் பலமாத்தான் இருக்கும்.." என்று கணவனிடம் சொல்லிச் சிரித்தாள் வசுமதி..

"ஊர் விருந்து கொடுக்கிறதுக்கு முன்ன குலதெய்வம் கோவிலில பொங்கல் வைத்தாகனும்... அதை மறந்துட்டிங்களா..?" கணவரை முறைத்தாள் கோதாவரி..!

"தெரியும்டி.. விருந்துக்கான மெனு என்னன்னுதான கேட்டேன்..? விருந்தா தயார் பண்ணச் சொன்னேன்..?" பூபதி மீசையை முறுக்கினார்..

"பார்ரா.. எம் மாமனாருக்கு வீரம் பொங்கி வழியறதை.." அகிலன் குறும்பாக மனைவியிடம் கண் சிமிட்டினான்..

"பின்னே.. ஆதிலட்சுமிபுரம் பண்ணையாருன்னா சும்மாவா..? இது வீரம் விளைஞ்ச மண்ணாச்சே.." சிலுப்பிக் காட்டினாள் வசுமதி..

"மெல்லடி.. நீ சிலுப்பற சிலுப்பலில கழுத்து சுளுக்கிக்கப் போகுது.." எச்சரித்த அகிலன்.. புதுமணத் தம்பதிகளைச் சுட்டிக் காட்டி..

"அங்கே பாரு.. புதுசாக் கட்டிக்கிட்ட ஜோடி தனிமை கிடைக்காம தவிச்சுக்கிட்டு நிற்கிறதை.." என்றான்..

"ஆமாமில்ல.. நாமதான் இங்க நிற்கிறோம்ன்னா.. இதுக ஏன் இங்கேயே நிற்கனும்..? அதுதான் ஊரு சனம் பூரா ஒன்னாச் சேர்ந்து வந்து பொண்ணு, மாப்பிள்ளையைப் பார்த்தாச்சே.. அப்புறம் என்ன..?" வசுமதி கேட்டாள்..

"ஏண்டி.. நான் உன்னைக் கேட்டா.. நீ என்னைக் கேட்கிறயா..? இவங்களுக்கு ஒரு வழி பண்ணுவியா.. அதை விட்டுட்டு என்னைக் கேள்வி கேட்கிறா.." தலையில் அடித்துக் கொண்டான் அகிலன்..

"தலை வலிக்கப் போகுது.."

"ரொம்பத்தான் அக்கறை.."

"இப்ப என்ன..? அவங்களைத் தனி ரூமுக்கு அனுப்பி வைக்கனும்.. அவ்வளவுதானே.. செய்துட்டாப் போச்சு.. கூடவே உங்களையும் அனுப்பி வைக்கிறேன்.."

"என்னடி சொல்ற..?"

"எதுக்கு இந்த ஷாக்..? ஷாக்கைக் குறைங்க.. அவங்களை அவங்க ரூமுக்கு அனுப்பி வைக்கிறேன்.. உங்களை உங்க ரூமுக்கு அனுப்பி வைக்கிறேன்னு சொன்னேன்.. போதுமா..? அரைகுறையாப் புரிஞ்சுக்கிட்டு அலறக் கூடாது.."

"அப்பாடி.. நெஞ்சே அடைச்சிருச்சு.."

"இதை நான் நம்பனும்..?"

"நம்பலைன்னா போ.."

"நீங்க முதல்ல நம்ம ரூமுக்குப் போங்க.."

"போயி..?"

"ரெஸ்ட் எடுங்க.. இல்லைன்னா மண்டை காய்ந்து போய் இப்படித்தான் எதையாவது எக்குத்தப்பாப் பேசிக்கிட்டு இருப்பீங்க.."

"போடி.. போ.. யாருக்கு வேணும் ரெஸ்ட்..? இங்கே உங்க அப்பா பண்ற அலப்பறையைப் பார்த்து ரசிக்கிறதை விட்டுட்டு ரெஸ்ட் எடுக்கச் சொல்றியா.. ரெஸ்ட்..?"

"இதைப் பாத்து என்ன செய்யப் போறிங்க.."

"அப்புராணி மாமனாரும் ஆதிலட்சுமிபுரத்து அலப்பறைகளும்ன்னு ஃபேஸ்புக்கில ஸ்டேட்டஸ் போடுவேண்டி.. தொடர் ஸ்டேட்டஸ்.. லைக்ஸ் பிச்சுக்கிட்டுப் போகுமில்ல.."

"அந்த லைக்கை வைத்து என்ன செய்யப் போகிறிங்க..? பொரித்துச் சாப்பிடப் போறிங்களா..? நீங்களும், உங்க லைக்ஸீம்.."

வசுமதி நொடித்துவிட்டு வாசுதேவனிடம் போனாள்.. சுசித்ராவின் காதில் ரகசியமாக கிசுகிசுத்து அவளது முகத்தை சிவக்க வைத்துக் கொண்டிருந்த வாசுதேவன் வசுமதியைக் கண்டதும் மன்மதபாணம் தொடுப்பதை நிறுத்தி வைத்து விட்டு..

"என்னக்கா..?" என்றான்..

"அதான் தம்பதி சமேதரா ஆதிலட்சுமிபுரத்து மக்களுக்கு காட்சி தந்து அருள் பாலித்தாச்சே.. இன்னும் எதுக்காக இங்கேயே நின்றுக்கிட்டு இருக்க.. திருப்பள்ளி கொள்ளப் போ.." என்று வசுமதி சொல்லி வாய் மூடவில்லை..

"நீ அக்கா இல்லை.. தெய்வம்.." என்றபடி மனைவியை இழுத்துக் கொண்டு மாடிப்படிகளில் தாவினான்

வாசுதேவன்..

"மெல்லடா.." வசுமதிக்குச் சிரிப்புத் தாங்கவில்லை..

"இவன் இருக்கானே.. ரௌடி.."

உதட்டைச் சுழித்தபடி திரும்பியவள் நெருக்கமாக நின்றிருந்த அகிலனின் மீது மோதி.. 'திக்' கென்று தூக்கிவாரிப் போட வாய் பொத்தினாள்..

"நீங்களா..? பயந்துட்டேன்.."

"உன் தம்பி மட்டும் ரௌடி இல்லைடி.. நானும் ரௌடிதான்.."

அகிலனின் விழிகள் சொல்லிய கதையில் முகம் சிவக்க அவனது மார்பில் குத்தியவள்..

"உங்க ரௌடித்தனத்துக்கு சாட்சியா கையில ஒன்னும், வயித்தில ஒன்னும் இருக்குதே.." என்றபடி நாணத்துடன் அகன்று விட்டாள்..

மனைவியின் நாணத்தில் அகிலனின் மனதில் சாரல் அடித்தது..

39

அகன்ற பெரிய ஜன்னல்கள்.. திறந்தால் வீசும் தென்றல் காற்று.. தோட்டம்.. அதில் சிறகடிக்கும் பறவைகள்.. அருகில் ஓடுவதைப் போலத் தோற்றம் தரும் ஆறு.. அதன் ஈரப்பசை காற்றில் கலக்க உடலும் மனமும் உணரும் சில்லென்ற புத்துணர்வு.. அறையின் மத்தியில் ஆறு நபர்கள் படுத்துறங்கும் வசதியுடன் கூடிய தேக்கு மரக்கட்டில்.. நுரை மெத்தை.. தலையணைகள்..

பூர்விக கிராமத்து வீட்டில் இருப்பதைப் போலவே இல்லை.. ஏதோ ஒரு மலைவாசஸ்தலத்தில் இருப்பதைப் போலவே இருந்தது சுசித்ராவுக்கு.. அவளது மனதின் குதூகலத்தை அதிகப் படுத்துவதைப் போலப் பின்னாலிருந்து அணைத்த

வாசுதேவனின் கரங்களின் ஸ்பரிசம்.. பின்னங்கழுத்தில் பதிந்த அவனது இதழ்கள்.. அவை கொடுத்த ஈர முத்தம்.. உடை தாண்டிப் பரவும் அவனது கை விரல்கள்.. அவை உணர்த்தும் சங்கதிகள்..

'ஹப்பா..'

தாள முடியாத தவிப்பில் அமிழ்ந்தாள் சுசித்ரா.. மூச்சுத்திணறியது.. சீரான சுவாசத்தில் எப்படி மூச்சுத் திணறல் வரக் கூடும் என்று புரியவில்லை.. யோசிக்கும் நிலையிலும் அவளில்லை..

"எங்க தொட்டாலும் பூப்போல இருக்கேடி.."

அவளை வெட்க வைத்தான் வாசுதேவன்.. அவன் தொட்ட இடங்களில் தீப்பிடித்ததைப் போன்ற ஓர் நூதன இன்பம் எழும்ப சுசித்ரா உணர்ச்சிக் குவியலில் அமிழ்ந்தாள்.. கண்கள் செறுக கிறங்கி மயங்கியவளைக் கைகளில் ஏந்திக் கட்டிலில் கிடத்திப் பரவிப் படர்ந்தான் வாசுதேவன்.. வேண்டாம் என்று தடுத்தாள் சுசித்ரா.. ஏன் என்று உறுமினான் அவள் கணவன்..

"வீடு பூரா ஆள் இருக்காங்க.." மெல்லிய குரலில் மன்றாடினாள்..

"நாம மாடியில நம்ம ரூமில இருக்கோம்.."

"இது பகல்.."

"ராத்திரி வரை காத்திருக்க என்னால் முடியாது.."

"எனக்கு என்னவோ போல இருக்கு.."

"எதனால..?"

அவன் அவளுடைய காதோரமாக எதையெதையோ சொல்லி அதனாலா என்று விசாரிக்க ஆரம்பித்ததில் அவளுக்குள் குளிர் ஜீரம் போன்ற உணர்வு 'குப்'பென எழுந்தது.. இமை மூடிக் கிறங்கியவளின் இணக்கத்தில் திருப்தியானவன் அவளது இதழ்களில் முத்தமிட்டு..

"இப்படித்தான் சமத்தா கோ-ஆப்பரேட் பண்ணனும்.." என்றான்..

சுசித்ராவுக்கு வெட்கமாகி விட்டது.. அதற்கு அவன்

"இதுக்கே வெட்கமாகி விட்டா எப்படி..?" என்று அடுத்தடுத்த நிகழ்வுகளை அவளது செவியோரம் கிசுகிசுக்க ஆரம்பித்தான்..

"ச்சீ.." சுசித்ரா விரல் கொண்டு முகம் மூடினாள்..

அவளது கை விரல்களை விலக்கி.. வெட்கம் ததும்பும் அவளது முகத்தை ரசித்தான் வாசுதேவன்.. அந்த நொடியில் அவனது ஆலிங்கனத்தை மட்டும் நினைவில் கொண்டு அதில் திளைத்திருந்த மனைவியின் நாண முகம் அவனுக்கு போதையைத் தந்தது.. மலருக்கு நிகரானவளைக் கசக்கி முகர ஆரம்பித்தான்.. அழுத்தமான அவனது முத்தங்களில் கசங்கியது அவளுடல்.. பருகப் பருகத் தீராத தாகம்.. ஸ்பரிசங்கள் மூட்டிய தீயில் அடங்காத குளிர்.. இறுக்கி அணைத்தும் தீராத வேட்கை..

வாசுதேவன் காட்டுத் தீயாகப் பரவினான்.. அவனது வேகத்தைத் தாங்க முடியாமல் யானை புகுந்த வனமாக சின்னா பின்னமானாள் சுசித்ரா... புயலில் சிக்கிய பூங்கொடியாக களைத்துக் கிடந்தவளை விடுவிக்க மனமில்லாமல் மோகத்துடன் அவளைத் தனக்குள் புதைத்துக் கொண்டான் அந்த மூர்க்கன்.. அவளுள் புதைந்தான்..

"சுசித்ரா.."

கூடலில் சிறு அழைப்புக்குக் கூட தாபத்தைக் கிளப்பும் சக்தி இருக்குமா..?

"ம்ம்ம்.."

"ஐ லவ் யு.."

"ஐ லவ் யு டீ.."

தன்னையுமறிhயத முணுமுணுத்தவளின் காதலில் வாசுதேவனின் மனம் களித்தது.. மனதார அவள் காதல் சொன்னாள் என்பதை மனமார உணர்ந்தான் வாசுதேவன்.

"இந்த வாழ்க்கை முழுதும் நீ வேணும்டி.."

"எனக்கும்தான்.."

"நீ என்னுடையவள்.."

"ட்ரூ.."

"உன்னை எதற்காகவும் விட்டுக் கொடுக்க மாட்டேன்.."

"அது போதும் எனக்கு.."

"எனக்குப் போதாதே.."

"எது..?"

வாசுதேவன் 'எது அது' என்று அவளது காதுகளில் ஓத சுசித்ரா கிளர்ந்தாள்.. புரண்டு அவனது மார்பில் முகம் புதைத்து அவன் மீது கொடி போல படர்ந்தாள்.. அது அவனது ஆண்மைக்கான வெற்றி என்பதில் மமதையோடு அவளைத் தன்னுடன் இறுக்கிக் கொண்டான் வாசுதேவன்.. பேச்சுக்களற்ற மௌனம்.. அவளும் அவனும் மட்டுமே உலவிய பிரபஞ்சம்.. அவன் மார்பில் முகம் புதைத்த நிலையில் அவனது அணைப்பில் அடங்கி உறங்கிப் போனாள் சுசித்ரா.. நண்பகல் கடந்த வேளையில் வாசுதேவன் எழுப்பியதில் விழித்துப் புரண்டு அவன் மார்பில் மோவாய் பதித்து அவன் முகம் பார்த்து..

"என்னவாம்..?" என்று சிணுங்கினாள்.

"குளித்து டிரஸ் சேன்ஜ் பண்ணிக்க.." அவளது முகத்தில் விழுந்த முடிக் கற்றையை ஒதுக்கி விட்டபடி மென்மையாகச் சொன்னான் வாசுதேவன்..

"தூக்கம் தூக்கமா வருதே.." குழந்தையாகக் கெஞ்சினாள் சுசித்ரா..

"கொஞ்ச நேரம்தான்.. நைட்டாகிரும்.. அப்போச் சீக்கிரமாத் தூங்க வந்து விடலாம்.. இது கிராமம் பாரு.. நம்மைப் பார்க்க ஆள்கள் வந்துக்கிட்டே இருப்பாங்க.. நாம ரொம்ப நேரம் மாடி ரூமில் இருக்கக் கூடாது.." எடுத்துச் சொன்னான் அவன்..

"ஆஹா.. இவர் நைட்டில் தூங்க விட்டு விடுவாராம்.. கதை விடறிங்களா..?" அவனது மூக்கைத் திருகினாள்..

"ஏய்.." அவளைக் கட்டி முத்தமிட்டவனுக்கு சொர்க்கம் தெரிந்தது..

விலக மனமில்லாமல் விலகி எழுந்தார்கள்.. சுசித்ரா குளியலறைக்குள் புகுந்து விட வாசுதேவன் மெத்தை விரிப்பை சரிசெய்து விட்டு தண்ணீர் ஜக்கை எடுத்து தம்ளரில் சரித்தான்.. தொண்டை வறண்டிருந்தது கூடத் தெரியாமல் சல்லாயித்திருந்த நினைவில் புன்னகையுடன் தண்ணீரைப் பருகினான்.. ஜன்னலோரமாகச் சென்று திரை விலக்கி கதவுகளைத் திறந்து விட்டான்.. ஆற்றங்கரையும்.. இரு கரைகளையும் தொட்டு ஓடும் ஆறும் தெரிந்தன.. மனது குளிர்ந்து.. கனவில் பார்த்த தேவதை அவனது கையருகில்.. வாழ்க்கைத் துணையாக.. இதைவிட வேறென்ன வேண்டும்..?

அனிச்ச மலர் என்று ஆராதித்தவனிடமே அவள் அடைக்கலம் எனச் சரணடைந்து விட்டாள்.. அவளது மென்மை தெரிந்து காதலித்தவனின் கரம் பிடித்து நீயே சகலமும் என்று பின்பற்றி விட்டாள்.. இதைவிட வேறென்ன வேண்டும்..?

வாழ்க்கையின் போக்கில் வாழ்ந்து கொண்டிருந்தவனை அந்த வஞ்சிக் கொடி கவர்ந்திழுத்தாள்.. எல்லாம் இருந்தும் எதுவும் இல்லாதவளாக.. அனைத்தையும் தொலைத்து தானும் தொலைந்து போனவளாக.. தன்னைத்தானே அனாதையாக்கிக் கொண்டு தனித்து நின்றவளை அவன் தன் குடும்பத்தில் சேர்த்து விட்டான்.. தொலைத்த சந்தோசம் திரும்பக் கிடைத்தவளாக அவனது குடும்பத்தின் மருமகளாக.. அவனைப் பெற்றவர்க்கு மரு 'மகளாக..'

அடியெடுத்து வைத்து இணைந்து விட்டாள்.. அவனோடு இசைந்து இணைந்து விட்டாள்.. இதைவிட வேறென்ன வேண்டும்..?

"அப்படியே விசுவாமித்திர முனிவர் தவம் செய்கிறதைப் போலவே இருக்கு.."

கிண்கிணிச் சிரிப்பில் திரும்பிப் பார்த்தான்.. ஈரக் கூந்தலைத் துவாலையில் சுற்றிக் கட்டி புடவையை அரை குறையாகச் சுற்றி குளியலறையிலிருந்து அவள் வெளிப்பட்டுக் கொண்டிருந்தாள்..

"விசுவாமித்திரனை எங்கே தவம் செய்ய விடுகிறாங்க..? மேனகையை அனுப்பிக் குடும்பம் நடத்த வைத்து விடறாங்களே.." போலியாக அலுத்துக் கொண்டான் வாசுதேவன்..

"அடேங்கப்பா.. ஐயாவுக்கு அதில் ரொம்த்தான் வருத்தம் போல.." இமைகளைக் கொட்டினாள் சுசித்ரா..

"வருத்தம்தான்.. இந்த ரூமை விட்டு வெளியே போக வேண்டியிருக்கேங்கிற வருத்தம்.." சோகம் காட்டினான்..

"அதுதானே பார்த்தேன்.." மோகனமாய் அவள் சிரிக்கக் கிறங்கிப் போனவன்.. அவளை ஆழ்ந்து பார்க்க.. அவள் ஒற்றை விரலை உயர்த்தி..

"வேண்டாம்.. இப்பத்தான் குளிச்சுட்டு வந்திருக்கேன்.." என்று எச்சரித்தாள்..

"இன்னொரு தரம் குளித்தா ஆகாதா..?"

"ஆகாது அத்தான்.. எனக்கு சட்டுன்னு கோல்டு அட்டாக் ஆகிரும்.."

சுசித்ரா மூக்கை உறிஞ்சிக் காண்பிக்க..

"நடிகைடி நீ.." என்று ஏமாற்றத்துடன் சொன்னான்..

"இருந்துட்டுப் போறேன்.. இப்ப நீங்க குளிக்கப் போங்க.." அவள் விரட்டினாள்..

"உனக்குத் தூக்கம் தூக்கமா வருதுன்னு சொன்னியே.."

"குளிச்சதில தூக்கம் ஓடியே போயிருச்சு.."

"நீ டிரஸ் மாத்திக்கனுமே.."

"மாத்திக்கிட்டுத்தானே இருக்கேன்.."

"நான் ஹெல்ப் பண்ணவா..?"

"என்னது..?"

புடவையை அள்ளி மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டு அவனை மேலும் கீழுமாக சந்தேகப் பார்வை பார்த்தாள்..

"ஏய்ய்.. நான் உன் புருசன்டி.."

"இது என்ன மந்திரமா..? சொல்லிக்கிட்டே இருக்கீங்க.."

"பின்னே.. என்னவோ உன்னை ரேப் பண்ண வந்த வில்லனைப் பார்க்கிறதைப் போல இந்தப் பார்வை பார்த்து வைக்கிற..?"

"ச்சீ.. அசிங்கமாப் பேசாதீங்க.."

"அப்படி என்னடி பேசிட்டேன்..?"

அடுத்து அவன் அப்படிப் பேசினேனா.. இப்படிப் பேசினேனா என்று பச்சை நிறங்களை பரவ வைத்து விடுவான் என்பதில்..

"உஸ்ஸ்.." என்று வலது கையின் ஆள்காட்டி விரலை உதட்டில் வைத்து அவனை தடை செய்தாள்..

"பாருடா.. லேடி டான் அதட்டல் போடறதை.."

"பெண்டாட்டின்னு ஆகிட்டாலே லேடி டான்தான்.."

"இந்தப் பூனையும் மில்க் சாப்பிடுமான்னு இருந்துட்டு இப்பப் புலிவேசமா கட்டற..?"

"யெஸ் மிஸ்டர் வாசுதேவன்.."

"அத்தான்னு கூப்பிட்டதெல்லாம் அவ்வளவுதானா..?"

"எல்லாப் பொத்தானையும் அப்புறமாப் பாத்துக்கலாம்.. குளிக்க ஓடுங்க.."

'குச்சியெடுத்து அடிக்காத குறைதான்..'

ஷவரின் நீர்வீழ்ச்சியில் உடல் நனைய நின்றிருந்த வாசுதேவன் சிரித்துக் கொண்டான்.. மனமெல்லாம் அவள் நினைவு.. நினைத்தாலே இனிக்கும் என்பது இதுதானா..?

ஈரத்தலையில் நீர் சொட்ட வெளியே வந்தான்.. சுசித்ரா புடவை கட்டி முடித்திருந்தாள்.. அவனுக்கு ஏமாற்றமானது..

"நான் வருகிறதுக்குள்ள ஏன் கட்டி முடிச்ச..?"

அவள் செய்யக் கூடாத தவறை செய்து விட்டதைப் போல சினந்தான்.. அவள் செல்லமாக முறைத்தபடி இடுப்பைத் தொடும் அளவில் வெட்டி விடப் பட்டிருந்த முடியைப் பின்னிக் கொண்டிருந்தாள்.. வாசுதேவன் தலையைச் சிலுப்ப.. முடியிலிருந்த நீர்த்துளிகள் அவள் முகத்தில் சாரலாய் தெளித்தன.. இமைமூடி.. மூக்கைச் சுருக்கிச் சிலிர்த்தாள்..

"இந்தச் சேட்டையை ரோஜா படத்தில அரவிந்தசாமி செய்தாச்சு.. நிறைய கதைகளிலயும் எழுதியாச்சு.."

"அதெல்லாம் தியரிடி.. இது பிராக்டிகல்.."

"ஹலோ மிஸ்டர் பிராக்டிகல் மேன்.."

"இது வேறயா..?"

"எல்லாம் தெரிகிற இண்டலிஜென்ட்டுக்கு ஈரத் தலையைத் துவட்டனும்னு தெரியாதா..?"

"ஈரத்தலையை பெண்டாட்டிதான் துவட்டி விடனும்னு தெரியும்.."

"ஊஹீம்..?"

வசீகரமாக புருவங்களை உயர்த்தி வினவிய சுசித்ரா கணவனைக் கைநீட்டி அழைத்தாள்..

"வாங்க.."

அவன் அதுதான் சாக்கென்று அவள் மீது முகம் புதைக்க..

"இதுதானே வேண்டாம் என்கிறது.." என்று காதலுடன் தள்ளி உட்கார வைத்து அவனது தலையைத் தன் சேலை முந்தானையால் துடைத்து விட ஆரம்பித்தாள்.

"பட்டுச் சேலைடி.." வாசுதேவன் அறிவுறுத்தினான்.

"இருக்கட்டுமே... என் பட்டு அத்தானுக்கு பட்டாலேதான் தலை துவட்டனும்.." ஆசையுடன் அவனது உச்சந்தலையில் இதழ் பதித்தாள் சுசித்ரா..

வாசுதேவன் அவளது இடுப்பை வளைத்து அவள் மீது முகம் புதைத்துக் கொள்ள.. விலக்கி விடாமல் இசைவாக நின்றாள்..

"கீழே போக வேணாமா..?"

மென்மையாக அவள் நினைவுறுத்தியதில் விலகி எழுந்த வாசுதேவனின் கண்களில் காதல் நிரம்பியிருந்தது.. அண்ணாந்து அவனது கண்களுடன் கண்கலந்த சுமித்ராவின் விழிகள் அவனது காதலுக்குக் குறைவில்லாத காதலை பிரதிபலித்தன... இருவரும் இணைந்து மாடிப்படிகளில் இறங்கியபோது காத்திருந்த கிராமத்துப் பெண்கள் மங்கலமாக குலவையொலியை எழுப்பினார்கள்..

"அப்புடியே மீனாட்சியும் சொக்கநாதரும் வர்றதைப் போலவே இருக்குடி கண்ணம்மா.."

"நம்ம பெருமாளும் மகாலட்சுமியும் போலன்னுள்ல நான் நினைச்சேன்.. என்னடி சொர்ணம்.."

"நீ வேறக்கா.. ரதியும் மன்மதனும்ன்னு என் மக சொன்னா.."

"அது ஆருடி ரதியும்.. மன்மதனும்..?"

"சினிமாவில வர்ற ஈரோவும், ஈரோயினுமா இருக்கும்க்கா.. நமக்கு என்னத்தத் தெரியுது.."

ஆதிலட்சுமிபுரத்துப் பெண்களின் உரையாடலை செவி மடுத்த சுசித்ராவுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.. வசுமதியைப் பார்த்தாள்.. அவள் உதட்டில் விரலை வைத்து சிரித்து விடாதே என்று சமிக்ஞை செய்தாள்.. சுசித்ராவுக்கு வாழ்க்கைதான் எவ்வளவு அழகாக இருக்கிறது என்று ஆனந்தம் உண்டானது..

40

ஃ வடிவத்தில் போடப்பட்டிருந்த மூன்று கற்கள்.. அதன் மீது ஆரோகணித்திருந்த பித்தளைப் பானை.. அடியில் செருகப்பட்டிருந்த விறகுகள்.. அது பற்றிக் கொள்ளத் தோதாக பரப்பப் பட்டிருந்த சுள்ளிகள்.. ஆதிலட்சுமிபுரத்துப் பெண்களின் அடையாளமான மங்கலக் குலவையொலி..!

"இந்த மியுஸிக்கை எப்படிப் பண்றாங்க..?"

சுசித்ரா வசுமதியிடம் சந்தேகம் கேட்க.. பக்கத்திலிருந்த அகிலன் வாய் விட்டுச் சிரித்தான்.. எதற்குச் சிரிக்கிறான் என்று புரியாமல்..

"என்னங்கண்ணா..?" என்று கேட்டாள் சுசித்ரா..

வசுமதிக்கும் சிரிப்புத்தான் என்றாலும் அடக்கிக் கொண்டாள்.. வாய் விட்டுச் சிரித்தால் சுசித்ராவின் மனம் சங்கடப்படக் கூடும்.. இதுபோன்ற குலவையொலிகளை அவள் எங்கே கேட்டிருக்கப் போகிறாள்..?

"நாக்கை ஒருமாதிரிச் சுழட்டிச் சவுண்டு எழுப்பறாங்க சுசித்ரா.." பொறுமையாக விளக்கம் சொன்னாள்..

சுசித்ராவும் செய்து பார்த்தாள்.. காற்றுத்தான் வந்தது.. இப்போது அகிலன் பலமாகச் சிரித்தான்.. வசுமதி கணவரின் முதுகில் ஓங்கி ஒரு மொத்து வைத்தாள்..

"அண்ணா பாவம் அண்ணி.." சுசித்ரா பரிந்து பேசினாள்..

"இவரா பாவம்..? நீ அப்பாவியாய் இருக்கலாம் சுசித்ரா.. இம்புட்டு அப்பாவியா இருக்கக் கூடாது.."

"போங்க அண்ணி.."

சுசித்ரா செல்லமாக சிணுங்கிக் கொண்டிருக்க..

"மருமகளை வந்து அடுப்பைப் பத்த வைக்கச் சொல்லுங்க.." என்ற குரல் வந்தது..

குலதெய்வ கோவிலின் முன்னால் இருந்த மரத்தின் அடியில் இருந்த மேடையில் வாகாக கால்களை ஆட்டிக் கொண்டு அமர்ந்திருந்த சுசித்ரா யாரைக் கூப்பிடுகிறார்கள் என்று திரும்பிப் பார்த்தாள்.. அகிலனின் சிரிப்பு வலுத்தது..

"உன் அண்ணனுக்கு அடி வாங்கிக் கொடுத்துக்கிட்டே இருக்கனும்ங்கிற முடிவோட இருக்கிற.." வசுமதி அலுத்துக் கொண்டாள்..

"ஏன் அண்ணி..?" அப்பாவியாக சுமித்ரா கேட்டாள்.

"மருமகள்ன்னா.. 'டாட்டர் இன் லா'ன்னு அர்த்தம்.."

"அது எனக்குத் தெரியுமே.."

"அது தெரிஞ்ச உனக்கு.. அவங்க உன்னைத்தான் கூப்பிடறாங்கன்னு ஏன் தெரியலை..?"

"என்னைக் கூப்பிடறாங்களா..? என் பெயரைச் சொல்லிக் கூப்பிடலையே அண்ணி.."

"பண்ணையார் வீட்டு மருமகளின் பெயரைச் சொல்லி எப்படிக் கூப்பிடறதுன்னு மரியாதை காட்டிக் கூப்பிடறாங்க சுசித்ரா.. நீ இந்த ஆதிலட்சுமி புரத்து மருமகள்தானே..?"

"நைஸ்.. ஐ லைக் இட்.."

தலையைச் சரித்துச் சொன்ன சுசித்ரா இருந்த இடத்தை விட்டு அசையவில்லை.. மறுபடியும் அவளை அழைக்க..

"நான் போகனுமா..?" என்று வசுமதியிடம் கேட்டாள்..

"ஆமாம்ப்பா.. நீதானே குலதெய்வத்துக்கு பொங்கல் வைக்கனும்..?"

"நானா..?" அச்சத்துடன் மருண்டு விழித்தாள் சுசித்ரா..

"பயப்படாதே.." ஆதரவாகப் புன்னகைத்தாள் வசுமதி..

"என்னை கூப்பிடறாங்களே.."

"உன்னைத்தான் கூப்பிடுறாங்கன்னு சொன்னேனே.."

"என்னை எதுக்குக் கூப்பிடறாங்க..?"

"மறுபடியும் முதல்ல இருந்து ஆரம்பிக்கனுமா..? முடியலை.. தலையைச் சுத்துது சுசித்ரா.."

"எனக்காக அண்ணி.. ப்ளீஸ்.."

"அதாவது சுசித்ரா.. எங்க கிராமத்தில ஒரு வழக்கம்.. புதிதாக் கல்யாணமாகி வர்ற மருமகள் குலதெய்வத்துக்கு பொங்கல் வைக்கனும்.. இப்பவாவது புரியுதா செல்லம்..?"

வசுமதி சொன்னது புரிந்ததோ இல்லையோ.. அவள் சொன்ன விதம் சுசித்ராவுக்குப் பிடித்திருந்தது.. என்ன செய்வதென்று புரியாமல் விழித்தபடி நின்றவளின் பார்வை வாசுதேவனைத் தேடியது.. நண்பர்களின் மத்தியில் நின்றிருந்த வாசுதேவன் அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.. பயம் பூசிய அவளது முகத்தைக் கண்டதும் புருவங்களை உயர்த்தி விழிகளால் என்னவென்று வினவினான்.. சுசித்ரா செய்த சைகை புரியாமல் நண்பர்களிடம் சொல்லி விட்டு மனைவியின் அருகில் வந்தான்..

"என்னடி..?"

பட்டு வேட்டியை மடித்துக் கட்டியபடி கம்பீரமாக அவன் நின்ற தோற்றம் சுசித்ராவை மயக்கி வசீகரித்தது..

"அண்ணி ஏதோ சொல்கிறாங்களே.." வசுமதியை கை காட்டினாள்..

"என்னக்கா சொன்ன..?" வாசுதேவன் கோபமாக சண்டைக்குப் போவதைப் போலக் கேட்டான்..

"ஆமடா.. பிறந்தப்பவே உன் பெண்டாட்டி கையைப் பிடிச்சுக்கிட்டேதான் பிறந்ததைப் போல சண்டைக்கு வா.. உன் பெண்டாட்டியை யாரும் இங்கே ஒன்னும் சொல்லலை.. பொங்கல் வைக்கக் கூப்பிடறாங்கன்னு தான் சொன்னேன்... உண்மையா, பொய்யான்னு விசாரிச்சுக்கோ.." பதிலுக்கு சண்டைக்குப் போனாள் வசுமதி..

"இவ்வளவுதானா..? இதுக்கும் மேலே இருக்கா..? துணைக்கு வேண்டும்ன்னா மாமாவையும் நிஷாவையும் கூப்பிட்டுக்கயேன்.."

"அதை நீ சொல்லி நான் செய்ய வேண்டியதில்லை.. சொடக்குப் போட்டா போதும்.. என் புருசன் களத்தில் இறங்கி விடுவார்.."

"சும்மா நிக்கிற சிங்கத்தைச் சொடக்குப் போட்டுக் களத்தில் இறங்க வைக்கனும்னு பிளான் பண்ற..?"

"எக்ஸாக்ட்லி.. இதை நான் சும்மா விடறதா இல்லை.."

"எதை..? பொங்கல் பானையையா..? அதுசரி.. மாமா சிங்கம்ன்னா நீ யாரு..?"

"புலி..! பெண் புலி..! நீங்கள் புலி வாலைப் பிடித்து விட்டீர்கள் மிஸ்டர் நல்ல தம்பி..!"

"புலி வாலா..? இந்த வாலைச் சொல்றியா..?"

நிஷாவைக் காட்டிய வாசுதேவன் அவளைக் குனிந்து தூக்கி..

"இதோ.. பிடித்துட்டேன்.." என்று தோள் தட்டினான்.

அதுவரை அக்காவும் தம்பியும் சண்டை போடு கிறார்களோ என்ற கலக்கத்துடன் கைகளைப் பிசைந்தபடி நின்றிருந்த சுசித்ரா அப்படி இல்லையென்பதில் இமை கொட்டினாள்..

"இவளைப் பாரு.." என்று சிரித்த வாசுதேவன் நிஷாவை இறக்கி விட்டு விட்டு மனைவியின் கையைப் பிடித்து இழுத்து..

"யாமிருக்க பயமேன்.." என்று அபயமளித்தான்..

"யாமிருக்க பயமேன்னுல்ல நீ சொல்லனும்.. புராஜெக்ட் முடிக்கிறதப் பத்தி உனக்குத் தெரியும்.. பொங்கல் வைக்கிறதைப் பத்தி என்ன தெரியும்..?" வசுமதி கேலி செய்தாள்..

"எல்லாம் தெரியும்.. நீ வாடி தங்கம்.."

வாசுதேவன் தோள் தட்டியதில் மயங்கிப் போனாள் சுசித்ரா.. வேட்டியை மடித்துக் கட்டியதில் தெரிந்த அவனது கால்களின் திண்மை அவளை லஜ்ஜை கொள்ளச் செய்ததென்றால் பட்டுச் சட்டையின் அழகில் வெளிப்பட்ட அவனது தோள்களின் திண்மை அவளைக் கிறக்கம் கொள்ளச் செய்தது.. சில்லென்று மேனி தழுவிய தென்றல் காற்றில் அவனது முடி பறந்ததில் அவள் தன் மனதைப் பறி கொடுத்தாள்.. அவனது கழுத்தை வளைத்து இழுத்து எம்பி அவனது கன்னத்தில் முத்தமிடும் ஆசை மனதில் தோன்றிப் பாடாய் படுத்தியது.. சுற்றிலும் ஆள்கள் இருக்கும் நினைவில் தன்னை அவள் கட்டுப்படுத்திக் கொண்டாலும் அவளது விழிகளில் தெரிந்த காதலின் தடுமாற்றத்தை வாசுதேவன் கவனித்து விட்டான்.. அவனது விழிகள் மின்னின.. ரகசியமாகக் கண்ணடித்து அவளது மயக்கத்தை அதிகரித்து வைத்தான்..

"டேய்.. இது கோவில்.. உன் ரொமான்ஸை ஏறக் கட்டிட்டு பொங்கல் வைக்க உன் பெண்டாட்டிக்குச் சொல்லிக்கொடு.." வசுமதி அவன் தோளைத் தட்டினாள்.

கனவிலிருந்து விழித்தவளைப் போல இமை கொட்டிய சுசித்ரா உதட்டைக் கடித்தபடி தலை குனிந்தாள்.. வாசுதேவனோ அருகில் ஆள்கள் இருக்கும் உணர்வின்றி சுசித்ராவை அள்ளிப் பருகுவதைப் போல பார்த்து வைத்தான். சுசித்ரா திணறிப் போனாள்..

"இவன்தான் இப்படின்னா நீ இவனுக்கு மேலே இருக்கிற.. புதுமருமகள் பொங்கல் வைக்கனும்.. நினைவிருக்கா இல்லையா..?" வசுமதி தம்பி மனைவியைச் சீண்டினாள்..

"அது வந்து.. இங்கே கேஸ் ஸ்டவ்வும், குக்கரும் இல்லையே.." சுசித்ரா தேடினாள்..

"வெயிட்.. வெயிட்.. இதுதான் எங்க ஊர் பொங்கல் வைக்கிற கேஸ் ஸ்டவ்.." வசுமதி ஃ வடிவத்திலிருந்த கற்களைக் காட்டினாள்..

"இதுவா..?" சுசித்ரா மலைத்தாள்..

"இதுவேதான்.. அப்புறம் இது பொங்கல் வைக்க வேண்டிய பானை.."

"இதை என்ன செய்யனும்..?"

அப்பாவியாக சுசித்ரா கேட்டதில் வாசுதேவனும் வசுமதியும் கூட்டணி போட்டுக் கொண்டு ஒருவர் கையை ஒருவர் தட்டிச் சிரித்துக் கிண்டல் செய்தார்கள்.. தாயும், தாய்மாமனும் எதற்காகச் சிரிக்கிறார்கள் என்று தெரியாமலே நிஷாவும் கூட்டணியில் சேர்ந்து கொண்டு சிரிக்க ஆரம்பித்தது..

"தெரியாமல்தானே கேட்கிறேன்.." சுசித்ராவுக்கு கண்கள் கலங்கிவிட்டன..

"டேய் வாசு.. இவ அழுகிறாடா.."

"மக்கு.. இதுக்குப் போய் கண்ணைக் கசக்குவியா.."

வாசுதேவன் மனைவியை அணைத்துக் கொண்டான்.. மற்றவர்கள் இருப்பதைப் பொருட்படுத்தாமல் அவன் அணைத்துக் கொண்டது சுசித்ராவுக்கு ஆறுதலாக இருந்தது..

"சாஸ்திரத்துக்கு அடுப்பைப் பற்றவை.. மற்றதை அம்மாவும்.. அக்காவும் நம்ம உறவுக்காரங்களும் பார்த்துக்குவாங்க.."

"லைட்டர் எங்கே..?"

"இங்கே லைட்டரெல்லாம் யூஸ் பண்ணக் கூடாது.. பிடி தீப்பெட்டியை.. வத்திக்குச்சியைக் கொளுத்திப் போடு.. பத்திக்கும்.."

சுசித்ரா.. ஒன்று, இரண்டு, மூன்று என்று வத்திக்குச்சிகளைக் கொழுத்திப் போட்டுக் கொண்டே இருந்தாள்.. அடுப்பு பற்றிக் கொள்ளவில்லை..

"என்னடா இது.. உன் பெண்டாட்டிக்கு பத்த வைக்கத் தெரியலை.."

"பாவம்க்கா இவ.. இந்தப் பத்த வைக்கிற வேலையெல்லாம் இவளுக்குச் சுட்டுப் போட்டாலும் வராது.."

"நம்ம ரூபாகிட்ட டிரெயினிங் அனுப்புவோமா..?"

அக்காவும் தம்பியும் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று புரியாமல் திருதிருத்தாள் சுசித்ரா.. வாசுதேவன் சிரித்து விட்டு..

"இப்படிப் பற்ற வைக்கனும்.." என்று சொல்லித் தந்தான்..

அடுத்து சுசித்ரா கொளுத்திப் போட்ட வத்திக்குச்சி பற்றிக் கொண்டது..

"பத்த வைக்கிறதில நீ மன்னன்டா.." என்று பாராட்டினாள் வசுமதி..

"வஞ்சப் புகழ்ச்சியா..?"

"சேச்சே.."

அரட்டை அடித்தபடி அவர்கள் வைத்த பொங்கல் அமோகமாகப் பொங்கி கோதாவரியின் மனதை குளிர வைத்தது.. அம்மனுக்கு பொங்கலைப் படைத்து அபிஷேக ஆராதனைகள் நடத்தினார்கள்.. தீப ஒளியில் ஜொலித்த அம்மனின் முகம் 'வா மருமகளே.. எம் குலம் தழைக்க வாழ வா..' என்று அருள் பாலித்து அழைத்ததைப் போல இருந்தது.. சுசித்ரா பக்திப் பரவசமானாள்.. இதுபோன்ற நுண்ணிய உணர்வுகள் வேய்ந்த வாழ்க்கை

கிடைப்பதென்பது வரம்..! அவள் வரம் கிடைக்கப் பெற்றவள்..

அன்று மாலை ஊர் விருந்து நடந்தது.. பூபதியின் பங்களாத் தோட்டதில் கலை நிகழ்ச்சிகள் நடந்தன.. வாசுதேவன் ஒட்டி உரசி உட்கார்ந்திருக்க கிராமிய மணம் கமழும் நடனங்களைப் பார்ப்பது சொர்க்கம் போல இருந்தது சுசித்ராவுக்கு..

"சித்தாடை கட்டிக்கிட்டு..

சிங்காரம் பண்ணிக்கிட்டு..

மத்தாப்பூ சுந்தரி ஒருத்தி

மயிலாக வந்தாளாம்.."

கண்டாங்கிச் சேலையைக் பின் கொசுவம் வைத்துக் கட்டிக் கொண்டு அழகான கிராமத்துப் பெண்கள் ஆடியபடி சுசித்ராவை இழுத்துக் கொள்ள அவள் தயக்கத்துடன் பின்வாங்க முயன்றாள்.. அதற்குள் மல்லுவேட்டியை மடித்துக் கட்டியிருந்த இளைஞர்கள் வாசுதேவனை இழுத்துவர.. பெண்கள்..

"அத்தானைப் பார்த்து

அசந்து போயி நின்னாளாம்.."

என்று வாசுதேவனைப் பார்த்ததும் ஆசையுடன் நின்று விட்ட சுசித்ராவைச் சுற்றிக் கும்மியடித்தார்கள்..

"முத்தாக அரும்பெடுத்து

முழநீள சரம் தொடுத்து..

சித்தாடை சுந்தரி கழுத்தில்

முத்தாரம் போட்டானாம்..

கெத்தாகப் பேசி

இள மனசைத் தொட்டானாம்.."

இளைஞர்கள் வாசுதேவனை சுசித்ராவின் பக்கம் தள்ளிவிட.. பெண்கள் சுசித்ராவை வாசுதேவனின் மீது தள்ளி விட்டார்கள்.. தடுமாறி விழப் போனவளை வாசுதேவன் தாங்கிப் பிடித்துக் கொள்ள அனைவரும் சிரித்தார்கள்.. அது சந்தோசமான தருணமாக இருந்தது.. சுசித்ரா வெட்கத்துடன் விலகி நிற்கப் போனாள்.. பெண்கள் விடவில்லை.. கேலிப்பாடல் பாடினார்கள்..

"குண்டூசீ போல ரெண்டு

கண்ணும் உள்ளவளாம்

முகம் கோணாமல் ஆசை அன்பாய்

பேசும் நல்லவளாம்.."

அவர்களில் ஒருத்தி வாசுதேவனுக்கு அத்தைமகள் முறையாம்... அவள் சன்னமான பொறாமையுடன் சுசித்ராவை ஓர் இடி இடித்து..

"அந்த கண்டாங்கிச் சேலைக்காரி

கை காரியாம்..

அந்தக் கள்ளி அத்தானைக்

கல்யாணம் பண்ணிக் கொண்டாளாம்.."

என்று உதட்டைக் கோணி அழகு காட்டியபடி பாடினாள்.. சுசித்ரா என் புருசன்தான், எனக்கு மட்டும்தான் என்ற ரீதியில் வாசுதேவனைப் பற்றிக் கொண்டாள்..

"அஞ்சாத சிங்கம் போலே..

வீரம் உள்ளவனாம்

யானை வந்தாலும் பந்தாடி

ஜெயிக்க வல்லவனாம்..

அந்த முண்டாசுக்காரன் கொஞ்சம்

முன் கோபியாம்..

ஆனாலும் பெண்ணென்றால் அவன்

அஞ்சிக் கெஞ்சி நிற்பானாம்.."

வாசுதேவன் சிங்கம் போலதான் இருந்தான்.. இளைஞர்களின் கேலியைப் பொருட்படுத்தாமல் சுசித்ராவின் தோள்மீது கைபோட்டு நின்றான்..

"முந்நூறு நாளை மட்டும்..

எண்ணிக் கொள்ளுங்க.."

பெண்கள் இமைசிமிட்ட.. இளைஞர்கள்.. "ஓஹோ.." என்ற குரல் எழுப்பி..

"அதன் பின்னாலே என்ன ஆகும்

நீங்க சொல்லுங்க.."

என்று கேட்டார்கள்..

"இந்த ரெண்டோடு ஒன்று சேர்ந்து

மூணாகுங்க.."

பெண்கள் பாடியதன் பொருள் உணர்ந்து சுசித்ரா வெட்கித் தலைகுனிய வாசுதேவன் பலமாக சிரித்தான்.. சுசித்ரா அவன் கையைக் கிள்ளினாள்..

"அதைக் கண்டு சந்தோசம்

கொண்டாடிப் பாடப் போறாங்க.."

இப்போது வாசுதேவன் சுசித்ராவை முடுக்கி விட்டு ஆட ஆரம்பிக்க சுசித்ராவும் வாசுதேவனும் நடனக்குழுவுடன் இணைந்து கொண்டார்கள்.. அகிலனும் வசுமதியும் கைகளைத் தட்டி அவர்களின் கொண்டாட்டத்தில் பங்கு கொள்ள.. பெரியவர்கள் அதை ரசித்தார்கள்..

"டிட்டு.. டிட்டு.. டிட்டிட்டான்.."

நையாண்டி மேளத்தின் தாள லயத்துக்கு ஏற்ப நடன அசைவுகளைக் மாற்றி ஆடி முடித்ததும் சுசித்ராவின் மனதில் சந்தோச அயர்வு வந்து கும்மாளமிட்டது..

இதுபோன்ற ஓர் பொழுது டிஸ்கொதே நடனத்தில் கிடைக்குமா என்று அவளது மனம் கேள்வி எழுப்பியது..

மறுநாள் காலையில் புடவைகளையும், வேட்டி சட்டைகளையும் புதுமணத் தம்பதிகள் கையில் கொடுத்து ஊர் மக்களுக்கு வழங்கச் செய்தார் பூபதி.. சென்னைக்குத் திரும்பும்போது வாசுதேவனின் தோள்மீது தலைசாய்த்து விழி மூடிக் கொண்ட சுசித்ராவின் மனம் நிறைந்திருந்தது..

இதுவல்லவோ வாழ்வு..! இதை மீறிய சந்தோசத்தை ஸ்விட்சர்லாந்தின் தேனிலவுப் பொழுது கொடுத்து விடுமா என்ன..?

41

மேகவர்ண பிரிண்டட் புடவையில் தேவதை போல இருந்தாள் சுசித்ரா.. அதிக வேகமின்றி காரை ஓட்டிக் கொண்டிருந்தாள்.. கை தேர்ந்த டிரைவரின் லாவகத்தோடு காரை ஓடித்து வளைத்துத் திருப்பியவளின் நெற்றி வகிட்டில் குங்குமம் மின்னியது.. யாரும் அவளைக் கட்டாயப் படுத்தவில்லை.. கோதாவரியும், வசுமதியும் நெற்றி வகிட்டில் அழுத்தமாக குங்குமம் இட்டுக் கொள்ளும் வழக்கம் உள்ளவர்கள்.. அவர்களைப் பார்த்துத் தானாக சுசித்ராவும் நெற்றி வகிட்டில் குங்குமம் இட்டுக் கொண்டதில் ஆச்சரியப்பட்டுப் போனவர்கள் அவளை வாத்சல்யமாக பார்த்து வைத்ததில் சுசித்ரா பரவசப் பட்டுப் போனாள்.. அதன்பின் ஒவ்வொரு முறை ஒப்பனை செய்து கொள்ளும் போது அவளது விரல் அனிச்சையாகக் குங்குமத்தைத் தொட்டு நெற்றி வகிட்டில் இட்டுக் கொள்வது வழக்கமாகி விட்டது..

சிக்னலுக்காக கார் நின்றது.. காரின் முன் பக்கக் கண்ணாடியில் அவளது உருவம் தெரிந்தது.. மலர்ந்த முகமும், செழித்த தேகமுமாக அவளது அழகு அவளையே வசீகரித்தது.. இவ்வளவு அழகா நான் என்று வியந்து

போனாள்.. வாசுதேவனின் மனைவியாவதற்கு முன்பு இத்தனை அழகும் எங்கே போயிருந்தது..? கொண்டாடப் பட்டால்தான் சொந்த அழகும் மிளிர ஆரம்பிக்குமோ..

"மயக்கறடி.."

காதோரம் அவன் முணுமுணுப்பதைப் போல இருந்தது.. வெட்கத்தில் சிவந்த முகம் சோபையைக் கூட்டியதில் இன்னும் அழகாகத் தெரிந்தாள்.. இந்த இரண்டு மாதங்களில் அவன் கற்றுக் கொடுத்திருந்த கலைகளை நினைத்தவளுக்கு லஜ்ஜையாக இருந்தது..

'வெட்கம் கெட்டவன்..'

அந்த வெட்கம் கெட்டவனுடன் கழித்த தேநிலவுப் பொழுது இனிமை நிரம்பியதாக இருந்தது.. ஒரு நொடிகூட அவளை விட்டு விலகாமல் அடை காத்தான் வாசுதேவன்.. சுவிட்சர்லாந்தில் அவன் அப்பிய அப்பை எவரும் வித்தியாசமாகப் பார்க்கவில்லை.. அங்கிருந்த ஜோடிகள் அவனை விட அப்போ அப்பென அப்பிக் கொண்டிருந்தது அவனுக்கு வசதியாகப் போய்விட்டது..

'ஐ லவ் யு வாசு..'

மனதார நினைத்தவளுக்கு அவனை உடனே பார்க்க வேண்டும் போல இருந்தது.. அது முடியாது என்பதில் ஏக்கம் கொண்டாள்.. மாலைதான் அவனைப் பார்க்க முடியும்.. அவர்கள் தேநிலவு முடிந்து வந்தவுடன் சுசிந்திரன் - மாதங்கியின் திருமணம் நடந்து முடிந்தது.. மாதங்கியுடன் தேநிலவுக்குக் கிளம்பிய சுசிந்திரன் சுசித்ராவிடம் கம்பெனியின் முக்கிய வேலைகளை ஒப்படைத்து அவளை 'ஆக்டிங் எம்.டி..' யாக்கி விட்டுச் சென்றிருந்தான்.. அவன் திரும்பி வந்து பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்வரை சுசித்ரா கம்பெனியைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்தாக வேண்டும்.. வாசுதேவனைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.. திருமணத்திற்காக இரண்டு மாதங்கள் தொடர் விடுப்பு எடுத்திருந்ததை ஈடு கட்ட காலையில் சீக்கிரம் கிளம்பி.. மாலையில் தாமதமாக வந்து கொண்டிருந்தான்.. வந்தவுடன் அவளைத் தேடுவான்.. நாள்

முழுவதும் பிரிந்திருந்ததை வருடக் கணக்கில் பிரிந்திருந்ததைப் போல ஆதங்கப்பட்டபடி அவளை இறுக்கி அணைத்து முத்தமழையில் நனைய வைப்பான்.. அதன் பின்னால் இருவருமே வசுமதியையும் அவளது குட்டிக் கண்ணனையும் பார்க்கப் போய் விடுவார்கள்.. நிஷாக்குட்டியிடம் தம்பிப்பாப்பாவை எப்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும்.. எப்படி விளையாட வேண்டும் என்று கற்றுக் கொடுப்பார்கள்.. அப்படிச் செய்வது புதிதாக பிறந்திருக்கும் தம்பியின் மீது நிஷாவுக்குப் போட்டியுணர்வும் பொறாமையும் ஏற்படாமல் செய்து தமக்கையென்ற பாச உணர்வை ஏற்படுத்தும் என்று வாசுதேவன் சொல்லியிருந்தான்..

அவர்கள் தேநிலவு முடிந்து திரும்பி வந்த இரண்டாம் நாள் வசுமதிக்கு பிரசவ வலி வந்தது.. வாசுதேவன்

வீட்டில் இல்லை.. அப்போதுதான் கம்பெனியிலிருந்து திரும்பியிருந்த சுசித்ரா உடனடியாக வசுமதியைக் கைத்தாங்கலாகத் தாங்கிக் காரில் ஏற வைத்தாள்.. கோதாவரி தேவையான பொருள்களைப் பையில் நிரப்பிக் கொண்டு நிஷாவுடன் ஓடி வந்தாள்.. பூபதியும் கூட வர மருத்துவமனைக்கு கார் விரைந்தது.. இரவு முழுவதும் சுசித்ரா வசுமதியின் பக்கத்திலேயே இருந்தாள்.. அதிகாலையில் குட்டிக் கண்ணன் பிறந்து விட்டான்..

"அண்ணி.. நம்ம நிஷாவுக்குத் தம்பி பிறந்திருக்கான்.."

தூக்கமின்றி சிவந்த கண்களும், வீங்கிய இமைகளுமாக கைகளில் குழந்தையை ஏந்திக் குனிந்து வசுமதியிடம் சுசித்ரா காண்பித்த போது வசுமதி குழந்தையுடன் சேர்த்து சுசித்ராவைத் தாய்மை பொங்கப் பார்த்தாள்.. மிகப் பெரும் கோடிஸ்வரி... தன்

அனைத்து அடையாளங்களையும் மறந்து வாசுதேவனின் குடும்பத்தில் ஒருத்தியாக மாறிப் போயிருந்ததில் வசுமதியின் மனம் பாசம் கொண்டது..

"உன் செலக்சன் என்றைக்குமே பெஸ்ட்டாத்தான் இருந்திருக்கு வாசு.. கல்யாண விசயத்தில நீ அவசரப்பட்டு

விட்டியோன்னு நினைத்தேன்.. நீ ஆசைப்படறன்னுதான் சப்போர்ட் பண்ணினேன்.. பட்.. நீ இதிலும் சோடை போகலை.. சுசித்ரா தங்கம்டா.. நாங்க வலை போட்டுத் தேடியிருந்தாலும் இப்படி ஒரு குணவதியைக் கண்டு பிடித்திருக்கவே முடியாது.."

வாசுதேவனின் கைகளைப் பிடித்துக் கொண்டு சொன்னாள் வசுமதி.. பெருமிதத்துடன் மனைவியைப் பார்த்தான் வாசுதேவன்.. கணவனின் பார்வையைக் கவனிக்காமல் நிஷாக்குட்டியை மடியில் அமர்த்திக் கதை சொல்லிக் கொண்டிருந்தாள் சுசித்ரா..

நிஷா அத்தையிடம் ஒட்டிக் கொண்டிருந்தாள்.. குருவிகளையும், மைனாக்களையும், பூக்களையும், மழையையும் அவளைப் போலவே குழந்தை மனதுடன் நேசிக்கும் அத்தையை அவளுக்குப் பிடித்துப் போயிருந்தது.. வசுமதிக்கு குட்டிக் கண்ணன் பிறந்த பின்னால் சுசித்ரா நிஷாக்குட்டியிடம் அதிக நெருக்கம் காட்டினாள்.. குழந்தையைக் காண்பித்து கதை சொல்ல ஆரம்பித்தாள்..

"நிஷாக்குட்டிக்கு தம்பிப் பாப்பான்னா உயிராம்.. அவளோட அம்மாவுக்கு வாசு மாமா இருக்கிறதைப் போல நிஷாக்குத் தம்பிப் பாப்பா வந்திருக்கிறானாம்.."

இப்படிக் கதை சொல்லியவளிடம் வாசுதேவன் காரணம் வினவியபோது, அவள் கணவனின் விரல்களோடு தன் விரல்களைப் பிணைத்தபடி..

"இத்தனை நாளா நிஷா மட்டுமே அண்ணா, அண்ணியின் குழந்தையா இருந்தா.. அதனால அவங்களோட ஒட்டு மொத்த பாசமும் நிஷா மீதே இருந்தது.. இப்ப நிஷாவுக்குத் தம்பிப் பாப்பா பிறந்திருக்கான்.. பச்சைக் குழந்தைமேலேதான் பேரண்ட்ஸோட கவனம் திரும்பும்.. அதில நிஷா லோன்லியா ஃபீல் பண்ணி விடக் கூடாது.. தம்பி மேல ஜெலஸ் வந்து விடக் கூடாது.. இவளும் பேரண்ட்ஸோடு சேர்ந்து தம்பிப் பாப்பாவைக் கொஞ்சனும்..

அதுக்குத்தான் இந்தக் கதையெல்லாம்.." என்று சொன்னான்..

மனைவியின் புத்திகூர்மையில் மகிழ்ந்து போன வாசுதேவன்..

"உன்னை ஒன்னும் தெரியாத பச்சை மண்ணுன்னு நினைத்தேண்டி.. ஆனா செம விவரம்ன்னு அசத்தறடி.." என்று இருபொருள்படக் கூறியபடி கண்சிமிட்டினான்..

"ச்சீய்.." அவன் மார்பில் செல்லமாகக் குத்தி விட்டு முகம் புதைத்துக் கொண்டாள் சசித்ரா..

வாசுதேவனிடம் அவள் காட்டிய நெருக்கமும், காதலும் அவளுடைய பிறந்த வீட்டினருக்குச் சந்தோசத்தைத் தந்தன.. மகனும், மகளும் பிடித்தமான வாழ்வை வாழ்வதைப் பார்ப்பதை விடப் பெற்றவர்களுக்கு வேறு என்ன கொடுப்பினை இருக்க முடியும்..? அபத்தமான காரணங்களுக்காக சுசித்ரா தன்னைத்தானே தனிமைப் படுத்திக் கொள்ள.. தங்கைக்காக சுசீந்திரன் தன்னைத் தனிமைப் படுத்திக் கொள்ள.. என்று சுசித்ராவின் பிறந்த வீட்டில் பிரளயம் வெடித்திருந்ததே.. அது இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய் பூங்காவனமாக மாறியது எப்படி..?

"ஃங்கீய்.."

சிக்னல் விழுந்து விட்டதைக் கவனிக்காமல் சிந்தனையுடன் இருந்து விட்டாள் போல.. பின்னாலிருந்த வண்டிகளின் ஹாரன் ஒலி காதைப் பிளந்து.. அவசரமாக காரைக் கிளப்பிய போதுதான் அவனைப் பார்த்தாள்.. அவனா இல்லை 'அது' வா..? இறந்து போனவன் உயிர்த்து வர சாத்தியமுண்டா..? சுசித்ராவின் காரை ஒட்டி டூ வீலரில் பறந்து வந்து விலகிப் போனது பிரசன்னாவா..?

சுசித்ராவுக்குள் உதறலெடுத்தது.. குளிர் ஜீரம் வந்தவளைப் போல நடுங்கினாள்.. போதாக்குறைக்கு பல்லவியிடமிருந்து அவளுக்குப் போன் வந்தது.. சுசித்ராவின் செல்போன் நம்பர் அவளுக்குத் தெரியாது..

அலுவலக தொலைபேசி நம்பரை எப்படியோ தெரிந்து கொண்டு அதில் பேசினாள் பல்லவி.. அவள்தான் பேசுகிறாள் என்று தெரியாமல் போனை எடுத்த சுசித்ரா..

"ஹலோ.." என்று சொல்லிவிட..

"உன் சிம் கார்டை மாத்திட்டா என்னிடமிருந்து விலகிப் போய் விடலாம்ன்னு நினைக்கறியா..?" என்று போனில் சீறினாள் பல்லவி..

"பல்.. பல்லவியா..?" சுசித்ராவின் குரல் நடுங்கியது.

அண்ணியென்று அழைக்க முடியவில்லை.. வசுமதியை 'அண்ணி' யென்று அழைக்கும் வாயால் பல்லவியை அண்ணியென்று அழைப்பதா..?

"பல்லவியா..? பெயர் சொல்லிக் கூப்பிடுற அளவுக்கு வந்துட்டியா..? அதுசரி.. புதுப்புருசன்.. புது அண்ணி.. பழசெல்லாம் மறந்துதானே போகும்..?"

பல்லவியின் வார்த்தைகளில் வெளிப்பட்ட இகழ்ச்சியில் பொங்கி விட்டாள் சுசித்ரா..

"புதுப் புருசனா..? பழைய புருசன்னு எனக்கு யாருமில்லை.. மைண்ட் இட்.. அண்ணின்னு கூப்பிட்டது ஒரு மரியாதைக்காக.. அதையே கடைசி வரைக்கும் ஃபாலோ பணண்னும்ங்கிற அவசியமில்லை.. இனி இதுபோல பேசாதீங்க.."

"ஓ..! பழைய புருசன்னு உனக்கு யாருமில்லையா..? அதானே.. உன்னையே நினைத்து.. உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் கனவில ஓடிவந்து.. தானும் செத்து என் புருசனையும் சாகடித்த பிரசன்னா உனக்கு யாருமில்லைதான்.. செத்தவன் வந்து கேள்வி கேட்க மாட்டான் என்கிற தைரியம்..? ஊம்..?"

'செத்தவன் வந்து கேள்வி கேட்பானா..? இத்தனை நாள்களாக பேசாமல் இருந்தவள் இன்றைக்கு ஆபிஸ் போன் நம்பரைக் கண்டு பிடித்து இந்தக் கேள்வியைக் கேட்பது ஏன்..?'

சுசித்ராவின் முதுகுத் தண்டுவடம் ஜில்லிட்டது.. பயத்தில் உறைந்து போனாள்.. அவள் காலையில் பார்த்தது பிரசன்னாவையா..? அச்சத்தில் உடல் நடுங்க.. அதை மறைக்கப் பிரயத்தனப் பட்டபடி..

"உங்க தம்பி இறந்ததுக்கு நான் பொறுப்பில்லை பல்லவி.. நான் உங்க தம்பியைக் காதலிக்கவே இல்லை.. விசம் குடித்துச் செத்துப் போய் விடுவேன்னு உங்க தம்பி மிரட்டியதாலே மறுப்புச் சொல்லாம இருந்தேன்.. அவனோட காதலை.. அது காதலான்னு எனக்குத் தெரியலை.. நான் ஏத்துக்கவே இல்லை.. 'மேரேஜ் பண்ணக்கலாம் வா' ன்னு அவன் கூப்பிட்டபோது ஆஹா, அதுக்கென்னன்னு நான் ஓடி வந்து விடவில்லை.. என் வீட்டில்தான் இருந்தேன்.. மறந்து விட வேண்டாம்.."

"நீ மறந்துட்ட.. பிரசன்னாவை மறந்துட்ட.."

"அவனை என்றைக்கு நான் நினைத்தேன்..? மறப்பதற்கு..?"

"பிரசன்னாவை அவன், இவன்னு சொல்கிற.. என்னைப் பெயர் சொல்லிக் கூப்பிடுகிற.. எங்கிருந்து வந்தது இந்த தைரியம்..?"

"பிளாக் மெயிலரை அவன், இவன்னு சொல்லாம வேறு எப்படிச் சொல்வாங்க..? நீங்க அவனோட அக்கா.. உங்க பெயர் பல்லவிதானே..? கரெக்டாத்தானே கூப்பிடறேன்..?"

"வேண்டாம் சுசித்ரா.. கல்யாணம் பண்ணிச் செட்டிலாகி விட்டோம்ங்கிற திமிரில் ஆடாதே.. என்னைப் பற்றியும் பிரசன்னாவைப் பற்றியும் உனக்குத் தெரியாது.."

"உண்மைதான்.. பட்.. தெரியாததை தெரிய வைக்க என் ஹஸ்பெண்ட் என்னுடன் இருக்கிறார்.. ஸோ.. அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்.."

"இந்த ஆணவம் உனக்கு நல்லதில்லை சுசி.."

"கால் மி சுசித்ரா.. இன்னும் சொல்லப் போனா உங்க தகுதிக்கு நீங்க என்னைப் பெயர் சொல்லியே கூப்பிடக் கூடாது.. என் தயவில் நீங்க வாழ்ந்துக்கிட்டு இருக்கீங்க..

அதை நினைவில் வைத்துக்கிட்டு மேடம்ன்னு கூப்பிட்டுப் பழகுங்க.."

"சுசித்ரா.."

"நோ, நோ.. மேடம்.."

சுசித்ரா போனைத் துண்டித்து விட்டு தன் பிஏவை அழைத்தாள்..

"யெஸ் மேம்.." என்று வந்து நின்றவளிடம்..

"எனக்கு வரும் லேண்ட்லைன் போன் கால்ஸை என்கொயர் பண்ணி என்னிடம் பர்மிசன் கேட்டு விட்டுத்தான் கனெக்ட் பண்ணனும் என்கிற அறிவு இல்லையா..?" என்று எரிந்து விழுந்தாள்..

"ஸாரி மேம்.."

"ஐ டோன்ட் லைக் திஸ் வெர்டு.. இனியொரு முறை அன்னெஸஸரி கால்ஸ் என்னை டிஸ்டர்ப் பண்ணினால் நான் நானா இருக்க மாட்டேன்.. சிவியர் ஆக்சன் எடுத்து விடுவேன்.. அது உங்க சஸ்பெண்ட் ஆர்டராக் கூட இருக்கலாம்.. கெட் அவுட்.."

சுசித்ரா போட்ட சப்தத்தில் அவளுடைய பிஏ ஆடிப் போய் விட்டாள்.. சுசீந்திரன்தான் கடுமை காட்டுவான்.. சுசித்ரா மென்மையாகப் பேசுவாள்.. கடிந்து ஒர் வார்த்தை சொல்ல மாட்டாள்..

'மேடம் இப்படிக் கோபப் படறாங்களே..'

மனம் நொந்து சீட்டில் உட்கார்ந்தவளின் முன்னால் இருந்த லேண்ட் லைன் போன் ஒலித்தது.. எடுத்துக் காதில் வைத்தாள்..

"யாரும்மா நீ..? சுசித்ராகிட்டப் போனைக் கொடு.." அதிகாரமாக ஒலித்தது பல்லவியின் குரல்..

"முதலில் நீ யாருன்னு சொல்லு.." சுசித்ராவிடம் மாத்து வாங்கியிருந்த கோபத்துடன் கேட்டாள் பி.ஏ.

"அட.. இப்பத்தான் அவகூட பேசிக்கிட்டு இருந்தேம்மா.. பேசிக்கிட்டு இருக்கிறப்பவே போனை கட் பண்ணிட்டா.. போனை அவளிடம் கொடு.."

"நீதானா அது..?"

இந்த ஒற்றைக் கேள்வியைத் தொடர்ந்து சுசித்ராவின் பிஏ பல்லவியை ஆங்கிலத்தில் திட்டிய திட்டுக்களை எழுத்தில் சொல்வது நாகரிகமாக இருக்காது.. பல்லவி பள்ளிக்கல்வியைக் கூட முடித்திராதவள்.. ஆங்கிலத்தை மட்டும் அனாசியமாக பேசுவாள்.. நுனி நாக்கு ஆங்கிலத்தில் பின்னிப் பெடலெடுப்பாள்.. ஆங்கிலத்தில் உள்ள அனைத்துப் பச்சை வார்த்தைகளும் அவளுக்கு அத்துபடி.. அவளுக்கேத் தெரியாத வார்த்தைகளைப் பேசித் தள்ளி அவள் காதைப் பொத்த வைத்து விட்டாள் சுசித்ராவின் பிஏ.. பல்லவி அயர்ந்து விட்டாள்..

"எங்கே போன் பண்ணி யாரைப் பெயர் சொல்லி, அவள், இவள்ங்கிற.. போலிஸ்க்கு போன் பண்ணினேன்னு வை.. ஒன் அவரில உன்னை டிரேஸ் பண்ணி உள்ளே தூக்கிப் போட்டிருவாங்க.. அடச்சீ.. வை போனை.."

சுசித்ராவின் பிஏ கத்திய கத்தலில் பல்லவி பயந்து போய் போனை வைத்து விட்டாள்..

'இவளை விடக் கூடாது..' அவளது முகம் ஜிவுஜிவுத்தது..

அன்று மாலை வீடு திரும்பிய சுசித்ரா தன் அறைக்கு உடை மாற்றப் போன போது ஜன்னல் வழியாக தோட்டத்தைப் பார்த்தாள்.. அவளது உடல் தூக்கிப் போட்டது.. அங்கே கருப்பு நிற உடையில் பிரசன்னா நின்று மாடியறையின் ஜன்னலையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"வீல்.."

சுசித்ரா அலறி மயங்கிச் சரிந்தாள்..

சுசித்ரா கண் விழித்துப் பார்த்த போது வசுமதியின் மடியில் இருந்தாள்.. அருகில் கவலையான முகத்துடன் பூபதியும், கோதாவரியும் நின்றிருந்தார்கள்.. அத்தைக்கு என்னவாகிற்று என்று விழித்தபடி தாயின் கழுத்தைக் கட்டிக் கொண்டு நிஷா, மொச்சைக் கொட்டைக் கண்களை விரித்து மிரட்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தது..

"ஸாரி அண்ணி.." சுசித்ரா எழுந்து உட்கார்ந்தாள்..

"ஸாரியெல்லாம் இருக்கட்டும்.. எதுக்காக பயந்து அலறின..?" வசுமதி தம்பி மனைவியின் முகத்தைத் தன் இரு கைகளாலும் தாங்கி விழிகளை உற்றுப் பார்த்துக் கேட்டாள்..

"ஒன்றும் இல்லையண்ணி.." சுசித்ராவின் உடல் நடுங்கியது.. ஜன்னலை அனிச்சையாகப் பார்த்துக் கொண்டாள்..

அதைக் கவனித்து விட்ட வசுமதி ஜன்னலை மூடும்படி கோதாவரியிடம் கண்ஜாடை செய்தாள்.. சுசித்ரா எழுந்து நின்றாள்.. கூடவே எழுந்து கொண்ட வசுமதி..

"அம்மா.. ரூபாவிடம் சூடா காபி கொடுத்து அனுப்புங்க.. நீங்க குட்டிக் கண்ணன் பக்கத்தில இருங்க.. வாசு வருகிற வரைக்கும் நான் சுசித்ராவின் ரூமில் இருக்கேன்.." என்றாள்..

"எதுக்கு அண்ணி.. நீங்க போங்க.." வாய் வார்த்தைக்குத்தான் சொன்னாள் சுசித்ரா.. வசுமதி கூட இருந்தது அவளுக்கு மலையளவு ஆறுதலாக இருந்தது..

"போகலைன்னா என்ன பண்ணுவ..?" விளையாட்டாகக் கேட்டபடி அங்கிருந்த சோபாவில் உட்கார்ந்து நிஷாவை பக்கத்தில் இழுத்துக் கொண்டாள் வசுமதி..

மனநிம்மதியுடன் குளியலறைக்குள் புகுந்த சுசித்ரா.. குளித்து உடைமாற்றி வந்தாள்.. சூடான காபியும் உளுந்த வடையும் அவளுக்காக காத்திருந்தன.. பசியை உணர்ந்தவள் அவசரமாக அதை வயிற்றுக்குள்

தள்ளுவதை கனிவுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் வசுமதி.. அவள் மனதில் ஒரே வினாதான் சுழன்றது..

'இவ எதைப் பார்த்து பயந்தா..?'

அதைப் பற்றிப் பேசாமல் நிஷா செய்யும் சேட்டைகளைப் பற்றி அவள் பேச.. மெல்ல, மெல்ல உரையாடலில் ஆழ்ந்து விட்ட சுசித்ரா, பயத்தை மறந்து சிரித்துப் பேச ஆரம்பித்தாள்.. போர்டிகோவில் கார் வந்து நிற்கும் ஒலி கேட்டது..

"வாசு வந்துட்டான்.." என்றாள் வசுமதி..

தாயைத் தேடும் குழந்தையின் தவிப்பு சுசித்ராவின் முகத்தில் வந்தது.. யோசனையானாலும் சுசித்ரா வாசுதேவனிடம் மனம் விட்டுப் பேசுவாள்.. வாசுதேவன் எப்படியும் சுசித்ராவின் பிரச்னைக்கு தீர்வைக் கண்டு பிடித்து விடுவான் என்ற நிம்மதி வசுமதியின் மனதில் எழுந்தது.. அதற்கு மேல் கணவன் மனைவியின் அன்யோன்யத்தில் தலையிடக் கூடாது.. அது அநாகரிகம்.. சுசித்ரா தாயைத் தேடும் கன்றாய் வாசுதேவனைத் தேடுகிறாள்.. இதுவே போதும்.. இதைவிட ஒரு தமக்கைக்கு வேறென்ன வேண்டும்..?

"அக்கா.."

வசுமதியை அழைத்தபடி அறைக்குள் நுழைந்த வாசுதேவனின் கண்கள் சுசித்ராவின் முகத்தில் கூர்மையாகப் படிந்தன.. அடிபட்ட குழந்தை அம்மாவிடம் ஒப்பிக்கத் தயாராக இருப்பதைப் போல சுசித்ராவின் உதடுகள் துடித்தன.. விழிகள் கலங்கின..

"ஏண்டா லேட்..?"

"லேட்டாகிருச்சு.."

"ஆஹா.. என்ன அருமையா விளக்கம் சொல்றான் பாரு.. பிழைத்துக்குவடா.. தள்ளு.. நான் நிஷாவுக்குச் சாப்பாடு ஊட்டித் தூங்க வைத்துட்டுக் குட்டிக் கண்ணனையும் கவனிக்கனும்.."

"பிள்ளைகுட்டிக்காரின்னு பெருமை காட்டற..?"

"இன்னும் ரெண்டொரு வருசத்தில நீயும் பெருமை காட்டுவ.."

தம்பியின் தலையில் செல்லமாக ஒரு கொட்டு வைத்து விட்டு மகளைக் கையில் பிடித்துக் கொண்டு வெளியேறினாள் வசுமதி.. மனைவியின் அருகில் வந்தான் வாசுதேவன்..

"என்னடி..?" என்றான்..

அந்த ஒற்றை வார்த்தைக்காகவே காத்திருந்ததைப் போல மடை உடைந்த வெள்ளமாக கதறி அழுதபடி கணவனின் மார்பில் சாய்ந்தாள் சுசித்ரா.. அவளது முடி கோதி அமைதிப் படுத்த முயன்றபடி..

"என்னன்னு சொல்லுடி.." என்று வற்புறுத்தினான் வாசுதேவன்..

சுசித்ரா சொன்னாள்.. காலையில் சிக்னலில் பிரசன்னாவைப் பார்த்ததைப் போல இருந்ததில் இருந்து.. பல்லவி போன் செய்து மிரட்டியது.. மாலையில் அவர்கள் வீட்டுத் தோட்டத்தில் பிரசன்னாவைப் பார்த்தது என்று அனைத்தையும் சொல்லிப் பதறினாள்.. அவளது உடல் கிடுகிடுவென நடுங்கியது..

"இவ்வளவுதானே..?" இலகுவாக கேட்டான் வாசுதேவன்..

"ஈஸியாக் கேக்கறிங்களே.."

"வேற எப்படிக் கேட்கச் சொல்கிற..? இதை நான் எதிர்பார்த்துத்தான் இருந்தேன்.."

"என்ன சொல்கிறீங்க..?"

"உன்னிடம் சொல்ல வேண்டாம்ன்னுதான் இருந்தேன் சுசித்ரா.. எவ்வளவு புத்திசாலிப் பெண் நீ.. உன் அண்ணன் சென்னையில் இல்லாத இந்த நேரத்தில் எவ்வளவு திறமையாக உங்க கம்பெனிகளை நிர்வாகம் பண்ணுகிறாய்.. அம்மாவும் அப்பாவும் உன்னைக்

கொண்டாடறாங்க.. அக்கா நீதான் பெஸ்ட் மருமகள்ன்னு சர்டிபிகேட்டே கொடுத்திருச்சு.. இப்பேற்பட்ட நீ எப்பேற்பட்ட ஏமாளியா இருந்திருக்கேன்னு சொல்ல எனக்கு மனம் வரலைடி.. அதுதான் தப்பாப் போயிருச்சு.. ஒரு காவாலிப் பயலைப் பார்த்து நீ பயந்து அலறி மயக்கம் போடற லெவலுக்குப் போயிருக்க.."

"புரிஞ்சுதான் பேசறீங்களா..? அது.. அது.."

"'அது' இல்லைடி.. அவன்.."

"அவன்தான் 'அது..'"

"முட்டாள்.. பிரசன்னா சாகலைடி.. உயிரோடதான் இருக்கான்.."

"என்னது..???!!!"

சுசித்ரா மறுபடியும் மயங்கி விழப் போக.. அவளைத் தாங்கி அலேக்காக தன் கைகளில் தூக்கிக் கொண்ட வாசுதேவன் அவளைப் படுக்கையில் கிடத்திப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான்.. சுசித்ரா அவனது இடுப்பைக் கைகளால் வளைத்து அவன் மடியில் முகம் புதைத்துக் கொண்டாள்.. மனைவியின் முதுகைத் தட்டிக் கொடுத்தபடி வாசுதேவன் பிரசன்னாவும், பல்லவியும் செய்த பித்தலாட்டத்தைச் சொல்ல ஆரம்பித்தான்..

"இந்த வாசுதேவனை என்னன்னு நினைத்த..?"

"என் புருசன்னு நினைத்தேன்.."

சுசித்ராவின் பதிலில் சொக்கிப் போனான் அவன்.. சுசித்ரா ஹஸ்பெண்ட் என்றுதான் சொல்லுவாள்.. 'புருசன்' என்று அரிதாகத்தான் சொல்லுவாள்.. அந்த அரிதான தருணங்கள் ஒவ்வொன்றும் வெகு விசேசமானவை.. அந்தத் தருணத்தையும் அதுபோன்றதொரு விசேசமான தருணமாக அவளது பதில் மாற்றியிருந்தது..

வாசுதேவன் குனிந்து அவளது பின்னங்கழுத்தில் முத்தமிட்டான்.. அவள் சிலிர்த்து அவனது இடுப்பை இறுக்கிக் கொண்டாள்..

"நீ அனிச்ச மலர் சுசித்ரா.. மென்மையானவள்.. இரக்கமானவள்.. இப்படிப்பட்ட குணம் படைத்தவர்களிடம் பணம் அதிகமாக இருக்காதுன்னு சொல்வாங்க.. இல்லை பணக்காரங்க உன்னளவுக்கு மென்மையா, இரக்க குணம் உள்ளவங்களா இருக்கிறது அரிதுன்னு கூடச் சொல்லலாம்.. அதிசயத்திலும் அதிசயமா நீ பணக்காரியாவும் இருக்கிற.. மென்மையான இரக்க மனதுடனும் இருக்கிற.. இதை பிரசன்னா கண்டுக்கிட்டான்.."

"அதுதான் தெரியுமே.. ஆனா ஏன் அவன் என்னை ஏமாத்தனும்..? பயமுறுத்தனும்..?"

"குப்பை மேட்டைக் கிளறும் நாய்க்கு வைரத்தின் மதிப்புத் தெரியுமா..? உனக்குப் பூப்போட்டு ஆராதனை செய்யவும் ஒரு தகுதியிருக்கனும்.. அவனுக்கு ஏது அந்தத் தகுதி..? திருடிப் பிழைக்கிறவனுக்கு உன் குணம் கண்ணுக்குத் தெரியலை.. பணம் தான் தெரிஞ்சிருக்கு.. அதைக் கைப்பற்ற உன் இரக்க குணத்தை யூஸ் பண்ணிக்கிட்டான்.. நீ நம்பறதைப் போல கதை சொல்லி அவனை ராபன் ஹீட் மாதிரி காட்டிக் கொண்டான்.. உன்னை ஏமாற்றிக் காதலிக்க வைக்கலாம்ன்னு பிளான் பண்ணினான்.. அவனுடைய கெட்ட நேரமோ இல்லை உன்னுடைய நல்ல நேரமோ உனக்கு அவன்மேல காதல் வரலை.."

"ப்ளீஸ்.. அதைச் சொல்லாதீங்க.. குமட்டிக்கிட்டு வருது.. அவனோட அக்கா, அவன் செத்துருவான்னு பயமுறுத்தினதில தலையை ஆட்டி வைச்சேன்.. அவன் தான் என்னைப் பார்க்கலைன்னா பாய்சன் குடித்து விடுவேன்னு பயமுறுத்தி வைத்திருந்தானே.."

"செத்தாச் சாகட்டும்ன்னு விட வேண்டியதுதானே.. அயோக்கிய ராஸ்கல்.. அவன் செத்துப் போவானா..? சிரிப்புத்தான் வருது.."

"அவனோட அக்கா பல்லவி அப்படித்தான் சொன்னாங்க.."

"முதலில் அவ அவனோட அக்காவே இல்லை.. அது தெரியுமா உனக்கு..? அவளைப் போய் அவங்க

இவங்கன்னு மரியாதை கொடுத்துப் பேசிக்கிட்டு இருக்கிற.."

"என்னங்க சொல்கிறீங்க.. அவங்க.."

"அவங்களா..?"

வாசுதேவன் முறைத்த முறைப்பில் "தப்பு.. தப்பு.." என்று கன்னத்தில் போட்டுக் கொண்ட சுசித்ரா..

"அவ.. அவனோட அக்கா இல்லையா..?"

"இல்லை.."

"பிரசன்னா, பல்லவின்னா, அக்கா தம்பி பாசத்துக்கு அடையாளம்ன்னு வாய்க்கு வாய் சொல்லுவாளே.."

"அந்த ஜென்மங்கள் அக்கா, தம்பியும் இல்லை.. அதுகளோட பெயர் பிரசன்னா.. பல்லவியும் இல்லை.."

"என்னது..?"

அதிர்ச்சியில் இமை கொட்டினாள் சுசித்ரா.. அவளது வாழ்வின் மூன்று வருடங்களைத் திருடிக் கொண்டவர்களின் உண்மையான பெயர், உறவு கூடத் தெரியாமல் அவள் தனிமைத் தவம் புரிந்தாளா..?

"யெஸ் மை டியர்..! அந்தப் பொறுக்கியோட பெயர் ஏரியாவுக்கு ஏரியா மாறுமாம்.. போலிஸ் ரிகார்டில மன்னார்ன்னு பெயர் இருக்கு.." என்றான் வாசுதேவன்..

"மன்னாரா..?" சுசித்ராவின் முகம் விளக்கெண்ணையைக் குடித்ததைப் போல ஆகிவிட்டது.

"என்ன ஆச்சு..? மூஞ்சி இப்படிக் கோணுது..? பெயர் நல்லா இல்லையா..?" அமர்த்தலாக விசாரித்தான் வாசுதேவன்..

"அவன் மட்டும் நல்லாவா இருந்தான்..? மன்னார்ங்கிற பெயரை வைத்துக்கிட்டு பிரசன்னான்னு பீலா விட்டானே.. நானும் அதை நம்பித் தொலைத்தேனே.. அதான் மனது தாங்கலை.."

"இதுக்கே புலம்பினா எப்படி..? இன்னும் நிறைய இருக்கு.."

"சொல்லுங்களேன்.."

"சொல்லத்தானே ஆரம்பித்திருக்கிறேன்.. எல்லாவற்றையும் சொல்லித்தான் ஆகனும் சுசித்ரா.. இல்லைன்னா நீ தேவையில்லாத பயத்திலும் மன உளைச்சலிலும் மாட்டிக்குவ.. இதுவரை நீ அனுபவித்த மனச் சித்திரவதைகள் போதும்.. இனியும் அது

கண்டினியூ ஆகக் கூடாது.. அவங்களைப் பத்தின ஃபுல் என்கொயரியையும் முடித்து விட்டு அப்புறமாச் சொல்லலாம்ன்னு நினைத்ததுதான் தப்பாகி விட்டது.."

"ஃபுல் என்கொயரியா..?"

"ம்ம்ம்.. நீ சொன்ன கதையைக் கேட்ட பின்னால் நான் சும்மா இருப்பேன்னா நினைத்த..? இல்லை சுசித்ரா.. இதில் நிறையப் பொய்கள் ஒளிந்திருக்கக் கூடும்ன்னு என் மனது சந்தேகப்பட்டது.. டிடக்டிவ் ஏஜன்ஸி ஒன்றை அப்ரோச் பண்ணினேன்.. விசாரிக்கச் சொன்னேன்... அவங்க கொஞ்சம் கொஞ்சமா டீடெயில்ஸைக் கொடுத்துக்கிட்டே இருந்தாங்க.. மன்னார் ஜெயிலில் இருந்து ஜாமினில் வெளி வந்திருக்கிறான் என்கிற நியூஸை ஈவினிங்தான் சொன்னாங்க.. இனியும் டிலே பண்ணக்கூடாது.. இதுவரை விசாரித்திருக்கும் விவரங்களை உன்னிடம் சொல்லி அலர்ட் பண்ணி வைக்கனும்ன்னு ஏர்லியராக் கிளம்பி வந்தேன்... அவன் அதுக்குள்ள உன்னை பயமுறுத்திட்டான்.."

"அவன் ஜெயிலில் இருந்தானா..?"

"ம்ம்ம்.. கொலைக் கேஸில் சிக்கி உள்ளே போயிட்டான்.. அதைத்தான் அவன் செத்துட்டான்னு பொன்னாத்தா உன்னிடம் ரீல் சுத்தியிருக்கா.. நீயும் ஏமாளியாகி அவளைத் தூக்கிச் சுமந்திருக்க.. என்னதைச் சொல்ல..?"

"பொன்னாத்தா..? யாரு அது..?"

"நீ அண்ணி, அண்ணின்னு உறவு கொண்டாடிக் கிட்டு இருந்தியே.. அந்தப் பார்ட்டிதான் பொன்னாத்தா.."

"அப்பப் பல்லவி..?"

"ஊம்..? விளக்குமாத்தோட பட்டுக்குஞ்சலம்..! அடித்தேன்னா பாரு.. ஏண்டி இப்படி இருக்கிற..? ஈஸியா ஏமாந்திருக்கிற.. அவ கேஸீடி.. சிங்காரி, சொப்பன சுந்தரின்னு இவளுக்கும் ஏரியாவுக்கு ஒரு பெயர் இருக்கு.. போலிங் ரிகார்டில இருக்கிற பெயர் பொன்னாத்தா.."

"அவங்க வீட்டுக்குப் பக்கத்தில இருந்தவங்க பிரசன்னா, பல்லவின்னுதான் சொல்லுவாங்க.. அவங்க பிறந்து வளர்ந்த தெருவாம்.."

"அப்படின்னு இதுக சொல்லிக்கா..? இல்லை அக்கம் பக்கத்தில இருக்கிறவங்க சொன்னாங்களா..?"

"இவங்க வீட்டுக்கே ரேராத்தான் போவேன்.. இதில அக்கம் பக்கத்து வீடுகளில யார் பேசறது..? எனக்கு அதெல்லாம் பழக்கமில்லையே.."

இமைகளை விரித்த சுசித்ராவின் மீது பரிதாபத்துடன் கூடிய கோபம் ஏற்பட்டது.. வாசுதேவன் மனைவியை முறைத்தான்..

"உன் லெவலுக்கு இப்பேற்பட்ட கழிசடைகளோட பழக்கம் வைத்துக்கலாமா..?"

"நானா பழகினேன்..?"

"இரக்கப்படறதையும் தகுதியறிந்து இரக்கப்படனும் சுசித்ரா.. இனியாவது ஜாக்கிரதையாய் இரு.."

"இப்பத்தான் நீங்க என் பக்கத்தில இருக்கீங்களே.."

சுசித்ரா வாசுதேவனின் மார்பில் சாய்ந்து முகம் புதைத்துக் கொண்டாள்.. மனைவியின் நம்பிக்கை நிரம்பிய நிம்மதியில் மனம் நிறைந்த வாசுதேவன் அவளது உச்சந்தலையில் முத்தமிட்டான்..

"அது அவன் பிறந்து வளர்ந்த தெருவில்ல.. நீ யாரிடமும் விசாரிக்க மாட்டாய் என்பதை தெரிந்து வைத்துக் கொண்டு கதை அளந்திருக்கிறான்.. பொன்னாத்தாவும் அவனும்

சேர்ந்து சில மோசடிகளைச் செய்து பணம் பார்த்திருக்கிறார்கள்.. அந்தப் பழக்கத்தில் இவனுக்கு அக்காவாக நடிக்க வந்தவள் அவள்... மும்பையில் பணக்காரக் கணவன் அது இது என்ற கதை சொல்லி உன்னை மன்னாருக்கு கல்யாணம் பண்ணி வைத்து விட்டால் அவளுக்கு இவன் பணம் தருவதாகச் சொல்லியிருக்கிறான்... 'ரிஜிஸ்ட்டர் மேரேஜ் பண்ணிக்கலாம் வா..'ன்னு உன்னைக் கூப்பிட்டவனுக்கு வேறு ஒரு அசைன்மெண்ட் வந்து விட்டது.. இந்த முறை அவன் ஜாயின் ஆகியிருந்தது தீவிரவாதிகளின் கும்பலில்.. எக்கச்சக்கப் பணம் கிடைத்ததில் இவன் அவர்கள் கைகாட்டிய ஆளைப் போட்டுத் தள்ளி விட்டுத் தப்பித்து ஓடி வரும்போது மாட்டிக் கொண்டான்.."

"நைட்டில் கொலை செய்துவிட்டு எந்தவிதக் குற்ற உணர்வும் இல்லாமல் காலையில் ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்க பிளான் போட்டிருந்தானா.. எப்படிங்க..?"

சுசித்ராவின் உடல் நடுங்கியது.. மனைவியை ஆதரவாக அணைத்துத் தட்டிக் கொடுத்த வாசுதேவன் அவளது முடியைக் கோதினான்..

"அவன் புரபசனல் கில்லர்டி.. தொழில் முறைக் கொலையாளி.. அவன் கண்ணில் பட்டுத் தொலைத்திருக்கியே.. உன்னைச் சொல்லனும்.. ஏற்கனெவே அவன் செய்திருந்த கொலைகளில் சாட்சியில்லைன்னு வெளியில் சுத்திக்கிட்டு இருந்தவனைக் கோழியை அமுக்குவதைப் போல அமுக்கிருச்சு போலிஸ்.. இவன் உள்ளே போய்விட.. வெளியில் இருந்த பொன்னாத்தாவோட கிரிமினல் மைண்ட் வேலை செய்ய ஆரம்பித்தது.. உன்னுடைய மென்மையான இரக்க குணத்தைப் பயன்படுத்தி உனக்குள்ளே குற்ற உணர்ச்சியை உண்டாக்கி காலமெல்லாம் அவளைக் காப்பாற்றுகிற பொறுப்பை உன்னை ஏற்றுக்க வைத்து உன் தலைமேலே ஏறி உட்கார்ந்துட்டா.. மன்னாரை சாகடித்து, கூடவே அவளோட கற்பனைக் கணவனையும் சாகடித்து பொய்யாய் உன்னிடம் ஒப்பாரி வைத்து உன் பணத்தில உல்லாசமாக

வாழ ஆரம்பிச்சுட்டா.. மூன்று வருசமா ஜாமின் கிடைக்காத மன்னார் எப்படியோ ஜாமினில் வெளியே வந்துட்டான்.. உன்னைப் பயமுறுத்தவும் வந்துவிட்டான்.."

மன்னார் என்ற பிரசன்னா அத்துடன் நிற்கவில்லை.. மறுநாள் மனநிம்மதியுடன் கம்பெனிக்குப் போன சுசித்ராவைக் கடத்தி விட்டான்..

## 43

பல்லவி என்ற பொன்னாத்தா கடும் கோபத்தில் இருந்தாள்.. ஏமாளி என்று அவள் நினைத்திருந்த சுசித்ரா அவளது கைபிடியிலிருந்து நழுவித் திருமணம் செய்து கொண்டு கணவன் வீட்டுக்குப் போய் விட்டாள் என்பதில் இடிந்து போய் விட்டாள்.. அந்தக் கணவன் வேறு யாருமல்ல.. பொன்னாத்தாவைத் துச்சமாகப் பார்த்து விரட்டியடித்த வாசுதேவன்தான் என்று அறிந்தபோது அவளது தலையில் இடி இறங்கியதைப் போல இருந்தது..

எப்போதும் மாதா மாதம் ஒன்றாம்தேதி மட்டும்தான் சுசித்ரா பல்லவியைப் பார்க்க வருவாள்.. வீட்டு வாடகை, வீட்டுச் செலவுக்கான பணத்தைக் கொடுத்து விட்டுப் போய் விடுவாள்.. மூன்று வருடங்களாகத் தொடர்ந்து வந்த வழக்கம்.. அதனால் சுசித்ரா திருமணம் செய்து கொள்ளப் போகிறாள் என்ற விவரம் தெரியாமல் சந்தோசமாக இருந்த பொன்னாத்தா, அந்த மாதம் சுசித்ரா வராமல் வாசுதேவன் வந்ததில் அதிர்ந்து போனாள்..

"ஏய்.. நீ யாருடா என் வீட்டுக்குள்ள வர..?"

அவள் எகிற.. இகழ்ச்சியான துச்சப் பார்வையோடு அவளை ஏற இறங்கப் பார்த்து வைத்த வாசுதேவன்..

"உன் வீடா..? இந்த வீட்டுக்கும் உனக்கும் சம்பந்தமில்லை பொன்னாத்தா.. நீ இங்கேயிருந்தும் பெட்டியைக் கட்டப் போற.." என்று அணுகுண்டை வீசினான்..

"பொன்னாத்தாவா..?" நடுங்கிப் போனாள் அவள்..

அவளுடைய உண்மையான பெயரைச் சொல்லி அழைக்கிறானே.. அவள் யார் என்று அவனுக்குத் தெரிந்து விட்டதா..?

"உன்னையும் தெரியும்.. மன்னாரையும் தெரியும்.. எவ்வளவு தைரியம் உனக்கு..? எஸ்.எஸ்.குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸ்ன்னா ஈஸின்னு நினைத்தியா..? அவங்க வீட்டுப் பெண்ணோட மன நிம்மதியைக் கூறு போட்டுக்கிட்டு இருக்க..? அவங்க நினைத்தா ஒரே செகண்டில உன்னை இருக்கிற இடம் தெரியாம ஆக்கிருவாங்க.. தெரியுமா..?"

"ஆக்கியிருக்க வேண்டியதுதானே..?" அலட்சியமாக புன்னகைத்தவள்..

"இந்த மூணு வருசமா ஏன் கையைக் கட்டிக்கிட்டு இருந்தாங்களாம்..? அவங்க வீட்டுப் பொண்ணு என் கஸ்டடியில சிக்கியிருக்குன்னுதான..? அப்படி ஏதாச்சும் அவங்க செய்திருவாங்கன்னுதான் உன் குடும்பத்தாலே என் உயிருக்கு ஆபத்துன்னு சுசி காதில போட்டு வைச்சிருக்கேன்.. என்மேல துரும்பு பட்டாக்கூட அவ தூக்கில தொங்கிருவான்னு அவ குடும்பத்துக்குத் தெரியும்.. அவ சாமியாடி வைச்சிருக்கா.. அவங்க விரலைக் கூட அசைக்க மாட்டாங்கடா.."

"நான் உன் தலையையே அசைத்துத் திருகிக் கடலிலே விட்டு எறிஞ்சுருவேன்.. ஜாக்கிரதை.. அடங்கிரு.."

"நீ யாருடா என் தலையைத் திருக..?"

"சசித்ராவின் புருசன்..

"என்னது..? சுசித்ராவின் புருசனா..? அவளுக்கு எப்பக் கல்யாணமாச்சு..? நான் இதை நம்ப மாட்டேன்.."

"ஏய்ய்.. நீ நம்பினா எனக்கென்ன..? நம்பலைன்னா எனக்கென்ன..? இருக்கிற சாமான் சட்டைக் கட்டிக்கிட்டு ஓடிப் போயிரு.. நான் வீட்டைப் பூட்டிச் சாவியை வீட்டுக்காரரிடம் ஒப்படைத்துக் கணக்குத் தீர்க்கனும்.. ம்ம்ம்.. இடத்தைக் காலி பண்ணு.."

"சுசியை வரச் சொல்லு.. அவ போகச் சொன்னாப் போய்க்கிறேன்.. நீ சொல்லி கிளம்ப மாட்டேன்.."

"அவ வர மாட்டா.. வேணும்னா போலிஸை வரச் சொல்றேன்.. சுசித்ராவிடம் நீ சொன்ன பொய்களையும் ஏமாற்று வேலைகளையும் சொல்லி கம்ப்ளெயிண்ட் கொடுக்கிறேன்.. அவங்க உன் கூட்டாளி மன்னாருடன் உன்னைச் சேர்த்து வைத்து விடுவாங்க.. எப்படி வசதி..? செய்யவா..?"

வாசுதேவன் கட்டாயம் அதைச் செய்வான் என்பதில் பொன்னாத்தாவுக்கு எள்ளளவும் சந்தேகமில்லை.. வாசுதேவன் துனிச்சல்காரன்.. சுசித்ராவின் குடும்பத்தினரைப் போல நாசுக்கு நாகரிகம் எல்லாம் பார்க்க மாட்டான்.. பொன்னாத்தாவை பந்தாடி விடுவான்..

"திடிர்ன்னு போகச் சொன்னா எங்கே போகிறது..?" பொன்னாத்தா முணுமுணுத்தாள்..

"எங்கேயிருந்து வந்தியோ.. அங்கேயே போ.." கறாராக அவளை விரட்டி விட்டான் வாசுதேவன்..

முதலில் தன்னைக் காத்துக் கொள்ளலாம்.. அதற்கு மேல் ஆக வேண்டியதை அப்புறமாகப் பார்த்துக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தாள் பொன்னாத்தா.. அவள் யார், மன்னார் யார் என்று வாசுதேவனுக்குத் தெரிந்து விட்ட பின்பும் அவள் தப்பிக்காமல் அந்த வீட்டில் இருப்பது ஆபத்தானது.. வாசுதேவன் சுசித்ராவின் கணவனாகி விட்டான்.. சுசித்ராவை இனியும் பொன்னாத்தா அவள் பிடியில் வைத்திருக்க முடியாது..

பொன்னாத்தாவுக்கென ஒரு சிறிய அபார்ட்மெண்ட் சொந்தமாக இருந்தது.. தினமும் சம்பாதிப்பவள் (?) குடியிருக்கச் சொந்தமாக ஒரு இடம்கூட இல்லாமல் இருப்பாளா..? அவளுக்காக இல்லாவிட்டாலும் அவளைத் தேடி வருபவர்களுக்காக ஓர் இடம் தேவைப்படுகிறதே..

பழைய அபார்ட்மெண்டுக்குத் தன் பொருள்களுடன் போய்ச் சேர்ந்தாள் பொன்னாத்தாள்.. அவளை விரட்டி விட்டு..

வீட்டைப் பூட்டிச் சாவியை வீட்டின் சொந்தக்காரரிடம் ஒப்படைத்த வாசுதேவன் அதைப் பற்றி மனைவியிடம் சொல்லாமல் அவளை அழைத்துக் கொண்டு தேநிலவிற்குப் பறந்து விட்டான்.. அவனும் சுசித்ராவும் இந்தியாவில் இல்லாததை துப்பறிந்து தெரிந்து கொண்ட பொன்னாத்தா ஆவேசம் கொண்டாள்.. சுசித்ரா எனும் கூண்டுக்கிளிக்கு இறக்கை முறைத்துப் பறந்து விட்டதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. சுசித்ராவினால் அவள் அனுபவித்த மூன்றாண்டு கால மேல்தட்டு வாழ்வு இனி கிடைக்காது என்பதில் வெறி கொண்ட பொன்னாத்தா சிறையிலிருந்த மன்னாரைப் போய் பார்த்தாள்..

"உனக்காக அந்த சுசிக் கழுதையை என் கஸ்டடியில வைச்சிருந்தேன் மன்னாரு.. எங்கிருந்தோ ஒருத்தன் வந்து கொத்திக்கிட்டுப் போயிட்டான் மன்னாரு.." என்று ஒப்பாரி வைத்தாள்..

"இதானே வேணாம்ங்கிறது.." எகத்தாளமாக நகைத்தான் மன்னார்..

"என்ன மன்னாரு.. இம்மாம் பெரிய விசயத்தைச் சொல்றேன்.. நீ எனக்கென்னன்னு சிரிக்கிற..?" ஆற்றாமையுடன் கேட்டாள்..

"சிரிக்காம இன்னா செய்ய..? என்னமோ எனக்கோசரம் அந்த கோடிஸ்வரியை அடை காத்து வச்சிருந்ததைப் போல பீலா விட்டுக்கினு கீற.. ஆருகிட்ட..? ஒன்னப் பத்தி எனக்குத் தெரியாதா..? இந்த மூணு வருசமும் நீ வாழ்ந்த பணக்கார வாழ்க்கையைப் பத்தி என்னப் பாக்க வந்த பயலுக கதை கதையா சொன்னானுக.. நாந்தான் போனாப் போகுது, விட்டு வையுங்கடான்னு சொல்லி வைச்சிருந்தேன்.. நான் காட்டிக் கொடுத்த பணக்காரிகிட்ட பொய்யாக் கதை சொல்லி பொழப்ப நடத்திக்கிட்டு என்ன எட்டிக்கூடப் பாக்காம இருந்தவதான நீ.. பல்லவியாம்.. பணக்கார பம்பாய் புருசனாம்.. நானும் அவனும் கூட்டா மண்டயப் போட்டு பரலோகம் போயிட்டோமாம்.. என்னமாக் கதை சொல்லிக்கினு இருந்த.. இப்ப அவ கண்ணாலம்

கட்டிக்கிட்டு உன் கைநழுவி போயிட்டான்னதும் என்னத் தேடி ஓடி வந்து பிலாக்கணம் வைக்கறியா..?"

"தப்புத்தான் மன்னாரு.. போனதை விடு.. இப்ப கை நழுவிப் போனவள எப்படிக் கை பத்தறது..? அதுக்கு ஒரு வழியச் சொல்லு.."

"அவளப் புடிச்சு உன்கிட்ட ஒப்படைக்கத்தான காத்திருக்கேன்.. விட்டா செவிலு பிஞ்சிரும்.. போவியா.."

"இன்னா மன்னாரு.. இப்படிப் பேசற.. அவளக் கைப்பத்த என்னால முடியாதுன்னு எனக்குத் தெரியாதா..? அவ நிம்மதியா வாழக்கூடாது.. எனக்கு அதுதான் வேணும்.. அதுக்கு ஏதாச்சும் வழி சொல்லுவியா.. அதை விட்டுட்டு எம்மேல கோபப்படற.."

"ஏன்..? உன் கையில இல்லாத கேப்மாரிகளா..?"

"அவனுக பெரிய இடத்துப் பகைய எல்லாம் சம்பாதிச்சுக்க மாட்டானுக.."

"அப்ப என்ன வெளியில எடு.."

"உன்ன உள்ளார அனுப்பி வைச்சவனுக வெளியில எடுக்க மாட்டானுகளா..?"

"ஊஹீம்.. அவனுகளே தீவிரவாதிக.. கையில காசு.. வாயில தோசை.. அம்புட்டுத்தான்.. கணக்கு முடிஞ்சதும் கழண்டுக்குவானுக.. அவனுகளக் காட்டிக் கொடுக்க வாயைத் தொறந்தா மட்டும் போட்டுத்தள்ள ஆள அனுப்பிருவானுக.. எல்லா இடத்திலயும் அவனுகளுக்கு ஆளிருக்கு.."

"அவனுக கொடுத்த பணம்..?"

"அது எதுக்கு உனக்கு..? என்னால மூணு வருசம் ராஜவாழ்க்க வாழ்ந்தியே.. அது பத்தாதா..? அந்தப் பணமெல்லாம் எங்கே போச்சு..?"

"கோவிச்சுக்காத மன்னாரு.. சும்மா விளையாட்டுக்குக் கேட்டேன்.."

"நான் இருக்கிற இருப்பப் பாத்தா உனக்கு விளையாட்டு வருதா..? நீயும் என் கூட்டாளின்னு கையக் காட்டி விட்டிருக்கனும்.. விட்டு வச்சதுதான் தப்பாப் போச்சு.. நீயெல்லாம் வாய் பேசற.."

"விடுப்பா.. விடுப்பா.. நான் உன்னை ஜாமினில் எடுக்கறேன்.."

"அதச் செய்யி.. வீணா வாய் விட்டு என் கோபத்தைக் கிளராதே.."

சொன்னபடி தன் தொடர்புகளைப் பயன்படுத்தி மன்னாரை ஜாமினில் எடுத்து விட்டாள் பொன்னாத்தா.. வெளியில் வந்த மன்னாரிடம்

"அந்த சுசிக் கழுதையை பயமுறுத்த என்ன செய்யலாம்..?" என்று நைச்சியமாகக் கேட்டாள்..

"முதல்ல பேய் டிராமா போடலாம்.. அதுக்கப்புறம்.. ஆளைத் தூக்கலாம்.." மன்னார் திட்டம் வகுத்தான்..

அதன்படி சுசித்ரா கம்பெனிக்குச் செல்லும் வழியில் பின்தொடர்ந்து கருப்பு உடையில் அவளது கண்களுக்குத் தென்பட்டான்.. அரண்டு போனவளை கம்பெனி போனில் தொடர்பு கொண்ட பொன்னாத்தா பிரசன்னா ஆவியாக வந்து தட்டிக் கேட்க மாட்டான் என்ற தைரியமா என்று கேட்டு வைத்தாள்.. மன உளைச்சலுடன் வீடு வந்தவளைத் தோட்டத்தில் நின்று பயமுறுத்தி மயக்கம் போட வைத்தான் மன்னார்..

"அவ புருசன் கில்லாடி மன்னாரு.. இன்னேரம் நாம யாரு, என்னங்கிறதை அவகிட்டச் சொல்லியிருப்பான்.."

பொன்னாத்தா தூபம் போட வெறி கொண்ட மன்னார் சுசித்ரா கம்பெனிக்குப் போகும் வழியில் டேக் டைவர்சன் போர்டை வைத்துக் காரை ஆளில்லாத சாலைப் பக்கம் திரும்ப வைத்து கடத்தி விட்டான்.. புதிதாக கட்டப் பட்டுக் கொண்டிருந்த கட்டிடம் ஒன்று பாதியில் நின்றிருக்க அதனுள் சுசித்ராவைக் கட்டிப் போட்டுக் காவலில் வைத்துக் கொக்கரித்தான்.. பொன்னாத்தாவும் சேர்ந்து கொண்டாள்..

"நீ எம் மூஞ்சிய எல்லாம் காதலிக்க மாட்ட..? அந்த வாசுதேவன் என்ன மன்மதனா..? அவன் மூஞ்சியை மட்டும் பிடிச்சிருக்குன்னு கட்டிக்கிட்ட.."

"கேளு மன்னாரு.. அண்ணி, அண்ணின்னு சொல்லிக்கிட்டு இருந்தவ ஒரு பங்களா வாங்கித் தந்தாளான்னு கேளு.. இப்பப் பாரு.. அம்புட்டுச் சொத்தும் அந்த வாசுதேவனுக்குப் போய் சேர்ந்திருச்சு.."

"உனக்கு உன் பிரச்னை.. ஏன் பொன்னாத்தா.. உன் ஆசைக்கு அளவே கிடையாதா..? உன் மூஞ்சிக்கெல்லாம் சொந்தமாய் கார் கிடைச்சதே பெரிய விசயம்.. இதில பங்களாவுக்கு அடி போட்டிருக்க.. மாசாமாசம் லட்சரூபாய் வாங்கினியே.. இன்னா பண்ணின..?"

"ஹி.. ஹி.. செலவாகிருச்சு மன்னாரு.."

"அப்படின்னு இந்தக் கேணைகிட்டச் சொல்லு.. கேட்டுக்குவா.. நான் அப்படியில்ல.. கேடியிலயும் கேடி.. ஜில்லாக்கேடி.. என்கிட்டயேவா..?"

"நான் ஏமாத்திப் பொழைக்கிறவதான்.. உன்ன போல தீவிரவாதிக கூட கூட்டுச் சேர்ந்து கொலை கொள்ளைன்னு அலையலயில்ல.. அதெல்லாம் நீ செய்யற வேலையாச்சே மன்னாரு.."

"பாருடா.. உன்கிட்ட வந்து போன சேட்டப் போட்டுத் தள்ளினது யாரு..? நீதான.. அப்புறம் கோயம்புத்தூர் மில் ஓனரு.."

"நீ மட்டும் என்ன..? குறைச்ச ஆளா..? அடையாறு ஆனந்தன், டமால் குப்பம் பீகாம்பரம்ன்னு வரிசை கட்டி நீ செஞ்ச கொலைகளைச் சொன்னா இன்னைக்குப் பூராச் சொல்லிக்கிட்டே இருக்கலாமே.."

இருவரும் மாறி மாறிப் பேசியதில் திகிலடைந்தாள் சுசித்ரா.. எப்பேற்பட்ட கொலைகாரர்களிடம் அவள் மாட்டியிருக்கிறாள்.. இந்த மன்னாரை 'பிரசன்னா' என்று நம்பி.. அவன் கை காட்டிய பொன்னாத்தாவை 'பல்லவி' என்று நினைத்து அண்ணி முறை சொல்லி அழைத்து

மூன்று வருடங்கள் தள்ளி நின்றாளே.. அதற்கு மேலும் ஆண்டுகள் நீண்டிருக்கும்.. வாசுதேவன் வந்து காப்பாற்றி விட்டான்.. அப்போது காப்பாற்றியவன் இப்போது காப்பாற்ற வருவானா..?

சுசித்ராவின் மனதின் குரலை செவி மடுத்ததைப் போல..

"சொல்லு பொன்னாத்தா.. நீயும் இவனும் ஸ்கெட்ச் போட்டுப் போட்டுத் தள்ளின உருப்படிகளைப் பத்தி யெல்லாம் சொல்லிக்கிட்டே இரு.. இன்றைக்கு என்ன.. நாளைக்கும்கூட நீ கண்டினியூ பண்ணலாம்.. கேட்கிறதுக்கு இவங்களாச்சு.." என்று போலிஸ் இன்ஸ்பெக்டரைக் கைகாட்டியபடி அங்கே வந்தான் வாசுதேவன்..

திமுதிமு என துப்பாக்கியும் கையுமாக போலிஸ் சூழ்ந்து கொள்ள தப்பித்து ஓட முயன்ற மன்னாரும், பொன்னாத்தாவும் குண்டடி பட்டுக் கீழே விழுந்தார்கள்.. வாசுதேவன் சுசித்ராவின் கட்டுக்களை அவிழ்த்து விட்டான்.. பயத்தில் மயங்கிச் சரிந்தவளைக் கைகளில் ஏந்திக் கொண்டான்..

"நீங்க போங்க வாசுதேவன்.. தேவைப்படறப்ப கோர்ட்டுக்குச் சாட்சி சொல்ல வர வேண்டியிருக்கும்.."

"நான் மட்டும்தானே..?"

"ஷ்யூர்.. டி.ஜி.பி சொல்லியிருக்கார்.. உங்க வொய்பின் பெயரை இந்தக் கேஸில் இன்வால்வ் பண்ண மாட்டோம்.. உங்களிடம் பணம் பறிக்கக் கழுத்தில் கத்தியை வைத்துக் கொலை செய்ய முயன்றான்னு கேஸ் ஃபைல் பண்ணிக்கலாம்.."

அதற்கெல்லாம் அவசியமின்றி மருத்துவமனையில் இருந்த மன்னாரையும், பொன்னாத்தாவையும் மர்ம நபர்கள் சிலர் கொலை செய்து விட்டுத் தப்பியோடி விட்டார்கள்.. தீவிரவாதிகளாக இருக்கும் என்று போலிஸ் சந்தேகித்தது..

"துப்பாக்கியைத் தூக்கினவர்களுக்கு அதில்தான் சாவுன்னு எழுதி வைத்திருக்கு.." என்றார் போலிஸ்

இன்ஸ்பெக்டர்..

சுசித்ராவிடம் உடனடியாக விவரத்தைச் சொல்லாமல் தாமதித்து சிலநாள் கழித்துச் சொன்னான் வாசுதேவன்.. அவன் நினைத்தபடி அவள் கண்ணீரை உதிர்த்தாள்.. கேவி அழுதாள்..

"மன்னாரைப் பத்தி ஒன்னுமில்ல.. அவனிடம் நான் சரியாக்கூடப் பேசியதில்லை.. ஆனா இந்தப் பொன்னாத்தா.. மூணு வருசமா அண்ணி, அண்ணின்னு பொத்திப் பாதுகாத்து வாழ வைச்சிருந்தேனா.. மனசு தாங்க மாட்டேங்குது.."

'பல்லவி' என்று பெயர் சொல்லி ஏமாற்றி.. ஒரு அயோக்கியனுக்குத் துணை நின்று.. சுசித்ராவிடம் அவன் உன்னால்தான் இறந்து விட்டான்.. கூடப் போனவனும் இறந்து விட்டான் என்று குற்றம் சாட்டி.. அவள் மனதில் குற்றஉணர்வை ஏற்படுத்தி.. அதில் குளிர் காய்ந்து.. அவளது உழைப்பை உறிஞ்சிப் பிழைத்து.. அவளைக் குடும்பத்திலிருந்து தனிமைப் படுத்தி.. தனக்கு அடிமைப் படுத்தி வைத்திருந்த ராட்சசி இறந்து விட்டாள்.. அந்த ராட்சசிக்கு இந்தக் கதிதான் கிட்டும் என்று சந்தோசப் படாமல் சுசித்ரா மனம் வருந்தி அழுகிறாள் என்றால் அவளது குணத்தை என்னவென்று சொல்வது..? எப்படிப் போற்றுவது..?

வாசுதேவன் சுசித்ராவின் முகத்தைக் கைகளில் ஏந்தி விழிகளுக்குள் பார்த்து..

"அன்பே..! நீ அனிச்ச மலரடி.. காணக் கிடைக்காத பொக்கிசம்.." என்று உணர்ச்சி ததும்பச் சொல்லி அவளது இமைகளின் மீது முத்தமிட்டான்..

அவனது மார்பில் முகம் புதைத்து தழுவிக் கொண்டவளுக்கு அவனுடன் ஏழேழு ஜென்மங்கள் வாழ்ந்து கொண்டிருப்பதைப் போன்ற உணர்வு வந்தது..

சுசித்ரா உடலும், மனமும் தேறி பழையபடி கம்பெனிக்குப் போய் வர ஆரம்பித்தாள்.. சுசீந்திரனும், மாதங்கியும்

தேநிலவு முடிந்து வந்து விட்டார்கள்.. மூன்று மாதக் குட்டிக் கண்ணனை அழைத்துப் போக அகிலன் வந்து விட.. வசுமதி தன் குழந்தைகளுடன் கணவன் வீட்டிற்குக் கிளம்பிச் சென்று விட்டாள்..

"வீடே வெறிச்சுன்னு இருக்கு.."

கொஞ்ச நாள் புலம்பிக் கொண்டிருந்த கோதாவரி.. இயல்பு நிலைக்குத் திரும்பி விட்டாள்..

44

அது தோட்டமா.. இல்லை இந்திரலோகமா என்று பிரமித்துப் போனான் கருணாகரன்.. கோடிஸ்வரர்களின் வீட்டுத் தோட்டங்கள் கூட சொர்க்க லோகங்கள்தான்.. மனம் தத்துவம் சொன்னது.. தத்துவம் நம்பர் பதினைந்து என்று அறிவு கணக்கிட.. நண்பன் எங்கே இருக்கிறான் என்று தேடுவதில் மெனக்கெட்டான்..

டி.ஜி.எம் குருப் ஆப் கம்பெனிஸின் எம்.டி தணிகாசலத்தை அவரது நிறுவனத்தில் வேலை செய்பவர்கள் தங்களுக்குள் 'கஞ்சூஸ்..' என்று செல்லமாக விளிப்பார்கள்.. ஊதியத்தைத் தாராளமாக அள்ளி வழங்குவார்.. போனஸைக் கணக்குப் பார்க்காமல் தருவார்.. ஆனால் 'பார்ட்டி' என்ற சொல் மட்டும் அவர் வாயிலிருந்து அத்தனை சுலபத்தில் வந்து விடாது.. அதனால்தான் அவர் குதூகலமாக இருக்கும் போது பார்ட்டி கொடுக்கலாமா என்று கேட்டால் வாசுதேவன் தலையை ஆட்டி விடாமல் சர்வ ஜாக்கிரதையாக அமைதி காப்பான்... வெறும் வார்த்தைகளிலேயே பார்ட்டியைக் கொண்டாடி விட்டதைப் போல ஆனந்தப்பட்டுப் போய் அடுத்த வெற்றியில் பார்த்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்து விடுவார்.. அத்திப்பூ பூப்பதும் தணிகாசலம் பார்ட்டி கொடுப்பதும் ஒன்று..

அத்தகைய பிரதாபம் கொண்ட தணிகாசலம் திடிரென்று பார்ட்டி கொடுக்கப் போவதாக அறிவித்துத் தன் நிறுவன ஊழியர்களுக்கு அழைப்பு விடுத்திருந்ததில் அவர்களுக்கு ஆனந்த அதிர்ச்சி மேலிட்டது.. அரிதாகக் கிடைக்கும் வாய்ப்பை நழுவ விடக் கூடாது என்று அத்தனை ஊழியர்களும் பிரசன்னமாகியிருந்தார்கள்..

கருணாகரன் வழக்கம் போல 'கார் ரிப்பேர்.. போகும் வழியில் என்னைப் பிக்கப் பண்ணிக் கொள்..' என்று போன் பண்ணினான்.. 'பெண்டாட்டியுடன் போகிறேன்.. நீ கால் டாக்ஸியை புக் பண்ணிக் கொண்டு வந்து சேர்ந்துவிடு..' என்று வாசுதேவன் பதில் கொடுத்ததுமில்லாமல் வாட்ஸ் அப்பில் பாஸ்ட் டிராக், ஓலா, ஊஃபர் போன்ற கால் டாக்ஸிகளின் விவரங்களைப் பற்றிய காபி லின்க்கை அனுப்பி வெறுப்பேற்றியிருந்தான்..

'உனக்குப் பெண்டாட்டி வந்துட்டாங்கிற பகுமானம்டா.. எனக்கும் ஒரு நாள் வரும்..' கருணாகரன் வாட்ஸ் அப்பினான்..

'அந்த நாள்.. எந்த நாள்..?' வாசுதேவன் வாட்ஸ் அப்பில் துப்பினான்..

'சட்டை கிழிஞ்சிருந்தா..

தைச்சு முடிச்சிரலாம்..

நெஞ்சு கிழிஞ்சிருச்சே..

எங்கே முறையிடலாம்..?'

கருணாகரன் வாட்ஸ் அப்பில் சோக கீதம் இசைக்க.. 'உதைபடப் போற ராஸ்கல்.. ஒழுங்கா பார்ட்டிக்கு நேரத்தோட வந்து சேரு..' என்ற வாசுதேவனின் கடுப்பு வாட்ஸ் அப்பில் வந்து சேர்ந்தது..

கருணாகரனும் அடித்துப் பிடித்து ஒருவழியாக பார்ட்டிக்கு வந்து சேர்ந்திருந்தான்.. தனிகாசலத்தின் வீட்டுத் தோட்டத்தில் பார்ட்டி.. சீரியல் விளக்குகள் வண்ண

மயமான தேவலோகத்தை கண் முன் நிறுத்தின.. அழகிய நீச்சல் குளமும்.. அதைச் சுற்றிப் போடப் பட்டிருந்த நாற்காலிகளுமாக அந்தச் சூழலே ரம்யம் மிக்கதாக இருந்தது..

வாசுதேவன் எங்கே என்று தேடினான்.. அவனும் சுசித்ராவும், சுரேந்திரன் மாதங்கியுடன் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்..

'இவனுக்கு அடிச்ச யோகத்தைப் பாரு.. எம்.டி மகள் இவனுக்கு மைத்துனன் பெண்டாட்டி.. தங்கை முறை.. ஏற்கனெவே அண்ணா, அண்ணான்னு அந்தப் பொண்ணு பாசப்பறவையை பறக்க விடும்.. இந்தச் சொந்தமும் சேர்ந்துருச்சா.. இனிக் கேட்கவே வேணாம்..'

கருணாகரனுக்குள் சன்னமான பொறாமை எழுந்தது.. தான் அன்னியப்பட்டு விட்டதைப் போல உணர்ந்தான்.. அன்றுவரை அவனுடன் இருந்த உயிர் நண்பன் உயரத்துக்குப் போய் விட்டான்.. அவன் மட்டும் தனியே.. தன்னந்தனியே..

"டேய்... மச்சான்.."

அவன் முதுகில் ஓங்கி ஓர் அடி விழுந்தது.. திரும்பிப் பார்த்தான்.. வரிசைப் பற்கள் தெரிய சிரித்துக் கொண்டு நின்றிருந்தான் வாசுதேவன்..

'இவன் அங்கேயில்ல இருந்தான்..?'

கருணாகரன் கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தான்.. அங்கே சுசிந்திரனும், சுசித்ராவும் ஆழ்ந்த குரலில் பேசிக் கொண்டு நின்றிருந்தார்கள்.. மாதங்கி

தன் பெற்றோருடன் ரகசியம் பேசிக் கொண்டிருந்தாள்.. வேறொரு பக்கம் செந்தில் நாதனும் பானுபிரியாவும் தீவிரமான முகபாவத்துடன் விவாதித்துக் கொண்டிருந்தார்கள்..

'ராஜ்ய பரிபாலனம் பண்றதைப் பத்தின டிஸ்கசன் நடக்குதா..?'

"என்னடா.. இப்படி முழிக்கற..?"

"இல்ல.. நீ முதலாளி வர்க்கமாச்சே.. தொழிலாளி கூடல்லாம் பேச வருவியான்னு நினைச்சேன்.. முழிச்சேன்.."

"என்னடா.. இன்னைக்குப் பேச்சே ஒரு தினுசா இருக்கு.."

"கார் ரிப்பேர்ன்னா கை கழுவி விடாம காரில லிப்ட் கொடுத்துக் கடமையாற்றுகிற நண்பன் பெண்டாட்டி வந்ததும் கழட்டி விட்டு விட்டு தான் மட்டும் பார்ட்டிக்கு என்ஜாய் பண்ண வந்தா என் பேச்சு ஒரு தினுசாத்தான்டா இருக்கும்."

"ஒரு பிழை திருத்தம்டா மச்சி.. நண்பன் தான் மட்டும் வரலை.. கூடத் தன்னோட பெண்டாட்டியையும் கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்கான்.."

"உன் பெருமை உனக்கு.."

"உன்னை யாருடா பெருமை அடிச்சுக்க வேணாம்ன்னு சொன்னது..?"

"வேற யாரு.. என் காதலிதான்.."

"இன்னுமா சண்டை முடியல..?"

"ஆமாம்டா மச்சான்.."

கருணாகரன் மூக்கை உறிஞ்சினான்.. கைக்குட்டையால் கண்களில் வராத கண்ணீர் துளிகளை ஒற்றி எடுத்தான்.. அவன் புலம்பலுக்குத் தயாராகி விட்டதைப் புரிந்து கொண்ட கருணாகரன்.. ஒற்றை விரலை உயர்த்தி..

"கொன்னுடுவேன்.." என்று எச்சரித்தான்..

"ஏண்டா..?"

"அருமையான பார்ட்டி டைம்.. என்ஜாய் பண்ற மூடில இருக்கேன்.. ஸ்பாயில் பண்ணனும்ன்னு நினைச்சே.. மகனே.. கையைக் காலைக் கட்டித் தூக்கிக் கடலிலே எறிஞ்சுட்டு வந்துருவேன்.. பார்த்துக்க.."

"இவ்வளவுதானாடா நம்ம பிரண்ட்ஷிப்..?"

"அடச்சீ.. அடங்கு.. இந்த சன்டேயில உன் சண்டையை முடிச்சுக்கப் போகிறதா சொன்னியே.. உன் காதலி வீட்டுக்குப் போனியா.. போகலையா.."

"போனேன்டா.. மஞ்சக் கலர் சட்டை, பிளாக் ஜீன்ஸ்ன்னு அமர்க்களமா டிரஸ் பண்ணிக்கிட்டுப் போனேன்.."

"ஐய்யே..! அந்த டிரஸ்ஸிலயா போன..? மட்டக் கேவலமா இருக்குமே.."

"என்னத்தடா செய்யச் சொல்ற..? எனக்கும் அது தெரியும்தான்.. ஆனா அந்த டிரஸ்.. அவ செலக்ட் பண்ணின டிரஸ்ஸாச்சே.. என் காதலியோட செலக்சன் எல்லாமே மட்டக் கேவலமாத்தான் இருக்கும்.."

"உன்னைக் காதலனா செலக்ட் பண்ணியிருக்காளே.. அப்பவே நான் புரிஞ்சுக்கிட்டேன்.. அந்தப் பெண்ணோட செலக்சன் எல்லாமே படு மொக்கையாத்தான் இருக்கும்ன்னு.."

கருணாகரன் நொந்து போனவனாக.. நண்பனை இமைக்காமல் ஓர் பார்வை பார்த்தான்.. வாசுதேவன் தோள்களைக் குலுக்கிக் கைகளை விரித்ததில்..

"அந்த மட்டிலும் 'மட்டக் கேவலமா'ன்னு சொல்லாம 'படு மொக்கையா..'ன்னு சொன்ன பாரு.. அங்க நிற்கிறடா நீ.." என்று மனதை ஆற்றிக் கொண்டான்..

"என்னவோ.. புதுசா நான் கலாய்க்கிறதைப் போல நீ இம்புட்டு ஃபீல் பண்ற பாரு.. இங்க நிக்கிறடா நீ.."

"இப்ப நாம ரெண்டு பேரும் எங்கே நிற்கிறோம்ங்கிறதுதான் பேச்சாடா மச்சான்.."

"இல்லைதான்.. அதை நான் சொன்னால் நீ புலம்ப ஆரம்பிப்ப.. எதுக்கு வம்புன்னு பேசாம இருக்கிறேன்.."

"ஒரு முழம் மல்லிகைப்பூவை வாங்கிக்கிட்டுப் போனேன்.."

"இன்னும் 'பூ' மேட்டரை மாத்தலையா..?"

"பூக்காரியை மாத்திட்டேன்டா.."

"என்னவோ செய்து தொலை.."

"அவ வந்தாலும் சரி.. அவ தங்கை வந்தாலும் சரி.. பூவை நீட்டிரலாம்ன்னுதான் போனேன்.."

"அடப்பாவி..! அவ தங்கையை ஏண்டா எய்ம் பண்ணித் தொலைக்கிற..?"

"ஒரு பொசசிவ்னெஸ் வராதான்னு நப்பாசைதான்.."

"உன் மூஞ்சிக்கு நான் கிடைச்சதே பெரிசு.. இதில என் தங்கைக்கும் நூல் விடறியான்னு கட்டையைக் கொண்டு சாத்தித் துரத்தியடிச்சிருந்தா என்னடா பண்ணுவ..?"

"ஆமாமில்ல.. நான் இதை நினைச்சுப் பார்க்கவே இல்லையே.."

"நீ எதைத்தான் நினைச்சுப் பார்த்த..? தொலையுது விடு.. யாருதான் வந்தா..? அக்காவா..? தங்கையா..?"

"ரெண்டு பேரும் வரலைடா மச்சான்.. வேலைக்காரி வந்தா.."

"என்னடா சொல்ற..?"

வாசுதேவனுக்கு சிரித்துச் சிரித்துப் புரையேறி விட்டது.. அந்தச் சிரிப்புக் கருணாகரனைத் தொற்றிக் கொள்ளவில்லை.. அவன்தான் தொற்று நோயைத் துரத்தி விடுகிறவனைப் போல சிரிப்பை நெருங்க விடாமல் துரத்தி விட்டுக் கொண்டிருக்கிறானே..

"உனக்குச் சிப்பு வருது.. எனக்கு..?" லேசாக இரும வேறு செய்தான்.. சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு வானத்தைப் பார்த்தான்..

"நீ பண்ற ரகளைக்கு சிப்பு வராமல் என்ன செய்யும்..? கடைசியில் உன் காதலி வீட்டு வேலைக் காரிக்காடா பூவை வாங்கிக்கிட்டுப் போன..? ஹா.. ஹா.."

"சிரிக்காதடா வாசு.. நான் கதவைத் திறந்தது யாருன்னு பார்க்காம பூவை நீட்டிட்டேன்டா.. அந்த வேலைக்காரியாவது வேண்டாம்ன்னு சொல்லலாமில்ல..? என்னவோ.. காலம்

காலமாய் நான் அவளுக்குப் பூ வாங்கிக் கொடுத்துக்கிட்டு இருக்கிறதைப் போல 'டேங்க்ஸ்..'ன்னு சொல்லிக்கிட்டே வாங்கிக்கிட்டா.."

"டேங்ஸா..?"

"தேங்க்ஸாம்டா மச்சான்.. அந்த இங்கிலீஷில் அரண்டு போய்த்தான் முகத்தைப் பார்த்தேன்.. வேலைக் காரின்னு தெரிஞ்சதும் பூவைப் பிடுங்கறதுக்குள்ள.. 'இது எத்தனை நாளா நடக்குதுன்னு சத்தம் போட்டுக்கிட்டே சரிதா வந்துட்டா..'"

"உன்னையெல்லாம் காதலிச்சா அவளுக்கு இப்படித்தான் வந்து சேரும்.. என்ன சொல்லி சமாளிச்ச..?"

"எதையும் சொல்லி சமாளிக்கலை.."

"ஏண்டா..?"

"எங்கே..? அவ என்னைப் பேச விட்டாத்தானே..? கத்தோ, கத்துன்னு கத்தி என்னை வெளியில துரத்திட்டா.. இதில வயித்தெரிச்சல் என்னன்னா.. கடைசி வரைக்கும் அந்த வேலைக்காரப் பெண் பூவைக் கொடுக்கவே இல்லைடா.."

"உன்னை..! ஏண்டா இப்படி இருக்க..? அந்த ரணகளத்தில உனக்கு அதுதான் பிரச்னையா..?"

"நூறு ரூபாய் கொடுத்து வாங்கினவனுக்குத்தாண்டா அந்த வலி தெரியும்.."

"அங்க வாழ்க்கையே ஊசலாடிக்கிட்டு இருக்கு.. அதைப் பார்ப்பானா..? அதை விட்டுட்டு நூறு ரூபாயைப் பார்த்தானாம்.. போடாங்.."

வாசுதேவன் சொல்லிக் கொண்டிருந்த போதே.. தேவதையைப் போல மிதந்து வந்தாள் சுசித்ரா... அவளின் அதீத அழகைவிட.. மென்மையான தன்மை கருணாகரனைக் கவர்ந்தது..

'எனக்கும் ஒருத்தி வாச்சிருக்காளே..' சரிதாவின் நினைவில் பொறாமைப் பெருமூச்சை விட்டான்..

சரிதாவையும் விட்டு விட்டால் எவளும் அவனைத் திரும்பிப் பார்க்க மாட்டாள் என்பதினால் அத்துடன் நிறுத்திக் கொண்டு கரம் குவித்து..

"ஹி.. ஹி.. எப்படியிருக்கீங்க சிஸ்டர்.." என்று குசலம் விசாரித்தான்..

"ஃபைன்.. ஹவ் ஆர் யு..?" சுசித்ரா மெலிதாக புன்னகைத்தாள்.. வாசுதேவனின் தோள் மீது தலைசாய்த்து அவனது கையில் தன் கைகளைப் பிணைத்துக் கொண்டாள்..

"இவனுக்கென்ன.. நல்லாத்தான் இருக்கான்.."

கருணாகரனுக்கான பதிலைத் தானே சொல்லி விட்டுத் தன் மனைவியின் உச்சந்தலையில் முகம் பதித்தான் வாசுதேவன்.. கருணாகரனுக்கு வெறி, வெறியாக வந்தது..

'இரக்கமில்லாத ஜென்மங்கள்.. என்னடா.. கம்மங் கொல்லை கிடைக்காத காஞ்சமாடா இங்க ஒருத்தன் நிற்கிறானே.. அவன் முன்னால் அடக்கி வாசிக்கலாம்ங்கிற இங்கிதம் இதுகளுக்கு கொஞ்சமாவது இருக்கா..? இப்படி ஒட்டி உரசி சரசமாடினா என் காளை மனசு என்ன பாடுபடும்..? ராத்தூக்கம் வருமா..?' மனதுக்குள் புலம்பித் தள்ளினான்..

"நான் உங்களைத் தேடினேன் தெரியுமா..?" சுசித்ரா வாசுதேவனின் கோட்டில் முகம் பதித்து வாசனை பிடித்து டையை நிரடினாள்..

'இப்பத்தானே இதுக ரெண்டும் சிரிச்சுச் சிரிச்சுப் பேசிக்கிட்டு இருந்துச்சுக..? அதுக்குள்ள இவனைக் காணோம்ன்னு தேடுச்சா..?' வாய் பிளந்தான் கருணாகரன்.

"கருணாவைப் பார்க்க வந்தேன் கண்ணம்மா.." என்னவோ இமாலயத் தவறைப் புரிந்து விட்டவனைப் போல விளக்கம் சொன்னான் வாசுதேவன்..

அதற்கு மேலும் அந்தக் காதல் காட்சியைக் காணச் சகிக்காமல்..

"எக்ஸ்யூஸ் மி.." என்றான் கருணாகரன்.. வாசுதேவன் 'யார்.. நீ..?' என்பதைப் போலப் பார்த்தான்.. சுசித்ரா அதற்குக்கூட முகத்தைத் திருப்பவில்லை.. வாசுதேவனின் தோள் சாய்ந்து விழி மூடியிருந்தாள்..

"நான் கன்னிப் பையன் சார்.. என் மனசு கெட்டுப் போயிடும்.. அதனால, இத்தனூண்டு வழி விட்டாக்க ஓடோடி அந்தப் பக்கமா மறைவா உக்காந்துக்குவேன்.. வழி ப்ளீஸ்.."

கருணாகரன் கெஞ்சுதலாகக் கேட்க.. வாசுதேவன் தொலைந்து போ என்று புறங்கையால் சைகை செய்தான்.. கருணாகரன் கூட்டத்துக்குள் தொலைந்து போனான்..

45

அந்தப் பின்மாலைப் பொழுது அழகு மயமானதாக இருந்தது.. இருள் பரவத் தொடங்கியிருந்தது.. ஔிர் விடும் சீரியல் விளக்குகளின் ஔியில் தோட்டம் தேவலோகம் போல ஓய்யாரம் காட்டியது.. அதற்கேற்ப அங்குமிங்கும் நடமாடிய மங்கைகள் அப்சரஸ்கள் போல தெரிந்தார்கள் வாசுதேவனின் மனதில் வைரமுத்துவின் வரிகள் ஓடின..

'இரவும் பகலும் உரசிக் கொள்ளும்

அந்திப் பொழுதில் வந்து விடு..'

அவனருகில் நெருங்கி வந்த சுசித்ராவின் புருவங்கள் ஒயிலாக உயர்ந்து.. 'என்ன' வென்று வினவின.. ஒன்றுமில்லை என்பதைப் போல இமைகளை மூடித் திறந்தவன் அவளை ஒட்டி உரசினான்.. கருணாகரன் அருகில் இல்லாத விடுதலையுணர்வில் சுசித்ரா வாசுதேவனின் கழுத்தில் கைகளை மாலையாக்கித் தொங்கினாள்.. அவளது இடுப்பில் கைகளைக் கோர்த்து அவளை இழுத்து முகத்தில் முகம் பதித்த வாசுதேவன் அவளத இதழ்களில் அழுத்தமாக முத்தமிட்டான்..

"ஐ லவ் யு.." சொக்கிப் போன சுசித்ரா அவன் மார்பில் சாய்ந்து கண்மூடி முணுமுணுத்தாள்..

"நான் உன்னைக் காதலிக்கிறதை விட அதிகமாக நீ என்னைக் காதலிக்க முடியாதுடி.." வாசுதேவன் பதிலுக்கு கிசுகிசுத்தான்..

"இதைத்தான் நானும் சொல்கிறேன்.." சுசித்ரா அவன் மார்பில் குத்தினாள்..

"ஊஹீம்..?" குத்திய கைகளைச் சேர்த்துப் பிடித்து முத்தமிட்டான் வாசுதேவன்..

"சுசித்ரா.." சற்றுத் தொலைவிலிருந்து பானுபிரியா அழைத்தாள்..

"மாம் காலிங்.." சுசித்ரா விலகிக் கணவனின் விரல்களோடு விரல்களைக் கோர்த்தாள்..

"ஓகே.. யு கோ.." என்றான் வாசுதேவன்..

"நான் மட்டும் தனியாவா..? நோ, நோ.. மம்மி உங்களைக் கூப்பிட்டுக்கிட்டு வரச் சொன்னாங்க.. அதனால்தான் தேடி வந்தேன்.."

"அத்தை கூப்பிடலைன்னா என்னைத் தேடியிருக்க மாட்டியா..?"

"வம்பிழுக்கறிங்களா..? நீங்க இல்லாமல் நானில்லை.. தெரியும்தானே.."

இதை அவள் உண்மையாக மனதின் ஆழத்திலிருந்து சொல்கிறாள் என்பதில் நெகிழ்ந்து போனான் வாசுதேவன்..

"ஏய்ய்..! ஜஸ்ட் ஃபார் பன்னுன்னு எதையும் பேசக் கூடாதா..?"

"தெரியும்.. தெரியும்.. பேசாம வாங்க.."

"எங்கே..?"

"ஸ்டேஜீக்கு.."

சுசித்ரா கை காட்டிய திசையில் தோட்டத்தின் நடுவில் மேடை போடப் பட்டிருந்தது.. பிரத்யேக விளக்குகளின் ஒளி வெள்ளம் மேடையைக் குளிப்பாட்ட.. அங்கே தணிகாசலம் - கௌரி தம்பதியினரும், செந்தில் நாதன் - பானுபிரியா தம்பதியினரும் நின்றிருந்தனர்..

'இவங்க எதுக்கு ஸ்டேஜ் மேல நின்னிருக்காங்க.. எதை அனன்வ்ஸ் பண்ணப் போறாங்க..?' மேடையிலிருந்த மைக்கை யோசனையுடன் பார்த்தான் வாசுதேவன்..

மேடையின் அருகில் இவர்களுக்காக சுரேந்திரனும் மாதங்கியும் காத்திருந்தார்கள்.. இவர்களையும் அழைத்துக் கொண்டு மேடையேறும் உத்தேசத்துடன் அவர்கள் இருப்பதைப்போல வாசுதேவனுக்குத் தோன்றி வைத்தது..

'எதற்காக இருக்கும்..?' அவனுக்குப் புரியவில்லை..

மேடைக்கு வெகு அருகே.. முன் வரிசை நாற்காலிகளில் உட்கார்ந்திருந்த பூபதியும் கோதாவரியும் என்ன நடக்கிறது என்று புரியாத குழப்பத்தோடு மகனையும் மருமகளையும் பார்த்தார்கள்.. தணிகாசலம் பார்ட்டி கொடுக்கிறார்.. வாசுதேவனின் வீடு தேடி வந்து பூபதியையும் கோதாவரியையும் தனிப்பட்ட முறையில் விருந்துக்கு அழைத்திருக்கிறார் என்பதினால் அவர்களும் பார்ட்டிக்கு வந்திருந்தார்கள்.. இத்தனை நாளாய் தணிகாசலம் வாசுதேவனின் 'எம்.டி' யாக மட்டுமே இருந்தார்.. இப்போது வாசுதேவனின் மைத்துனனின் மாமனாராக ஆகிவிட்டாரே.. உறவினர் என்ற முறையில் அவரது அழைப்பை மறுக்க முடியுமா..?

'என்னடா..?' பூபதி சைகையில் மகனிடம் வினவினார்..

'தெரியல..' கையை விரித்துச் சைகையில் பதிலளித்தான் வாசுதேவன்..

"கம், கம்.. வி ஆர் வெயிட்டிங் ஃபார் யு.." சுசிந்திரன் அவசரப்படுத்த..

"இங்கே என்னதான் நடக்குது..?" என்று சுசித்ராவின் கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்திக் கேட்டான்

வாசுதேவன்..

"நீங்க நடக்கறீங்க.. நான் நடக்கிறேன்.. அண்ணா நடக்கிறார்.. அப்புறம் அண்ணி நடக்கிறாங்க.." குழந்தை போலத் தலையைச் சாய்த்துச் சிரித்தாள் சுசித்ரா..

"இன்னும் ஸ்விம்மிஸ் ஃபூலில வாத்து மிதக்குது.. கார்டனில முயல்குட்டி ஓடுதுன்னு ரைம் சொல்லு.. கேட்டுக்கிறேன்.." வாசுதேவனுக்கும் சிரிப்பு வந்தது..

மகளுக்குத் திருமணமான சந்தோசத்தில் தணிகாசலம் பார்ட்டி கொடுக்கிறார் என்றுதான் அவன் நினைத்திருந்தான்.. இங்கே என்னடாவென்றால்.. சம்பந்திகளும், சம்பந்திகளும் மேடையில் நிற்கிறார்கள்.. சுசிந்திரன், சுசித்ராவை அவர்களது வாழ்க்கைத் துணைகளோடு மேடைக்கு அழைக்கிறார்கள்..

'ஏதோ ஒன்னு நடக்கப் போகுது..' வாசுதேவனின் உள்ளுணர்வு சொன்னது..

மேடையிலிருந்து பார்த்தான்.. நீச்சல் குளத்தின் பக்கத்தில் கருணாகாரன் நின்றிருந்தான்.. எங்கோ தொலைதூர தொடுவானில் ஓரமாக நண்பன் நிற்கும் உணர்வு வாசுதேவனுக்கு.. எதனால் அந்த உணர்வு என்று தெரியவில்லை.. இயல்புக்கு மாறாக தான் விலகி நிற்பதைப் போன்ற சங்கடம்.. தொண்டையில் மீன்முள் நெருடும் இம்சை..

பெற்றவர்களும், உற்ற நண்பனும் மேடையை விட்டுக் கீழே இருக்க.. தான் மட்டும் மனைவி, மைத்துனன் குடும்பம், மாமனார் குடும்பம் என்று கூட்டுச் சேர்ந்து மேடையில் நிற்பதை அவன் விரும்பவில்லை.. சுசித்ராவின் முகத்துக்காக பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமை காத்தான்..

"லேடிஸ் அண்ட் ஜெண்டில் மேன்.." கம்பீரமான கனத்த குரலோடு பேச ஆரம்பித்தார் தணிகாசலம்..

"டி.ஜி.எம் குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸீம்.. எஸ்.எஸ் குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸீம் சம பலத்துடன் போட்டியிட்ட

நிறுவனங்கள்.. நாங்கள் நம்பர் ஒன்னில் இருந்தோம்.. இருக்கிறோம்.. நம்பர் டூ என்ற நிலைமைக்கு இரு கம்பெனிகளுமே இறங்கவில்லை.. ஆரோக்கியமான தொழில் போட்டியில் இருந்த நாங்கள் உறவுச் சங்கிலியில் பிணைக்கப்பட்டு ஒன்று சேர்ந்திருக்கிறோம்.. ஆம்.. எஸ்.எஸ்.குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸின் எம்.டி சுசிந்திரன்.. என் மகள் மாதங்கியைத் திருமணம் செய்து என் மாப்பிள்ïயாகி இருக்கிறார்.. அவருடைய தங்கை.. எங்களது கம்பெனியின் ஜி.எம் வாசுதேவனைத் திருமணம் செய்து என் மருமகளாகி இருக்கிறாள்.. வாசுதேவன் எனக்கு மகன் போல.."

வாசுதேவன் பூபதியைப் பார்த்தான்.. தன் மகன் தனக்கு அன்னியமாகி விட்டானோ என்ற பதட்டம் அவர் முகத்தில் துளிர்த்திருந்தது.. இல்லை என்று அவனுக்குக் கூவ வேண்டும் போல இருந்தது.. அவன் என்றும் பூபதியின் மகன் மட்டும்தான்..

தணிகாசலம் பேச்சை நிறுத்த.. செந்தில்நாதன் பேச்சைத் தொடர்ந்தார்.. வாசுதேவனுக்கு தலையை வலிப்பதைப் போல இருந்தது.. ஏதோ ஒரு மேடை நாடகத்தில்.. தான் ராஜா வேடம் கட்டி நிற்பதைப் போல அவனுக்குத் தோன்றி வைத்தது..

"எனது பிள்ளைகள் இருவருக்கும் திருமணம் ஆகிவிட்ட நிலையில் என் தொழில்களையும், சொத்துக்களையும் அவர்களுக்குச் சரிசமமாக பங்கிட்டு கொடுக்க நான் முடிவு செய்தேன்.. அதன்படி எஸ்.எஸ் குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸின் முக்கியத் தொழிலகள் என் மகன் சுசிந்திரனின் பெயருக்கு மாற்றப்பட்டு டி.ஜி.எம் குரூப்ஸ் ஆஃப் கம்பெனியுடன் இணைகின்றன.. என் மகன் சுசிந்திரன் எஸ்.எஸ் குரூப்ஸ் ஆஃப் கம்பெனியின் எம்.டி பொறுப்பிலிருந்து விலகி.. டி.ஜி.எம் குரூப்ஸ் ஆஃப் கம்பெனியின் எம்.டியாக பொறுப்பேற்றுக் கொள்ளப் போகிறான்.. எஸ்.எஸ். குரூப்ஸ் ஆஃப் கம்பெனியின் மீத தொழில்கள் என் மகள் சுசித்ராவின் பெயருக்கு மாற்றப் படுகின்றன.. எங்கள் மருமகன் வாசுதேவன் எஸ்.எஸ்.

குரூப்ஸ் ஆஃப் கம்பெயிஸின் எம்.டியாக பொறுப்பேற்றுக் கொள்ளப் போகிறார்.. இவற்றைக் கொண்டாடத்தான் இந்தப் பார்ட்டிக்கு உங்களை அழைத்தோம்.."

'என்னது..' வாசுதேவனின் முகம் அதிர்ச்சியானது..

அவனது அதிர்ச்சியைக் கவனிக்காமல் வந்திருந்த விருந்தினர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள்.. எவர் எவரோ வாசுதேவனுக்குக் கைகொடுக்க.. அவன் விழிகள் பெற்றவர்களைத் தேடின.. அவர்கள் கூட்டத்தின் பின்னால் மறைந்திருந்ததில் அவனது இதயம் வலித்தது..

"பிடிச்சாலும் பிடிச்சே.. புளியங்கொம்பாய் பிடிச்சுட்ட வாசு.. உனக்கு ஜி.எம். போஸ்ட்டே அதிகம்.. இப்ப பெண்டாட்டியின் கம்பெனிக்கு எம்.டி..! நடத்து.. நடத்து.." விசமம் சொட்டும் கண்களடன் விச வார்த்தைகளை உதிர்த்தான் ஜெகன்..

ஜெகன் டி.ஜி.எம் கம்பெனியின் பல்வேறு தொழில்களின் பல்வேறு கிளைகளில், ஒரு கிளையின் மேனேஜர்.. வாசுதேவனின் உயரம் கண்டு எக்கச்சக்கமாக பொறாமைப் படுவான்.. அதை மறைக்காமல் வார்த்தைகளிலும் வெளிப்படுத்தி விடுவான்.. அவனது பொறாமையின் வெளிப்பாடைக் கண்டு கொள்ளாமல் தட்டி விட்டுப் போகும் வாசுதேவனால் அன்று அதைப் போலக் கடந்து போக முடியவில்லை..

அவனைக் கேட்காமல் எப்படி இப்படியொரு முடிவை எடுக்கலாம் என்ற கோபம் அவனுக்குள் கனன்றது.. அவனது விருப்பத்திற்கு மரியாதை இல்லையா..? எம்.டி பதவி என்றதும் கேள்வியே கேட்காமல் ஏற்றுக் கொள்வான் என்று நினைத்து விட்டார்களா..?

வாசுதேவனின் தன்மானம் அடி வாங்கியது.. முகம் நிறைந்த மகிழ்ச்சியோடு கணவனை ஏறிட்ட சுசித்ரா திகைத்தாள்.. எதற்காக இந்த கோபம்..? அவள் என்ன தவறு செய்தாள்..? இது அவன் சந்தோசப்பட வேண்டிய தருணமல்லவா..?

என்னவென்று கேட்க நினைத்து அவன் கையைப் பிடித்தாள்.. பிடித்த கையை கடினத்துடன் அவன் விலக்கி விட்டதில் அதிர்ந்து பின் வாங்கினாள்.. மனைவியின் அதிர்ச்சியைக் கவனிக்காமல் இறுகிய முகத்துடன் 'மைக்'கின் அருகே வேகமாகச் சென்ற வாசுதேவன்..

"லிசன் மி லேடிஸ் அண்ட் ஜெண்டில் மேன்.." என்று உரத்த குரலில் ஆரம்பித்தான்..

அவன் நன்றி நவிலப் போகிறான் என்ற நினைவில் மேடையில் இருந்தவர்கள் சிரித்துக் கொண்டிருக்க.. சுசித்ரா மட்டும் மனதுக்குள் பதறினாள்.. அவளது பதட்டத்தை யாரும் கவனிக்கவில்லை..

"எஸ்.எஸ்.குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸ் என் மனைவிக்குச் சொந்தமானது.. அந்தக் கம்பெனியின் எம்.டி சீட்டில் அவள்தான் உட்கார வேண்டும்.. நான் உட்கார மாட்டேன்.. என் சுயமரியாதை அதை ஏற்றுக் கொள்ளாது.. அதை போல.. டி.ஜி.எம் குரூப்ஸ் ஆஃப் கம்பெனியின் எம்.டி சீட்டில் எனது மைத்துனன் உட்காரப் போகிறார் எனும் போது அவரிடம் ஜி.எம்மாக வேலை பார்ப்பது எனக்குச் சரிவராது.. ஸோ.. இதுவரை நான் பார்த்த டி.ஜி.எம் குரூப்ஸ் ஆப் கம்பெனியின் ஜி.எம் போஸ்டில் இருந்து இந்த நொடியிலிருந்து விலகிக் கொள்கிறேன்.. என் ரெஸிக்னேசன் மெயில் த்ரு தி புராப்பர் சேனலில் சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்து விடும்.. தட்ஸ் ஆல்.. இனி பார்ட்டி தொடர்ந்து நடக்கும்.. நீங்கள் எல்லாம் இருந்து என்ஜாய் பண்ணி விட்டுத்தான் போக வேண்டும்.. இது என் மனைவியும், மைத்துனனும் கொடுக்கும் பார்ட்டி.."

நான் கொடுக்கும் பார்ட்டியல்ல என்பதைச் சொல்லாமல் சொல்லி விட்டு மேடையிலிருந்து இறங்கி வேகமாக நடந்து விட்டான் வாசுதேவன்.. திக் பிரமை பிடித்து நின்ற சுசித்ரா சுசிந்திரன் உலுக்கிய உலுக்கலில் உணர்வு வரப் பெற்றவளாக..

"அண்ணா.." என்று விம்மினாள்..

"அவசரப்பட்டு விட்டோம் என்று தோன்றுகிறது சுசித்ரா.. உன் ஹஸ்பெண்ட் கோபமாகப் போகிறார்.."

"நானும் போகிறேன்.."

"பார்ட்டி நடந்து கொண்டிருக்கிறது சுசித்ரா.."

"அவரில்லாத பார்ட்டியை நான் என்ஜாய் பண்ணனுமா..?"

சுசித்ரா விம்மலை அடக்கிக் கொண்டு மேடையை விட்டு இறங்கி ஓடினாள்.. அவள் வருகிறாளா இல்லையா என்றுகூடப் பார்க்காமல் வாசுதேவன் விரைந்தது அவளது மனதை தைத்தது.. அவள் என்ன செய்தாள் என்று அவளை விட்டு விட்டுச் செல்கிறான்..? இவ்வளவுதானா அவனது காதல்..?

மகன் செல்கிறானே என்று அவனைப் பின்தொடர்ந்த பூபதியும் கோதாவரியும் மருமகள் வேகமாக ஓடி வந்ததில் தேங்கி நின்றார்கள்.. அவளுக்காக அவர்கள் நின்றது சுசித்ராவுக்கு ஆறுதலாக இருந்தது..

"எதுக்காக இப்படி ஓடி வருகிற..?" கோதாவரி மருமகளைக் கடிந்து கொண்டாள்..

"அவர் போகிறாரே அத்தை.." பரிதவித்தாள் சுசித்ரா.

"சின்ன வயசில இருந்து அவன் இப்படித்தான்ம்மா.. மத்த நேரங்களில சிரிச்சுக்கிட்டே இருக்கிறவன்.. கோபம் வந்துட்டா வேற மாதிரி ஆகிருவான்.. நீ பயப்படாதே.. நாங்க இருக்கிறோமில்ல.." மருமகளைச் சமாதானப்படுத்தி அழைத்துச் சென்றாள் கோதாவரி..

வாசுதேவன் காருக்குள் ஏறி உட்கார்ந்து ஸ்டார்ட் செய்து விட்டான்..

"நாங்க வேண்டும்ம்னா கால் டாக்ஸி பிடித்து வீட்டுக்கு வந்து சேர்ந்துக்கவா வாசு..?" நிதானமாக கேட்டார் பூபதி..

"ஏறுங்கப்பா காரில.." வாசுதேவன் எரிந்து விழுந்தான்.

சுசித்ரா முன் சீட்டில் கதவைத் திறந்து வாசுதேவனைப் பார்த்தபடி அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள்.. கண்கள்

தீம்பிழம்பாக அவன் முறைத்துப் பார்த்ததில் நடுங்கிப் போனாள்..

"எதுக்குடா மருமகளை முறைக்கிற..? இவ என்ன செய்தா..?"

சுசித்ராவின் மனதில் நிரடிய கேள்வியை கோதாவரி கேட்டபடி பூபதியுடன் காரில் பின்சீட்டில் உட்கார்ந்தாள்.. தாயின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் காரை காற்று வேகத்தில் ஓட்டினான் வாசுதேவன்.. காரிலிருந்த மற்ற மூவரும் திகில் பிடித்தவர்களாக ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.. கோதாவரியும் சுசித்ராவும் பயத்தில் கண்களை இறுக மூடிக்கொள்ள.. பூபதி மட்டும் பயத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கெத்தை நிலை நிறுத்திக் கொண்டார்..

வீட்டின் போர்டிகோவில் கார் நின்றது.. வாசுதேவன் கார்க்கதவை ஓங்கி அறைந்து மூடியதில் சுசித்ராவின் உடல் அதிர்ந்தது.. கோதாவரி மருமகளை பரிவுடன் அணைத்துக் கொள்ள.. அதைக் கண்டு கொள்ளாமல் வாசுதேவன் மாடிக்கு விரைந்து விட்டான்..

"சாப்பிடாம மாடிக்குப் போறானே.."

பார்ட்டிக்குப் போவதால் இரவு உணவைச் சமைக்க வேண்டாம் என்று வீட்டில் உள்ளவர்கள் வேலைக்காரப் பெண்ணை வர வேண்டாம் என்று சொல்லியிருந்தார்கள்.. விருந்தைச் சாப்பிட விடாமல் மகன் வீட்டுக்கு அழைத்து வந்து விட்டான் என்ற எண்ணமில்லாமல் கோதாவரி கவலைப்பட்டதில்..

'இதுதான் தாய்மை என்பதோ..' என்று உருகிப் போனாள் சுசித்ரா..

"அவன் பசி தாங்க மாட்டான் சுசித்ரா.. இரு.. உனக்கும் அவனுக்கும் தோசை வார்த்துத் தர்றேன்.. இட்லிப் பொடி இருக்கு.. அவசரத்துக்கு தேங்காய் சட்னி அரைத்துக்கலாம்.."

கோதாவரி மின்னல் வேகத்தில் அடுப்பைப் பற்ற வைத்து.. தோசையை ஊற்றி எடுத்தபடி.. மிக்சியில் சட்னியை

அரைத்துத் தாளித்து வைத்தாள்.. ஹாட் பாக்ஸில் சுசித்ராவுக்கும், வாசுதேவனுக்குமான தோசை,சட்னி வகையறாக்களை வைத்து மருமகளின் கையில் தந்து..

"கோபமா இருக்கான்.. இப்ப எதையும் கேட்டுக்காதே.. எதுவா இருந்தாலும் காலையிலே பேசிக்கலாம்.. அப்ப அவனோட கோபம் தணிந்திருக்கும்.." என்று வழி சொல்லிக் கொடுத்து அனுப்பி வைத்தாள்..

மாமியாரை நன்றியுடன் நோக்கி விட்டு மாடிப்படிகளில் ஏறிய சுசித்ராவுக்கு பயமாக இருந்தது.. வாசுதேவன் கோபக்காரன் என்பதை அவள் அறிவாள்தான்.. ஆனால் எவ்வளவு கோபம் இருந்தாலும் அவளிடம் அவன் விலக்கத்தைக் காண்பித்ததே இல்லையே.. இன்று அவள் மேடையில் இருக்கும் போதே அவளை விட்டு விட்டு இறங்கி விட்டானே.. அவளும் அவனுடன் வருகிறாளா இல்லையா என்று ஒரு தடவைகூடத் திரும்பிப் பார்க்கவில்லையே..

அறைக்கதவு பூட்டப்பட்டிருந்தது.. சுசித்ராவின் முகத்தில் அறை விழுந்ததைப் போல இருந்தது.. அவளுக்கு அவனுடைய அறையில் இடமில்லையா..? திரும்பிப் போய் விடலாமா என்றுகூட நினைத்தாள்.. அப்படிப் போனால் பூபதியும் கோதாவரியும் என்ன ஏதென்று கேட்பார்கள்.. அதை எதிர்கொள்ள முடியாது..

வேறு வழியின்றி அறையின் காலிங் பெல்லை அழுத்தினாள் சுத்ரா.. அன்னியரின் அறைக் கதவைத் தட்டுவதைப் போல அவளது மனம் துடித்தது.. கதவைத் திறந்த வாசுதேவன் அவளை ஒட்டுதல் இல்லாமல் பார்த்தபடி உள்ளே சென்றான்.. அழையாதார் அறை வாசலை மிதிக்க வேண்டுமா என்று சுசித்ராவின் தன்மானம் விசும்பியது.. அவன் அழைத்தாலும் அழைக்காவிட்டாலும் அறைக்குள் சென்றுதானே ஆகவேண்டும் என்ற பெருமூச்சுடன் அவள் உள்ளே சென்று கதவைத் தாழிட்டாள்.. அவள் கையிலிருந்த ஹாட் பாக்சைப் பார்த்த வாசுதேவன்..

"இது என்ன..?" என்று அதட்டினான்..

என்னவோ குற்றவாளியை அதட்டுவதைப் போல அதட்டுகிறானே என்ற கோபம் வந்தாலும்.. அதை அடக்கிக் கொண்டு..

"தோசை.. அத்தை கொடுத்து விட்டாங்க.." என்றபடி அவனுக்குப் பரிமாற ஆரம்பித்தாள் சுசித்ரா..

"இது அம்மா சுட்டுக் கொடுத்த தோசை.. எனக்குச் சாப்பிட்டுக்கத் தெரியும்.." சுள்ளென்று பேசினான் வாசுதேவன்..

சுசித்ரா விக்கித்து நின்று விட்டாள்.. அவனது எடுத்தெரிந்து பேசப்படும் பேச்சுக்கள் அவளைத் தீயாய் சுட்டன.. தாங்கிக் கொள்ள முடியாமல் தவித்தாள்..

"என்ன நினைச்சுக்கிட்டு இருக்கிற..? உன் பணத்துக்காகவா நான் உனக்குத் தாலி கட்டினேன்..? என்னை என்ன 'பிரசன்னா'ன்னு சொல்லிக்கிட்டு இருந்த 'மன்னார்'ன்னு நினைத்துட்டியா..?"

"என்ன சொன்னீங்க..?"

சுசித்ராவின் கையிலிருந்த தட்டு நழுவிக் கீழே விழுந்தது.. பிரளயம் அவளுக்குள் துடித்தது.. உன்மத்தம் பிடித்தவளைப் போல வாசுதேவனைப் பார்த்தாள்.. அவளது உடல் நடுங்கிக் கொண்டிருந்தது..

"சுசித்ரா.."

தவறை உணர்ந்தவனாக வாசுதேவன் அவளைத் தொட யத்தனிக்க.. தள்ளி நின்று எச்சரித்தாள்..

"என்னைத் தொடாதீங்க.."



மோப்பக் குழையும் அனிச்சம்..! அவள் அனிச்சமலர்..! சிறு சொல்லையும் தாங்காமல் வாடி விடும் தன்மையுடையவள்..

வாசுதேவன் சொன்னதோ பெருஞ்சொல்.. எப்படித் தாங்குவாள்..? முகம் திரிந்து அவன் நோக்கி விட்டான்.. அவள் விரல் நீட்டி அவனை எச்சரித்து விட்டாள்..

"என்னைத் தொடாதீங்க.."

வாசுதேவனின் முகம் மாறிவிட்டது.. கடுகடுவென மனைவியைப் பார்த்தவன் பல்லைக் கடித்தான்..

"திமிர்..?"

"ஆமாம்.. திமிர்தான்.. ஏன்..? எனக்குத் திமிர் இருக்கக் கூடாதா..?"

"கூடாதுன்னு நான் சொன்னா உன் திமிர் ஓடி ஒளிந்துக்குமா..? அது பணக்காரங்க கூடப் பிறந்த குணம்டி.."

"நான் மட்டும்தான் பணக்காரியா..? நீங்க பணக்காரர் இல்லையா..? அதான் கிராமத்தில் பார்த்தேனே.. பண்ணையார் குடும்பம்ன்னு கொண்டாடினாங்களே.."

"அந்த நினைப்பிருந்தா உன கம்பெனிக்கு என்னை எம்.டியாக்குவியா..? என்னையென்ன பெண்டாட்டியின் சொத்துக்குப் பல்லைக் காட்டிக்கிட்டு இருக்கிற பேராசைக்காரன்னு நினைச்சியா..?"

"நான் வேற.. நீங்க வேற இல்லைன்னு நினைச்சேன்.. என் ஹஸ்பெண்ட் எம்.டி சீட்டில உட்கார்ந்திருக்கனும்ன்னு நினைச்சேன்.."

"ஏண்டி..? ஜி.எம்முக்கு பெண்டாட்டியா இருக்க உனக்குப் பிடிக்கலையா..? தெரிஞ்சுதானே கல்யாணம் பண்ணிக்கடான்னு கேட்ட..? நானொன்னும் உன் பின்னாலே சுத்தலையே..?"

'அந்தப் பிரசன்னா சுத்தினான்னு சொல்லிக் காட்டறானா..?'

சுசித்ராவுக்கு பூமி பிளந்து அவளை விழுங்கி விடாதா என்றிருந்தது.. அவளது பூஞ்சை மனது எதையெதையோ நினைத்துத் துடித்தது.. இத்தனை நாளாய் இப்படியொரு

எண்ணத்தை மனதில் வைத்துக் கொண்டுதான் அவளுடன் வாழ்ந்தானா..? அவளைப் பற்றிய அவனது கணிப்பு இதுதான் என்று தெரியாமல் அவன் அவளைக் காக்க வந்த ரட்சகன் என்று நினைத்திருந்தாளே.. அவள்மீது அவன் உயிரையே வைத்திருக்கிறான் என்று இறுமாந்திருந்தாளே..

சுசித்ரா தரையில் படுத்து சுருண்டு விட்டாள்.. வாசுதேவன் கோபத்துடன் போர்வையும் தலையணையுமாக பால்கனிக் கதவைத் திறந்து படுக்கப் போய் விட்டான்.. யாரும் படுக்காத கட்டில் மெத்தை விரிப்புக் கசங்காமல் நொந்து போயிருக்க.. யாரும் சாப்பிடாமல் தோசை காய்ந்து போயிருந்தது.. காலையில் காபியுடன் வந்த கோதாவரி காய்ந்து போன தோசையையும்.. கசங்காத கட்டில் விரிப்பையும் பார்த்துக் கவலை கொண்டாள்..

"அவன் எங்கேம்மா..?"

காலிங் பெல்லின் ஒலியில் கதவைத் திறந்து விட்ட சுசித்ரா.. தரைமீது அமர்ந்து விட.. அவள் படுத்திருந்த தலையணையை நோட்டம் விட்டபடி மகனை விழிகளால் தேடியபடி கேட்டாள் கோதாவரி..

"பால்கனியில்.."

ஒற்றை வார்த்தையில் பதில் சொன்னாள் சுசித்ரா..

'இவ இங்கே.. அவன் அங்கேயா..? என்ன கூத்து இது..'

கோதாவரி பால்கனிக்குப் போய் மகனை எழுப்பினாள்.. கண் விழித்தவன் தாயைக் கண்டதும் அவசரமாக எழுந்து உட்கார்ந்து மனைவியை முறைத்தான்.

'அறிவு கெட்டவ.. அம்மா வருகிறாங்கன்னு சொல்லித் தொலைச்சுட்டுக் கதவைத் திறக்கிறதுக்கு என்ன..? இப்ப இவங்க விசாரணைக்கமிசன் வைப்பாங்களே.. எவன் பதில் சொல்கிறது..?'

"என்னடா.. மருமககூட சண்டை போட்டியா..?"

"அப்படின்னு இவ சொன்னாளா..?"

அவன் உக்கிரமூர்த்தியாக.. சுசித்ரா குரல் கொடுத்தாள்..

"நானொன்னும் சொல்லலை.. அத்தை கேட்டா அவங்களுக்குப் பதில் சொல்லுங்க.. என்மேல் பழி போட வேணாம்.."

"யார் பழி போட்டது..?"

"நீங்கதான்.. வேற யாரு..?"

"ஏய்ய்.. நீயும், உன் குடும்பமும் கூட்டுச்சதி செய்து வைத்திருக்கிற வேலையில நான் செம கடுப்பா இருக்கேன்.. பேசாம போயிரு.."

"எங்கே போகச் சொல்கிறீங்க..?"

"உன் கம்பெனிக்குப் போ.. எஸ்.எஸ் குரூப்ஸ் ஆஃப் கம்பெனியின் எம்.டி.... வேலையில்லாதவன் கிட்ட உனக்கென்னடி பேச்சு வேண்டிக்கிடக்கு..?"

"வேலையில்லாதவரா..? நீங்களா..?"

"ஆமாம்.. அதான் நேத்துப் பார்ட்டியில மைக்கை பிடிச்சு.. ஊர் முழுக்கக் கேட்கிறதைப் போல உரக்கச் சொல்லிட்டேனே.. நான் பாட்டுக்கு டி.ஜி.எம் குருப்ஸ் ஆஃப் கம்பெனியில ஜி.எம் போஸ்டில இருந்தேன்.. மகராசி.. உன்னைப் பார்த்தேன்.. பார்த்த வேலையும் பறந்திருச்சு.."

சுசித்ராவின் கண்கள் கலங்கின.. விசும்பி விடாமலிருக்க பிரயத்தனம் செய்தாள்.. கோதாவரிக்கு கோபம் வந்து விட்டது..

"போதும்டா.." என்று மகனை அடக்கினாள்..

"எனக்கு வேகு வேகுன்னு வருதும்மா.. இதுதான்னு இவ சொல்லியிருந்தா வேண்டாம்ன்னு தடுத்திருப்பேனா இல்லையா..? இவளும் இவ குடும்பமும் என்னை என்னன்னு நினைத்திருக்காங்க பாருங்க.. பணத்துக்கும் பதவிக்கும் ஆசைப்பட்டு மாமனார் கம்பெனியில முதலாளியா உட்காருவேன்னா நினைத்தாங்க..? என்னைக் கேட்காம எப்படிம்மா அவங்க டிசைட் பண்ணலாம்..? பார்ட்டி

வைத்து ஸ்டேஜில ஏறி மைக்கைப் பிடிச்சு அனௌன்ஸ் பண்றாங்க பாருங்க.. திமிர்ம்மா.. பணம் வந்தா பல்லைக் காட்டி விடுவேன்ங்கிற நினைப்பு.."

கோதாவரியால் மகனின் கொந்தளிப்பை அடக்க முடியவில்லை.. மகனின் கோபத்தில் நியாயம் இருப்ப தாகவே அவள் நினைத்தாள்.. பூபதியும் அதைத்தான் சொன்னார்..

"காலணாக் காசா இருந்தாலும் அது நாம சம்பாதித்த காசா இருக்கனும் கோதாவரி.. ஓட்டைக் குடிசையா இருந்தாலும் நமக்கு உரிமையுள்ள குடிசையா இருக்கனும்.. பெட்டிக்கடைக்கு முதலாளியா இருந்தாலும் நாம முதல் போட்ட கடைக்கு முதலாளியா இருக்கனும்.. அதுதாண்டி மரியாதை.. வாசு எப்படிடீ சுசித்ராவின் கம்பெனியில் எம்.டியா உட்காருவான்..?"

"இதுக்குத்தான் நான் சொன்னேன்.. நமக்கு ஏத்த இடத்தில பெண் பார்க்கலாம்ன்னு.. என் பேச்சை யார் கேட்டா..?"

"இனி அதைப் பேசி ஆகப் போகிறதென்ன..? வாசுவுக்கும் சுசித்ராவுக்கும் கல்யாணம் ஆகியாச்சு.. சுசித்ரா நம்ம வீட்டு மருமகள்.. சாது.. அதிர்ந்து பேசத் தெரியாத பொண்ணு.."

"அதைச் சொல்லுங்க.. அவ முகத்துக்காக நாம பார்க்கனுமில்ல.."

கோதாவரி அமைதியாகி விட்டாள்.. சுசித்ராவின் மீதான அவளது பாசம் அத்தகையது.. அனிச்ச மலரைப் போன்ற நுட்பமான மென்னுணர்வுகள் கொண்ட பெண் மருமகளாக வர தான் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று பூரித்துப் போவாள்..

"வாசு.. கொஞ்சம் பொறுமையாப் பேசுடா.. சுசித்ரா உனக்கு அநியாயம் செய்யனும்னு மனதால் கூட நினைத்திருக்க மாட்டா.."

மாமியாரின் புரிதலில் வாய் விட்டு கேவி விட்டாள் சுசித்ரா.. மனைவியின் கண்ணீர் வாசுதேவனின் மனதைக் கரைக்கவில்லை.. அவன் கோபம் குறையாதவனாக

வாய்க்குள் முணுமுணுவென அவளைத் திட்டியபடியே காபியைக் குடித்து முடித்தான்..

"நீயும் காபியைக் குடிம்மா.."

மருமகளை வற்புறுத்திக் காபியைக் குடிக்க வைத்த கோதாவரி.. தயக்கத்துடன்..

"வாசு.. அவங்கள்ளாம் வந்திருக்காங்கடா.." என்றாள்.

சுசித்ரா புரியாமல் விழிக்க.. வாசுதேவன் புருவங்களை நெரித்தபடி..

"யார்.. யார்..?" என்றான்..

"உன் மாமனார், மாமியார், மைத்துனன், உன் எம்.டி அப்புறம் மாதங்கி.." கோதாவரி ஒப்பித்தாள்..

"மம்மி, டாடி, அண்ணால்லாம் வந்திருக்காங்களா..?" அவசரமாக எழுந்த சுசித்ரா வாசுதேவனின் ஆழ்ந்த முறைப்பில் அடங்கிப் போனவளாக உட்கார்ந்தாள்..

"வாங்கம்மா போகலாம்.."

சுசித்ராவை முறைத்தபடி சொன்ன வாசுதேவன் சட்டையை மாட்டிக் கொண்டு படி இறங்கினான்.. கூடப் போவதா, வேண்டாமா என்ற தயக்கத்துடன் நின்றவளை கோதாவரி அழைத்துக் கொண்டு போனாள்..

"வாங்க.." பொதுவாக வரவேற்றான் வாசுதேவன்..

அவர்களும் பொத்தாம் பொதுவாகத் தலையை அசைத்து விட்டுப் பேசாமல் இருந்தார்கள்.. யார்

பேச்சை ஆரம்பிப்பது என்று கண்ணசைவில் அவர்கள் விவாதிப்பதைப் பார்த்தும் பார்க்காதவனைப் போல சலனமற்ற முகத்துடன் அமர்ந்திருந்தான் வாசுதேவன்..

"உங்களைக் கோபப் படுத்தனும் என்கிற எண்ணமெல்லாம் எங்களுக்கு இல்லை வாசு.."

அவனது எம்.டி என்ற உரிமையுடன் தணிகாசலம் தான் பேச்சை ஆரம்பித்தார்.. மற்றவர்கள் முகத்தில் 'அப்பாடா'

என்ற நிம்மதி சூழ்ந்தது..

"எங்க டிசிசன் சரிங்கிற எண்ணம்தான் எங்களுக்கு.. நீங்க மறுக்க மாட்டிங்கன்னு நினைத்தோம்.. சர்ப்ரைஸ் பார்ட்டியாய் இருக்கட்டும்ன்னுதான் பார்ட்டிக்கு அரேன்ஜ் பண்ணி.. ஸ்டேஜில் அனௌன்ஸ் பண்ணினோம்.."

"எப்படி சார்..? இத்தனை காலமாய் என்னைப் பார்த்திருக்கீங்க.. நான் மறுக்க மாட்டேன்னு எப்படி நினைத்தீங்க..? எஸ்.எஸ்.குரூப்ஸ் ஆஃப் கம்பெனி சுசித்ராவுக்கு சொந்தமாகுது.. அதன் எம்.டி சீட்டில் அவள்தான் உட்காரனும்.."

"ஓகே.. அப்படி நீங்க நினைத்தீங்கன்னா யாரும் உங்களை ஃபோர்ஸ் பண்ண மாட்டோம்.. அதுக்காக டி.ஜி.எம் குரூப்ஸ் ஆஃப் கம்பெனியின் ஜி.எம் போஸ்டை ஏன் ரிசைன் பண்ணனும்..?"

"ஏன்னா.. டி.ஜி.எம் கம்பெனியின் எம்.டி நீங்க இல்லை.. மிஸ்டர் சுசிந்திரன் எம்.டி சீட்டில் உட்காரப் போகிறார்.. அவர் சுசித்ராவின் அண்ணன்.. மைத்துனனிடம் வேலை பார்க்க என் தன் மானம் இடம் கொடுக்காது.."

வாசுதேவனின் திட்டவட்டமான பதிலில் மேலே என்ன பேசுவது என்று தெரியாமல் திகைத்து மௌனமானார் தணிகாசலம்.. தந்தை விட்டதை மகள் தொடர்ந்தாள்..

"என் கம்பெனியின் எம்.டி சீட்டில் என் ஹஸ்பெண்ட் உட்காரப் போகிறார் அண்ணா.. அது போலதானே சுசித்ராவின் கம்பெனியில் நீங்க எம்.டி சீட்டில் உட்காருவது..?"

"கெட்டிக்காரத்தனமாக பேசுவதாக நினைவா மாதங்கி..? சுசிந்திரனின் அப்பா அவருக்குச் சேர வேண்டிய புராப்பர்ட்டீஸை பிரித்துக் கொடுத்து விட்டார்.. டி.ஜி.எம் குரூப்ஸ் ஆஃப் கம்பெனியில் இல்லாத.. அதற்குத் தேவைப்படும் இம்பார்ட்டண்ட் பிஸினெஸ் எல்லாம் எஸ்.எஸ் கம்பெனியில இருந்து பிரிஞ்சு இங்கே

ஜாயின் ஆகுது.. ஏறக்குறைய உங்களிடம் இருக்கும் புராப்பர்ட்டிஸ்க்கு ஈக்குவல் புராப்பர்ட்டிஸீடன் அவர் உங்க கம்பெனியின் எம்.டி. சீட்டில் உட்காருகிறார்.. இன்னும் சொல்லப் போனால் சுசீந்திரனின் பெயருக்கு மாற்றப் பட்டிருக்கும் பிஸினெஸ்களின் மொத்த மதிப்பு டி.ஜி.எம் குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸின் மொத்த மதிப்பை விட அதிகமானது.."

வாசுதேவனின் நுணுக்கமான புள்ளி விவரக் கணக்கீட்டில் செந்தில்நாதன் அயர்ந்து போனார்.. தணிகாசலமோ..

'பார்த்தாயா எனது தளபதியை..' என்பது போன்ற பெருமிதப் பார்வையுடன் மீசையை முறுக்கிக் கொண்டார்.

"ஸோ.. சுசிந்திரன்தான் டி.ஜி.எம் கம்பெனியின் எம்.டியாக இருக்க முடியும்.. அவரைப் போல எஸ்.எஸ் கம்பெனியில் எனது புராப்பர்ட்டிஸ் ஏதும் இணைந்திருக்கிறதா..?"

"அண்ணா.."

"லீவ் திஸ் டாபிக் மாதங்கி.. என் டிசிசனில் மாற்றம் ஏதும் இல்லை.. இதைப் பற்றி யாரும் பேச வேண்டாம்.. சுசித்ரா அவளோட கம்பெனியை டேக் ஓவர் பண்ணிக்கட்டும்.. எம்.டி சீட்டில் உட்காரட்டும்.. ஐ ஹேவ் நோ அப்ஜெக்சன்.. பட்.. என்வழி தனி வழி.. அதைப் பற்றி யாரும் பேச வேண்டாம்.."

வாசுதேவனின் திட்டவட்டமான அறிவிப்பில் யாரும் எதுவும் பேச முடியாமல் போனது.. சுசித்ராவின் துயரம் கவ்விய முகமும் ஆழ்ந்த மௌனமும் சுசிந்திரனின் மனதை வாள் கொண்டு அறுத்தன.. தங்கையிடம் தனிமையில் பேசினான்.. அவள் சோகைச் சிரிப்புடன்..

"எதுவும் இல்லையே.." என்று மறுத்தாள்..

"எனக்குக் கீழே உன் ஹஸ்பெண்ட் ஜி.எம்.மா வேலை பார்க்க.. நீ எஸ்.எஸ் கம்பெனியின் எம்.டியா உட்காருவது சரிவராதுன்னு நாம் நினைத்தோம்.. பட்.. உன் ஹஸ்பெண்ட் வேறு மாதிரி நினைக்கிறார் சுசித்ரா.. நம்மைத் தப்பா நினைக்கிறார்.."

"ஐ நோ.."

"அவரிடம் எப்படிச் சொல்லிப் புரிய வைக்கிறதுன்னு தெரியலை சுசித்ரா.."

"அதை நான் பார்த்துக் கொள்கிறேன் அண்ணா.. நீங்க வொர்க்கில் கான்சென்ட்ரேட் பண்ணுங்க.."

"அசோக் நகர் பங்களாவும்.. அண்ணாநகர் அபார்ட்மெண்ட்ஸீம்.. தி.நகர் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸீம் உன் பெயரில் இருக்கு சுசித்ரா.. நீ ஃபேமிலியோடு அசோக் நகர் பங்களாவுக்கு ஷிப்ட் ஆகறது பெட்டர்ன்னு நானும், மம்மி டாடியும் ஃபீல் பண்றோம் சுசித்ரா.."

பயந்து போனவளாக சுற்று முற்றும் பார்த்தாள் சுசித்ரா.. எதற்காக இந்த அளவுக்குப் பயப்படுகிறாள் என்று குழம்பிப் போனான் சுசீந்திரன்.. அவன் தங்கை அவளது புகுந்த வீட்டில் முழு உரிமையுடன் வாழ்வதாகத்தானே அவன் நினைத்துக் கொண்டிருக்கிறான்..? அப்படி ஏதும் இல்லையா..?

"இருக்கிற பிராப்ளம் போதும் அண்ணா.. புதிதா எதையும் கிரியேட் பண்ண வேண்டாம்.. என் கம்பெனியில எம்.டி சீட்டில் உட்கார மாட்டேன்னு சொன்னவர்.. என் பெயரில் இருக்கும் பங்களாவுக்கு ஷிப்ட் ஆவாரா..?"

"ஆமாமில்ல.."

சுசிந்திரன் நெற்றிப் பொட்டில் விரலை அழுத்தி நீவி விட்டான்.. அதை எப்படி அவன் மறந்து போனான்..?

"என் லைஃப்பை நான் பார்த்துக் கொள்கிறேன்னு சொன்னேனில்ல.. நீங்க எதைப்பத்தியும் வொர்ரி பண்ணிக்க வேண்டாம்.."

தங்கை அவனைத் தள்ளி நிறுத்துவதைப் போல தோன்றியது.. ஏற்கனெவே அவனைத் தள்ளி நிறுத்தியிருந்தவள்தான்.. அப்போது அவள் அவர்களின் வீட்டில் இருந்தாள.. அவனது தங்கையாக மட்டும் இருந்தாள்.. அவனும் தனியனாக.. தங்கையின் நலம்

பேணுபவனாக இருந்தான்.. இப்போது அப்படியில்லையே.. அவனுக்கு திருமணமாகி விட்டதே.. மாதங்கி அவன் வாழ்வில் வந்து விட்டாளே.. மனைவிக்குத்தானே முதலிடம் கொடுத்தாக வேண்டும்.. தங்கை மணமாகி புகுந்த வீட்டில் இருக்கிறாள்.. அவளது கணவன்தான் அவளுக்கு முக்கியம்.. அண்ணன் என்பவன் அடுத்த இடத்தில்தான் அருகருகில் நின்றிருந்தாலும் தொலைவினிலே பிரிந்து விட்டதைப் போல அவன் உணர்ந்தான்..

"சந்தோசமா இருக்கியா சுசித்ரா.."

தமையனின் தழுதழுத்த குரலில் அவனது மனநிலையை உணர்ந்து விட்ட சுசித்ரா பாசத்துடன் சுசிந்திரனின் கரங்களைப் பிடித்துக் கொண்டு..

"இந்த வீட்டில் இருக்கிறவங்க நல்லவங்க அண்ணா.. மருமகளை மகளாகப் பார்க்கும் மாமனார், மாமியார்.. தம்பி வொய்ஃபைப் பிரித்துப் பார்க்காமல் உடன் பிறந்தவளைப் போல பாசம் காட்டும் நாத்தனார்.. கோபமிருந்தாலும் எதிர்பார்ப்பில்லாத காதலைக் கொடுக்கும் ஹஸ்பெண்ட்டுன்னு அன்பு சூழ் வீடு இது.. இங்கே கிடைக்காத சந்தோசமா அசோக் நகர் பங்களாவில் கிடைத்து விடப் போகுது..?" என்று சமாதானப் படுத்தினாள்.

அவள் சொன்னவை அனைத்தும் வாய் வார்த்தைகள் அல்ல.. சத்தியமானவை என்று சுசிந்திரனுக்கும் தெரியும்தானே.. இருந்தும் அவன் மனம் சமாதானமாக வில்லை.. தங்கையின் சோர்ந்த முகம் அவனை பாதித்தது.. மலர் போன்ற சுசித்ராவின் முகம் வாடியிருந்ததில் அவன் வாடிப் போனான்..

"நீ சோர்ந்திருக்கிறயே சுசித்ரா.." என்று உருகினான்.

"அடுத்தடுத்து நடந்தவைகளில் கொஞ்சம் அப்செட் ஆகிட்டேன்.. சீக்கிரமா வெளியில் வந்திருவேன் அண்ணா.."

மனதில்லாமல் சுசிந்திரனும் மற்றவர்களும் கிளம்பிப் போனார்கள்..

"அண்ணனுடன் பாசப்பயிரை வளர்த்து முடிச்சாச்சா..?" குத்தலாகக் கேட்டான் வாசுதேவன்..

"அங்கே மட்டும் என்னவாம்..? தங்கை போல நினைக்கிறவங்களிடம் பாசப் பறவையை பறக்க விட்டதைப் பார்த்துக்கிட்டுத்தானே இருந்தேன்.." பதிலுக்குச் சொன்னாள் சுசித்ரா..

"பரவாயில்லை.. பேசக் கத்துக்கிட்ட.. அண்ணன் ஒரு கோவில்ன்னு பக்திப் பரவசமாகிறவ.. அண்ணனுடன் கிளம்பிப் போக வேண்டியதுதானே..?" அடுத்த அஸ்திரம் பாய்ந்து வந்தது..

துடித்துப் போனாள் சுசித்ரா.. வெறும் வாய் வார்த்தையைக் கூட அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

"ஏன் போகனும்..? இது என் வீடு.." என்று படபடத்து விட்டாள்..

அவளை ஊன்றிப் பார்த்த வாசுதேவனின் முகத்திலிருந்து எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை..

"வாசு.."

பூபதியின் அழைப்பில் ஹாலுக்குப் போய் விட்டான்.. கோதாவரியும் பூபதியும் எதையோ சொல்ல யோசனையுடன் கேட்டுக் கொண்டிருந்தான்.. தாய் தந்தையின் நடுவில் அவன் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கத் தள்ளி நின்று விட்டாள் சுசித்ரா.. அவர்கள் ஒரு குடும்பம்.. அவள் மட்டும் தனியா..?

தணலின் மீது நிற்பதைப் போலத் துடித்துப் போனவள் மாடிக்குப் போய் விட்டாள்.. சற்று நேரம் கழித்து மாடிக்கு வந்த வாசுதேவன்..

"எஸ்.எஸ் கம்பெனியின் எம்.டி ரெடியாகலை போல.." என்று புருவங்களை உயர்த்தினான்..

சுசித்ரா பதில் சொல்லவில்லை.. வாசுதேவன் சுவர் அலமாரியைத் திறந்து.. அவனுடைய உடையை எடுத்து வெளியே வைத்துவிட்டு.

"வேலைக்குப் போகாத புருசன் மெதுவாக் குளித்துக்கட்டும்ன்னு நினைச்சுக்கிட்டு இருந்தேன்னா ஏமாந்துதான் போவ.. வாசுதேவன் ஓடிப் பழக்கப்பட்டவன்.. ஸோ.. பாத்ரூமை நான் ஆக்குப்பை பண்ணப் போகிறேன்.. நீ ரெடியாகனும்னா வேற ரூமுக்குப் போய்க்க.." என்றபடி குளியலறைக்குள் புகுந்து விட்டான்..

'குளிப்பதற்கு மட்டும் வேற ரூமுக்குப் போகச் சொல்கிறானா..? இல்லை.. அவனிருக்கும் ரூமில் நான் இருக்கக் கூடாதுன்னு வேற ரூமுக்குப் போகச் சொல்கிறானா..?'

சுசித்ராவின் பூஞ்சை மனதைக் கேள்விகள் குடைந்தன.. தொட்டால் சிணுங்கி சுபாவம் கொண்டவள் அவள்.. மோப்பக் குழையும் அனிச்ச மலர்..! அடுத்து வந்த நாள்களில் அவள் வாசுதேவனின் நிழலைக்கூட நெருங்காமல் விலகி நின்றாள்.. எஸ்.எஸ் கம்பெனியின் எம்.டி பொறுப்பை ஏற்றுக் கொண்டாள்.. வீட்டில் தனியறையில் தங்கினாள்.. மாடிக்குக் கோதாவரி வரும் போது மட்டும் வாசுதேவனின் அறையில் இருப்பதைப் போல பார்த்துக் கொண்டாள்..

மனைவியின் விலகலைக் கவனிக்க நேரமில்லாமல் ஓடிக் கொண்டிருந்தான் வாசுதேவன்.. அதிகாலையில் வீட்டை விட்டுக் கிளம்பினால் அர்த்த ராத்திரிக்கு வந்து சேருவான்.. அறையில் சுசித்ரா இருக்கிறாளா.. இல்லையா.. என்று கூடக் கவனிக்காமல் கட்டிலில் விழுந்து கால்மாடு, தலைமாடாக தூங்கி விடுவான்..

இரண்டு மாதங்கள் ஓடின.. சுசித்ராவைத் தேடாமல் வாசுதேவனும்.. அவனது புறக்கணிப்பில் மனம் புண்பட்டு ஓட்டு மொத்தமாக விலகி நின்ற சுசித்ராவும் ஒருவரிடம் ஒருவர் பேசிக் கொள்ளும் நேரம் வந்தது.. அவள் கம்பெனியிலிருந்து வீடு திரும்பிய போது ஹாலில் பெற்றோர்களுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்த வாசுதேவன் அவளைக் கண்டதும் படு உல்லாசமாக..

"ஹாய்.. பொண்டாட்டி.." என்று கண்சிமிட்டினான்..

இது பிரமையா என்று பிரமித்துப் போனாள் சுசித்ரா.. எத்தனை நாள்களாயிற்று.. இது போல் அவன் சிரித்துப் பேசி என்று மனம் நெகிழ்ந்தாலும்.. இவன் சிரித்தால் சிரிக்க வேண்டும்.. முறைத்தால் விலக வேண்டுமா என்ற கோபம் மனதில் வந்தது..

வாசுதேவன் சொந்தமாக ஒரு கம்பெனியை ஆரம்பிக்கப் போகிறானாம்.. ஏற்றுமதி, இறக்குமதித் தொழில்தான் பிரதானம்.. கம்பெனிக்கு 'வி.எஸ்' கம்பெனி என்று பெயர் வைத்திருந்தான்..

'வி ஃபார் வாசு.. எஸ் ஃபார் சுசித்ராவா..?' தனல் வீசிய அவள் மனதில் பனிக் கட்டியின் ஜில்லிப்பு..

"அப்பாம்மாதான் இந்தப் பெயரை சூஸ் பண்ணினாங்க.."

வாசுதேவனின் வார்த்தைகள் நொடிப் பொழுதில் ஜில்லிப்பை அகற்றின.. சுசித்ராவின் மனம் மறுபடியும் கூம்பியது..

"ஆக்சுலா கம்பெனிக்கு.. 'பி.கே' கம்பெனின்னுதான் பெயர் வைக்கனும்னு நினைத்தேன்.. பி ஃபார் பூபதி.. கே ஃபார் கோதாவரி.. அப்பாம்மா விடலை.. 'வி.எஸ்'ன்னு தான் பெயர் வைக்கனும்னு அடம் பிடித்தாங்க.. அவங்களுக்காகத்தான் இந்தப் பெயர்.."

'எனக்காக இல்லையா..?'

கோடி கோடியாய் பணமிருந்தும் அன்பிற்கு ஏங்கும் வறியவளாய் தனித்து நின்றாள் சுசித்ரா.. அவளது கணவன் சொந்தமாகத் தொழில் தொடங்கப் போகிறான்.. அவளுக்கு அதில் சந்தோசம்தான்.. கணவனின் சுயமரியாதை நிறைந்த திறமையில் எந்த மனைவிக்குத்தான் சந்தோசம் வராது..?

'பட்.. இதைப் பற்றி அத்தை, மாமாவிடம் கலந்து பேசியவர் என்னிடம் ஏன் பேசவில்லை..? இவர் வாழ்வில் நான் யார்..?'

மனதுக்குள் குமைந்தாள் சுசித்ரா.. கணவன் அவளைத் தனிமைப் படுத்தி விட்டதில் குமுறினாள்.. அந்தக் குடும்பத்தில் அவளுக்கென்று ஒரு இடமில்லையா..?

'இந்தக் கம்பெனி ஆரம்பிக்கக் கோடிக் கணக்கில் இன்வெஸ்ட் பண்ணனுமே.. அந்த அளவுக்கு லோன் கிடைக்காதே.. பணத்துக்கு என்ன பண்ணினார்..?'

"கிராமத்து நிலங்களை வித்துடுன்னு அப்பா சொன்னார்.. நான் முடியாதுன்னு சொல்லிட்டேன்.. பரம்பரையாக பண்ணையார் வீட்டுச் சொத்துங்கிற பெருமை தர்ற நிலங்கள்.. அதை விற்கிறதா..? அப்புறம்தான் குத்தகைக்கு விடலாம்ன்னு அம்மா வழி காட்டினாங்க.."

வாசுதேவன் பெருமையுடன் விவரித்தபோது.. என்னிடம் கேட்டிருந்தால் நானும் வழி சொல்லியிருப்பேனே என்று மனதுக்குள் மருகினாள் சுசித்ரா.. அவளுடைய பணத்தை வாங்கிக் கொள்ள வேண்டாம்.. கோடிக் கணக்கில் மதிப்புப் பெறும் வைர நகைகள் இருக்கின்றனவே.. அவற்றை பேங்கில் அடமானமாக வைத்து விட்டு நாளை திருப்பிக் கொடுக்கக் கூடாதா..? அவசரத்துக்கு கணவனுக்கு உதவக்கூட அவளுக்கு உரிமையில்லையா..?

"அம்மா அவங்களோட வைர நகைகளைத் தூக்கிக் கொடுத்துட்டாங்க.. பரம்பரை, பரம்பரையாய் வரும் வைர நகைகள்.. பரம்பரை கௌரவத்தைக் காப்பாற்று.. அது போதும்.. பண்ணையார் மகன், மாமனார் கம்பெனியில முதலாளியா உட்காராம, சொந்தமாக் கம்பெனி ஆரம்பித்து அதில முதலாளியா உட்கார்ந்தான்ங்கிற பெருமை மட்டும் போதும்.. நகைகளில என்ன இருக்குன்னு கேட்டாங்க.." வாசுதேவன் தாயைப் பெருமையாகப் பார்த்துக் கொண்டான்..

துவண்டு போனாள் சுமித்ரா.. அவளது நகைகளைக் கணவன் கேட்கவில்லை.. தானாக முன்வந்து கொடுக்க அவளுக்குத் தயக்கம்.. அதிலும் அவன் குற்றம் கண்டு பிடித்துக் கோபம் கொண்டால் என்ன செய்வது..?

செய்வதறியாது அவள் தவித்துக் கொண்டிருக்க வாசுதேவனின் தாய் அத்தகைய பயமோ, தயக்கமோ இல்லாமல் தனது நகைகளை மகனுக்குக் கொடுத்து

உதவியிருக்கிறாள்.. சுசித்ராவால் ஏன் அது முடியவில்லை..?

தாய்க்குப் பின் தாரம் என்பார்களே.. இங்கு தாய் மட்டும்தான் உரிமையுள்ளவள்.. தாரம் எவளோ ஒருத்தி என்று தள்ளி வைத்து விட்டானே..

"அம்மான்னா அப்படித்தான் இருப்பாங்க.."

'பெண்டாட்டின்னா எப்படி இருப்பா..?'

"மகன் கலங்கி நின்னா தாய்க்குப் பொறுக்காது.."

'ஹஸ்பெண்ட் கலங்கி நின்னா பெண்டாட்டிக்கு மட்டும் பொறுக்குமா..?'

"தாய்க்குப் பொறுப்பு இருந்தா.. மகனுக்கும் அது இருக்காதா..?"

'உன் வொய்புக்குன்னு பொறுப்பெடுத்துக்கனும்னு ஏண்டா நீ நினைக்கலை..?'

"அம்மாவோட நகைகளை வாங்கிக்கிட்டேன்.. விற்கலை.. நிலங்களைக் குத்தகைக்கு விட்டதைப் போல.. நகைகளை பேங்கில் அடமானமாக வைத்துட்டேன்.."

'எப்புடி..' என்ற பார்வையை வாசுதேவன் பார்க்க.. பதிலுக்கு உணர்ச்சியில்லாத பார்வையை சுசித்ரா பார்த்து வைத்தாள்.. அதை கண்டு கொண்ட வாசுதேவனின்

முகம் கருத்தது.. புருவங்களை நெரித்தபடி அவளை முறைத்தான்.. சுசித்ராவின் கண்கள் கலங்கி விட்டன.. இமைகளைச் சிமிட்டிக் கண்ணீரை அடக்கிக் கொண்டாள்.. மனது மட்டும் துடித்தது.. இதயம் கனத்தது..

"நாளைக்குக் கம்பெனியின் திறப்பு விழா.. ஊர் முழுக்க இன்விடேசன் கொடுத்தாச்சு.. பெஸ்ட் கேட்டரிஸ் சர்வீஸில் பிரேக்பாஸ்ட், லன்ச், ஈவினிங் டிபனுக்குன்னு சொல்லிட்டேன்.. கருணா எல்லாத்தையும் கவனிச்சுக்கிறான்.. அவன்தானே கம்பெனியின் ஜி.எம்.. நான் ரிசைன் பண்ணினப்ப அவனும் ரிசைன் பண்ணிட்டு

பின்னாடியே வந்திட்டான்.. ஏண்டான்னு திட்டினா.. நீ இருக்கப்போய் அங்கே காலம் தள்ளினேன்.. நீயில்லாம எப்படிடா வேலை பார்ப்பேன்னு செண்டிமெண்டா புலம்பினான்.."

"அவனுக்குப் புலம்பறதுக்கு காரணம் வேணும்.."

"அதுவும்தான்ப்பா, உண்மையிலேயே ரீசன் என்னன்னா இவன் வேலையிலே 'ஓபி' அடிப்பான்.. அத்தச் சோம்பேறி.. நான் அதை மறைத்து மேனேஜ் பண்ணிக் காப்பாத்திருவேன்.."

"பாவம்டா வாசு.. வெறும் வாய்தான் அவனுக்கு.. உடம்பு வளையாது.."

"உடம்பை வளைச்சு வேலை பார்க்க இவன் என்ன கட்டிடத்தில சித்தாள் வேலைக்கா போகிறான்..? மூளையை யூஸ் பண்ணனும்மா.. ஏஸி ரூமில் உட்கார்ந்து வாங்குகிற சேலரிக்கு உழைக்கனும்.."

"விடுடா.. நம்ம பையன்.."

"இவன் விடாது கருணா கேஸ்ம்மா.. என் கூடவே தொத்திக்கிட்டான்.. கேட்டா கிரிஜாவுக்குப் பயமாம்.. கதை சொல்றான்.."

"கிரிஜாவா..? அது யாருடா..?"

"அந்தக் கதையைச் சொன்னா சிந்துபாத்தின் கன்னித்தீவு போல நீண்டுக்கிட்டே போகும்.. தேவையா..? காலையிலே சீக்கிரமாக் கிளம்பனும்.."

"ஆமாமாம்.. எல்லோரும் சாப்பிட வாங்க.. சுசித்ரா நீயும் வா.."

கோதாவரி என்னவோ இயல்பாகத்தான் கூப்பிட்டாள்.. அவளது தாய்மை நிரம்பிய பாசத்தில் எள்ளளவும் குறையில்லை என்பது சுசித்ராவுக்குத் தெரியும்.. இருந்தும் அவள் மனம் சமாதானமாகாமல் அடம் பிடித்தது..

'அதென்ன 'நீயும் வா'ன்னு கூப்பிடறாங்க.. வந்தா வா.. வராட்டிப் போ.. அப்படிங்கிறதைப் போலயில்ல இருக்கு.. இவங்க மகன்தான் தள்ளி வைக்கிறார்ன்னா இவங்களுமா..?'

மனது சிணுங்கியது.. வெளிக்காட்டிக் கொள்ளாமல் சாப்பிடப் போனாள்.. வாசுதேவன் கலகலவெனப் பேசிச் சிரித்தபடி சாப்பிட்டான்.. இடையிடையே அவளைப் பார்த்துக் கண்சிமிட்டினான்.. அவன் கண்சிமிட்டும் போதெல்லாம் அவளது இதயத் துடிப்பு அதிகரித்தது.. ஏதோ ஓர் மாயநதியில் நனைந்து திரும்பினாள்.. சாரலில் நனையும் ஜில்லிப்பும் சிலிர்ப்பும்..

இரவினில் தூங்க அவள் வழக்கம் போல தனியறைக்குச் சென்று விட்டாள்.. காலிங் பெல் ஒலித்தது.. கதவைத் திறந்தால் வெளியே கண்கள் சிவந்து தலைமுடி கலைந்து வாசுதேவன் நின்றிருந்தான்..

"இங்கே என்னடி பண்ணிக்கிட்டு இருக்கிற..?"

'இதைக் கேட்டுக் கதவைத்தட்ட இத்தனை நாள்களா..?'

"உன்னைத்தாண்டி கேக்கிறேன்.. இந்த ரூமில் உனக்கென்ன வேலை..?"

'இத்தனைநாளா நான் இங்கேதாண்டா தூங்கறேன்.. அது கூடத் தெரியாம இருந்துக்கிட்டு இப்ப வந்து கேள்வி கேட்கிறயா..?'

மனதுக்குள் பேசியபடி வாய் திறவாமல் நின்றவளை இழுத்து.. அழுத்தமாக முகத்தைப் பிடித்து மூர்க்கமாக நிமிர்த்தி உறுமினான் வாசுதேவன்..

"எதுவா இருந்தாலும் வாய் விட்டுச் சொல்லுடி.. மனசுக்குள்ள பூட்டி வைக்காதே.. நீ தொட்டாச்சிணுங்கி நேச்சர்ன்னு எனக்குத் தெரியும்தான்.. நீ அனிச்சமலர்..! கோபமாய் ஓர் பார்வை பார்த்தாக்கூடத் தாங்க மாட்டதான்.. ஆனா எப்பவும் அதைப் புரிஞ்சுக்கிட்டு உன்னைத் தாங்கிக்கிட்டே இருக்க முடியுமா சுசித்ரா.. இதை ஏண்டி நீ புரிஞ்சுக்கலை..?"

"நீங்கதான் என்னைப் புரிஞ்சுக்கலை.." உதடுகள் துடிக்கக் கணவனின் முகம் பார்த்து முறையிட்டாள் சுசித்ரா.

"என்னைத் தாங்குங்கன்னு உங்களிடம் சொல்லலை.. உங்களைத் தாங்கும் உரிமையை எனக்குத் தாங்கன்னுதான் சொல்கிறேன்.."

வாசுதேவனின் முகத்தில் மென்மை படர்ந்தது.. அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.. சுசித்ராவின் சிணுங்கிய மனது சமாதானமடையவில்லை என்றாலும்.. அவனது அணைப்பிலிருந்து விலகாமல் இசைந்து கொடுத்து கண்மூடி நின்றாள்.. புண்ணாகியிருந்த அவளது மனதுக்கு அவனது அணைப்பு ஒத்தடம் கொடுத்து ஆற வைக்க முனைந்தது..

"ஆம்பளைத் திமிர் எனக்கு இருக்குடி.. அம்மா கொடுத்தா வாங்கிக்கலாம்.. பெண்டாட்டியிடம் வாங்கிக்க முடியாது.. அவளுக்குக் கொடுக்கனும்.. ஏன்னு கேட்காதே.. அது அப்படித்தான்.. நான் இப்படித்தான்.."

அணைப்பை இறுக்கி அவளுக்கு முத்தம் கொடுக்கப் போனான்.. அவள் முகம் திருப்பியதில் சினம் கொண்டு..

"ஏன்..?" என்று சீறினான்..

"அவன் பெயரை ஏன் சொன்னீங்க..?" நலிந்த குரலில் விம்மினாள் சுசித்ரா..

"எவன் பெயரைச் சொன்னேன்..?" புரியாமல் கேட்ட வாசுதேவனுக்கு மின்னல் வெட்டியதைப் போல நினைவு வந்து விட்டது..

"சுசித்ரா.." அதிர்ச்சியுடன் அவளை விலக்கி நிறுத்தியவன்..

"இன்னுமாடி அதை நினைச்சுக்கிட்டு இருக்க..?" என்று அதிர்ந்த குரலில் கேட்டான்..

"எப்படி மறக்க முடியும்..?" சுசித்ரா கதறினாள்..

"நீங்க எப்படி அவன் பெயரைச் சொல்லலாம்..? ஒன்றை நினைவில் வைத்துக்கங்க.. அவன் நல்லவனா

இருந்திருந்தாலும் நான் அவனை விரும்பியிருக்க மாட்டேன்.. இரக்க குணம்.. அவன் செத்து விடுவான்னு பயமுறுத்தியதில அவன் பேச்சுக்கு மறுப்புச் சொல்லாம தலையை ஆட்டி வைச்சேன்.. அவன் கல்யாணம் பண்ணிக்கலாம் வான்னு கூப்பிட்டப்ப அவனைத் தேடி ஓடினேனா..?"

"அது எனக்குத் தெரியாதா..? நீ சொல்லனுமா.."

"தெரிந்தவர் பேசும் பேச்சா அது..?"

"தப்புத்தாண்டி.. தப்புத்தான்.."

வாசுதேவன் கன்னத்தில் போட்டுக் கொண்டான்.. சுசித்ரா சிரிக்கவில்லை.. உம்மென்று இருந்தாள்.. வாசுதேவனுக்கு மனம் வலித்தது..

அறியாமல் அவன் சொல்லி விட்ட ஒருசொல் அவனது காதல் மனைவியின் மனதைக் காயப்படுத்தி விட்டதே.. சும்மாவா சொன்னார் வள்ளுவர்..

'தீயினால் சுட்டபுண் உள்ளாறும் - ஆறாதே..

நாவினால் சுட்ட வடு..' என்று

"நான் வேறு, நீங்க வேறுன்னு நினைத்தும் பார்க்கலை.. எஸ்.எஸ் கம்பெனி என் பெயருக்கு வந்தா.. அதுக்கு எம்.டி நீங்கன்னுதானே நான் நினைப்பேன்..?

அது தப்பு.. உங்க ஷெல்ப் ரெஸ்பெக்ட் அதை ஏத்துக்கலை.. ஓகே.. அதை என்னிடம் பொறுமையாக சொல்லியிருக்கலாமே.. கம்பெனி ஆரம்பிக்க என் ஜ்வல்ஸையும் யூஸ் பண்ணியிருக்கலாமே.. தனியாப் போராடனுமா..? துணைக்கு நான் வரக் கூடாதா..?"

"இல்லைடி.. இல்லையில்லை.."

மனைவியை மார்பில் சாய்த்துத் தட்டிக் கொடுத்துச் சமாதானப் படுத்தினான் வாசுதேவன்.. மனம் விட்டுப் பேசியதில் சுசித்ராவின் மனபாரம் இறங்கியிருந்தது..

"எனக்குன்னு சில பிரின்ஸ்பல்ஸ் இருக்குடி.. உன் அன்பைக் கொடு.. காதலைக் கொடு.. உன்னைக் கொடு.." கண் சிமிட்டினான்..

சுசித்ராவின் முகம் சிவந்தது.. கணவனின் மார்பில் குத்தினாள்..

"இது.. இது.. இது போதும்.. நான் உன் புருசன் சுசித்ரா.. உன் சொத்துக்களை நம் பிள்ளைகளுக்குக் கொடு.. பிரசன்னா நாயைப் பற்றி நான் இனிமே பேச மாட்டேன்.. தெரியாமல் வாய் விட்டதுக்கு நீ என்ன தண்டனை வேணும்னாலும் கொடு.. ஏத்துக்கறேன்."

"உங்களைத் தண்டிச்சா எனக்குத்தான் வலிக்கும்.."

கண்ணீருடன் கணவனைத் தழுவிக் கொண்டாள் சுசித்ரா.. அவளது மனச் சிணுங்கல் மறைந்து விட்டிருந்தது.. அனிச்ச மலர் சிறு மூச்சுக் காற்றைக்கூடத் தாங்காமல் வாடும் தன்மையுடையதுதான்.. அதன் இயல்பு தெரிந்து காக்கும் கரங்களாக வாசுதேவன் அவளுக்கு வாய்த்திருக்கிறானே.. அனிச்ச மலர் பொழிவோடு மலர்ந்து மணம் பரப்பும்.. வாடாது..

வாசுதேவன் 'வி.எஸ்.' கம்பெனியைத் திறந்தான்.. வெகு விரைவில் அது 'வி.எஸ். குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸ்' ஆக விரிவடைந்தது.. கிராமத்து நிலங்களையும், தாயின் நகைகளையும் அவன் மீட்டுக் கொடுத்து விட்டான்.. ஈஸி ஆர் ரோட்டில் பிரம்மாண்டமான மாளிகை ஒன்றைக் கட்டிக் கிரகப் பிரவேசம் நடத்தினான்.. மாமனார், மாமியார், கணவன் சகிதம் மனையில் உட்கார்ந்த சுசித்ராவின் மடியில் யதுநந்தன் இருந்தான். அனிச்ச மலராம் சசித்ராவிற்கும், காக்கும் காவலன் வாசு தேவனுக்கும் பிறந்த மகன் அவன்.. சுசித்ராவின் முகத்தில் நிலவிய மகிழ்ச்சி இருக்கிறதே.. அதற்கு விலை மதிப்புக் கிடையாது..

அனிச்ச மலரின் மகிழ்ச்சி அது..!

- முற்றும் -